# தாய்வீடு

THAIVEEDU | AUGUST | 2024
தாய்வீடு | ஓகஸ்ட் | 2024





**வாசிப்பதைத் தவிர மகிழ்வூட்டக் கூடிய காரியம் வேறொன்று இருப்பதாகத் தெரியவில்லை...**
**- சா. திருவேணிசங்கமம்**
**நேர்காணல்: பிரசாத் சொக்கலிங்கம்**

**விடைபெற்றார் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன்**
**- கருணாகரன்**

**ரொறன்ரோவில் குணா கவியழகனுடனான சந்திப்பு**
**- பரிதி**

**மாயமான் உலவும் வனம்!**
**- ஓவியர் ஜீவா**

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Selling
Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir. 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
சர்வேசன்,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஐயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,

**மொன்றியால்:**
சுகுமாரன் சின்னையா.
**ஒட்டாவா:**
அலெக்ஸ் சிவசம்பு: +1 613 276 7253
**மலையகம், கொழும்பு:**
மல்லியப்புசந்தி திலகர்: +94 71 120 8061
**மட்டக்களப்பு:**
வி. மைக்கல் கொலின்: +94 77 433 8878
**கிளிநொச்சி:**
கிளி மக்கள் அமைப்பு:
**யாழ்ப்பாணம்:**
S. சத்தியதேவன்: +94 77 7294 287

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

Tel : +1 416 857 6406
Fax : +1 416 849 0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

# ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே!

பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப்போர் பத்தாவது மாதமாகத் தொடரும் இந்த வேளை-யிலே, பாலஸ்தீனத்தின் விடுதலைக்காகப் போராடும் பல்வேறு போராளி அமைப்புகளுக்குமிடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் முயற்சியில் சீனா வெற்றி கண்டிருக்கிறது.

சீனாவில் இடம்பெற்ற முக்கிய கூட்டத்தை அடுத்து, ஹாமாஸ், ஃபத்தா ஆகிய முன்னணி அமைப்புகளும், மேலும் பன்னிரண்டு பாலஸ்தீன அமைப்புகளும் இணைந்து கடந்த மாதம் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன. பாலஸ்தீன விடுதலைக்கான கோரிக்கையையும் அதை நோக்கிய செயற்பாடுகளையும் மழுங்கடிக்கும் மற்றும் அச்சுறுத்தும் வகையிலே பாலஸ்தீனப் போராளி அமைப்புகளுக்கிடையே நிலவிவந்த பிளவுகளைக் களைந்து அவற்றின் செயற்பாடுகளை ஒருமுகப்படுத்தும் முனைப்புடன் இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் பாலஸ்தீன அமைப்புகளுக்கிடையே எட்டப்பட்ட இதுபோன்ற ஒப்பந்தங்கள் வலுவிழந்து போய்க் கைவிடப்பட்டுள்ளன. ஆனால், இம்முறை சீனாவின் உந்துதலுடனும் ஆதரவுடனும் ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளதால் இது நிலைக்கும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. இந்த நம்பிக்கைக்கான இன்னொரு காரணம் பாலஸ்தீனப் போராளி அமைப்புகள் தற்பொழுது தமது இருத்தலை உறுதிசெய்யவேண்டிய ஒரு நம்பிக்கையற்ற காலகட்டத்தில் நிற்கின்றன என்பதே. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப்போர் தொடர அனுமதிக்கப்பட்டால் பாலஸ்தீன தேசமோ, பாலஸ்தீனத் தேசிய இனமோ இருந்த அடையாளமே இல்லாமல் அழிக்கப்படக்கூடும். இந்தக் காலகட்டத்திலே, தமக்கிடையிலான முரண்களைக் களையாவிட்டாலும், காலத்தின் தேவை கருதி அவற்றைக் கடந்து, பாலஸ்தீன விடுதலைக்கான ஒருமித்த குரலை எழுப்புவதன் முக்கியத்துவத்தை, இந்த ஒப்பந்தத்தை எட்டியுள்ள அமைப்புகள் உணர்ந்துள்ளன.

இதற்கு முன்னர் மே மாதத்தில், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக அரபு நாடுகளை ஒன்றிணைந்து குரல்-கொடுக்கச் செய்த சாதனையையும் சீனா நிகழ்த்தியிருந்தது. இந்த நகர்வுகளின் பின்னணியில் பாலஸ்தீன மக்களின் மீதான அக்கறை மட்டுமல்ல, சீனாவின் புவியரசியல்சார் நலன்களும் இருக்கும் என்பது தெளிவு. இருந்தபோதும், இந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு சமயோசிதத்துடன் செயற்பட வேண்டிய கட்டாயம் பாலஸ்தீன அமைப்புகளுக்கு உண்டு.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றிலும் இது போன்ற ஒன்றிணைவுக்கும் ஒருமைப்பாட்டுக்குமான வாய்ப்புகளும் தேவைகளும் பல தடவைகள் தோன்றின. அந்த வாய்ப்புகளைத் தவறவிட்ட வரலாறு பற்றியும் தேவைகளை உணராதுபோன தவறுகள் பற்றியும் யாரும் யாருக்கும் நினைவூட்டத் தேவையில்லை. அதுபோலவே இந்தத் தவறுதல்களும் தவறுகளும் ஆயுதப் போராட்டத்தின் இறுதி முடிவுக்கு எந்தெந்த வகையிலே பங்காற்றின என்பது பற்றியும் நாம் உணர்ந்து வைத்துள்ளோம். இது காலங்கடந்த ஞானம். எனினும், இந்த ஞானத்தை தற்காலச் செயற்படுகளுக்கு அறிவூட்டப் பயன்படுத்துவதே விவேகம்.

இந்த விவேகம், 'எம்மிடையே தனிநபர்களென்ற அடிப்டையிலே மட்டுமல்ல, அமைப்புகளென்ற அடிப்படையிலும் இருக்கிறதா?' என்ற கேள்வியே இப்போது வியாபித்து நிற்கின்றது.

ஈழ விடுதலையை ஆதரிப்பதாகக் கூறிக்கொள்ளும் எமது செயற்பாடுகளில் 'எவ்வளவு வீதமானவை உண்மையிலேயே விடுதலைச் செயற்பாடுகளை முன்னெடுப்பதை நோக்கியதாக, தொடரும் நில ஆக்கிரமிப்பை எதிர்ப்பதாக, இன அழிப்பைத் தடுப்பதாக, தாயக மக்களின் விமோசனத்தைக் கருத்தில் கொண்டதாக இருக்கின்றன?', 'எவ்வளவு வீதமானவை எமது தனிப்பட்ட காழ்ப்புணர்வுகளின் வெளிப்பாடாக, சுய ஆதாயத்தை அடையும் முனைப்புகளாக, சுயகௌரவத்தை யாசிக்கும் வரட்டுவாதங்களாக இருக்கின்றன?' என எடைபோடவேண்டிய தருணம் இது.

இதன் அர்த்தம் அனைத்து அமைப்புகளும் கருத்தொருமித்து ஒற்றைக் குடையின்கீழ் வரவேண்டு-மென்பதல்ல. அந்த எதிர்பார்ப்பு நடைமுறைச் சாத்தியமற்றது. ஜனநாயகப் பண்பற்றதும்கூட. ஆனால், ஒவ்வொருவரும் மற்றவரின் குறைகளை மட்டுமே பூதாகரப்படுத்தி, குற்றங்காண்பதையே குறியாகக் கொள்ளாமல், எம்மிடையேயான ஒற்றுமைகளை உற்றுநோக்கி அவற்றின் அடிப்படையிலே இணந்து செயற்பாடுகளை முன்னெடுக்க முன்வரவேண்டும்.

எம்மிடையே இந்த ஒன்றிணைவை ஏற்படுத்த சீனாவோ, வேறெந்த உலக நாடோ முன்வராது. இது எமக்கென மட்டுமே உள்ள பணி. நாம் எமக்கிடையே ஆளையாள் இழுத்து விழுத்தும் நண்டுக்குழிச் சண்டை பிடித்துக்கொண்டிருக்க, சிங்களப் பேரினவாதம் தாயகப்பரப்பைச் செல்லரித்த ஓலைப்பாய்போல் ஆக்கிக்கொண்டிருக்கிறது. இருத்தலை உறுதிசெய்யவேண்டிய ஒரு நம்பிக்கையற்ற காலகட்டத்தில் நிற்பது பாலஸ்தீனம் மட்டுமல்ல, நாமும்தான். செயற்படுவதற்கான இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் எமக்கான காலமும் கடந்துவிடும். அதற்குப்பின் வரும் ஞானம், யாருக்கும் பயன்படாது.

# இம்மாதத் தாய்வீட்டில்...


ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே! 3

தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம்:
ஊழலைக் கட்டுப்படுத்துமா? 5
- இரா. ரமேஷ்

விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ் விடுதலை!
அமெரிக்காவுடனான உடன்படிக்கை,
வாக்குமூலத்தை முன்வைத்து... 12
- ரூபன் சிவராஜா

ரஷ்யத் தேசியம் மீதுள்ள சவால்கள் 18
- ரதன்

எதிர்காலத்தைப் பொறுப்பேற்க
இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் 16
- தேவப்பிரியா

அனைத்துலக இளைஞர் நாள்
இளைஞர்களே வளர்ச்சிக்கான மாற்றுசக்தி 25
- சி. நற்குணலிங்கம்

கல்வியில் சமூக ஊடகங்களின் பங்களிப்பு 28
- த. சிவபாலு

விண்வெளிப் பாறைகள் பூமியைத் தாக்குமா? 31
- குரு அரவிந்தன்

தற்கொலை செய்துகொண்ட
ரோபோ அரச ஊழியர் 34
- பிரியதர்சன்

வினோதமான காப்புறுதிக் கேட்பனவுகள் 36
- செந்தூரன் புனிதவேல்

ஐரோப்பிய, அமெரிக்கக்
காற்பந்தாட்ட முடிவுகள் 38
- குரு அரவிந்தன்

மின்சாரப் பாவனை
புதிய மாற்றம்! அதிக சேமிப்பு! 41
- வேலா சுப்ரமணியம்

ஆயுள் நீடிப்பதற்கு... 43
- குமார் புனிதவேல்

உண்ணமுடியுமா? 45
- வேதநாயகம் தபேந்திரன்

மாயமான் உலவும் வனம்! 47
- ஓவியர் ஜீவா

ரொறன்ரோவில்
குணா கவியழகனுடனான சந்திப்பு 50
- பரிதி

'கண்ணகி' திரைப்படத்தை முன்வைத்து...
கதைக்கு உள்ளும் வெளியும் 54
- கவிதா லட்சுமி

சத்திய சோதனை –
எமது பயணம் நீண்ட பயணம் 57
- ப. கண்ணன்

கிளிநொச்சி மாவட்டத்தில் 'தமிழ் இன்னியம்' 62
- க. விஜயசேகரன்

'மரணத்தை விடக் கொடியது'
நாடகம் பார்த்த அனுபவம் 65
- மகிழினி

ஜொகான் சண்முகரத்தினம்:
மொழிச் செழுமையும்
படைப்பாளுமையும் புத்தகங்களும் 67
- ரூபன் சிவராஜா

இலக்கிய ரசிகர்
ரசிகமணி கனக. செந்திநாதன் 70
- வே. விவேகானந்தன்

'சமகாலத்தை எதிரொலிக்கும் காலம்' 73
- க. நவம்

விடைபெற்றார் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் 76
- கருணாகரன்

'மலையக சமூக அசைவியக்கத்தில்
வ. செல்வராஜாவின் வகிபங்கு' 79
- அருணாசலம் லெட்சுமணன்

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி:
கோவுஸ்ஸ ராம்ஜி உலகநாதனின்
தேயிலைப் புஷ்பங்கள் 83
- மல்லியப்புசந்தி திலகர்

மூளையும் இதயமும்
மாறிமாறிச் சொல்லும் சிறுகதைகள் 85
- த. அஜந்தகுமார்

நூல் அறிமுகம்
ஆதனின் பொம்மை 87
- நெல்லை ஜெயசிங்

எம்.ஏ. நுஃமானின் கவிதையும் அரசியலும்:
ஈழத்து அனுபவம் 90
- அருண்மொழிவர்மன்

எல்லையை விரிக்கும் தமிழ் 93
- கருணாகரன்

ஈழத்தவரின் சமகால நூல் வெளியீடுகள்:
ஒரு நூலியல் சார்ந்த பார்வை 96
- என். செல்வராஜா

சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும் 99
- மைதிலி தயாநிதி

தமிழ் அகராதியும் கதிரவேற் பிள்ளைகளும் 103
- பால. சிவகடாட்சம்

வாசிப்பதைத் தவிர மகிழ்வூட்டக்கூடிய
காரியம் வேறொன்று இருப்பதாகத்
தெரியவில்லை... 106
- சா. திருவேணிசங்கமம்
நேர்காணல்: பிரசாத் சொக்கலிங்கம்

பொருள்கோடலியல்:
நேர்க்காட்சிவாதத்துக்கு எதிரான
சமூக விஞ்ஞான மெய்யியல் 112
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

நினைவு மரணிக்கும் போது 116
- அ. சிவானந்தன்
தமிழில்: ஜிஃப்ரி ஹாசன்

மகாவம்சம் 6-ஆவது தொகுதி
'சந்திரிகா காலப்
பயங்கரவாதப் பிரிவினைவாதம்' 119
தமிழில்: என். சரவணன்

வவுனியா மாவட்டத்து பிராமிக் கல்வெட்டுகள் 138
- நெடுங்கேணி சானுஜன்

நாதனார் கோயில் சந்தி 140
- த. ஜீவராஜ்

இரண்டாம்
இராசேந்திர சோழன் காலத்தில்
மும்முடிச் சோழமண்டலம் 143
- வி. துலாஞ்சனன்

இனப்படுகொலையின் அரசியல் – 5
இனப்படுகொலை:
தத்துவார்த்தக் கேள்விகள் 146
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சுந்தர ராமசாமியின் திறனாய்வு
அணுகுமுறை – பொருண்மைக்களம் 151
- சு. வேணுகோபால்

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் – 2 157
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

சித்தரின் போக்கும் சீடரின் மாற்றமும் 161
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து... 165
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

சிறுகதை
ஆழ்மன அவசம் 170
- உஷாதீபன்

வாழ்வுரிமை! 175
- மா. சித்திவினாயகம்

வசந்தவல்லி 180
- அ. கந்தசாமி

வெட்டுக்கிளியும் சில்வண்டும் 186
- யசுநாரி கவபட்டா
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

கனடாவில் 'இலக்கிய உறவுகள்' 189
நூல் வெளியீடு

# தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம்: ஊழலைக் கட்டுப்படுத்துமா?

– இரா. ரமேஷ்

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் தேர்தல் காலங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவது அரசியல் கலாசாரத்தின் ஒரு பொதுவான பண்பாகக் காணப்படுகின்றது. தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் கோடிக்கணக்கான ரூபாய் பணத்தைச் செலவுசெய்து தேர்தலில் வெற்றி பெறுவது, வாக்காளர்களை பணம் கொடுத்து வாங்குவது, பொருட்களைப் பகிர்ந்தளிப்பது, அரச சொத்துக்களைத் துஸ்பிரயோகம் செய்வது, வன்முறைகளில் ஈடுபடுவது போன்ற இன்னொரன்ன ஒழுக்கத்துக்குப் புறம்பான வழிமுறைகள் ஊடாக பதவிக்கு வருவதை நாம் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் போன்ற அபிவிருத்தியடைந்து வரும் பல நாடுகளிலே காண முடியும்.

இப்பின்புலத்திலேயே மிக நீண்டகாலமாக சிவில் சமூக அமைப்புகள், ஊடகவியலாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் இலங்கையில் தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டமொன்றினைக் கொண்டுவர வேண்டும் என அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வந்தார்கள். ஆயினும், அதற்குச் சாதகமானதொரு பதிலை அரசாங்கம் நீண்ட காலம் வழங்கவில்லை. அரசியல்வாதிகள் தனது தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டமொன்று கொண்டுவரப்படுவதை விரும்பவில்லை என்பதே யதார்த்தமாகும். அது அவர்களுடைய வெற்றியின் சாத்தியப்பாட்டைத் தடுத்துவிடும் என்ற அச்சம் அவர்கள் மத்தியில் காணப்படலாம். இலங்கையில் தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தும் சட்டமொன்று நீண்ட காலம் இல்லாத காரணத்தினால் சட்டத்துக்குப் புறம்பான, தகுதி இல்லாத தொழில்களில் ஈடுபடுகின்ற, பாராளுமன்ற அரசியலுக்கு பொருத்தமற்ற பலர் தமது பணம் மற்றும் ஆள் பலத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்துக்கும் ஏனைய அரசியல் நிறுவனங்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுகின்ற நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளது. இத்தகைய நடைமுறைகளே நாட்டினுடைய தற்போதைய நிலைமைக்கும், ஊழல் மோசடிகளுக்கும், அரசாங்கத்தின் தோல்விக்கும், தவறான கொள்கைகளுக்கும் காரணம் என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மக்கள் பணத்திற்காக, பொருட்களுக்காக வாக்களித்தமையும் மற்றும் தவறான அரசியல்வாதிகளை பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்தமை என்பன இலங்கையில் தோல்வியடைந்த அரசு ஒன்று உருவாகுவதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகளாகும். நாட்டின் தற்போதைய வங்குரோத்து நிலைமைக்கு இதுவே பிரதான காரணமென பலர் வாதிடுகின்றனர்.

1978-ம் ஆண்டு அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் தேர்தல் செயன்முறையில் ஊழல் மோசடிகள் மிக வேகமாகவே அதிகரித்துள்ளன. 1978-ம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் விகிதாசார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதனோடு இணைந்தவகையில் தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளும் இல்லாது செய்யப்பட்டன. உண்மையில், இத்தகைய சட்ட ஏற்பாடுகள்



1978-ம் ஆண்டுக்கு முன்பு நாட்டில் நடைமுறையில் இருந்தது. விகிதாசார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் தேர்தல் அரசியல் மிக மோசமான ஊழல் மற்றும் மோசடிகள் மலிந்த ஒரு செயன்முறையாக மாறிவிட்டது என்பது சமூகத்தில் நிலவும் பொதுக் கருத்தாகும். இந்நிலைமையினைப் போக்க வேண்டும் என்ற தொடர்ச்சியான அழுத்தத்தின் பின்புலத்திலேயே 2023-ம் ஆண்டு மூன்றாம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டம் (Regulation of Elec-




tion Expenditure Act) ஜனவரி 24-ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. உலகில் 49 நாடுகளில் தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தும் சட்டம் உண்டு. சுமார் 143 நாடுகளில் தேர்தல் நிறைவடைந்த பின்னர் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களிடமிருந்து கணக்கறிக்கைகள் தேர்தல்களை நிர்வகிக்கும் நிறுவனத்தினால் கோரப்படுகின்றது. இவை அந்நாடுகளின் சூழலுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், பல நாடுகளில் வேட்பாளர்கள் தேர்தல் காலங்களில் நன்கொடை வாங்குதல் மற்றும் கோபரேட் கம்பனிகளிடம் பணம் பெற்றுக்கொள்வதனைத் தடுப்பதற்கு சட்ட ஏற்பாடுகள் நடைமுறையில் உள்ளன.

இலங்கையில் இச்சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் இடம்பெறவிருந்தது. ஆயினும் தேர்தல் பிற்போடப்பட்ட காரணத்தினால் இந்தச் சட்டத்தை பிரயோகிக்க முடியவில்லை. நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல், அடுத்து வருகின்ற பாராளுமன்ற தேர்தல்களில் இச்சட்டத்தினை பயன்படுத்தும் வாய்ப்புண்டு. ஊழல் மோசடிகள் மலிந்துக் காணப்படும் நாட்டில் இத்தகையதொரு சட்டம் கொண்டுவரப்பட்டமை ஜனநாயக வெற்றி என்று கருத வேண்டும். மக்களுக்கு கிடைத்த வெற்றி என்றும் கூற முடியும். அரசியல்வாதிகளுடைய பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும், தேர்தல் செயல்முறையில் காணப்படுகின்ற பொறுப்பற்ற தன்மையைக் கட்டுப்படுத்துவதற்கும், ஊழல் மோசடிகளைக் குறைப்பதற்கும் இச்சட்டம் கைகொடுக்கும் என நம்புகின்றோம். இச்சட்டத்தினுடைய உள்ளடக்கம் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றிய சில அறிமுக குறிப்புகளை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தேர்தல் செலவுகளை ஒழுங்குப்படுத்தல் சட்டத்தின் முக்கியத்துவம்:

இலங்கை பிரஜைகள் தேர்தல் செலவுகளை ஒழுங்குப்படுத்தும் சட்டத்தைப்பற்றி அறிந்திருப்பதும் அதனைப் பயன்படுத்துவதும் தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகளின் பணச் செலவை கட்டுப்படுத்த உதவும் என அண்மையில் தேர்தல் ஆணையாளர் நாயகம் திரு. சமன் ரத்நாயக்க அவர்கள் குறிப்பிட்டார். இதனை எமக்குள்ள ஒரு கூட்டுப்பொறுப்பாக கருத வேண்டும். தேர்தல் காலங்களில் அதிகளவில் கருப்புப் பணம் பயன்படுத்தப்படுவதாக தொடர்ச்சியான குற்றச்சாட்டு காணப்படுகின்றது. தேர்தல் செலவீனத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் அரசியல்வாதிகள் பதவிக்கு வந்தப் பின்னர் பொது மக்களுடைய நலன்கள், கோரிக்கைகள் மற்றும் வாக்குறுதிகளை மறந்துவிட்டு தான் தேர்தல்காலத்தில் செலவு செய்த பணத்தை மீட்டெடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பர் என்பதனை நாம் கடந்தக் காலங்களில் அவதானித்தோம். இதற்கு விதிவிலக்கான அரசியல்வாதிகளும் உள்ளனர் என்பதனைக் குறிப்பிட வேண்டும்.

கடந்த 2018-ம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மொனராகலை பிரதேச சபைக்கு போட்டியிட்ட ஹர்சக பிரிய திசாநாயக்க என்பவர் நான்கு கோடி ரூபாய் பணத்தை தேர்தல் பிரசாரத்துக்காகச் செலவு செய்தமை வெளிக்கொண்டு வரப்பட்டது. அவர் போட்டியிட்ட மதுர கெய்ய வட்டாரத்தின் மொத்த வாக்காளர்கள் தொகை 1700 பேர் ஆகும். சுமார் 1700 வாக்காளர்கள் இருக்கின்ற ஒரு வட்டாரத்தில் நான்கு கோடி ரூபாய் பணத்தைச் செலவு செய்து வெற்றி பெற்று பின்னர் அந்த சபையின் தலைவராக நியமனம் பெற்றார். திசாநாயக்க வாக்காளர்களை இலஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கியமையினை எதிர்த்து தேர்தலை கண்காணிக்கின்ற பெப்ரல் மற்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையம் என்பன மொனராகலை மாவட்ட மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தன. திசாநாயக்க வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்கியமைக்கான ஆதாரங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்டன. போதிய சாட்சியங்கள் இருந்தமையால், மொனராகலை மாவட்ட மேல் நீதிமன்றத்தின் நீதிபதி திசாநாயக்கவைப் பதவியில் இருந்து நீக்குமாறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பொன்றினை வழங்கி

னார். அதன்படி திசாநாயக்கவின் பதவி பறிக்கப்பட்டது. இத் தீர்ப்பு அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடமாக அமைந்திருக் கும் என நம்பலாம். தேர்தல் செலவினங்களைக் கட்டுப்ப டுத்த அவசியமான சட்ட ஏற்பாடுகள் இன்மையே இத்தகைய நிலைமை ஏற்படக் காரணமாக அமைந்தது. திசாநாயக்க செலவு செய்த நான்கு கோடி ரூபாய் பணம் பொது மக்களின் அபிவிருத்திக்காகப் பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட பணம் என்பது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது. இது ஒரு உதாரணம் மாத்திரமேயாகும். இத்தகையதொரு பின்புலத்தில் இச்சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பது பெரிதும் வரவேற்கத்தக்க விடய மாகக் காணப்படுகின்றது. ஆகவே, இச்சட்டம் பற்றிய விழிப் புணர்வு மற்றும் தெளிவூட்டல் பொதுமக்கள் மத்தியில் இடம் பெற வேண்டிய தேவையொன்று இன்று காணப்படுகிறது. இது மிகவும் அவசரமான தேவையாகும். இப்பணியில் ஊடகங் கள், சிவில் அமைப்புகள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு முக்கியப் பங்குண்டு.

இச்சட்டம் நீதியான மற்றும் நேர்மையான தேர்தல் ஒன்றை நடத்த உதவும் என நம்பமுடியும். மக்கள் நேர்மையான, தகுதி வாய்ந்த மற்றும் நாட்டுக்கு சேவை செய்யக்கூடிய திறா னியற்ற அரசியல் தலைவர்களைத் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பு இதன் மூலம் ஏற்படும். விலைகொடுத்து வாக்காளர் களை வாங்குகின்ற அரசியல் கலாசாரத்தினை இதன் மூலம் சவாலுக்குட்படுத்த முடியும். இன்று தேர்தல் காலங்களில் வாக்காளர்கள் நுகர்வோராக (consumer) மாற்றப்படுகின்றார் கள். அரசுக்கும் பிரஜைகளுக்கும் (state - citizen) இடையி லான உறவு நுகர்வோருக்கும் வியாபாரிகளுக்கும் (con-sumer and businessmen) இடையிலான உறவாக தேர்தல் காலங்களில் மாறிவிடுகின்றது. அரசியல்வாதிகள் வாக்காளர் களை நுகர்வு பொருளாகப் பார்க்கின்றார்கள். இதற்கு தேர் தல் காலத்தில் பயன்படுத்தப்படுகின்ற பணம் முக்கிய செல் வாக்குச் செலுத்துகின்றது. ஏனென்றால் விகிதாசார பிரதிநி தித்துவ முறையின் கீழ் விருப்பு வாக்குமுறை அறிமுகப்படுத் தப்பட்டமையானது, தேர்தல் செலவினங்கள் உச்சகட்டத்தை அடைவதற்கு பாரியளவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இதன் காரணமாக அரசியல் கட்சிகளைவிட தனிப்பட்டவர் களே தேர்தல் காலத்தில் முக்கியத்துவம் பெறுகின்றார்கள். வாக்காளர்களும் கட்சியின் கொள்கைகள் மற்றும் கருத்திய லைப் புறந்தள்ளிவிட்டு தனி நபர்களுக்கே முன்னுரிமை வழங்கும் நிலை எழுச்சிப்பெற்றுள்ளது. இது பெரிதும் வருந்த தக்க விடயமாகும். தேர்தல் காலத்தில் வாக்காளர்கள் தனி நபர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு வேட்பாளர்கள் செலவு செய்கின்ற பணத்தொகை பெரியளவில் செல்வாக் குச் செலுத்துகின்றது என்பதனை நாங்கள் மனம் கொள்ள வேண்டும். ஆகவேதான் விகிதாசார தேர்தல் முறையை மாற்ற வேண்டும் என்பது பற்றியும் விருப்பு வாக்கு முறையை ஒழிக்க வேண்டும் என்பது பற்றியும் தொடர்ச்சியாகக் கலந்து ரையாடப்பட்டு வருகின்றது.

இப்பின்புலத்தில், இப்புதிய சட்டத்தைப் பயன்படுத்தி தேர் தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு மற்றும் அதனைக் கண்காணிப்பதற்கு எமக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. அரசியல்வாதிகள் தேர்தல் பிரசாரத்துக்காக மேற்கொள்ளும் சகல (கூட்டங்களை நடாத்துதல், பதாதைகள், போஸ்டர், துண்டு பிரசுரம், விளம்பரங்கள், போக்குவரத்து, இசை நிகழ்ச்சி, மேடைகளை அமைத்தல், உணவு, பொருட்களைப் பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட) செலவுகளையும் நாம் கண்கா ணித்து அந்த தகவல்களைத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்க முடியும். ஒரு வேட்பாளருக்கு அவருடைய நண்பரொ ருவர் 20 நாளைக்கு தமது சொந்த வாகனத்தைத் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவதற்கு வழங்கியிருந்தால் அது குறித்த விபரங்களை கூட குறிப்பிட வேண்டும். வாகனமொன் றினை வாடகைக்கு பெற்றுக்கொண்டால் ஒரு நாளைக்கு செலுத்தவேண்டிய கூலி எவ்வளவு என்ற அடிப்படையில் 20 நாளைக்கு கணிப்பிட வேண்டும். அண்மையில் நடந்து முடிந்த இந்திய பாராளுமன்றத் தேர்தலிலே போட்டியிடுவ தற்கு தனக்கு விருப்பம் இல்லை என்று நிதி அமைச்சர் நிர்-மலா சீதாராமன் தேர்தலுக்கு முன்னரேயே குறிப்பிட்டார். ஊடகவியலாளர்கள் ஏனென்று கேட்டபோது தேர்தல் செலவு களை தன்னால் ஈடுசெய்ய முடியாது, அந்தளவுக்கு தன்னி டம் நிதி வசதி இல்லை எனக் குறிப்பிட்டார். இலங்கையிலும் இந்நிலைமையே காணப்படுகின்றது. சாதாரண குடும்ப பின்பு லத்தைச் சேர்ந்த, தகுதிவாய்ந்த மற்றும் திறமையுடைய ஒரு நபரால் எமது நாட்டில் தற்போது இருக்கின்ற தேர்தல் முறை மையில் அல்லது மோசடி கலாசாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெறுவது கடினமானது. அதற்குப் பிரதான காரணம் தேர்தல் செலவு என்பதனை நாம் புரிந்துக்கொள்ள வேண் டும். இந்நிலைமையானது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதும் பாராளுமன்ற அரசியல் மீதும் இலங்கை பிரஜைகள் மத்தியில் பாரிய அவநம்பிக்கை ஏற்படுவதற்கு வழிசெய்துள் ளது. மாற்றுக் கொள்கைக்கான நிலையம் 2024-ம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வொன்றில் பாராளுமன்றத்தின் மீது 20 விகிதமான மக்களும் அரசியல் கட்சிகளின் மீது 19 விகித மான மக்களும் நம்பிக்கை வைத்திருப்பது வெளிக்கொண்டு வரப்பட்டது. இந்நிலை தொடர்ந்தால் ஆபத்தான விளைவு கள் எதிர்காலத்தில் உருவாகலாம். ஜனநாயகத்தின் மீதான தாக்குதலாகச் சிலர் இதனை வியாக்கியானம் செய்கின்றார்கள்.

## தேர்தல் செலவினை தீர்மானிப்பது எப்படி:

இச்சட்டம் தேர்தல் செலவுகளை வரையறை செய்யும் அதிகா ரத்தினைத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குகின்றது. அதன்படி கடந்த ஆண்டில் இடம்பெற இருந்த உள்ளூராட்சி தேர்தலுக்கு தேர்தல் செலவு எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது என்பதனை நாம் விளங்கிக்கொள்வது அவசியமாகும். ஒரு குறிப்பிட்ட பிரதேசசபை பிரிவுக்குள் வாழுகின்ற மொத்த வாக்காளர்களை அடையாளம் கண்டு அதில் ஒரு வாக்காள ருக்கு 20 ரூபாயை ஒரு வேட்பாளர் செலவிட முடியும் என்ப தனை தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்தது. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட பிரதேசசபை எல்லைக்குள் இருபதாயிரம் வாக்காளர்கள் இருப்பார்களாயின், தலா 20 ரூபாய் என்ற அடிப்படையில் இருபதாயிரம் வாக்காளர்களுக்கு வேட்பாளர் ஒருவர் செலவு செய்ய முடியும். இதுவே இந்தத் தேர்தல் செல வுக்கான வரையறை என்பதனைத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது. தேர்தல் செலவுகளை ஆணைக்குழு நிர்ணயிக் கின்றபோது தேர்தல் தொகுதியின் புவியியல் பிரதேசம் மற் றும் சனத்தொகை செறிவைக் கவனத்தில் எடுக்கின்றது.



அந்தவகையில், பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களுக்கு இச் சட்டத்தின் கீழ் தேர்தல் செலவு நிர்ணயிக்கப்படும். வேட்புமனுக்களைத் தாக்கல் செய்து ஐந்து நாட்களுக்குள் கட்சியினுடைய செயலாளர்களை மற்றும் சுயாதீன குழுக்களின் தலைவர்களை அழைத்து தேர்தல் ஆணைக்குழு தேர்தல் செலவின் எல்லையை தீர்மானிக்கின்ற அதிகாரத்தை கொண்டுள்ளது. தேர்தல் முடிவடைந்து 21 நாட்களுக்குள் சகல அரசியல் கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் தேர்தல் ஆணைக்குழுவில் அல்லது அந்தந்த மாவட்டத்தில் இருக்கின்ற தெரிவத்தாட்சி அலுவலர் காரியாலயத்தில் சென்று செலவு தொடர்பான அறிக்கையினை ஒப்படைக்க வேண்டும். அவ்வறிக்கையில் ஒவ்வொரு வேட்பாளரும் பயன்படுத்திய சொந்த நிதி எவ்வளவு? தமக்கு உள்நாட்டில் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற நிதி எவ்வளவு? பரிசாக கிடைக்கப்பெற்றவை? வங்கி வைப்புக்கள் எவ்வளவு? போன்ற எல்லா விபரங்களையும் உள்ளடக்கியதாக கணக்கறிக்கைகளை ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும். கணக்கறிக்கைகளில் பொய்யான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது போதிய ஆதாரங்களுடன் நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டால் குறித்த பிரதிநிதியின் குடியியல் உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் மூன்று ஆண்டுகளுக்கு பறிக்கப்படும். அந்த மூன்று ஆண்டுகளுக்கு குறித்த நபர் வாக்களிக்கவோ, தேர்தலில் போட்டியிடவோ முடியாது. மேலும், அவர் ஏதேனும் ஒரு அரசியல் நிறுவனத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தால் அந்த பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்பதையும் இந்த சட்டம் குறிப்பிடுகின்றது. அத்துடன், ஏனைய தேர்தல் சட்ட ஏற்பாடுகளுக்கமைய அபராதமும் விதிக்கப்படும். தேர்தல் செலவுகளில் மோசடிகள் நடைபெறுகின்ற பட்சத்தில் அல்லது பொய்யான தகவல்கள் வழங்கப்படும்போது அது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு அத்தகைய முறைப்பாடுகள் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படும். இச்சட்டம் அரச சொத்துக்களை பயன்படுத்துவதைத் தடை செய்கின்றது. அத்தோடு சர்வதேச நன்கொடைகளை மற்றும் வெளிநாட்டில் இருப்போரிடமிருந்தும் (உறவினர், நண்பர்கள், வர்த்தகர்கள், கம்பனிகள்) பரிசுப் பொருட்களை வாங்குவதனையும் தடை செய்கின்றது. அதுமட்டுமல்லாது பெயர் குறிப்பிடப்படாத நபர்கள் எந்த ஒரு அரசியல் கட்சிக்கோ அல்லது வேட்பாளருக்கோ அல்லது சுயேட்சை குழுவுக்கோ நன்கொடை அல்லது பரிசு பொருட்களை வழங்க முடியாது என்பதையும் இச்சட்டம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. அரசியல் வாதிகளுக்கு தேர்தல் காலங்களிலே வங்கிகளிலே வைப்பீடு செய்யப்படுகின்ற அனைத்து பண விபரங்களும் தேர்தல் செலவினத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேர்தல் செலவு தொடர்பான கணக்கறிக்கைகளைப் பொது மக்கள் பார்வையிட முடியுமா?

தேர்தல் தொடர்பான எல்லா செலவுகளையும் ஆவணப்படுத்தி சரியான கணக்கறிக்கையைத் தயாரித்து அதனைக் கட்சியின் செயலாளர்கள் உறுதி செய்து, பின்னர் சமாதான நீதிவானின் சான்றிதழுடன் 21 நாட்களுக்குள் தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டும். அதன்பின்னர் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 10 நாட்களுக்குள் கணக்கு விபரங்களை பொது மக்கள் பார்வையிட முடியும் என்ற தகவலை இலங்கையில் வெளிவருகின்ற பிர

தான பத்திரிகைகளில் (தமிழ் சிங்களம், ஆங்கில) ஆணைக் குழு பிரசுரிக்கும். பொது மக்கள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சென்று அவற்றை பார்வையிடலாம், பரிசோதிக்கலாம். அதன் மூலம் பொதுமக்கள் இக்கணக்குகளில் உள்ள குறைபாடுகள், தவறுகள், மோசடிகள் மற்றும் ஏனையப் பிரச்சினைகள் பற்றி தெரிந்து கொள்ள மற்றும் அவற்றை அம்பலப்படுத்துவதற்கான வாய்ப்பும் கிடைக்கப்பெறுகின்றது. அரசியல் கட்சிகள் 21 நாட்களுக்குள் இந்த தகவல்களை வழங்காவிட்டால் அது சட்டத்துக்கு புறம்பான விடயமாகும். அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஏற்பாடுகளையும் இச்சட்டம் வழங்குகின்றது என்பதனையும் நினைவில் கொள்ள வேண்டும்.

உண்மையில், இத்தகையதொரு சட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாக இருந்தால் (உலக அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்ற பொழுது) வினைத்திறன் மிக்க அமுலாக்க நிறுவனம் ஒன்று அவசியமாகும் (effective enforcement). தேர்தல் ஆணைக்குழுவால் மாத்திரம் இந்தக் காரியத்தை தனித்து செய்ய முடியாது. ஆணைக்குழு குறைந்தளவிலான மனித மற்றும் நிதி வளம் மற்றும் ஏனைய மட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. ஆகவே தான் தேர்தல் ஆணைக்குழு இச்செயற்பாட்டினை ஏனைய பல நிறுவனங்களோடு இணைந்து செய்ய முற்படுகின்றது. அந்தவகையில் சட்டமா அதிபர் காரியாலயம், கணக்காய்வாளர் காரியாலயம், தேசிய பொலிஸ் ஆணைக்குழு, உள்நாட்டு இறைவரி திணைக்களம், மனித உரிமை ஆணைக்குழு, தேர்தல்களை கண்காணிக்கின்ற அமைப்புக்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இலங்கையின் ஊழலுக்கு எதிரான ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழு, பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு என பல அமைப்புகளோடு சேர்ந்து இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு திட்டங்களை வகுத்து வருகின்றது. தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் செய்கின்ற செலவுகளை கண்காணிப்பதற்கான ஒரு பொறிமுறையினையும் தேர்தல் ஆணைக்குழு சிவில் அமைப்புகளின் உதவியுடன் தயாரித்து வருவதனை அறிய முடிகின்றது. இவை நடைமுறைக்கு வருகின்றப் பொழுது இந்த ஆண்டில் நடக்கவிருக்கின்ற தேர்தல்களில் தேர்தல் செலவுகளை ஒரு குறிப்பிட்டளவுக்காவது கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்பு கிட்டும். முழுமையான வெற்றியைப் பெற முடியாவிட்டாலும்கூட, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், ஊழல் மோசடிகளைக் குறைப்பதற்குமான வாய்ப்பு கிடைக்கும் என நம்பலாம். இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகள் மிகவும் இறுக்கமானதாக இருப்பதனால் அரசியல்வாதிகள் அல்லது வேட்பாளர்கள் மத்தியில் இச்சட்டம் ஒருவகையான அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே, இச்சட்டம் தொடர்பான பரந்த கலந்துரையாடல்கள் சகல மட்டங்களிலும் தீவிரமாக இடம்பெற வேண்டும். அது அரசியல்வாதிகளுக்கு ஒரு செய்தியினை வழங்குவதாக அமையும்.

இச்சட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதில் ஊடகங்களுக்குப் பெரிய பொறுப்புண்டு. அரசியல்வாதிகள் நடத்துகின்ற கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளில் ஊடகங்களின் தலையீடு காணப்படுகின்றன. ஆகவே, ஊடகவியலாளர்களுக்கு தேர்தல் காலங்களில் வேட்பாளர்களின் செலவு தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்துவதற்கும் அது தொடர்பான தகவல்களை திரட்டுவதற்குமான வாய்ப்பு கிடைக்கின்றது. பின்னர் வேட்பாளர்கள் தேர்தல் செலவு தொடர்பாக பொய்யான தகவல்களை வழங்க முற்படும் பொழுது அவற்றை சவாலுக்குட்படுத்துவதற்கு மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பு கிட்டும். உண்மையில், இச்சட்டத்தினை அமுலாக்குவதில் கூட்டிணைந்த அணுகுமுறையொன்று அவசியமாகும்.

## பிரஜைகளின் பொறுப்பு:

இச்சட்டம் சாதகமான பெறுபேறுகளைப் பெற்றுத்தர வேண்டுமாயின் துடிப்புமிக்க அல்லது செயலூக்கமுள்ள பிரஜைகள் (active citizens) அவசியமாகும். பிரஜைகளின் பங்களிப்பும் ஆதரவும் இல்லாமல் இச்சட்டத்தை அமுல்படுத்துவது கடினமான காரியமாகும். தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று தன்னார்வ குழுக்களை உருவாக்குவதன் மூலம் இச்சட்டத்தின் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அது தேர்தல் செலவுகளைக் கண்காணிக்க மற்றும் தகவல்களைத் திரட்ட முடியும். இந்தச் சட்டத்தினை மதிக்காது மோசடி செய்வோரை, பொய்யான தகவல்களை முன்வைப்போரை ஊடகங்களின் வாயிலாக அம்பலப்படுத்த வேண்டும். அதேபோன்று மோசடிக்காரர்களின் தேர்தல் செலவு தொடர்பான விபரங்களைத் தகவலறியும் உரிமைச்சட்டத்தைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். அதேவேளை, இச்சட்டம் பற்றிய தெளிவினை ஏற்படுத்த சமூக ஊடகங்களை வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்துவது, இளைஞர்களை அதற்காக அணிதிரட்டுவது மற்றும் சட்டம் பற்றி சிறு அறிவூட்டல் வீடியோ பதிவுகளைச் சமூக ஊடகங்களில் பகிர்வது என்பன இன்றைய சூழலில் பயனுள்ள செய்பாடுகளாக அமையும்.

அரகலய போராட்டத்துக்குப் பின்னர் அரசியல் தொடர்பான விழிப்புணர்வு இலங்கையில் அதிகரித்திருக்கின்றது. ஆகவே பிரஜைகளின் அரசியல் எழுத்தறிவு இத்தகைய சட்டங்களின் வெற்றிக்குப் பெரிதும் அவசியமாக இருக்கும். மேற்குலக நாடுகளில் இச்சட்டம் மிகச் சிறப்பாக இயங்குவதற்கு அல்லது செயல்படுத்துவதற்கு மக்கள் மத்தியில் காணப்படுகின்ற அரசியல் விழிப்புணர்வு பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அந்நிலைமை இலங்கையிலும் உருவாக வேண்டும்.

அதேபோல், இச்சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இன்று வளர்ச்சி அடைந்திருக்கின்ற தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். தேர்தல் செலவினங்களைக் கண்காணிப்பதற்கு, அதுபற்றிய தகவல்களைத் திரட்டுவதற்கு தகவல் தொழில்நுட்பத்தை இயன்ற அளவுக்கு பயன்படுத்துவது அவசியமாகும். இன்று எழுச்சிப்பெற்று வரும் செயற்கை நுண்ணறிவு (AI) பெரிதும் பயன்படும். அதேபோல் தேர்தல் சட்டங்களில் செய்யப்பட்ட இன்னும் சில மாற்றங்களையும் பொது மக்கள் அறிந்திருக்க வேண்டும். குறிப்பாக, தேர்தல் காலங்களிலே பதாதைகளை வைப்பது, பொது இடங்களில் வேட்பாளர்களின் பெயர் களை எழுதுவது, புகைப்படங்களைக் காட்

சிப்படுத்துவது, அலங்கரிப்பது போன்ற தேர்தல் சட்டங்களை மீறும் செயற்பாடுகளுக்கு இதுவரைக்காலமும் 100- 500 ரூபாய் வரையிலான அபராதம் மாத்திரமே விதிக்கப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டு அச்சட்டத்திலும் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அதன்படி இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிர்காலத்தில் ஒரு இலட்சம் தொடக்கம் ஐந்து இலட்சம் ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படும்.

இச்சட்டத்திலே ஒரு சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதனையும் குறிப்பிடுவது பொருத்தமாகும். உதாரணமாக, ஜனாதிபதித் தேர்தலிலே வெற்றி பெறுகின்றவர் தமது செலவு விபரங்களை 21 நாட்களில் சமர்ப்பிக்காவிட்டால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனென்றால் ஜனாதிபதிக்கு அரசியலமைப்பில் விடுபாட்டுரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. மேலும், வேட்பாளர்கள் பொய்த் தகவலை வழங்குவதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் இச்சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும் குறைபாடுகளுக்கு மத்தியிலேனும் இத்தகையதொரு சட்டம் இலங்கையில் உருவாக்கப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகவே நாம் கருத வேண்டும். ஆகவே இதிலுள்ள குறைபாடுகளைக் கலைவதற்குக் கூட்டிணைந்த முறையில் சகல தரப்பினரும் செயற்படுவதன் மூலம் சில திருத்தங்களை எதிர்காலத்தில் கொண்டுவர முடியும்.

தேர்தல் காலத்தில் உலகில் பல நாடுகளில் நாம் அவதானிக்கின்ற பிரதான பிரச்சினை யாதெனில் electoral bonds என்று சொல்லப்படுகின்ற தேர்தல் பிணையாகும். குறிப்பாக, பெரும் வர்த்தகர்கள் அல்லது வர்த்தக உயர்குழாம் மற்றும் பல்தேசிய கம்பெனிகள் அரசியல்வாதிகளுக்கு கோடிக்கணக்கான பணத்தை வழங்கி அரசியல்வாதிகளோடு ஒரு ஒப்பந்தத்தை செய்து கொள்கின்றார்கள். அவ்வொப்பந்தம் என்னவென்றால் குறிப்பிட்ட அரசியல் கட்சி அல்லது அரசியல்வாதி பதவிக்கு வந்தப் பின்னர் தமக்கு என்ன செய்யவேண்டும் என்பதை அவர்கள் முன்கூட்டியே தீர்மானித்து விடுகின்றார்கள். தமது வியாபார நோக்கங்களை அடைந்துகொள்ள கோடிக்கணக்கான பணத்தை கோபரேட் கம்பனிகள் அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் வழங்குகின்றன. இத்தகைய நடைமுறைகளினால் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பிரதான தாக்கம் என்னவென்றால், மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான சமூக ஒப்பந்தம் (social contract) மிக மோசமாக மறுதலிக்கப்படுவதாகும். வேறுவகையில் கூறுவதாயின், அரசியல்வாதிகள் சமூக ஒப்பந்தத்தை அப்பட்டமாகவே மீறுகின்றார்கள் எனலாம். இதனால் பெரும் வர்த்தகர்களுடைய நலன்களுக்காக, தேவைகளுக்காக அரசாங்கத்தைக் கொண்டு நடத்த வேண்டிய நிலைக்கு அரசியல்வாதிகள் தள்ளப்படுகின்றார்கள். ஆகவே உயர்குழாம் அரசியல் வாதிகளும் வர்த்தகர்களும் அரச நிறுவனங்களையும் அரசாங்கத்தையும் கைப்பற்றி விடுகின்றார்கள். தமக்கேற்ற வகையில் கொள்கை களை உருவாக்கிக்கொள்வதற்கு அரசாங்கத்தைப் பயன்படுத்துகின்றார்கள்.

இப்போக்கானது வெறுமனே பிரநிதித்துவ ஜனநாயகத்தின் மீது மட்டுமின்றி ஒட்டுமொத்த ஜனநாயக ஆட்சியின் மீதும் பிரஜைகள் மத்தியில் விரக்தியினையும் அவநம்பிக்கையினையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால், தேர்தல் ஆகக் குறைந்த ஜனநாயகத்தினை மாத்திரமே தமக்கு வழங்குவதாக பிரஜைகள் எண்ணுகின்றார்கள். ஜனநாயக ஆட்சியின் வீழ்ச்சிக்கு தேர்தல் காலப் பிணையும் முக்கிய செல்வாக்குச் செலுத்துவதாக பல ஆய்வுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளன. உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளான அமெரிக்கா, பிரித்தானிய (முன்னர் இந்தியா) போன்ற நாடுகளைக் கூட விலைக்கொடுத்து வாங்க முடியும் என்ற நிலை இதனால் உருவாகியுள்ளது. ஆகவேதான், உலகில் இடம்பெறுகின்ற மக்கள் போராட்டங்கள் பலவற்றில் ஆட்சி செயன்முறையில் மக்கள் நேரடியாக பங்குப்பற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அழுத்தமாக முன்வைக்கப்படுகின்றது.

அரகலயப் போராட்டத்தின் போது இலங்கையில் மக்கள் சபையினை (People's Council) உருவாக்க வேண்டும் எனவும் அது பாராளுமன்றத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் எனவும் அதற்கு அரசியல் அமைப்பு அந்தஸ்து வழங்க வேண்டும் எனவும் கோரினார்கள். இலங்கையில் மீளழைத்தல் முறையை (Re-call election) அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கோசமும் அக்காலப்பகுதியில் எழுச்சிப்பெற்றது. 1986-ஆம் ஆண்டு கௌத்தமாலா நாட்டின் ஜனாதிபதியாக இருந்த வினிசியோ செரெசோ என்பார் தன்னிடம் 10 விகிதமான அதிகாரங்கள் மாத்திரமே உண்டு எனவும் ஏனைய அதிகாரங்கள் வர்த்தக உயர்குழாம் மற்றும் கோபரேட் கம்பனிகளிடமும் காணப்படுவதாகக் பகிரங்கமாகக் குறிப்பிட்டார். இதன் மூலம் ஒட்டுமொத்த அரசினையும் பெரும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் கைப்பற்றி வைத்திருப்பதனை வெளிப்படுத்தினார். இதனால் தம்மால் நாட்டுக்கு அவசியமான மற்றும் மக்கள் நலன் பேண் கொள்கைகளைச், சட்டங்களை உருவாக்க முடியவில்லை என்பதனை எடுத்துக் காட்டினார்.

## எதிர்கொள்ள வேண்டிய சவால்கள்:

இச்சட்டத்தில் உள்ள ஒரு முக்கிய குறைபாடு என்னவென்றால், அரசியல் கட்சிகள் தேர்தல் செலவினங்கள் தொடர்பான பொய்யான தரவுகளை வழங்கினால் அல்லது மோசடிகளில் ஈடுபட்டால் அதற்கெதிராகத் தேர்தல் ஆணைக்குழு நேரடியாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்கின்ற அதிகாரம் வழங்கப்படாமையாகும். பொதுவில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேரடியாக வழக்கு தாக்கல் செய்யும் அதிகாரம் சட்டத்தில் வழங்கப்படவில்லை. தொடர்ச்சியாகவே இவ்வதிகாரத்தைத் தேர்தல் ஆணைக்குழு கோரி வருகின்றது. ஆனால் இதுவரையில் இவ்வதிகாரம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும் ஏனைய அரச திணைக்களங்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு நேரடியாக வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரம் உண்டு. உதாரணமாக சுற்றாடல், தொல்பொருளியல், வனவிலங்கு போன்ற திணைக்களங்களைக் குறிப்பிடலாம். இலங்கை போன்ற ஊழல் மோசடி நிறைந்த அரசியல் கலாச்சாரத்தைக் கொண்ட நாடுகளில் இச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபோது பல்வேறு சவால்கள் ஏற்படலாம். அத்தகைய சவால்களுக்கு நாம் எப்படி முகம் கொடுப்பது என்பது பற்றி சிந்திக்க வேண்டும். அதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்குவது மிகவும் அவசியமாகும்.

ஏலவே குறிப்பிட்டதுபோல் சிறந்த அமுலாக்க பொறிமுறை ஒன்றைத் தேர்தல் ஆணைக்குழு கட்டியெழுப்ப வேண்டும். பல்வேறு தரப்பினோடு சேர்ந்து கூட்டிணைந்த முறையில் இச்

செயற்பாட்டினை முன்னெடுக்க வேண்டும். மிக முக்கியமாக, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து தேர்தல் செலவினத்தைக் கட்டுப்படுத்தும் சட்டத்தை தாம் வாசித்து விளங்கிக் கொண்டோம், அதன் நிபந்தனைகளை (terms and conditions) ஏற்றுக்கொள்கின்றோம் என்ற எழுத்துமூல உறுதிமொழியை ஆணைக்குழு பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். சகல வேட்பாளர்களிடம் இருந்தும் இதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வேட்பு மனுவுடன் இவ்வுறுதிமொழி பத்திரத்தினையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இரட்டைக் குடியுரிமை தொடர்பான உறுதிமொழி ஒன்றினையும் இம்முறை பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தேர்தல் செலவு தொடர்பான முறைப்பாடுகளைப் பொலிஸ் நிலையத்திலேயே மேற்கொள்ள முடியும். ஆயினும், பொலிசில் மட்டும் தங்கி இருக்காமல் அதற்கு அப்பால் சென்றும் முறைப்பாடு செய்வதற்கு, விசாரணைகளைச் செய்வதற்கான பொறிமுறையொன்றும் உருவாக்கப்பட வேண்டும். ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு ஊடாக அல்லது தேசிய கணக்காய்வாளர் நாயகத்தின் காரியாலயத்தின் ஊடாக முறைப்பாடுகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பொலிஸ் நிலையத்தினை மாத்திரம் தங்கியிருப்பது எந்த அளவுக்கு தாக்ககரமாக இருக்கும் என்று தெரியவில்லை. பொதுமக்கள் மத்தியிலே பொலிஸ் அதிகாரிகள் பற்றிய பெரியளவிலான அதிருப்தி மற்றும் அவநம்பிக்கை காணப்படுவதை நாம் மேற்கொண்ட பல ஆய்வுகளிலே அடையாளம் கண்டுள்ளோம். அதே வேளை, இச்சட்டம் பற்றிய தெளிவினை ஏற்படுத்த சமூக ஊடகங்களை வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்துவது, இளைஞர்களை அதற்காக அணிதிரட்டுவது, சட்டம் பற்றி சிறு அறிவூட்டல் வீடியோக்களை பதிவு செய்வது என்பன முக்கியமான விடயமாக இருக்கும். விகிதாசார பிரதிநிதித்துவமுறை இந்த நாட்டிலே அறிமுகப்படுத்தப்பட்டு 46 ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்த 46 ஆண்டுகளில் நாம் இப்படியானதொரு நடைமுறையினை கையாளவில்லை. ஆகவே திடீரென இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றபோது சவால்கள் ஏற்படலாம்.

ஒட்டுமொத்தத்தில் தேர்தல் செயல்முறையில் பொறுப்புக்கூறலையும் வெளிப்படைத்தன்மையையும் ஏற்படுத்த இச்சட்டத்தினை வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்த வேண்டும். அது இலங்கையில் எதிர்காலத்தில் புதியதொரு அரசியல் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்ப பெரிதும் உதவியாக அமையும். இவ்விலக்கினைக் கூட்டு முயற்சியின் ஊடாக அடைந்துகொள்ள முடியும்.



ramesh.r@thaiveedu.com






ஊடக சுதந்திரத்திற்காகவும் கருத்துச் சுதந்திரத்திற்காகவும் 14 ஆண்டுகளாக ஒரு சட்டப் போராட்டத்தை முன்னெடுத்தவர் அசாஞ். அது உலகின் மிகப்பெரிய வல்லரசிற்கெதிரான போராட்டம். தனது நீண்ட நெடிய சட்டப் போராட்டத்தின் மூலம் ஊடக மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான ஒரு தீர்க்கமானதும் முன்னுதாரணமுமான வரலாற்றைப் பதிவு செய்திருக்கின்றார். சமகாலத்தின் கலகக் குரலாகவும் அடையாளமாகவும் அசாஞ் விளங்குகின்றார்.

அமெரிக்க நீதித் துறையுடன் ஏற்பட்ட உடன்படிக்கைக்கு அமைய வீக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசாஞ் ஜூன் 25, 2024 அன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். அமெரிக்காவின் ஈராக், ஆப்கானிஸ்தான் போர்கள் தொடர்பான இரகசிய ஆவணங்களை வீக்கிலீக்ஸ் வெளியிட்டமை தவறு என்று 'குற்றத்தை' ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் - ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அவரது விடுதலை தொடர்பான உடன்படிக்கை எட்டப்பட்டிருக்கிறது. ஏற்கனவே பிரித்தானிய அதியாபத்து வளைய Belmarch சிறையில் அவர் 5 ஆண்டுகளைக் கழித்துள்ள நிலையில் அமெரிக்க உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள ஐந்தாண்டுச் சிறைவாசத்தை அவர் ஏற்கனவே அனுபவித்துள்ளார். இது அடிப்படையில் அசாஞ் மனப்பூர்வமாக வழங்கிய வாக்குமூலமல்ல. விடுதலைக்காக அவர் கொடுத்த விலைகளில் இதுவும் ஒன்று.

## விடுதலை எனும் திருப்புமுனை:

அமெரிக்காவிடம் கையளிப்பதற்கு எதிரான மேன்முறையீட்டு வழக்கு இடம்பெறுவதற்குச் சரியாக இரண்டு வாரங்களுக்கு முன்னர் இத்திருப்புமுனை நிகழ்வு நடந்தேறியிருக்கின்றது. அசாஞ் விவகாரத்தில் இது திருப்புமுனை என்பதோடு ஒரு வகை இறுதித்தீர்வு எனவாகவும் அமைந்திருக்கின்றது. பொது மன்னிப்பு அல்லது வழக்கினை அமெரிக்கா கைவிடும் என்பதான தகவல்கள் முன்னரே அறியப்பட்டவை தான். 'வீக்கிலீக்ஸ் நிறுவுநரின் சட்டப்போராட்டம்: அமெரிக்கா வழக்கினை மீளப்பெறுமா?' எனும் தலைப்பில் இவ்விடயங்கள் ஆராயப்பட்ட எனது கட்டுரை தாய்வீடு மே மாத இதழில் வெளியாகியிருந்தது.

ஊடகச் சுதந்திரத்திற்காகவும் கருத்துச் சுதந்திரத்திற்காகவும் 14 ஆண்டுகளாக ஒரு சட்டப் போராட்டத்தை முன்னெடுத்தவர் அசாஞ். அது உலகின் மிகப்பெரிய வல்லரசிற்கு எதிரான போராட்டம். அமெரிக்காவிடம் அவர் கையளிக்கப்பட்டிருப்பின் ஏற்கனவே அவர் மீது விதிக்கப்பட்ட தீர்ப்பிற்கு (150 ஆண்டுகள் சிறைத் தண்டனை) அமைய, அவருடைய மரணமும் அமெரிக்கச் சிறைக்குள் நிகழ்ந்திருக்கும் அல்லது அமெரிக்காவில் மேலதிக தீர்ப்பில் அவருக்கு மரண தண்டனை கூட விதிக்கப்பட்டிருக்கும். குற்றத்தை ஒப்புக்கொண்ட உடன்படிக்கை மூலம் அவரது விடுதலை சாத்தியமாகியிருக்கின்றது, அவரது உயிர் காக்கப்பட்டிருக்கின்றது. அசாஞ் வீக்கிலீக்ஸ் ஊடாக வெளியிட்ட ஆவணங்கள் அமெரிக்காவின் போர்க் குற்றங்கள், மனிதத்திற்கெதிரான குற்றங்களை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தியிருந்தன.

## சிறைவாசம்:

ஐந்தாண்டுகளுக்கும் மேலாக வெறும் 6 சதுர மீற்றர் அளவுள்ள ஒரு அறையில், நாளாந்தம் 23 மணிநேரம் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வாழ்வை அனுபவித்தவர். விரைவில் தனது மனைவி ஸ்டெல்லா, குழந்தைகளுடன் மீண்டும் இணையவுள்ளார். குழந்தைகள் தங்கள் தந்தையைச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் மட்டுமே இதுவரை சந்தித்திருக்கின்றார்கள். இரண்டு மகன்கள். முறையே ஐந்து மற்றும் ஏழு வயதுடையவர்கள்.

அசாஞ்சின் விடுதலைக்காக உலகெங்கும் பல மில்லியன் கணக்கான மக்கள் ஆதரவுக்குரல் எழுப்பியுள்ளனர். பல ஆண்டுகளாக அவரது விடுதலையை வலியுறுத்தித் தெருவில் இறங்கிப் போராட்டங்களையும் நடத்தியுள்ளனர்.

விடுதலைக்குப் பின்னர் அசாஞ் இதுவரை பொதுவெளியிற் பேசவில்லை. வீட்டுக் காவல், எக்குவாடோர் தூதரகத்தில் தஞ்சம், சிறை வாழ்வு எனவாகப் 14 ஆண்டுகள் தனிமைப்படுத்தப்பட்ட வாழ்வு அசாஞ் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தப் பாதிப்பிலிருந்து அவர் மீள்வதற்குக் கால அவகாசம் தேவை என்பதையும் அவருடைய தனிப்பட்ட வாழ்விற்கு மதிப்பளித்துப் பொறுமை காக்குமாறு ஊடகங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் துணைவி ஸ்டெல்லா. 5 ஆண்டுகளாக வசதிகளற்ற நெருக்கமான சிறைக்குள் அவர் அடைக்கப்பட்டிருந்த நிலையில், உடல்நிலை மிக மோசமடைந்திருந்தமை தொடர்பான செய்திகள் பலமுறை வெளிவந்திருந்தன.

அசாஞ் தொடர்ந்து வீக்கிலீக்ஸில் பணியாற்றுவாரா என்ற ஊடகச் சந்திப்புக் கேள்விக்கு, அவர் மீண்டும் குணமடைவதே தற்போதைய சூழலில் முன்னுரிமைக்குரியது, ஆனால் ஜூலியன் எப்போதும் மனிதவுரிமைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாவலர், அவர் எப்போதும் அதைச் செய்திருக்கிறார். இந்தப் போர்க்குணம் அவர் யார் என்பதன் அடையாளம் என்பதோடு அவர் கொள்கைவாதியும்கூட என்றும் ஸ்டெல்லா தெரிவித்துள்ளார்.

## வாக்குமூல உடன்படிக்கை:

பசுபிக் சமுத்திரத்தில் அமெரிக்கக் கட்டுப்பாட்டிலுள்ள சைபன் தீவில் ஜூன் 26, 2024 அன்று அமெரிக்க நீதித்துறைக்கும் அசாஞ்சிற்கும் இடையிலான சந்திப்பும் உடன்படிக்கை கைச்சாத்திடலும் இடம்பெற்றுள்ளது. இது அடிப்படையில் அமெரிக்க அரசுக்கும் அசாஞ்சிற்கும் இடையிலான உடன்படிக்கை. அது அமெரிக்க நீதிபதி ஒருவர் முன்னிலையில் வாக்குமூலம் அளிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டும் உள்ளது. சைபன் தீவிலுள்ள நீதிமன்றத்தில், அவருக்கெதிரான குற்றச்சாட்டுச் சார்ந்து விளக்கம் கோரப்பட்டதாகவும், அதற்கு அவர், தான் பத்திரிகையாளராகப் பணிபுரிந்தபோது, தகவலை வெளியிடும் நோக்கத்துடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு தனக்கான தகவல் வழங்குபவரை ஊக்குவித்ததாகப் பதிலளித்துள்ளார். ‘அரசியலமைப்பிலுள்ள பத்திரிகைச் சுதந்திரம் எனது அந்தச் செயற்பாட்டைப் பாதுகாக்கிறது என்று நான் நினைத்தேன், ஆனால் அது புலனாய்வுச் சட்டவிதிக்கு முரணானது என்பதை ஏற்றுக்கொள்கிறேன்’ என்று அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

செல்சியா மன்னிங் எனும் அமெரிக்க உளவுத்துறை ஆய்வாளரிடமிருந்தே விக்கிலீக்ஸ் பெரும்பாலான ஆவணங்களைப் பெற்று வெளியிட்டிருந்தது. அவருக்கு 2013-ம் ஆண்டு உளவு பார்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவரது தண்டனை பின்னர் பராக் ஒபாமாவால் 7 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. அசாஞ்சிற்கெதிராக நடவடிக்கை எடுப்பதை ஒபாமா நிர்வாகம் தவிர்த்தது. ஏனெனில், ‘பத்திரிகையாளர்களுக்கான பொதுவான சட்டங்களுக்கு வெளியில் தகவல்களை வெளியிட்டதற்காக அசாஞ் மீது வழக்குத் தொடர வழியேதும் இல்லை’ என முன்னாள் நீதித்துறைச் செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர் (Matthew Miller) தெரிவித்தமையை இங்கு மேற்கோள் காட்டமுடியும்.

தொடர்ந்து ஆட்சிக்கு வந்த டிரம்ப் நிர்வாகம் 2019-ம் ஆண்டு அசாஞ் மீது 17 உளவுசார் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வழக்குத் தொடுத்தது. அதற்கு முந்தைய ஆண்டு கணினி உள்நுழைவுத் தகவற் திருட்டுக் (Hacking) குற்றம் சாட்டப்பட்டது.

## பின்னணியும் பரிமாணங்களும்:

இந்த உடன்படிக்கை ஏற்படுவதற்கான அழுத்தங்கள் பல பரிமாணங்களைக் கொண்டவை. ஒரு பக்கம் முடிவின்றி இழுபட்ட சட்ட நடவடிக்கை. அமெரிக்காவிடம் கையளிப்பதற்கு எதிரான மேன்முறையீட்டினை விசாரித்த பிரித்தானிய நீதிபதிகளின் அணுகுமுறை இதில் முக்கியமானது. அடுத்து அமெரிக்காவிற்கு எதிராகப் பலமட்டங்களிலும் நீடித்துவந்த வலுவான அழுத்தம். அசாஞ் மீதான குற்றச்சாட்டுகள் கைவிடப்பட வேண்டும் என்று ஊடக மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்காகப் போராடும் அமைப்புகள், சமூக, அரசியல் ஆர்வலர்கள் மட்டும் கோரவில்லை. அவுஸ்திரேலிய நாடாளுமன்றமும் அக்கோரிக்கையைத் தீர்மானமாக நிறைவேற்றிய பின்னணியில், அவுஸ்திரேலியப் பிரதமர் இக்கோரிக்கையை அமெரிக்க ஜனாதிபதியிடம் முன்வைத்திருந்தார். அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடு அவுஸ்திரேலியா. அமெரிக்காவின்



ஐரோப்பிய நட்பு நாடுகளிற் சிலவும் அசாஞ்சின் விடுதலையை அமெரிக்காவிடம் கோரியிருந்தன. பல நாடுகள் மௌனம் சாதித்தன என்றும் அறியப்படுகின்றது.

## Win–Win Solution:

இத்தகு இராஜதந்திரத் தீர்வு ஏலவே எதிர்வுகூறப்பட்டதுதான். அடிப்படையில் இதுவொரு பரஸ்பர வெற்றித் தீர்வு (Win-Win Solution). கையளிப்பு வழக்கு ஊடகச் சுதந்திரத்திற்கு வலிமை சேர்க்கும் வகையில் அமையாமல், அதேவேளை அசாஞ்சிற்குச் சட்டரீதியான வெற்றியாக அமையாமல் முடிவுக்குக் கொண்டுவந்தமை பைடன் நிர்வாகத்திற்கு வெற்றி. அசாஞ்சின் விடுதலை மூலம் அவரது உடல்நலமும் உயிரும் காப்பாற்றப்பட்டுள்ளது. இது அசாஞ்சின் விடுதலை சார்ந்த வெற்றியும்கூட. வெற்றி என்ற ஒன்று நிகழும் போது இருமைக் கோட்பாட்டின்படி அங்கு நேரடியானதொரு தோல்வித் தரப்பும் இருந்தே தீரவேண்டுமென்பது இயங்கியல் நியதி. இங்கு ஊடக, வெளியீட்டு மற்றும் புலனாய்வுச் செய்திச் சுதந்திரம் தோற்றிருக்கின்றது அல்லது சமரசத்திற்கு உட்பட்டிருக்கின்றது.

பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரத்திற்கான

அமைப்புகளின் பிரதிநிதிகள், அசாஞ்சேயின் விடுதலைக்காக வழக்கு நடைபெற்ற ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்திற்கு முன்பாகப் போராடியுள்ளனர். ஊடக நடைமுறைக்கும் தர்மத்திற்கும் உட்பட்டே அசாஞ் தகவல்களைப் பெற்று வெளியிட்டதாகவே அவர்கள் வலியுறுத்தி வந்தனர். அத்தோடு மனிதத்திற்கெதிரான மோசமான துஷ்பிரயோகங்கள் மற்றும் போர்க் குற்றங்களை அம்பலப்படுத்திய 'மாவீரன் அசாஞ்' என்ற கருத்தினையும் அவர்கள் கொண்டிருக்கின்றனர்.

இதுவொரு குற்றச் செயல் என்று அசாஞ்சிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ள இந்தத் தீர்வல்ல, அசாஞ் விடுதலைக்காகப் போராடிய அமைப்புகள் எதிர்பார்த்த வெற்றி. அசாஞ் மீதான குற்றச்சாட்டுகளை பைடன் நிர்வாகம் தள்ளுபடி செய்து, குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறாமல் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று அமெரிக்கப் பத்திரிகைச் சுதந்திர மையத்தின் (Freedom of the Press Foundation) நிர்வாக இயக்குனர் டிரெவர் ரிம் (Trevor Timm) தெரிவித்துள்ளார். (The Guardian, 25.06.24)

## அமெரிக்காவின் இலக்கு:

இரகசிய ஆவணங்களை வெளியிட்டமை குற்றம் என்பதான ஒப்புதல் வாக்குமூலத்தினை அசாஞ்சிடமிருந்து பெற்ற இந்த நிகழ்வு, ஏனைய பத்திரிகையாளர்கள் உண்மையைத் தேடுவதை அச்சுறுத்தும் நோக்கம் கொண்டதாகும். ஊடகத் துறையிற் புலனாய்வுச் செயற்பாடுகள் மீது வரையறைகளையும் அச்சுறுத்தல்களையும் விதிக்கிறது. அத்தகைய ஊடகப் பணிகளை மேற்கொள்பவர்கள் மீது உளவாளிகள் எனக் குற்றஞ் சுமத்தப்படும் அபாயம் இன்னும் உள்ளது. இவ்வாறாக ஊடகச் சுதந்திரத்தின் மீது அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இந்நிகழ்வினை அமெரிக்கா முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது என்ற விமர்சனங்கள் பல மட்டங்களில் முன்வைக்கப்படுகின்றன.

அசாஞ் தனது விடுதலையைச் சாத்தியப்படுத்துவதற்கு அவசியமான தீர்வு இதுவென்பதை மறுக்கமுடியாது. மானிடம் மீது அக்கறையோடு உயிராபத்துகளுக்கு முகங்கொடுத்து அதிகாரச் சக்திகளுக்கு எதிராக நின்ற ஒரு மனிதரின் விடுதலையை இந்நிகழ்வு சாத்தியப்படுத்தியிருக்கின்றது. அமெரிக்க மேலாதிக்கமும் அதன் கூட்டணி சக்திகளும் அம் மனிதருக்கு வேறு மாற்றுத் தெரிவுகளை விட்டுவைக்கவில்லை என்பதே யதார்த்தம்.

பதினான்கு ஆண்டுகள் என்பது மிக நீண்ட காலம். ஒரு தலைமுறைக் காலத்தை இவ்வாறாக மிக நெருக்கடிகள் மிகுந்த தனிமைப்படுத்தல் மற்றும் சிறை, சட்டப் போராட்டத்தில் அவர் செலவிட்டுள்ளார்.

## பிரித்தானிய நீதிமன்ற நிபந்தனை:

இந்த ஆண்டு இடம்பெற்ற இறுதி இரண்டு சுற்று வழக்கு விசாரணைகளின் முடிவிற் பிரித்தானிய நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புகள் இன்றைய விடுதலை விவகாரத்தில் முக்கிய பங்குவகிக்கின்றன. மார்ச் மாதம் அமெரிக்காவிடம் கையளிப்பதைத் தள்ளிப்போடும் இடைக்காலத் தீர்ப்பினை அறிவித்ததோடு, கையளிப்பு நிகழும் பட்சத்தில் கருத்துச் சுதந்திரம் சார்ந்த திருப்தியளிக்கக்கூடிய உத்தரவாதங்களை நீதிபதிகள் அமெரிக்காவிடமிருந்து கோரியிருந்தனர். அமெரிக்கா வழங்கிய உத்தரவாதங்கள் நம்பகத்தன்மை அற்றவை என அதே நீதிபதிகள் மே மாதம் நிராகரித்திருந்தனர். அதாவது அசாஞ் கையளிக்கப்படும் பட்சத்தில் அவர் மீது நீதியான முறையில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென அமெரிக்கா வழங்கிய உத்தரவாதங்களை பிரித்தானிய நீதிமன்றம் நம்பவில்லை. அதனால் கையளிப்பு தடுக்கப்பட்டது.

இந்த நீதிமன்றத் தீர்ப்பு, பிரித்தானிய அரசாங்கத்திற்குப் பெரும் தோல்வி. ஏனெனில் பிரித்தானிய அரசாங்கம் 2 ஆண்டுகளுக்கு முன்னரே அமெரிக்காவிடம் அசாஞ்சைக் கையளிப்பது தொடர்பான தீர்மானத்தினை வெளியிட்டிருந்தமை நினைவுகொள்ளத்தக்கது. 2022, ஜூன், அன்றைய பிரித்தானிய உட்துறை அமைச்சர் பிரிதி பட்டேல் அந்த அனுமதியை அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தார்.

சட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அமெரிக்காவிற்கும் இது பாரிய தோல்வி. அவர்கள் நினைத்ததுபோல் அசாஞ்சை நாடுகடத்த முடியவில்லை. சி.ஐ.ஏ தலைமையில் முன்னெடுக்கப்பட்ட கடத்தல் மற்றும் படுகொலை முயற்சியும் தோல்வியடைந்திருந்தது.

இன்னொரு அம்சமும் அசாஞ் விவகாரம் முடிவிற்கு வந்த பின்னணியில் உள்ளது. இந்த ஆண்டு அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்நிலையில் அசாஞ்சை அமெரிக்காவிற்கு நாடுகடத்திக் கொண்டு செல்வது தொடர்பான வழக்கு நீடிப்பது தேர்தற் பிரச்சாரத்தினைப் பாதிக்கக்கூடியது. குறிப்பாக அமெரிக்காவிற்குக் கொண்டு செல்ல நேர்ந்தால் அது தேர்தற் பிரச்சாரங்களைத் திசைதிருப்பி, பைடனின் கட்சிக்கெதிரான அலைகளைத் தோற்றுவிக்கக்கூடியது. அசாஞ் விவகாரம் அணுகப்பட்ட விதம் குறித்து ஆளும் ஜனநாயகக் கட்சியின் இடதுசாரிகள் மட்டத்தில் விமர்சனங்கள் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## கலகக் குரல்:

நாடு கடத்தப்படுவது கைவிட்டுள்ளபோதும், இரகசிய ஆவணங்களை வெளியிடுவது குற்றமாகக் கருதப்படும் என்பதை நிறுவுவதில் அமெரிக்கா முனைப்புக் கொண்டுள்ளது. அதன் வெளிப்பாடாகவே அசாஞ்சுடனான உடன்படிக்கையையும் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றமையையும் பார்க்க முடிகின்றது. மட்டுமன்றி, அமெரிக்கப் பிரஜையல்லாத உலகின் எந்த மூலையில் இருந்தாலும் எவர் மீதும் தம்மால் வழக்குத் தொடரமுடியும் என்பதையும் நிறுவ முற்பட்டுள்ளது அமெரிக்கா. ஆனாலும், தனது நீண்ட நெடிய சட்டப் போராட்டத்தின் மூலம் ஊடக மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான ஒரு தீர்க்கமானதும் முன்னுதாரணமுமான வரலாற்றைப் பதிவு செய்திருக்கின்றார். சமகாலத்தின் கலகக்குரலாகவும் அடையாளமாகவும் அசாஞ் விளங்குகின்றார்.



rooban.s@thaiveedu.com

# ரஷ்யத் தேசியம் மீதுள்ள சவால்கள்

– ரதன்

ரஷ்யன் மொழியில் Russia என்பதற்கு இரு அர்த்தங்கள் உண்டு. ஆனால் ஆங்கில மொழிபெயர்ப்பு Russian எனவே உள்ளது. ரஷ்யனில் rossisski, russkiy ஆகிய இரு அர்த்தங்கள் உண்டு. முதலாவது, ரஷ்ய நாட்டு பிரசை. இரண்டாவது, ரஷ்ய இனக் குழு என அர்த்தப்படும். ரஷ்யா என்பது பல்வேறு இனக் குழுக்களைக் கொண்ட நாட்டின் பிரசை என்பதாக அர்த்தப்படும். russkiy mir என்பது ரஷ்ய உலகம். இந்த உலகம் உக்ரேன், பெலரஸ் ஆகிய நாடுகளையும் உள்ளடக்கியது. ரஷ்யத் தேசியம் என்பது உக்ரேனையும் பெலரஸையும் (Slavic States) உள்ளடக்கியது. 'நான் ஒரு தேசியவாதி' என்ற பதத்தினுள் நாட்டுப்பற்று தொனித்தாலும், ஒரு சுயநலமும் வெளிப்படுகின்றது.

கடந்த 50 வருடங்களில் ரஷ்யாவில் இருவர் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். முதலாமவர் கோப்பசேவ், இரண்டாமவர் புட்டின். பனிப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து மேற்கு நாடுகளுக்கு வெற்றியைக் கொடுத்தவர் என்ற பெயர் கோப்பசேவ்வுக்கு உண்டு. மேற்கு நாடுகள், சோவியத் யூனியனில் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்தியவர் கோப்பசேவ் எனக் கருதிக் கொண்டாடுகின்றார்கள். ஆனால் ரஷ்யாவில், கோப்பசேவ் ரஷ்யத் தேசியத்தை உடைத்துவிட்டார் என்ற கடுமையான விமர்சனம் அவர் மேல் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றது. கோப்பசேவ் பல செவ்விகளில் ரஷ்யாவில் மார்க்சியம் செயல்முறையில் வரும் என தான் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். தன்னை ஒரு மார்க்சியவாதியாகவே வெளிப்படுத்துகின்றார். ஆனால், மேற்கின் ஆய்வாளர்கள் அவரை மார்க்சியத்துக்கு எதிரானவராகவே வெளிப்படுத்துகின்றார்கள்.

ரஷ்யா, உக்ரேன், Byelorussian, Transcaucasian ஆகியன இணைந்து முதலில் 1922-ல் சோவியத் யூனியன் உருவானது. பின்னர் ரஷ்யா, உக்ரேன், Byelorussian, Uzbekistan, Kazakhstan, ஜோர்ஜியா, Azerbaijan, லித்துவேயா, மோல்டீவா, லற்றீவா, Kyrgyzstan, Tajikistan, Armenia, Turkmenistan, எஸ்ரோனியா ஆகிய 15 நாடுகளை சோவியத் யூனியன் கொண்டிருந்தது. இவற்றைவிட Warsaw Treaty Organization (WTO) என்ற அமைப்பின் ஊடாக ஏழு நாடுகள் சோவியத் யூனியனுடன் இணைந்து செயற்பட்டன. அல்பேனியா, பல்கேரியா, செக்கோசொலாவாக்கியா, கிழக்கு ஜேர்மனி, ஹங்கேரி, போலன்ட், ருமேனியா ஆகிய நாடுகளே சோவியத்துடன் இணைந்து செயற்பட்டன. மேற்கு நாடுகளின் நேட்டோ அமைப்பை விட மிக நெருக்கமான இணைப்பாகவே வார்சோ அமைப்பு செயல்பட்டது. டிசம்பர் 30, 1922-ல் ஆரம்பமாகி, டிசம்பர் 25, 1992-ல் சோவியத் சாம்ராஜ்யம் முடிவுக்கு வந்தது.

1956-ல் ஹங்கேரியில் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட்ட அமைப்புகளால் தொடங்கப்பட்ட ஹங்கேரிப் புரட்சி, ஹங்கேரி அரசினால் சோவியத் யூனியனின் படைகளின் உதவியுடன் கட்டுப்படுத்தப்பட்டது. அப்போது சோவியத் யூனியனில் ஸ்ராலின் ஆட்சி செய்தார். 1991 வரை ஹங்கேரியில் சோவியத் படைகள் நிலைகொண்டிருந்தன. 1968-ல் செக்கோசொலவாக்கியாவில் ஏற்பட்ட புரட்சியும், சோவியத் படைகளால் முறியடிக்கப்பட்டது. தற்போது செக், சொலவாக்கியா என இரு நாடுகளாகச் செக்கோசொலவாக்கியா பிரிந்துவிட்டது. 1948-லிருந்து 1989 வரை ருமேனியாவும் சோவியத் யூனியனின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள்ளேயேயிருந்தது. நேட்டோ 1949-ல் உருவாக்கப்பட்டது. அதன் பின்னரே வார்சோ அமைப்பு 1955-ல் உருவானது. ரூமன், வின்சன்ட் சேர்ச்சில் ஆகியோரின் கம்யூனிசச் சித்தாந்த பரம்பலுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாகவே வார்சோ நாடுகளின் அமைப்பு உருவாக்கப்பட்டது. நேட்டோவின் உருவாக்கமும் சோவியத் யூனியனுக்கு எதிராகவே இருந்தது. நேட்டோவின் ஒரேயொரு நோக்கம் சோவியத் யூனியன். அது உடைந்த பின்னரும் நேட்டோ கலைக்கப்படவில்லை. இப்பொழுது அது ரஷ்யாவிற்கு எதிராகத் திரும்பியுள்ளது.

சோவியத் யூனியன் உடைவுக்குப் பல்வேறு காரணங்கள் இன்றும் பல ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. சோவியத் யூனியனின் உள்ளகச் சிக்கல்களை மேற்கின் ஊடகங்கள் வெளிப்படுத்தவில்லை. சோவியத்தை லெனின் சுமார் ஒரு வருடமே ஆட்சி செய்தார். ஸ்ராலினே அதிக காலம் ஆட்சி செய்தார். 29 வருடங்கள் ஸ்ராலினின் ஆட்சி அமைந்திருந்தது. குருசேவ்வின் ஆட்சியின் போதே கிறீமியா சோவியத் குடியரசிலிருந்து சோவியத் உக்ரேன் குடியரசின் கீழ் கொண்டுவரப்பட்டது. இது நிர்வாக மாற்றமாகவே குருசேவ் கருதியிருந்தார். ஆனால் சோவியத் யூனியன் உடைந்த போது கிறீமியாவும் உக்ரேனை இணைத்துக் கொண்டது.

கோப்பசேவ்வின் ஆறாண்டு கால ஆட்சியில் சோவியத் யூனியனின் 15 நாடுகளுக்கு அதிகளவு சுதந்திரம் கோப்பசேவ்




வழங்கியமையினால் தான் சோவியத் யூனியன் உடைந்தது எனக் கோப்பசேவ்வை இன்றும் ரஷ்ய ஆதரவு விமர்சகர்கள் விமர்சிக்கின்றார்கள். மறுபுறத்தில் 15 நாடுகளுள் அதிகளவு தேசிய உற்பத்தி வருமானத்தை ரஷ்யா கொண்டிருந்தமையினால், வருமானப் பங்கீட்டினால் சோவியத் யூனியன் பாதிக் கப்பட்டிருந்தது. மேற்கு நாடுகள் தொடர்ச்சியாகக் கொடுத்து வந்த பொருளாதாரத் தடைகள், அழுத்தங்களையும் கோப்ப சேவ் எதிர்கொண்டிருந்தார்.

சோவியத் யூனியன் உடைந்த பின்னர் ரஷ்யா தன்னளவில் பல சிக்கல்களை எதிர்கொண்டது. குறிப்பாக ரஷ்யாவின் முதல் அதிபர் ஜெஸ்லினின் ஆட்சிக் காலத்தில் தன்னலக் குழுக்களின் ஆதிக்கம் அதிகரித்திருந்தது. சோவியத் யூனியன் காலத்தில் அமைந்திருந்த பொருளாதாரப் பங்கீடு அற்றிருந்தது. பணவீக்கம் அதிகரித்தது. ஜெஸ்லின் அமெரிக்காவிற்கு வந்து விட்டு, மீண்டும் ரஷ்யா திரும்புவதற்காக டலாஸ் விமான நிலையம் நோக்கிப் போய்க்கொண்டிருந்த போது Randall's Discount Super Market-ஐப் பார்த்துவிட்டு இது போன்ற ஒன்று ரஷ்யாவில் இல்லை. எங்களது மக்களுக்கு இவ்வாறான தெரிவுகள் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

சோவியத் யூனியன் உடைந்த பின்னர் ரஷ்யாவை ஆட்சி செய்தவர்கள் ரஷ்யா எவ்வாறு அமையவேண்டும் என்ற எண்ணமற்று, தங்களது பைகளை நிரப்புவதிலேயே கவனஞ் செலுத்தினார்கள். கடந்த ஐம்பது வருடங்களில் ரஷ்யாவில் மாற்றத்தை ஏற்படுத்தி இரண்டாமவரான புட்டினால் கூட இவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

சோவியத் யூனியன் உடைவதை இரசித்துக் கொண்டிருந்த அமெரிக்கா, ஜெஸ்லின் ஆட்சியைப் பயன்படுத்திக் கொண்டது. குடியில் விருப்பங்கொண்டு குடியில் மிதந்த ஜெஸ்லின் குடி மக்களை மறந்துவிட்டார். மேற்கு நாடுகள் ரஷ்யாவினுள் புகுந்தன. அமெரிக்க வைத்தியசாலை என்ற பெயரில் தனியார் மருத்துவமனை மொஸ்கோவில் அமைக்குமளவிற்கு ரஷ்யா அடிபணிந்து போனது. அப்பொழுது சீனா பொருளாதாரத்தில் எழுச்சி பெற்றிருக்கவில்லை. எனவே ரஷ்யாவிற்குக் கைகொடுக்க எவருமில்லை.

புட்டின் ஆட்சிக்கு வந்த போது புட்டினை மேற்கு நாடுகள் கணிக்கத் தவறிவிட்டன. மற்றொரு ஊழல்வாதி எனவே

நினைத்தனர். புட்டினின் எழுச்சியின் போது புட்டினைக் கிட்லருடன் ஒப்பிட்டுப் பிரச்சாரம் செய்தனர். அமெரிக்க House Speaker Kevin McCarthy நேரடியாகவே கிட்லருடன் ஒப்பிட்டுப் பேசினார். 'Putler' என்ற பதத்தாலும் அழைக்கப்பட்டார். தற்போதைய அமெரிக்க அதிபர் பைடன் 'By God, this man cannot be allowed to remain in power' எனப் போலாந்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறியிருந்தார்.

ரஷ்யா 195 இனக் குழுக்களைக் கொண்ட நாடு. ரஷ்யா 85 கூட்டாச்சி அமைப்புகளாக உள்ளது. இவற்றுள் 21 குடியரசுகள். ரஷ்யாவில் பல இனக் குழுக்கள் வாழ்ந்து வருகின்றனர். 81 வீதமான ரஷ்யர்களுடன் Tatars, உக்ரேனியர், Bashkirs Chechen, Chuvash, Armenian ஆகிய இனக் குழுக்கள் அதிகளவில் உள்ளனர். ரஷ்யர்களுக்கு அடுத்து அதிகளவுள்ள Tatars மூன்று வீதமானோரே. இவர்களில் பெரும்பாலானோர் முஸ்லீம்கள். ரஷ்யாவில் 21 குடியரசுகளில் பலவற்றில் ரஷ்யர்கள் தவிர்ந்த இனக் குழுக்களே அதிகளவு வாழ்கின்றனர். இவற்றைவிட மிகுதிக் கூட்டாட்சி அமைப்புகளிலும் சிறுபான்மையினர் பரந்து இருக்கின்றனர். பின்வரும் குடியரசுகளில் அதிகளவு சிறுபான்மையினர் வாழ்கின்றனர்.

Tatarstan - Tatars - 53.5 %,
Dagestan, Chuvashia - Chuvash - 63.7%,
Chechnya- Chechens - 96.4 %,
Sakha Republic - Sakha - 55.3% ,
Kabardino-Balkaria - Kabardin - 57 %,
Karachay-Cherkessia - Karachays - 44.4%,
Ingushetia - Ingush - 96.4 %,
Tuva - Tuvans - 88.7 %,
Kalmykia - Kalmyks - 62.5%,

சோவியத் யூனியன் காலத்தில் இனக் குழுக்களை நேரடியாக மத்திய அரசில் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். 2005-ல் புட்டின் அரசு மேற்கொண்ட சட்ட மாற்றத்தால் இந்தப் பிரதிநிதித்துவம் முடிவுக்கு வந்தது. பல குடியரசுகளில் முன்னர் அக்குடியரசைச் சேர்ந்த மக்கள் அதிகம் வாழ்ந்து வந்தனர். சோவியத் யூனியன் உடைவின் பின்னர் அங்கு ரஷ்யர்கள் அதிகம் வாழ்கின்றனர். அல்லது திட்டமிட்ட குடியேற்றம் அங்கு ஏற்படுத்தப்பட்டது. உதாரணத்துக்கு Komi Republic. இங்கு Komi மக்கள் அதிகம் வாழ்ந்து வந்தனர் - சுமார் 85 வீதம். இன்று அங்கு Komi மக்கள் சிறுபான்மையினராக உள்ளனர்.

இந்தியாவில் மோடி எல்லாவற்றையும் மத்தியில் ஒருங்கிணைப்பது போல், ரஷ்யாவிலும் நடைபெற்று வருகின்றது. தங்களது மத, மொழி, கலாசாரத்தை அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்தலாம். ஆனால் குடியரசுகளின் சட்டம், ஆட்சி என்பவற்றை மத்திய அரசே தீர்மானிக்கின்றது.

செசினிய விடுதலைப் போராட்டங்களை ரஷ்ய இராணுவம் அடக்கியது. எனினும் இன்றுவரை அங்கு சிறியளவிலாவது போராட்டங்கள் நடைபெறுகின்றன. உக்ரேன் ஆக்கிரமிப்பிற்குச் செசினியா ரஷ்யாவிற்கு ஆதரவு வழங்கியிருந்தது. போரிலும் செசினியாவைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் பங்குபற்றி வருகின்றனர். இந்திய-சீன யுத்தத்தின் போது தமிழ்நாட்டில் திராவிட நாடு எழுச்சிப் போராட்டங்களை அண்ணா கைவிட்டார். உக்ரேனுடனான ரஷ்ய ஆக்கிரமிப்பு ரஷ்யாவிற்குள் தோன்றி வளர்ந்து வரும் சிறுபான்மை இனப் போராட்டங்களைச் சற்றுப் பின்தள்ளியுள்ளது.

யப்பானுக்கு அருகிலுள்ள Kuril Islands ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. எனினும் யப்பானும் ரஷ்யாவும் இந்தச் சிறிய தீவுகளுக்காக மோதிக் கொண்டிருக்கின்றன.

இன்று ரஷ்யாவிற்குப் பக்கபலமாகச் சீனாவுள்ளது. உக்ரேன் போர் நேட்டோவோ, அமெரிக்காவோ எதிர்பார்க்காதவாறு இறுதிக் கட்டத்தில் ரஷ்யாவிற்குச் சார்பாகவுள்ளது. ரஷ்யா கைப்பற்றிய பிரதேசங்கள் ரஷ்யாவுடன் இணைக்கப்படும். அல்லது தற்போதுள்ள ரஷ்ய அரசியல் அமைப்பின் பிரகாரம் ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள குடியரசுகளாக அறிவிக்கப்படும். இப் பிரதேசங்களுள் ரஷ்யர்களே அதிகளவு உள்ளனர்.

ரஷ்யாவின் பொருளாதாரப் பலம் சில காலங்களுக்குப் புட்டினின் ஆட்சி மீது எந்த அழுத்தத்தையும் கொடுக்காது. ஆனாலும் ரஷ்யாவிலுள்ள சிறுபான்மைச் சமூகங்களின் எழுச்சியை மேற்கு வளர்க்கும். இது ரஷ்யா சந்திக்கவுள்ள அடுத்த பிரச்சினையாக அமையும். ஏற்கனவே பல குடியரசுகள் தங்களது சுதந்திரத்துக்காகப் போராடத் தொடங்கிவிட்டனர்.

புட்டின் உக்ரேனுடனான போரினை ஏற்படுத்தியதன் மூலம், ரஷ்ய மக்களின் எழுச்சிகளைத் தடுத்து, தொடர்ந்து தன்னை நிலைப்படுத்துகின்றார். இவ்வாறான மேற்கின் விமர்சனங்களை மறுக்கவும் முடியாமலுள்ளது.

ரஷ்யாவின் அடிப்படைவாதமானது ரஷ்யாவின் தாராளவாதத்துக்கும், அதிகாரத்துவத்துக்குமிடையில் திண்டாடுகின்றது. ரஷ்யாவின் அடிப்படைவாதம் என்பது ரஷ்யா, ரஷ்யர்கள் என்பதேயாகும். அங்கு சிறுபான்மையினர் வாழ்கின்றனர். அவர்கள் அதிகாரமற்றவர்கள். ரஷ்யத் தேசியமானது சிறுபான்மையினரை முழுமையாக உள்ளடக்காவிட்டால், அவர்களுக்கு அரசில் முழுமையான அங்கீகாரம் வழங்கப்படாவிட்டால், ரஷ்யாவின் எதிர்காலம் என்பது பல சுதந்திரக் குடியரசுகளாகவே அமையும். ஏற்கனவே சிறுபான்மையினங்கள் தங்களை ரஷ்யர்களாக அடையாளப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ரஷ்யாவினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தன்னார்வக் குழுக்களின் ஆதிக்கத்தைப் புட்டின் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். இதனால் பாதிக்கப்படுபவர்களின் எழுச்சியும் எதிர்வரும் காலத்தில் தோன்றும்.

உக்ரேன் போரின் பின்னால் நேட்டோவின் ஆதிக்கமானது ரஷ்யாவினைச் சுற்றியுள்ள நாடுகள் மீது அதிகமாக இருக்கும். பெலரஸ் போன்ற நாடுகளைத் தன்னுடன் இணைக்கவும் முயற்சிக்கும்.

புட்டினின் காலத்தில் புட்டின் ரஷ்யத் தேசியத்தைச் சகல சிறுபான்மையினங்களையும் இணைத்து அமைக்காவிட்டால், ரஷ்யா உடைவதைத் தடுக்க முடியாது.



rathan@thaiveedu.com

# எதிர்காலத்தைப் பொறுப்பேற்க இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல்

– தேவப்பிரியா



1960-களில், உலகம் முழுவதும் பல்வேறு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார காரணிகளால் விரக்தி நிலைக்கு தள்ளப்பட்ட இளைஞர்கள் மாற்றத்தை வேண்டினர். அமெரிக்காவில் சிவில் உரிமைகள் இயக்கம், வியட்நாம் போர் எதிர்ப்பு இயக்கம், ஐரோப்பாவில் சுதந்திரம் மற்றும் சமத்துவம் கோரிய மாணவர் போராட்டங்கள் போன்ற முக்கிய சமூக இயக்கங்களில் இளைஞர்கள் முன்னணியில் இருந்தனர். ஹிப்பிகள் போன்ற எதிர் கலாசார இயக்கங்களின் எழுச்சி பாரம்பரிய விழுமியங்கள் மீது கேள்வியெழுப்பி நிராகரிப்பை நோக்கி தள்ளியது. பொருளாதார நெருக்கடி, அதிகரித்த வேலையின்மை, கல்வி மறுசீரமைப்புக்கான கோரிக்கைகள் போன்றவற்றால் இந்த அதிருப்தி மேலும் தீவிரமடைந்தது. தகவல் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள் உலகளாவிய இளைஞர்களை ஒன்றிணைத்து மாற்றத்தை நோக்கிய அவர்களின் கூட்டு கோரிக்கைகளை வலுப்படுத்தின. இதனால் உண்டான கலகங்களும் போராட்டங்களும் அதனால் உண்டான விளைவுகளும் உலகம் முழுவதும் எதிரொலித்தன.

இலங்கையும் இதற்கு விதிவிலக்காகவில்லை. இந்நிலைமையை எதிர்கொள்வதற்கான பரிந்துரைகளையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான சட்டங்களையும் முன்மொழிவதற்கான ஏற்பாடுகளை அக்காலத்தில் இராஜாங்க அமைச்சராகவும் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சரின் நாடாளுமன்ற செயலாளராகவும் இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன கையாண்டார். அவருக்கு இவ்விடயத்தில் பணி ஓய்வுபெற்ற ஓர் இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஆலோசனை வழங்கி உதவினார்.

1967-ம் ஆண்டில் இஸ்ரேலிய இராணுவ மற்றும் மூலோபாய நிபுணர் பிரிகேடியர் ஆர்ய லெவி (Brigadier Arya Levi) இலங்கையின் நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தார். அந்த அறிக்கையில் இளைஞர்களின் அறிவு மற்றும் தொழில்வாண்மையை தேசிய அபிவிருத்திக்கு எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பது தொடர்பிலான விடயங்கள் உள்ளடங்கியிருந்தன. இளைஞர்களின் அதிருப்தியை போக்குவதற்கும் இளைஞர்களின் அறிவு மற்றும் இளைஞர் உழைப்பை இலங்கையில் தேசிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையாக மாற்றுவதற்கும் இந்த அறிக்கை அடித்தளமாக அமைந்தது.

பிரிகேடியர் ஆர்ய லெவி இஸ்ரேலிய இராணுவத்தில் ஒரு சிறப்பு மிக்க அதிகாரியாக பல்வேறு இராணுவ உயர் பதவிகளை வகித்துள்ளார். இராணுவ மூலோபாயம் மற்றும் இஸ்ரேலிய தேசிய பாதுகாப்பிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய அவரது நிபுணத்துவம் இராணுவ விவகாரங்களுக்கு அப்பாற்பட்டு, பொருளாதார அபிவிருத்தி, நல்லாட்சி மற்றும் சர்வதேச உறவுகள் என பரந்ததாக இருந்தது. அவரது இராணுவ பணிக்குப் பிறகு, பிரிகேடியர் லெவி கல்வி மற்றும் ஆலோசனைக்கு மாறினார். அங்கு அவர் உலகளாவிய அவிருத்தி தொடர்பான ஆலோசகராக ஆனதுடன் அவற்றுக்கு தனது மூலோபாய நுண்ணறிவைப் பயன்படுத்தி அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குநராக பணியாற்றினார். மோதல் தீர்வு, பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக இணக்கப்பாடு போன்றவற்றில் கவனஞ் செலுத்தினார். பிரிகேடியர் லெவியின் குறிப்பிடத்தக்க ஆய்வுகளில் இலங்கை தொடர்பான அவரது விரிவான ஆய்வு அடங்கும். இலங்கையின் சமூக-அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களில் பகுப்பாய்வை மேற்கொண்டு, அபிவிருத்தி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான மூலோபாய பரிந்துரைகளை அவர் வழங்கினார்.

அவரது ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை கவனத்தில் கொண்டு அப்போதைய அமைச்சராக இருந்த ஜே.ஆர். ஜயவர்தனவால் 1967-ம் ஆண்டின் 11-ம் இலக்க தொண்டர் தேசிய இளைஞர் சேவைகள் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டது. இலங்கையில் தேசிய அபிவிருத்தி மற்றும் சமூக சேவையில் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கான கட்டமைக்கப்பட்ட நிறுவக சட்டகத்தை நிறுவுதல் நாட்டின் சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் தன்னார்வ நடவடிக்கைகளில் இளைஞர்கள் பங்கேற்பதை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களின் ஆற்றலையும் திறனையும் பயன்படுத்துவதை இந்தச் சட்டம் நோக்கமாகக்



கொண்டிருந்தது. இளைஞர் சேவைகளை ஒழுங்கமைப்பதற்கும், நிர்வகிப்பதற்கும், அவர்களிடையே குடிமைப் பொறுப்புணர்வை வளர்ப்பதற்கும், இளைஞர்களிடையே தலைமைத்துவம் மற்றும் திறன் விருத்தியை ஊக்குவிப்பதற்கும் இது சட்டபூர்வமான அடித்தளத்தை வழங்கியது. எவ்வாறாயினும், நாட்டின் சகல பகுதிகளுக்கும் எல்லாச் சமூகங்களுக்கும் சமமான வாய்ப்புகளை வழங்காமை, நடைமுறைப்படுத்தல் மற்றும் நிர்வாக சிக்கல்களால் இச்சட்டத்தினால் பயனைப் பெற முடியவில்லை.

இச்சட்டத்தின் சில குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், 1967-ம் ஆண்டின் 11-ம் இலக்க தொண்டர் தேசிய இளைஞர் சேவைகள் சட்டம் நிறுவப்பட்ட கட்டமைப்பு சட்டகத்தை மேம்படுத்துவதற்கும் 1968-ம் ஆண்டின் 52-ம் இலக்க சுயாதீன தேசிய இளைஞர் சேவைகள் (திருத்த) சட்டம் கொண்டுவரப்பட்டது.

ஆயினும் இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்க முடியவில்லை. சமூக-பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், அரசியல் ஓரங்கட்டல்கள், பண்பாட்டு நெருக்கடிகள், வாய்ப்புகள் இல்லாமை, பாரபட்சம் ஆகியவற்றோடு அப்போது நடைமுறையில் இருந்த இளைஞர் சேவை சட்டங்களின் குறைபாடுகள் ஆகியவை இளைஞர்கள் மத்தியில் அதிருப்தியையும் விரக்தியையும் தூண்டி, கிளர்ச்சிக்கு வழிவகுத்தது. 1972-ம் ஆண்டு தெற்கில் இளைஞர் ஆயுதக் கிளர்ச்சி ஏற்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இன்னும் பல இளைஞர்கள் காணாமல் போயினர்.

இருந்தபோதிலும், இந்தச் சட்டங்கள் தேசிய இளைஞர் சேவை மன்றத்தை நிறுவுவது உட்பட எதிர்கால இளைஞர் திட்டங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான அடித்தளத்தை அமைத்தன.

1977-ல் சர்வ அதிகாரங்களுடன் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜயவர்தன, தான் பொறுப்பாக இருந்த விடயங்களை கையாள்வதற்கு அன்றிருந்த இளம் அமைச்சரான ரணில் விக்ரமசிங்கவை இளைஞர் விவகார அமைச்சராக நியமித்தார். 1979-ம் ஆண்டின் 69-ம் இலக்க தேசிய இளைஞர் சேவைச் சட்டத்தின் கீழாக தேசிய இளைஞர் சேவை மன்றம் உருவாக்கப்பட்டது. இளைஞர்களின் முழுமையான அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் வகையில் இளைஞர்களின் சுய அபிலாஷைகளை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்ட அரச நிறுவனமாக இது சொல்லப்பட்டது.

பல ஆண்டுகளாக, தலைமைத்துவ திறன்களை வளர்ப்பது, குடிமை ஈடுபாட்டை ஊக்குவித்தல் மற்றும் இளம் இலங்கையர்களிடையே தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட பல்வேறு இளைஞர் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளை ஒழுங்கமைப்பதில் தேசிய இளைஞர் சேவை மன்றம், குறிப்பிடத்தக்க பங்கை வகித்துள்ளது. இந்தத் திட்டங்களில் பட்டறைகள், பயிற்சி அமர்வுகள், மாநாடுகள் மற்றும் சமூகத் திட்டங்கள் ஆகியவை அடங்கும், அவை இளைஞர்களை அந்தந்த துறைகளில் செழிக்க தேவையான கருவிகள் மற்றும் வளங்களுடன் தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. மேலும், கல்வி, வேலை வாய்ப்புகள் மற்றும் சுகாதார சேவைகளுக்கான அதிகரித்த அணுகல்

போன்ற இளைஞர்களுக்கு பயனளிக்கும் கொள்கைகள் மற்றும் முன்முயற்சிகளுக்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வாதிடுகிறது.

அத்துடன் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் வினைத்திறனான முறையில் இணைந்து செயலாற்றுவதன் ஊடாக உள்ளூர் மற்றும் தேசிய அளவில் தீர்மானமெடுக்கும் செயன்முறைகளில் இளைஞர்களின் குரல்கள் மற்றும் நலன்கள் கேட்கப்படுவதையும் பிரதிநிதித்துவப்படுத்துவதையும் உறுதிசெய்ய தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் செயற்படுகிறது.

இக்காலகட்டத்தை தொடர்ந்த காலங்களில் பரந்த சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சவால்களின் பின்னணியில், இளைஞர்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளை நிவர்த்தி செய்வதை இலக்காகக் கொண்ட பல்வேறு இளைஞர் திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டன. இலங்கை எதிர்கொண்ட இன முரண்பாடுகள் மற்றும் பொருளாதார சவால்களின் பின்னணியில், நாட்டின் சமூக-பொருளாதார கட்டமைப்பில் இளைஞர்களை ஒருங்கிணைக்கும் பரந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த திட்டங்கள் இருந்தன.

1978-ல் இரண்டாம் குடியரசு யாப்பின் பின்னரான காலங்கள் இளைஞர்களின் நலன், வாழ்வுரிமை என்பவற்றில் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்திய ஆண்டுகளாக மாறிப்போயின. அரசாங்கத்தின் இளைஞர் அபிவிருத்தி செயற்பாடுகளை இலங்கையில் தொடங்கிய ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிகாலம் முழுவதும் அதன் பின்னரும் இளைஞர் அடைந்த நெருக்கடிகள் மிக மோசமானவையாக அமைந்திருந்தன.

## இளைஞர் நாடாளுமன்றம்:

1980-களில் இளைஞர்களுக்கு அரசியல் ஈடுபாடு மற்றும் தலைமைத்துவ மேம்பாட்டிற்கான ஒரு முறையான தளத்தை வழங்குவது குறித்த விவாதங்கள் கவனத்திற்கு உள்ளாகின. எதிர்காலத்தைப் பொறுப்பேற்க இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் குறித்த சிந்தனைகள் ‘இளைஞர் நாடாளுமன்றம்’ எனும் எண்ணக்கருவுக்கு வித்திட்டது. இளைஞர்கள் விவாதங்களில் ஈடுபடவும், நாடாளுமன்ற செயல்முறைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும், கொள்கை முடிவுகளில் செல்வாக்கு செலுத்தவும், இளைஞர்களிடையே குடிமை ஈடுபாடு மற்றும் தலைமைத்துவத்தை மேம்படுத்தவும் இவ்வெண்ணக்கரு கட்டமைக்கப்பட்ட தளங்களை வழங்கியது.

இவ்விடயத்தில் இந்தியாவின் முன்முயற்சி குறிப்பிடத்தக்கது. இந்திய இளைஞர் நாடாளுமன்றம் என்ற கருத்து 1960-களில் இந்திய அரசாங்கத்தின் நாடாளுமன்ற விவகார அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது. இளைஞர்களிடையே ஜனநாயக விழுமியங்களையும் குடிமை ஈடுபாட்டையும் வளர்ப்பதற்காக இந்த முயற்சி நிறுவப்பட்டது. உண்மையான இந்திய நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை உருவகப்படுத்துவதன் மூலம், இளைஞர்களுக்கு சட்டமியற்றும் செயல்முறைகளைப் பற்றிக் கற்பிப்பதோடு, ஜனநாயக ஆட்சியில் தீவிரமாக பங்கேற்க அவர்களை ஊக்குவிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டமைந்தது.

இந்தியாவில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் இளைஞர் நாடாளுமன்ற நடவடிக்கைகளை அமைச்சகம் தொடர்ந்து ஆதரிக்கிறது மற்றும் ஒழுங்கமைக்கிறது. இளைஞர் நாடாளுமன்றத் திட்டம் 1966-67-ல் டெல்லியில் உள்ள பள்ளிகளில் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1978-ம் ஆண்டில், இளைஞர் நாடாளுமன்ற திட்டம் டெல்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கேந்திரிய வித்யாலயாக்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இருப்பினும், 1982-83-ல் கேந்திரிய வித்யாலயாக்களுக்கு (இடைநிலைப் பள்ளிகள்) இளைஞர் நாடாளுமன்ற தனித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மற்றும் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் டெல்லி மற்றும் அதன் அருகில் உள்ள மாநிலங்களில் அமைந்துள்ள கேந்திரிய வித்யாலயாக்களுக்கு இடையே போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவின் 40 ஆண்டு சுதந்திரம் மற்றும் பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில், 1988/89 ஆண்டுகளில் தேசிய அளவில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

இந்திய இளைஞர் நாடாளுமன்றத்தின் தாக்கம் ஆழமானது, இந்திய இளைஞர்களிடையே அரசியல் விழிப்புணர்வையும் கணிசமாக அதிகரிப்பதுடன் அதிகாரமளிப்பையும் இது ஊக்குவிக்கிறது. நாடாளுமன்ற நடவடிக்கைகளின் யதார்த்தமான மற்றும் கவரத்தக்க உருவகப்படுத்துதலை வழங்குவதன் மூலம், பங்கேற்பாளர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கைக்கு நன்மையளிக்கும் அத்தியாவசிய திறன்களை இது வழங்குகிறது. இளைஞர் நாடாளுமன்ற அமர்வுகளின் போது உருவாக்கப்படும் பரிந்துரைகள் மற்றும் யோசனைகள் சில சமயங்களில் கொள்கை வகுப்பாளர்களை சென்றடைந்து, உண்மையான கொள்கை விவாதங்களில் உறுதியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜனநாயக விழுமியங்களை ஊக்குவிப்பதன் மூலமும், இந்திய இளைஞர் நாடாளுமன்றம் எதிர்காலத் தலைவர்களை வளர்த்து, நாட்டின் நிர்வாகத்தில் இளைய தலைமுறையினரின் குரல்கள் ஒலிப்பதை உறுதிசெய்கிறது.

அதேபோல் ஐக்கிய இராச்சிய இளைஞர் நாடாளுமன்றம் 1999-ல் 11-18 வயதுடைய இளைஞர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறுவதற்கும் பொதுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதற்கும் ஒரு தளமாக நிறுவப்பட்டது. அரசியலில் இளைஞர்களின் ஈடுபாட்டை வளர்ப்பதற்கும், முடிவெடுக்கும் செயல்முறைகளில் இளைய தலைமுறையினரின் கருத்துக்கள் பரிசீலிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் இது உருவாக்கப்பட்டது. பிரித்தானிய இளைஞர் மன்றத்தின் ஆதரவோடு இது செயற்படுகிறது. இதன் உறுப்பினர்கள் House of Commons இல் வருடாந்திர அமர்வுகளில் கூடி, அவர்கள் தங்களுக்கு முக்கியமான பிரச்சினைகளை விவாதித்து வாக்களிக்கிறார்கள். ஐக்கிய இராச்சிய இளைஞர் நாடாளுமன்றம் இளைஞர்களின் நலன்களுக்காக வாதிடுவதில் குறிப்பிடத்தக்க சக்தியாக வளர்ந்துள்ளது, சட்டமியற்றும் விவாதங்களுக்கு பங்களிக்கிறது.

ஐரோப்பிய இளைஞர் நாடாளுமன்ற அமைப்பு ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். இது ஐரோப்பிய இளைஞர்களை குடியுரிமை மற்றும் கலாசார புரிதலில் தீவிரமாக ஈடுபட ஊக் குவிக்கிறது. இது ஐரோப்பா முழுவதிலும் இருந்து சுமார் 40,000 இளைஞர்களை உள்ளடக்கியது. 1987-ல் பிரான்சின் ஃபோன்டைன்பிளூவில் இது நிறுவப்பட்டது. இளைஞர் நாடா ளுமன்றத்தின் முதல் சர்வதேச அமர்வு 1988-ல் பிரான்சில் நடைபெற்றது. அஜர்பைஜான், அல்பேனியா, லக்சம்பர்க், ஆர்மீனியா, ஆஸ்திரியா, பெலாரஸ், பல்கேரியா குரோஷியா, சைப்ரஸ் செக் குடியரசு, எஸ்டோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஜார்ஜியா, கிரீஸ், ஹங்கேரி, அயர்லாந்து, இத் தாலி, கொசோவோ, லாட்வியா, லிதுவேனியா குடியரசு மால்- டோவா, நெதர்லாந்து, நோர்வே, போலந்து போர்த்துகல், ருமேனியா, ரஷ்யா, செர்பியா, ஸ்லோவாக்கியா, ஸ்பெயின், ஸ்வீடன், சுவிட்சர்லாந்து, துருக்கி, ஐக்கிய ராச்சியம், உக்- ரைன் ஆகிய நாடுகளின் உறுப்பினர்கள் ஐரோப்பிய இளை ஞர் நாடாளுமன்ற அமர்வுகளில் அங்கத்தவராக இருக்கின்ற னர்.

கனடாவின் இளைஞர் நாடாளுமன்றம், 1980-களில் இரண்டு ஆண்டுக்கு ஒருமுறையும், பின்னர் ஆண்டுதோறும் கூடிய ஒரு இளைஞர் மாதிரி நாடாளுமன்றமாகும். கனடாவின் இளைஞர் நாடாளுமன்றத்திற்கான பிரதிநிதிகள் பெரும்பா லும் கனடாவில் செயற்பட்ட எட்டு மாகாண இளைஞர் நாடா ளுமன்றங்களில் இருந்து வரவழைக்கப்பட்டனர். இந்த சந்திப் பின் விளைவாக தேசிய இளைஞர் நாடாளுமன்ற சங்கம் (NYPA) உருவானது. NYPA ஒரு கூட்டாட்சி நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்பாகும். ஒவ் வொரு மாகாண இளைஞர் நாடாளுமன்றத்திலிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் NYPA இன் இயக்குநர்களாக நியமிக் கப்பட்டனர், அவர்கள் ஆறு உறுப்பினர்களை கொண்ட நிர் வாகியை நியமித்தனர். YPC ஒரு பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சரவை, நிழல் அமைச்சரவை மற்றும் உண் மையான நாடாளுமன்றத்தைப் போன்ற குழு அமைப்புக ளைக் கொண்டிருந்தாலும், YPC உறுப்பினர்கள் எந்த அரசி யல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. எல்லா நேரங்களிலும், அமைச்சரவை அமைச்சர்கள் உட்பட ஒவ் வொரு உறுப்பினரும் மனசாட்சிக்கு ஏற்ப வாக்களிக்க உரிமை உண்டு. கனடாவின் இளைஞர் நாடாளுமன்றம் வழக் கமாக எட்டு கேபினட் அமைச்சர்களைக் கொண்டிருந்தது, ஒவ்வொரு மாகாண இளைஞர் நாடாளுமன்றத்திலிருந்தும் ஒருவர். ஒவ்வொரு அமைச்சரும் விவாதத்திற்காக 'சட் டத்தை' அறிமுகப்படுத்துவார்கள். சில மாகாண இளைஞர் நாடாளுமன்றங்களைப் போலல்லாமல், YPC சட்டம் எந்த வடிவத்திலும் நடந்துகொண்டிருக்கும் திட்டத்தை ஸ்தாபிப்ப தற்காக இல்லை. மசோதாக்கள் அன்றைய உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச பிரச்சினைகளை பரிசீலிக்க மட்டுமே இருக் கும். அனைத்து பிரதிநிதிகளுக்கும் ஒரே நேரத்தில் மொழிபெ யர்ப்புடன், ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு ஆகிய இரு மொழிகளி லும் விவாதங்கள் நடந்தன.

## இலங்கையில் இளைஞர் நாடாளுமன்றம்:

இலங்கையில் இளைஞர் நாடாளுமன்றம் என்ற எண்ணக்கரு 1995-ல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இளைஞர் நாடாளுமன்றக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2010-ல் இலங்கை இளைஞர் நாடாளுமன்றம் உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது. இது இலங்கையின் தேசிய இளைஞர் சேவை கள் மன்றத்தால் (NYSC) இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையில் ஆரம் பிக்கப்பட்டது.

இலங்கையில் இளைஞர் நாடாளுமன்றம் என்பது இளைஞர் களை அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதையும் அவர்க ளின் தலைமைத்துவ திறன்களை வளர்ப்பதையும் இலக்கா கக் கொண்ட ஒரு முயற்சியாகும். இளைஞர்கள் தங்கள் கருத் துக்களைக் கூறுவதற்கும், இளைஞர்கள் தொடர்பான பிரச்சி னைகளைப் பற்றி விவாதிப்பதற்கும், பல்வேறு சமூக சவால்க ளுக்கு தீர்வுகளை முன்வைப்பதற்கும் ஒரு தளமாக செயற்ப டுகிறது. இலங்கை இளைஞர் நாடாளுமன்றம் இளைஞர்களி டையே குடிமைப் பொறுப்புணர்வை வளர்த்து, ஆட்சி மற்றும் பொதுச் சேவையில் எதிர்காலப் பாத்திரங்களுக்கு அவர்க ளைத் தயார்படுத்த முயல்கிறது. இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெ டுக்கப்பட்டு நாட்டின் இளைஞர்களின் பன்முகத்தன்மையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இப்நாடாளுமன்றம் விவா தங்களை நடத்துகின்றது, தீர்மானங்களை நிறைவேற்றுகின் றது அத்துடன் அது தேசிய நாடாளுமன்றத்தின் செயற்பாடு களை பிரதிபலிக்கிறது, இதன் மூலம் ஜனநாயக நடைமுறை களில் மதிப்புமிக்க அனுபவத்தைப் பெறும் வாய்ப்பை வழங் குகிறது.

## இலங்கையின் இளைஞர் நாடாளுமன்றத்தின் கட்டமைப்பு:

இலங்கையின் இளைஞர் நாடாளுமன்றத்தின் கட்டமைப்பு தேசிய நாடாளுமன்றத்தை பிரதிபலிக்கும் வகையில் வடிவ மைக்கப்பட்டுள்ளது, அதன் உறுப்பினர்களுக்கு யதார்த்த மான மற்றும் நடைமுறை அனுபவத்தை வழங்குகிறது. அதன் வழக்கமான கட்டமைப்பு பின்வருமாறு அமைந்திருக்கும்.

**உறுப்பினர்கள்:**

இளைஞர் நாடாளுமன்றம் இலங்கை முழுவதும் உள்ள பல் வேறு மாவட்டங்களில் இருந்து பிரதிநிதிகளை உள்ளடக்கி யது. இந்த உறுப்பினர்கள் வாக்களிக்கும் முறை மூலம் அவர் களது சகாக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**தலைமை:**

- சபாநாயகர்: இளைஞர் நாடாளுமன்றம் அமர்வுகளுக்கு தலைமை தாங்கும் ஒரு சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கி றது, அவர் அமர்வின் ஒழுங்கை உறுதிப்படுத்தி விவாதங் களை முறையானதாகவும் இலகுவாகவும் நடைபெற உதவு வார்.
- துணை சபாநாயகர்: சபாநாயகருக்கு உதவுகிறார் மற்றும் அவர் இல்லாத நேரத்தில் சபாநாயகராக செயற்படுவர்.
- பிரதமர்: உறுப்பினர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட




பிரதமர், இளைஞர் நாடாளுமன்றத்தின் நிர்வாக செயற்பா டுகளை வழிநடத்துவார்.

- அமைச்சர்கள்: தேசிய அரசாங்கத்தின் கட்டமைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் போன்ற பல்வேறு துறைகளுக்கு தலைமை தாங்குவதற்கு உறுப்பினர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

**குழுக்கள்:**
இளைஞர் நாடாளுமன்றம் பல்வேறு குழுக்களைக் கொண் டுள்ளது, ஒவ்வொன்றும் குறிப்பிட்ட ஆர்வங்கள் அல்லது கொள்கைகளில் கவனம் செலுத்துகிறது. இந்தக் குழுக்கள் பிரச்சினைகள், வரைவு முன்மொழிவுகள் மற்றும் கண்டுபிடிப் புகளை பரந்த நாடாளுமன்றத்தில் முன்வைக்கின்றன. பொது வான குழுக்களில் பின்வருவன அடங்கும்:

- நிதி
- கல்வி
- ஆரோக்கியம்
- சுற்றுச்சூழல்
- விளையாட்டு மற்றும் கலாசார அலுவல்கள்

**அமர்வுகள்:**
இளைஞர் நாடாளுமன்றம் வழக்கமான அமர்வுகளை நடத்து கிறது, அங்கு உறுப்பினர்கள் பிரச்சினைகள் பற்றி விவாதிக் கவும், கொள்கைகளை விவாதிக்கவும் மற்றும் தீர்மானங் களை நிறைவேற்றவும் கூடுகிறார்கள். இந்த அமர்வுகள் முறையான நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகளுடன் தேசிய நாடாளுமன்றத்தின் அமர்வுகளைப் போலவே கட்ட மைக்கப்பட்டுள்ளன.

**விவாதங்கள் மற்றும் தீர்மானங்கள்:**
உறுப்பினர்கள் தற்போதைய பிரச்சினைகளில் விவாதங்க ளில் ஈடுபடுகின்றனர், தீர்மானங்களை முன்மொழிகின்றனர் மற்றும் பல்வேறு விஷயங்களில் வாக்களிக்கின்றனர். இளை ஞர் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பெரும்பாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அல்லது அமைப் புகளிடம் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

**பயிற்சி மற்றும் மேம்பாடு:**
உறுப்பினர்கள் நாடாளுமன்ற நடைமுறைகள், பொதுப் பேச்சு, தலைமைத்துவம் மற்றும் பிற தொடர்புடைய திறன்க ளில் பயிற்சி பெறுகின்றனர். இது அவர்களின் திறன்களை மேம்படுத்துவதையும், ஆட்சி மற்றும் பொது சேவையில் எதிர் கால பாத்திரங்களுக்கு அவர்களை தயார்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேர்தல்கள் மற்றும் உறுப்பினர் தெரிவு:

இலங்கையில் உள்ள இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நிர்வகிக்கப்ப டும் செயல்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல்கள் வழக்கமாக ஒவ் வொரு இரண்டு வருடங்களுக்கும் நடக்கும், உறுப்பினர்கள் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் அமைப்புகளை பிரதிநிதித்து வப்படுத்த தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்தல் செயல் முறை 15-29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் இந்த தேர்தல்க ளில் கலந்துகொண்டு பிரதிநிதிகளாக ஆக வேண்டும். இந்த முயற்சி இலங்கையில் உள்ள இளைஞர்களிடையே தலை மைத்துவ திறன் மற்றும் அரசியல் விழிப்புணர்வை வளர்ப் பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து ஆர்வமுள்ள வேட்பா ளர்கள் தங்களைத் தாங்களே பரிந்துரைக்கின்றனர். இந்த வேட்பாளர்கள் பொதுவாக 15 மற்றும் 29 வயதுக்கு இடைப் பட்டவராகவும், இளைஞர் அமைப்புகள் அல்லது சமூக நடவ டிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களாவும் இருப்பார்கள்.

வேட்பாளர்கள் தங்கள் சகாக்களின் ஆதரவைப் பெற அந்

தந்த பிரதேச செயலகப் பிரவுகளுக்குள் இளைஞர்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அவர்களின் யோசனைகள், கொள்கைகள் மற்றும் திட்டங்களை முன் வைத்து பிரச்சாரம் செய்கிறார்கள்.

பொதுத் தேர்தல்களைப் போன்றே தேர்தல்கள் நடத்தப்படு கின்றன. ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளில் இளை ஞர்கள் தங்களுக்கு விருப்பமான வேட்பாளர்களுக்கு வாக்க ளிப்பார்கள்.

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் அதிக வாக்குகள் பெற்ற வேட்பாளர்கள் இளைஞர் நாடாளுமன்றத்தின் உறுப்பி னர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒவ்வொரு மாவட்டத் திலிருந்தும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மக்கள் தொகை மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் கவுன்சிலின் குறிப்பிட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மாறுபடும்.

தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், உறுப்பினர்கள் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டு, இளைஞர் நாடாளுமன் றத்தில் தங்கள் பதவிக்காலத்தை தொடங்குவார்கள். அவர் கள் அமர்வுகள், விவாதங்கள் மற்றும் இளைஞர்களின் கவ லைகளை நிவர்த்தி செய்வதற்கும் தேசிய கொள்கை விவா தங்களுக்கு பங்களிக்கும் நோக்கத்தில் பல்வேறு நடவடிக் கைகளிலும் பங்கேற்கின்றனர்.

இளைஞர் நாடாளுமன்றத்தை மேற்பார்வையிடும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC), நியாயமான மற்றும் வெளிப்படையான தேர்தல் செயல்முறையை பராமரிக்க பாடு படுகிறது. அரசியல் சூழ்ச்சியை விட இளைஞர்களின் மேம் பாடு மற்றும் பிரதிநிதித்துவத்தில் கவனம் செலுத்துவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு அவர்கள் செயற்ப டுகின்றனர்.

இலங்கையின் இளைஞர் நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர் கள் உள்ளனர், 165 பேர் பல்வேறு மாவட்டங்களில் உள்ள இளைஞர் கழகங்களை உள்ளடக்கிய ஜனநாயக தேர்தல் செயல்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதே நேரத்தில் வேட்பாளர்கள் தங்கள் மாவட்டங்களின் இளைஞர் கழகங்களை கட்டாயமாக பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். மீதமுள்ள 65 மற்ற உறுப்பினர்கள், அவர்களின் கல்வி, தலை மைத்துவம் மற்றும் பிற பாடநெறி தகுதிகள் மற்றும் திறன்க ளின் அடிப்படையில் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த நேர் காணல் செயல்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இலங்கை இளைஞர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது, நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு பிரதேசங்கள் மற்றும் சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களின் ஈடுபாடு மற் றும் பிரதிநிதித்துவத்தை முதன்மையாகக் கொண்ட ஒரு பார பட்சமற்ற செயல்முறையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இருப் பினும், பல வழிகளில் அரசியல் கட்சிகளிடமிருந்து நேரடி / மறைமுக செல்வாக்குகள் செலுத்தப்படலாம்.

- சில வேட்பாளர்கள் அரசியல் கட்சிகள் அல்லது இளைஞர் பிரிவுகளுடன் இணைந்திருக்கலாம். கட்சி நடவடிக்கைக ளில் அவர்களின் ஈடுபாடு, திறம்பட பிரச்சாரம் செய்வதற் குத் தேவையான ஆதரவையும் பார்வையையும் அவர்க ளுக்கு வழங்க முடியும்.
- அரசியல் கட்சிகள் அல்லது அவற்றின் பிரதிநிதிகள் குறிப் பிட்ட வேட்பாளர்களை ஆதரித்து, அவர்களுக்கு வளங் கள், வழிகாட்டுதல் மற்றும் பரந்த பார்வையாளர்களை சென்றடைவதற்கான தளத்தை வழங்கலாம்.
- பிரச்சார ஆதாரங்கள்: அரசியல் கட்சித் தொடர்புகளைக் கொண்ட வேட்பாளர்கள், நிதி, தளபாட ஆதரவு மற்றும் ஊடகக் கவனம் உள்ளிட்ட சிறந்த பிரச்சார ஆதாரங் களை பெறலாம்.
- அரசியல் கட்சிகள் அல்லது அவர்களின் சித்தாந்தங்க ளால் பாதிக்கப்படும் இளைஞர் வாக்காளர்கள் தங்க ளுக்கு விருப்பமான கட்சிகளுடன் தொடர்புடைய வேட்பா ளர்களை ஆதரிக்கலாம்.

இவ்வாறான தாக்கங்கள் இருந்தபோதிலும், இளைஞர் நாடா ளுமன்றத்தின் முதன்மை இலக்கு, ஜனநாயக செயல்முறைக ளில் ஈடுபடுவதற்கும், தலைமைத்துவ திறன்களை வளர்ப்ப தற்கும், முக்கிய அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு அப்பாற் பட்டு அவர்களின் சகாக்களின் நலன்களை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கும் இளம் தலைவர்களுக்கு ஒரு தளத்தை வழங்குவதாகும்.

இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தின் (SLYP) முதலாவது அமர்வு 2010 மே 23 அன்று மஹரகமவில் உள்ள இலங்கை இளைஞர் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தற்போது இலங்கையின் ஐந்தாவது இளைஞர் நாடாளுமன் றம் பதவியில் உள்ளது. இலங்கையின் இளைஞர் நாடாளு மன்றத்தின் தற்போதைய பிரதமர் பதும் ரணசிங்க ஆவார். ஐந்தாவது இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தின் சபாநாய கராக நிபுனி ஷெஹேனி அபேதீர தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிர்கட்சித் தலைவராக சிதிஜ மிஹிரங்க தெரிவுசெய்யப்பட் டார்.

5-வது இளைஞர் நாடாளுமன்றம், நாட்டின் பொருளாதார மற் றும் அபிவிருத்தி சவால்களை எதிர்கொள்ளும் நோக்கில் பல முக்கிய பரிந்துரைகளை முன்வைத்தது.

- தேசிய வரவு செலவுத் திட்ட விவாதங்களுக்கு பங்களிப்பு: 2024 தேசிய வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதங்க ளில் இளைஞர் நாடாளுமன்றம் தீவிரமாக பங்கேற்றுள் ளது. இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவால் களை வெற்றிகொள்வதற்கான உத்திகள் மீது கவனம் செலுத்தி, 2024 வரவு செலவுத் திட்டத்திற்கான நுண்ணறிவு மற்றும் ஆலோசனைகளை இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கினர். நீண்ட கால நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கும் நிலையான மற்றும் சுயசார்பு பொருளாதாரக் கொள்கைகளின் அவசி யத்தை அவர்கள் எடுத்துரைத்தனர். அவர்களின் முன்மொ ழிவுகள் மற்றும் நுண்ணறிவுகள் அரசாங்கத்தால் மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்டது, இது தேசியப் பொருளாதாரத்

திட்டத்தில் இளைஞர் நாடாளுமன்றத்தின் ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகிறது.

- இளைஞர் நாடாளுமன்றச் சட்டம்: இளைஞர் நாடாளுமன்றத்தை ஒரு சுதந்திரமான அமைப்பாக நிறுவனமயமாக்குவதற்காக இளைஞர் நாடாளுமன்றச் சட்டத்தை முறைப்படி இயற்றுவது குறித்து வலியுறுத்தப்பட்டது. இந்தச் சட்டம் இளைஞர்களுக்கு சட்டமியற்றும் திறன்களைக் கொண்டு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டது. இதன் மூலம் அவர்கள் தேசியக் கொள்கை உருவாக்கச் செயலில் அவர்களின் பங்கேற்பை உறுதிசெய்கிறது.
- அரசியல் அகாடமி (Establishment of Political Academy): அரசியல் அறிவியல், ஆட்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் இளம் தலைவர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சி அளிக்க ஒரு அரசியல் அகாடமியை நிறுவுதல். இது தேசிய அரசியல் மற்றும் நிர்வாகத்தில் எதிர்காலப் பாத்திரங்களுக்கு இளைஞர்களைத் தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிராந்திய வளர்ச்சிக் குழுக்கள்: உள்ளூர்மயமாக்கப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சமச்சீரான பிராந்திய வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் வட்டார வளர்ச்சிக் குழுக்களை உருவாக்குதல். இந்தக் குழுக்கள் மத்திய அரசு மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு இடையே ஒரு பாலமாகச் செயற்படும், சுயசார்பு வளர்ச்சியை ஊக்குவிக்கும்.
- டிஜிட்டலைசேஷன்: திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் அணுகல்தன்மையை மேம்படுத்துவதற்காக இளைஞர் நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான பரிந்துரைகள் செய்யப்பட்டன. தகவல் தொடர்பு, ஆவணப்படுத்தல் மற்றும் பொது ஈடுபாடு ஆகியவற்றிற்கான டிஜிட்டல் தளங்களின் பயன்பாடு இதில் அடங்கும்.

நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இளம் இலங்கையர்களின் குரல்கள் செவிசாய்க்கப்படுவதையும் கருத்தில் கொள்ளப்படுவதையும் உறுதிசெய்து, நாட்டின் சட்டமியற்றுதல் மற்றும் அபிவிருத்திச் செயன்முறைகளில் தீவிரமாகப் பங்களிப்பதில் இளைஞர் நாடாளுமன்றத்தின் அர்ப்பணிப்பை இந்தப் பரிந்துரைகள் பிரதிபலிக்கின்றன.

இலங்கையின் ஐந்தாவது இளைஞர் நாடாளுமன்றத்தின் மூன்றாவது அமர்வு கடந்த ஜூன் 17 மற்றும் 18-ம் திகதிகளில் ஜனாதிபதி செயலகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் இடம்பெற்றது. முழு இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தையும் பிரதிநிதித்துவப்படுத்திய 131 உறுப்பினர்கள் இதில் பங்குபற்றினார்கள்.

தேசியக் கொள்கை வகுப்பில் தொடர்ந்து குறிப்பிடத்தக்க பங்கை வகிப்பது, ஜனநாயக செயல்முறைகளில் இளைஞர்களின் தீவிர பங்களிப்பை உறுதி செய்தல், தகவலறிந்த முடிவெடுத்தல் மற்றும் முன்மொழிவுகள் மூலம் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணுதல் ஆகியவை இளைஞர் நாடாளுமன்றத்தின் இலக்குகளில் அடங்கும். தேசிய சட்டமன்றத்திற்கான எதிர்காலத் தலைவர்களை வளர்ப்பதற்கு பங்களித்து, வரையறுக்கப்பட்ட சட்டமன்ற கட்டமைப்பிற்குள் சுதந்திரமாக செயற்படும் ஒரு வலுவான நிறுவனமாக தன்னை நிலைநிறுத்துவதையும் இளைஞர் நாடாளுமன்றம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதனை திறம்பட நடைமுறைப்படுத்த இளைஞர் நாடாளுமன்றம் கட்டமைக்கப்பட்டு நிறுவனமயமாக்கப்பட வேண்டும். SLYP இன் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வாக்களிப்பதற்கும் சமூக அபிவிருத்திக்கான நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கும் சம வாய்ப்பு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இளம் பிரதிநிதிகளின் குரல்களுக்கு அதிக கவனம் செலுத்தி, இளைஞர்களை அவர்களது பங்காளிகளாகவும், நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் எதிர்கால தலைவர்களாகவும் அங்கீகரிக்க வேண்டும். மேலதிகமாக, பெற்ற இளம் பெண்களின் பங்கேற்பு விரிவாக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12-ம் தேதி, உலகம் முழுவதும் உள்ள இளைஞர்களின் குரல்களை அங்கீகரிப்பதற்காகவும், வலுப்படுத்துவதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்ட சர்வதேச இளைஞர் தினம் சர்வதேச ரீதியில் கொண்டாடப்படகிறது. 2024-ம் ஆண்டு சர்வதேச இளைஞர் தினம் 'நிலைபேறான எதிர்காலத்திற்காக இளைஞர்களை வலுவூட்டுதல்' எனும் கருப்பொருளில் கொண்டாடப்படுகிறது. இன்றைய எமது சமூக சூழல் இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் முக்கியத்துவம் குறித்து அக்கறை கொள்வதில்லை. இக்கருப்பொருள், இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தை பொறுப்பேற்க அதிகாரம் அளிப்பதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த ஆண்டு, இலங்கை இளைஞர்கள் மத்தியில் புத்தாக்கு திறன் மற்றும் தலைமைத்துவத்தை வளர்ப்பதில் மீள வடிவமைக்கப்பட்ட இலக்குகளுடன் சர்வதேச இளைஞர் தினத்தை கொண்டாடுவதில் உலகளாவிய சமூகத்துடன் இணைகிறது. இலங்கையில், 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் சனத்தொகை 4.8 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது மொத்த சனத்தொகையில் 23% இற்கும் அதிகமானதாகும். 2015-ல், 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினருக்கான ஒட்டுமொத்த தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 53.6 சதவீதமாக உள்ளதுடன், இதில் ஆண் மற்றும் பெண் பங்கேற்பு விகிதம் முறையே 75.4 சதவீதம் மற்றும் 35.2 சதவீதமாக காணப்படுகிறது. இது இலங்கை மிகவும் முக்கியமான தருணத்தை நோக்கி பயணிப்பதை காட்டுகிறது. இளையோரின் ஆற்றல், புத்தாக்கம், மற்றும் உட்பொதிந்துள்ள திறமைகள் ஆகியவை இங்கு நிலைமாற்றத்தை உருவாக்கக் கூடிய சக்தியைக் கொண்டுள்ளதாக கருதப்படுகிறது.

இந்நிலையில் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் எனும் செயன்முறைக்கான தயார்படுத்தலில் இலங்கையின் முன்னெடுப்புகளில் இளைஞர் அபிவிருத்தி மற்றும் இளைஞர் நாடாளுமன்றம் ஆகியவை தொடர்பான இலங்கையின் அனுபவங்கள் படிப்பினைகள் குறித்த உரையாடல் அடுத்த பகுதியில் தொடரும்.

thevapiriya@thaiveedu.com




15 வயது முதல் 24 வயதுக்கு உட்பட்டவர்களை இளைஞர்கள் என ஐ.நா.சபை வரையறுத்துள்ளது. உலக மக்கள் தொகையில் 1/6 பங்கினர் இளைஞர்கள் ஆவர். உலகளவில் இந்தியாவில் தான் 60%-ற்கும் அதிகமான இளைஞர்கள் உள்ளனர். அதற்கடுத்து சீனாவில் அதிக இளைஞர்கள் உள்ளனர். கடந்தகால வரலாற்றில் மாற்றத்தை ஏற்படுத்தியதும், எதிர்காலத்தில் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதுமான ஒரு கூட்டம் உண்டென்றால் அது இளைஞர்களே. அத்தகைய சக்திவாய்ந்த இளைஞர்கள் மத்தியில் நல்லெண்ணத்தை விதைத்து, அமைதியையும் ஒற்றுமையையும் வளர்க்கவும் அவர்களின் சக்தியை ஒன்றிணைத்து உலகில் மாற்றத்தைக் கொண்டுவரவும் அனைத்துலக இளைஞர் நாள் என்ற ஒன்று அவசியம்.

1965-ல் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை இளைய தலைமுறையின் மீது கவனஞ் செலுத்தத் தொடங்கியது. அவ்வாண்டில் இளைஞர்களிடம் அமைதி, பரஸ்பர மரியாதை மற்றும் புரிந்துணர்வு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான பிரகடனத்துக்கு ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை ஒப்புதல் அளித்தது. இதன் மூலம் வளர்ந்துவரும் இளந் தலைவர்களை மேம்படுத்தவும் உலகளாவிய ரீதியில் அதிகரித்துவரும் சவால்களை எதிர்கொள்ள அவர்களைத் தயார்படுத்துவதற்கும் உலகநாடுகள் நேரத்தையும் வளங்களையும் ஒதுக்குவதைக் கோருவதாக ஐ.நா சபையின் முயற்சி அமைந்தது. இதற்கடுத்த முன்னெடுப்பாக 1979-ல் ஐ.நா. பொதுச் சபையின் 34/151 தீர்மானத்தைக் கூறலாம். இதற்கமைய இளைஞர்களிடையே பங்கேற்பு, அபிவிருத்தி மற்றும் சமாதானம் ஆகியவற்றுக்கான 'அனைத்துலக இளைஞர் ஆண்டாக' 1985-ம் ஆண்டைப் பிரகடனப்படுத்தியதைக் கூறலாம்.

'அனைத்துலக இளைஞர் நாளிற்கான யோசனை' 1991-ம் ஆண்டு ஆஸ்திரியாவின் வியன்னாவில், ஐக்கிய நாடுகள் அமைப்பின் உலக இளைஞர் மன்றத்தின் முதல் அமர்வுக்காகக் கூடியிருந்த இளைஞர்களால் முன்மொழியப்பட்டது. 1998-ம் ஆண்டு ஆகஸ்ட் 8-ம் திகதி முதல் 12-ம் திகதி வரை ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்புடன் போர்த்துக்கல் அரசால் லிஸ்பன் நகரில் நடத்தப்பெற்ற நாடுகளின் 'இளைஞர் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களின் மாநாடு' ஆகஸ்ட் 12-ஐ இளைஞர்களுக்கான அனைத்துலக நாளாகப் பிரகடனப்படுத்தப் பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையை 1999-ம் ஆண்டு டிசம்பர் 17-ம் திகதி 54/120 என்ற பிரேரணை மூலம் ஐ.நா. பொதுச்சபை ஏற்றுக்கொண்டது. அனைத்துலக இளைஞர் சமூகத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விழிப்புணர்வு மற்றும் செயற்பாட்டுக்கான அர்ப்பணிப்பு நாளாக இதனை ஐ.நா சபை அங்கீகரித்தது. இது அனைத்துலக இளைஞர் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டதன் 25 ஆண்டு நிறைவின்போது நிகழ்ந்த ஒரு முக்கிய விடயமாகும். முதலாவது அனைத்துலக இளைஞர் நாள் 2000-ம் ஆண்டு ஆகஸ்ட் 12-ம் திகதி பல்வேறு உலக நாடுகளில் கொண்டாடப்பட்டது.

இச்சந்தர்ப்பம் இளைஞர்களின் உள்ளார்ந்த குணங்களை அங்கீகரிப்பதற்கும் கௌரவிப்பதற்கும் ஒரு தளத்தை வழங்குவதுடன், முழு உலகத்தின் தலைவிதியை வடிவமைப்பதற்கான இளைஞர்களின் திறனை அங்கீகரிப்பதற்கும் வழிசமைக்கிறது. இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களை நினைவுபடுத்தும் விதமாகவும் இந்த நாள் செயற்படுகிறது. இந்தச் சவால்களைத் தணித்து ஒருங்கிணைந்த முயற்சிகளை முன்னெடுக்கவும் இது வலியுறுத்துகிறது. இந்நாளானது உலகெங்குமுள்ள இளைஞர்கள் அனுபவிக்கும் துன்பங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவதுடன், உலகெங்கிலுமுள்ளவர்களை இது தொடர்பில் அக்கறை செலுத்தவும் ஒரு தெளிவான அழைப்பை விடுக்கிறது.

சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவும் பொறுப்புள்ள மனிதர்களாக இளைஞர்களை வளர்க்கவேண்டும் என்பது ஒட்டுமொத்த சமூகக் கடமை என்பதை உணர்த்தவும், இளைஞர்களது பொறுப்புகள் மற்றும் கடமைகளை அவர்களுக்கு வலியுறுத்தவும் இந்த நாளில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளும் நடத்தப்படுகிறது. இளைஞர்களது முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும் நாளாக இதனை உலக நாடுகள் கொண்டாடுகின்றன. இளைஞர்கள் தம் வாழ்நாளில் சந்திக்கும் இன்னல்கள் குறித்தும் இதனால் பாதிக்கப்படும் அவர்களின் மனநலம் குறித்தும் முக்கியமான விவாதங்களும் இந்நாளில் பேசப்படுகின்றன.

பொதுவாக ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், வளர்ச்சிக் கூறுகளின் நிலைத்த தன்மைக்கும் உந்து சக்திகளாகப் பல்வேறு காரணிகள் அறியப்பட்டாலும் அவற்றுள் முதன்மையானது மட்டுமல்லாமல் தவிர்க்க முடியாததாகவும் முன்நிற்பது அந்நாட்டின் இளைஞர்களே. புதிய சிந்தனைகள், மேம்பட்ட




திறன்கள், புதுமைகளை உள்வாங்கும் நிலை, தளராத முயற்சி, வளர்ச்சி நோக்கிய இலக்கு, நவீன உத்திகளைக் கையாளுதல் போன்ற எண்ணற்ற பரிமாணங்கள் இளைஞர்களின் தகுதிகளையும் தரத்தையும் உயர்த்திப் பிடிப்பதால் அவர்களை விலக்கி வைத்துவிட்டு வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வது இயலாததாகும். எனவேதான் நூறு ஆண்டுகளுக்கு முன்பே, இளைஞர்கள்தான் நாட்டின் எதிர்காலம், அவர்களின் கைகளில்தான் நாடு உள்ளதென்று இளைஞர்களின் சக்தியை உலகிற்கு உணர்த்தினார் சுவாமி விவேகானந்தர்.

அனைத்துலக இளைஞர் நாளை (International Youth Day) உலக இளைஞர் நாளுடன் (World Youth Day) குழப்பிக் கொள்ளக் கூடாது. அனைத்துலக இளைஞர் நாள் (International Youth Day) என்பது ஐக்கிய நாடுகள் சபையின் கொண்டாட்டமாகும், அதே சமயம் உலக இளைஞர் நாள் (World Youth Day) என்பது கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் நிறுவப்பட்ட கொண்டாட்டமாகும். உலக இளைஞர் நாளானது கிறிஸ்துவின் அன்பை உலகுக்குக் கொண்டு வருவதற்கான அழைப்புக்கு இளைஞர்கள் பதிலளிக்கும் வகையில், போப் இரண்டாம் ஜோன் போல் அவர்களால் 1986-ல் நிறுவப்பட்டது. உலக இளைஞர் தினம் ஒவ்வொரு ஆண்டும் குருத்தோலை ஞாயிறு (பாம் ஞாயிறு) தினத்தன்று கொண்டாடப்படுகிறது.

இவ்விரண்டும் வேறுபட்ட கொண்டாட்டங்கள் என்றாலும், அனைத்துலக இளைஞர் நாள் (International Youth Day) மற்றும் உலக இளைஞர் நாள் (World Youth Day) ஆகிய இரண்டும் உலகம் முழுவதும் உள்ள இளைஞர்களின் மதிப்பை அங்கீகரிக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளுடன் அனைத்துலக இளைஞர் நாள் கொண்டாடப்படுகிறது. 2024-ன் கருப்பொருளாக ‘From Clicks to Progress: Youth Digital Pathways for Sustainable Development’. என்பதை அறிவித்துள்ளது. இந்தக் கருப்பொருள் எண்ணிம மயமாக்கலுக்கும் (digitalization) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் (Sustainable Development Goals (SDGs) முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கும் இடையேயான முக்கிய தொடர்பை வலியுறுத்துகிறது. இளைஞர்கள் பெரும்பாலும் ‘எண்ணிம வாசிகளாக’ (digital natives) கருதப்படுகிறார்கள், அவர்களே புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதிலும் புத்தாக்கம் செய்வதிலும் முன்னணியில் உள்ளனர். அவர்களே உலகளவில் எண்ணிமச் செல்நெறிகளை (digital trends) வடிவமைப்பவராகவும், அபிவிருத்தி செய்பவராகவும் பயன்படுத்துபவராகவும் உள்ளார்கள். உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள தொழில்நுட்பங்களின் உருமாறும் சக்தியை மேம்படுத்துவதில் இளைஞர்கள் இன்றியமையாத மக்கள் தொகை குழுவாகவும் உள்ளனர் என்பதை இக்கருப்பொருள் கவனப்படுத்துகிறது.

அறிவு, ஆற்றல், அனுபவம், துணிவு போன்றவற்றின் அடிப்படையில் வளரும் நாடுகளில் மட்டுமல்ல வளர்ந்த நாடுகளிலும்கூட இளைஞர்களின் செயற்பாடுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதால் மாற்றங்களுக்கு வித்திடும் இன்றைய உலகில் இளைஞர்கள் மாற்றுசக்திகளாகவும் உருவாகி நிற்கின்றனர். எந்தவொரு நாடு இளைஞர்களின் ஆற்றலைப் பயன்படுத்தத் தவறுகின்றதோ அல்லது திட்டமிடாமல் தவறான வழிகளில் பயன்படுத்திட முயலுகின்றதோ அது வளர்ந்த நாடுகளின் பட்டியலை எட்டிப்பிடிக்க இயலாமலும், தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணிக்க முடியாமலும் போகும் என்பது வெட்டவெளிச்சமாயிருக்கிறது. தென்னாபிரிக்காவில் நிறவெறியை வீழ்த்துவதில் இளைஞர்கள் முக்கிய பங்கு வகித்தமையை நினைவுகூர்ந்து கொண்டாடும் முகமாகவே தென்னாபிரிக்காவின் தேசிய இளைஞர் தினத்தைச் சோவெற்றோ நாள் (SOWETO DAY) என்று அறிவித்தனர்.

இளைஞர்கள் முன்னேற்றம் என்பது அடிப்படையில் இரண்டு முக்கிய இலக்குகளைக் கொண்டது. அவை, அகமுன்னேற்றம், புறமுன்னேற்றம். அகமுன்னேற்றம் இளைஞர்களின் தனித்திறமை சார்ந்தது. ஒரு செயலை மேற்கொள்ளவதற்கான தனிநபர் திறன்களை வளர்த்தல் மற்றும் முறையாகச்

செயற்படுத்துதல். புறமுன்னேற்றம் இது பொதுநிலையில் சமூக மேம்பாடு கருதி ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுதல் சார்ந்தது. குடும்பம், சமூகம், நாடு, சனத்தொகை வளர்ச்சி மாற்றம் போன்றவற்றில் முழு ஈடுபாட்டுடன் பங்கேற்றல் என்பவற்றுடன் மேலும் பிறரைப் புரிந்துகொள்ளுதல், சிக்கல்களுக்குரிய தீர்வு காணுதல், உறுதியான முடிவெடுத்தல், பாதிப்புகளை உள்வாங்குதல் போன்ற திறன்களையும் கருத்தில் கொள்ளுதல் ஆகும்.

இளமை முதல் ஐன்ஸ்டீனுக்கு இருந்த அறிவியல் தாகம் அவரை விஞ்ஞானத்துறை நோக்கிப் பயணம் செய்யவைத்துப் பின்னாளில் ஈடிணையற்ற விஞ்ஞானியாக உலகிற்குத் தந்தது. எதிர்காலத் தலைமுறையின் தூண்களாகக் கருதப்படும் இளைஞர்கள் சமூகத்திற்குப் பொருத்தப்பாடற்றவர்களாகக் காணப்படின் அவர்களை வளமானவர்களாகக் கருதலாமா? இவர்கள் அக்கறையுடனும், ஈடுபாட்டுடனும் செயற்பட்டால் சமூகச் சீர்கேடுகள் குறைந்து வளர்ச்சிக்கான நேர்மறை சூழல் உருவாகும். உலக நாகரிகத்தின் சிகரத்தைத் தொட்ட ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களாக இளைஞர்கள் ஆடம்பரங்களிலும் கேளிக்கைகளிலும் மூழ்கி அறிவுசார் சிந்தனைகளையும் உழைப்பையும் இழந்ததுதான் மிச்சம் என்று வரலாறு சுட்டுகின்றது. எனவே தற்காலச் சூழலில் இளைஞர் சக்தி எந்த நிலையில் இருக்கின்றது? எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது? என்பதில் அனைவரும் அனைத்து வேளைகளிலும் கவனமாக இருக்கவேண்டும்.

மனித வாழ்வை மூன்று பருவங்களாகக் கொண்டாடுகிறோம். குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முதிய பருவம். இந்தப் பருவங்களில் இளமைப் பருவம் என்பது மட்டுமே நமக்கான வாழ்க்கையை, நாம் இளமைக் காலத்தில் பெற்ற கல்வி, உலகளாவிய அனுபவங்கள், கற்றுக்கொண்ட பண்புகளை வைத்துச் செய்யும் செயல்களால்தான் எமது எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது. இளமைப் பருவத்தில் உடலும், மனமும் ஆரோக்கியத்துடனும் எதையும் எதிர்கொள்ளும் ஆற்றலுடனும் இருக்கும். அதை முறையாக நேர்வழியில் பயன்படுத்தி வாழ்வை வெற்றிகரமாக்கும் பொறுப்பு இளைஞர்களின் கைகளிலேதான் உள்ளது. இளைஞர்களின் மனோசக்தி எத்தகையது என்பதை நன்கு உணர்ந்தே சுவாமி விவேகானந்தர் ‘நூறு இளைஞர்களைத் தாருங்கள் நாட்டை மாற்றிக் காட்டுகிறேன்’ என்றார்.

இளைஞர்களின் சக்தியை அவர்களுக்குப் புரியவைத்துப் பயனுள்ள நல்லதொரு பாதையில் அவர்களைத் தடம் மாறாமல், வாழ்வைக் கேள்விக்குறியாக மாற்றாமல் அழைத்துச் செல்லும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. இளைஞர்கள் தம் பொறுப்பை உணர்ந்து தவறான வழிகளில் சக்தியை வீணடிக்காமல் வாழ்ந்து, வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித்தர இளைஞர்கள் உறுதிகொள்ள வேண்டும், இதற்கு இளைஞர்கள் மீது நாடும் நாட்டம் கொள்ளவேண்டும்.



natkunalingam@thaiveedu.com






# கல்வியில் சமூக ஊடகங்களின் பங்களிப்பு

– த. சிவபாலு

சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதரும் சமூக ஊடகத்தில் ஏதோ ஒரு வகையில் பங்களிப்புச் செய்கின்றார். ஊடகங்கள் மக்களுக்குத் தகவல்களையும் செய்திகளையும் வழங்குவதோடு மட்டுமன்றி மக்களின் கருத்துகளுக்குச் செவிமடுத்துப் பொதுசன அபிப்பிராயத்தையும் முன்வைக்கின்றது. மக்களின் மனப்போக்கைப் படம்பிடித்துக் காட்டுவது ஊடகத்தின் பணியாகவுள்ளது. மக்களின் அனுபவங்கள், ஆற்றல்கள், கருத்துகளை அவர்களின் நாடித் துடிப்பைச் சரியாக அளவிட்டு அவற்றை முன்வைக்கின்றன. ஊடகங்கள் இல்லாமல் சமூகமில்லை. சமூகத்தின் கருத்துகளைப் பெற்றுக்கொள்வதோடு மட்டுமன்றிச் சமூகத்தின் கண்ணாடியாகவும் எதிரொலிப்பது ஊடகத்தின் செயற்பாடுகளில் முக்கியம் பெறுகின்றது. மக்களின் விருப்பு, வெறுப்பு, ஆதங்கங்கள் என்பனவற்றைப் படம்பிடித்துக் காட்டும் சாதனமாக ஊடகம் அமைகின்றது. இருக்கும் ஒரு சமூக ஊடகம் யோசனைகள் மற்றும் ஆர்வங்களைப் பகிர்ந்து கொள்கிறது. சில பிரபலமான சமூகங்கள் அவை: Facebook, MySpace, YouTube, blogs, Twitter மற்றும் சுவையான. ஃபேஸ்புக் போன்ற பிற சமூக ஊடகங்கள் பாராட்டப்பட்டுள்ளன. புதிய, சமூக ஈடுபாடு கொண்ட வாக்குறுதியை வழங்குவதாகப் பல்கலைக்கழக மாணவர்கள், சுயமாகப் பயிலும் மாணவர்கள், வேறு கல்வித் துறைகள் சார்ந்தும் ஊடகங்கள் கருத்துகளை முன்வைக்கின்றன.

- இலவசக் கல்விக்கான உலகளாவிய அணுகலை வழங்குதல்
- அனைத்துக் குழந்தைகளுக்கும் சம வாய்ப்பை உறுதி செய்தல்
- பலதரப்பட்ட மக்களை ஒருங்கிணைத்தல்
- ஒரு ஜனநாயகச் சமுதாயத்தில் குடியுரிமைக்கு மக்களைத் தயார்படுத்துதல்
- பொருளாதாரத்தில் தன்னிறைவடைய மக்களைத் தயார்படுத்துதல்
- சமூக நிலைமைகளை மேம்படுத்தல்

என்பனவாகும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்ற அரசாங்கம் தன்னாலானவற்றைச் செயயவேண்டும் என்பதே மக்கள் கருத்தாகும். இதனைப் பொதுசன ஊடகங்களும் பிரதிபலிக்கின்றன. இதனடிப்படையில் சமூக ஊடகங்கள் அக்கறை காட்டும் பகுதிகளாகத் தன் கட்டுப்பாட்டை இழத்தல், நேரத்தைக் கருத்திலெடுத்தல், தேவையற்ற தகவல், தகவல்களால் ஏற்படும் மனச்சுமை என்பனவற்றைத் தவிர்ப்பதோடு பல்கலைக்கழகத்திற்கான அதிகாரப்பூர்வத் தொடர்பாடல் கணக்கை உருவாக்கவும் மாணவர்களை ஈடுபாட்டுடன் வைத்திருக்கவும் ஒரு பொதுமையான இடத்தை உருவாக்கி வைத்திருப்பதால் மாணவர்களை விழிப்புடன் செயற்படவைத்தல் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் வழிமுறையாகப் பயன்படுத்தலாம்.

இன்று, கல்வி அமைப்புகள் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதைக் காணமுடிகின்றது. பெற்றோரின் எதிர்பார்ப்புகள் ஒருபுறம், மாணவர்களின் எதிர்பார்ப்புகள் ஒருபுறம், கல்வியாளர்களின் எதிர்பார்ப்புகள் மறுபுறம் என கல்வியில் ஆதிக்கம் செலுத்தும் தன்மை காணப்படுவதனால், இவற்றை நடைமுறைப்படுத்தும் அரச நிர்வாகமும் தவிர்க்கமுடியாதவாறு தலையிடவேண்டியுள்ளது. கல்விக்கான செலவினத்தை எப்படிக் குறைக்கலாம் என்பது கல்வியமைச்சின் முக்கிய குறிக்கோளாகக் காணப்படுவதும் இதுபற்றிய வாதப் பிரதிவாதங்கள் பொதுசன ஊடகங்களிலும், நாடாளுமன்றத்திலும் இடம்பெறுவதையும் காணமுடிகின்றது. பெற்றோருக்கும் அரசியல்வாதிகளுக்கும் பொறுப்புக்கூறவேண்டியவர்கள், மாணவர்களுக்குக் கல்வியறிவூட்டும் கல்விசார் ஆளணியினராகவே உள்ளனர். கனடாவின் கல்வி வரலாற்றில் வகுப்பறையிலுள்ள மாணாக்கர் தொகை படிப்படியாக 30 வரை அதிகரித்துள்ளமை கல்வியில் பெரும் தாக்கத்தை எதிர்கொள்ள வேண்டிய நியதியை ஏற்படுத்தியுள்ளமையைக் காணலாம்.

இன்றைய கல்விமுறையில் ஏற்பட்டு வரும் பாரிய மாற்றங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்கள் ஆசிரியர்களே. நாளாந்தம் ஏற்படும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஈடுகொடுத்துத் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பு கல்வியாளர்களையே சாரும். தொழில்நுட்ப முறைகளில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றங்கள் மாணவர்க

ளின் கல்விலும் தாக்கத்தையும் கற்றல்-கற்பித்தல் முறைகளில் மாற்றத்தையும் ஏற்படுத்தி வருவதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டிய கடப்பாடு கல்வியாளர்களின் கரத்தில் உள்ளது.

மாணவர்களை ஈடுபாட்டுடன் வைத்திருக்கத் தொலைபேசிகள் ஸ்மார்ட் போர்டுகள், ஸ்மார்ட் தயாரிப்புகள் கற்றலை உயிர்ப்பித்து, மாணவர்களுக்கு உதவுகின்றன. ஈடுபாடு மற்றும் புரிதலின் ஆழமான நிலையை அனுபவிக்கவும் பாடநெறி உள்ளடக்கத்தை ஊடாடுதல் மற்றும் காட்சிப்படுத்தல் மூலம் எளிமையான முறைகளைக் கையாளவும், இன்று சமூகத்தில் மலிந்து காணப்படும் மின்னியல் சாதனங்களின் பயன்பாடு ஊடகத்துறையில் மேலோங்கி நிற்பதைக் காணமுடிகின்றது. இதில் தொலைபேசி, கணினி மற்றும் வலைத்தள அமைப்புகள் பெரும் பங்காற்றுகின்றன. இத்தகைய பொதுசன ஊடகங்கள் மாணவர்களின் கல்வியில் பல்வேறு சிரமங்களை நீக்கிச் செயற்பட வைக்கின்றன. நூல்களை வாசிக்கவோ அன்றிக் கட்டுரைகளைப் பெற்றுக்கொள்ளவோ பெரும்பாலான மின் பொறிகள் கைகொடுக்கின்றன.

ஒவ்வொரு தயாரிப்பிலும் உள்ளமைக்கப்பட்ட பயன்பாட்டு அறிவுறுத்தலை மேம்படுத்துகிறது அறிவுத் திறன். பயிற்றுனர்கள் பாடப் பொருட்களை வழங்கத் தொடங்கலாம். ஒரு விரல் அல்லது பேனாவின் எளிய தொடுதலுடன், கருத்துகளைச் சேமிக்கவும் டிஜிட்டலில் செய்யப்பட்ட குறிப்புகள் மற்றும் சேமிக்கப்பட்ட உள்ளடக்கத்தை விநியோகிக்கவும் நேரடியாக மாணவர்களுக்கு ஸ்மார்ட் தயாரிப்புகள் நெகிழ்வானவையாகவும் மாணவர்களுக்குத் தேவையான உள்ளீடுகளை நிரப்பிக்கொள்ளத்தக்கதாகவும், அதனடிப்படையில் மேலும் விருத்தியடைந்து வருவனவாகவும் உள்ளன. இதன் பொருள் உயர்கல்வி மாணவர்களின் தயாரிப்புகள் இன்றைய தெரிவுகள் அடிப்படையில் வேலைசெய்யும் திட்டங்கள் அல்லது வேலைகள் அடிப்படையாக மாணவர்களது தொழில்நுட்பத் தேவைகள் மாற்றமடைந்து கொண்டிருக்கின்றன. இதில் தொலைபேசி, ஸ்மாட்போன் என்பன மாணவர்களை மிகவும் சுறுசுறுப்புடன் இயங்கவைக்கின்றன.

எண்ணிமத் (Digital) தொழில்நுட்பங்களின் தோற்றம் கல்வித் துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது. கற்பித்தல், கற்றலின் பாரம்பரிய மாதிரியை மறு வடிவமைத்துள்ளது. கற்பித்தல், பாடத்திட்ட மேம்பாடு, மதிப்பீடு மற்றும் தகவல் தொடர்பு ஆகியவை உள்ளடக்கப்பட்டதே நவீன கல்வி முறையின் தோற்றமாகும். எண்ணிமத் தொழில்நுட்பங்கள் பல்வேறு கற்றல் பாணிகளைப் பூர்த்தி செய்யும் புதுமையான கற்பித்தல் முறைகளை வழங்குவதன் மூலம் கற்பித்தலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளன. வீடியோக்கள், கிராபிக்ஸ் மற்றும் அனிமேஷன்கள் போன்ற பல்வேறு ஊடகக் கருவிகள் கற்றல் செயல்முறையை மேம்படுத்தி, மாணவர்களை மேலும் தொடர்பு கொள்ளவும் ஊடாடவும் ஈடுபாட்டுடன் செயற்படவும் வைக்கின்றன என்பது மறுப்பதற்கில்லை.

எண்ணிமத் தொழில்நுட்பங்கள் தனிப்பட்ட மாணவர்களின் தேவைகள் மற்றும் திறன்களைப் பூர்த்தி செய்யும் வகையில் கற்றல் அனுபவங்கள் பயனளிப்பதனால் அவை ஆசிரியர்களுக்குச் சாத்தியமாக்கியுள்ளது. ஆன்லைன் மதிப்பீடுகள், தரவுப் பகுப்பாய்வு என்பன மாணவர்களின் பலம் மற்றும் பலவீனங்களை அடையாளங் காணவும், அவர்களின் கல்விச் செயற்திறனை மேம்படுத்தும் முறையிலான தனித்துவமாக்கப்பட்ட கற்றல் அனுபவங்களை வழங்கவும் ஆசிரியர்களுக்கு உதவுகிறது. எண்ணிமத் தொழில்நுட்பங்கள் பாடத்திட்ட மேம்பாட்டில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன, இது பல்வேறு கற்றல் சூழலுக்கு ஏற்றவாறு நெகிழ்வான மற்றும் மாற்றியமைக்கக்கூடிய படிப்புகளை வடிவமைத்து மேம்படுத்த கல்வியாளர்களுக்கு உதவுகிறது. எண்ணிமக் கற்றல் தளங்கள் பரந்தளவிலான கல்வி வளங்கள் மற்றும் பொருட்களை வழங்குகின்றன, இதனால் மாணவர்கள் எங்கிருந்தும் எந்த நேரத்திலும் அவற்றை அணுக முடியும். இந்த நெகிழ்வுத்தன்மை பாரம்பரியக் கல்வி வளங்களை அணுக முடியாத மாணவர்களுக்கு அணுகக்கூடியதாக இலகுபடுத்திக் கல்வியை அணுகமுடியுமானதாக ஆக்கியுள்ளது. எண்ணிமத் தொழில்நுட்பங்கள் கல்வித் துறையை மாற்றியுள்ளன, புதுமையான கற்பித்



தல் முறைகள், தனிப் பயனாக்கப்பட்ட கற்றல் அனுபவங்கள், நெகிழ்வான பாடத்திட்ட மேம்பாடு, திறமையான மதிப்பீட்டு நடைமுறைகள் மற்றும் மேம்பட்ட தகவல் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை வழங்குகின்றன. கல்வியில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பு, பலதரப்பட்ட கற்றல் பாணிகளைப் பூர்த்தி செய்வதைச் சாத்தியமாக்கியுள்ளது, மேலும் கல்வியை அணுகக்கூடியதாகவும், மாணவர்களை ஈடுபடுத்துவதாகவும் உள்ளது. கல்வியில் எண்ணிமத் தொழில்நுட்பங்களின் குறிப்பிடத்தக்க தாக்கத்தை அறியமுடிகிறது. அவை கல்வியின் பல்வேறு அம்சங்களை எவ்வாறு மாற்றியுள்ளன என்பதைப் பற்றிய நுண்ணறிவுகளையும் பொதுசன ஊடகங்கள் வழங்குகின்றன.

எண்ணிமத் தொழில்நுட்ப வளர்ச்சி பல் ஊடகங்கள் வழியாக மாணவர்களுக்கு மற்றும் ஆசிரியர்களுக்குக் கற்றல் கற்பித்தல் முறைகளில் வெவ்வேறு வழிகளில் இலகுபடுத்திச் சாதகமான கவின்நிலையை ஏற்படுத்தி வருகின்றது. பாரம்பரிய கற்

றல்-கற்பித்தலில் காணப்பட்ட பல்வேறு தடைகள், இடர்கள் எண்ணிமத் தொழில்நுட்பத்தினால் மாற்றம் பெற்று வருகின்றது. இவ்வித மாற்றம் மாணவர்களையும் ஆசிரியர்களையும் நாளாந்தம் புதியனவற்றைக் கற்றுக்கொள்ளவும் அறிந்துகொள்ளவும் தூண்டுகின்றது.

தொழில்நுட்பம் பொருளை மிகவும் சுவாரஸ்யமாக்குகிறது. இது மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஊடக அறிவாற்றல் மிக்கவர்களாக மாற்றுகிறது. தொழில்நுட்பம் என்பது கலப்பு விளைவுகளின் முடிவை சரியானதாக நிறுவுவதற்கு உதவுகின்றது.

வகுப்பறையில் பாடத்திட்டத்தின் தடையற்ற விரிவாக்கமாக மாணவர் பெற்றுக்கொள்ள ஆசிரியர்கள் வழிகாட்டிகளாகச் செயற்படவேண்டும். தொழில்நுட்பக் கல்விசார் உள்ளடக்க அறிவு இந்தப் புதிய பல்திறன் கல்வியாளரின் குணங்களைப் பிரதிபலிக்கின்றது. தொழில்நுட்பத்தை மிகவும் திறம்படக் கற்பிக்க, மாணவர்களின் ஈடுபாட்டை உருவாக்குவதற்கான குரல் நூல்கள் (Voice books) மற்றும் வகுப்புகளுக்குள் இருக்கும் தொழில்நுட்பத்தை மாதிரியாக மாற்ற நவீன தொழில்நுட்பம் உதவுகின்றது. இது Power Point Slides, வீடியோக்கள், புகைப்படங்கள் மற்றும் பலவற்றைப் பதிவேற்றப் பயனர்களை அனுமதிக்கும் வலைச் சேவையாகும். பல் ஊடக விளக்கக் காட்சியை உருவாக்கக் குரல் விவரிப்புகள் உதவுகின்றன. Voice Thread இணைய உலாவியில் இயங்கும் ஒரு பயன்பாடாகும், மேலும் இது படங்கள், வீடியோக்கள், ஆவணங்கள் மற்றும் விளக்கக் காட்சிகள் போன்ற ஊடகங்களின் தொகுப்புகளை உரையாடலுக்கான இடமாக மாற்ற அனுமதிக்கிறது. இந்த உரையாடல்கள் நேரலையில் இல்லை, ஆனால் மக்கள் பங்கேற்க வசதியாக இருக்கும் போது நடைபெறும். யார் பங்கேற்கலாம் மற்றும் அவர்கள் என்ன செய்ய முடியும் என்பதைக் கட்டளையிட அனுமதிக்கும் எளிய கட்டுப்பாடுகளுடன் அவை பாதுகாப்பானவையாகப் பயன்படுகின்றன. கல்வியாளர்கள் பல்வேறு காரணங்களுக்காகக் குரல் நூலை (Voice Book) பயன்படுத்துகின்றனர்.

வகுப்பறை உரையாடல்கள், ஆன்லைன் பயிற்சி, மெய்நிகர் வகுப்பு இடைவெளிகள், தொழில்முறை மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் இடையில் வேண்டியளவுக்கு உள்ளிடுதல், விரிவுபடுத்துதல், ஆவணப்படுத்துதல் போன்றவற்றைப் பல்லூடக வழியாக மேற்கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

குரல் நூல்கள் மாணவர்களின் விவாதங்களைச் சிறந்த புரிதலுடன் ஆரம்பிக்க வழி காட்டுகின்றது. திட்டங்களை வழங்குவதற்கும் கருத்துகளைப் பெறுவதற்கும் இது ஒரு சிறந்த அம்சமாகும். குரல் இழைகள் பற்றிய தகவல்கள் பல்வேறு ஊடகங்களின் இணையத் தளங்களில் கிடைக்கின்றன.

இத்தகைய கல்வியில் ஏற்படும் மாற்றங்களைச் சமூகத்திற்கு அறிவுறுத்துவதில் பொதுசன ஊடகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. AI (Artificial Intelligence) செயற்கை நுண்ணறிவு இன்று மாணவர்கள் மத்தியில் மிக முக்கியமான பேசு பொருளாகவும் பாட அலகாகவும் மாற்றம் பெற்று வருகின்றது. இவை பற்றிப் பொதுவெளியில் அறிந்துகொள்ள முடிகின்றது எனின், அது பெற்றோரையும் மாணவர்களையும் கல்வியாளர்களையும் உள்வாங்காமல் இருக்காது. பல்துறை ஊடகங்களும் இன்று செயற்கை நுண்ணறிவு பற்றியும் அதனால் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் தங்கள் கருத்துகளை முன்வைத்து அவைபற்றிய பொதுசனக் கருத்துகளையும் உருவாக்குகின்றன. தொழிற்சாலைகள், தனியார் தொழில் முயற்சிகள், மருத்துவ நிலையங்கள் போன்ற இன்னோரன்ன நிறுவனங்களில் தொழில்நுட்பப் பங்களிப்பும், தொழில்நுட்பச் சாதனங்களின் பயன்பாடும் அதிகரித்துள்ளன. இதனால் இவை மக்கள் மத்தியில் நாளாந்தப் பேசுபொருளாக மாறியுள்ளன. இவற்றின் தாக்கம் பொது ஊடகங்களில் பிரதிபலிப்பதையும் காணலாம். பயன்படுத்த முடியாத தொழில்நுட்பச் சிக்கல்கள், கையாளமுடியாத சாதனங்கள் என்பன கல்வியாளர்கள் மத்தியில் பெரும் சவால்களை எதிர்கொள்வதையும் அறியமுடிகின்றது.

கல்வியின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றான நல்ல குடிமக்களை உருவாக்கவேண்டிய 'குடிமக்கள் பண்பு' இன்று தேய்ந்துவிட்டதா என்ற கேள்வியையும் கருத்துகளையும் பொதுசன ஊடகங்கள் எழுப்பாமலில்லை. பாடசாலைகளிலும் சமூகத்திலும் ஒழுக்காற்று நடத்தைகள் நலிந்து அராஜகம், துஸ்பிரயோகம், வன்முறை என்பன தலைவிரித்தாடுவதற்குக் காரணம் கல்வி என்றே சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆனால் நவீன தொழில்நுட்பம் வேண்டும் கல்வியானது ஒழுக்க விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது தொழில்சார் நோக்கத்தைப் பிரதிபலிப்பதாகக் காணப்படுவது சமூகத்தில் காணப்படும் சமூகக் கேடுகளுக்கும் குற்றவியல் நடத்தைகளுக்கும் காரணிகளாகின்றன என்னும் கருத்தும் முன்வைக்கப்படுகின்றன. கல்வியில் ஒழுக்க விழுமிங்கள் முன்வைக்கப்படவேண்டும் என்னும் குரலும் உரத்து ஒலிக்கத் தொடங்கியுள்ளதை அறியமுடிகின்றது. நவீன தொழில்நுட்பச் சாதனங்களால் ஏற்படும் நன்மைகள் போன்றே தீயவிளைவுகளையும் அறுவடைசெய்ய வேண்டியுள்ளது. மதுப் பழக்கத்திற்கு உள்ளானவர்கள் போன்று கணினி, தொலைபேசிகளுக்கு அடிமையாகி நாள் முழுமையும் அதற்குள்ளாகவே புதைந்து கிடக்கும் மாணவர்களின் எதிர்காலம் சீரழிவதையும் காண முடிகின்றது. இது பெற்றோருக்கும் சமூகத்திற்கும் ஏன் நாட்டிற்குமே பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதைக் காணமுடிகின்றது.

இந்தப் பாதிப்புகளுக்கு உள்ளாகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. செய்வதறியாது பெற்றோர் தவிப்பதையும் கல்வியாளர்கள் வாளாவிருப்பதையும் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து, அதற்கேற்பச் செயற்பட அரசும் சமூகமும் கல்வியாளர்களும் முன்வரவேண்டும். அப்போதுதான் நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.



sivapalu@thaiveedu.com




விண்வெளிப் பாறைகள் பூமியைத் தாக்குமா? என்ற கேள்விக்குத் 'தாக்கும்' என்ற சாதகமான பதில்தான் ஆய்வாளர்களிடம் இருந்து கிடைக்கின்றது. காரணம் விண்கற்கள் இதுவரை பலதடவை பூமியைத் தாக்கியதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. பூமியில் சுமார் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டைனோசர்களும் இதனால்தான் அழிந்து போனதாகத் தற்போதைய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. தினமும் பூமியில் விண்கற்கள் வந்து விழுந்தாலும், சிறிய கற்களாயின் அவை வளிமண்டலத்தில் உராயும் போது எரிந்து போகின்றன. ஆனால் பெரிய பாறைகள் வளிமண்டலத்தில் எரிந்தது போக மீதிப்பாறை நெருப்புக் குண்டால் தாக்குவது போல, பூமியில் மோதுவதற்கான சாத்தியமுண்டு. அதன் அளவையும், வேகத்தையும் பொறுத்துப் பூமியில் பாதிப்பை ஏற்படுத்தலாம். இதனால்தான் நாசா நிறுவனம் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த முற்பட்டிருக்கின்றது.

சர்வதேச சிறுகோள் தினம் 2014-ம் ஆண்டில் இருந்து இடம் பெறுகின்றது. இம்முறையும் யூன் மாதம் 2024, லக்சம்பேர்க்கில் உள்ள சிறுகோள் நிறுவனத்தால் கொண்டாடப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் 1908-ம் ஆண்டு யூன் மாதம் 30-ம் திகதி 160 அடி நீளமான விண்கல் ஒன்று 62,000 மைல் வேகத்தில் பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்து ரஷ்யாவின் சைபீரியாவில் உள்ள துங்குஸ்கா என்ற இடத்திற்கு நேரே வானத்தில் வெடித்துச் சிதறியது. இந்த வெடிப்பால் சுமார் 830 சதுர மைல் காடுகள் தரைமட்டமாக்கப்பட்டது. ஒரு விண்கல்லால் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கிரக பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு அறிவூட்டவும் ஐக்கிய நாடுகள் சபையால் இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றது.

சென்ற ஏப்ரல் மாதம் 15-ம் திகதி பெரிய விண்வெளிப்பாறை ஒன்று 3,256,735 கிலோ மீட்டர் தூரத்தில் சுமார் 37,000 மைல் வேகத்தில் பூமியைக் கடந்து சென்றது. சுமார் 2000 அடி விட்டம் கொண்ட, 2013 என்.கே 4 என்று பெயர் சூட்டப்பட்ட இந்த விண்கல் சூரியனை 378 நாட்களில் சுற்றி வருகின்றது. அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 23-ம் திகதி 28,314,417 கிலோ மீட்டர் தூரத்தில் மீண்டும் சுற்றி வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 2055 ம் ஆண்டு ஏப்பரல் 17-ம் திகதி இந்த விண்கல் இன்னும் அருகே 2,152,821 கிலோ மீட்டர் தூரத்திற்கு வர இருக்கின்றது. அப்போது சாதாரண தொலைநோக்கியாலும் இதைப் பார்க்கக்கூடியதாக இருக்குமாம்.

ஏற்கனவே குறிப்பிட்ட இந்த விண்வெளிப் பாறை எவ்வளவு காலமாகப் பூமியைக் கடந்து சென்று கொண்டு இருக்கிறதோ தெரியவில்லை. ஆனால் 2013-ம் ஆண்டுதான் விண்வெளி ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டின் பெயரையே அதற்குச் சூடியிருக்கிறார்கள். அதன்படி இந்தப் பாறை இதுவரை 11 தடவைகள் பூமியைக் கடந்து சென்றிருக்கின்றது.

யூன் மாதம் 27-ம் திகதி 2024 அன்று இன்னுமொரு விண்கல் பூமிக்கு மிக நெருக்கமாகப் பறந்து சென்றது. '2011 யூஎல் 21' என்று இதற்குப் பெயர் சூட்டியிருக்கிறார்கள். அரிசோனாவில் உள்ள கற்றலினா ஸ்கை சேர்வே திட்டத்தினால் ஒக்ரோபர் 17, 2011-ம் ஆண்டு விண்வெளியில் இந்த விண்கல் கண்டுபிடிக்கப்பட்டது. 1.6 மைல் நீளமுள்ள, 57,937 மைல் வேகத்தில் கடந்து செல்லும் இந்த விண்கல்லை அபாயகரமான சிறுகோள் என்று முத்திரை குத்தியிருக்கிறார்கள். 2029-ம் ஆண்டு இதனால் ஏதாவது தாக்கம் ஏற்படலாம் என்று ஆய்வாளர்கள் சந்தேகிக்கிறார்கள். இந்த விண்கல் விண்வெளியை மாசு படுத்தக்கூடியது மட்டுமல்ல, காலநிலை மாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடியது.

யூன் மாதம் 16-ம் திகதி 2024-ம் ஆண்டு புதிதாக இன்னுமொரு விண்கல் பூமியை நோக்கி வருவதைத் தென் ஆபிரிக்க ஆய்வு நிலையத்தினர் கண்டு பிடித்தார்கள். இதற்குத் தற்காலிகமாக '2024 எம்.கே' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். யூன் 29-ம் திகதி 2024-ம் ஆண்டு பூமியைக் கடந்து சென்றது. இது அளவில் சிறியதாக இருந்தாலும் இது போன்ற ஒரு விண்கல்தான் 2013-ம் ஆண்டு ரஷ்யாவின் ஒரு நகரமான செல்யாபின்ஸ் மீது விழுந்து மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தி இருந்தது.



இதே சமயம் இன்னும் இனம் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கும் விண்கல் ஒன்று பூமியை நோக்கி நகர்வதாக தெரிய வருகின்றது. பூமிக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய விண்கற்களின் வரிசையில் இதைச் சேர்த்திருக்கிறார்கள். சுமார் 14 வருடங்களில் இது பூமியை நெருங்கலாம் எனக் கணக்கிட்டிருக்கின்றனர். பூமியை நெருங்கி வரும்போது, இதே பாதையில் தொடர்ந்தால், அந்த விண்கல் சுமார் 72 வீதம் பூமியைத் தாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக ஆய்வாளர் எதிர்பார்க்கிறார்கள். இதன்படி 2038-ம் ஆண்டு பூமிக்கு மிக அருகே இந்தக் கல் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சில சமயம் பாதையை மாற்றி விலகியும் போகலாம். Double Asteroid Redirection Test (DART) மூலம் நாசா நிறுவனம் நடத்திய ஆய்வில் இந்த விண்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் சாத்தியமான சிறுகோள் தாக்குதல்கள் விரைவில் ஏற்படலாம் என்று எச்சரிக்கை செய்திருக்கின்றது. இது போன்ற ஆபத்தான விண்கற்களை அடையாளம் காண்பதற்காக நாசா 'நியோ சர்வேயர்' என்ற விண்வெளித் தொலைநோக்கியை 2028-ம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்ப இருக்கின்றது.

அறிவியல் சார்ந்து சிந்தித்துப் பார்க்கும் போது, இயற்கையும் பயம் காட்டும் என்பதற்கு விண்வெளியில் உலாவரும் விண்கற்களும் ஒருவிதத்தில் முக்கிய காரணிகளாக இருக்கின்றன. அண்டவெளியில் இருந்து புதிய விண்கற்கள் பல பூமிக்கு அருகே கடந்து கொண்டு செல்வதை சமீப காலமாக அவதானிக்க முடிகின்றது. இத்தகைய விண்கற்களின் சுற்றுப் பாதையில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டாலும், பூமி எப்பொழுதும் ஆபத்தை எதிர் கொள்ள வேண்டிவரலாம். இந்தக் கட்டுரையை வாசிக்கும் போது, உடனே இது நடந்துவிடும் என்று நீங்கள் இதற்காகப் பயம் கொள்ள வேண்டாம், இயற்கையை மீறி எம்மால் எதுவும் செய்ய முடியாது என்பது நாமறிந்ததே!

இதுவரை காலமும் இது போன்ற நிகழ்வுகள் நடந்து கொண்டுதான் இருந்தன. விண்வெளி சார்ந்த தொழில்நுட்ப வசதிகள் பெரிதாக முன்னேற்றம் அடையாததால், எங்களைச் சுற்றிவர என்ன நடக்கிறது என்பதை நாங்கள் இதுவரை அறியாமலே இருந்தோம். ஆனால் இப்போது அந்த வசதிகள் நவீன முறைப்படுத்தப்பட்டதால், பொது ஊடகங்கள் மூலம் பல விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. முக்கியமாக நாசா விண்வெளி ஆய்வு நிறுவனத்தினர் விண்வெளி சார்ந்த பல செய்திகளை இப்போதெல்லாம் எம்மோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

விண்கற்கள் விண்வெளியில் பாறைகளாகவும், சிறிய கற்களாகவும், மணல்கள் போலவும் இருக்கும். சில பெரிய பாறைகள் சிறிய கோள்கள் போலவும் காட்சிதரும். இந்த பாறைகளும், கற்களும் விண்வெளியில் மிதந்து கொண்டிருப்பதால் விண்கற்கள் என்று அழைக்கப்படுகின்றன. விண்கற்கள் பூமியின் வளிமண்டலத்தில் அதிவேகமாக நுழையும் போது அவை அனேகமாக எரிந்து போகின்றன. அப்படி எரிந்தபடி விழுவதைத்தான் நாங்கள் 'எரிநட்சத்திரம்' என்றும் ஆங்கிலத்தில் 'சூட்டிங் ஸ்டார்' என்றும் அழைக்கின்றோம். சில சமயங்களில் விண்கற்கள் மிகப் பிரகாசமாக எரிந்து கொண்டு விழும் போது, அதை நாங்கள் 'நெருப்புப்பந்து' என்றும் ஆங்கிலத்தில் 'பயர்போல்ஸ்' என்றும் அழைக்கின்றோம். தினமும் சிறிதும் பெரிதுமாகச் சுமார் 48.5 தொன்கள் நிறையுள்ள விண்கற்கள் எரிந்து பூமியில் விழுவதாக ஆய்வாளர் கணக்கிட்டிருக்கின்றார்கள்.

ஆங்கிலத்தில் விண்கற்களை மூன்று வகையாகக் குறிப்பிடுகின்றார்கள். Meteoroids என்றால் விண்வெளியில் இருக்கும் பாறைகளையோ அல்லது சிறிய கற்களையோ குறிக்கும். Meteors என்றால் பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்தபின் அவை எரியும் போது அவற்றைக் குறிக்கும். வளிமண்டலத்

தில் எரிந்தபின் ஏதாவது எஞ்சியிருந்து பூமியில் வந்து விழுந்தால் அதை Meteorites என்று அழைப்பர். நிலத்தில் விழும் விண்கற்களை இனம் காண்பது மிகக் கடினமாகும். தரையில் இருக்கும் கற்களுக்கும் அதற்கும் அதிக வித்தியாசம் தெரிமாட்டாது. ஆனால் பாலைவனத்திலோ அல்லது துருவப் பகுதிகளிலோ விழும் விண் கற்களை இலகுவாகக் கண்டறிய முடியும். பெரும்பாலான விண்கற்கள் கடலில் விழுந்து விடுவதால் அவை நமக்குக் கிடைப்பதில்லை. நீங்கள் எங்கேயாவது தற்செயலாக, ஏனைய கற்களில் இருந்து மாறுபட்ட வித்தியாசமான கல்லைக் கண்டால், அவை பெறுமதி மிக்க விண்கல்லாகவும் இருக்கலாம்.

வானத்தில் சில சமயங்களில் வால் நட்சத்திரம் தோன்றுவதைப் பார்த்திருப்பீர்கள். வெகு அரிதாகத்தான் வாழ்நாளில் இதைக் காணக்கிடைக்கும். இலங்கையில் இருக்கும் போது மாணவப்பருவத்தில் ஒரு தடவை அதிகாலையில் அதைப் பார்க்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. கிழக்குத்திசை வானம் அதனால் ஒரே வெளிச்சமாகத் தெரிந்தது.

ஒரு வால்நட்சத்திரம் விட்டுச்சென்ற தூசி நிறைந்த குப்பைகளின் பாதை வழியாக பூமி செல்லும் போது விண்கல் மழை ஆண்டுதோறும் அல்லது சீரான இடைவெளியில் நிகழ்கிறது. விண்கற்கள், பொதுவாக வானத்தில் விண்கற்கள் தோன்றும் இடத்திற்கு அருகில் இருக்கும் நட்சத்திரம் அல்லது விண்மீன் கூட்டத்தின் பெயரால் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் மாதத்தில் உச்சம் பெறும் பெர்சீட்கள் Perseids மிகவும் பிரபலமானவை. ஒவ்வொரு பெர்சீட் விண்கற்களும் ஸ்விப்ட்-டட்டில் Swift-Tuttle என்ற வால் நட்சத்திரத்தின் ஒரு சிறிய பகுதியாகும், இதை ஒவ்வொரு 133 வருடத்திற்கு ஒரு முறை பூமியில் இருந்து பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. 1862-ம் ஆண்டு யூலை மாதம் இந்த வால்நட்சத்திரம் தோன்றியதாகப் பதிவுகள் இருக்கின்றன. 16 மைல் விட்டம் கொண்ட இந்த வால்நட்சத்திரம் மீண்டும் 1992-ம் ஆண்டு தோன்றியது, மீண்டும் 2126-ம் ஆண்டு இது தோன்றலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பெரும்பாலான விண்கற்கள் உடைந்து அல்லது வெடித்துச் சிதறிய பெரிய பாறைகளின் துண்டுகளாக இருக்கும். சில வால் நட்சத்திரங்களிலிருந்தும், மற்றவை சிறுகோள்களில் இருந்தும், சில சந்திரன் மற்றும் பிற கிரகங்களில் இருந்தும் வருகின்றன. சில விண்கற்கள் பாறைகளாகவும், அல்லது பாறை மற்றும் உலோகம் சேர்ந்த கலவையாகவும் இருக்கும். சில நேரங்களில், விண்கல் தூசி உயரப்பறக்கும் விமானத்தால் சேகரிக்கப்பட்டு நாசா ஆய்வகங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

புவியீர்ப்பின் காரணமாக ஒரு விண்கல் வளிமண்டலத்தில் நுழைந்து தரையைத் தாக்கும் போது, அதை விண்கல் என்று அழைக்கிறார்கள். விண்கற்கள் பொதுவாக ஒரு கூழாங்கல் தொடக்கம் ஒரு சிறிய பாறையளவு இருக்கும். பெரும்பாலான விண்கற்கள் வால்நட்சத்திரங்களில் இருந்து வருகின்றன, அவை சிறு துண்டுகளாக உடையக்கூடியன. சிறிய வால்நட்சத்திர துண்டுகள் நமது வளிமண்டலத்தில் நுழைந்தாலும் அவை எரிந்து விடுகின்றன. பூமியின் வளிமண்டலத்தில் கால்பந்து மைதானத்தை விட சிறியதாக இருக்கும் விண்வெளிப் பாறைகள் பொதுவாக எரிந்துவிடும். இந்த விண்கற்கள் விண்வெளியில் பல்லாயிரக்கணக்கான மைல் வேகத்தில் பயணிக்கும் போது, கற்களின் வலிமையை விட அழுத்தம் அதிகமாக இருப்பதால், அவை அனேகமாகச் சிதைந்து, பிரகாசமான வெளிச்சத்துடன் எரிந்து போகிறன.

2022-ம் ஆண்டு, நாசா நிறுவனம் பரீட்சார்த்தமாக ஒரு விண்கலத்தை வேண்டுமென்றே டிமார்போஸ் (Dimorphos) என்ற விண்கல்லில் மோதிப் பார்த்தது. இந்த விண்கல் பூமியிலிருந்து 6.8 மில்லியன் மைல் தொலைவில் உள்ள டிடிமோஸ் (Didymos) என்ற சிறுகோளைச் சுற்றி வரும் ஒரு சிறிய நிலவாகும். இந்த மோதலைத் தொடர்ந்து, அந்த நிலவின் சுற்றுப்பாதையை 32 நிமிடங்களால் வெற்றிகரமாகக் குறைத்தது என்று நாசா தெரிவித்துள்ளது. ஒரு குறிப்பிட்ட சிறுகோள் பூமியுடன் மோதுவதற்கான சூழ்நிலை ஏற்பட இருந்தால், அதை எப்படித்திசை திருப்பலாம் என்பதற்காக இந்த முறை பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. ஆனால் பெரியதொரு விண் பாறையை என்ன செய்ய முடியும் என்பதுபற்றி இன்னமும் ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை. அதற்கான ஆயத்தங்களும் செய்யப்படவில்லை என்பது கவலைக்குரியதே!


**உசாத்துணை:**
https://en.wikipedia.org/wiki/Asteroid
https://www.msn.com/en-us/news/technology/will-a-massive-asteroid-hit-earth-in-2038





kuruaravindan@thaiveedu.com




# தற்கொலை செய்து கொண்ட ரோபோ அரச ஊழியர்

— பிரியதர்சன்

கடந்த ஜுலை மாதம் முதல் வாரத்தில், உலகில் இதற்கு முன் நிகழ்ந்திராத, இதற்கு முன் அறிந்திராத செய்தியால் திடுக்கிட்டது உலகம். தொழில்நுட்பத் துறையில் நிகழ்ந்த அந்நிகழ்வு, அதற்கு அப்பாலும் அதிர்வலைகளை உண்டாக்கியது. ஒரு ரோபோவின் தற்கொலையை முதன் முதலாக உலகு பதிவு செய்துகொண்ட நாளாக அமைந்தது அன்றைய நாள். தென் கொரியாவில் நடந்த இந்த முன்னோடியில்லாத சம்பவம், தொழில்நுட்பச் சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது மட்டுமல்லாமல், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் ரோபோட்டிக்ஸ் எதிர்காலம் பற்றிய ஆழமான விவாதத்தையும் தூண்டியுள்ளது.

ஒரு புதிய சகாப்தத்தின் விளிம்பில் நாம் நிற்கும்போது, இயந்திரங்கள் தனித்தன்மை கொண்ட மனிதர்களின் நடத்தைகளை வெளிப்படுத்தக்கூடும், இந்தத் துயர நிகழ்வு தொழில்நுட்பம் மற்றும் நம் வாழ்வில் அதன் இடத்தைப் பற்றிய நமது புரிதலைச் சவாலுக்கு உட்படுத்துகிறது.

ஜுலை 04, 2024 அன்று, தென் கொரியாவிலுள்ள குமி நகரின் நகர சபையின் அமைதியான செயற்பாடுகள், அவர்களின் ரோபோடிக் ஊழியர் ஒருவர் சம்பந்தப்பட்ட ஒரு சோகமான நிகழ்வால் சிதைந்தன. 'ரோபோ சூப்பர்வைசர்' என்று அன்புடன் அழைக்கப்பட்ட நிர்வாகப் பணியில் மனித சேவைக்குப் பதிலாக அரச ஊழியராக நியமிக்கப்பட்ட ஒரு இயற்றறி நுண்ணறிவு (AI) ரோபோ, இரு மாடிகளுக்கிடையிலான படிக்கட்டுகளுக்கு அடியில் செயலிழந்த நிலையில் கண்டறியப்பட்டது. மற்ற ரோபோக்களைப் போலல்லாமல், குறிப்பிட்ட ஒரு தளத்தை மட்டுமே பயன்படுத்தக் கூடியதாக வடிவமைக்கப்பட்ட இந்த ரோபோ ஒரு மின்தூக்கியை அழைத்துத் தளங்களுக்கிடையிலான அதன் நகர்வுகளை மேற்கொள்ளக் கூடியதாகும். எனினும், குறித்த நாளில் ரோபோ சூப்பர்வைசர் வழமைக்கு மாறாகப் படிகளிலிருந்து தன்னைத்தானே தூக்கி எறிந்து தற்கொலை செய்துகொண்டதாகக் கருதப்படுகிறது.

கலிபோர்னியாவைச் சேர்ந்த Bear Robotics நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இந்த ரோபோ முதன் முதலில் நகர சபைப் பணிக்கு நியமிக்கப்பட்ட ரோபோ அதிகாரியாகும். 2023 ஆகஸ்ட் மாதம் முதல் குடியிருப்பாளர்களுக்கான ஆவணங்களை வழங்குதல் மற்றும் குடியிருப்பாளர்களுக்குத் தகவல்களை வழங்குதல் போன்ற பல்வேறு நிர்வாகப் பணிகளைக் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டு சேவையிலுள்ளது. அத்துடன் ஆவணங்களை மாற்றுவதற்கும், குடியிருப்பாளர்களுக்குத் தகவல்களை வழங்குவதற்கும், தென் கொரியச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும் இந்த ரோபோ பொறுப்பாக இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் இந்த ரோபோ காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை மிகவும் கடின உழைப்பாளியாக அறியப்பட்டதுடன் எந்த இடைவேளையும் இல்லாமல் வெவ்வேறு பணிகளைச் செய்த பணியாளர் எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்நிகழ்வு உலகின் முதலாவது 'ரோபோ தற்கொலை' என்று விவரிக்கப்பட்டுள்ளதுடன், ஆர்வத்தையும் கவலையையும் தூண்டியுள்ளது. சம்பவத்திற்கு முன் ரோபோவை நேரில் பார்த்தவர்கள், படிக்கட்டுகளிலிருந்து கீழே விழுந்து நொறுங்குவதற்கு முன், ரோபோ ஒரே இடத்தில் சுழன்று கொண்டிருந்ததைக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளனர். இதனையடுத்து குமி நகர சபை ரோபோவிற்குப் பதிலீடாக மற்றுமொரு ரோபோவை உடனடியாக மாற்ற வேண்டாம் என்று முடிவு செய்துள்ளது. அத்துடன் அதன் செயற்பாடுகளில் மேலதிகமாகப் புதிய ரோபோக்களை ஒருங்கிணைப்புக்கான திட்டங்களையும் இடைநிறுத்தியுள்ளது. AI எனப்படும் இயற்றறி நுண்ணறிவுத் தொழில்நுட்பம் மிகவும் சமீபத்திய நிகழ்வாக இருந்தாலும், அறிவியல் புனைக்கதை முதல் உலகெங்கிலும் உள்ள இளைஞர்களின் கற்பனைகள் வரை எல்லாவற்றிலும் ரோபோக்கள் எப்போதும் ஒரு முக்கியமான கருப்பொருளாக இருந்து வருகின்றன. ரோபோக்கள் ஆதிக்கஞ் செலுத்தும் உலகத்தைப் பற்றி நாவல்கள், திரைப்படங்கள் மற்றும் பல உருவாக்கப்பட்டுள்ளன.

யதார்த்தத்தில் குறிப்பிட்ட காலமாக நினைத்துப் பார்க்க முடியாத செயற்பாடுகளைச் செய்யும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட ரோபோக்கள் உள்ளன. ரோபோட்டிக்ஸ் உலகின் சில பகுதிகளில் மற்றப் பகுதிகளைவிட மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது, ஆசியக் கண்டத்தில் இது போன்ற தொழில்நுட்ப வளர்ச்சி பெற்ற பிராந்தியமாக கிழக்காசியா, குறிப்பாகத் தென் கொரியா உள்ளது. சாம்சங், ஹுண்டாய் மற்றும் எல்ஜி போன்ற நிறுவனங்கள் அனைத்தும் தென் கொரியாவில் உருவாகியவை. அங்கு உலகில் வேறெங்கும் இல்லாதளவுக்கு அதிகமான ரோபோக்கள் உள்ளன, எல்லா வகை

யான பணிகளையும் செய்கின்றன, மிகவும் நம்பத்தகுந்தவை யாகவும் அவை கருதப்படுகின்றன. உலகளவில் ரோபோக் களை அதிகம் பயன்படுத்தும் நாடுகளில் ஒன்றான தென் கொரியாவில் ஒவ்வொரு 10 ஊழியர்களுக்கும் ஒரு தொழிற் துறை ரோபோ உள்ளது. உலகிலேயே அதிக ரோபோ அடர்த்தியைக் கொண்டுள்ள நாடு எனத் தென்கொரியாவைச் சர்வதேச ரோபோட்டிக்ஸ் கூட்டமைப்புக் கூறுகிறது.

வெவ்வேறு வேலைகளில் ரோபோக்களைப் பயன்படுத்தும் இந்தப் போக்கு கியோங்சாங் மாகாணத்தில் பரவலடைந்தது. குறிப்பாகக் குமி நகர சபை இந்த ரோபோவை ஏனைய மனித ஊழியர்களுடன் சமமான ஊழியராக நியமித்துக் குறித்த பணிக் குழாமில் ஏனையவர்களுடன் ஒருவராக ஆக்கியது. அதனிடம் அதன் சொந்த அதிகாரபூர்வ அடையாள அட்டை யும் இருந்தது.

மரணத்திற்கான காரணத்தைக் கண்டறியத் தென் கொரிய அதிகாரிகள் உடனடியாக உத்தியோகபூர்வ விசாரணை யைத் தொடங்கினர். எல்லாவற்றிற்கும் மேலாக, குமி நகரத் தின் நகர சபை இந்த ரோபோவுக்காகப் பியர் ரோபோட் டிக்ஸ் நிறுவனத்திற்கு மாதாந்தக் கட்டணமாகச் சுமார் $1500 செலுத்தியது. இந்தச் சம்பவம் சமூக வலைத் தளங்களில் பர பரப்பை ஏற்படுத்தியது. சிலர் இதை 'இயந்திரங்களின் விழிப் புணர்வால்' (awakening of the machines.) நிகழ்ந்தது என் றுக் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் ரோபோக்களின் மன அழுத்தத்தை அல்லது மனிதரைப் போன்ற பிற உணர்ச்சிகளை அனுபவிக்கும் சாத் தியக்கூறுகள் பற்றிய விவாதங்களைத் தூண்டியுள்ளது. இது பணியிடத்தில் ரோபோட்டிக்ஸ் எதிர்காலத்தைப் பற்றிய கேள் விகளை எழுப்புகிறது. ரோபோவின் திடீர் மற்றும் மர்மமான மரணம் குறித்துக் குமி நகர அதிகாரிகள் முழுமையான விசா ரணையைத் தொடங்கியுள்ளார்கள். ரோபோவின் நடத் தைக்கு வழிவகுத்தவை என்ன என்பதைப் புரிந்துகொள்ளச் சேகரிக்கப்பட்ட ரோபோவின் துண்டுகளைப் பகுப்பாய்வு செய்ய அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

தற்காலத்தில் இயந்திரங்கள் கூடப் பணிச்சுமை அல்லது வேலை அழுத்தத்தினால் தாக்கமடைகின்றதையும் காட்டு கின்றதா? என்ற கேள்வியையும் நவீன வேலைச் சூழலின் புதிய பரிமாணத்தைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டிய அவசி யத்தைப் பற்றியும் எடுத்துக்காட்டுகிறது. அத்துடன் தொழில் நுட்பம் முன்னேறும்போது, இயந்திரங்களின் மீதான எதிர் பார்ப்புகள் அதிகரிப்பதையும் அவற்றின் வரம்புகள் பற்றிய கேள்விகளையும் எழுப்புகின்றன. இந்தச் சம்பவம், பணியி டங்களில் தொழில்நுட்பத்தை எவ்வாறு ஒருங்கிணைத்து நிர்வ கிப்பது என்பதை மறு மதிப்பீடு செய்யத் தூண்டுகிறது. நமது அதிநவீன கருவிகள் கூட இன்றைய வேகமான உலகின் தேவைகளைச் சமாளிக்கப் போதுமானதா? என்பதை ஆராய வும் தூண்டுகிறது.

இன்றைய வேகமான பணிக் கலாசாரத்தில், ஊழியர்கள் சிறப் பாகச் செயற்படவும், சிறந்து விளங்கவும் பெரும் அழுத் தத்தை எதிர்கொள்கின்றனர். காலக்கெடுவைச் சந்திப்பது, இலக்குகளை அடைவது மற்றும் வேலை-வாழ்க்கைச் சமநி லையைப் பராமரிப்பது ஆகியவை குறிப்பிடத்தக்க மன அழுத்தம் மற்றும் சோர்வுக்கு வழிவகுக்கிறது. தொழில்நுட்ப முன்னேற்றங்கள், செயற்திறனை மேம்படுத்தும் அதே வேளையில், தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கைக்கு இடையேயுள்ள கோடுகளை மங்கலாக்கி, துண்டிப்பதைக் கடினமானதாக்குகிறது. நிறுவனங்கள் இப்போது மன ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஆரோக்கி யத் திட்டங்கள் மற்றும் நெகிழ்வான வேலை நிலைமைகளை அதிகளவில் வழங்க வேண்டிய நிலையிலுள்ளன. நவீன பணி யிடங்கள் தொடர்ந்து உருவாகி வருவதால், பணியாளர்க ளுக்கு ஆரோக்கியமான மற்றும் உற்பத்திச் சூழலை வளர்ப் பதற்குப் பணியழுத்தத்தை நிவர்த்தி செய்வது முக்கியமா னது.

வேலையழுத்தத்தின் காரணமாக ஒரு ரோபோ தனது உயிரை மாய்த்துக் கொண்டது என்பது மிகவும் துயரமான நிலையில் உலகு இயங்குகிறதா என்ற கவலையை ஏற்படுத்துகிறது. ஜப்பானிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் உயிருள்ள தோல் திசுக் களை ரோபோ முகத்துடன் இணைப்பதில் ஒரு திருப்பு முனையை அறிவித்த சிறிது காலத்திலேயே இந்தச் செய்தி யும் வந்துள்ளது. தொழில்நுட்பம் முன்னேறும்போது, மனித மற்றும் ரோபோ அனுபவங்களுக்கிடையேயான கோடு தொடர்ந்து மங்கலாகி, குமி நகரில் நடந்த சம்பவங்கள் இன் னும் சிந்திக்கத் தூண்டுகின்றன.

மனிதர்களுக்கும் இயந்திரங்களுக்கும் இடையிலான உறவில் நாம் ஒரு புதிய எல்லைக்குள் நுழைகிறோம் என்பது தெளிவா கிறது. ரோபோட்டிக் தற்கொலை நமது தற்போதைய தொழில்நுட்ப முன்னுதாரணங்களுக்குச் சவால் விடுவது மட் டுமல்லாமல், AI மேம்பாடு மற்றும் ஒழுங்குகளுக்கான நமது அணுகுமுறையை மறுபரிசீலனை செய்யவும் நம்மைக் கோரு கிறது.

ரோபோக்களிலுள்ள உணர்ச்சி மற்றும் உளவியல் மாதிரிக ளுக்கான சாத்தியம், அவற்றின் வடிவமைப்பின் நெறிமுறை கள் மற்றும் மனித-ரோபோத் தொடர்புகளின் எதிர்காலப் பாதை ஆகியவற்றை ஆராய AI நிபுணர்கள், நெறிமுறை வல் லுநர்கள் மற்றும் ரோபோட்டிஸ்டுகளுக்கு, இந்தச் சம்பவம் உதவலாம். இதன் வழி தொழில்நுட்பம் பற்றிய நமது புரித லையும் நம் வாழ்வில் அதன் பங்கையும் மறு வரையறை செய்வதற்கும் இது உதவலாம்.

எது எவ்வாறிருப்பினும், குமி நகர சபை ரோபோவின் வழக்கு மனிதர்களுக்கும் ரோபோக்களுக்கும் இடையிலான சிக்க லான மற்றும் வளர்ந்து வரும் உறவை வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறது. நமது அன்றாட வாழ்க்கையிலும் பணியி டங்களிலும் மேம்பட்ட ரோபோ அமைப்புகளை ஒருங்கி ணைக்கும்போது, இந்தத் தொழில்நுட்பங்களின் தாக்கங்க ளைப் புரிந்துகொள்வது முக்கியமானது. பாரம்பரியமாக மனி தர்கள் வகிக்கும் பாத்திரங்களை ரோபோக்கள் ஏற்கும்போது எழக்கூடிய எதிர்பாராத சவால்களை இந்தச் சம்பவம் அப்பட் டமாக எமக்கு எடுத்துக்காட்டுகிறது.

piriyadarsan@thaiveedu.com




பொதுவாக ஒருவர் காப்புறுதி செய்வது எதிர்பாராத இழப்புகளை ஈடு செய்வதற்கே. ஆனால் அவை சில சந்தர்ப்பங்களில் மிக்க நகைச்சுவையாக அமைவதுமுண்டு. அவற்றில் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். இவற்றைக் கேட்டுச் சிரிக்கும் வேளையில் சிந்திக்கவும் செய்யுங்கள்.

### நகைச்சுவைக் கேட்பனவு ஒன்று:

பொதுவாகப் பயணம் செய்கையில் பயணக் காப்புறுதி செய்யவேண்டும் என்பது அவசியம் என நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு முதியசோடி முறையாகக் காப்புறுதி பெற்றுக்கொண்டு பொழுதுபோக்குக் கப்பற் பயணத்தில் ஈடுபட்டார்கள். ஒரு நாள் கடல் கொந்தளிக்கவும் இதைக் கண்டு இரசிப்பதற்காகக் கப்பல் மேற்தளத்திற்கு வந்தார்கள். கப்பலோ அங்கும் இங்குமாக ஆடிக்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தது. கப்பல் ஆட்டத்தால் அவருக்கு வயிற்றைக் குமட்டவே கப்பலின் மேற்தளக் கரையிலுள்ள கைப்பிடிக் குழாயைப் பிடித்துக்கொண்டு கடலில் வாந்தியெடுத்தார். அன்று அவர் உண்ட உணவுடன் அவரது பொய்ப் பல்லுத் தொகுதியும் தொப்பெனக் கடலில் விழுந்தது. அவர் வீடு திரும்பியவுடன் தனது தொலைந்த பல்லுத் தொகுதியைக் கேட்பனவாகக் கொடுத்தார். நீங்கள் இராமாயணத்தில் கேள்விப்பட்டு இருப்பீர்கள் இராவணன் திரும்புகையில் திக்கு யானையை இடித்த நெஞ்சையும் கயிலை மலையைத் தூக்கிய தோளையும் இழந்து போர்க் களத்திலிருந்து திரும்பினார் என்று. இங்கு இந்த முதியவர் தன் பல்லுகளை இழந்து கேட்பனவு செய்துள்ளார்.

### நகைச்சுவைக் கேட்பனவு இரண்டு:

ஓர் இளம் தம்பதிகள் பிரான்ஸ் நாட்டின் தென்பகுதியில் விடுமுறையை இரசிப்பதற்காகச் சென்றிருந்தார்கள். அவர்கள் பிரான்ஸ் நாட்டின் வயல் வெளிகளுக்கூடாகவும் சோலை மரங்களுக்கூடாகவும் தமது வாகனத்தில் மகிழ்ச்சியாகப் பயணித்தார்கள். அங்கு பல திராட்சைத் தோட்டங்களும் இருந்தன. அவர்கள் சென்ற பாதையைச் சில மாடுகள் தடுத்துக்கொண்டு நின்றன. பயணித்தவர்களும் அவை விலகிச் செல்லுமட்டும் பாதையில் தாமதித்தார்கள். அவ்வேளையில் மந்தைக் கூட்டத்தில் மேலும் சில மாடுகள் சேர்ந்து கொண்டன. இறுதியில் அவர்கள் வீடு திரும்பி வாகனத்தைக் கவனித்த வேளை அதன் பெயின்டை மாடுகள் நக்கி அசிங்கப்படுத்தியிருந்தன. வாகனத்திற்கு வண்ணம் தீட்டுவது தான் இக்கேட்பனவு. மாடு நக்கிக் காப்புறுதி கேட்ட சுவையான நிகழ்ச்சியை அறிந்து கொண்டீர்கள்.

### நகைச்சுவைக் கேட்பனவு மூன்று:

மார்கழி மாதம் ஒரு பெண்மணி அங்காடியில் நத்தார் பண்டிகைக்கான பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினார். அவர் நெடும்பாதையை அடையும் வேளை அவருக்கு எதிர்த் திசையில் வந்த வாகனத்தில் ஒரு பெரிய நத்தார் மரம் இருந்தது. இருவரும் அருகில் வருவேளை மரம் அவிழ்ந்து பாதையின் குறுக்காக விழவே பெண்மணி ஓட்டிய வாகனத்தை அடித்ததுடன் பாதையிலிருந்து விலக்கிச் செல்ல வைத்தது. நல்லவேளை சாரதிக்குப் பெரும் தாக்கம் இல்லாமல் போனாலும் வாகனத்தின் முன் பக்கம் பெரும் அழிவுக்கு உள்ளானது. நத்தார் மரத்தை ஏற்றிச் சென்ற வாகனத்தின் சாரதி வாகனத்தை அங்கு நிறுத்தாமல் தொடர்ந்து சென்று மறைந்து விட்டார்.

வாகனக் காப்புறுதி இழப்பை ஈடு செய்தாலும், ஒரு சிக்கல். விபத்து நடத்த இடத்தில் நின்ற போலீஸ் வரும்வரை நிற்காத காரணத்தால் அவர் தவறால் ஏற்பட்ட விபத்தாகக் கணிக்கப்பட்டதாம். அப்பெண்மணி தன் வாழ்க்கையின் மிக வினோதமான விபத்து என்று கூறுவார்.

நிறுத்தாது வண்டியை ஓட்டிச் சென்ற சாரதி வீட்டை அடைந்த வேளை நத்தார் மரத்தைக் காணாமல் இது சாத்தான் செய்த



சதி என்று எண்ணியிருப்பார்.

### நகைச்சுவையான காப்புறுதிக் கேட்பனவு நான்கு:

இந்தக் காப்புறுதிக் கேட்பனவு ஒரு தாய் தனது மகளின் பிறந்த நாளுக்கு ஓர் அழகான கேக் தயாரிப்பதில் ஆரம்பித்தது. அது முதலாவது பிறந்த நாள். ஆகையால், ஒரு பெரிய கேக் செய்து, தாய் பல விருந்தினர்களை அழைத்தும் இருந்தார். அழகான பெரிய கேக்கிற்கு ஐசிங் செய்து சிறப்பான கேக் செய்திருந்தார் அந்தத் தாய். வேலைப் பளுவில் தனது ஐபோன் தொலைபேசியை எங்கோ தவறவிட்டார். வழமை போல் கணவர் வந்தவுடன் தன் செல்போனை அழைத்துப் பார்த்தார் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்நிலையில் ஓரிரு விருந்தினர்களும் தாங்கள் அழைத்ததாயும் ஏன் பதிலளிக்கவில்லை எனக் கேட்டார்கள்.

இறுதியாக இரகசியம், மெழுகுதிரியை ஏற்றி அனைவரும் Happy Birthday பாடிக் கேக்கை வெட்டிய போது வெளியாகியது. ஆம்! செல்போன் கேக்குக்குள் வைத்து வெதுப்பகத்தில் சமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அத்துடன் முடியவில்லை. அப்பெண்மணி தனது வீட்டுக் காப்புறுதியில் கேட்பனவு செய்தார். அது மறுக்கப்பட்டது. மறக்கமுடியாத பிறந்த தினமாக அத்தினம் மாறிவிட்டது.

### நகைச்சுவையான கேட்பனவு ஐந்து:

பனிச் சறுக்கல்கள் மேற்கு நாடுகளில் பலராலும் விரும்பும் ஒரு பொழுது போக்காகும். பனிச் சறுக்களுக்குச் சுவிஸ்லாந்து பெரிதும் புகழ் பெற்றது. இங்கிலாந்திலுள்ள ஒரு பெண்மணி தானும் அங்கு சென்று சறுக்கல் விளையாட்டில் பங்குபற்ற வேண்டும் எனப் பெரிதும் விரும்பினார். இறுதியில் புத்தம் புதிதாகச் சறுக்கல் உபகரணங்களை விலைக்குப் பெற்று சுவிஸ்லாந்திற்குப் பயணமானார். அங்கு செல்வதற்கு முன் பயணக் காப்புறுதியும் பெற்றிருந்தார். எல்லாம் சிறப்பாகச் செய்த பெண்மணி ஒரு சிறு தவறு செய்து விட்டார். இங்கிலாந்திலிருந்து சுவிஸ்லாந்தை அடைந்தபோது தான் உணர்ந்தார் அது பனிக்காலமல்ல என்பதுடன் மலையுச்சியில் பனி இருக்கவில்லை என்று.

வீடு திரும்பிய பெண்மணி காப்புறுதியில் கேட்பனவு செய்து பார்த்தார்.

இப்படிப் பல வினோதமான காப்புறுதிக் கேட்பனவுகள் இடம் பெற்றுள்ளன. கவனமாக வாழ்ந்து முறையான காப்புறுதிகளைப் பெற்று வளமாக வாழுங்கள் என வாழ்த்தி முடிக்கிறேன்.



senthuran.p@thaiveedu.com

**தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.**
**விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

**E-mail: info@thaiveedu.com  Fax: 1-416-849-0594  Tel: 1-416-857-6406**



# ஐரோப்பிய, அமெரிக்கக் காற்பந்தாட்ட முடிவுகள்

– குரு அரவிந்தன்

**கா**ற்பந்தாட்ட ரசிகர்களுக்கு சென்ற யூன், யூலை மாதங்களில் பொழுது போக்குவதற்கு நிறையக் காற்பந்தாட்டப் போட்டிகள் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் இடம்பெற்றிருந்தன. இதில் யூரோ - 2024 இம்முறை ஐரோப்பிய நாடான ஜெர்மனியிலும், கோபாப் போட்டிகள் அமெரிக்காவிலும் நடைபெற்றன. இரண்டு பெரிய போட்டிகளின் இறுதியாட்டங்கள் யூலை 14-ம் திகதி நடைபெற்றன. இந்தக் காற்பந்தாட்டப் போட்டிகள் தாயகத்துப் பள்ளிநாட்களை மீண்டும் நினைவூட்டின. பள்ளிநாட்களில் ஒரு தடவையாவது பந்தை உதைக்காத மாணவர் இருந்திருக்க முடியாது என்றே நினைக்கின்றேன். ஆனால், இப்போது பிரபலமாகியிருக்கும் பெண்களுக்கான காற்பந்தாட்டம் அந்த நாட்களில் அறிமுகமாகவில்லை.

எந்த நாட்டில் யூரோப் போட்டியை நடத்துவது என்பதற்காக ஜெர்மனியும் துருக்கியும் போட்டி போட்டதில் 20 வாக்குகளில் 12 வாக்குகள் ஜெர்மனிக்குக் கிடைத்தது. அதனால் யூன் மாதம் 14-ஆந் திகதி தொடக்கம் யூலை மாதம் 14-ஆந் திகதி வரை இந்தப் போட்டிகள் ஜெர்மனியில் நடைபெற்றன. ஜெர்மனியின் பல பாகங்களிலுமுள்ள சுமார் 10 நகரங்களில் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. ஜெர்மனியில் நடந்த இந்தப் போட்டிக்காக ஐரோப்பாவிலிருந்து 24 நாடுகளின் திறமையான காற்பந்தாட்டக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

ஒவ்வொன்றும் நான்கு குழுக்களைக் கொண்ட ஆறு பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெற்றன. இறுதிப் போட்டிக்கு இரண்டு குழுக்கள் தெரிவாகியிருந்தன.

சிறந்த காற்பந்தாட்ட நாடான சுவீடன் 1996-ம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக இந்தப் போட்டியைத் தவறவிட்டது. 2022-ம் ஆண்டு உலகக் கிண்ணத்தையும் தவறவிட்டதால் தொடர்ச்சியாக இரண்டாவது பெரிய போட்டியையும் இம்முறை தவறவிட்டது. உக்ரைன் மீது நடந்த படையெடுப்பால் ரஷ்யா இந்தப் போட்டியில் பங்கு பெறவில்லை.

யூரோ - 2024-ல் நடந்த போட்டியிலிருந்து ஸ்பெயின், ஜெர்மனி, போர்த்துக்கல், பிரான்ஸ், நெதர்லாந்து, துருக்கி, இங்கிலாந்து, சுவிர்ச்சலாந்து ஆகிய எட்டு நாடுகளின் குழுக்கள் காலிறுதியாட்டப் போட்டிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டன. இதன்பின் நடந்த காலிறுதியாட்டத்தில் பங்குபற்றிய நாடுகளிலிருந்து பிரான்ஸ், ஸ்பெயின், இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய நான்கு நாடுகள் தெரிவாகியிருந்தன. யூலை 9-ம் திகதி நடந்த காலிறுதியாட்டத்தில் பிரான்சும் ஸ்பெயினும் மோதிக் கொண்டதில் ஸ்பெயின் 2:1 என்ற கோல் கணக்கில் அரையிறுதியாட்டத்திற்குத் தெரிவானது.

இந்த ஆட்டம் ஜெர்மனியின் மூனிச் நகரில் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் ஸ்பெயினின் 16 வயது வீரர் லாமின் யாமல் ஒரு கோலடித்து ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். ஸ்பெயின் பங்குபற்றிய 7 போட்டிகளிலும் இவர் விளையாடியிருந்தார். இதன் மூலம் உலகக் கிண்ணம், யூரோக் கிண்ணப் போட்டிகளில் இதுவரை கோல் அடித்தவர்களில் வயதிற் குறைந்தவர் என்ற சாதனையை இவர் படைத்திருந்தார். தொடக்கத்தில் மெஸ்ஸி அணிந்த பாசிலோனாச் சீருடையின் 19-ம் இலக்கம் இப்போது இவருக்குக் கிடைத்திருக்கின்றது.

10-ம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்தும் நெதர்லாந்தும் மோதிக்கொண்டன. இதில் இங்கிலாந்து 2:1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. இங்கிலாந்திற்கு ஒரு பனால்டி கிடைத்ததால் இலகுவாக வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. இதைத் தொடர்ந்து யூலை 14-ம் திகதி வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதியாட்டத்தில் இங்கிலாந்தும் ஸ்பெயினும் மோதிக் கொண்டன.

இந்த இறுதியாட்டத்தில் ஸ்பெயின் 2:1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வெற்றி கொண்டது. கடைசி நேர மோதல்கள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றன. ஸ்பெயின் நான்காவது தடவையாக இந்த வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. ஏற்கனவே 1964, 2008, 2012 ஆகிய ஆண்டுகளில் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றிருந்தது.

2020-ம் ஆண்டு இதேபோல இங்கிலாந்து இறுதியாட்டத்தில் இத்தாலியிடம் கிண்ணத்தைப் பறிகொடுத்திருந்தது. தொடர்ந்து இரண்டு தடவைகள் இறுதியாட்டத்தில் இங்கிலாந்து கிண்ணத்தைப் பறிகொடுத்திருக்கிறது. 2016-ம் ஆண்டு போர்த்துக்கலும் 2020-ம் ஆண்டு இத்தாலியும் இந்தக் கிண்ணத்



தைப் பெற்றிருந்தன. 2024 யூரோப் போட்டியிலும், கோபாப் போட்டியிலும் வெற்றிபெற்ற நாடுகளான ஸ்பெயின் மற்றும் ஆர்ஜன்ரீனாவின் அரச மொழியாக ஸ்பானிஸ் மொழி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த யூரோப் போட்டியில் முதலிடத்தை ஸ்பெயினும் இரண்டாம் இடத்தை இங்கிலாந்தும் பெற்றுக்கொண்டன. அரையிறுதிப் போட்டிக்கு இந்த நாடுகளுடன் பிரான்ஸ், நெதர்லாந்து ஆகியனவும் தெரிவாகியிருந்தன. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வீரர் மைக் மைக்னன் 'தங்கக் கையுறை' விருதைப் பெற்றுக் கொண்டார். இங்கிலாந்து அணித்தலைவர் ஹாரி கேன் மூன்று கோல்கள் அடித்ததால், யூரோ 2024 'தங்கச் சப்பாத்தை' மற்ற ஐந்து வீரர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

அதிக கோல் அடித்த அணியாக ஸ்பெயின் (15 கோல்கள்) இருந்தது. போட்டியின் சிறந்த வீரராக ரோட்ரி (ஸ்பெயின்), போட்டியின் இளம் வீரராக லாமின் யமல் (ஸ்பெயின்), அதிக மதிப்பெண் பெற்றவர்களாக கோடி கக்போ (நெதர்லாந்து), ஹாரி கேன் (இங்கிலாந்து), ஜமால் முசியாலா (ஜெர்மனி), ஜார்ஜஸ் மிகாடாட்ஸே (ஜார்ஜியா), டானி ஓல்மோ (ஸ்பெயின்), இவான் ஸிரான்ஸ் (ஸ்லோவாக்கியா) ஆகியோர் தெரிவாகினர். யூரோ 2024 விவோ ஆட்டநாயகனாக ஸ்பெயினின் நிகோ வில்லியம்ஸ் தெரிவானார்.

ஐரோப்பிய நாடுகளின் யூரோக் காற்பந்தாட்டப் போட்டிகள் ஒருபக்கம் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்க, மறுபக்கம் அமெரிக்க நாடுகளின் கோபாக் காற்பந்தாட்டம் நடைபெற்றது. இது இம்முறை அமெரிக்காவில் இடம்பெற்றது. அமெரிக்காவில் நடந்த 48-வது கோபாக் கிண்ண அரையிறுதிப் போட்டியில் 9-ம் திகதி ஆஜென்ரீனாவும் கனடாவும் மோதிக்கொண்டன. பெரிய போட்டியில் முதன் முதலாகக் காற்பந்தாட்டத்தில் பிரபலமான ஒரு நாட்டைக் கனடா எதிர் கொண்டிருந்தது. இதில் ஆஜென்ரீனா 2:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

10-ஆந் திகதி கொலம்பியாவிற்கும் உருகுவேக்கும் நடந்த போட்டியில் கொலம்பியா 1:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. அமெரிக்காவின் சார்லோட் மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியின் போது பார்வையாளர்களிடையே கலவரம் ஏற்பட்டது. வெற்றி பெற்ற கொலம்பியா நாட்டு ரசிகர்களை உருகுவே ரசிகர்கள் தாக்கிய வீடியோக் காட்சிகள் பொது ஊடகங்களில் பகிரப்பட்டன. 23 வருடங்களுக்குப் பிறகு கொலம்பியா இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தது. கடைசியாக 2001-ம் ஆண்டு கொலம்பியாவில் நடந்த போட்டியில் கொலம்பியா கிண்ணத்தைப் பெற்றிருந்தது.

இந்தக் கோபாப் போட்டிகளின் போது ஆஜன்ரீனா வீரரான லயோனல் மெஸ்ஸி கோபா அமெரிக்காப் போட்டிகளில் ஆறு கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டார். மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் கனடாவுக்கெதிராக அதிக கோலடித்த இரண்டாவது வீரர் என்ற பெயரும் இவருக்குக் கிடைத்திருக்கிறது.

மூன்றாவது இடத்திற்கான போட்டியில் கனடாவும், உருக்குவேயும் 13-ஆந் திகதி பங்குபற்றின. இரண்டு நாடுகளும் சம நிலையில் இருந்ததால், பனால்டி மூலம் முடிவெடுக்கப்பட்டது. இதில் உருக்குவே 4 கோல்களை அடித்து வெற்றிபெற்று 3-வது இடத்தைப் பெற்றுக்கொண்டது. கனடா 4-வது இடத்தைப் பெற்றுக்கொண்டது. கடைசிவரை கனடா 2:1 என்ற நிலையில் 3-வது இடத்தைப் பெறும் நிலையிலிருந்தாலும், கடைசி 5 நிமிடத்தில் கனடிய வீரர்கள் ஏனோ தானோ என்று




மிகவும் அலட்சியமாக விளையாடியதால், 3-வது இடத்தை இழந்திருந்தார்கள். ஆனாலும், இதுபோன்ற பெரிய போட்டிகளில் கானடாவின் காற்பந்தாட்ட முதல் முயற்சி இது என்பதால் கனடாவைப் பாராட்டலாம்.

கோபாக் காற்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் புளோரிடாவிலுள்ள மியாமி கார்டன் மைதானத்தில் 14-ஆந் திகதி நடைபெற்றது. இதில் கொலம்பியாவும் ஆஜன்ரீனாவும் கலந்துகொண்டன. அதிகமான ரசிகர்கள் வந்ததால், போட்டி சற்றுத் தாமதித்தே ஆரம்பமானது. இந்த இறுதிப் போட்டியில் ஆஜன்ரீனா வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

ஆஜன்ரீனா 2021-ம் ஆண்டு கோபா அமெரிக்கா வெற்றிக் கிண்ணத்தையும், 2022 உலக வெற்றிக் கிண்ணத்தையும், 2024-ம் ஆண்டு கோபா அமெரிக்கா வெற்றிக் கிண்ணத்தையும் பெரிய போட்டிகளில் தொடர்ச்சியாகப் பெற்று காற்பந்தாட்டத்தில் ஒரு சாதனையைப் படைத்திருக்கிறது. வட அமெரிக்க நாடுகளில் அமெரிக்கா 1995-ம் ஆண்டும், 2015-ம் ஆண்டும் 4-ஆவதாக வந்திருந்தது. மெக்ஸிகோ 1993-ம் ஆண்டும், 2001-ம் ஆண்டும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்ததும், கனடா இம்முறை 4-வது இடத்தைப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அதிக கோல்கள் அடித்ததற்கான 2024-ம் ஆண்டுக்கான கோபா அமெரிக்காவின் 'தங்கச் சப்பாத்தை' இம்முறை ஆஜன்ரீனா வீரர் லாடரோ மார்டினெஸ் பெற்றுக்கொண்டார். 2024-ம் ஆண்டுக்கான கோபா அமெரிக்காவின் 'தங்கக் கையுறையை' ஆஜன்ரீனா கோல்கீப்பர் எமிலியானோ மார்டினெஸ் பெற்றுக்கொண்டார். 2024 போட்டியில் கொலம்பியா இரண்டாவது இடத்தைப் பிடித்தாலும், அதன் வீரரான ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ், கோபாவின் சிறந்த வீரருக்கான 'தங்கப் பந்து' கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

காற்பந்தாட்ட ரசிகர்களுக்கு ஒரு நல்ல செய்தி என்னவென்றால், 2026-ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டி மெக்ஸிக்கோவிலும் அமெரிக்காவிலும் நடைபெற இருக்கின்றது. கனடா இச்சந்தர்ப்பத்தைப் புத்திசாலித்தனமாய் பயன்படுத்திக் கொள்ள மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. யூரோ இறுதிப் போட்டியில் 2:1 எடுத்ததும் எப்படி ஸ்பெயின் அதைத் தக்கவைப்பதற்காக கடைசி 5 நிமிடங்களும் விளையாடினார்கள் என்பதைக் கொஞ்சமாவது கனடிய வீரர்கள் தெரிந்து வைத்திருப்பது எதிர்காலத்திற்குப் பலன்தரக் கூடியது. அலட்சியங்கள் அல்ல, அனுபவங்கள் தானே வெற்றியை நிர்ணயிக்கிறது.

விளையாட்டுத்துறை ரசிகர்களுக்குப் பொழுதுபோக்க இன்னுமொரு செய்தி என்னவென்றால், கோடைகால 2024 ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் நாட்டில் யூலை 26-ஆந் திகதி ஆரம்பமாகி இருக்கின்றது. 206 நாடுகள் பங்குபற்றும் இந்தப் போட்டிகள் ஆகஸ்ட் 11-ஆந் திகதி வரை நடைபெறுகின்றது. 10,714 விளையாட்டு வீரர்கள் இதில் பங்குபற்றுகிறார்கள்.

**உசாத்துணை:**
- https://www.uefa.com/euro2024/
- https://www.cbc.ca/sports/soccer/copa-america-canada-argentina-recap-july-9-1.7258731



kuruaravindan@thaiveedu.com




### மிகக் குறைவான இரவு நேரக் கட்டணம் ULO (Ultra Low Overnight) Price Plan:

கடந்த வருடம் 2023-ம் ஆண்டு நவம்பரில் இப்புதிய திட்டம் ஒன்ராறியோ மின்சார சபையால் அறிமுகப்படுத்தப்பட்டிருக் கிறது. இப்புதிய திட்டம் பற்றி விபரமாக உற்று நோக்குதல் பொருத்தமானது.

இரவு 11 மணி முதல் காலை 7மணி வரைக்குமுள்ள காலப்ப குதிக்கு வரலாற்றில் இல்லாதவாறு குறைந்த தொகையான கட்டணம், அலகிற்கு 2.8 சதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணம் பருவகாலக் கட்டுப்பாட்டைக் கடந்து வருடம் முழுவதுக்குமான நிலையான கட்டணமாக இருக்கும்.

சாதாரணமாக உள்ள உச்சமற்ற காலப் பகுதிக்குரிய கட்டண மான 8.7 சதத்துடன் ஒப்பிடும் போது இது 3 மடங்கு குறைவா னதாக இருக்கிறது. இக்கட்டணத்தைப் பார்த்து பலரும் அங் கலாய்க்கலாம். ஆனால் இதனைத் தெரிவு செய்து விட்டால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளது என்பதையும் கவனிக்க வேண்டி உள்ளது.




அதாவது இத்திட்டம் ‘TOU’ நடைமுறையுடன் இணைந்த ஒரு திட்டமாகும். ULO திட்டத்துடன் இணைந்து கொண்டால் இரவு 11 மணி முதல் காலை 7 மணி வரை மிகக் குறைவான கட்ட ணம் அறவிடப்படும். அதேவேளை TOU திட்டத்தில் உள்ள உச்ச காலப் பாவனைக் காலத்திற்குரிய கட்டணம் அலகிற்கு 18.2 சதத்திலிருந்து 28.6 சதமாக உயர்த்தப்படும். உச்ச காலப் பாவனைக்குரிய காலமும் மாற்றப்பட்டுள்ளது. ஆனால் TOU திட்டத்தில் உள்ளது போல நடுத்தர காலப்பகுதிக்கான கட்டணத்தில் எந்தவித மாற்றமும் இருக்காது. இந்த ULO திட் டம் எல்லோருக்கும் நன்மை தரக்கூடியதா? என்ற கேள்வி எழுகிறது. ஒவ்வொருவருடைய வாழ்க்கை முறையும் வேறுபா டான அம்சங்களைக் கொண்டவை. சாதாரணமாக பகலில் வேலைக்குப் போய்வருபவர்கள்தான் வீட்டில் வசிப்பவர்க ளாக இருந்தால், பகல் நேரத்தில் வீட்டில் மின்சாரப் பாவ னைக்கான செயற்பாடுகள் எதுவும் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் தொற்று நோய் காலத்திற்குப் பிறகு பலரது வாழ்க்கை முறையிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வீட்டில் இருந்து வேலை செய்யும் கலாச்சாரம் பெருகிவரும் இக்காலகட்டத்தில் பகலில் பூட்டி இருக்கும் வீடுகளின் எண் ணிக்கை குறைந்து வருகின்றது. அத்துடன் வீட்டில் முதியவர் கள் இருக்கும் பட்சத்தில் அவர்களது சமையல் சம்பந்தப் பட்ட செயற்பாடுகளை உச்ச காலப் பாவனைக் காலத்தில் தவிர்க்கும்படி கூறுவது கடினம். கோடைகாலத்தில் குளிரூட்டி யின் செயற்பாடு நாள் முழுவதும் தேவைப்படக்கூடிய சூழ்நி லையும் இருக்கலாம்.

மறுபுறம் மின்சாரத்தில் இயங்கும் கார்களைப் பயன்படுத்தும் கலாச்சாரமும் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கிறது. அது பற் றியும் சிறிது ஆழமாக நோக்குதல் பொருத்தமானது.

### மின்சாரத்தில் இயங்கும் கார்கள் (Electric Cars):

மின்சாரத்தில் இயங்கும் கார்கள் எரிபொருட் செலவு இல்லா மல் ஓடுவது போல் இருந்தாலும் அவற்றிற்குரிய மின்சாரத் திற்கான செலவும் இருப்பதை மறந்து விடக் கூடாது. அவற் றின் பாவனையைப் பொறுத்து 2-3 நாட்களுக்கு ஒரு முறையா வது வீட்டில் சார்ஜ் பண்ண வேண்டிய தேவை இருக்கின்றது.

உதாரணமாக ஒரு Tesla காரை எடுத்துக் கொண்டால் அதனை ஒரு தடவை முழுமையாக சார்ஜ் செய்ய 53 KWH தேவைப்படும். பொதுவாக இரவு நேரத்தில் 7மணிக்குப் பின் னர் சார்ஜ் செய்யும் போது தற்போதைய நிலையில் அதற்கு ரிய செலவு $4.61 சதமாக இருக்கும். மாதத்தில் 12 தடவை சார்ஜ் பண்ணுவதாக எடுத்துக்கொண்டால் அதற்குரிய மாதாந்தச் செலவு $55.33 டொலர்களுக்கு மேலாக இருக்கும். இதுமட்டுமல்ல மாதாந்த மின்சாரச் செலவு என்பது, நாங்கள் நுகரும் மின்சார அலகிற்கான செலவு மட்டுமல்ல. அதற்கு மேலாக மின்சார விநியோகச் செலவு, நிர்வாகச் செலவு, வரி என்பனவும் மேலதிகக் கட்டணமாகச் செலுத்த வேண்டி இருக்கும். மாநகர எல்லைகளைப் பொறுத்து இச்செலவு மாறுபடும். பொதுவாகக் கூறுவதானால் பாவிக்கப்படும் அல கிற்கான செலவுடன் 82%-ஐ மேலதிகச் செலவாகச் செலுத்த வேண்டியிருக்கும். எனவே மாதாந்தம் ஒரு Tesla-வை சார்ஜ் செய்ய சராசரி $101 டொலர்கள் வரை தேவைப்படலாம்.

ஆனால் ULO திட்டத்தில் இணைந்து கொண்டால் ஒரு தடவை சார்ஜ் பண்ண $1.48 சதங்களும் மாதத்திற்கு $17.81

சதங்களும் மட்டுமே தேவைப்படும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள இதர செலவுகளுடன் சேர்த்துப் பார்த்தால் மொத்த மாதாந்தச் செலவு $32 டொலர்களாக இருக்கும். எனவே ஒப்பீட்டு ரீதியில் பார்த்தால் இத்திட்டத்தில் இணைந்து கொள்வதால் கார் சார்ஜ் பண்ணுவதில் மட்டும் மாதாந்தம் $70 டொலர்களைச் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. பலரது குழப்பங்களையும் ஓரளவு தீர்க்கும் வகையில் ஒப்பீட்டு ரீதியில் கீழ் தரப்பட்டுள்ள பட்டியலை உற்று நோக்குங்கள். சரியான முடிவினை எடுக்க இது உதவியாக இருக்கும்.

**Car Charging at home**

**TOU VS ULO**

**Example: Tesla - 53KWH -Monthly 12 times charging**

| Period | Price 23/24 - KWH | Per Charge | Monthly 12 Charge | Delivery+Admin+HST | Total Monthly Cost |
|---|---|---|---|---|---|
| **TOU - Time of Use** | | | | | |
| Off- Peak | 8.7 | 4.61 | 55.33 | 45.37 | 100.70 |
| Mid Peak | 12.2 | 6.47 | 77.59 | 63.63 | 141.22 |
| Peak | 18.2 | 9.65 | 115.75 | 94.92 | 210.67 |
| **ULO - Ulta-Low Overnight- All Year** | | | | | |
| Off- Peak 7am-11pm | 8.7 | 4.61 | 55.33 | 45.37 | 100.70 |
| Mid- Peak 7am-4pm, 9-11pm | 12.2 | 6.47 | 77.59 | 63.63 | 141.22 |
| Peak 4pm-9pm | 28.6 | 15.16 | 181.90 | 149.15 | 331.05 |
| ULO 11pm-7am | 2.8 | 1.48 | 17.81 | 14.60 | 32.41 |

ULO திட்டத்தில் இணைந்த பின் கிரமமாக இரவு 11 மணிக்குப் பின்னர் கார்களை சார்ஜ் பண்ணினால் மட்டுமே கணிசமான சேமிப்பிற்கு வாய்ப்பு உள்ளது. அதே வேளை அத்திட்டத்தில் இணைந்தபின் இரவு 11 மணிக்குப்பின்னர் என்பதைக் கவனத்தில் எடுக்காது உச்சகாலப்பகுதியை பயன்படுத்தினால் வழமையை விட 3 மடங்கு அதிகமான செலவினை எதிர் கொள்ளவேண்டியிருக்கும். இது எப்படி என்றால் ‘பாம்புக்குப் பயந்து பாழ்ங்கிணற்றில் விழுந்த கதை’ போலத்தான் முடியும்.

கார்களை சார்ஜ் பண்ணும் போது Small Apps-ஐ பாவித்து இரவு 11 மணிக்குப் பின்னர் மட்டுமே தானாக சார்ஜ் செய்யும் தொழில் நுட்பத்தை உபயோகப்படுத்தினால் நிச்சயம் அதிக சேமிப்பை எதிர்பார்க்கலாம். ஆனால் எத்தனைபேர் இவற்றையெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மின்சாரப் பாவனையில் உச்ச பயன்பாட்டையும் உச்ச சேமிப்பையும் பெறவேண்டுமானால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன? பதில் மிக இலகுவானது. உங்களது கடந்தமாத மின்சாரக்கட்டண Bill-ஐ எடுத்து சற்று ஆழமாக நோக்கினால் எந்த எந்த காலப்பகுதியில் எந்த அளவு மின்சாரம் நுகரப்பட்டிருக்கிறது என்பதை அவதானிக்கமுடியும்.




சாதாரண நுகர்வோரும் மிக இலகுவாக விளங்கிக் கொள்ளும் விதத்தில் விளக்கப் படங்கள் (Chart) உள்ளிட்ட மாதாந்த Bill -கள் நடை முறையில் உள்ளன. ஒரு சில நிமிடங்களைச் செலவழித்து உங்களுக்கும் உங்கள் வாழ்க்கை முறைக்கும் ஏற்ற திட்டத்தைச் தெரிவு செய்தால் பல வருடங்களுக்கு அதன் அனுகூலங்களை அனுபவிக்க முடியும்.

உங்கள் வாழ்க்கை முறைக்கு ஏற்ற திட்டத்தைத் தேர்வு செய்து செலவைக் குறைப்பதா? அல்லது குறைந்த செலவுக்குரிய திட்டத்தை தெரிவு செய்து அதற்கேற்ப உங்கள் வாழ்க்கை முறையை மாற்றி அதன்மூலம் செலவைக் குறைப்பதா? என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். இரண்டு வழிகளிலும் நன்மைகள் உள்ளன. உங்கள் தெரிவைப் பொறுத்து சேமிப்பின் அளவு கூடிக்குறையும். அவ்வளவுதான்.

ஒன்றாறியோ மின்சார சபை (OEB) நிர்ணயிக்கும் விலைக்கு அமைய ஒவ்வொரு மாநகர ஆட்சிக்குமுரிய மின்சார விநியோகம் என்பது Hydro one, Tronto Hydro, Elexicon போன்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. நீங்கள் உங்களுக்குப் பொருத்தமான திட்டத்தில் இணைய விரும்பினால் உரிய நிறுவனங்களை அழைத்து அல்லது Online மூலம் விண்ணப்பிக்கலாம். நீங்கள் கேட்டுக் கொண்டால் மட்டுமே புதிய திட்டம் அமுலுக்கு வரும். அல்லது ‘TOU’ என்ற திட்டம் இயல்பாகவே (Default) அமுலில் இருக்கும். நீங்கள் விண்ணப்பித்த நாளில் இருந்து 10 நாட்களுக்குள் புதிய திட்டம் அமுலுக்கு வரும் என்று சொல்லப்படுகிறது. இதனுடைய சிறப்பம்சம் என்னவென்றால் உங்களுக்குப் பிடிக்காவிட்டால் எந்த நேரத்திலும் குறிப்பிட்ட நிறுவனங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் உங்களுக்குப் பிடித்த திட்டத்திற்கு மீளவும் மாறமுடியும். எந்த வித ஒப்பந்த கட்டுப்பாடும் கிடையாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

சிந்தியுங்கள்! செயற்படுங்கள்! சேமியுங்கள்!

நன்றி.



velasubramaniam@thaiveedu.com




நீங்கள் அறுபது வயதினராயும் ஓரளவு ஆரோக்கியம் உடையவராயும் இருப்பின், முயற்சி செய்தால் நூறாண்டு காலம் வாழலாம். அமெரிக்காவின் மக்கள் தொகையில் 50% ஆனவர்கள் 83 வயதைத் தாண்டி வாழ்வார்கள் எனவும் 20% ஆனவர்கள் தொண்ணூறு வயதைத் தாண்டுவார்கள் எனவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கிறது.

இந்தப் புள்ளி விபரங்கள் இன்னும் சிறக்கும் என்பதற்கு விஞ்ஞானம் உறுதுணையாய் உள்ளது. உங்கள் முயற்சி தான் மிக அவசியம். இங்கு நான் சில வழிமுறைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

- உங்கள் ஆரோக்கியத்தைக் கிரமமாகப் பரிசோதிக்கத் தவறாதீர்கள். அதாவது எனக்கு ஒரு வருத்தமுமில்லை என்று இருந்து விடல் அறியாமையாகும். இரத்த அழுத்தம், நீரிழிவு, இதயத் துடிப்பு, உடம்பிலுள்ள வைட்டமின்களின் அளவு விகிதம் எனப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

  ஒன்பது ஆண்களில் ஒருவருக்குப் புரோஸ்டேட் புற்றுநோய் (Prostate cancer) வருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். ஆனால், அவர்கள் ஆரம்ப நிலையில் அதை அவதானித்தால் நோயிலிருந்து சுகமடைவது 100% ஆகும். ஆனால் நான்காவது படிமத்திற்குச் சென்று விட்டால் 31% தான் நோயிலிருந்து சுகமடைய முடிகின்றது. எனவே வருடாந்தம் புரோஸ்டேட் கன்சர் உண்டா என ஆண்கள் அவதானிப்பது உகந்ததல்லவா? அதேவேளை 40 வயதிற்குக் கூடிய பெண்கள் அனைவரும் வருடாவருடம் மார்புப் புற்றுநோய்க்கான பரிசோதனை ஆகிய மமோகிராம் செய்வதுடன், அல்ட்ரா சவுன்ட் (Ultrasound) போன்ற பரிசோதனைகளுடன், கருப்பைப் புற்றுநோய் ஆகியவற்றிற்கும் பரிசோதனைகளைச் செய்யத் தவறாதீர்கள்.

  இதற்கும் மேலாக உங்கள் குடும்ப வைத்தியருடன் கதைத்து மேலதிகமாக ஏதேனும் செய்ய வேண்டுமா என்று அறிந்து அவற்றைப் பின்பற்றத் தவறாதீர்கள்.

- கூடாத பழக்கங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள். புகைத்தல் ஒரு மிகக்கொடிய பழக்கமாகும். சுவாசப் புற்று நோயால் ஏற்படும் மரணங்களுக்கு 90% காரணம் புகைத்தல் பழக்கம் தான். இது தவிர்த்து சுவாசப்பை சம்பந்தமான நோய்களில் 80% விகிதமானவை புகைத்தலால் ஏற்பட்டவையாகும். மேலும் மாரடைப்பு, பாரிசவாதம் போன்றவற்றிற்கு அச்சாணியாக இருப்பது புகைத்தல் பழக்கமே. புள்ளி விபரப்படி பத்து வருடங்கள் போல் ஒருவரின் ஆயுள் குறைவதற்குப் புகைத்தல் தான் காரணமாகின்றது. எனவே புகைத்தலைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

- மதுவருந்தல் பழக்கம் மிகக் கொடுமையானது. இது பற்றிக் குறிப்பிடுகையில் திருவள்ளுவர் தனது 926-வது குறளில் குடிப்பவர்கள் நஞ்சுண்டு இறப்பவருக்கு ஒப்பானவர் என்கிறார். அண்மைக்கால விஞ்ஞான அறிவின்படி சிறியளவில் சிவப்பு வைன் பயன்தரும் எனினும், மற்றைய அனைத்துக் குடிவகைகளும் உங்கள் ஆயுளைக் குறைப்பதுடன் உங்கள் ‘குடி’யையும் கெடுக்கும். பல ஆரோக்கியக் குறைபாடுகளுடன் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் ஆகியவற்றுக்கும் அத்திவாரம் அமைப்பது மது.

- சீனி மிகையாக உட்கொள்வது உங்கள் ஆரோக்கியத்திற்குச் சாவு மணியாகும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தம் மட்டுமல்ல அனைத்தும் கொடியதாகும். இனிப்பு வேண்டுமானால் தேனைச் சேர்த்துக்கொள்ளுங்கள். இனிமையான பழவகைகளை உண்ணுங்கள். ஆனால், சீனி சேர்த்த உணவுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

- ‘மடத்தனமான’ செயல்களில் ஈடுபடாதீர்கள். ‘தவறாக நஞ்சை உண்டு’ இறப்பவர்கள் தொகையே, விபத்து மரணங்களில் மிக அதிகமாய் இடம்பெறுகிறது. அதாவது, வைத்தியத்திற்காக வழங்கப்படும் மருந்துகளே தவறாக பெரும் விழுக்காட்டிற்கு அருந்தப்பட்டுள்ளது. மருந்துப்

புட்டிகளில் தரப்படும் விளக்கங்களைக் கவனமாக அவதானித்துச் செயற்படுங்கள்.

- அடுத்தபடியாக விபத்து மரணங்களில் மிக அதிகமாய் இடம்பெறுவது வாகன விபத்து மரணமாகும். அமெரிக்காவில் மட்டும் வருடமொன்றிற்கு வாகன விபதில் 40,000-இற்கு மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. அதிலும் பெரும்பாலானவை கவனக்குறைவாலும் சுற்றாடல் மாற்றங்களாலும் ஏற்படுகிறது. வாகனத்தைச் செலுத்து கையில் தொலைபேசி கதைப்பதும் குறுஞ்செய்தி அனுப்புவதும் சர்வ சாதாரணமாகிவிட்டது. எது செய்கிறீர்களோ அதில் கவனமாய் இருந்தால் இம்மரணங்களைத் தவிர்க்கலாம்.

- அளவாக உண்பதுடன் வேளைக்கு உண்ணுங்கள் எனப் பொதுவாக ஒரு வழக்கு உண்டு. அதாவது காலையில் அரசரைப்போல் உண்ணுங்கள் மதியத்தில் அளவாக உண்ணுங்கள் மாலையில் ஏழையைப் போல் உண்ணுங்கள் என்றும், மாலை உணவை வேளைக்கு உண்டு, நீங்கள் துயிலுமுன் உணவு செமிப்பதற்குப் போதிய நேரத்தை வழங்குங்கள். ஒரு நேரம் சாப்பிடுபவரை யோகி என்பார்கள். இரண்டு நேரம் சாப்பிடுபவரைப் போகி என்பார்கள். எனவே, மூன்று நேரம் சாப்பிடுபவரை துரோகி என்றிடுவோம். இயன்றளவு காலையிலேயே கூடிய கலோரியை உடைய உணவுகளை உட்கொண்டால் அதற்குச் செமிப்பதற்குப் போதிய நேரம் தரப்படும். இரவு வெகுநேரம் அரட்டையடித்துச் சாமக்கோழி கூவும் வேளையில் சாப்பிடுபவர்களுக்கு சலரோகம் மட்டுமல்ல சாவும் விரைந்து வரும் என்பது நிச்சயம்.

- உணவு உங்களுக்குச் சிறந்த மருந்தாக அமையட்டும். திருவள்ளுவர் தனது 942-வது குறளில்,

***'மருந்தென வேண்டாவாம் யாக்கையும்***
***அருந்தியது அற்றது போற்றியது'***

முன் உண்ட உணவு செரித்த தன்மையை ஆராய்ந்து போற்றிய பிறகு தக்க அளவு உணவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை

- கடைகளில் முன்கூட்டியே தயாரித்து வைக்கப்பட்ட உணவைத் தவிர்த்துக் கொள்ளுதல் சிறப்பாகும். அவற்றில், கொழுப்பும் உவர்ப்பும் இனிப்பும் மிகையாகவே சேர்த்திருப்பார்கள்.
- நீங்கள் மாமிசத்தைத் தவிர்ப்பது நலம். அதிலும் சிகப்பு இறைச்சியைப் பெரிதும் தவிர்ப்பது நலம்.
- உங்கள் உணவுகளை ஆரோக்கியமானதா எனத் தெரிந்து கொள்ளுங்கள். பெரும்பாலும் இதையுண்டால் இத்தகைய பயன் வரும் எனக் கூறியதை நம்பிச் சாப்பிடுவது அறியாமையாகும். 'எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' எனவே நீங்கள் விளம்பரங்களைப் பார்த்து ஏமாறாமல் கவனமாக இருங்கள்.
- தேகப்பியாசம் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் உங்கள் ஆரோக்கியமான நெடிய வாழ்விற்கு இன்றைய விஞ்ஞான வளர்ச்சியினால் பல நன்மைகள் உண்டு. ஆனால், இருந்த இடத்தில் தொழில் செய்கிறார்கள். மனிதர் பாவிக்காத அவையம் பாதிப்படையும். இதனால் தான் 'பாவிக்காதவைகள் பறிக்கப்படும்' என்ற மகா வாக்கியம் தோன்றியுள்ளது. தினமும் அரை மணி நேரம் கைவீசி நடப்பது ஒரு சிறப்பான உடற் பயிற்சியாகும்.
- எவ்வளவுக்கு எவ்வளவு தேகப்பியாசம் அவசியமோ அதேயளவு தேக ஓய்வும் அவசியமாகும். இயன்றவரைக்கும் நாள் ஒன்றிற்கு எட்டு மணித்தியாலம் படுப்பதவசியம். பல ஆய்வுகளின்படி ஓய்வின்மையால் வாழ் நாள் சுருங்கிவிடும் என்பதே உண்மை. நெடிய வாழ்விற்குப் போதிய துயில் அவசியம். மேலும், படுக்கையறையை அதற்கு மட்டுமே பாவியுங்கள். கணினி பாவிப்பதற்கும், தொலைக்காட்சியை இரசிப்பதற்கும் அல்ல. இவை உங்களை அறியாமலே நீங்கள் துயிலும் நேரங்களைக் கவர்ந்துவிடும்.
- மனதைக் கட்டுப்படுத்துவதால் வாழ்வை நீடிக்கலாம். எதிர்காலம் பற்றிய எண்ணங்கள் அச்சத்தைத் தருவதுடன் ஆயுளையும் குறைக்கும். அதேபோல் கடந்த காலம் நல்ல நினைவுகளைத் தருவதுடன், கடந்து விட்டதே என்ற கவலையுடன் ஆயுளைக் குறைக்கச் செய்யும். நிகழ்காலம் ஒன்று மட்டுமே மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தந்து ஆயுளை நீடிக்கச் செய்யும். நிகழ்காலத்தை மகிழ்ச்சியுடன் இரசித்து, வாழ்வு நீடிக்க வழி செய்யுங்கள்.

இறுதியாக நான் இங்கு குறிப்பிடுவது, யப்பானில் ஒக்கினாவாவில் வதியும் முதியோர் பின்பற்றும் 'இக்கிகாய்' வாழ்வு முறையாகும். இப்பிரதேசத்தில் பெண்களின் ஆயுள் காலம் சராசரியாக 90 வருடங்களும் ஆண்களின் ஆயுள் காலம் சராசரியாக 84 வருடங்களுமாகும். யப்பானிய மொழியில் 'இக்கி' என்றால் வாழும் விதம் எனவும் 'காய்' என்றால் காரணம் அல்லது இலக்கு எனவும் பொருள்படும். எனவே 'இக்கிகாய்' என்றால் 'வாழ்க்கையில் இலக்கு' அல்லது வாழ்வின் குறிக்கோள் எனலாம்.

வயது கூடும் வேளையில் செய்ய வேண்டுமென எண்ணியவை யாவும் பூர்த்தியடைந்த நிலையில், வாழ்வதற்கு ஓர் இலக்கு அல்லது காரணம் இல்லாது போகும். இந்நிலையில் வாழ்க்கை முடிவடைவது இயல்பு தானே! எனவே புது முயற்சிகளில், பொழுது போக்குகள் (hobby) எனப்படும் விருப்பச் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள். அது எதுவாக இருப்பினும் பரவாயில்லை. அது இசையாய் இருக்கலாம், ஓவியமாய் இருக்கலாம், இலக்கியமாயும் இருக்கலாம். இத்தகைய ஈடுபாட்டால் சிறப்பாக நெடுநாள் வாழலாம்.

வாழ்க வழமுடன் என்று விடை பெறுகிறேன்.



kumar.punithavel@thaiveedu.com



# உண்ணமுடியுமா?

## வேதநாயகம் தபேந்திரன்

யாழ்ப்பாணத்தின் தோட்டப் பிரதேசங்களூடாகச் செல்லும் போது தோட்டங்களின் அழகை இரசித்துச் செல்வேன். அதுபோல தான் நாடெங்கும் பெருந்தெருக்களின் அருகில் வளம் நிறைந்த பயிர்களை ஒரு காலத்தில் காண முடிந்தது.

இப்போதெல்லாம் அந்த அழகைப் பெருமளவுக்கு இரசித்துச் செல்ல முடிவதில்லை. அவை பெருமளவுக்கு வீடுகளாலும், கடைத் தொகுதிகளாலும், தொழிற்சாலைக் கட்டடங்களாலும் நிறைந்து காணப்படுகின்றன.

வயல் காணிகளில் கட்டடங்கள் கட்ட இலங்கையின் உள்ளூராட்சிச் சட்டப்படி தடை. காசை எறிந்தால் சட்டங்களை வளைக்கலாமென்பது இலங்கையில் யாவருக்கும் தெரிந்த இரகசியம். எமது நாட்டின் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கென அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை எனும் அமைப்பும் வளம் நிறைந்த காணிகளில் கட்டடங்கள் கட்டுவதைத் தடுப்பதாகக் காணவில்லை.

தொழிற்சாலைகள் அமைக்கும் போது அவற்றின் அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பில் கட்டணம் வாங்கி அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் ஒரு அமைப்பாகவே பெருமளவில் செயற்படுகின்றது.

வயல் காணிச் சட்டங்களே இப்படியிருக்கத் தோட்டக் காணிகள் குறித்து ஒரு சட்டமுமேயில்லை. வளமான நிலங்கள் எப்படிக் கட்டடக் காடுகளாக மாறும். அதுதான் இங்கு நடக்கின்றது.

காசு... காசு... காசு... எல்லாவற்றுக்குமே காசு தான். காணிகளில் பயிரிட்டு அதனால் நட்டம். ஆகவே காணிகளை விற்கிறோம் என்கின்றனர்.

***'எள்ளு விதைத்தேன் விற்கவில்லை***
***நெல்லு விதைத்தேன் விற்கவில்லை***
***கொள்ளு விதைத்தேன் விற்கவில்லை - ஆனால்***
***கல்லு நட்டேன் விற்று விட்டது'***

என எங்கோ வாசித்த ஒரு கவிதை, விவசாயத்தினதும் காணி விற்பனையினதும் சமகால நிலையைக் காட்டுகிறது.

கட்டடக் காடுகளால் காசு உழைக்கலாம். ஆனால் உண்பதற்கு உணவு வேண்டும். காசை யாருமே சாப்பிட முடியாது. அது விலையுயர்ந்த வெறும் பேப்பர் மட்டுமே. தொழில் தெரிந்துகொண்டு முதல் போட வேண்டும். ஆனால், இங்கு பலர் முதல் போட்டுவிட்டுத் தொழில் பழகுகின்றனர். அதனால் தொழிலிருந்து காணாமல் போகின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் அதிக பணம் வைத்திருக்கும் எம்மவர் பலர் தம்மிடமுள்ள கறுப்புக் காசை வெள்ளைக் காசாக மாற்ற இங்கு தொழில் தொடங்குகின்றனர். சிசிரிவிக் கமெரா





வும் ஒன்லைன் பில் சிஸ்ரமும் இருந்தால் போதும் வெளிநாடுகளில் இருந்தவாறே கடை நடத்தலாமென நினைக்கின்றனர்.

ஆனால் இங்கு நெருப்புக்குள்ளால் பெற்றோலையே கொண்டு செல்லும் விண்ணாதி விண்ணர்களெல்லாம் உள்ளனர். இந்த சிஸ்ரங்களையெல்லாம் தாண்டி, அவர்களைச் சுற்றிக் கொழுத்துப் போனவர்களெல்லாம் உண்டு.

வெளிநாடுகளில் அதிக பணம் வைத்திருப்போருக்குக் காணி வாங்குவது, கடைகள் கட்டுவது முதலீடு. அதேபோல வெளிநாடுகளுக்குப் போக விரும்புபவர்கள் உள்நாட்டில் தொழில் செய்து வாழுங்களென வெளிநாடுகளிலிருந்து ஒரு பகுதி உறவுகளுக்குக் காசை அனுப்புகின்றனர். இந்தச் சுற்றோட்டமே புதிய கடைத் தொகுதிகளையும், புதிதாக கடை, தொளிற்சாலை தொடங்குவோரையும் உருவாக்குகின்றது. சுப்பர் மார்க்கெற் எனப்படும் பல்பொருள் அங்காடிகள் நிறையவே தொடங்கப்படுகின்றன. தொடங்கிய வேகத்தில் பல மூடப்படுகின்றன. அதே வேளையில் உள்நாட்டு இருப்புச் சொப்பை வைத்துத் தொழில் தொடங்கிய பலர் நட்டப்பட்டு, கடன் வாழ்க்கையை அழுத்தும் போது துன்பப்படுகின்றனர். சிலர் தற்கொலைக்கும் போகின்றனர்.

தொழில் முயற்சிகள் தோற்றுப்போய் கடைகள் பூட்டப்பட, அவை வெறும் கட்டடங்களாகப் பூட்டப்பட்ட நிலையில் உள்ளன. ஆனாலும் அருகிலுள்ள வேறு தோட்ட வயல் காணிகளில் கட்டடங்கள் புதிதாக முளைக்கின்றன. முளைத்த வேகத்தில் பல மூடப்படுகின்றன.

1980-களின் முற்பகுதியில் வளர்ந்த நாடுகளை நோக்கிப் புலம்பெயர்ந்த பல ஆயிரம் பேர், இன்று 65 வயதை அடைந்து விட்டார்கள். அவர்கள் வசிக்கும் நாடுகளின் சட்டப்படி ஊழியர் சேமலாப நிதியத்தை எடுக்கலாம். குறிப்பாகச் சுவிற்சலாந்து நாட்டில் முழுத்தொகையையும் எடுத்துக் கொண்டு இலங்கைத் தாயகத்தை நோக்கித் திரும்புகின்றனர்.

வெளிநாடுகளில் பல வழிகளிலும் உழைத்து வளமாக வாழ்வோர் தமது கையிருப்புக் காசைத் தாயகத்திலுள்ள தமக்கு நம்பிக்கையானோர் எனக் கருதுவோரின் பொறுப்பில் முதலிட விரும்புகின்றனர். கையிலுள்ள காசை வைத்துக் கொண்டு போட்டி போட்டுக்கொண்டு காணிகள் வாங்குகின்றனர். இதனால் சில இலட்சங்களில் போன காணிகள் இப்போ சில கோடிகளைத் தாண்டுகின்றன.

காணிகளாகக் கட்டடங்களாகப் பெரும் மூலதனம் முடங்குகின்றது. கட்டடப் பொருள்கள் முடங்குகின்றது. அரச வீட்டுத் திட்டம் கிடைத்த ஏழைகள் மணல் கிடைக்காமல் அலைகின்றனர். பணம் படைத்த பெரும்பாலும் வெளிநாட்டுத் தமிழர்கள் பின் கதவால் மணலைப் பெறுகின்றனர். ஆனால், பூட்டப்பட்ட கட்டடங்களுக்குள் அவை முடங்குகின்றன.

ஒரு காலத்தில் வயற் செய்கை நட்டம், தோட்டச் செய்கை நட்டமென யாவரும் கைவிட, வெளிநாட்டு இறக்குமதி மூலமாக உண்ணும் சமூகமாக மாறப் போகின்றோம். அரசாங்கத்தில் பதவிக்கு வரும் அரசியல்வாதிகளுக்கும் அதுதான் விருப்பம். இறக்குமதி லைசென்சை வழங்கித் தரகு பெறலாம். முதலாளிகளைக் கொண்டு தேர்தல்களுக்குச் செலவழிக்கலாம். பணம் உழைக்கும் ஆசையில் வளம் கொழிக்கும் நிலங்களெல்லாமே கட்டடக் காடுகளாக மாறுகின்றன. வளர்ந்த நாடுகளில் உற்பத்தித் திறன் வாய்ந்த நிலங்களில் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கமாட்டார்கள்.

நிலவளமற்ற நிலங்களில் தான் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்குவார்கள். எமது நாட்டில் இது தொடர்பாகச் சட்டங்கள் உண்டு. ஆனால் நடைமுறையில் வெளிப்படையாகவோ ஏதோ ஒரு வழியிலோ சட்டங்கள் மீறப்பட்டு யாவுமே நடைபெறுகின்றன.

இயற்கை வளம் நிறைந்த எம் தாய்த் திருநாடு எல்லாவற்றுக்குமே இறக்குமதியில் தங்கியிருக்கும் நாடாக மாறப் போவது காலத்தின் கொடுமை அல்லவா? பணம் பணமென ஓடியோடிப் பணத்தைச் சேர்க்க முடியும். ஆனால் பணத் தாள்களை உண்ண முடியுமா?



thabendran.v@thaiveedu.com




ராமாயணம் என்ற இதிகாசம் கற்பனைக் கதையா, உண்மையில் நடந்த வரலாறா என்ற சர்ச்சைகள் ஒரு புறம் இருக்க, ராமாயணத்தின் பல சம்பவங்கள் நிகழ்ந்ததாக சில இடங்களை குறிப்பிடுவார்கள். தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்கள் ராமாயணத்துடன் தொடர்பு கொண்ட இடங்களாக சொல்லப்படுகின்றன. திரிசரங்கோப்பு, சீதப்பால், பூதப்பாண்டியிலுள்ள தாடகை மலை, ஜடாயுபுரம், மகேந்திரகிரி, மருத்துவாழ் மலை என்று சொல்லிக்கொண்டே போகலாம். ஒவ்வொரு இடத்துக்கும் ஒரு கதை உண்டு. இது போக ராமநாதபுரம், ராமேஸ்வரம் ஊர்களை சுற்றி பல இடங்கள் இதிகாசத்தோடு தொடர்புபடுத்தி சொல்லப்படுகின்றன. விபீஷணன் வந்து இறங்கிய இடம், ராமன் சிவலிங்கத்தை வழிபட்ட இடம் என்று பல கர்ண பரம்பரைக் கதைகள் உண்டு. இங்கேயே இவ்வளவு என்றால் ராமாயணத்தின் முக்கிய சம்பவங்கள் நடந்த இலங்கையில் எவ்வளவு இடங்கள் இருக்கும்... இலங்கையில் தங்கள் 5-ம் ஆண்டு திருமண நாளை கொண்டாட செல்லும் ஒரு தம்பதியினருக்கு, ‘பாரடைஸ்’ திரைப்படத்தில் அவர்களுடைய வழிகாட்டி ஆண்ட்ரூ, ஒவ்வொரு இடத்துக்கும் ஒரு இராமாயண சம்பவத்தை சொல்கிறார்.

‘பாரடைஸ்’, இலங்கையின் பிரபல இயக்குநர் பிரசன்ன விதனகே இயக்கிய திரைப்படம். ஒரு திரைப்பட இயக்குநராகவும், ஒரு திரைப்பட ஆசிரியராகவும் பெயர் பெற்றவர் பிரசன்னா. தன்னுடைய பிரத்தியோகக் கதை சொல்லும் பாணிக்காக பல உலகளாவிய விருதுகளை பெற்றவர். இலங்கையின் தணிக்கை சட்டங்களுக்கெதிரான போர்களில் ஈடுபட்டவர். மனித உரிமைப் போராளியும் கூட. இவரைப் பற்றி கேள்விப்பட்டிருந்தாலும் இவரது திரைப்படங்களை பார்க்கும் வாய்ப்பு எனக்கு கிட்டியதில்லை. பாரடைஸ் தான் எனக்கு முதல் திரைப்படம். இது சிங்களப் படமா, தமிழ்ப் படமா, மலையாளப் படமா என்பதில் குழப்பங்கள் இருந்தாலும் தணிக்கை சான்றிதழ் மலையாளம் என்றே கூறுகிறது! படத்தின் முக்கிய கதாபாத்திரங்களான அம்ரிதாவும் கேஷவும் மலையாளிகள். தங்களுக்குள் மலையாளத்திலும், பிறரிடம் ஆங்கிலத்திலும் பேசுபவர்கள். அவர்கள் வாழ்வது கேரளத்தில் அல்ல, வட இந்தியாவில் என்று அறிந்து கொள்கிறோம். கேஷவ் தன் தொழில் நிமித்த நண்பர்களுடன் ஹிந்தியில் சரளமாக உரையாடுபவன். இவர்கள் இலங்கைக்கு வந்த வேளை, வரலாறு காணாத பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக நடைபெறும் போராட்டங்களுக்கு இடையில் ஒரு பதற்றச் சூழலில் மாட்டிக் கொள்கிறார்கள்.

இந்த படம் ஏனோ எனக்கு அபர்ணா சென் இயக்கிய ‘மிஸ்டர் அண்ட் மிஸ்ஸிஸ் ஐயர்’ திரைப்படத்தை நினைவுபடுத்தியது. அதிலும் ஒரு தமிழ்த் தம்பதிகள், தங்கள் பயணத்தின் போது வேற்று மொழிப் பிராந்தியத்தில் பின்னணியில் நடைபெறும் ஒரு மதக் கலவர சூழலில் சிக்கிக்கொண்டிருப்பார்கள். இங்கு சிறிது மாற்றம். தம்பதிகள் இருவரும் ஒரு பெரிய காரில் பயணம் செய்துகொண்டு இராமாயண சின்னங்கள் விரவிக்கிடக்கும் பகுதியில் பயணித்துக்கொண்டிருக்கிறார்கள். ஓர் அருமையான நடுத்தர வயது வழிகாட்டியான ஆண்ட்ரூ அவர்களுக்கு காரோட்டியாகவும் செயற்படுகிறார். கிறித்துவரான அவர், வெகு விரிவாக ராமாயணத்தின் பல காட்சிகளை அங்குள்ள இடங்களோடு பொருத்தி விளக்கிக்





கொண்டு வருகிறார். வழியெங்கும் போராட்டங்கள். இவர்கள் தங்குவதற்காக மலையகத்தில் ஒரு ‘டூரிஸ்ட் பங்களா’ தயாராக இருக்கிறது. சகல வசதிகள் இருந்தாலும் மின்வெட்டு அங்கு ஒரு தொடர்கதை! பொறுப்பாளர் ஸ்ரீ என்ற வாலிபனும், சமையல் செய்யும் இக்பால் என்று இன்னொரு வாலிபனும் அங்கு தங்கி கவனித்துக் கொள்கிறார்கள்.

இவர்கள் சென்றவுடன், உணவில் அசைவம் இல்லை என்பதை உணர்கிறார்கள். இவர்கள் சைவம் என்று ஸ்ரீ தவறாக யூகித்திருக்கிறான். உடனே வேட்டைக்கு சென்று ஒரு மானை அடித்துக்கொண்டு வரலாம் என்று அழைக்கிறான். வேட்டை தடை செய்யப்படவில்லையா என்று வினவும்போது... அப்படி இருந்தாலும் யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள் என்று பதில் வருகிறது. துப்பாக்கி எடுத்துக்கொண்டு ஜீப்பில் பயணிக்கும்போது ஒரு மலைச் சரிவில் கம்பீரமாக நிற்கும் பெரிய மான் ஒன்றை காண்கிறார்கள். அதை சுடப்போகும் போது அம்ரிதா தடுத்துவிடுகிறாள். இவ்வளவு அழகிய, கம்பீரமான உயிரினத்தை சுடுவதில் அவளுக்கு மனம் ஒப்பவில்லை.

மின்வெட்டு அடிக்கடி இருந்தபோதிலும் விடுதி நன்றாகத்தான் இருக்கிறது. இரவின் அமைதியை இக்பால் பாடும் பழைய இந்திப் பாடல்கள் குலைக்கின்றன என்பது கேஷவ் கருத்து. அன்று அவன் பாடிக்கொண்டிருந்தது ‘சௌத்வின் கா சாந்த்’ பாடல்.

கேஷவின் நீண்ட நாள் முயற்சிக்கு பின் அவனுக்கு ஒரு பெரிய ஆவணப்படத் தொடர் தயாரிக்கும் வாய்ப்பு கிடைத்த செய்தி நெட்பிளிக்ஸ் நிறுவனத்திலிருந்து வருகிறது. மகிழ்ச்சிக்கடலில் மிதக்கிறான். இனி பணம், பணம் என்று கொட்டும், நம் கவலைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று கும்மாளமிடுகிறான். அவள் இதையும் ஒரு புன்னகையுடன் ஏற்றுக்கொள்கிறாள். அவள் எழுதும் வலைத்தொடர்கள் பிரபலமாக இருந்தாலும், தனித்தன்மைமிக்கவை. அவளுக்கென்று ஒரு பார்வை.

அன்று நள்ளிரவில் ஏதோ ஓசை கேட்டு எழுந்து பார்க்கிறார்கள். திருடர்கள், ஜன்னல் வழியாக அறைக்குள் புகுந்து லேப்டாப், மொபைல், காமெரா போன்ற கருவிகளை திருடிச் செல்கிறார்கள். எல்லோரும் துரத்தி சென்றும் பயனில்லை. ஜன்னலை யார் திறந்து வைத்தது என்பதில் கணவன் மனைவிக்குள் ஒரு சிறிய உரசல். அவள் காற்று வாங்கிய பின் ஜன்னலை மூடியதாகத்தான் சொல்கிறாள். அவனுக்கு நம்பிக்கையில்லை.

இந்த களவின் தொடர்ச்சி, திரைப்படத்தின் நீட்சியாக செல்கிறது. கணவன் மனைவிக்குள் அந்த பழைய ஒட்டுறவு இல்லை. உணவு மேஜையில் கூட பிரிவு தெரிகிறது. பணிகள் முழுதும் முடக்கப்பட்டன. அலைபேசி கூட புதியதாக வாங்கவேண்டியிருக்கிறது. விடுதியில் பணி புரிபவர்களையே சந்தேகிக்க வேண்டிய நிலை. புகார் காவல்துறைக்கு செல்கிறது. சிங்கள காவல் அதிகாரி சார்ஜன்ட் பண்டார கடும் அழுத்தத்தில் இருக்கிறார். போலீஸ் ஜீப் ஓடுவதற்கு டீசல் கூட இல்லை. நாட்டுப் பொருளாதார நிலைமை அப்படி. வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் என்பதால் உரிய மரியாதையும் சேவையையும் தரவேண்டியிருக்கிறது. கேஷவ் கோபத்தில் எகிறிக் குதிக்கிறான். களவு போன பொருட்களை உடனே மீட்டுத் தராவிட்டால் தூதரகத்தில் புகார் செய்யவேண்டியிருக்கும் என்று சொல்கிறான். காவல் அதிகாரி மூன்று தமிழ் இளைஞர்களை கொண்டுவந்து அவர்கள்தான் திருடியிருக்கவேண்டும் என்றும் திருடிய பொருட்களை திருப்பித்தரவேண்டும் என்று அவர்களை அடித்துத் துன்புறுத்துகிறான். இதெல்லாம் ஏனோ அவளுக்கு பிடிக்கவில்லை. ஒரு கட்டத்தில் இளைஞர்களில் ஒருவன் இறந்து போகிறான். அவன் மறைவினால் ஏற்பட்ட குற்றவுணர்ச்சி இவளை வாட்டுகிறது. இதற்கு இடையில் சுற்றுப்பயணங்களும் தடைப்படவில்லை. ஒரு கட்டத்தில் ஒரு இராமாயண சம்பவ இடம் பற்றி ஆண்ட்ரூ சொல்லுகையில், அவளிடம் ஒரு கேலிச் சிரிப்பு மலர்கிறது. அவர் அவமதிக்கப்பட்டதாக உணர்கையில், ராமாயணங்களில் 300-க்கும் மேற்பட்ட வெர்ஷன்கள் உள்ளன, ஒவ்வொன்றும் வெவ்வேறாக



கதையையும் சம்பவங்களையும் சொல்லும் என்று சொல்கிறாள்.

இந்தத் திரைப்படம், இயக்குநர் விதனகேயின் ராமாயணம் என்று எடுத்துக்கொள்ளலாம். படத்தின் கதாபாத்திரங்களுக்கும் ராமாயண பாத்திரங்களுக்கும் பல ஒற்றுமைகள் மெலிதாகக் காணக்கிடைக்கின்றன. படம் நெடுக அவ்வப்போது காட்சியளிக்கும் மானின் உருவம் மாரீசனை நினைவுப்படுத்தும் மாய மானாகக் கூட இருக்கலாம்.

மிக நேர்த்தியாக இயக்கப்பட்டிருக்கும் இந்த படத்தில் நடிகர்கள் கூடுதல் பலத்தை தருகிறார்கள். ஏற்கனவே மலையாளத் திரைப்படங்களில் இணையாக நடித்திருந்த ரோஷன் மாத்யூ-வும் தர்சனா ராஜேந்திரனும் இதில் மிக உணர்வுபூர்வமாக நடித்திருக்கின்றனர். காவல் அதிகாரியாக நடித்திருக்கும் மகேந்திர பெரேரா ஓர் அற்புதம். குழப்பம், அதிகாரம், அராஜகம், குழைவு, கொஞ்சம் பூசி மெழுகப்பட்ட இனவெறி அனைத்தும் கலந்த ஒரு கதாபாத்திரத்தை அனாயாசமாக நடித்துக் காண்பித்திருக்கிறார். அண்மைக் காட்சிகளில் அவர் காட்டும் முக பாவங்கள் அனைத்தும் ஒரு முதிர்ச்சி பெற்ற கலைஞரிடம் மட்டுமே நாம் காணமுடியும். அதே போல வழிகாட்டி ஆண்ட்ரூவாக நடித்திருக்கும் ஷியாம் பெர்னாண்டோ பணிவும், கடமை உணர்ச்சியும், பக்குவமும் கலந்த ஒரு மத்திய வயதுக் காரராக நேர்த்தியான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். தங்கும் விடுதியை சேர்ந்த ஸ்ரீ, இக்பால் வேடங்களில் சுமித் இளங்கோவும், அஸர் சம்சுதீனும் உணர்ந்து நடித்திருக்கிறார்கள்.

தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வில் பிரபலங்களையே இயக்குநர் தேர்ந்தெடுத்திருக்கிறார். பிரபல ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான ராஜீவ் ரவி ஒளிப்பதிவை கவனித்திருக்கிறார். தேவ்-டி, கேங்ஸ் ஆப் வாசிபூர் போன்ற புகழ் பெற்ற திரைப்படங்கள், தொடர்களையெல்லாம் ஒளிப்பதிவு செய்து, அன்னயும் ரசூலும், கம்மாட்டிப்பாடம் போன்ற பிரமாதமான மலையாளப் படங்களை இயக்கியவர். இலங்கையின் புதிய கோணங்களை நமக்கு காட்டுகிறார்.

பிரபல படத் தொகுப்பாளர் ஸ்ரீகர் பிரசாத் படத்தொகுப்பை கவனித்திருக்கிறார். இளைய இசையமைப்பாளர்களில் நல்ல பெயரெடுத்திருக்கும் ‘கே’ என்று அழைக்கப்படும் இளைஞர் கிருஷ்ணக்குமார் பொருத்தமான பின்னணி இசையை தந்திருக்கிறார். விதனகேயுடன் இவருக்கு இது முதல் படம் அல்ல. ஏற்கனவே ‘காடி’ என்ற சிங்களப் படத்திற்கு இசையமைத்திருக்கிறார். படத்தின் தயாரிப்பாளர்கள் பட்டியலில் இன்னொரு பெரிய பெயர் இருக்கிறது. மணிரத்னத்தின் மெட்ராஸ் டாக்கீஸ் இந்த படத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஏராளமான உலகத் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு, சிலவற்றில் தேர்வு வரை சென்று, சில முக்கியமான விருதுகளைப் பெற்ற இந்த திரைப்படம், திரையரங்குகளிலும் வெளியானது!

‘பாரடைஸ்’ திரைப்படம் நம்மை அதன் உலகத்துக்குள் கவர்ந்து இழுத்தாலும், நாம் வெளியே வரும்போது அவிழ்க்க முடியாத ஒரு கடினமான புதிருடன் வருவது போல இருக்கிறது. நாயகன் - நாயகியின் மணவாழ்க்கை ஏதோ அழுத்தத்துடன் இருக்கிறது என்று சொல்லப்படாவிட்டாலும், அவர்கள் நடத்தையும் உறவும் நமக்கு சில சந்தேகங்களை எழுப்புகின்றன. இவ்வளவு நடந்தும் உன்னால் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது என்று அவன் கேட்கும்போது, நான் மகிழ்ச்சியாக இருக்கக்கூடாது என்று நீ விரும்புகிறாயா என்று அவள் திருப்பிக் கேட்கிறாள். கணவன் மனைவி உறவு அவ்வளவு யதார்த்தமாக சொல்லப்பட்டிருக்கும் திரைப்படம் என்று நிச்சயம் சொல்லலாம்!



jeeva@thaiveedu.com




# ரொரன்ரோவில் குணா கவியழகனுடனான சந்திப்பு

- பரிதி -

ரொறன்ரோவில் எழுத்தாளர், நாவலாசிரியர், கட்டுரையாளர், அரசியல் ஆய்வாளர் குணா கவியழகனுடனான சந்திப்பு ஜூலை 21, 2024 ஞாயிற்றுக்கிழமை Agincourt Recreation Centre-இல் சிறப்புற நடைபெற்றது. அவருடனான சந்திப்பில் முதன்மையாக அவர் எழுதிய நாவலான 'கடைசிக் கட்டில்' பற்றியதாகவே இருந்தது. ஐந்நூறுக்கு மேற்பட்ட அரசியல் சமூகக் கட்டுரைகளையும் சில சிறுகதைகளையும் எழுதியிருப்பினும் அவர் மிகச் சிறந்த நாவலாசிரியராகவே பார்க்கப்படுகின்றார். இவர் எழுதிய அரசியல் நூல்கள் மூன்றும் படைத்துறை நூல்கள் இரண்டும் போரிடரில் தொலைந்து போனதாக அறியப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் போரின் மூலத்தையும் அதன் வேரையும் அதன் தாக்கங்களையும் விமர்சனப் பார்வையுடன் கூடிய புனைவுகளையும் கருத்துகளையும் எழுதியும் பேசியும் வரும் குணா கவியழகன் இன்றைய புலம்பெயர் எழுத்தாளர்களில் முதன்மையானவராகப் பார்க்கப்படுகின்றார். இன்றைய புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள் பலர் தமிழ் நாட்டு வாசகர்களுக்காகவும் தமிழ் நாட்டு அங்கிகாரத்துக்காகவும் வலிந்து எழுதும் நிலை காணப்படுகின்றது. தமிழ் நாட்டுப் பெருநில மனப்பாங்கை உடைத்து, ஈழத்து போர் மற்றும் அதன் சுவடுகளையும் இலக்கிய வெளியில் நாவலாக முன்வைத்து வெற்றி கண்டவர். ஆறு நாவல்களை எழுதியுள்ளார் குணா கவியழகன்.

குணா கவியழகனின் முதல் புதினம் 'நஞ்சுண்ட காடு' 2003-இல் உள்சுற்று வாசிப்பில் வெளிவந்தது. பின்னர் அது 2013-இல் சென்னை அகல் பதிப்பக வெளியீடாக வந்தது. அதனைத் தொடர்ந்து 'விடமேறிய கனவு' 2015-இலும் 'அப்பால் ஒரு நிலம்' 2016-இலும் 'கர்ப்ப நிலம்' 2018-இலும் 'போருழல் காதை' 2019-இலும் கடைசிக் கட்டில் 2024 ஆரம்பத்திலும் வெளிவந்துள்ளன. அத்துடன் 'விடமேறிய கனவு' ஆங்கில மொழி பெயர்ப்பு 'The Poisoned Dream' என்ற பெயரில் 2018-இல் வெளிவந்தது. குணா கவியழகனின் படைப்புலக அறிமுகத்துடன் எழுத்தாளருடனான சந்திப்பு ரொறன்ரோவில் சிறப்பாக நடைபெற்றது.









இந்த அறிமுகமும் குணா கவியழகனுடனான சந்திப்பும் பல சிக்கல்களை எதிர் கொண்டிருந்த போதும், தாய்வீடு இதழ் ஓர் எழுத்தாளருக்குக் கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்து இந்த நிகழ்ச்சியை முன்னெடுத்திருந்தது. இந்நிகழ்ச்சியில் உரையாளர்களாக பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன், எழுத்தாளர் திருமதி மந்தாகினி குமரேஸ், கவிஞர் சித்திவிநாயகம், மற்றும் கலாநிதிப்பட்ட ஆய்வு மாணவி நேத்ரா ரோட்றிகோ (Nedra Rodrigo) ஆகியோர் பங்கு பற்றியிருந்தார்கள். நிகழ்வைத் தொகுத்தளித்திருந்தார் கலைஞர் வேந்தன் பேரின்பன். இவர்களுடன் நிகழ்ச்சியின் நாயகன் குணா கவியழகன் தனது சிறப்புரையுடன் பார்வையாளர்களின் வினாக்களுக்கான விடைகளையும் வழங்கியிருந்தார்.

பேராசிரியர் சந்திரகாந்தன் அவர்கள் பேசும்போது குணா கவியழகன் தன் காணொளிச் சந்திப்புகளில் நிகழ்த்தும் தூர நோக்கு அரசியல் பார்வை, மக்கள் மத்தியில் நிகழ்த்திய சிந்தனை மாற்றத்தை எடுத்துச்சொன்னார். மேலும் அவரின் எழுத்தில் போர்ச்சூழலையும் அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற வாழ்விழத்தலையும் வலியையும் இலக்கியமாக மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் எழுத்துகளை நகர்த்திச் செல்லும் பாங்கையும் கூறி, இன்றைய வாழ்க்கையை இணைத்து நாம் இன்று எமது இலக்குகளை வெற்றி கொள்வது எப்படி என்பது பற்றிய சிந்திக்க வேண்டிய நேரம் இது என்பதை வலியுறுத்திச் சென்றார்.

அவரைத் தொடர்ந்து கவிஞர் மா. சித்திவிநாயகம் அவர்கள், எமது சமூக முரண்பாடுகளையும் குழு நிலைசார்ந்த அரசியல்







நிலைப்பாடுகளையும் வீங்கிப் பெருத்த நோய் கொண்ட வாழ்வையும் போரின் வலியையும் போருண்ட மண்ணின் நினைவுகளை விலைக்கு விற்று பணம் பார்க்கும் மனித நேயமற்ற மனப் போக்குகளையும் சாடி நின்றார். 'கடைசிக் கட்டில்' நாவல் யாழ். வைத்தியசாலையின் புற்று நோய் விடுதி பற்றிய கதைக்களம். இன்றைய காலத்தின் பேசுபொருளாக மாறியிருக்கும் வைத்தியசாலையின் முகத்தை தன் நாவலில் அரசியல் சங்கதிகளோடு முன்னரே வெளிப்படுத்தியிருக்கிறார் கவியழகன். வைத்தியசாலையில் மறைக்கப்பட்ட உண்மைகளை பேசுகிறது கடைசிக்கட்டில். மேலும், குணா கவியழகன் செய்யும் எழுத்துப் பணி சமூத்திலும் மொழியிலும் வரலாற்றிலும் நிகழ்த்தும் தாக்கம் பற்றி விரிவாகப் பேசினார். இவ்வாறான படைப்புகளின் முக்கியத்துவத்தையுணர்த்தி இந்தப் படைப்பாளிகளை முன்னிலைப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்திச் சென்றார்.

குணா கவியழகனின் 'கடைசிக் கட்டில்' பற்றிய தன் வாசிப்பு அனுபவத்தை திருமதி மந்தாகினி குமரேஸ் முன்வைத்தார். மரணத்தின் பிடியில் சிக்கியவரின் கடைசி நிமிட வாழ்வின் ஒப்புதல் பற்றி, தன் விசாரணைக்கு தன்னையே உட்படுத்தும் தத்துவ விசாரணைப் படலமாக 'கடைசிக் கட்டில்' நாவல் அமைந்திருப்பதாக கூறியிருந்தார். போருண்ட வாழ்வின் புலன்விசாரணையையும் இந்தப் புதினம் தந்த பட்டறிவையும் ஒரு விமர்சனப் பார்வையுடன் தொடர்ச்சியான விமர்சனப் பார்வைக்குரிய பெருவெளியை உருவாக்கி இந்த நூல் எல்லோரும் வாசிக்க தூண்டும் வகையிலான ஆவலை வழங்கிச் சென்றார்.

நிறையவாக நேத்ரா ரோட்றிகோ அவர்கள் இளைஞர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு ஆங்கிலத்தில் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். குணா கவியழகனின் படைப்புகள் எதற்காகப் படிக்க வேண்டும், அவரது புதினங்கள் தரும் அனுபவங்கள் என்ன என்பதை நஞ்சுண்டகாடு நாவலை மொழிபெயர்த்து வருபவர் என்ற முறையில் கூறி, அடுத்த தலைமுறைக்கு எழுத்தின் வழியாக வரலாற்றை எடுத்துச் செல்லும் பணியைச் செய்யும் குணா கவியழகனைப் பாராட்டிச் சென்றார்.

அத்துடன் குணா கவியழகன் தன்னுரையை வழங்கி, பார்வையாளர்களின் வினாக்களுக்கான விடைகளைக் கூறி, தன் கருத்துகளுக்கான நியாயப்பாடுகளை முன்வைத்தார். தொடர்ந்து அவரது 'கடைசிக் கட்டில்' நூல் மற்றும் 'Poison dream' சிறப்புப் பிரதிகள் வழங்கப் பெற்றது. எதிர்பார்க்கப்பட்ட தொகையைவிட பார்வையாளர்கள் வந்து நூலைப் பெற்றுக்கொண்டமையால் நூல்ப் பற்றாக்குறை நிலவியது. அதற்கான மன்னிப்பைக் கேட்ட குணா கவியழகன், ஒருவாரத்தில் எடுத்துத்தருவதாக வாக்குறுதியளித்தார். அத்தோடு அவரது மற்றைய நூல்களும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

போர்க்கால வரலாறு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான அனுபத்தைத் தந்துள்ளது. அந்த பட்டறிவின் பதிவுகளும் விசாரணைகளும் கருத்துப் போரும் குணா கவியழகனின் பாடுபொருளாக காணப்பெறுகின்றது. அந்தக் கருத்துகள் வரலாற்றுத் தடங்களிலான பதிவுகள். அவற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்திச் செல்லும் கனதியான பணியை குணா கவியழகனின் படைப்புகள் செய்கின்றன.








TORONTO







# ‘கண்ணகி’ திரைப்படத்தை முன்வைத்து... கதைக்கு உள்ளும் வெளியும்



- கவிதா லட்சுமி

இத்திரைப்படத்தில் காட்டப்படும் பெண்களுடைய வாழ்வு அத்தனை சுலபமானதல்ல. பெரும்பான்மைப் பார்வையில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதுமல்ல. அவர்களது வாழ்வு தனை உயர்ந்த சிந்தனையுடையவர் ஏற்பர் என்பதில் எந்தத் தயக்கமுமில்லை. அதையும் கடந்து ஒருவருடைய வாழ்க்கை முறையை யாரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்ன? ஒரு பெண் தனது வாழ்வினை யாரும் அங்கீகரிக்கவேண்டுமென்ற எண்ணங்களைக் கடக்க வேண்டாமா? பிறருடைய எதுவித அங்கீகாரமும் அவசியமற்றது என்ற ஒரு கட்டத்தைப் பெண் அடைவாள். அதுவே நதியாக வரும் கதாபத்திரத்தின் மூலம் அறிமுகமாகத் தொடங்குகிறது.

## எது கலை?

கலை என்பது என்ன? பெரும்பான்மை சமூகம் விரும்புவ தெல்லாம் சிறந்த கலையாகிவிடுமா? நாயக முன்னிலைப்ப டுத்தல்கள், சமூகத்தை ஒடுக்கும் பஞ்ச் வசனங்கள், யதார்த் தமற்ற திரைக்கதைகள்தான் சிறந்த திரைப்படங்களுக்கான அடையாளமா அல்லது அளவுகோலா? பெண்ணுடலை வியாபாரப் பொருளாக்கும் காட்சிகளை, இலட்சியப்படுத்தப் பட்ட உடல்களை, பெண் ஆளுமையைச் சிதைத்து, நலிந்த மலினமான பாலினமாக்கும் உத்திகளைக் கலையென்று கொண்டாட முடியுமா? எல்லா ஆணிகளையும் நாயகனே (ஆண்) பிடுங்குவான் என்ற பார்வையை, இரட்டை அர்த்தத் தில் வக்கிரத்தைக் கொட்டும் பாடல்களை, வசனங்களை, நகைச்சுவைகளைச் சிறந்த கலையாக்கம் எனலாமா? ஆனால்... இவைதான் இன்றைய சமூகத்தில் நிலவும் ‘பெருங் கலை வளர்ப்புப்’ போக்காக இருக்கின்றது. தமிழக அரசும் தமிழ் ஊடகங்களும் தமிழ் அமைப்புகளும் எதிர்காலச் சந்த திக்காய் வளர்த்தெடுத்துக்கொண்டிருப்பது இந்த வக்கிரங்க ளைத்தான்.

இத்தகைய திரைப்படங்கள் எமது சமூகத்தை உயர்ந்த சிந்த னைக்குள் எடுத்துச் செல்லாமல், ஒருவித மயக்கத்திற்குள் ளும் மந்தநிலைக்குள்ளும் வைத்திருக்கும் காலத்தின் பெரும் போதை. குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் முதிய வர்கள் வரை மலினமாகவும் வலிந்தும் கொடுக்கப்படும் போதை இதுதான்.

இப்படியான திரைப்படங்கள் தொழில் முறையையோ, பாடசா லைக் கற்கை முறையையோ நேரடியாகப் பாதிப்பதில்லை. ஆனால் ஒரு மனிதருடைய, ஒரு சமூகத்தினுடைய ஆழ்ந்த தேடலையும் பெறுமதிகளையும் விழுமியங்களையும் சிதைத் துவிடுகின்றன. இதற்கு விதிவிலக்கான திரைப்படங்கள் உண்டு. ஆனால் அவை கவனம் பெறுவதேயில்லை.

கண்ணகி என்ற பாத்திரத்தின் பின்னாலிருக்கும் சமூகத்தின் பொதுவான கருத்தைத் தொடக்கத்திலிருந்தே உடைத்துப் போடுகிறது இந்தத் திரைப்படம். கண்ணகி என்ற தலைப்பு மிகப் பொருத்தமானதும் சரியானதுமான தேர்வுதான்.

## கண்ணகியும் சிலப்பதிகாரம் கூறும் கூற்றுகளும்:

கண்ணகி என்ற பெயர், பாத்திரம் தொடர்பாக நமது சமூகம் வைத்திருக்கும் விம்பத்திற்கும், இத்திரைப்படத்திற்கும் எத்த னையோ முரண்கள் உள்ளன. ஆனாலும் இத்திரைப்படத்தில் காட்டப்பட்ட ஒவ்வொரு பெண் கதாபாத்திரமும் கண்ணகி தான் என்பதைச் சிலப்பதிகாரத்தின் உயிரையும் உணர்வை யும் புரிந்து கொண்டவர்களால் உணர்ந்துகொள்ள முடியும்.

பெண்ணுடைய உடல் சார்ந்து மட்டுமே கண்ணகியைப் புரிந்து வைத்திருக்கும் எவராலும் இத் திரைக்கதையை ஜீர ணிக்க முடியாது என்பது யதார்த்தம். சிலப்பதிகாரத்தின் கண்ணகி கணவனுக்காக மதுரையை எரித்தாள் என்பதே ஒரு கருத்துப் பிறழ்வுதான். அவள் நீதி கேட்டதும் பாண்டிய மன் னன் ‘நானே கள்வன்’ என்று உயிர் துறந்ததுமே அவளுக்கான தீர்வு கிடைத்துவிடுகிறது. அன்றைய காலச் சிந்தனையின்படி கணவனை இழந்த அவளுக்கான விடயங்கள் சில கிடைக்கப் பெறவில்லை என்ற சீற்றமே அவளுடையது. அரசை, அதிகா ரத்தை எதிர்த்துக் கேள்வியெழுப்பி, அதில் வெற்றியும் பெற்ற துணிச்சலுடைய பெண் என்ற கோணத்தில் கண்ணகியைப் பார்த்தல் என்ற இடத்திலிருந்துதான் இத்திரைப்படம் கட்ட மைக்கப்பட்டிருக்கின்றது.



சிலப்பதிகாரம் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டது, கண்ணகி கற்பின் சின்னம் என்பதிலெல்லாம் உடன்படத் தேவை யில்லை. கற்பு என்பதன் இலக்கணத்திற்கும் (தொல்காப்பி யம்), சமூகம் வைத்திருக்கும் விளக்கத்திற்குமே பெரும் வேறு பாடு உண்டு. அதே போலவே வெறுமனே சிலப்பதிகாரத் தைத் தூக்கி வீசு என்ற மற்றுமொரு பார்வையிலும் உடன்ப டத் தேவையில்லை. ஓர் இலக்கியத்தை நாம் எப்படி இன் றைய காலத்திற்கு ஏற்ப பார்ப்பது என்பது முக்கியமானது. கண்ணகி திரைப்படம் சிலப்பதிகாரத்தின் உயிர்நாடியைப் பிடித்து அழகாகக் கையாண்டிருக்கிறது.

அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாவது என்பதும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவது என்பதும், ஊழ் வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும் சிலப்பதிகார நோக்கத்தின் அடிப்படைக் கூற்றுகள்.

### கண்ணகி கவனம் பெறவேண்டிய திரைப்படம்:

கண்ணகி திரைப்படத்தில் வினைகள் (வாழ்வில் நடக்கும் காரியங்கள்) என்பது எப்படியாக ஒருவர் வாழ்வை, மனநி லையை, செயற்பாடுகளை, பார்வையை, சீற்றத்தை, ஆளு மையை அதன் வழி அவளுடைய முடிவுகளை நகர்த்திக் கொண்டு செல்கிறது என்பதே திரைக்கதையின் மையமாக அமைந்திருக்கிறது.

நான்கு வேறுபட்ட பெண்களாகக் காட்டப்பட்ட 'பெண்-வாழ் வின்' வினைகளை அடுக்கி ஒரே பெண்ணின் வாழ்வாக முடித் திருக்கும் உத்தி இங்கே கையாளப்பட்டிருக்கிறது. இவ்வுத்தி யானது, ஒரு பெண் தன் வாழ்விற் சந்திக்கும் சிக்கல்களிலி ருந்து எப்படியாகத் தனது இயல்புகளை மாற்றிக்கொண்டு செல்கிறாள் என்பதைக் கதையின் வேராகக் கொண்டு உரு வாக்கப்பட்டுள்ளது. அது கிளைவிட்டுப் பல விடயங்களைப் பரந்துபட்டுப் பேச விளைகின்றது.

வடிவமைத்திருக்கும் நான்கு பெண்களுடைய வாழ்வும் அத் தனை சுலபமானதல்ல. பெரும்பான்மைச் சமூகப் பார்வை யில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதுமல்ல. அதனாற்தான் சிலப்பதிகாரம் கூட உயர்ந்தோர் ஏற்பது என்கிறது. கதையில்



வரும் பெண்ணை, அவளது வாழ்வுதனை உயர்ந்த சிந்தனை யுடையவர் ஏற்பர் என்பதில் எந்தத் தயக்கமுமில்லை. அதை யும் கடந்து ஒருவருடைய வாழ்க்கை முறையை யாரும் ஏற் றுக்கொள்ள வேண்டுமா என்ன? ஒரு பெண் தனது வாழ் வினை யாரும் அங்கீகரிக்கவேண்டுமென்ற எண்ணங்களைக் கடக்க வேண்டாமா? பிறருடைய எதுவித அங்கீகாரமும் அவ

சியமற்றது என்ற ஒரு கட்டத்தைப் பெண் அடைவாள். அதுவே நதியாக வரும் கதாபத்திரத்தின் மூலம் அறிமுகமாகத் தொடங்குகிறது.

## பெண்நிலைக் காட்சிகள்:

பெண்கள் சார்ந்து பேசும் படம்தான் எனினும், ஆளுமையான ஆண்களைப் பற்றியும் பேசுகின்றமை இத்திரைப்படத்தின் வெகுசிறப்புகளில் ஒன்று. எதையும் உயர்த்தாமல், எதையும் தாழ்த்தாமல் வாழ்வின் இயல்புகளை எப்படி ஏற்று நகர்த்துவது என்பதைக் கலைத்துவமாகச் சித்தரித்திருக்கின்றமை, தமிழ் திரையுலகு கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய விடயம். கதாநாயகர்களும் இயக்குநர்களும் கதையாசியர்களும் முதலில் கற்றுக்கொள்ள வேண்டிய பொருள்.

இங்கே எதுவும் புனிதப்படுத்தப்படவில்லை. பெண்களை மலினப்படுத்தும் எழுதப்படாத நடைமுறைகளை, நம்பிக்கைகளைப் போகிற போக்கிற் தகர்த்தெறிகிறது. நான்கு பெண்களின் வாழ்க்கையை மையமாக வைத்துச் சற்றும் பிரச்சாரமோ பிசிறோ இன்றிப் பேசுகிறது. எத்தனையோ மனித அகங்களை, பெண் ஒடுக்குமுறைகளைச், சமூகத்தின் சீர்கேடுகளை, ஆதிக்கச் செயற்பாடுகளைச், சடங்குகள் என்ற பெயரில் நடக்கும் அநியாயங்களை உடைத்துப் போடுகிறது.

சேர்ந்து வாழுதலில் இருக்கும் ஒருவன் தன் காதலியிடம் ஒரு மோதிரத்தைக் கொடுத்து, மணம் புரியக் கேட்கிறான். வேண்டாம் என்றால் மறுத்துவிட்டு நகர்வதுதானே பண்பு. அதைவிடுத்து மோதிரத்தைக் காலால் உதைத்து வீழ்த்தி ஒரு குத்தாட்டம் போட்டு ஒருவனை அவமதிப்பது என்ன மனநிலை? திருமணம் செய்யக் கேட்ட ஒரு ஆண்மகனை இப்படியா நடாத்துவது என்ற கேள்வி இக் காட்சியைப் பார்த்தபோது எனக்கும் தோன்றியதுதான். ஆனால் யோசித்துப் பார்த்தால், இந்தச் சமூகத்தில் எத்தனை மனைவியர் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர். எத்தனை பெண்களின் மேல் அசிட் ஊற்றப்படுகிறது. எத்தனை பெண்கள் ஆணவக்கொலை, சிசுக்கொலை என்று உயிர் பறிக்கப்படுகின்றனர். எத்தனை பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஒரு பெண்ணின் ஓர் உதை மட்டும் ஏன் எம்மை இத்தனை கோபப்படுத்துகிறது? இந்த இடத்தில் நதி என்ற இக் கதாபாத்திரத்திற்கு மனவழுத்தம் இருப்பதாகக் காட்டியிருக்கத் தேவையில்லையோ என்பது எனது கருத்து. மனவழுத்தம் இல்லாவிடினும் 'இப்படித்தான் நதி' என்ற மிடுக்கைச் சற்று குறைத்துவிட்ட உணர்வு எனக்கு.

சமூகத்தின் அந்தஸ்து, சொத்துரிமை, திருமண ஒப்பந்தம் போன்றவற்றின் பின்னணியில் எப்படியெல்லாம் பெண்ணுடைய பிறப்புறுப்பு சம்பந்தபடுகிறது என்ற விடயம் காட்சியாக் கப்பட்ட விதம் சிறப்பு. தாலி எதற்கு என்ற கேள்விக்கு, சங்கிலியாற் கட்டப்பட்டிருக்கும் ஒரு நாயையும் சங்கிலியாற் கட்டப்படாத ஒரு நாயையும் நோக்கிக் காட்சி நகர நான் சிரித்தே விட்டேன். தொடர்ந்து, 'ச்சூ... போ' என்பது மட்டுமே பதிலாக வருகிறது. தாலியின் இருப்பினை இதைவிடக் காத்திரமாக எப்படிச் சொல்லிவிட முடியும்? இனி தாலிகளைக் காணும் போதெல்லாம் கட்டப்பட்ட மற்றும் கட்டப்படாத நாய்களின் காட்சி கண்முன் வருவதைத் தவிர்க்க முடியாது என்றே நினைக்கிறேன்.

எப்போதும் கதாநாயகர்களையே கொண்டாடும் சமூகம் இயக்குனர்களைப் பெரியதாகக் கண்டுகொள்வதில்லை. இப்படியான இயக்குனர்களைக் கவனிக்கத் தொடங்குவோம். பெண்ணுலகு சார்ந்த ஆழந்த கவனிப்பிற்கு மனம் நிறைந்த வாழ்த்துகள் யஸ்வந் கிஷோர். உங்கள் முகம் தனியாகத் தெரிகிறது.

## திரையில் காட்டப்படும் ஆண்கள்:

- கலையையும், மனிதத்தையும் முன்னிறுத்தி, வாழ்வை நகர்த்த நினைக்கும் கொம்யுனிஸ்ட் தந்தை.
- நீ இதுவரை எப்படி இருந்தாயோ அதைப்பற்றிக் கவலையில்லை. இனி எப்படி இருக்கப்போகிறாய் என்பதும் பிரச்சினையில்லை. நான் உன்னைத் திருமணம் செய்கிறேன் என்று சொல்லும் மாப்பிள்ளை.
- மணவிலக்கான பெண்ணைக் காதலிப்பதிற் பின்நிற்காமல் - முற்போக்கு முகம் காட்டி - திருமணம் என்றதும் குடும்பத்தின் முடிவுகளின் பின்னால் ஒழிந்து கொண்டு கோழையாகிவிடும் ஆண்.
- திருமண பந்தம் இல்லாமலே அன்போடு சேர்ந்து வாழமுடியும் என்று தீர்மானித்து - பின் திருமணம் வேண்டும் என்ற மனநிலைக்குள் சென்று - திருமணத்திற்கு அவள் மறுத்ததும் அவளுடைய முன்வாழ்வு, மனநிலை போன்றவற்றால் தன்னிலை தடுமாறும் ஆண்.
- பெண்ணுடல், பெண் அவளது உரிமை, சுதந்திரம் என்பதை மதித்து, தான் திருமணம் புரியவிருக்கும் பெண்ணின் கருக்கலைப்பு விடயத்தில் அவளுடன் நின்று தாங்கும் ஒரு ஆண்.

## திரையிற் காட்டப்படும் பெண்கள்:

- மாப்பிள்ளை பார்க்கும் படலத்தில், எந்தக் கருத்தையும் முன்வைக்காத, ஆனால் கனவுகளோடு இருக்கும் ஒரு கிராமத்துப் பெண்.
- சாதி, அந்தஸ்து, வசதி, பகட்டு என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆட்டிவைக்கும் தாய்.
- மணவிலக்காகித் தனியாக உலகைச் சந்திக்கப் பயந்து, விசமாகிப் போன குடும்ப வாழ்க்கையையே மேல் என்று வாழ நினைக்கும் பெண்.
- ஒருத்தனுக்கு ஒருத்தியாய் வேண்டாம் ஒருவருக்கு ஒருவராய் இருப்போம் என்று வலியுறுத்தும் பெண்.
- மணவிலக்கான பெண்ணை மறுமணம் செய்ய வாழ்த்தினாலும் அவள் தன் வீட்டிற்கு மருமகளாய் வருவதை ஏற்க மறுக்கும் பெண்.



kavitha-laxmi@thaiveedu.com



# சத்திய சோதனை
# எமது பயணம் நீண்ட பயணம்

ப. கன்னன்

கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் எழுதிய சமூக விமர்சன நாடகங்களில் கல்விப் பிரச்சினையை முன் வைத்து 1984-ம் ஆண்டு எழுதப்பட்ட நாடகம் ‘சத்திய சோதனை’. இந்நாடகம் கலாநிதி சிதம்பரநாதன் அவர்களால் 1985-ல் யாழ். பரி. யோவான் கல்லூரியில் மேடையேற்றப்பட்டது. 80-களில் நிலவிய கல்விப் பிரச்சினையை அடிப்படையானதாக கொண்டு எழுதப்பட்டாலும், இன்றும் அப்பிரச்சினை தீர்க்கப்படாமலும், மேலும் வலுவடைந்ததாகவும் காணப்படுகின்றதனால் சத்திய சோதனை நாடகம் இன்றைய காலத்திற்கும் பொருந்தக்கூடியதாய் உள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் சி. ஜெயசங்கர் அவர்களின் நெறியாள்கையில் நுண்கலைத் துறை மாணவிகளால் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக இவ்வாண்டில் எட்டுத் தடவைகள் இந்நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழகம் (27.03.2024), சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் (28.03.2024), யாழ். மத்திய கல்லூரி (25.04.2023), யாழ்ப்பாண தேசிய கலை இலக்கியப் பேரவை (25.04.2023), பரி. யோவான் கல்லூரி (இரு தடவைகள்) (26.04.2023), சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (26.04.2023), திருமறைக்கலாமன்றம் (26.04.2023) ஆகிய இடங்களில் மேடையேற்றப்பட்டது.

உலக நாடக நாளன்று, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விபு-லானந்த ஞாபகார்த்த மண்டபத்தில் மேடையேற்றம் கண்டது. இந்நிகழ்வில் நாடகத்தை முதல் தடவையாக நெறியாள்கை செய்திருந்த கலாநிதி க. சிதம்பரநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும். இதனால் மாணவிகள், கலாநிதி க. சிதம்பரநாதன் அவர்கள் முன்னே ஆற்றுகை செய்யப்போகிறோம் என சற்று தயக்கத் துடனேயே ஆற்றுகையில் ஈடுபட்டனர். பல மாணவிகளிற்கு இது முதல் மேடை அனுபவம். மண்டப மேடை பக்கத்திரைகள் ஏதுமின்றிக் காணப்பட்டது. மண்டபத்தின் வெளியே இருந்து அரங்கிற்குள் நடிகர்கள் ‘தந்தன தானன தானா’ என பாடியபடி பாடகர்கள் போல் வெவ்வேறு உடல் மொழிகளுடன் நுழைவதாக நாடகம் தொடங்கியது. மாணவர்கள் முழு அரங்கினையும் பயன்படுத்தி பார்வையாளராக கலந்து கொண்ட கல்வியற் கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் மிகவும் சிறப்பாக தமது ஆற்றுகையினை மேற்கொண்டிருந்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் இடம்பெற்ற உலக நாடக நாள் விழாவின் இரண்டாம் நாளன்று (28.03.2024) ‘சத்திய சோதனை’ நாடகம் இரண்டாவது தடவையாக இராசதுரை அரங்கில் மேடையேற்றப்பட்டது. முதல் மேடையேற்றம் நிகழ்ந்த அரங்கைவிட இராசதுரை அரங்கின் மேடை அளவில் பெரிதாக காணப்பட்டதால், மாணவர்கள் தாமாக திட்டமிட்டு அவ்வரங்கை உபயோகித்துக் கொண்டனர். மேலும் நெறியாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய அரங்கு பார்வையாளருக்கு புலப்படும் வகையில் அடிப்படை ஒளியமைப்பு வசதிகள் செய்யப்பட்டிருந்துதுடன், பார்வையாளர் பகுதியில் ஒளி விளக்குகள் ஒளிரவிடுப்பட்டிருந்தன. பல மேடை நாடகங்களை நவீன ஒளிக்கருவிகளுடன் மேடையேற்றிய சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவக மாணவர்களிற்கு சத்திய சோதனை நாடகம் ஆச்சரியத்தை தந்தது. ஆற்றுகை ஆரம்பித்ததுடன் சில பார்வையாளர்கள் ஏன் தமது பகுதிக்கான ஒளி விளக்குகள் அணைக்கப்படவில்லை என சக பார்வையாளரிடம் உரையாடினர். நாடகவியற் கோட்பாடுகளிற்குள் இதனை நோக்குவோமாயின், இது பேற்றோல் பிரக்டின் காவிய அரங்கில் காணப்படும் பார்வையாளரை தூரப்படுத்தும் உத்தியாகும். நடிப்பிடம், பார்வையாளர் பகுதி என்பன வெளிப்படையாக காணப்படும் போது பார்வையாளர் தாம் காண்பது ஒரு நாடகம் எனும் நோக்கில் ஆற்றுகையை சிந்தித்து பார்வையிடுவர். சத்திய சோதனை நாடக ஆற்றுகை நிறைவுற்றதும் அங்கு பார்வையாளராக பங்கேற்றிருந்த விரிவுரையாளர்கள், ஆற்றுகையில் ஈடுபட்ட மாணவிகளை சந்தித்து நாடகம் தொடர்பாக கலந்துரையாடியதுடன், வாழ்த்துகளையும் கூறிக்கொண்டனர். நாடகமொன்றை இவ்வாறு எளிமையாகவும், கருத்துக்கள் இலகுவாக விளங்கக்கூடிய வகையிலும் ஆற்றுகை செய்ய முடியும் என்பதை இந்நாடகம் நிரூபித்ததாக கூறி நெறியாளரின் நெறியாக்க உத்திகளையும், மாணவர்களின் ஆற்றலையும் வெகுவாகப் பாராட்டிச் சென்றனர்.

மட்டக்களப்பில் கிழக்குப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் என்பவற்றில் மேடையேற்றப்பட்ட சத்திய சோதனை நாடகம் தனது அடுத்த கட்ட நகர்வாக எங்கு இந்நாடகம் உருவாக்கப்பட்டு முதல் மேடையேற்றம் கண்டதோ அதே யாழ்ப்பாணத்தில் 40 வருடங்களின் பின்னர் ஆற்றுகைக்கு தயாரானது.

1984-ல் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பட்டு கலாநிதி க. சிதம்பரநாதன் அவர்களின் நெறியாள்கையில், யாழ். பரி. யோவான் கல்லூரி மாணவர்களால் ஆற்றுகை செய்யப்பட்டது. 40 வருடங்கள் கழித்து சத்திய



சோதனை நாடகம் அக்கல்லூரியின் பழைய மாணவரான பேராசிரியர் சி. ஜெயசங்கர் அவர்களினால் நெறியாள்கை செய்யப்பட்டு பரி. யோவான் கல்லூரி உள்ளடங்கலாக கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் தயாரிப்பில் யாழில் ஐந்து இடங்களில் ஆறு தடவைகள் மேடையேற்ற திட்டமிடப்பட்டது.

யாழில் மேடையேற்றத் திட்டமிட்டதன்படி 24.04.2024 புதன்கிழமை நுண்கலைத்துறைத் தலைவர் திருமதி துஷ்யந்தி சத்தியஜித் தலைமையில் பல்கலைக்கழக பேருந்தில் நுண்கலைத்துறைத் தலைவர், தற்காலிக உதவி விரிவுரையாளர்கள், ஆற்றுகையிலீடுபடும் மாணவர்களுடன் மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை ஊடாக யாழ் நோக்கிய பயணம் ஆரம்பமானது. காலை 10 மணியளவில் ஆரம்பமான பேருந்துப் பயணம் மாலை 6 மணியளவில் ஈழத்து நாடக அரங்கின் முன்னோடி கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் வீட்டில் வந்தடைந்தது.

மாணவர்களிற்கு கிடைத்தற்கரிய பாக்கியமாக கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்ளுடனான சந்திப்பு அமைந்திருந்து. பாடப் புத்தகத்திலும் பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் அவரைப்பற்றியும் அவரது எழுத்துருக்கள் பற்றியும் கற்று, ஆற்றுகையிலீடுபட்ட மாணவர்களிற்கு அவரை நேரில் சந்திப்பதென்பது கிடைத்தற்கரிய பாக்கியமாகவே கருதுகிறேன். மாணவர்கள் அவரை சந்தித்து 'சத்திய சோதனை' எழுத்துரு புத்தகத்தில் கையெழுத்து பெறுவதெற்கென தயார் நிலையில் வந்திருந்தனர். அவரிடம் சென்று அனைவரும் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர். அறிமுகப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவர் ஒவ்வொருவரது பெயரையும் ஊருடன் கேட்டறிந்து, அதற்கு நகைச்சுவையாக பதிலும் அளித்தார். சண்டிலிப்பாய், மானிப்பாய் என தமது ஊரின் பெயரை மாணவர்கள் கூற, அதில் முடிவில் வரும் 'பாய்' என்ற சொல்லுடன் தான் உறங்கும் பாயினை வைத்து நகைச்சுவையாக உரையாடினார்.

இவ்வாறாக தொடர்ச்சியாக அவரது பாணியில் நகைச்சுவை கலந்த சிலேடை அர்த்தங்களூடாக எம்முடன் உரையாடி எம்மை வியப்பிலாற்றினார். இவரது எழுத்துருக்களில் வரும் வசனங்கள் கருத்தை நகைச்சுவையாகவும், பார்வையாளரை சிந்திக்கும் வகையில் சிலேடை அர்த்தத்துடன் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தும் ஆற்றல் வெறுமனவே எழுத்துருக்களில் மட்டுமன்றி அவரது இயல்பு வாழ்க்கையில் அவரது இரத்தத்துடன் ஊறியுள்ளதை உணரமுடிந்தது. 93 வயதிலும் அவரது உடல் சோர்ந்தாலும் உள்ளத்திலிருந்து வரும் வார்த்தைகளிற்கு ஓய்வென்பது இல்லை.

கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் மாணவரான பேராசிரியர் சி. ஜெயசங்கர் அவர்கள் தனது குருவை ஆறத்தழுவி அவரின் ஆசிகளைப் பெற்றுக் கொண்டதோடு, மாணவர்களும் அவரிடம் ஆசிகளையும், தாம் ஆற்றுகை செய்யும் சத்திய சோதனை நாடகத்திற்கான வாழ்த்துக்களையும் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். இறுதியாக சத்திய சோதனை நாடகத்தில் இடம்பெற்ற 'பன்னிரண்டு கயிர் போட்டு பள்ளிப்பிள்ளை' பாடலை அவர் முன் ஆற்றுகை செய்து அவர் வீட்டிலிருந்து விடைபெற்றுச் சென்றனர்.

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களது வீட்டிலிருந்து புறப்பட்ட மாணவர்கள் சுழிபுரம் சத்திய மனை நூலக வளாகத்தில் தங்கவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இரவு 8 மணியளவில் சத்தியமனையை அடைந்ததும் அதன் பொறுப்பாளரும், கல்வியற்கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளருமாகிய கலாநிதி க. இரவீந்திரன் அவர்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றார். அவர் எம்முடன் சத்தியமனை நூலகம் பற்றியும், தங்குமிட வசதிகள் பற்றியும் உரையாடினார். அன்றைய

நாளின் இரவு நேர உணவை எமது கிழக்குப் பல்கலைக்கழக பழைய மாணவர் கங்கை கோபன் அவர்கள் ஏற்பாடு செய்தி ருந்தார். சத்திய மனையின் நூலகத்தை மாணவர்கள் ஆர்வத் துடன் பார்வையிட்டனர்.

திட்டமிட்டபடி முதலாவது மேடையேற்றம் யாழ் மத்திய கல் லூரி தந்தை செல்வா அரங்கில் காலை 11 மணியளவில் மேடையேறத் தயாரானது. அம்மேடை அளவில் பெரியதாக இருந்ததுடன், பார்வையாளர் பகுதியும் அளவில் பெரியதா கக் காணப்பட்டது. ஆகையினால் மாணவர்கள் அரங்கின் பின்பகுதிகளை தவிர்த்து பார்வையாளருக்கு நன்கு விளங் கும்படி உரத்த தொனியில் ஆற்றுகையை மேற்கொண்டிருந் தனர். இவ்வாற்றுகைக்கு தரம் 9-ஐ சேர்ந்த மாணவர்கள் பார் வையாளராகக் கலந்து கொண்டு ஆற்றுகையை கண்டுகளித் தனர். நாடக முடிவில் அம்மாணவர்களோடு பேராசிரியர் சி. ஜெயசங்கர் அவர்கள் கலந்துரையாடினார். அதன்போது நாடக ஆற்றுகை தொடர்பாகவும், நடைமுறைக் கல்வி தொடர்பாகவும் மாணவர்கள் தமது கருத்துக்களையும், சந் தேகங்களையும் முன்வைக்க, அதற்கு பேராசிரியர் அவர்க ளால் பதில்களும், விளக்கங்களும் வழங்கப்பட்டது. அத னைத் தொடர்ந்து பாடசாலை சிற்றுண்டிச் சாலையில் தேநீர் விருந்துபசாரத்துடன் அப்பாடசாலை நாடகமும் அரங்கிய லும் பாட ஆசிரியர் அருட்குமரன் அவர்கள் ஆற்றுகையிலீடு பட்ட மாணவர்களிற்கு பாராட்டுக்களை வழங்கியதுடன், நாட கம் தொடர்பான தனது கருத்துக்களையும் பரிமாறிக்கொண் டார். அதனைத் தொடர்ந்து மீண்டும் திருநெல்வேலி அம்மாச் சியில் மதிய உணவினைப் பெற்றுக்கொண்டு மாணவர்கள் அடுத்த ஆற்றுகைக்கு தயாராயினர்.

கொக்குவில்லில் அமைந்திருந்த தேசிய கலை இலக்கியப் பேரவையில் அடுத்த ஆற்றுகை மாலை 4 மணியளவில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையானது பல்துறைசார்ந்த அறிஞர் கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் என பலத ரப்பட்டோர் ஒன்று கூடி கலந்துரையாடும் ஒரு அறிவுக்கூட மாகும். இங்கு கலந்துரையாடல்கள், புத்தக அறிமுக விழாக் கள், ஆற்றுகைகள் என பலதரப்பட்ட நிகழ்வுகள் நடைபெ றும் ஒரு நாற்சார் வீடாக அவ்விடம் அமைந்திருந்தது. இங்கு சத்திய சோதனை நாடகத்தை பார்வையிடுவதற்கென யாழ் பல் கலைக்கழக ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி க. சிதம்பரநாதன், யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியல் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க. ரதிதரன், நாடகவிய லாளர் த. தேவானந், பு. கணேசராஜா அவர்களின் சண் நாட கக் குழுவினர், க. சத்தியசீலன் அவர்களின் செம்முகம் ஆற் றுகைக் குழுவினர், நாடக கலைஞர்கள், பெண்நிலைவாத செயற்பாட்டாளர்கள் அடங்கலாக பலதரப்பட்டோர் வருகை தந்திருந்தனர்.

இப்பேரவை பணிமனை நாற்சார் வீடாக காணப்பட்டமை நாடக ஆற்றுகையிலீடுபட வந்த மாணவர்களிற்கு புதிய அனு பவமாக இருந்தது. நாற்சார் வீட்டின் அமைப்பினை அவதா னித்த நெறியாளர் மாணவர்களை அதற்கேற்றவாறு காட்சிப் பொருட்களை ஒழுங்குபடுத்தி தயார்ப்படுத்தினார். மாணவர் களிற்கும் இது புதிய அரங்க அமைப்பாக இருந்தது. இது வரை நடைபெற்ற ஆற்றுகைகளில் பார்வையாளரிற்கும் ஆற் றுகையாளரிற்கும் காணப்பட்ட இடைவெளி அதிகமாகக் காணப்பட்டது. பேரவையில் ஆற்றுகை இடம் நாற்சார் வீடா கக் காணப்பட்டமையால் பார்வையாளர்கள் ஆற்றுகையிடத் திற்கு மிக அருகில் காணப்பட்டனர். இது ஆற்றுகையில் ஈடுப டப்போகும் மாணவிகளிற்கு தயக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என எண்ணிய வேளை, அவர்கள் இதற்கு முந்தைய ஆற்று கைகளை விட சிறப்பாக ஆற்றுகையை வெளிப்படுத்தியி ருந்தனர். இது மாணவர்கள் அரங்கிற்கேற்றால் போல் தம்மை தயார்ப்படுத்திக் கொள்ளும் விதத்தினை உணர்த்தியது.

இவ்வாற்றுகையின் பின்னர் கலாநிதி க. சிதம்பரநாதன் கருத் துக்களைப் பகிரும் போது 'தான் பாடசாலை மாணவர்களை வைத்து இந்நாடகத்தை பழக்கும் போது இந்நாடகத்தில் வரும் சோதனை எழுதும் காட்சியை மிகவும் ஆர்வமாக மாண வர்கள் நடித்திருந்தனர். காரணம் அது அவர்களுடன் தொடர் புபட்டதாய் அமைந்தது. ஆனால் இங்கு மேடையேற்றப்பட்ட நாடகம் பல்கலைக்கழக மாணவிகளைக் கொண்டு பழக்கப் பட்டதால் அவர்கள் ஆய்வாளர்களாகச் செய்து காட்டிய காட்சி பார்வையாளரிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. காரணம் பல்கலைக்கழக மாணவர்களிற்கு ஆய்வுகள் சம்பந் தமாக அதிக பரீட்சயம் இருக்கின்றமை' என்பதை சுட்டிக்காட் டியதுடன் இன்றைய சூழலில் கல்வியின் நிலை, அதில் எவ் வாறான மாற்றங்கள் அவசியம், நாடக ஆற்றுகைகளின் அவ சியம் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடினார். அத னைத் தொடர்ந்து கருத்துரைத்த நாடகவியலாளர் த. தேவா னந் அவர்கள் நாடகத்தின் எளிமைத் தன்மையையும், நவீன இசைக்கருவிகளைத் தவிர்த்து நாடகத்தில் இசைக்காகக் கையாளப்பட்ட கருவிகள் தொடர்பாகவும் தனது கருத்துக்க ளைக் கூறினார். அவர் கூறும் போது இந்நாடகத்தில் பயன்ப டுத்தப்பட்ட கிறிச்சான் தேவாலயங்களில் இயேசு கிறிஸ்து இறந்ததை குறிப்பதற்காக பயன்படுத்தும் கருவியாகும். இதனை இந்நாடகத்தில் பயன்படுத்தியமை மாணவர்கள் படும் பாடுகளை வெளிக்காட்டுவதாக அமைவதுடன், நாட கத்திற்கான இசையை வழங்கிய விதத்தின் எளிமையும் வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது என்றார். இத னைத் தொடர்ந்து பல ஆளுமைகள் நாடகத்தின் அவசியம், தற்கால கல்வி முறையின் போதமை, அதில் நாம் கொண்டு வர வேண்டிய மாற்றங்கள் என்பன குறித்து தமது கருத்துக் களை முன்வைத்து கலந்துரையாடினர்.

கலந்துரையாடல் நிறைவுற்ற பின் செம்முகம் ஆற்றுகைக் குழு நிறுவனர் க. சத்தியசீலன் அவர்கள், 'இதற்கு முன் நீங் கள் ஆற்றுகை செய்த மேடையா அல்லது இந்த வீடா, நாடக ஆற்றுகை செய்ய உங்களுக்கு இலகுவாக இருந்தது ? என்ற வினாவை மாணவர்களிடம் முன்வைத்தார். அதற்கு மாணவர் கள் 'நாற்சார் வீட்டில் நாடகம் செய்தமை எளிதாக இருந்து, பார்வையாளர் தம்மை சூழ தரையிலிருந்தும், இருக்கைகளி லிருந்தும் ஆற்றுகையை கண்டுகளித்தபோது எமக்கு மேடைக்கூச்சம் என்ற ஒன்று வரவில்லை. சாதாரண சூழலில் ஆற்றுகை செய்வது போல் இருந்தது' என பதிலளித்தனர். இவ்வுரையாடல் தனித்து நோக்கப்பட வேண்டியதாகும். படச் சட்ட மேடையில் இடம்பெறும் ஆற்றுகைகள் பார்வையாளர் களை இருளிலாற்றி, அவர்கள் சிந்திப்பதைத் தவிர்ப்பதோடு, மேடையில் அடைக்கப்பட்ட மூன்று சுவற்றுக்குள் நடிகர்கள் ஆற்றுகையை மேற்கொள்ளும் போது நடிகரும் கட்டிறுக்கத் துடனேயே ஆற்றுகையில் பங்கேற்பர்.

கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம் பெற்ற ஆற்றுகையையுடன் அன்றைய நாளின் ஆற்றுகைகள் முடிவுக்கு வந்தன. அன்றைய நாள் இரவு எமது நுண்கலைத் துறைத் தலைவர் திருமதி துஷ்யந்தி சத்தியஜித் அவர்கள்



மாணவிகளுடன் அன்றைய நாள் ஆற்றுகைகள் தொடர்பாக கலந்துரையாடலை மேற்கொண்டு, அவர்களை வாழ்த்தியது டன், நாடகத்தில் மேலும் எவ்வாறு திறம்பட ஆற்றுகை செய்ய லாம் என அறிவுரைகளும் வழங்கினார்.

மறுநாள் (26.04.2024) பரி. யோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, திருமறைக்கலாமன்றம் உள்ளடங்கலாக நான்கு தடவைகள் ஆற்றுகைகள் மேற்கொள்ளப்படவேண் டியிருந்தது. காலை 7 மணியளவில் சத்திய மனையிலிருந்து புறப்பட்டு காலை உணவை திருநெல்வேலி அம்மாச்சி உண வகத்தில் வீட்டு உணவினை ஒத்த தரத்தில் சுவையான உண வினை எமது கிழக்குப் பல்கலைக்கழக பழைய மாணவர் வாகீசன் அவர்களின் நிதியுதவில் பெற்றுக்கொண்டு முதலா வது ஆற்றுகைக்காக பரி. யோவான் கல்லூரியை வந்தடைந் தோம்.

பரி. யோவான் கல்லூரி அதிபர் எம் அனைவரையும் இன்மு கத்துடன் வரவேற்றதோடு, சிறந்த அறிமுக உரையையும் வழங்கி கல்லூரி பிரதான மண்டப மேடையை எம்மிடம் கைய ளித்தார். இக்கல்லூரியில் இடம்பெற்ற முதலாம் ஆற்றுகை யில் தரம் 6-11 வகுப்பு மாணவர்கள் பெருந்தொகையில் கலந்து கொண்டிருந்தனர். மண்டபத்தின் இறுதி இருக்கை வரை மாணவர்கள் காணப்பட்டமை ஆற்றுகையிலீடுபட வந்த மாணவிகளிற்கு உத்வேகத்தை தந்தது. அதன்படி, இறுதி இருக்கையில் இருக்கும் பார்வையாளர்கள் வரை அனைவ ரிற்கும் நாடகம் விளங்கும் படி மாணவிகளும் தமது குரலை உரத்த தொனியில் உரையாடினர். இதற்கான பதிற்குறி இறுதி வரிசையிலிருந்த மாணவர்கள் உட்பட அனைவரும் நாடகத்தில் வரும் 'ஹலோ மிஸ்டர் கந்தையா' வசனத்திற்கு தாமும் இணைந்து 'ஹலோ' என்று கூறியமை எமக்குணர்த்தி யது. முதலாம் ஆற்றுகை நிறைவடைந்ததும் மாணவர்களு டன் பேராசிரியர் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

தரம் 6-11 வரையான மாணவர்கள் முன்னிலையில் முதலாம் ஆற்றுகை நிறைவடைந்ததும் கல்லூரி அதிபருடன் கலந்து ரையாடல் கூடத்தில் தேநீர் விருந்துபசாரத்துடன் கலந்துரை யாடலும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து க.பொ.த உயர்தர மாணவர்கள் முன்னிலையில் அடுத்த ஆற்றுகை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மாணவர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெற்றது. இதில் பல மாணவர்கள் துணிச்சலாக நடைமுறைக் கல்வியின் பொருத்தப்பாடின்மை தொடர்பாக தமது கருத்துக்களையும், ஆதங்கங்களையும் கூறினர். அதிலொரு மாணவர் தனது கற்றல் செயற்பாடுகள், ஏனைய கல்லூரி செயற்பாடுகளில் தான் மாற்று சிந்தனை கள், மாற்று முயற்சிகளை மேற்கொள்வதால் சமூகம் தன்னை நோக்கும் விதம் பற்றியும், தன்னையும் சமூகத்துடன் ஒத்து ஓடுமாறு நிந்திப்பதாகவும் கூறினார். அதிலும் குறிப்பாக தனது கருத்தை 'உனக்கு கடிக்குது எண்டதுக்காக நான் குளிக்கேலாது' என்ற வசனத்தினூடு அங்கு கூடியிருந்த அனைவருக்கும் ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

அன்றைய நாளின் மூன்றாம் ஆற்றுகைக்காக பரி. யோவான் கல்லூரியின் சகோதர பாடசாலையான சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்குச் சென்றோம். அங்கு நாம் செல்லுமுன்னரே பெருந்திரளான மாணவிகள் கல்லூரி மண்டபத்தில் கூடியி ருந்தனர். பாடசாலை சீருடையில் தம்மை ஒத்த பாடசாலை

மாணவிகள் தான் ஆற்றுகை செய்ய வருகின்றனர் என நினைத்த கல்லூரி மாணவிகளிற்கு வருகை தந்தவர்கள் பல் கலைக்கழக மாணவிகள் என்பது நாடகம் முடிந்தும் ஏற்றுக் கொள்ள முடியாத மனநிலை காணப்பட்டதுடன் ஆச்சரியமும் அடைந்தனர். அங்கு எமது மாணவிகள் மேற்கொண்ட ஆற்று கைகள் கல்லூரி மாணவிகளை இலகுவில் நாடகத்துடன் இணைத்துக் கொண்டது. நாடகத்தில் பரீட்சைக்கு படிக்கும் காட்சியில் வாய்ப்பாட்டை மனனம் செய்யும் போது நடிகர் பார்வையாளரிடம் ‘ஓர் ஒண்டு ஒண்டு, ஈர் ஒண்டு என்ன ?’ என பார்வையாளரிடம் கேட்கும் போது அவர்கள் அதற்கான பதி லைக் கூறினர். இது மாணவர்களை நாடகத்துடன் நன்றாக தொடர்புபடச் செய்தது. ஆற்றுகை முடிந்ததும் கல்லூரி மாணவிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் பல மாணவிகள் முன்வந்து தமது கருத்துக்களை முன்வைத்தனர். அதில் ஒரு மாணவி ‘தற்போதைய சூழலில் அனைவரும் உயிரியல் விஞ்ஞானம், கணித விஞ்ஞானம் என்பவற்றையே சிறந்த பாடமாகக் கருதுகின்றனர். ஆயினும் கலைப் பாடம் போன்ற ஏனைய பாடங்களும் உண்டு. எமக்கு அதில் விருப் பமிருப்பினும் சமூகம் அப்பாடத்தினை எடுப்பவர்களை பொருட்படுத்துவதில்லை. நாம் விரும்பிக் கற்றால் எத்துறை யில் என்றாலும் நாம் முன்னேறலாம். இதற்கு உதாரணமாக எனது நண்பியின் தாயார் கலைப்பாடத்தை தெரிவு செய்து இன்று அவர் விரிவுரையாளராக சிறந்த இடத்தில் உள்ளார்’ என எடுத்துக்காட்டுடன் தனது கருத்தையும், நாடக ஆற் றுகை தொடர்பான கருத்துகளையும் கூறினார். தொடர்ந்து கல்லூரி அதிபருடன் கலந்துரையாடல் மண்டபத்தில் கலந்து ரையாடல், தேநீர் விருந்துபசாரம் நடைபெற்றது. இதில் கல் லூரி அதிபர் ஆற்றுகையிலீடுபட்ட மாணவிகளிற்கு பாராட்டு களையும், நன்றியையும் தெரிவித்தார்.

அன்றைய நாளின் முதல் மூன்று ஆற்றுகைகளைத் தொடர்ந்து மதிய உணவிற்காக நாடக ஆற்றுகையிலீடுபட்ட 3-ம் வருட 1-ம் அரையாண்டு மாணவி ந. கோபிகா தனது இல்லத்திற்கு அழைத்திருந்தார். எம்மை இன்முகத்துடன் வரவேற்ற எமது மாணவியின் குடும்பத்தார் சுவையான மதிய உணவை வழங்கி எம்மை சிறப்பித்தனர். அதனைத் தொடர்ந்து இறுதி ஆற்றுகைக்காக யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்திற்கு சென்றோம்.

யாழ். திருமறைக் கலாமன்ற பணிப்பாளர் ஜோன்சன் ராஜ்கு-மார் அவர்கள் எம்மை இன்முகத்தோடு வரவேற்றார். மாலை 4 மணியளவில் கலைத்தூது கலையக அரங்கில் நாடகக் கலைஞர்கள், அறிஞர்கள், பல்துறை ஆளுமைகள், ஆற்று கையில் ஈடுபட்ட மாணவர்களின் பெற்றோர், பொதுமக்கள் என பலர் முன்னிலையில் ஆற்றுகை ஆரம்பமானது. இறுதி ஆற்றுகை என்பதனாலோ என்னவோ மாணவர்கள் சற்று அதீத நடிப்பினை வெளிப்படுத்தி பார்வையாளரை கட்டுப்ப டுத்தி நாடகத்தை கண்டுகளிக்கச் செய்தனர். ஆற்றுகை யைத் தொடர்ந்து நீண்ட கலந்துரையாடல்கள் பலதரப்பட்ட ஆளுமைகளால் மேற்கொள்ளப்பட்டது. பலர் நாடக ஆற்று கையின் எளிமைத் தன்மை பற்றியும், நாடகம் கூற வந்த கருத்துகள் பார்வையாளரிடம் ஏற்படுத்திய தாக்கம் பற்றியும் உரையாடியதுடன், நெறியாளரின் நெறியாள்கைத் தரம், மாணவர்களின் ஆற்றுகை தொடர்பாக பாராட்டிச் சென்றனர். இறுதியில் ஜோன்சன் ராஜ்குமார் அவர்கள் உரையாற்றும் போது மாணவர்களிற்கு பாராட்டை கூறிக்கொண்டதுடன், நடைமுறைக் கல்வியின் நிலை தொடர்பாக தனது கருத்தை முன்வைத்தார். கலந்துரையாடலுடன் எமது ஆற்றுகைகள் அனைத்துமே நிறைவடைந்தன.

சுழிபுரம் சத்தியமனையிலிருந்து யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை வீதியூடாக கீரிமலை நகுலேச்சரம் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் என்பவற்றை பார்வை யிட்டு எமது நுண்கலைப்பாட 2-ம் வருட மாணவி நிறையினி வீட்டில் காலை உணவிற்காக செல்ல திட்டமிட்டிருந்தோம். அதன்படி அவ்வீதியால் செல்லும்போது பொன்னாலை வரத ராஜப் பெருமாள் ஆலயம், சம்பில்துறை, திருவடிநிலை, ஜம் புகோளப்பட்டினம் என்பவற்றின் அழகை பேருந்திலிருந்தே இரசித்தவாறு கீரிமலை நகுலேச்சரம் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் என்பவற்றிற்கு சென்று தரிசித்தோம். பின்னர் நிறையினி வீட்டிற்கு சென்று சுவையான காலை உணவை புசித்தோம். பின்னர் அங்கிருந்து இயக்கச்சியில் அமைந்துள்ள ரீச்சா சேதனப் பண்ணையை பார்வையிடச் சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள உலக அதிசயங்களின் மாதிரிகள் முன்னிலையில் புகைப்படங்கள் எடுத்துக்கொண் டோம். அதைத்தொடர்ந்து கிளிநொச்சி பாரதி உணவகத்தில் மதிய உணவை அருந்தி விட்டு மட்டக்களப்பை நோக்கிய பயணம் தொடர்ந்தது.

இரவு 9 மணியளவில் பல்கலைக்கழகத்தை நாம் வந்தடை யும்போது பல்கலைக்கழகத்தில் வெடிச்சத்தங்கள் ஒலித்தது. அது அன்றைய தினம் சிங்கள மாணவர்களால் புதுவருட கொண்டாட்டத்தின்போது வெடிக்கப்பட்டது எனினும் எமது பேருந்து பல்கலைக்கழக வாயிலை அடைகின்றபோது கேட்ட வெடிச்சத்தம் எமக்காக நீண்ட பயணம் சென்று இரு நாட்களில் 6 தடவைகள் 5 இடங்களில் ஆற்றுகை செய்து, பலரின் பாராட்டுக்களை பெற்று, மீண்டும் பல்கலைக்கழகத் திற்கு வருகை தரும்போது தரும் பலத்த வரவேற்பாக அமைந்தமை எம் அனைவருக்கும் மகிழ்வினை ஏற்படுத்தியது.

‘சத்திய சோதனை’ நாடகத்தில் இடம்பெற்ற வசனத்தைப் போல எமது பயணம் நீண்ட பயணம்... ஆக இப்பயணம் அமைந்தது. இந்நாடக ஆற்றுகையில் பங்குபற்றிய மாணவி கள் நாடக ஆற்றுகைகளில் முன்னனுபவமற்றவர்களாக காணப்பட்ட போதும் நாடக நெறியாளராகிய பேராசிரியர் சி. ஜெயசங்கர் அவர்களின் நெறிப்படுத்தலில் திறம்பட ஆற்று கையை மேற்கொண்டிருந்தனர். நாடகம் என்றால் இப்படித் தான் இருத்தல் வேண்டும் என்ற எண்ணக் கட்டமைப்பை இந் நாடக நெறியாள்கை மாற்றியமைத்தது. இது மாணவர்களின் மனதிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும். இந்நாடகம் மாணவிகள் தம்மை தாமே அறிவதற்கும், தமது உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணர்வதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தி யது. நாடக ஒத்திகைகளின் ஆரம்பத்தில் தயக்கத்துடனும், கட்டாயத்தின் பேரிலும், முழு விருப்பமின்றி பங்குபற்றியவர் கள் மீண்டும் பல்கலைக்கழகம் திரும்பியபோது நாடகத்தில் விருப்புள்ள செயற்பாட்டாளர்களாகவும், முன்னின்று செயற்ப டக்கூடியவர்களாகவும் மாற்றமடைந்திருந்ததை அவதானிக்க முடிகிறது.



Cannan.p@thaiveedu.com

# கிளிநொச்சி மாவட்டத்தில் 'தமிழ் இன்னியம்'



**– க. விஜயசேகரன்**

வடக்கில் தமிழ் இன்னியத்தை அறிமுகப்படுத்தியது கிளிநொச்சி அழகியல் கலாமன்றமாகும். 2005-ல் கிளிநொச்சி நகரில் அமைந்திருந்த அழகியற் கலாமன்றம் தமிழ் இன்னியத்தின் முதலாவது அணியை உருவாக்கியது. கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே பேராசிரியர் சி. மௌனகுருவினால் உருவாக்கப்பட்டிருந்த தமிழ் இன்னியம் இதற்கு முன்னோடியாக இருந்தது.



2005-ல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் நாடக விழா நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பேராசிரியர் சி. மௌனகுரு என்னை அழைத்திருந்தார். 'வாய்ப்பிருந்தால் உங்களுடைய பிரதேசத்தைச் சேர்ந்த ஏனைய நாடகவிலாளர்களையும் அழைத்து வரமுடியுமானால் நல்லது' என்றார். அங்கே 'தமிழ் இன்னியம்' என்ற தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கிய வரவேற்பு அணியொன்றை புதிதாக தான் உருவாக்குவதாகவும் அதைப்பற்றி அறிவதற்கும் பயில்வதற்கும் வாய்ப்புள்ளது. முடியுமானால் இரண்டு நாட்கள் முன்கூட்டியே வந்தால் உதவியாக இருக்கும்' என்றும் கோரியிருந்தார் மௌனகுரு அவர்கள்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவதைப்பற்றி அழகியற் கலா மன்றத்தில் ஆலோசித்தோம். நல்லதொரு வாய்ப்பாக இருப்பதால், நிச்சயமாக இதில் கலந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைவாக அப்போதைய கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்த திரு. சு. இராசநாயகம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூறி, அதற்கான அனுசரணையை அழகியற் கலாமன்றத்துக்கு வழங்கியிருந்தார். குறிப்பாக மட்டக்களப்புச் செல்வதற்கான போக்குவரத்துக்கான வாகன ஏற்பாடு, உணவு மற்றும் இதர செலவுகள் உட்பட அனைத்தையும் தானே செய்வதாகவும் கூறினார்.

இதனையடுத்து, அழகியற் கலாமன்றத்துடன் இணைந்து செயற்பட்டு வந்த நாடகக் கலைஞர்களான ஆசிரியர்களான ரஞ்சினி (மாசார்), விமலேஸ்வரன் (அக்கராயன்), பிரபாகரன் (ஸ்கந்தபுரம்), சாந்தா (அக்கராயன்) மற்றும் நானுமாக (க. விஜயசேகரன்) ஐந்துபேர் மட்டக்களப்புக்குப் பயணித்தோம்.

முன்கூட்டியே நாம் சென்றதால், அங்கே பலருடனான அறிமுகம் கிடைத்தது. குறிப்பாக விரிவுரையாளர் பாலசுகுமார், தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த நாட்டுப்புறவியல்துறைப் பேராசிரியர் கே. குணசேகரன், பேராசிரியர் சி. ஜெயசங்கர், சித்திரலேகா மௌனகுரு உள்ளிட்ட பலரும் அறிமுகமானார்கள். அந்தச் சந்திப்பில் நாடகத்துறை, நாட்டுப்புறவியல், தமிழ் இசைக்கருவிகள் எனப் பல விடயங்களைப் பற்றி விரிவாக உரையாடவும் அறியவும் முடிந்தது. அப்போது அங்கே மௌனகுரு அவர்கள் தான் கூறியதைப்போல 'தமிழ் இன்னியம்' என்ற தமிழ்ப் பண்பாட்டுக்கூறுகளை உள்ளடக்கிய வரவேற்பு ஆடல் அணியொன்றை பயிற்றுவித்துக் கொண்டிருந்தார்.

இந்த அணி, உலகத் தமிழ் நாடக விழாவின் தொடக்க நிகழ்வின் வரவேற்புக்காக உருவாக்கப்பட்டுப் பயிற்றுவிக்கப்பட்டது. இதில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவ மாணவியரும் விபுலாநந்த அழகியற் கல்லூரி மாணவர்களும் இணைந்திருந்தனர். தமிழிசை, தமிழ் ஆடல் மரபுகளை உள்ளடக்கியதாக இந்த ஆடலணியை அவர் உருவாக்கினார். இதொரு பரிசோதனை முயற்சியாகவே இருந்தது. இதில் நாமும் இணைந்து பல விடயங்களையும் அறிந்தும் பயின்றும் கொண்டோம்.



தமிழ் இன்னியத்தின் அடிப்படை ஆடல்களையும் அதற்குப் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளின் வரலாறு, அவற்றின் பயன்பாடு போன்றவற்றையும் பேராசிரியர் மூலம் தெளிவாக அறிந்து கொண்டோம். அது மட்டுமல்ல, இந்த இன்னியம் உருவாகிய சூழலையும் அதன் அடிப்படை செயற்பாட்டு முறைகளையும் மௌனகுரு அவர்கள் விளக்கினார்.

தமிழர்களின் பாரம்பரிய இசைக் கருவிகளில் மிகப் பழமையானதும் உயிர்ப்பானதுமான 'பறை' என்னும் இசைக்கருவியை இன்னியத்தில் பயன்படுத்தினர். வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து, பறைமேளக்கூத்து, காவடி முதலான ஆடல் வடிவங்களையும் உள்வாங்கி இவ்வணியை உருவாக்கியிருந்தார் பேராசிரியர் மௌனகுரு. இன்னியத்துக்காக உடுக்கு, மத்தளம் போன்ற தோற்கருவிகளுடன் கெஞ்சிரா போன்ற கருவிகளையும் பயன்படுத்திய பேராசிரியர் துணைக் கருவிகளான சங்கு, கொம்பு, சேமக்கலம், சல்லாரி, சலங்கை போன்றனவற்றையும் பயன்படுத்தினார். இவற்றுடன் அணிகலன்களாக கொடி, ஆலவட்டம் இணைக்கப்பட்டன.

'பறை, சங்கொலி முழங்க கொடி, கொம்பு ஆலவட்டத்துடன் தமிழ் மன்னன் சபை ஏறினான்' என்கின்ற தமிழ்ச் சொற்றொடருக்கு அமைய தமிழ் இன்னிய ஆடல் முழுமை பெற்றதைக் காண முடிந்தது.

தொடர்ச்சியாக ஏழு நாட்கள் நடந்த இந்தச் செயற்பாட்டின் போது புதுவைப் பல்கலைக்கழகத்தின் நாட்டாரியல்துறைப் பேராசிரியர் கே.ஏ. குணசேகரன் எம்முடன் கூடவே இருந்தது எமக்கு மிகப் பயனாக அமைந்தது. அவரோடு தமிழ்ப் பண்பாட்டு அடிப்படைகளையும் சிறப்பியல்புகளையும் விரிவாகப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த உறவும் உரையாடலும் பிற்பட்ட காலத்தில் கிளிநொச்சியில் தமிழ் இன்னியத்தை உருவாக்குவதற்கும் தமிழ் இன்னிய இசைக்கருவிகளைத் தமிழ் நாட்டிலிருந்து பெறுவதற்கும் மிக உதவியாக அமைந் தன.

இதில் முக்கியமான இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். இந்த ஏழு நாட்களில் தனியொரு நாள் பறைமேளக் கூத்து நிகழ்த்திக்காட்டப்பட்டது. அதோடு அது குறித்த விளக்கத்தையும் அளித்த பேராசிரியர் சி. மௌனகுரு அந்தக் கலைஞர்களுடன் உரையாடுவதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்தார். அக்கலந்துரையாடல் கூத்தின் தாளக் கட்டுகளையும், ஆடல் முறைகளையும் அறிந்துகொள்ள துணை செய்தது. அத்துடன், இந்தக் கூத்தின் சமகால நிலவரம் குறித்தும், இந்தக் கலையில் அவர்களுக்கிருந்த ஈடுபாடு குறித்தும் மக்களின் வாழ்க்கைமுறையில் இக்கூத்து ஏற்படுத்திய தாக்கம் குறித்தும் அறிந்துகொண்டோம். இன்றைய நிலையில் இந்தக் கூத்துக்கு இருந்த சமூக அந்தஸ்த்து மற்றும் அதன் இடம் பற்றியெல்லாம் விளங்கிக்கொள்ள இந்நிகழ்வு துணை செய்தது.

இவ்வாறு கோர்வை செய்யப்பட்ட தமிழ் இன்னிய ஆடல் குழுவினை கிழக்கில் மட்டுமன்றிச் சகல தமிழ்ப் பிரதேசங்களிலும் செயற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகவும் எமது தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்பட்டு, புதிய வடிவில் அவை முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற பேரவாக் கொண்டவராகவும் பேராசிரியர் மௌனகுரு விளங்கினார். எம்மை மட்டக்களப்பிலிருந்து வழியனுப்பி வைக்கும்போது இதை அவர் வலியுறுத்தியுமிருந்தார்.

கிளிநொச்சிக்கு வந்த நாம் அடுத்த சில வாரங்களில் நாடக விழாவின் அனுபவங்களையும் தமிழ் இன்னியத்தைப் பற்றிய கருத்து உருவாக்கங்களையும் இங்குள்ள கலை ஆர்வலர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்களோடு பகிர்ந்து கொண்டோம். இதனையடுத்து, தமிழ் இன்னியத்தைக் கிளிநொச்சியில் உருவாக்கி, அறிமுகப்படுத்தலாம் என்று தீர்மா

னித்தோம். அப்பொழுது அழகியற் கலாமன்றத்தின் செயற்பாட்டுக்கு கல்வித் திணைக்களம், தமிழீழக் கல்விக்கழகம், UNICEF, மற்றும் கிளிநொச்சி கலை இலக்கிய நண்பர்கள், வெளிச்சம் வாசகர் வட்டம் போன்றவை ஆதரவளித்துச் செயற்பட்டன. இவற்றின் பேராதரவோடு கிளிநொச்சி மாவட்டத்தின் 32 உயர் மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் தமிழ் இன்னிய அணிகள் உருவாக்கப்பட்டன.

இதற்கென இந்தியாவுக்குச் சென்று தேவையான இசைக்கருவிகளைக் கொள்வனவு செய்து வந்திருந்தேன். இன்னியத்தின் முதலாவது அணியின் வரவேற்பு ஆடல் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் திறப்பு விழாவின்போது நிகழ்த்தப்பட்டது. இது அந்த நிகழ்வில் பங்குபற்றிய பலருக்கும் பெரு வியப்பை ஏற்படுத்தியதுடன், பலருடைய பாராட்டையும் பெற்றது. இந்த அணியில் கிளி/ புனித தெரேசா பெண்கள் கல்லூரி, கிளி/ மத்திய கல்லூரி, கிளி/ மகாவித்தியாலயம், கிளி/ இந்துக்கல்லூரி, கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் பங்கேற்றனர்.

இந்த அணியில் பங்கேற்ற மாணவர்களுக்கு அழகியற் கலாமன்றம் தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்கியது. இதன் மூலம் தரமானதொரு இன்னிய அணி கிளிநொச்சியில் உருவாக்கம் பெற்றது. அழகியல் கலாமன்றத்தின் முக்கியத்துவம் வாய்ந்த செயல்நிலைகளில் ஒன்று, தமிழ் இன்னியத்தை கிளிநொச்சியில் அறிமுகப்படுத்தியதாகும்.

அடுத்த அணி பூநகரிப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்டது. அங்குள்ள பாடசாலை மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டனர். இதில் 30 மாணவர்கள் வரையில் பங்குபற்றினர். இவர்களை அந்தப் பிரதேச ஆசிரியர்கள் பொறுப்பெடுத்து அழைத்து வந்தனர். மூன்று நாட்கள் வதிவிடப் பயிற்சியாக நடைபெற்ற இந்தச் செயற்பாட்டின்போது கவிஞர் கருணாகரன், ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளையும் பாராட்டுகளையும் வழங்கியிருந்தனர். அரச அதிபர் இராசநாயகமும் வருகை தந்து பாராட்டினார். இவையெல்லாம், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உற்சாகத்தை அளித்தது.

## விழாக்கோலம் பூண்ட கிளிநொச்சி நகர்:

32 பாடசாலை மாணவர்களது தமிழ் இன்னிய அணிகளுக்கும் தொடர்ச்சியான பயிற்சி அளிக்கப்பட்டு, 2006-ம் ஆண்டு கிளிநொச்சி றொட்றிக்கோ மைதானத்திலிருந்து ஒவ்வொரு அணிகளாக நகரத்தின் வழியே அழகியற் கலாமன்றத்தைச் சென்றடைந்த காட்சி இன்றும் பலராலும் நினைவு கூரப்படுகிறது. இதனை அன்று க.வே. பாலகுமாரன், வெ. இளங்குமரன், கவிஞர் புதுவை இரத்தினதுரை எனப் பலரும் விதந்து போற்றியிருந்தனர். இவ்வாறு நடைபெற்ற அணிவகுப்பின் பின்னர் இந்த இன்னிய அணிகளைப் பற்றிய கருத்தமர்வு அழகியற் கலாமன்றத்தின் திறந்தவெளி அரங்கினுள் நடைபெற்றது. இதில் கல்வியியலாளர்கள், பாடசாலை அதிபர்கள், பத்திரிகையாளர்கள், தமிழ்ப் பண்பாட்டுப் பற்றாளர்கள், போராளிகள் எனப் பலரும் கருத்துரைத்தனர். இந்த நிகழ்வை க.வே. பாலகுமாரன் தலைமையேற்று நெறிப்படுத்தியிருந்தார். இதன்போது சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

- மாவட்டத்தில் நடைபெறும் பொது நிகழ்வுகளின் வரவேற்பில் தமிழ் பண்பாட்டின் அடிப்படையைக் கொண்ட தமிழ் இன்னிய அணிகளையே பயன்படுத்த வேண்டும்.
- பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டு விழாக்களில் அணி நடை போன்றவற்றுக்கு மேற்கத்தேய இசைக்கருவிகளின் 'பாண்ட்' குழுவைப் பயன்படுத்தும் அதேவேளை, விருந்தினர் வரவேற்புக்கு தமிழ்ப் பண்பாட்டு இன்னியக் குழுவினரையே பயன்படுத்த வேண்டும்.
- வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஏனைய பாடசாலைகளுக்கும் இன்னிய குழுவினருக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு, குழுக்கள் தயார் செய்யப்பட வேண்டும்.
- அரச/அரசசார்பற்ற பொது அமைப்புகளின் பொது நிகழ்வுகளில் எமது கலை பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த இன்னிய அணிகளைப் பயன்படுத்த வேண்டும்.

இத்தீர்மானங்கள் பெரும்பாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. அவை அடுத்த கட்டத்துக்கு விரிவடைய முன், யுத்தம் கிளிநொச்சியை இடம்பெயர வைத்தது.

## யுத்த காலத்துக்குப் பின்னர்:

யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் அழகியற் கலாமன்றத்தின் செயற்பாடுகள் தொடர முடியாத சூழலில் (அதற்கான காணியையும் கட்டடத் தொகுதியையும் படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ளனர்) புதிய தலைமுறையினர் தமிழ் இன்னியத்தை உருவாக்கி, பல இடங்களிலும் அவற்றை விரிவாக்கி, நிகழ்த்தி வருகின்றனர். இதற்குத் தூண்டுதலாகவும் ஆதரவாகவும் இருந்தவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றத்தின் பிரதிக் குழுக்களின் தலைவருமாக இருந்த முருகேசு சந்திரகுமார். அவருடைய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் தமிழ் இன்னியக் குழுக்கள் கிளிநொச்சியில் மீளுருவாக்கம் செய்யப்பட்டன. கிளி/ புனித தெரேசா பெண்கள் பாடசாலை, கிளி/ மகாவித்தியாலயம், கிளி/ இயக்கச்சி மகாவித்தியாலயம், கிளி/ வேரவில் மகாவித்தியாலயம், கிளி/ விவேகானந்த வித்தியாலயம், கிளி/ சாந்தபுரம் வித்தியாலயம், கிளி/ பாரதிபுரம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு இன்னிய உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த அணிகளே இப்போது கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும்பாலான நிகழ்வுகளில் வரவேற்பு ஆடலை நிகழ்த்துகின்றன.

சிங்களப் பண்பாட்டில் எப்படிக் கண்டிய நடனத்துக்கு ஒரு சிறப்படையாளமும் முக்கியத்துவமும் உள்ளதோ அதைப் போல தமிழ் இன்னியத்துக்கும் ஒரு சிறப்பு அடையாளமும் முக்கியத்துவமும் உண்டு. தொடக்கப் புள்ளியாக தமிழ் இன்னியத்தை உருவாக்கி அதைச் செயற்படுத்தும் வரலாற்றோடு இணைந்து நின்ற, மகிழ்ச்சியும் பெருமையும் எப்போதும் எனக்கும் அழகியற் கலாமன்ற அணியினருக்கும் உண்டு. இந்தச் சிறப்புப் பயணத்தில் இணைந்து நின்ற அனைவரையும் நன்றியுடன் நினைவு கொள்கிறேன்.



Vijayasegaren@thaiveedu.com



# ‘மரணத்தை விடக் கொடியது’
## நாடகம் பார்த்த அனுபவம்

- மகிழினி -

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் மற்றும் உலகத் தமிழர் வரலாற்று மையம் இணைந்து நடத்திய நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 50-ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில், ஜுன் 30, 2024 அன்று மேடையேற்றப்பட்ட மெய்வெளி அரங்க இயக்கத்தின் ‘மரணத்தை விடக் கொடியது’ என்ற நாடகத்தைப் பார்த்தேன்.

மண் சுமந்த மேனியர், பொங்கு தமிழுக்குப் பிறகு, மக்களை எழுச்சிகொள்ள வைத்த ஒரு நாடக முயற்சியை அன்றுதான் நான் பார்த்தேன். உறைந்து போய் வியந்து உட்கார்ந்திருந்த என்னையும் மற்றவர்களையும் எழுந்து நின்று கைகளைத் தட்ட வைத்திருந்தது ‘மரணத்தை விடக் கொடியது’ என்ற அந்த நாடகம். ஆரம்பம் முதல் முடிவு வரை கண்வெட்டாமல் மேடையோடு ஒட்டவைக்க நாடகங்களாலும் முடியுமா என்ற கேள்விக்கு மெய்வெளி அரங்க இயக்கம் சொற்களால் அல்ல தமது நாடக மேடையேற்றத்தால் பதில் சொல்லியிருந்தது.

மனித உயிர்களைக் கொலை செய்யும் காலன்கள் அல்லது எமதர்மன் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் மனித நினைவுகளைக் கொலை செய்யும் காலன்கள் என்ற பாத்திர அறிமுகத்தோடு ஆரம்பமாகியிருந்த இந்த நாடகம் எல்லோரையும் கட்டியிழுத்துக்கொண்டு போன வரலாற்றுப் பக்கங்கள் ஏராளம். ஞாபகங்களைக் கொல்லும் காலன்கள் என்ற ஒரு சிந்தனை தமிழ் நாடகப் பரப்புக்குப் புதிய சிந்தனையென்றுதான் எண்ணத் தோன்றுகிறது. நினைவுகளைக் கொலை செய்தபின், ஓர் இனம் குறித்து அழிப்பதற்கு வேறொன்றும் இருந்துவிடப் போவதில்லை என்பது மிகப் பெரியதொரு அரசியல். அந்த அரசியலைச் சரியான வகையில் நாடகம் எடுத்து வந்திருந்தது என்று சொல்வதில் மிகைப்பாடில்லை. உலகத் தமிழாராய்ச்சிப் படுகொலையின் ஐம்பதாவது நினைவுகள் குறித்த விடயத்தை மையக்கருவாகக் கொண்டிருப்பதாக வெளிப்படையாகப் பட்டாலும், தமிழினம் குறிப்பாக ஈழத்து மக்களின் மேல் இப்போது வரைக்கும் எழுதப்பட்டிருக்கும் அரசியலைச் சூசகமாக நாடகம் சொல்லியிருப்பதாக எனக்குப் பட்டது.

இரண்டு முக்கியமான விடயங்களை, காட்சிகளுக்கூடாக இந்த நாடகத்தினை இயக்கிய மெய்வெளி வெளிப்படுத்தியிருப்பதாக நம்புகிறேன். ஒன்று நினைவுகளைக் கொலை செய்யும் காலன்கள். மற்றையது கற்கள் சொல்லும் கதை. நினைவுக் கொலை செய்யும் காலன்கள் நினைவுகளைத் தோண்டிக் கதை சொல்லும் கற்கள் என்ற அற்புதமான இந்த இரண்டு வகையான உருவகங்களோடு நகர்த்தப்பட்ட இந்த நாடகம் போதுமானதாக இருந்தது. நாடக முடிவில் எழுப்பப்பட்ட எழுச்சிக்கு அங்கிருந்த மக்களைத் தயார்படுத்துவதற்கு. ஐந்து தாசாப்தங்களின் முன்னர் இருந்த நாங்கள் யார் ? இப்போதிருக்கும் நாங்கள் யார் ? இன்னும் கொஞ்சக் காலம் கழித்து இருக்கப்போகும் நாங்கள் யார் என்பதை ஒரு காட்டமான விமர்சனமாக எள்ளல் கலந்த நையாண்டித்













தனமாக, யாருக்கும் பயப்பிடாமல் சொன்ன மெய்வெளியின் துணிச்சலும் சீற்றமும் வெளிப்படையாகவே நாடகத்தில் வெளிப்பட்டது. இயக்குனர் எங்களை நையம்புடைக்கிறாரா அல்லது நல்லாய்ச் சொல்கிறாரா என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் சொல்லப்பட்ட சங்கதிக்குள்ளிருந்த பலமான உண்மை என்னை உடைத்து உடைத்துப் போட்டபடியிருந்தது. காலன்களின் வார்த்தைகளிலிருந்து கல்லுகளின் பரிதாபம், கடைசிக் கவிதை விடுத்த சவால் வரை ஒரு விதமான சமகாலச் சமூக அரசியல் விமர்சனத்தைப் பார்வையாளர்களுக்கு எறிந்தது நாடகம்.

ஒருவிதமான கவிதைத்தனமான உரையாடல்கள், கருத்துள்ள பாடல்கள், பொருத்தமான உடலசைவுகள், மிகச் சிறந்த ஆடை அணிகலன்களின் நேர்த்தியான தயாரிப்பு, நெஞ்சை ஊடறுக்கும் இசை, நடிகர்களின் கூரிய பார்வைகள், எல்லாமும் சேர்ந்து ஒரு பரவச நிலையில்தான் மக்களைக் கட்டி வைத்திருந்தது அன்று. எங்கே எப்படிக் காட்சிகள் தொடங்கும் என்றும், எங்கே எப்படிப் போய் அவைகள் முடியும் என்றும் தெரியாமல் அந்த இடத்தின் எல்லா வெளிகளையும் அவதானத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பார்வையாளருக்குள் நடிகர்கள் புகுந்தார்கள். பின்னர் அவர்களுக்குள்ளிருந்து வெளியே வந்தார்கள், பூக்களைக் காவி வந்தார்கள், புனிதத்தனமான கூடொன்றைப் புகையடித்தபடி தூக்கி வந்தார்கள். குமுழிகளைப் பறக்கவிட்டார்கள், வெடி கொளுத்தினார்கள். என்னவகையான திட்டமிடல் இவையென என் போலப் பலரையும் ஆச்சரியப்படுத்தினார்கள். கத்தை கத்தையாக வசனங்களை ஒப்புவிக்கும் நாடகங்களைப் பார்த்துப் பழகிய எனக்கு, உடல் அசைவுக்குக் காத்திரமான பங்கு கொடுத்து அரங்கேற்றப்பட்ட இந்த நாடகம் ஒரு புதிய அனுபவத்தைத் தந்திருந்தது. ஒட்டுமொத்த புலம்பெயர் தமிழ் சமூகமும் ஒரு தடவை இந்த நாடகத்தைப் பார்ப்பது எங்கள் சமூகத்துக்கு நன்மை பயக்கும் என்பது எனது நம்பிக்கை. இப்படி ஒரு நாடகத்தை இந்த நிகழ்வுக்காகத் தயாரிப்பதற்கு ஒழுங்குபடுத்திய உலகத் தமிழர் வரலாற்று மையத்திற்கு நன்றி. தொடர்ந்தும் இப்படியான தரமான கலைகளை மக்கள் கவனத்துக்குக் கொண்டுவந்து தரவேண்டும் என ஏற்பாட்டாளர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



# ஜொகான் சண்முகரத்தினம்:

## மொழிச் செழுமையும் படைப்பாளுமையும் புத்தகங்களும்

- ரூபன் சிவராஜா

'வாசகர்களை ஈர்க்கின்ற செழுமையான ஊடகமொழி கைவரப்பெற்றவர் ஜொகான். நகைச்சுவை, அறிவார்ந்த பார்வை, மற்றும் நேர்த்தியான ஊடகமொழி மூலம் வியத்தகு ஆற்றலுடன் வாசகர்களை ஈர்க்கின்றார். அவர் தனது எழுத்துகளிற் கையாளும் பேசுபொருட்களின் பரப்புப் பெரியது, ஆனால் எப்போதும் காலப்பொருத்தமுடையவை. நோர்வேஜிய பத்திரிகைப் பரப்பினை விரிவுபடுத்தத் துணை நிற்கின்றார். அந்தப் பரப்பினை நகைச்சுவை, அறிவு, புதிய நுண்ணறிதல், திடமான ஊடக மொழி ஆகியவற்றால் நிரப்புகிறார்'.

### ஜொகான் பின்னணி:

ஜொகான் 1985-ல் தனது 6-வது வயதில் பெற்றோர் மற்றும் இவரிலும் 4 வயது மூத்தவரான சகோதரருடன் நோர்வேக்குப் புலம்பெயர்ந்தவர். இவரது தந்தை ஈழத் தமிழர். அவர் நம் மத்தியில் வாழும் சிந்தனையாளரும் விமர்சகருமான பேராசிரியர் ந. சண்முகரத்தினம் ஆவார். தாயார் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர் (Mikuko Kitayama). ஜொகான் ஈழத்தில் பிறந்து தனது மூன்று வயது வரை அங்கு வாழ்ந்து - பின்னர் தனது தாயாரின் தாயகமான ஜப்பானில் ஆறு வயது வரை வாழ்ந்தவர். 1985-ல் குடும்பத்துடன் நோர்வேக்குப் புலம்பெயர்ந்தவர்.

### ஊடகவியளாளர் – எழுத்தாளர்:

ஜொகான் ஒஸ்லோப் பல்கலைக்கழகத்தில் சமூகப் புவியியல் துறையில் பயின்றவர். 2003-ம் ஆண்டிலிருந்து தற்போது வரை நோர்வேயின் 'கிளஸ்சக்கம்பன்' (Klassekampen/Class Struggle) நாளிதழில் ஊடகவியலாளராகப் பணியாற்றி வருகின்றார். 2011 - 2017 காலப்பகுதியில் அவ்விதழின் சர்வதேசச் செய்திகள், கட்டுரைகளுக்கான பிரிவின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றியவர்.

நாளாந்தம் பத்திரிகைக் கட்டுரைகளுக்கு அப்பால் நோர்வேஜிய மொழியில் இதுவரை மூன்று நூல்களையும் எழுதியுள்ளார். 'Vi puster fortsatt' (நாம் இன்னும் சுவாசிக்கின்றோம்), 'Bruddet - Byen som ville ha brexit' (உடைவு - வெளியேற்றத்தை விரும்பிய நகரம்), 'Hjertet i to: Seks måneder med Karpe' (இதயம் இரண்டாக: கார்பேயுடன் ஆறு மாதங்கள்) ஆகியன அவர் எழுதிய நூல்களாகும். இவருடைய நூல்கள் இனவாதம், அடையாளம், இணைவாக்கம், அந்நியப்படுத்தல் ஆகிய பேசுபொருட்களை உள்ளடக்கிய கதையாடல்கள். மூன்று நூல்களும் நோர்வேஜிய ஊடக, இலக்கிய, வாசகர் மட்டங்களிற் பரவலாக அறியப்பட்டவை.

ஜொகான் சண்முகரத்தினம் அவர்களுக்கு நோர்வேயின் முதன்மைச் செய்தி நிறுவனமான NTB-இன் (Norsk Telegrambyrå/The Norwegian News Agency) 2023-ம் ஆண்டுக்கான 'மொழி விருது' வழங்கப்பட்டுள்ளது. 2007-ம் ஆண்டிலிருந்து NTB இந்த மொழி விருதினை ஒவ்வோராண்டும் வழங்கி வருகின்றது. நோர்வேஜிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராத ஒருவர் முதன்முறையாக இவ்விருதிற்குத் தெரிவாகியுள்ளமை தனித்துவமான அம்சமாகின்றது. நோர்வேயின் பர்கன் (Bergen) நகரில் இடம்பெற்ற 'நோர்டிக் ஊடக நாட்கள் - The Nordic Media Days' நிகழ்வின் போது (மே 2-ஆம் திகதி) விருது வழங்கப்பட்டுள்ளது.

'வாசகர்களை ஈர்க்கின்ற செழுமையான ஊடகமொழி கைவரப்பெற்றவர் ஜொகான்' என வர்ணித்துள்ளது விருதுத் தெரிவிற் பணியாற்றிய நடுவர் குழு.

இவ்விருது கிடைக்கப்பெற்றதையிட்டு நெகிழ்ச்சியும் பெருமையும் கொள்வதாக ஜொகான் தனது உணர்வினைப் பகிர்ந்துள்ளார்.

'இந்த விருதினைப் பெற்றமை எனக்கு மிக முக்கியமானது. நான் நோர்வேக்கு வந்த புதிதில் பாடசாலை தொடங்கிய போது, எனக்கு நோர்வேஜிய மொழில் ஒரு வார்த்தைகூடத் தெரியாது. விசேட வகுப்புகளில் திணறிக்கொண்டிருந்த அந்த ஆறு வயதுச் சிறுவனுக்குச் சொல்லியிருக்க வேண்டும். அதாவது அந்தச் சிறுவன் ஒரு நாள் மொழிக்கான விருதினைப் பெறப்போகின்றான் என்பதைச் சொல்லியிருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்' என விருது பெற்றதை அடுத்துத் தனது உணர்வுகளை வெளிப்படுத்தினார் ஜொகான்.

நோர்வேஜிய ஊடக-இலக்கியப் பரப்பில் ஜொகானுக்குக் கிடைத்திருக்கும் இரண்டாவது விருது இதுவாகும். கடந்த 2022-ல் இவருடைய இரண்டாவது புத்தகத்திற்கு (Bruddet) நோர்வேயின் புத்தக வணிகக் கூட்டமைப்பின் ((Norwegian Bookstore assosiation) விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## NTB – நோர்வேஜிய முதன்மைச் செய்தி – ஒளிப்பட நிறுவனம்:

'NTB' 1867-ல் நிறுவப்பட்ட நோர்வேஜிய ஊடகங்களுக்கான மையச் செய்தி மற்றும் ஒளிப்பட நிறுவனமாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செய்திகளுடன் ஒளிப்படக் காணொளித் தயாரிப்புகளையும் மேற்கொண்டு வருகின்றது. ஸ்கன்டிநேவியாவின் முதன்மைச் செய்தி நிறுவனங்களில் ஒன்றாகும். கிட்டத்தட்ட 200 ஊடகங்களுக்குத் (தொலைக் காட்சி, நாளிதழ், இணைய இதழ்கள், வானொலி) தகவல் ஆதாரங்களுடனான மூலச் செய்தி வழங்கலை மேற்கொள்கின்றது. நோர்வேயின் தேசிய தொலைக்காட்சி நிறுவனமான NRK மற்றும் நோர்வேஜிய மைய நாளிதழ்கள் இதன் முதன்மை வாடிக்கையாளர்கள். நடப்பு நிலைமைகள் தொடர்பான புதிப்பிக்கப்




பட்ட அறிதலைக் கொண்டிருக்க விரும்பும் தனியார் நிறுவனங்கள், அரச திணைக்களங்களுக்கும் NTB செய்திக் கட்டுரைகளை விற்பனை செய்கிறது.

2007-ம் ஆண்டிலிருந்து ஒவ்வோராண்டும் நோர்வேயின் ஊடக எழுத்தாளர்களில் ஒருவரைத் தனியான நடுவர் குழு மூலம் தேர்வு செய்து மொழிவிருதினை NTB வழங்கிவருகின்றது. குறித்த ஆண்டு முழுவதும் சிறந்த எழுத்துவடிவச் செய்திமொழியில் ஆளுமையை வெளிப்படுத்தும் ஊடகத்துறை ஆளுமைக்கான விருது இதுவாகும்.

## மூன்று அபுனைவு நூல்கள்:

### 'Vi puster fortsatt'
### (நாம் இன்னும் சுவாசிக்கின்றோம்):

முதலாவது புத்தகமான 'நாம் இன்னும் சுவாசிக்கின்றோம்' நோர்வேக்குப் புலம்பெயர்ந்து வாழ்ந்த சூழலில் எதிர்கொண்ட அனுபவங்களை விபரிப்பதன் ஊடாக நோர்வேயின் பல்லினக் கலாசார மற்றும் பெரும் சமூகத்துடனான இணைவாக்க வாழ்வு பற்றிப் பேசுகின்றது. நோர்வேயும் உலகமும் 80-களின் நடுப்பகுதியிலிருந்து இன்றுவரையான காலவோட்டத்தில் இனவாதம், இணைந்த வாழ்வு, பல்லினக் கலாசாரச் சூழல் சார்ந்து எத்தகைய அனுபவங்களையும் மாற்றங்களையும் கண்டிருக்கின்றது என்பதைத் தனது பார்வையில் பதிவு செய்கின்றார். இரு கலாசாரச் சூழலின் இனவாதம், இனவாதத்திற்கு எதிரான போக்குகள் குறித்த சுய அனுபவ நிகழ்வுகளின் விபரிப்புகளை உள்ளடக்கியதாகும்.

நோர்வேயின் உள்நாடு சார்ந்த சமூக - அரசியல் நிகழ்வுகளின் பின்னணியிலும், உலக அரசியல் மாற்றங்களின் பின்னணியிலும் விபரிக்கப்படுகின்றது. தனது பூர்வீகப் பின்னணி, நோர்வேயில் ஒரு வெளிநாட்டுப் பின்னணியுடைய குடும்பத்தின் குழந்தையாக வளர்கின்ற சூழலின் அனுபவங்களை முதன்மையாகத் தொட்டுச் செல்கின்றார்.

இந்நூலில் அவருடைய தாய் - தந்தையரின் பின்னணி, அவர்களுடைய காதல் - திருமண வாழ்வு குறித்த தகவல்களும் உள்ளன. இந்தப் புத்தகம் இனவாதம் பற்றியது மட்டுமல்ல. வேர், அடையாளம் குறித்த புத்தகமும் கூட.

ஜொகான் தனது நினைவுகளிலிருந்து நிகழ்வுகளையும் அவற்றின் அனுபவங்களையும் மீட்டுத் தனது இரண்டு பிள்ளைகளுக்கும் சொல்கின்ற ஒரு சொல்முறையினைக் கைக்கொண்டிருக்கின்றார். நேரடியாக அவர்களுக்கு ஒரு கதையைச் சொல்வதான உத்தியை இதில் காணலாம். 'நீங்கள் வாசிக்கவுள்ள இந்தப் புத்தகம் நோர்வேயுடனான 'எனது சந்திப்பினதும் என்னுடனான நோர்வேயின் சந்திப்பினதும் காட்சிப் படங்கள்' என்கிறார். 1980 மற்றும் 1990 காலப்பகுதிகளில் நோர்வேயில் வெளிநாட்டுப் பின்னணியைக் கொண்ட குடும்பத்தின் குழந்தையாக வாழ்வது தொடர்பான சூழலை எழுத்திற்கொண்டு வரும் முயற்சி இதுவெனவும் குறிப்பிடுகிறார்.

### 'Bruddet – Byen som ville ha brexit'
### (உடைவு – வெளியேற்றத்தை விரும்பிய நகரம்)

இரண்டாவது புத்தகத்தின் தலைப்பினை 'உடைவு' எனத் தமிழ்ப்படுத்தலாம். 'Brexit' என்பது ஐரோப்பிய ஒன்றிய - பிரித்தானிய உறவினை மறுவரையறை செய்துள்ள ஒரு வரலாற்று அரசியல் நிகழ்வு. அதன் அரசியல், பொருளாதார விளைவுகள் பிரித்தானியாவின் உள்நாட்டு மட்டத்திலும், ஐரோப்பா மற்றும் உலகளாவிய ரீதியில் பாரிய தாக்கங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளன. 'Bruddet' புத்தகம் அதனைப் பற்றியதே. ஆனால் அது தகவல், தரவுகள், நிகழ்வுகள், வரலாறு, அரசியல் விடயங்களை நேரடியாகப் பேசுகின்ற புத்தகமல்ல.

இரண்டு வெவ்வேறு சமூக, வாழ்வியல் பின்னணிகளைக் கொண்ட மனிதர்களைப் பின்தொடர்ந்ததன் வாயிலாக எழுதப்பட்டுள்ள அபுனைவுக் கதை (Non-fiction). பிரித்தானியாவின் Boston நகரில் வசிக்கும் லித்துவேனியப் பின்னணியைக் கொண்ட இரண்டு பிள்ளைகளின் தாயான அலெக்சாண்ட்ரா எனும் இளம் பெண், அதே நகரைச் சேர்ந்த மீனவ வயோதிபரான அல்பேட் ஆகிய இருவரும் இப்புத்தகத்தின் கதை மாந்தர்கள். Brexit பின்னணியில் அவர்களுடைய வாழ்க்கை இதில் பேசப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுவதென்ற

முடிவுக்கு அரசியல் அங்கீகாரம், மக்கள் ஆணை பெறப்பட்ட பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்ட 2016-லிருந்து அதிகாரபூர்வமாக விலகல் நிகழ்ந்த ஜனவரி 2021 வரையான நான்கு ஆண்டுகள் ஊடகவியலாளர் ஜொகானும் ஒளிப்பட ஊடகவியலாளர் Line Ørnes Søndergaard-உம் இவ்விருவரையும் தொடர்ச்சியாகப் பின்தொடர்ந்து உரையாடி, அவர்களின் வீடுகள், வேலைத் தளங்கள் போன்ற இடங்களில் ஊடாடியும் அன்றாட வாழ்வினை அவதானித்ததன் மூலமும் இப்புத்தகம் உருவாகியுள்ளது.

பொது வாக்கெடுப்பின் போது 75.6 வீதமான Boston நகர மக்கள் விலகலுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். பிரித்தானியா முழுவதிலும் இந்நகரத்திலேயே விலகலுக்கு ஆதரவாக அதிக வீத வாக்குப் பதிவாகியிருந்தது. ‘உடைவினை விரும்பிய நகரத்தின் கதை’ என்பது புத்தகத்தின் துணைத் தலைப்பு.

எல்லைகள் திறக்கப்படுவதும் மனங்கள் அடைக்கப்படுவது பற்றியதும் - அதிகாரம், இயலாமை, நம்பிக்கையீனம், ஒருமைப்பாடு, வெளியேற்றக் காலத்தின் காதல் உறவு பற்றியதுமான கதையைப் பேசுகின்றது இப்புத்தகம்.

2022-ல் ஜொகான் அவர்களுக்கு இந்தப் புத்தகத்திற்காக நோர்வேயின் புத்தக வணிகக் கூட்டமைப்பின் (Norwegian Bookstore assosiation) விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (Non-fiction award) அபுனைவு விருது அதுவாகும். நோர்வேயின் Lillehammer நகரத்தில் 2023 மே 30 - ஜூன் 5 வரை நடைபெற்ற வருடாந்த இலக்கிய விழாவில் ஜூன் 3 இவ் விருது வழங்கப்பட்டது.

**Hjertet i to: Seks m˚neder med Karpe’**
**(இதயம் இரண்டாக: கார்பேயுடன் ஆறு மாதங்கள்)**

மூன்றாவது புத்தகமான ‘இதயம் இரண்டாக’ ராப் இசைக் குழு ஒன்றைப் பற்றியது. அகதிகள், புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோருக்கான திட்டங்களை ஆதரிக்கும் வகையில் ‘Karpe’ எனும் ராப் இசை இரட்டையர்களுடன் இணைந்து அவர்களின் Patel & Abdelmaguid Foundation (படேல் & அப்தெல்மாகுயிட்) அறக்கட்டளையின் உறுப்பினராக ஜொகான் உள்ளார்.

பெப்ரவரி 2022-ல், இரண்டாம் தலைமுறை புலம்பெயர்ந்தோருக்கும் அவர்களின் பெற்றோருக்கும் இடையேயான உறவைப் பற்றி, ‘Baraf/Fairuz - பராஃப்ஃ பைரூஸ்’ என்ற ‘கார்பே’ இரட்டையர்களின் பாடலைப் பற்றி ஜொகான் ‘கிளசிக்கம்பன்’ நாளிதழில் எழுதிய கட்டுரையானது சமூக ஊடகங்களில் பரந்தளவில் பேசுபொருளானது. அதனைத் தொடர்ந்து அதே ஆண்டு அந்த இசைக் குழுவின் பல இசை நிகழ்ச்சிகளில் அக்கலைஞர்களுடன் பயணித்து அவர்களை அவதானித்ததன் விளைவாக ‘இதயம் இரண்டாக: கார்பேயுடன் ஆறு மாதங்கள்’ என்ற மூன்றாவது புத்தகத்தினை எழுதினார்.

## மொழி விருது:
## நடுவர் குழுவின் கருத்துகள்:

பல்வேறு பண்பாட்டுப் பின்னணிகள் குறித்த ஜொகானின் அறிதலும் பார்வைகளும் அவரது எழுத்துகளுக்கு நம்பகத்தன்மை மற்றும் சுவாரஸ்யம் மிக்க வெளிப்பாட்டினைக் கொடுக்கின்றன. குறிப்பாகப் புலப்பெயர்வு (Migration), குடியேற்றம் (Immigrtion) போன்ற கருப்பொருட்களை அவர் நுண்ணறிதலுடன் கையாளுகின்றமை அவரது எழுத்துகளுக்கு வலுச்சேர்ப்பதாக விருதுத்தெரிவுக்கான நடுவர் குழு தெரிவித்துள்ளது. கடினமான பேசுபொருட்களை நேர்மையுடனும் நுண்ணறிதலுடனும் எடுத்துக்கொண்ட பேசுபொருளுக்கு நெருக்கமாக நின்று கையாளும் திறன் கைவரப்பெற்றவர் என்றும் நடுவர் குழு புகழாரம் சூட்டியுள்ளது.

நடுவர் குழுவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நகைச்சுவை, அறிவார்ந்த பார்வை, மற்றும் நேர்த்தியான ஊடகமொழி மூலம் வியத்தகு ஆற்றலுடன் வாசகர்களை ஈர்க்கின்றார். நாளாந்தப் பொருத்தமும் சர்ச்சைக்குமுரிய விடயப் பரப்புகள் சார்ந்து அவர் எழுதுவதும் வாசகர்களை வெகுவாக ஈர்க்கின்றது. ஜொகான் தனது எழுத்துகளிற் கையாளும் பேசுபொருட்களின் பரப்புப் பெரியது, ஆனால் எப்போதும் காலப் பொருத்தமுடையவை. மேலும் வாசகர்களைச் சொந்த முடிவுகளுக்குத் தூண்டும் வகையில் வெளிப்படைத் தன்மையுடன் எழுதுகின்ற எழுத்தாளராக அவரை நாம் அடையாளம் காண்கின்றோம். அத்தோடு பல சந்தர்ப்பங்களில் இவர் தனது எழுத்துகளில் தெளிவான நிலைப்பாடுகளை வெளிப்படுத்துகின்றார். குறிப்பாக வாசகரின் உணர்வுகளைத் தொடக்கூடிய உத்திமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அதனை நிகழ்த்துகின்றார்.

பல எழுத்துகளிற் தனிப்பட்ட அனுபவங்களைக் காவிய அந்தஸ்துள்ள புனைவுகளுடன் இணைப்பதன் மூலம் - சிறிய, தனிப்பட்ட சித்திரங்கள் மூலம் பெரிய விடயங்கள் குறித்த சித்தரிப்புகளை அவரது எழுத்துகள் எமக்கு வழங்குகின்றன. ஜொகான் சண்முகரத்தினம், வாசகர்களின் மனங்களிலுள்ள இடைவெளிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக நிரப்பும் வகையிலான எழுத்துகள் மூலம் நோர்வேஜியப் பத்திரிகைப் பரப்பினை விரிவுபடுத்தத் துணை நிற்கின்றார். இந்த வெற்றியாளர் அந்தப் பரப்பினை நகைச்சுவை, அறிவு, புதிய நுண்ணறிதல், திடமான ஊடக மொழி ஆகியவற்றால் நிரப்புகிறார். அதனூடு இளையவர்கள் மற்றும் முதிய வாசகர்களை ஈர்த்து அவர்களை வாசிக்கத் தூண்டுகின்றார் என நடுவர் குழு தமது தெரிவுக்கான காரணங்களைப் பட்டியலிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது.

புலம்பெயர் வாழ்வில் வாழும் நாட்டு மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத நிலையிலும் அம்மொழியில் தொடர்ச்சியாக எழுதுவதும் இலக்கியங்களைப் படைப்பதும் காத்திரமான அடைவுகள். அதிலும் பேசுபொருள் சார்ந்தும் வளம் சார்ந்தும் மொழியைச் செழுமையான முறையில் கையாள்வதற்கான அங்கீகாரத்தினை ‘மொழிவிருது’ மூலம் பெற்றுள்ள ஜொகான் புலம்பெயர் இளைய தலைமுறையினருக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றார்.



rooban.s@thaiveedu.com

# இலக்கிய ரசிகர் ரசிகமணி
# கனக. செந்திநாதன்



- வே. விவேகானந்தன்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே, வலிகாமம் வடக்கில், கல்விச் செல்வமும், பொருள் வளமும், ஆன்மீக உணர்வும் மிகுந்த, செம்மண் கிராமமாகிய குரும்பசிட்டியைப் பூர்வீகமாகக் கொண்டவர் இலக்கிய ரசிகர் ரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள். அங்கு வாழ்ந்து வந்த, கனகசபை பொன்னம்மா இணையருக்கு மகனாக, இவர் 1916-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி பிறந்தார். இவருக்குத் தந்தையார் வைத்த பெயர் திருச்செவ்வேல். தந்தையாரின் பெயரை இணைத்து கனக. செந்திநாதன் என இவரே தனது பெயரை மாற்றிக் கொண்டார். ஆனால் முக்கிய ஆவணங்களில் திருச்செவ்வேல் என்றே கையொப்பமிட்டு வந்தார். பிறந்த சில மாதங்களிலேயே தந்தையை இழந்த அவர், தாயாரின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார்.

கனக. செந்திநாதன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியைக் குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிலும், கற்று 1937-ம் ஆண்டு ஆசிரியர் பயிற்சி நெறியைத் தொடர திருநெல்வேலி சைவ ஆசிரியக் கலாசாலையில் இணைந்து கொண்டார். அங்கு மிகுந்த அக்கறையுடன் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களிடம் தமிழ் மொழியை நன்கு கற்று, ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையிலும் திறமைச் சித்தி பெற்றார். பின்னர் ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்து, தான் ஆரம்பக் கல்வியைக் கற்ற குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலை உட்படப் பல்வேறு பாடசாலைகளிலும் தொடர்ந்து 32 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் போதனை முறையும், சோ. சிவபாதசுந்தரம் அவர்களின் வழிகாட்டலும் கனக செந்திநாதன் இலக்கியப் பணிகளில் தன்னை இணைத்துக் கொள்ள உந்து சக்தியாக அமைந்தன. அதனால் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே தமிழ் இலக்கியப் பணிகளிலும் ஈடுபடத் தொடங்கினார். 1938-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் திகதி ஈழகேசரிப் பத்திரிகையில், 'யாழ்பாடி' என்ற புனைப் பெயரில், அவர் எழுதிய 'கடவுள் தீர்ப்பு' என்னும் முதலாவது சிறுகதை பிரசுரமானது. கரவைக் கவி கந்தப்பனார், இலக்கிய மாணவன், வேல், பரதன், உபகுப்தன் போன்ற புனைப் பெயர்களில் ஏராளமான சிறுகதைகளை எழுதியுள்ளார். அவற்றுள் ஒரு பிடிச் சோறு, வெண்சங்கு, செம்மண், சொந்தம், பிட்டு, தரிசனம், அலை ஓய்ந்தது, கூத்து, கண் திறந்தது, சமர்ப்பணம் ஆகிய பத்துச் சிறுகதைகள் உள்ளடங்கிய சிறுகதைத் தொகுதி 'வெண்சங்கு' என்ற பெயரில் 1967-ம் ஆண்டு யாழ். இலக்கிய வட்டத்தால் வெளியிடப்பட்டது. இவற்றுள் செம்மண் என்னும் சிறுகதை ஒப்சேவர் பத்திரிகையில் ஆங்கிலத்திலும் 1975-ம் ஆண்டு 'அத்த' பத்திரிகையில் சிங்களத்திலும் வெளிவந்தது. ஈழகேசரியில் பிரசுரமான ஒரு பிடிச் சோறு ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. தீபம் பத்திரிகையிலும் மறுபிரசுரமானது.

கனக. செந்திநாதன் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதிய பல சிறுகதைகள் நூல் வடிவில் வெளிவரவில்லை. அவற்றுள் மல்லிகையில் வெளிவந்த 'அன்பளிப்பு', வீரகேசரியில் வெளிவந்த 'உண்டியல்', தினகரனில் வெளிவந்த 'ஒல்லி மரம்', 1971-ம் ஆண்டு சிரித்திரன் பத்தாவது ஆண்டு மலரில் வெளிவந்த 'பெரிய மீன்', ஈழகேசரியில் வெளிவந்த 'வெந்த மனம்', 'மன்னிப்பு', 'அவனும் அவளும்', 'எதிர்பாராதது', வரதர் நடத்திய ஆனந்தனில் வெளிவந்த 'போட்டி' ஆகிய சிறுகதைகள் அவற்றுள் சிலவாகும்.

ஈழத்து எழுத்தாளர்கள் பெருமளவில் நாவல்களை எழுத முன்வராத காலத்தில் நாவல்களை எழுதுவதிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டவர் கனக. செந்திநாதன். உபகுப்தன் என்னும் புனைப்பெயரில் எழுதிய 'விதியின் கை', 1953.07.05-ம் திகதி முதல் ஈழகேசரியில் தொடராக வெளிவந்தது. இந்த நாவல் செம்மண் கிராமத்து வாசனையுடன், கிராமிய வாழ்க்கை முறையினையும், சமூக, சமய, கலாசாரச் செயற்பாடுகளையும், வெளிக்கொணரும் வகையில் அமைந்தது. அதேவேளை நிலப்பிரபுத்துவத்தின் எச்ச சொச்சங்களையும், உண்மைக

ளையும் பிரதிபலிக்கும் வகையில் எழுதியுள்ளார். இந்த நாவல் பின்னர் 1977-ம் ஆண்டு வீரகேசரிப் பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. பரதன் என்னும் புனைப்பெயரில் இவர் எழுதிய 'வெறும் பானை' என்னும் நாவல் 1956-ம் ஆண்டு ஈழகேசரியில் பிரசுரமாகியது. கதாபாத்திரங்களே கதை சொல்லும் வகையில் அமைந்தமை இதன் சிறப்பாகும். எஸ். பொன்னுத்துரை, இ. நாகராசன், கனக செந்திநாதன் ஆகிய மூவரும் சேர்ந்து எழுதிய நவரசங்களும் கொண்ட சரித்திர நாவலாக, 'மணிமகுடம்' என்னும் நாவல் விளங்குகிறது. இது 1962-ஆம் ஆண்டு வீரகேசரியில் வெளிவந்தது. கனக செந்திநாதனுடன் இ. நாகராசன், எஸ். பொன்னுத்துரை, சு. வேலுப்



பிள்ளை, இ. வள்ளிநாயகி (குறமகள்) ஆகிய ஐவரும் இணைந்து எழுதிய, 'மத்தாப்பு' என்னும் நாவல் வீரகேசரியில் தொடராக வெளிவந்து பின்னர் நூல் வடிவில் 1962-ம் ஆண்டு குரும்பசிட்டி சன்மார்க்க சபையால் வெளியிடப்பட்டது.

நாடகத் துறையிலும் கால்பதித்த கனக செந்திநாதன் பல மேடை நாடகங்களையும், வானொலி நாடகங்களையும் எழுதியுள்ளார். 1967-ம் ஆண்டளவில் இலங்கை வானொலி, நாடகங்களை ஒலிபரப்ப முன்வந்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்பிய கே.கே.வி. செல்லையா அவர்கள் தனது கவின்கலை நாடக மன்றத்தின் ஊடாக ஒரு நாடகத்தை ஒலிபரப்ப விரும்பினார். அவரது வேண்டுகோளுக்கிணங்க கனக செந்திநாதன் எழுதிய வானொலி நாடகமே 'ஒரு பிடிச் சோறு' ஆகும். இதனைப் பின்னர் மேடை நாடகமாகவும் திருத்தம் செய்து எழுதினார். கிராமிய வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட இந்த நாடகத்தை 1976-ம் ஆண்டு நீர்கொழும்பு இலக்கிய வட்டம் நூலுருவில் வெளியிட்டது. கனக. செந்தி-நாதனின் வானொலி உரைச் சித்திரங்களும் மக்கள் மனதைக் கவர்ந்தன. 1972-ம் ஆண்டு 'வாழையடி வாழை', 'எட்டாம் மடை' ஆகிய இரு பாட்டிடை உரைச் சித்திரங்கள் ஒலிபரப்பப்பட்டன. கிராமியக் கலை, கலாசார, பண்பாட்டு நிகழ்ச்சிகளைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த இரு உரைச் சித்திரங்களும் பின்னர் 1077-ம் ஆண்டு யாழ். இலக்கிய வட்டத்தினால் 'இரண்டு பூக்கள்' என்னும் தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டது.

இலங்கை வானொலியில் பேச்சுப் பகுதிக்குப் பொறுப்பாக அருள். தியாகராசா அவர்கள் பணியாற்றிய போது, ஈழத்தமிழ்ப் புலவர்கள் மற்றும் கல்விச் சான்றோர்களை அழைத்து, தூது, உலா, பள்ளு, பரணி என்ற வரிசையில் சொற்பொழிவுகளை நடத்தி வந்தார். 1962-ம் ஆண்டு அந்த நிகழ்ச்சியில் கனக. செந்திநாதனுக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதனை நன்கு பயன்படுத்தி, மதுரைக் கலம்பகம், நந்திக் கலம்பகம், பாசவதைப் பரணி, கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி, கதிரைமலைப் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, பறாளாய் விநாயகர் பள்ளு என்பன பற்றி வானொலியில் உரையாற்றினார். அவர் ஆற்றிய உரைகள் சில திருத்தங்களுடன் 'பிரபந்தப் பூங்கா' என்னும் பெயரில், 1967-ம் ஆண்டு வரதர் வெளியீடாகப் பின்னர் வெளிவந்தது.

இலக்கியப் பாடல்களையும், கவிதைகளையும் ரசிப்பதும், ஏனையவர்களின் மனதில் இலகுவில் பதியும்படி உரைப்பதும் கனக. செந்திநாதனுக்குக் கைவந்த கலையாகும். மாணவர் மத்தியில் மதிப்பு மிக்க ஓர் ஆசிரியராக விளங்க, இப்பண்பே முக்கிய காரணமாக இருந்தது. அவரை, 'இலக்கியச் சோலையிலே இனிய தேறல் சேர்க்கும் தேனீ' என மயிலங்கூடலூர் பி. நடராஜன் வர்ணித்துள்ளார். நவாலியூர் சோமசுந்தரப்புலவரின், 'நாமகள் புகழ் மாலை' என்னும் நூலில், ஓரெழுத்துச் சொல்லில் ஆரம்பிக்கும் பாடல் ஒன்றை எடுத்துத் தானும் ரசித்து, ஏனையவர்களும் ரசித்து இன்புறும் வண்ணம் எடுத்துக் காட்டிய விதம் வியப்புக்குரியது. அப்பாடல்:

***'தா வென்று சொல்லித் திருமுன்னரே தண்ட னிட்டு நின்றால்
வா வென்றழைத்து மடிமீதிருத்தி வருடி அணைத்து
ஆ வென்று வாயைத் திறவென்று அஞ்ஞானப் பசியடக்கிப்
போ வென்று புத்தமு தீவாள் அருந் தமிழ்ப் பூங்கொடியே.'***

அதுபோலவே சோமசுந்தரப்புலவர் கையாண்ட உவமானச் சிறப்பினை ரசித்துப் பின்வரும் பாடலை எடுத்துக் காட்டுகிறார். திருகோணமலையில் கன்னியாவிலுள்ள ஏழுவகையான சூடுள்ள வெந்நீர் ஊற்றுகளுக்கு ஏழுவகையான உவமானங்களைக் கையாண்ட சிறப்பினைப் பின்வரும் பாடல் மூலம்

இலக்கிய ரசிகர்களுக்கு அடையாளங் காட்டியுள்ளார்.

***'காதலனைப் பிரிந்த வளின் மனம் போல வொன்று
கவிபாடிப் பரிசு பெறான் மனம் போல வொன்று
தீதுபழி கேட்டவன்தன் மனம் போல வொன்று
செய்த பிழைக் கழுங்குமவன் மனம் போல வொன்று
நீதி பெறா வேழை துயர் மனம் போல வொன்று
நிறை பழித்த கற்புடையாள் மனம் போல வொன்று
காது மழுக் காறுடையான் மனம் போல வொன்று
கனலேறு மெழுநீர்களுண்டு கன்னியாவில்.'***

இவ்வாறு சோமசுந்தரப்புலவரின் கவிநயம் மிக்க பாடல்க ளைத் தெரிவு செய்து, 'திறவாத படலை' என்னும் தலைப்பில் நூலாக எழுதினார். இதனை யாழ் இலக்கிய வட்டம் 1972-ம் ஆண்டு வெளியிட்டது. 1962-ம் ஆண்டு 36 கவிஞர்களின் கவி தைகளைத் தொகுத்து, 'ஈழத்துக் கவிமலர்கள்' என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டார். இவர் எழுதிய, 'கடுக்க னும் மோதிரமும்' என்னும் இலக்கியக் கட்டுரைகள் கொண்ட நூல், சிறுவர் முதல் பெரியோர் வரை விரும்பி வாசிக்கும் வகையில் அமைந்துள்ளது.

சிறுவர் இலக்கியத்திலும் ஆர்வங்கொண்ட கனக. செந்திநா- தன், அம்பிப் பாடலின் வெளியீட்டு மலருக்காக, 'அருமைக் குழந்தைகளுக்கு ஓர் அம்பிப் பாடல்' என்னும் தலைப்பில் அருமையான ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அக்கட்டுரை யில் குழந்தைப் பாடல்களின் வளர்ச்சியைச் சுட்டிக்காட்டி, குழந்தைப் பாடல்கள் புத்தக வடிவில் எவ்விதம் வரவேண்டும் என்பதனை வலியுறுத்தி, அம்பியின் கவிநயத்தை அழகாகச் சித்தரித்துள்ளார். இக்கட்டுரையின் சிறப்பையும் முக்கியத்து வத்தையும் கருதிய யாழ். இலக்கிய வட்டம் பின்னர் அத னைச் சிறு பிரசுரமாக வெளியிட்டது. 1974-ம் ஆண்டு யாழ். கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை மாணவர்கள், ஏனைய ஆசிரிய கலாசாலைகளையும் இணைத்து மாபெரும் தமிழ் விழாவை நடாத்திய போது கனக. செந்திநாதன் ஆற்றிய உரையை குரும்பசிட்டி சன்மார்க்க சபை 1988-ம் ஆண்டு 'ஈழத்துக் குழந்தைப் பாடல்கள்' என்னும் தலைப்பில் சிறுபிர சுரமாக வெளியிட்டது.

ஈழத்து இலக்கியத் துறைக்குக் கனக. செந்திநாதன் ஆற்றிய அரும்பெரும் பணியாக, அவர் எழுதி, 1964-ம் ஆண்டு அரச வெளியீடாக வெளிவந்த, 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்னும் நூலைக் குறிப்பிடலாம். ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றிய வரலாற்றுப் பதிவு இல்லாத குறைபாட்டை உணர்ந்த அவர், பல ஆய்வுகளை மேற்கொண்டு அந்நூலை எழுதினார். வாசிப்பவர்கள் இலகுவில் விளங்கிக் கொள்ளும் வண்ணம் 1922 முதல் 1930 வரை, 1931 முதல் 1940 வரை, 1941 முதல் 1950 வரை, 1951 முதல் 1960 வரை, 1960-க்குப் பின்னர் என ஐந்து காலகட்டங்களாக வகுத்து எழுதியுள்ளார். அத்துடன் 1955-ம் ஆண்டு தொடக்கம் 1970-ம் ஆண்டு வரை ஈழத்தில் வெளிவந்த நூல்களின் நூல்விபரப் பட்டியலை, 'ஈழத்துத் தமிழ் நூல் வழிகாட்டி' என்னும் பெயரில் தொகுத்து வெளி யிட்டார்.

இலைமறை காயாக இருந்த ஈழத்து எழுத்தாளர்களை அறிமு கஞ் செய்வதிலும் ஆர்வங்கொண்ட கனக. செந்திநாதன், கர- வைக் கவி கந்தப்பனார் என்னும் புனைப்பெயரில், 1955-ம் ஆண்டு ஈழகேசரிப் பத்திரிகையில், 'ஈழத்துப் பேனா மன்னர் கள்' என்னும் தொடரில் ஈழத்திற் சிறந்த நாற்பது எழுத்தாளர் களை அறிமுகம் செய்து வைத்தார். ஈழகேசரி வெள்ளிவிழா மலரில், 'ஈழத்து மணி விளக்குகள்' என்னும் பெயரில் மறைந்த பதின்நான்கு அறிஞர்கள் பற்றி எழுதியிருந்தார்.

பல்வேறு இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபட்ட கனக. செந்தி- நாதன் வாழ்க்கை வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார். 'ஈழம் தந்த கேசரி' என்னும் பெயரில் நா. பொன்னையா அவர் களினதும், 'கலை மடந்தையின் தவப் புதல்வன்' என்னும் பெயரில் சிற்பாசாரியார் வி. ஆறுமுகம் அவர்களினதும், 'கவின்கலைக்கு ஓர் கலாகேசரி' என்னும் பெயரில் கலைஞர் ஆ. தம்பித்துரை அவர்களினதும் 'மூன்றாவது கண்' என்னும் பெயரில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களினதும் வாழ்க்கை வரலாற்றை நூல் வடிவில் வெளிக்கொணர்ந்தார். இவ்வாறு ஏனையவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய கனக. செந்திநாதன் தனது வாழ்க்கை வரலாற்றையும் எழுதத் தவறவில்லை. 'என் கதை-பாலைவனமும் பசுஞ்சோலையும்' என்னும் தலைப்பில் தனது சுயசரிதையினையும் எழுதி வெளி யிட்டார். அவரது இலக்கியப் பணிகளை ஒரு கட்டுரைக்குள் அடக்கிவிட முடியாது என்பதே யதார்த்தம்.

இலக்கியப் பணிகளுக்கப்பால் குரும்பசிட்டி சன்மார்க்க சபை, யாழ். இலக்கிய வட்டம் போன்ற அமைப்புகளில் இணைந்து அவற்றின் செயற்பாட்டுக்கும் உந்து சக்தியாகச் செயற்பட்டுள்ளார். இவரது இலக்கியப் பணிகளைப் பாராட்டி 1964-ம் ஆண்டு கிழக்கிலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம் 'ரசி கமணி' என்னும் பட்டத்தினை வழங்கியது 1969-ம் ஆண்டு அம்பனை கலைப் பெருமன்றம் 'இலக்கியச் செல்வர்' என் னும் பட்டமளித்துப் பெருமை கொண்டது.

கலை, இலக்கியம், நாடகம், கவிதை, விமர்சனம், கட்டுரை, வாழ்க்கை வரலாறு, உரைச் சித்திரம் எனப் பல்வேறு துறைக ளிலும் ஆளுமை மிக்கவராக விளங்கிய கனக. செந்திநாதன் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் திகதி அமரத்துவம் அடைந்தார். அவர் எழுதிய மற்றும் தொகுத்த படைப்புகள் 'தமிழால் உயர்ந்தவர்கள்' என்னும் பட்டியலில் அவரைச் சேர்த்துள்ளன. அவற்றை வாசிப்பதன் மூலம் தமிழின் பெரு மையினையும் கனக செந்திநாதனின் அறிவின் நுட்பத்தினை யும் உணர முடியும்.



vivekananthan.v@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com    Fax: 1-416-849-0594    Tel: 1-416-857-6406***

# சமகாலத்தை எதிரொலிக்கும் காலம்

– க. நவம்

காலம் சஞ்சிகையின் 60-வது இதழ் அண்மையில் எனது கையில் கிடைத்திருந்தது. 200 பக்கங்களுடன் வெளிவந்திருக்கும் இந்த இதழிலுள்ள கட்டுரைகள், நேர்காணல்களை மட்டும் மனதில் கொண்டு, கட்டிறுக்கம் கருதி, எனது கருத்துகளை மிகச் சுருக்கமாக இக்கட்டுரையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இவ்விதழின் முகப்போவியத்தை வரைந்திருப்பவர், முதலாவது செவ்வியை வழங்கியிருப்பவர் ஆகிய இருவரும் பெண்களே. முன்னவர் காலம் செல்வத்தின் செல்வப் புதல்வி கஸ்தூரி; பின்னவர் விளம்பரம் பத்திரிகை ஆசிரியர் சத்தியா மகேந்திரன்.

‘ஓவியம் என்பது கோடுகளாலும், வர்ணங்களாலும் நம்மை நாமே விசாரணைக்கு உட்படுத்திக்கொள்வதுதான்’ என்பார்கள் ஓவியர்கள். பாவப்பட்டவர்களுக்காய் சிலுவை சுமந்த யேசு மகான் அவதரித்த அந்த அழகிய புனிதபூமி, இன்று மயான பூமியாக வெறிச்சோடிக் கிடக்கும் அவலத்தையும், சமாதானத்தினதும் நட்பினதும் குறியீடான ஒலிவ் கிளைகளை அதன் பின்னணியிலும் இதழ் முகப்பில் சித்தரித்து, மானுடத்தின் மனச்சாட்சியை விசாரணக்கு உட்படுத்துகின்றது, கஸ்தூரியின் தூரிகை!

‘காலம் 60’ இதழில் 14 கட்டுரைகள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றும் தனித்தனியே விதந்துரைக்கப்பட வேண்டிய, பயனுள்ள, கனதியான பேசுபொருட்கள் நிறைந்த கட்டுரைகள். பொதுப்படையாகச் சொல்வதானால், இக்கட்டுரைகள் அனைத்தும், முக்கியமாக சமகால சமூக, அரசியல், கல்வி, கலை-கலாசார உட்சாரங்களை, வெவ்வேறு கனபரிமாணங்களில் உள்ளடக்கியவை. அந்தவகையில் பல்வேறு கல்விப் புலமைப் பின்னணிகளைக் கொண்ட வாசகர்களுக்கும் பயன் தரக்கூடியவை.

காலம் சஞ்சிகையின் குறிக்கோள் என்ன? இலக்கு என்ன? என நான் உட்பட பலராலும் அவ்வப்போது, ஆங்காங்கே எழுப்பப்பட்டுவந்த வினாவுக்கு விடையாக, ‘சமகாலத்தை எதிரொளிக்கும் காலம்’ என இங்கு நான் குறிப்பிடத் துணிந்தமைக்கும் இதுவே முக்கிய காரணம்.

***‘காலத்துக்கேற்ற வகைகள் - அவ்வக்***
***காலத்துக்கேற்ற ஒழுக்கமும் நூலும்***
***ஞான முழுமைக்கும் ஒன்றாய் - எந்த***
***நாளும் நிலைத்திடும் நூலொன்றுமில்லை’***

என்ற பாரதி வாக்குக்கு ஓர் உடனடி உதாரணமாக ‘காலம் 60’ வந்தமைந்திருப்பதை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

இவ்வாறாக, இன்றைய காலத்தையே பெரும்பாலும் காட்சிப்படுத்தும் எழுத்துகளைத் தாங்கி வெளிவந்திருக்கும் இந்த இதழில் உள்ள ஒரு சில கட்டுரைகளைத் தன்னிலும், தனித் தனியாகச் சற்றேனும் தொட்டுச்செல்வது நல்லதென்று நம்புகின்றேன்.

அந்தவகையில், எனது மனக்கண் முன்னே முதலாவதாக வந்து நிற்பது, தியாகு எழுதிய ’உலகைக் குலுக்கும் பலஸ்தீனம்.’

‘தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில், பலஸ்தீனத் தாயக மீட்புப் போராட்டதிற்குத் தனியிடமுண்டு. பற்பல ஏற்ற இறக்கங்களைக் கண்ட, வீரமும் தியாகமும் செறிந்து மிளிரும் இப்போராட்டம், இன்று பலஸ்தீன தேசத்தின் போராட்டமாக மட்டுமன்றி - அரபு தேசங்களின் போராட்டமாக மட்டுமன்றி - அமைதியையும், குடியாட்சியையும், முன்னேற்றத்தையும் நாடும் மாந்தர் குலத்தின், அனைத்துலகப் போராட்டமாக மலர்ந்துள்ளது’ எனக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

பலஸ்தீன மண்ணின் ஒரு பகுதியில், 1948 மே 14-ல் இஸ்ரேல் நிறுவப்பட்ட மறுநாளே, அப் புனிதபூமி யுத்தக் கொதிகலனாக மாறி, இன்றுவரை கொழுந்து விட்டெரிந்து வருவதற்கான வரலாற்றை, இக்கட்டுரை விலாவாரியாக விபரிக்கின்றது.

ஆனால் யுத்தத்தைவிட ஒரு கொடுமையை, துயரத்தை, பேரழிவை, வேறு எதுவும் கொண்டுவந்துவிட முடியாது; யுத்தம் அப்பாவி மனிதரை அனாதைகளாக, அபலைகளாக, அகதி

களாக, அடிமைகளாக அழுத்தி அலைக்கழித்துவிடுகிறது. யுத்தம் மானுடத்தைச் சிலுவையில் அறைகிறது எனும், உண்மைகளுக்கான உடனடி உதாரணங்களைத் தாங்கிவரும் இக் கட்டுரை, காலத்தின் தேவை கருதி எழுதப்பட்டுள்ள ஒரு துயர் தோய்ந்த கட்டுரையாகும்.




'காலம் 60' இதழின் கடைசிக் கட்டுரையான 'சோவியத் வாழ்வின் தொடர்ச்சி'யை எழுதிய கலாநிதி ஆனந்தராஜா, 1963 முதல் 72 வரை சோவியத் ஒன்றியத்தில் கல்வி கற்றவர். 94-ல் கனடாவிலிருந்து உத்தியோகபூர்வ பயணமொன்றினை மேற்கொண்டு, மீண்டும் மொஸ்கோ செல்லும் வாய்ப்பினைப் பெற்றவர். இவ்விரு காலகட்ட அனுபவங்களையும் அவர் ஒரு கதைபோல எளிமையாக சொல்கின்றார்.

அறிவியல், வானியல் என்பன முதற்கொண்டு, ஏனைய அனைத்துத் துறைகளிலும் அபரிமிதமான வளர்ச்சியை எய்தி, ஒரு வல்லரசாகி, அன்றைய பனிப்போர் காலத்து அதிகார சமநிலையைப் பேணிவந்த சோவியத் ஒன்றியதின் வீழ்ச்சி, அவருக்கு மிகுந்த கவலையையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளமையை அவரது கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

ஆனால், Each For All; All For Each எனும் மானுட நேயத்தின் பாற்பட்ட மார்க்ஸின் தத்துவத்தினை -

***'எல்லார்க்கும் எல்லாமென்றிருப்பதான
இடம் நோக்கி நடக்கின்றதிந்த வையம்
கல்லாரைக் காணும்கால்
கல்வி நல்காக்
கசடற்குத் தூக்குமரம் அங்கேயுண்டாம்
இல்லாரும் அங்கில்லை
பிறன் சொத்தைத் தமதென்று
சொல்வாரும் அங்கில்லை
எல்லாரும் நல்லாரே எனக்கென்ன
கிழியட்டும் பழைய பஞ்சாங்கம்'***

என்று அறைகூவிய புரட்சிக்கவிஞனின் சமதர்மப் பிரகடத்தினை - வெறுமனே ஓர் அரசியல் கோட்பாடாக மட்டும் கருதாமல், ஒரு சமூகக் கோட்பாடாக உற்றுநோக்குமிடத்து,

அதன் எதிர்கால நடைமுறைச் சாத்தியப்பாடுகள் மீதும், மீள்வரவுகள் மீதும் சமதர்மக் கோட்பாட்டாளர்கள் தமது நம்பிக்கையை இன்னமும் இழந்துவிடவில்லை என்பதையும் ஊகிக்கமுடிகின்றது.

'காலம் 60' இதழில், கடைசிக்கு முன்னரான கட்டுரையை, பேராசிரியர் சின்னத்தம்பி எழுதியிருக்கின்றார். 'கல்வியும் சமூக நீதியும்: நிறுவனங்களும் கொள்கைகளும்' என்ற தலைப்பிலான அக்கட்டுரையில் -

'எல்லோருக்கும் பொதுவானதாக்கப்பட்டுள்ள கல்வி முறையை, வடிவமைப்பதிலான நுட்பங்கள், அளவிடும் கருவிகள், நியதிகள் என்பன வழியாக - வறியவர்கள், பிந்தங்கிய சூழலில் வாழ்பவர்கள், பலமான படித்த தலைமுறையில் வராதவர்கள், பாதிக்கப்பட்டே வருகின்றனர். நலிவுற்ற சமூகத்தினருக்குக் கவனமாக, அமைப்பு ரீதியாக, சமூக நீதி மறுக்கப்பட்டே வருகிறது' என அவர் அதில் குறிப்பிடுகின்றார்.

மேலும், கல்வி அமைப்புக்களிலும் செயற்பாடுகளிலும் சமூக நீதி, சமூக வளர்ச்சி, பலவீனமானர்கள் வளர்வதற்கான பதிலீடுகள் போன்றன கருத்தில் கொள்ளப்படுவதில்லை; பலமான அதிகார வகுப்பினரும், மேட்டுக்குடி நிர்வாகப் பணித்துறை உயர் அதிகாரிகளும் அவற்றைத் தமக்குச் சாதகமாகவும், பின்தங்கிய, வறிய வகுப்பினருக்கு எதிராகவும் வடிமைக்கின்றனர் எனவும் அவர் எழுதுகின்றார்.

சமூக, அரசியல், பொருளியல், கல்வியியல், பண்பாடு சார்ந்த சகல விதமான பாகுபாடுகளும் மனிதாபிமானம் இன்மையின் வெளிப்பாடுகளே! இவை ஒரு இனத்தின் ஆரோக்கியமான ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கக்கூடியனவே!

இக்கசப்பான யதார்த்தங்களை, ஆதார பூர்வமாக நிறுவு கின்ற இக்கட்டுரை, மிகுந்த கவனிப்புக்குரியது.

'காலம் 60' இதழிலுள்ள அனைத்துக் கட்டுரைகளையும் படித்து முடித்தபோது, எனது மனதைப் பெரிதும் அலைக்க ழித்தது, நண்பர் மணி வேலுப்பிள்ளையின் கச்சிதமான மொழிபெயர்ப்புடன் கைகூடியுள்ள 'சிக்ருன் இராசேந்திரம்' என்ற தலைப்பிலான கட்டுரை.

'தன்னைப் போன்று அல்லற்படும் கடலாளர் குடும்பத்தைச் சேர்ந்த குடிமக்களுக்கு உதவக்கூடிய, புதிய கடற்றொழில் நுட்பங்களைக் கற்றறிந்துகொள்வதற்கென, யாழ்ப்பாணத்தி லிருந்து ஒரு மோட்டார் சையிக்கிளில் லண்டன் புறப்பட்ட ஒரு சாதாரண மனிதனின் கனவே, சீநோர் நிறுவனத்தின் அத்திவா ரம் என்பதை, இப்போது இலங்கையில் பெரும்பாலும் அனை வரும் மறந்துவிட்டார்கள்.'

கனத்த இதயத்துடன் இதனைச் சொல்பவர், தனது சமூகத்தி னதும், இனத்தினதும், நாட்டினதும் நன்மை கருதி, அசாதா ரண இலட்சியத்துடன்கூடிய துணிச்சலுடன் கடுமையாக உழைத்த, அந்த யாழ்ப்பாணத்து வாலிபன் அன்ரன் இராசேந் திரத்தின் நோர்வே நாட்டு மனைவி சிக்ருன் இராசேந்திரம்.

தமது கணவர் கடலாளர்களின் வாழ்வை மேம்படுத்துவதில் புலன்செலுத்த, எமது மேலாண்மைச் சமூக விரோதிகளும், பணமுதலைகளும், அரசும் இணைந்து, சீநோர் நிறுவனத் தைத் தந்திரமாகக் கையகப்படுத்துவதில் கவனம் செலுத்தி னர். ஈற்றில் அதில் வெற்றியும் கண்டனர் எனக்கூறும் சிக்ருன் -

அதனால் மனமுடைந்து நாட்டைவிட்டு வெளியேறி, நோர்வே திரும்பிய தமது கணவர், தாம் நேசித்த யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் வராமலேயே 1990-ல், தமது 59-வது வயதில் காலமா னர் என்ற சோகக் கதையை மனமுருகிச் சொல்லி வருந்து கின்றார்.

சமூக நீதி குறித்து அக்கறைகொள்ளும் ஒவ்வொருவருக்கும், இவ்விரு கட்டுரைகளைப் படிக்கும்போது, சுயநலமிகள் மலிந்த, ஏற்றத்தாழ்வுமிக்க, அதிகூடிய அயோக்கியத்தனம் மிகுந்த, சமத்துவமற்ற ஒரு சமூகத்தின்மீது கோபம் வரும்.

சமூகப் பாகுபாட்டுக் கொடுமைக்கு ஆளாகும் மக்களது வாழ்வியல் நிலைமைகள் மாற்றியமைக்கப்படுதற்கான சகல தரப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்; மனித தர் மத்தின் மனக் கதவுகள் திறக்கப்பட வேண்டும்; மனச்சாட்சி யின் நியமங்கள் தரமுயர்த்தப்பட வேண்டும் என்னும் வேண் டுதல்களைப் பூடகமாக விடுக்கும் இக்கட்டுரைகள், எமது சம காலச் சமூக சீர்கேடுகளுக்குப் பரிகாரம் பரிந்துரைக்கும் இன் னொருவகை முயற்சிகளே!

விரிவஞ்சி, இக்கட்டுரையைச் சுருக்கமாக, முடிவுக்குக் கொண்டுவர எண்ணும் இத்தருணத்தில், 'காலம் செல்வத் தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே' என்ற உங்களதும், எனதும் மனக்குறையைப் போக்கவென - ஒரு சின்னக் கவிதை - நானெழுதிய கவிதையல்ல, ஈழத்துக் கவிஞர் க-ரு ணாகரன் இவ்விதழில் எழுதிய கவிதையிது...

**காலச் செல்வம்:**

***இது காலம் செல்வமா***
***செல்வத்தின் காலமா என்ற குழப்பம் நீடிக்க***
***அலைபேசியில் சேரனை அழைத்துக் கேட்டேன்***
***'காலமும் செல்வமும் ஒன்றே' என்றான்.***

***செல்வமில்லாக் காலமும்***
***காலமில்லாச் செல்வமும் ஒன்றா***
***எனக் குழப்பம் மேலிட,***
***தெய்வீகனிடம் எழுதிக் கேட்டேன்***
***'செல்வமில்லாக் காலம் பாழ்***
***காலமில்லாச் செல்வம் படுஊழ்' என்றான்.***

***என் காலமே***
***என் செல்வமே***
***எனக் காலமெல்லாம் மனதிற் கொள்ளும்***
***முத்தரைக் கேட்டேன்***
***'செல்வத்திடமிருக்கும் காலமென்ன***
***காலத்திடமிருக்கும் செல்வமென்ன?' என்று.***
***'செல்வத்திடமிருந்து காலத்தை அள்ளுங்கள்***
***காலத்திடமிருந்து செல்வத்தை அள்ளுங்கள்'***
***என்கிறார் அருகிலிருக்கும் ஆசான்.***

***காலத்தையும் செல்வத்தையும்***
***ஒன்றாய்க் கோர்த்துக் கட்டிய மாலையை***
***அணிந்துகொண்டுபோகும் தேவதை யாரென்று***
***ஷோபாவைக் கேட்டேன்,***
***'காலத்தையும் செல்வத்தையும்***
***அணைத்துக்கொண்டவள் ஆயிரம் கண்ணுடையாள்***
***நூறாயிரம் மனசுடையாள்' என்றான்.***

***காலமும் செல்வமும்***
***செல்வமும் காலமும்***
***கலந்து கரைந்த***
***அமுதம் இதுவென்று***
***கண்ணன் நீட்டிய குவளையில்***
***சிரித்துக்கொண்டிருக்கிறார்***
***'காலம் செல்வம்'***
***செந்நிறத்தில்!***

இதைவிடச் சிறப்பாக, நண்பர், சகோதரர் 'காலம் செல்வம்' பற்றி, நானென்ன சொல்லிவிட முடியும்?



navam.k@thaiveedu.com



## விடைபெற்றார்

# தம்பாப்பிள்ளை மகேஸ்வரன்

**- கருணாகரன்**

ஈழவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கங்களில் ஒன்று கூட இப்போது மிஞ்சவில்லை. ஈழவிடுதலைக்கு முன்னே எல்லாமே அழிந்தும் அழிக்கப்பட்டும் விட்டன. அவற்றின் தலைவர்களும் இன்றில்லை. மிஞ்சியிருந்த தலைவர்களில் ஒருவரான தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் கடந்த ஜூலை 19, 2024 அன்று விடைபெற்றிருக்கிறார்.

ஈழப் போராட்டம் உருவாக்கிய விதிமுறைக்கு மாறாக, வரலாற்று ஆச்சரியமாகத் தம்பாப்பிள்ளை மகேஸ்வரின் மரணம் இயற்கையாக நிகழ்ந்துள்ளது. அதுவும் 2024-ல், யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கூடிய வயதில் (69) மரணத்தைத் தழுவிக் கொண்ட விடுதலைப் போராட்டத் தலைவராகவும் மகேஸ்வரனே உள்ளார்.

மகேஸ்வரனின் மரணம் 'யாழ்ப்பாணத்தில் நடந்தது' என்று ஏன் அழுத்தம் கொடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது என்றால், அவருடைய விடுதலைப் போராட்ட வாழ்க்கைப் பயணம், ஈழப் போராட்டத்தின் முடிவு ஆகியவற்றை இணைத்துப் பார்க்கின்றவர்களுக்கு மகேஸ்வரன், பின்னாட்களில் யாழ்ப்பாணத்திலிருந்ததே ஆச்சரியம். உண்மையில் மிக நெருங்கிய, மிகச் சிறிய நட்பு வட்டத்துக்கு அப்பால் மகேஸ்வரன் இலங்கையில் - யாழ்ப்பாணத்தில் இருந்ததே தெரியாது. ஏறக்குறைய அதுவும் ஒரு தலைமறைவு போன்றதுதான். முன்பொரு காலம் படைத் தரப்பின் கெடுபிடிகளுக்காகத் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார் மகேஸ்வரன். இந்தத் தலைமறைவு அப்படியானதில்லை. இது அவர் தானாகவே ஏற்படுத்திக் கொண்ட ஒதுங்கியிருத்தலின் விளைவான தலைமறைவாகும்.

1980-களில் இலங்கை அரசுக்குப் பேரதிர்ச்சியை அளித்தவர் மகேஸ்வரன். அவர் உருவாக்கிய தமிழீழ இராணுவம் (Tamil Eelam Army) என்ற இயக்கம் அன்றைய ஈழ விடுதலை இயக்க வரிசையில் ஆறாவது அல்லது ஏழாவதாக வரக்கூடும். அன்றிருந்த PLOT, EPRLF, NLFT, EROS போன்ற இயக்கங்கள் அதிகமும் அரசியற் தத்துவார்த்தக் கோட்பாட்டை முன்னிறுத்தியே ஈழவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தன. இதனால் அவை மக்களிடத்திலும் தமது உறுப்பினர்களுக்குள்ளும் சித்தாந்த உரையாடல்களில் கூடுதலாக ஈடுபட்டன. விடுதலைப் புலிகள் (LTTE), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), தமிழீழ விடுதலை இராணுவம் (TELA), தமிழீழ இராணுவம் (TEA) போன்றவை இலங்கை அரசு, அதன் படைக் கட்டமைப்பு மீதான இராணுவ நடவடிக்கையை முன்னிலைப்படுத்திச் செயற்பட்டன. இதனால் இவற்றுக்கு ஒரு தனிக் கவர்ச்சியும் கவனமும் ஏற்பட்டிருந்தது.

அரசியற் கொள்கை சார்ந்த சிந்தனையை வளர்த்துக் கொள்ளல், சித்தாந்த உரையாடல்களை நடத்துதல்களையும் விட



அதிரடி நடவடிக்கை(Actions)களில்த்தான் மகேஸ்வரனின் ஈடுபாடிருந்தது. அதுதான் அன்றைய அரச பயங்கரவாதத்துக்கு - தமிழர்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அரச வன்முறைகளுக்கு தக்க பதிலாக இருக்குமென மகேஸ்வரன் கருதினார். அதற்கேற்ற வகையில் தமிழீழ இராணுவத்தின்

(TEA) நடவடிக்கைகள் திட்டமிட்டு, மேற்கொள்ளப்பட்டன. அதனால் மகேஸ்வரன் ஒரு Action Hero-வாகத் தோற்றம் கொண்டார் அல்லது அப்படிக் கருதப்பட்டார். அவருடைய அமைப்பின் பெயரே (Tamil Eelam Army) அதைச் சொல் லும். தொகுத்துச் சொன்னால் மகேஸ்வரனின் அமைப்பின் பெயர், எண்ணம், நோக்கம் போன்றவற்றுக்கு ஏற்றமாதிரித் தான் TEA-இன் நடவடிக்கைகள் அமைந்தன.

மகேஸ்வரன் 1945-ல், யாழ்ப்பாணம் - புங்குடுதீவில் பிறந்த வர். தந்தையார் தம்பாப்பிள்ளை கொழும்பு - மருதானை தவ ளகிரி ஹோட்டலின் உரிமையாளர். மகேஸ்வரன், யாழ்ப்பா ணம் மத்திய கல்லூரியில் படித்தார். அங்கே அவருடைய சம கால மாணவர்கள் டக்ளஸ் தேவானந்தா, ராகவன் போன்றோர்.

உயர் கல்விக்காக லண்டனுக்குச் சென்ற மகேஸ்வரனுக்கு லண்டனில் செயற்பட்டுக் கொண்டிருந்த ஈழவிடுதலைச் செயற்பாட்டாளர்களுடன் அறிமுகம் ஏற்பட்டாலும், அவர்களு டன் சேர்ந்தியங்குவதைவிட இலங்கைக்குத் திரும்புவதே சரி யெனத் தோன்றியது. அதன்படி நாடு திரும்பினார். திரும்பிய வர், இயக்க நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட புல் மோட்டை வங்கிக் கொள்ளை தொடர்பாகக் கைது செய்யப் பட்டு, இராணுவ முகாமான பனாகொடையில் தடுத்து வைக் கப்பட்டார். ஆனாலும், அங்கிருந்த ஜன்னல் கம்பியை மிகச் சாதுரியமாக உடைத்துத் தப்பிச் சென்றார் மகேஸ்வரன். இந்த Escaping அன்றைய நாளில் ஒரு பெரிய சாகஸமாகப் போராளிகளிடத்திலும் மக்களிடத்திலும் மகேஸ்வரனை ‘பனா கொட மகேஸ்வரன்’ என ஆக்கியது. அதற்கு முன்பு, ‘தம்பாப் பிள்ளை மகேஸ்வரன்’ அல்லது சுருக்கமாகத் ‘தம்பா’ என்றே அழைக்கப்பட்டார். இதற்குக் காரணம், ஏற்கனவே இன் னொரு மகேஸ்வரன் (உமாமகேஸ்வரன் - PLOT) போராட்டத் திலிருந்ததாகும்.

பனாகொடயிலிருந்து தப்பியவரை இலங்கை அரசாங்கம் மீண்டும் கைதுசெய்து வெலிக்கடைச் சிறையில் அடைத்தது. 1983 யூலை 25, 27-ஆம் திகதிகளில் தமிழ் அரசியல் கைதி கள் மீது வெலிக்கடை சிறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்கு தலில் குட்டி மணி, ஜெகன், தங்கத்துரை, இராசகிளி உள் ளிட்ட 53 பேர் சிங்களச் சிறைக் கைதிகளாலும் சிறை அதிகா ரிகளாலும் வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட காடையர்க ளாலும் கொலை செய்யப்பட்டனர். இவர்களை எதிர்த்துப் போராடித் தப்பினார்கள், ஒரே செல்லில் அடைக்கப்பட்டி ருந்த தம்பாவும் டக்ளஸ் தேவானந்தாவும்.

இதற்குப் பின்னர் தமிழ் அரசியற் கைதிகள் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். அங்கிருந்து 1983 செப்டம் பர் 23-ல் ஏனைய 41 கைதிகளோடு தப்பிச் சென்றார் மகேஸ் வரன். இதற்குக் கடமையிலிருந்த சிறைக்காவலரின் ஒத்து ழைப்புக் கிடைத்திருந்தது. மட்டக்களப்புச் சிறையிலிருந்து தப்பியோரில் அன்றைய ஈ.பி.ஆர்.எல்.எப். தளபதி டக்ளஸ் தேவானந்தா, விரிவுரையாளர் மு. நித்தியானந்தன், காந்தியம் டேவிட் ஐயா, டொக்ரர், ஜெயகுலராசா, முன்னாள் வட கிழக்கு முதலமைச்சர் வரதராஜப் பெருமாள், இராஜசுந்தரம், பரமதேவா உள்ளிட்ட பலர் முக்கியமானவர்கள்.

இதற்குப் பிறகு TEA-இன் இரண்டாம் கட்டச் செயற்பாடுகள் விரிவடைந்தன. அதிரடியாகக் காத்தான்குடி வங்கிக் கொள்ளை. ஆறு கோடி ரூபாய் மதிப்புள்ள நகையும் பண மும் கொள்ளையிடப்பட்டது அன்று இன்னொரு பெரிய ஆச்ச ரியமான முயற்சியாகக் கருதப்பட்டது.

அதற்குப் பிறகு கிளிநொச்சிப் பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலை TEA நடத்தியது. இந்தத் தாக்குதல் TEA-ஐக் குறித்து இலங்கை அரசு படைத்துறை மட்டுமல்ல, ஏனைய ஈழ விடுதலை இயக்கங்களையும் யோசிக்க வைத்தது. தம்பா ஒரு முக்கியமான இராணுவ நடவடிக்கைக்குரிய ஆளுமையா கப் பார்க்கப்பட்டார். அதற்கு முன் புலிகளையும் ரெலோவை யும்தான் பலரும் இராணுவ நடவடிக்கையில் முதன்மைத் தரப்பினராகக் கருதியிருந்தனர்.

கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத் தாக்குதலில் வெடிபொ ருள் நிரப்பிய வாகனத்தைச் செலுத்தி வந்து வெடிக்க வைக் கும் புதிய உத்தியைத் தம்பா பயன்படுத்தியிருந்தார். குறைந்த போராளிகளைக் கொண்ட TEA-யைக் கொண்டு கூடிய தாக் கத்தை உண்டாக்கக் கூடிய தாக்குதல்களைச் செய்வதே தம்



பாவின் நோக்காக இருந்தது. இதை அவருடன் பின்னாளில் உரையாடியபோது சொன்னார்.

இதற்கு அடுத்ததாக தம்பா மேற்கொண்ட இன்னொரு நடவடிக்கை, மீனம்பாக்கம் விமான நிலையக் குண்டுவெடிப்பாகும். உண்மையில் இந்தக் குண்டுவெடிப்பு நிகழத் திட்டமிடப்பட்டது கொழும்பு - கட்டுநாயக்க விமான நிலையத்திலாகும். அப்படி நிகழ்ந்திருந்தால் தம்பாவின் இடமும் TEA-ன் இடமும் ஈழவிடுதலைப் போராட்டத்தில் வேறு விதமாக - இன்னொரு பரிமாணமாக அமைந்திருக்கக் கூடும். துரதிஸ்டவசமாகப் பாதுகாப்பு மற்றும் விமான நிலைய நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக அந்த நேரக்கணிப்புக் குண்டுப் பொதி மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சிக்கவேண்டி வந்தது. அதனால் அந்தக் குண்டுவெடிப்பில் 33 பேர் கொல்லப்பட்டனர். 27 பேர் காயப்பட்டனர்.

இது தம்பாவின் போராட்ட வாழ்க்கையையும் TEA-ன் தொடரும் போராட்டத்தையும் நெருக்கடிக்குள்ளாக்கியது. தம்பா கைது செய்யப்பட்டு சென்னை - புழல் சிறையில் அடைக்கப்பட்டார். ஈழத்தில் ஏனைய இயக்கங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தடை செய்திருந்த விடுதலைப்புலிகள் TEA-யும் 1986-ல் முடிவுக்குக் கொண்டு வந்தனர். விலகிச் சென்ற TEA-இன் உறுப்பினர்கள் போக, ஏனைய சிலர் விடுதலைப் புலிகளிடம் TEA-இன் ஆயுதங்களையும் ஏனைய உடமைகளையும் கையளித்து இணைந்து கொண்டனர்.

சில ஆண்டுகளில் மகேஸ்வரன் விடுதலையாகினாலும் மீனம்பாக்கம் விமானக் குண்டுவெடிப்புத் தொடர்பாக மீண்டும் சிறைக்குச் செல்ல நேரிட்டது. இது நீண்ட காலத்தை எடுத்தது. அதிலிருந்து விடுதலையானவர், ஆபிரிக்காவுக்குச் சென்றார். அங்கே மகேஸ்வரனை இனங்கண்ட தான்சானிய அரசு மீண்டும் சிறைப்படுத்தியது. ஈழ விடுதலைப் போராட்டத் தலைவர்களின் மிக நீண்ட சிறை வாழ்க்கையை அனுபவித்த தலைவர் மகேஸ்வரனே!

இப்படியே நீண்ட சிறைவாழ்க்கையை அனுபவித்த பிறகு அவர் மீண்டும் 2014-ல் இலங்கைக்குத் திரும்பியிருந்தார். இலங்கையில் மகேஸ்வரனை, அவருடைய பாடசாலைக் கால நண்பரும் சிறையில் சகவாசியுமாக இருந்த டக்ளஸ் தேவானந்தா வரவேற்று அழைத்தார்.

இலங்கைக்குத் திரும்பிய பிறகு மகேஸ்வரன் அமைதியாக இருந்து கொண்டார். அவர் சிறைக் காலத்திலும் பின்னரும் தேடிக்கொண்ட அறிவாற்றல் மிக உயர்வானது. ஆனாலும் அதை அவர் எங்கும் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. நண்பர்களுடனான உரையாடல்களைத் தவிர, பொதுவெளியில் எழுதவோ, பேசவோ அவர் முயற்சிக்கவில்லை. அதில் அவருக்கு நாட்டமுமில்லை. சமகால ஈழத்தமிழரின் அரசியலில் அவருக்குக் கடுமையான விமர்சனமும் கவலைகளும் இருந்தன என்றபோதும்கூட, அவற்றைக் குறித்து அவர் பொதுவெளியில் ஒரு சொல் பேசியதில்லை. அந்தளவுக்குக் கனத்த மௌனத்தைக் கொண்டிருந்தார். பதிலாக உள்ளே அனலாக விடுதலை எண்ணம் கொதித்துக் கொண்டிருந்தது. தன்னுடைய சமகாலத்தைச் சேர்ந்த பலர் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றபோதும் அவர்களோடுகூட, அவர் உரையாடல்களையோ அரசியற் தொடர்புகளையோ மேற்கொள்ள முயற்சிக்கவில்லை. அது பயனற்றது என்ற அபிப்பிராயமே அவரிடமிருந்தது.

ஏறக்குறைய தன்னுடைய அரசியற் காலம் முடிந்து விட்டது என்ற கணிப்பே அவரிடமிருந்தது. தன்னுடையது மட்டுமல்ல, சமகாலத்திலுள்ள பிறருடைய செயற்பாட்டு முறைகளின் காலமும் முடிந்து விட்டது, இனிப் புதியதொரு தொடக்கமே வேண்டும் என்று மகேஸ்வரன் கருதினார். அதை நிச்சயமாக அந்தக் காலம் கொண்டு வரும். சிலவேளை அதற்கான நாட்களோ ஆண்டுகளோ இன்னும் கொஞ்சம் தாமதமாகலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இந்த எண்ணம் அவரை ஒரு அரசியல் அவதானிப்பாளராகவே நிறுத்தியது. இல்லையெனில் அவர் சேகரமாக்கி வைத்திருந்த அறிவையும் அரசியல் அனுபவத்தையும் கொண்டு புதிய ஒரு கட்சியை உருவாக்கியிருக்க முடியும். அல்லது பிற கட்சிகளில் செல்வாக்கான இடமொன்றைப் பெற்றிருக்கலாம். இரண்டும் அவசியமில்லை என்பதே மகேஸ்வரனின் நிலைப்பாடு. இதனால் ஒரு வரலாற்று நாயகன் மிக அமைதியாக இருந்தார்.

அரசியற் செயற்பாடுகளைக் குறித்துரைப்போர் இதை மறுத்துக் கடுமையாக விமர்சிப்பர். ஒரு போராளி அல்லது அரசியல் உணர்வாளர் எந்தச் சூழலிலும் விலகி ஒய்ந்திருக்கவோ, அமைதியாக இருக்கவோ முடியாது. எந்தச் சூழ்நிலைக்குள்ளும் தன்னைத் தகவமைத்துக் கொண்டு இயங்க வேண்டும். அதுவே அரசியற் செயற்பாட்டாளுமையின் அவசியப் பண்பாகும் எனக் கூறுவர்.

ஒரு வகையில் அது சரியானதுதான். ஆனால், அப்படிச் செயற்பட வேண்டுமெனக் கருதி மக்களுக்கு மேலும் பாதிப்புகளை உண்டாக்கும் அரசியலை முன்னெடுப்பதைவிட விலகி நிற்பது, புதிய - இளைய தலைமுறையின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் உதவும். அதுவும் ஒரு வகையான அரசியற் பணிதான். பிற நற்சக்திகளுக்கு இடமளித்தல் என்ற வகையில்.

இதனால்த்தான் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் எத்தகைய கண்டனங்களுக்கும் வரலாற்றின் முகச்சுழிப்புக்குள்ளாகாமல், தன்னுடைய இறுதி நாட்களை முடித்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அவருடைய மரணம், பலருடைய உளத்திலும் மிகப் பெரிய மதிப்பையும் துயரத்தையும் உண்டாக்கியிருக்கிறது. ஒரு வரலாற்று நாயகர், மிகச் சாதாரணமாகவே மறைந்து கொண்டார். அந்த இடத்தைக் கொடுத்தது, அவருடைய எளிமையான, நேர்மையான வாழ்க்கைத் தெரிவேயாகும்.

ஆம், தம்பா, தம்பாப்பிள்ளை மகேஸ்வரன், பனாக்கொட மகேஸ்வரன் என்றெல்லாம் அறியப்பட்ட ஒரு வரலாற்று நாயகருக்கு ஈழத் தமிழர்கள் எத்தகைய வரலாற்று மதிப்பை வழங்கப்போகிறார்கள் என்பது, அவர்களுடைய அரசியற் பயணத்தைப் பொறுத்ததே. மகேஸ்வரனின் இறுதி நிகழ்வில் அவருடைய சகோதரியின் பிரிவாற்றாமை வார்த்தைகளின் பொரு ளும் அதுதான்.



karunagaran@thaiveedu.com

# ‘மலையக சமூக அசைவியக்கத்தில் வ. செல்வராஜாவின் வகிபங்கு’

**- அருணாசலம் லெட்சுமணன்**

மலையகம் ஆளுமைகள் பலரை நாம் இழந்து வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும். தலவாக்கலை மண் பெற்ற அவ்வாறான ஆளுமைகளில் ஒருவரான வ. செல்வராஜா அவர்களின் மறைவு 2023-ம் வருட இறுதி தினத்தில் நிகழ்ந்தது. கல்வி, இலக்கிய செயற்பாட்டாளர்களிடையே இம்மரணம் பெரிதும் தாக்கத்தை செலுத்தியது. செல்வா சேர், வ.செ. என அறியப்பட்ட வ. செல்வராஜா அவர்கள், மலையக சமூக அசைவியக்கத்தின் முக்கிய அங்கமாக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த ஆளுமையின் பலம், பலவீனம் என்ற நிலைகளுக்கு அப்பால் அவரது சமூக அணுகுமுறைகளை அலசவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். மலையகக் கல்வியின் உச்ச அடையாளமாகத் திகழும் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் நீண்ட காலம் கடமையாற்றியவர். இக்கல்லூரியில் ஆரம்ப காலம் தொடக்கம் விரிவுரையாளர், உப பீடாதிபதி ஆகிய பதவி நிலைகளில் கடமையைத் தொடர்ந்தவர். தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்படையினருக்கு அடுத்த நிலையில் எண்ணிக்கையில் பெரும்பான்மையான நிலையிலுள்ள ஆசிரியர் தொழிற்படையினரை உருவாக்கிய அணியில் அங்கம் வகித்தவர். மலையக கலை, இலக்கிய செயற்பாடுகளின் பின்புலத்தின் நீண்டகாலச் செயற்பாட்டாளர், மலையக மாற்று அரசியல் அணி உருவாக்கத்திலும் தாக்கம் செலுத்தியவர். சிரேஸ்ட கல்வியியலாளர் என்ற வகையிலும் முக்கியத்துவம் பெற்றவராக வ. செல்வராஜா விளங்குகிறார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான இவர் மலையக சமூக மாற்றத்தின் முக்கிய அங்கமாக விளங்கும் கல்வித்துறையின் செயற்பாட்டாளர் என்ற வகையில் இவரின் வகிபங்கு விரிவாக ஆராயப்படல் வேண்டும். ஆசிரியராக, ஆசிரிய கல்வியியலாளராக, ஆசிரியர்களுக்கான பாடத்திட்ட வகுப்பாளர், வளவாளர், பாடநூல் உருவாக்க குழு உறுப்பினர், பாடநூல் உருவாக்க குழுவின் பொறுப்பாளர் என்ற வகையில் இவரது பணிகளை வெவ்வேறாகப் பட்டியல் படுத்தலாம். கற்பித்தலில் வரலாற்றுத் துறையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே தமிழ் மொழி கற்பித்தலில் தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறார். தமிழ்மொழிக் கற்பித்தலில் தனித்துவமான அணுகுமுறையைப் பின்பற்றியவர். மலையகத்துக்கான உயர் கல்வி நிறுவன களமாக அமைந்துள்ள நிலையில் அங்கு கல்வி பயிலும் மாணாக்கர்களின் வெளிப்பாடுகள் சமூக எழுச்சியின் அடையாளமாகின்றன. இதுவரையில் மலையகத்துக்கான பல்கலைக்கழகம் என்ற முனைப்பு பேச்சளவில் மாத்திரம் இருக்கின்றமை கவலைக்கிடமான விடய



மாகும். ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய மாணவர்களாக உள்நுழைந்து ஆசிரியர்களாக வெளிவந்தவர்கள் பல்கலைக்கழக கல்வியைத் தொடர்ந்து மலையகம் கல்வித்துறையின் காத்திரத்தை உறுதிப்படுத்தி வருகிறார்கள். அவ்வாறே போட்டிப் பரீட்சைகள் ஊடாக ஆசிரியர்களாக உள் ஈர்க்கப்படுபவர்களும் இவ்வாறான அனுகுமுறை

யில் வெற்றிக் காண்பது வரவேற்கத்தக்கது.

அவ்வாறே கொட்டகலை யதன்சைட் ஆசிரியர் கலாசாலை யின் பங்களிப்பும் மதிப்பிடக்கூடியதாகும். 'சமூக மாற்றத்துக் கான ஆசிரியத்துவமும் மலையகமும்' எனும் பார்வையில் ஆசிரியர்களின் வகிபாகம் பற்றிய அவதானத்தை கவிஞர் சு. முரளிதரனின் கட்டுரையில் நோக்கலாம். இக் கட்டுரை 'லயம்' முதலாவது இதழில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. மலை யகக் கல்வி தேசிய நீரோட்டத்தில் இணைந்ததன் பின்னர் வளர்ச்சி பெற்றுவரும் க.பொ.த உயர்தர பெறுபேறுகள் பல்க லைக்கழக கல்வியிலும், உயர் கல்விக்கான வாய்ப்பு நிலை யிலும் திருப்தியான மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றமை சிறப்பாகும். இருந்த போதிலும் இதன் தாக்கங்கள் மலைய



கச் சமூகத்தின் இருப்பிற்கு எந்த வகையில் உறுதுணையாக அமையப் போகிறது என்பது, அனைவரும் யோசிக்க வேண் டிய விடயமாகிறது. மலையக உயர் கல்வி வாய்ப்பிற்கு அடித் தளமான இந்நிறுவனத்தின் சிந்தனை மாற்றத் தளம் மிக அவ தானிப்பிற்குரியதாகிறது. அதன் முனைப்பில் அந்நிறுவனத் தின் வெளியீடு மிக முக்கியமாகிறது. ஸ்ரீபாத தேசிய கல்வியி யற் கல்லூரியின் வெளீயீடான 'லயம்' இதழின் பிரசன்னம் தடைப்பட்டுப் போயுள்ளமை கவலைக்குரிய விடயமாகும். அவ்விதழ் வருடந்தோறும் வெளிவர வேண்டும் என்ற வ. செல் வராஜா அவர்களின் விருப்பை நடைமுறைக்குக் கொண்டு வருவதே ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி வ. செல்வராஜா அவர்களுக்கு செலுத்துகின்ற அஞ்சலியாக இருக்கும்.

படைப்புலகில் ஆய்வாளர், விமர்சகர் என்பதற்கு அப்பால் நாடக ஆசிரியராகவும் விளங்கினார். இவரால் எழுதப்பட்ட நாடக பிரதிகள் விரல் விட்டு எண்ணக்கூடியதாக இருப்பினும் அவை ஏற்படுத்திய தாக்கங்கள் அதிகமானவை. அவற்றில் 'மலைகளைப் பேசவிடுங்கள்', 'எரிதழல் கொணர்க' ஆகிய நாடக பிரதியாக்கங்கள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியமை யும் குறிப்பிடத்தக்கது. மலையகத்தின் அவலங்களையும், அதற்கான மாற்று ஏற்பாடுகளை துணியும் முனைப்பையும் இந்நாடகத்தில் அவதானிக்கலாம். 'மலைகளைப் பேசவிடுங் கள்' கல்வி அமைச்சின் தரம் 10 தமிழ் மொழியும் இலக்கிய மும் பாட நூலில் இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. மலையகத்துக்கு அப்பால் நாடக பிரதி ஒன்றின் ஊடாக முழு இலங்கையும் கடல் கடந்த நாடுகளும் மலையகத்தை தரிசிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியதாக அமையப்பெற்றமை கவனிக்கத்தக்கது. வ.செ என்ற பெயருக்குள்ளே எவ்வாறான காந்த சக்தி உணரப்படுகிறதோ அவ்வாறே 'மலைகளைப் பேசவிடுங்கள்' என்ற பெயரும் ஓர் அதிர்வலையை ஏற்படுத்தி யமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் அரங்கியற்துறை செயற்பாட்டாளர்களினால் பெரிதும் பேசப்பட்ட நாடகப் பிரதி யாகவும் 'மலைகளைப் பேசவிடுங்கள்' காணப்படுகிறது. இவ ரின் நாடக எழுத்துருவாக்கங்கள் தொகுக்கப்பட வேண்டிய தும் காலத்தின் அவசியம் என்றே கருதுகிறேன். அவ்வாறே இவரின் நாடக பிரதியாக்கங்கள் வெறுமனே தொகுப்பாக மாத்திரம் இல்லாமல் மேடை வடிவத்தில் அரங்கேற்றம் செய் யப்படுவதும் ஆவணப்படுத்த வேண்டியதும் அவசியமாகும்.

இலங்கை ஆசிரியர் கல்வித்துறையின் பாடத்திட்ட தயாரிப்பு பணிகளில் மலையக சமூகம் சார்ந்த படைப்புகளை உள் வாங்கியதில் இவரது பணிகள் கவனத்திற்குரியதாகும். கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உதவி ஆணையாளராக அமரர் லெனின் மதிவானம் அவர்கள் பதவி ஏற்றிருந்த காலம் என்பது மலையக இலக்கியத்தைப் பொறுத்தவரை தனித்து மதிப்பிட வேண்டிய ஒன்றாகும். இலங்கை கல்வி வெளியீட் டுத் திணைக்களம் வெளியிட்ட பாடநூல்களில் மலையக படைப்புகள் மற்றும் மலையக படைப்பாளிகள் தொடர்பான பதிவுகள் உள்ளடக்கப்பட்டு வெளிவந்தன. அவ்வாறே மலை யக ஆளுமைகளும் நூலாக்க குழுவில் அங்கம் வகித்தனர். அப்பணியில் மிக முக்கிய வகிபங்கை பெற்றவராக வ. செல்-வராஜா விளங்கினார். கல்வியியற் கல்லூரி தமிழ் மொழிப் பாடத்திட்டத்திலும் மலையக படைப்பிலக்கிய முன்னோடி களை அறிமுகப்படுத்தும் பணியினை அவர் தொடர்ந்தும் செய்து வந்தார். மலையகச் சிறுகதைகள், மலையகக் கவி தைகள், மலையக நாவல்கள் முதலானவற்றை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் மாணவர்களைக் கவரும் வகையில் அறிமுகஞ் செய்தார். மலையக நாட்டார் பாடல்கள் தொடர் பாகவும் அதிக கவனஞ் செலுத்தினார்.

மலையக சமூக தளத்தில் மாற்று அரசியல் தொடர்பாக சிந் தித்த ஒருவராகவும் வ. செல்வராஜா அடையாளப்படுத்தப்படு கிறார். மலையக மக்கள் முன்னணி உருவாக்கத்தின் பின்ன ணியில் வி.டி. தர்மலிங்கம் அவர்களின் வகிபங்கின் முக்கியத் துவம் எல்லோராலும் அறியப்பட்டதே. அவ்வாறே மலையக மக்கள் முன்னணியின் உருவாக்கத்தில் நேரடியாகவும், பின் னணியாகவும் இருந்த அரசியல் குழு, இளைஞர்கள் குழு, ஆசிரியர்கள் குழு ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதற்கும் முன்னின்று உழைத்ததையும் அறிய முடிகிறது. இவரது சகோ தரர் வி.டி. தர்மலிங்கத்தின் மறைவை அடுத்து கட்சியில் அப் பொறுப்பை ஏற்கும்படி வலியுறுத்தியபோதிலும் அதனை அவர் தவிர்த்தார். பொதுவாக இவருடைய அணுகுமுறை களை உற்று நோக்குகின்றபோது சமூக அசைவியக்கத்தில் அமுக்க குழுவாக செயற்படுவதிலேயே அதிக அக்கறை செலுத்தியதையும் அவதானிக்க முடிகிறது. அவ்வாறே சமூக மாற்றத்திற்காக அரசியல் தளத்திலும், கலை, இலக்கிய, பண்பாட்டுத் தளத்திலும் மாறுபட்ட சிந்தனை மீது நம்பிக்கை கொண்ட மனநிலையையும் அறிய முடிகின்றது. அதே நேரம்

தனது கருத்தியலை மற்றவர்கள் மீது திணிக்கவில்லை. கருத்துக்களை ஏற்றுக் கொள்பவர்கள் ஏற்றுக்கொள்ளட்டும் என்ற மனநிலையிலேயே தொடர்ந்தும் இயங்கி வந்தார். இது சில இடங்களில் பலமாக இருப்பினும் பல தளங்களில் பலவீனமான நகர்வாகவும் அமைந்தமை கவலைக்குரிய விடயமாகும்.

மலையக நாடகத்துறைக்கு உழைத்ததைப் போலவே தமிழாய்வுப் பணியிலும் ஈடுபட்டார். விமர்சனத்துறைக்கும் அதிக பங்களிப்பை வழங்கினார். அரங்குகளிலும், கலந்துரையாடல்களிலும் இலக்கியம் தொடர்பான தனது பார்வைகளை மிகக் காத்திரமாகவே முன்வைத்தார். அவற்றில் எழுத்து வடிவத்தில் வெளிவந்தவை மிகக் குறைவாகும். விமர்சன ஆய்வுரைகள் பல, குறிப்புகளோடு மாத்திரமே நின்றுவிடுவது மலையக சமூக அசைவியக்கத்தின் துரதிஸ்டமே. வ. செல்வராஜா அவர்களின் ஆய்வறிபுலம் என்பது பரந்துபட்டதாகவே அமைகிறது. 'மலையக கலை இலக்கிய இயக்கங்கள் - ஓர் பார்வை' எனும் தலைப்பில் 'லயம்' இதழ் 02-ல் வந்த அவரது கட்டுரை மிக முக்கிய ஆவணமாகத் திகழ்கிறது. மலையக இலக்கியத்தின் செழுமையை இனங்கண்டவர்களில் மிக முக்கியமானவராக கருதப்படுபவர் பேராசிரியர் கைலாசபதி ஆவார். அவர் மலையக படைப்புகள் மீது கொண்ட பார்வையை தெளிவுறுத்தும் வகையில் 'மலையக படைப்புகளுடனான பேராசிரியர் க. கைலாசபதியின் ஊடாட்டங்களும் படைப்பிலக்கிய பயணங்களும்' எனும் தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்கட்டுரை பிலிப் இராமையா அவர்களின் 90-வது பிறந்த தின சிறப்பு மலரில் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வ. செல்வராஜாவின் எழுத்துக்கள் 'வ. செல்வராஜாவின் விமர்சனங்களும் ஆய்வுகளும்' எனும் தலைப்பில் சு. தவச்செல்வன் தலைமையிலான ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் 11-வது தொகுதி மாணவர்களின் வெளியீடாக வெளிவந்தது. கவனத்தை ஈர்க்கும் இவ்வாவணப் பணியினூடாக வ. செல்வராஜா மலையக கலை இலக்கியத்துக்கு ஆற்றிய பங்களிப்பை அறிய முடிகிறது. வாழ்வோடு பிணைந்த இலக்கியம் அவரை வரலாற்றுடன் இணைப்பதை வ. செல்வராஜாவின் விமர்சனங்களும் ஆய்வுகளும் வெளிப்படுத்தி நிற்கிறது. அப்பணியில் இணைந்த அத்தனை பேரையும் நன்றியுடன் நோக்க வேண்டியுள்ளது. 'மலையக நாட்டார் பாடல்கள்' குறித்த வ. செல்வராஜாவின் விரிந்த பார்வையை இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் விளக்கி நிற்கின்றன. இக்கட்டுரைகள் வாயிலாக மலையக நாட்டார் பாடல்களின் உள்ளடக்கம் விரிவுபெறுகிறது. அத்தோடு மலையக செயற்பாட்டு அசைவியக்கத்தின் முன்னோடியான அமரர் திருச்செந்தூரன் அவர்கள் பற்றியும், மலையக இலக்கிய அசைவியக்கத்தின் ஆளுமை சாரல் நாடன் பற்றியும் வ. செல்வராஜா எழுதிய கட்டுரைகளும் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே அவரின் நேசிப்பிற்குரிய கவிஞர் சாருமதியின் 'அறியப்படாத மூங்கில் சோலை' சில குறிப்புகள் ஊடாக கவிஞரின் கவித்துவ புலமையையும் அன்னாரது சமூக அங்கலாய்ப்பையும் எடுத்துரைக்க விளைவதைக் காணலாம். மலையக சமகால பிரச்சினைகளில் மலையக ஆசிரியர்கள், புத்திஜீவிகளின் வகிபங்கு தொடர்பிலான வலியுறுத்தலை எடுத்துரைக்கும் வகையிலான முன்மொழிவுகளையும் கட்டுரைகளாக எழுதினார். மலையக நாடகத்துறையின் முன்னோடி முத்தையா மாஸ்டரின் 'மலையக நாடக வரலாறு' நூல் குறித்த இவரது பார்வை மலையக நாடக வரலாற்றின் தடயங்களை ஆவணப்படுத்துகிறது. இது போன்று மலையக புனைவுகள் தொடர்பான இவரது உரைகளும் எழுத்து வடிவில் ஆவணப்படுத்த வேண்டும்.

பாரதியியலுக்கு அடித்தளமிட்டதில் இலங்கையே முன்னோடியாகத் திகழ்கிறது. பத்மாசினி அம்மையார், மீனாட்சியம்மாள் நடேசய்யர், சுவாமி விபுலானந்தர், பதுளை பாரதி இராமசாமி ஆகியோர் இலங்கையில் பாரதியியலுக்கு அடித்தளமிட்டவர்



கள். அதன் வரிசையில் பாரதியியலை நிலை நிறுத்துவதில் வ. செல்வராஜா அவர்களுடைய வகிபங்கும் குறிப்பிடத்தக்கது. இவருடைய நாடக பிரதிகளில் பாரதியின் உட்புகுதல் தவிர்க்கமுடியாததொன்றாகுகின்றது. அவ்வாறே இவரின் உரைகளுக்குள்ளும் எழுத்தாக்கங்களிலும் பாரதி எட்டிப் பார்ப்பதையும் காணலாம். குறிப்பாக பாரதியின் கவிதைகள் குறித்தான பார்வைகள் சிறப்பிற்குரியதாய் அமைகின்றன. பாரதி பாடல்களை வகுப்பறையில் கற்பிக்கும் போது அவர் கையாளும் நுட்பம் தனித்துவமானதாகும். சி.வி. வேலுப்பிள்ளையின் கவிதைகள் மீதான இவரின் ஈடுபாடும் அக்கவிதைகள் தொடர்பில் இவரால் முன்மொழியும் சமூகப்பாங்கும் வித்தியாசமான சமூக உந்துதலுக்குரியதாக அமைவதும் குறிப்பிடத்தக்கது.

பாரதியின் 'குயில் பாட்டு', 'கண்ணன் பாடல்' ஆகிய தலைப்புகளில் இவரது உரைகள் பாரதி மீதான ஆதர்சனத்தை வலுவடைய செய்துள்ளன. சிவியின் நாவல்கள் தொடர்பில் அச்சித்தரிப்பு நுட்பம் தொடர்பில் இவரது வியாக்கியானங்கள் சிந்தனையோட்டத்தை அதிகரிப்பதாக அமையப்பெறும். சி.வி-யின் கவிதைகள் பற்றிய தெளிவுறுதல் தொடர்பில் அன்னாரின் பார்வை வியப்பிற்குரியதாக அமையப்பெறும். மல்லிகை சி. குமாரின் எழுத்துகள் பற்றிய இவரது ஆதர்சன கருத்துக்களும் முக்கியத்துவமானவை.

நந்தலாலா அமைப்பின் செயற்பாடுகளுடன் இவர் கொண்

டுள்ள ஆழ்ந்த ஈடுபாட்டையும் அறிய முடிகிறது. கொட்டகலை தமிழ்ச் சங்கம், ஹட்டன் தமிழ்ச் சங்கம், சாரல் வெளியீட்டகம் ஆகிய அமைப்புகளின் செயற்பாடுகளில் தன்னையும் இணைத்துக்கொண்ட இவரது செயற்பாடுகள் தனித்து மதிப்பிடக்கூடியதாகும். பாடசாலைகளின் தமிழ்மொழி சார்ந்த விழாக்களில் அன்னாரின் பங்குபற்றலும் உரைகளும் தமிழுக்கும், சமூக அசைவியக்கத்திற்கும் வலிமை சேர்த்திருப்பதை உணர முடிகிறது. குறிப்பாக மஸ்க்கெலியா சென். ஜோசப் கல்லூரி உயர்தர மாணவர்களைக் கொண்டு ஆசிரியர் சு. தவச்செல்வனின் ஏற்பாட்டில் அதிபர் பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற 2016, 2018 வருட ஆய்வரங்கம், பாரதி விழா, செவ்வொளி நூல் வெளியீடு ஆகிய கலை, இலக்கிய நிகழ்வுகளில் இவரது பங்கேற்பும் குறிப்பிடத்தக்கதாகும். நிகர் சமூக கலை இலக்கிய அரங்கத்தின் ஆலோசகராவும் இருந்து இவ்வமைப்பின் செயற்பாடுகளை வழிப்படுத்தியவர். மலையக ஆசிரியர் ஒன்றியம், இலங்கை கல்விக் கழக சம்மேளனம் ஆகிய அமைப்புகளின் ஆலோசகராகவும் இருந்தவர். இவ்வமைப்புகளை வினைத்திறன் மிக்க அமைப்புக்களாக மாற்றியமைத்தலில் வ. செல்வராஜா அவர்களின் வகிபாகம் முக்கியத்திற்குரியதாகும்.

தலவாக்கலை சூழலில் வளர்ந்தமையாலும் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் கல்வியைப் பெற்றுக் கொண்டதாலும் யாழ். பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைத் தொடர்ந்தமையாலும் தொழில் நிமித்தம் ஹட்டன், பூண்டுலோயா, தலவாக்கலை, பத்தனை ஆகிய சூழலில் அதிகம் பணியாற்றியமையாலும் பரஸ்பரம் அங்குள்ளவர்களோடு நெருங்கிய தொடர்பைப் பேணிவந்தமையாலும் மலையகம் தொடர்பில் சரியானதும், மிகத் தெளிவானதுமான புரிதலையும் கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீபாத தேசிய கல்லூரிலிருந்து ஓய்வுப்பெற்ற நிலையில் கண்டியில் சில காலமும், அமரத்துவம் அடையும் போது நாவலப்பிட்டியிலும் தம் வாழ்நாளைக் கழித்தார். உரையாடும்போது மலையகப் பிரதேசங்களின் அழகினை தம் நுண்ணுணர்வால் உணர்ந்தே வர்ணிப்பார். இவரது உரையாடல் மலையகத்தை அர்த்தப்படுத்தும் விதத்திலேயே அமைந்திருக்கும். நாவலப்பிட்டி தொலஸ்பாகை மலைத்தொடர் தொடர்பாகவும், கண்டி நக்கில்ஸ் மலைத்தொடர் தொடர்பாகவும் அன்னாரின் ஆதர்சன வெளிப்பாடு மலையகத் தமிழர்களின் வரலாற்றோடு இணைந்தே இருக்கும். மலையக மக்களின் வரலாற்றில் ஏற்பட்ட கசப்பான துன்பியல் சம்பவங்கள் மீது எரிச்சலான மனவுணர்வை வெளிப்படுத்துவதோடு, அச்சம்பவங்களைக் கண்டிக்கவும் செய்வார். மலையக மக்களின் வாக்குரிமை பறிப்பு, பிரஜாவுரிமை பறிப்பு, 1964-ம் வருடம் ஸ்ரீமா - சாஸ்த்திரி ஒப்பந்தம் தந்த வேதனைகள் தொடர்பில் தன்னுள் ஒரு ரௌத்திர போக்கைக் கையாள்வார். பாரதி 'ரௌத்திரம்' எனும் சொல்லை அணுகிய நுட்பத்தை ஆதர்சனமாக வெளிப்படுத்தி உரையாடுவார். 1964-ம் வருடம் மலையக மக்களின் ஒரு சாராரின் புலம்பெயர்வு குறித்தும் நக்கில்ஸ் மலைத்தொடருக்கு அண்மைய மக்களது வாழ்வியல் குறித்தும் இவரது அனுபவம் ஆழமானது.

இப்பகுதியில் இருந்து புலம்பெயர்ந்து தமிழகத்தில் வாழும் தோழர் மு.சி. கந்தையா அவர்களது 'குறுநதிக் கரையில்' நாவலை 2019-ம் வருடம் வெளியிட்டதோடு நில்லாது, அவற்றில் இரண்டு பிரதிகளை விரிவுரையாளர் எம். ஜெயசீலன் ஊடாக அனுப்பி வைத்திருந்தார். அந்நாவலை வாசித்தபோது வ. செல்வராஜா மனத்தை உருக்கும் வகையில் அப்புலம்பெயர்வின் வேதனைமிக்க சில பக்கங்களை ஆவணப்படுத்தி இருந்ததை உணர்ந்தேன். 2022-ம் வருடம் அவரது பிறந்த தினத்தில் (ஆகஸ்ட் 07) அவரது வீட்டிற்கு சென்று பரிசளித்தேன். பின்னர் இரண்டு வாரங்கள் கழித்து கண்ட போது அந்நாவலைப் பற்றி மிகவும் சிலாகித்துப் பேசினார். புலம்பெயர்வு தந்த வேதனை முனைப்பில் மு. சிவலிங்கம் அவர்களது 'ஒப்பாரிக் கோச்சி' சிறுகதை பற்றியும் நிறையவே பேசிய ஞாபகம் வருகிறது.

பொதுவாக இனிமையாக பாடல் பாடும் ஆளுமையைப் பெற்றவர் வ. செல்வராஜா. பல சந்தர்ப்பங்களில் அமைதியின் சொரூபமாகவே இவரை தரிசிக்க முடியும். இவ்வமைதி ஆழ்மன உந்துதலின் வெளிப்பாட்டின் அடையாளமாகவும் தென்படுவதுண்டு. சிந்தனை மாற்றத்தை எண்ணத்தோடு மாத்திரம் வரையறுத்துக் கொண்ட நிலையை விடுத்து மாறாக செயற்பாட்டிற்குரியவராக வ. செல்வராஜா மாறியிருந்தார். அந்நிலையில் மனிதப் பண்பினால் உயர்ந்து சமூக எழுச்சிக்கானதும் மாற்றத்திற்கானதுமான பாதைகளை வகுத்துச் செயலாற்றினார். மலையக சமூகத்தை நோக்கிய அவரின் அசைவியக்கம் தன்னுள் மட்டுப்படுத்திக் கொண்டது அவருடைய தவறா? அல்லது மலையக சமூகம் அவரை சரியாக பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டதா? அவருடன் நெருங்கிப் பழகிய தோழர்கள் பிரயோகித்த கடிவாளத்தின் இடறா? இசங்களின் வரையறை ஏற்படுத்திய தாக்கமா? என்ற கருத்து நிலைகள் அவரின் மறைவின் பின்னர் பேசுபொருளாகியுள்ளன. அவ்வாறான நிலையைப் பலவீனமாகக் கருதினாலும் அவற்றைக் கடந்து இச்சமூகம் மீதான அக்கறை இவரில் பொதிந்திருந்ததை உணரமுடிகிறது. இந் நிலையில் அவரது பிரிவு மலையக சமூகத்தில் சகல தரப்பிலும் தாக்கத்தைச் செலுத்தியிருக்கிறது. அத்தாக்கங்களுக்கு ஏதுவான காரணங்கள் பற்றி அறிய விளைவதும், அதன் பலமான அம்சங்களை மலையக சமூக மாற்றத்திற்காய் பிரயோகிக்க விளைவதும், பலவீன அம்சங்களை தகர்த்து அதனை படிப்பினையாக கொண்டு முன்நகர்வதற்கும் ஏற்ற பொறிமுறையினைப் புலமைசார் துறையினர் முன்மொழிய வேண்டியதும் அவசியமாகும். வகுப்பறையில் மற்றும் அரங்குகளில் சொல்லித்தந்த பாடங்களுக்கு மேலாக அவரே உலகிற்கு பாடமாகிப் போனார் என்ற உண்மை நிலையை உணர வேண்டியுள்ளது.


**உசாத்துணை:**

- செல்வராஜா .வ (2018) வ. செல்வராஜாவின் விமர்சனங்களும் ஆய்வுகளும், ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் 11-ஆம் தொகுதி மாணவர்கள்.
- இதழாசிரியர்கள், (2023) ஆசிரியர் சிகரம் பிலிப் இராமையா, (எஸ். தாயுமானவன்) குமரன் புத்தக இல்லம்.
- மு.சி. கந்தையா (2019) குறு நதிக் கரையில், பொன்னுலகம் புத்தக நிலையம்.
- 'லயம்' முதலாம், இரண்டாம் இதழ்கள், (2001) (2002) தமிழச் சங்கம் ஸ்ரீபாத தேசிய கல்லூரி,
- 'செவ்வொளி' (2016) (2018) உயர்தர மாணவர்கள், சென் ஜோசப் கல்லூரி - மஸ்க்கெலியா




letsumanan.a@thaiveedu.com

## மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி - 49



# கோவுஸ்ஸ ராம்ஜி உலகநாதனின்

## தேயிலைப் புஷ்பங்கள்

*- மல்லியப்புசந்தி திலகர்*

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், எல்ல பிரதேச சபைக்கு உட்பட்ட புராதானகால மன்னர் ராவணனின் எல் லைக்கு அருகில் அமைந்துள்ள கோவுஸ்ஸ எனும் ஊரில் பிறந்தவர் கவிஞர் உலகநாதன். இங்கு தேயிலையுடன் விவ சாயமும் கூட இடம்பெறுகிறது. கவிஞர் உலகநாதன் கோவுஸ்ஸ, தோட்ட பாடசாலையில் நான்காம் ஆண்டு வரை யும் படித்துவிட்டு, நாவல்கம சிங்கள மகாவித்தியாலயத்தில் ஏழாம் ஆண்டு வரையும் கற்றவர்.

78-ம் ஆண்டு முதல் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத் தவர், அப்போது இருந்து எழுதிய தனது கவிதைகளை தொகுத்து 2018-ம் ஆண்டு 'தேயிலை புஷ்பங்கள்' எனும் ஒரு தொகுப்பாக தந்துள்ளார். கண்டி தடாகம் அமைப்பு இந்த நூலை வெளியீடு செய்துள்ளது.

ஆரம்பத்தில் சிறுகதை எழுத்தாளராக அறியப்பட்ட ராம்ஜி உலகநாதனின் சிறுகதை ஒன்று தெளிவத்தை ஜோசப் தொகுத்த 'மலையகச் சிறுகதைகள்' துரைவி பதிப்பக நூலி லும் இடம்பெற்றுள்ளது.

எளிமையான நடையில் அமைந்த இவரது கவிதைகள் துணுக்குகளைப் போன்று வெளிப்பட்டு நிற்கும்.

'மலையக மங்கை' எனும் இவரது கவிதை ஒன்று இவ்வாறு அமைகிறது.

***தேயிலைச் செடி கூட***
***வீணையாகும்***
***அவளின் விரல்கள் அதில்***
***விளையாடும்போது***

***கூடை நிறைந்த கொழுந்து***
***அவளுக்கு சுமை இல்லை***
***கூலியாய் கிடைக்கும்***
***கொஞ்சம் பணம்தான்***
***அவளின் வாழ்க்கை பயணத்தின்***
***சுமை !***

***அவளுக்கு வசதியாய்***
***வாழும் கனவு வந்ததில்லை***
***வறுமையையே அவள்***
***வசதியாக நினைப்பதால்***

இப்படி இலகுவாக மலையக வாழ்வியலை முன்வைக்கும் இவரது கவிதைகள் மக்களையும் விமர்சனத்துக்கு உட்படுத் துவனவாக உள்ளன.

'பத்தாம் நம்பர் லயம்' எனும் கவிதை ஊடாக அந்த விமர்ச னத்தை பகிரங்கமாகவே முன்வைக்கிறார் உலகநாதன்.

***கிழவனின் முகச்சுருக்கம் போல***
***வெடிப்புகளுடன் காட்சி தரும்***
***பத்தாம் நம்பர் லயம்***
***ஒரு பல்கலைக்கழகம்!***

***பகல் முழுதும் பாடசாலைக்குச் செல்லாமல்***
***கிட்டியடித்து கிரிக்கெட் அடித்து***
***விளையாடி மகிழ***
***வாசலில் இடம் உண்டு!***

***கடலில் மூழ்கும் கப்பலை போல***
***கல்லிலே கலை வண்ணம் கண்ட***
***தென்னகத்து மன்னர்களைப் போல - இங்கே***
***கள்ளிலே புது வண்ணம் கொண்டு***
***புகழடைந்தோர் இங்கு ஏராளம்!***

***கொழும்பு கடைகளுக்கு கூலி வேலைக்கும்***
***கொள்ளுப்பட்டி வீடுகளில் பிள்ளைகளை***
***பார்த்துக் கொள்வதற்கும்***
***போவதெல்லாம்***
***இங்கே படித்தவர்கள் தான்!***

***......***

***ஏழ்மையை பாதுகாப்பது***
***எப்படி என்பதை கற்றுத் தரும்***
***பல்கலைக்கழகம் இது ஒன்றுதான்***

மலையக ஏழ்மையை எழுதும் அதே நேரம், அந்த ஏழ்மையில் இருந்து விடுபட மக்களும் எத்தனிக்க வேண்டும் என்பதாக இவரது கவிதைகள் அமைவதனை அவதானிக்கலாம்.




'குறிஞ்சி பூபாளம்' எனும் இவரது இன்னுமொரு கவிதை சாதாரண மக்களின் அதிகாலை வாழ்க்கைக் கோலத்தை அச்சொட்டாய் இறக்கி வைக்கிறது.

***அம்மா ரொட்டி தட்டும்***
***அதிசய ராகம் கேட்டு***
***சும்மா இருந்த சேவல்***
***சுருக்காக எழுந்து கூவும்!***

***சாரத்திற்குள் சுருண்டு***
***ஒழிந்திருக்கும் அப்பாவை***
***'இந்தாங்கத் தேத்தண்ணி' - எனும்***
***அம்மாவின் குரல் எழுப்பும்!***

***முகம் கழுவாமலேயே***
***பீடி ஒளியில்***
***பிரட்டுக்கு போவார் அப்பா!***

***உயர்தரம் தாண்டியும்***
***ஒரு வேலையும் கிடைக்காமல்***
***தொண்டர் ஆசிரியையாக***
***சிரமதானம் செய்யப் புறப்படும்***
***அக்காவின் கண்களில்***
***ஆயிரம் கனவுகள்!***

***எட்டடி காம்பராவுக்குள்***
***எங்கும் நிறைந்திருக்கும்***
***வறுமை தேவதையை வணங்கி***
***சாப்பிட்டும் சாப்பிடாமலும் அம்மா!***

***கூடைச் சிலுவையை - குதூகலமாய்***
***சுமந்து வெளிக்கிடுவாள்***
***ஒரு 83 ரூபாய்க்கு***
***எட்டு மணி நேரம்***
***உழைக்கும் வலியுடன் !***

என தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளம் 83 ரூபாயாக இருந்த நாட்களில் சாதாரண மலையகப் பெருந்தோட்டக் குடும்பம் ஒன்றின் காலை நேரக் காட்சி இந்தக் கவிதையிலே பதிவாகிறது.

அதேநேரம் 'கேளுங்கள் தலைவர்களே!' எனும் தலைப்பிலான கவிதை ஊடே, சமகால அரசியல் குரலாகவும் ஒலிக்கிறார் உலகநாதன்.

***தேயிலை தோட்டமெல்லாம் காடாய் போச்சு - இந்த***
***தேசத்தோட பொருளாதாரம் வீணா போச்சு***
***பாயில் விழுந்த நோயாளி போல் - நமது***
***வாழ்க்கை பாழாகி முடங்கிப் போச்சு***
***வெட்டி கதை பேசுறது பொழப்பா போச்சு***
***வாழ வழி இல்லாத நிலையாய் ஆச்சு***
***இனி வருங்காலம் என்னாகுமோனு***
***பயம் வந்தாச்சு***

***வீடு கட்ட காணிதர மறுக்குறாங்க***
***விறகு வெட்ட போனாலும் தடுக்குறாங்க***
***ஏடுகளில் அறிக்கை விடும் தலைவர் எல்லாம்***
***எங்கள் நிலைமை தெரியாம பேசுறாங்க***

***ஊரானுக்கு காணி பிரித்து கொடுக்கிறார்கள்***
***இங்கே உழைத்தவனை வீதியிலே நிறுத்துறாங்க***
***பேருக்குத்தான் எல்லோரும் சமம் எனச் சொல்லி***
***பேய்க்கதை பேசி ஊரை ஏமாத்துறாங்க***

***தோட்டத்திலே மாற்றுப் பணி செய்யலாமே***
***தொழிலாளர் வாழ்க்கைத் தரம் உயர்த்தலாமே***
***நாட்டை ஆளும் தலைவர்கிட்ட எடுத்துச் சொல்லி***
***நல்ல வழி கேட்கும்படி கேட்கலாமே***

இந்த கவிதை எழுதப்பட்ட காலம் எதுவென நூலில் குறிப்பிடப்படாவிட்டாலும், இந்தக் கட்டுரை எழுதப்படும் 2024-ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களின் 1700/- சம்பள இழுபறி விவகாரத்தையும் காணி உரிமை கோரும் போராட்டத்தையும் பிரதிபலிக்கிறது இவரது வரிகள்.

(தொடரும்...)



thilagar@thaiveedu.com

# மூளையும் இதயமும் மாறி மாறிச் சொல்லும் சிறுகதைகள்

– த. அஜந்தகுமார்

தமிழில் சிறுகதை என்ற வடிவம் பிரக்ஞைபூர்வமான கலை வடிவமாகத் தன்னை வெளிப்படுத்தி நூற்றாண்டைக் கடந்து விட்டது. கதை என்ற சாதாரண வடிவத்தில் இருந்து தன்னைப் புதுக்கியும் வேறுபடுத்தியும் கொண்ட வடிவமாக அது விளங்குகின்றது. கதைக்கரு, திருப்புமுனை, பாத்திரவார்ப்பு, எடுத்துரைப்பு, மொழி என்பன சிறுகதையில் அழகியல் இடத்தை நிறுவுகின்றன. ஈழத்துச் சிறுகதை வரலாறும் 1930-களுக்குப் பிறகே தன்னை நிறுதிட்டமாக கட்டமைக்கத் தொடங்கியது. ஈழத்தின் சிறுகதை வரலாற்றில் புதிய புதிய ஆளுமைகள் இணைந்துகொண்டே இருக்கின்றார்கள். அந்த வகையில் ‘விரும்பித் தொலைத்த டயரி’ என்ற தொகுதி மூலமாக வரணியூரான் ஜுனியர் என்ற பெயரில் எழுதி வந்த வேலாயுதம் சிவராஜா அவர்கள் இணைந்துகொள்ளுகின்றார். இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான இவர், சமூக சேவை உத்தியோகத்தராக நீண்டகாலம் பணியாற்றியவர். சிங்கள மொழி ஆசிரியராகவும் போட்டிப் பரீட்சைகளுக்கான வளவாளராகவும் பட்டிமன்றப் பேச்சாளராகவும் பெரிதும் அறியப்பெற்ற இவரது பன்முக ஆளுமையின் பெரும் விகாசத்தை இத்தொகுதி வெளிப்படுத்தி நிற்கின்றது.

2006 - 2014 வரையான காலகட்டத்தில் எழுதப்பெற்ற ஒன்பது சிறுகதைகளில் ஐந்து சிறுகதைகள் தேசிய ரீதியான போட்டிகளில் பரிசுபெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. போட்டிகளுக்குரிய தயாரிப்புக் கதைகளாக அல்லாமல் யதார்த்தம் தழுவிய கற்பனையும் களயதார்த்தம் கலந்த சிந்தனைகளும் சிந்தனையைத் தூண்டும் நோக்கமும் கொண்டவையாக இச்சிறுகதைகள் ஆசிரியரால் எழுதப்பட்டுள்ளன.

போர்க்காலம், சமாதான காலம், போருக்குப் பிந்திய காலம் என்ற ஈழத்தின் முக்கியமான காலகட்டங்களைப் பற்றிய தனது சிந்தனைகளை இச்சிறுகதைகளின் பாத்திர உரையாடல் வழி ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார். தான் வாழும் சமூகத்தின் மெய்ம்மைகளையும் சீரழிவுகளையும் அரசியல் போக்குகளையும் பண்பாட்டின் தரிப்பிடங்களையும் ஆண்நிலையில் நின்றும் பெண்நிலையில் நின்றும் நோக்கியுள்ளார். அவரின் உரையாடல்கள் சிறுகதை என்ற வடிவத்தில் இருந்து கொண்டும் - துருத்திக்கொண்டும் சில இடங்களில் வெளிப்படவே செய்கின்றன.

சமூகசேவை உத்தியோகத்தராக பணியாற்றிய அனுபவமும் மொழி ஆளுமையும் அவருக்குப் பல இடங்களில் கைகொடுத்திருப்பதைக் காணலாம். சமூகத்தில் உள்ள போலி மனிதர்களை வெளிப்படுத்தும் விதம், சமகால அரசியல், தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் உள்ள உறவு, போருக்குப் பிறகான போராளிகளின் நிலை, போராளிக் குடும்பங்களின் பெண்களின் நிலை என்று தேர்ந்தெடுத்த கருப்பொருள், களங்கள், பாத்திரங்கள் வழி, எள்ளலும் கோபமும் கைகோர்த்துக்கொள்ள வரணியூரானின் சிறுகதைகள் நகர்கின்றன. கதைகளின் முடிவில் உருவாக்கும் திருப்புமுனையும் படிப்பினையும் வாசகர்களின் சிந்தனையைத் தூண்டுகின்றன. திட்டமிட்ட வகையில் உருவாக்கப்பட்ட அறிவும் உணர்ச்சியும் இணைந்துகொண்ட சிறுகதைகளாகவே இவை அமைகின்றன. நாவலுக்கே உரிய தத்துவத்தளத்தையும் தனது சிறுகதைகளில் தாராளமாக அவர் பயன்படுத்தியுள்ளார். சிறுகதைகளுக்கு இவர் இட்டிருக்கும் தலைப்புகளும் மிகச் சுவாரசியமானவை. கதையில் இறுதியில்த்தான் சில கதைகளின் தலைப்பின் முடிச்சுகள் அவிழ்கின்றன. கதைத் தலைப்புகளின் கவித்துவமும் பேச்சுவழக்குத் தன்மையும் வாசகர்களுக்கு ஈர்ப்பைக் கொடுக்கவல்லன.

மைதிலி, திருச்செல்வம், கதிரண்ணை, சேகரண்ணை, பத்மலீலா என்று வரும் பாத்திரங்கள் வாழும் பாத்திரங்களாக சிறுகதைகளில் நடமாடித் திரிகின்றன. சமூகத்திற்கு முகமூடியையும் உள்ளுக்குள் இன்னொரு முகத்தையும் வைத்திருக்கும் மனிதர்களை இவரின் சிறுகதைகள் தோலுரிக்கின்றன. பலவீனங்களுக்குள் அமுந்தும் மனிதர்களின் உளவியற் பின்னணிகளை அதற்கேயுரிய துக்கத்துடன் வெளிக்கொணர்ந்துள்ளார். மனித மனங்களின் விகற்பங்களை இச்சிறுகதைகள் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன. சுகமாக அழவேண்டும், எனக்குப் பயமாய் கிடக்குது ஆகிய சிறுகதைகளில் வெளிப்படும் பெண்களின் மனநிலையும் நான் கதை சொன்னால் கேட்

காது கதையில் வரும் ஆணின் மனநிலையும் குற்றவுணர்ச்சி யையும் விடுதலை உணர்வையும் ஒருசேரத் தரக்கூடிய கதைகள்.




'தமிழ் பௌத்தன்' என்ற சிறுகதையின் எடுத்துரைப்பு முறை யும் கருப்பொருளைக் கையாண்ட விதமும் கவித்துவமாக அமைந்துள்ளன. உலகபோகம், உண்மையைத் தேடி, ஞானம் என்ற உபதலைப்புகளில் இச்சிறுகதையை வித்தியா சமாக நகர்த்தியுள்ளார். ஆசிரியரின் வாசிப்பு, அறிவு, மொழி என்பன இச்சிறுகதைகளில் அழகாகப் பயன்பட்டுள்ளன.

இன நல்லிணக்கத்தை உருவாக்க ஆசைப்படும் சராசரி மனி தரின் குரலாகவும், ஆக்கிரமிப்பின் அத்துமீறல்களை தாங்க முடியாத குரலாகவும், பொதுமக்களின் பேராசைகளையும் 'பெரிய மனிதர்கள்' என்ற விளம்பரத்தட்டியின் பின்னுள்ள இருட்டையும், சபலத்துக்கு ஆட்படும் ஆண்களையும், நீரோட்டம் மாறும் பெண்களின் உளச்சூழலையும் நேர்த்தி யான வகையில் சிறுகதைகளில் வரணியூரானின் (சிவராஜா) அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார். அவர் கதைகளில் உரு வாக்கியுள்ள 'முரண்களே' வாசகரின் சிந்தனைக்கு விருந்தா கின்றன.

சாதி என்பது யாழ்ப்பாணச் சூழலில் ஏற்படுத்தும் பாதிப்பைப் பற்றியும் உரையாடியுள்ளார்.

'வர்ணாச்சிரமத் தருமத்துக்கு முறைதவறிப் பிறந்த குழந்தை யான சாதியம் கடந்த முப்பது வருடங்களாக வெடித்துச் சித றிய அத்தனை குண்டுகளுக்கும் சாகாது தப்பிப் பிழைத்து இன்னும் உயிர்ப்போடும் முழுப்பலத்தோடும் இருந்தது. (கன பேர் வந்து போயிருக்கினம்).

ஆயுதப் போராட்ட காலத்தில் கூட சாதியச் செடியின் விதை உறங்கியிருந்ததே தவிர அழிந்துவிடவில்லை.

சிறுகதைகளில் மூளை கதை சொல்லவேண்டுமா? இதயம் கதை சொல்லவேண்டுமா? என்று விவாதம் செய்யக்கூடிய வகையில் மூளையும் இதயமும் இவருடைய சிறுகதைகளில் உரையாடுகின்றன. மூளையின் உரையாடல் துருத்தும் போது சிறுபலவீனத்தை உணரமுடிகின்றது. நீண்ட சில பிர சங்கம் போன்ற உரையாடல்கள் வாசகரைத் தன்னோடு பிணைப்பதில் தவறிவிடுகின்றன.

இந்த ஒன்பது சிறுகதைகளின் சமூகப் பெறுமானமும் கலைப் பெறுமானமும் சமகாலச் சூழலில் முக்கியமானது. பத்தாண்டு களாக எழுதமுடியாத பணியழுத்தங்களுள் இருக்கும் சிவ-ராஜா அவர்கள் நிச்சயமாகத் தொடர்ந்து எழுதவேண்டும். நிர் வாக அதிகாரியாக அவருக்கு வாய்க்கும் புதிய அனுபவங் களை ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு சேர்க்கவேண்டும் என்று அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.



ajanthakumar@thaiveedu.com

**_தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்._**
**_விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்._**

**_E-mail: info@thaiveedu.com_** **_Fax: 1-416-849-0594_** **_Tel: 1-416-857-6406_**




3000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர் வரலாற்றை நினைவு கூறும் வகையில், தமிழ் உலகம் நன்கு அறிந்த பிரபல சிறுவர் இலக்கிய சிறுகதை எழுத்தாளர் தோழர் உதய-சங்கர் அவர்கள், தமிழர் பண்பாட்டின் தொன்மையையும் செழுமையையும் இளைய தலைமுறையினர் தெரிந்து, அதனை அவர்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதி வெளிவந்த நூல் 'ஆதனின் பொம்மை' ஆகும். சென்னை வானம் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட 96 பக்கங்களைக் கொண்ட இந்நூல், இளையோர் நாவலாக வரலாற்று ஆய்வாளர்களால் பேசப்பட்டு வருகிறது. இந்நூலின் சிறப்பு காரணமாக, இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் வெளியாகும் குழந்தைகளுக்கான இலக்கிய படைப்புகளுக்கு வழங்கப்படும் 'சாகித்திய அகாதமி'யின் 2023-ம் ஆண்டுக்கான பால புரஸ்கார் விருது இந்நூலுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு முன் இந்நூலாசிரியர் 1993-ல் தொடங்கி இன்று வரை விகடன் சிறுவர் இலக்கிய விருது உட்பட பத்துக்கும் மேற்பட்ட விருதுகளை ஏற்கனவே பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கீழடியின் சிறப்பை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய தொல்லியல் துறை கண்காணிப்பாளர் திரு. அமர்நாத் இராமகிருஷ்ணன் அவர்களுக்கு, நூலாசிரியர் இந்நூலை சமர்ப்பணமாக்கி இருப்பதும் மிகவும் பொருத்தமாக கருதப்படுகிறது. நூலாசிரியர் உதயசங்கர் அவர்கள் சிறுகதை, கவிதை, மொழி பெயர்ப்பு, சிறார் இலக்கியம், கட்டுரை என ஏராளமான படைப்புகளை தமிழ் உலகிற்கு தந்து கொண்டிருக்கும் பன்முக ஆற்றல் மிக்கவர். தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளராகவும் உள்ள தோழர் உதயசங்கர் சமூகத்தின் மீது அக்கறை கொண்ட இடதுசாரி சிந்தனையாளர். சிறுவர்களுக்கான கதை இலக்கியம் படைப்பவர்களில் இவர் இன்று முன்னணியில் இருப்பதைக் காணலாம். தனது பதினெட்டாவது வயதில் எழுதத் தொடங்கிய உதயசங்கர் அவர்கள் இன்று எழுபது நூல்களுக்கு மேல் எழுதியுள்ளமை மிகப் பெரும் சாதனையாக கூறலாம்.

கீழடி அகழாய்வில், குழந்தைகள் விளையாடிய சுடுமண் பொம்மை சிற்பங்கள் கிடைத்துள்ளன. அதன் பின்னால் நம் பண்பாட்டின் செழுமையும் வரலாற்றின் தொன்மையும் மறைந்துள்ளதை எழுத்தாளர் உதயசங்கர் புரிந்து கொண்டதன் வெளிப்பாடே இந்த ஆதனின் பொம்மை நூலாகும். ஆதனின் பொம்மை நூலின் முக்கிய கதாபாத்திரமாக காட்டப்படும் இளைஞன் பாலு தன் மாமாவின் தென்னந்தோப்பில் கண்டெடுத்த பானை ஓட்டில் அழுத்தமாக வரையப்பட்டிருந்த 2600 வருடங்களுக்கு முன்னய பெண் வடிவிலான பொம்மை உருவம் இளையோர் நாவலின் நுழைவு வாயிலாக, கருப்பொருளாக அமைகிறது. அதைத் தொடர்ந்து கீழடியின் 2600 வருட தமிழர் தொன்மையை உலகிற்கு அறிமுகப்படுத்தி கதையை உயிரோட்டமாக வளர்த்துச் செல்லும் கதாபாத்திரமாக ஆதன் என்ற இளைஞர் அறிமுகமாகிறார். ஆதன், பொம்மை இரண்டும் நேர்கோட்டில் இணைய 'ஆதனின் பொம்மை' என்ற பெயர் தாங்கி இளையோர் நாவலாக, கீழடி பெருமையை பறைசாற்றும் நூலாக வெளிவந்துள்ளது .

இது நம் கதை, நடந்த கதை, என ஆரம்பிக்கும் நூலின் அணிந்துரையில் எழுத்தாளர் திரு. ஆதி வள்ளியப்பன் அவர்கள் 'ஆதனின் பொம்மை வழியாக நமது வரலாற்றையும் தொன்மையையும் கதை வழியாக உலகிற்கு அறியத் தருகிறார் சிறார் இலக்கியத்தில் தடம் பதித்துள்ள எழுத்தாளர் உதயசங்கர்' என கூறுகிறார். பாடப் புத்தகத் தொனியில் இல்லாமல் கதையோடு இரண்டறக் கலந்து தமிழரின் தொன்மை வரலாற்றை கூற முற்படுவது சிறப்பு அம்சமாக பார்க்கப் படுகிறது எனவும், அவர் பாராட்டுகிறார். மண்ணில் புதையுண்டு கிடக்கும் பழம் தமிழர்களின் கடந்த கால சமூக வாழ்க்கையின் வேர்களை தொல்லியல் ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்திய கீழடி ஆய்வுகள் பற்றி சிறுவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற சமூக உணர்வுடன் கதாசிரியர் இந் நூலினை திறம்பட வடிவமைத்துள்ளார் எனலாம். நமது மரபின் தொடர்ச்சியை பெரியவர்களிடம் மட்டுமல்லாமல் குழந்தைகள், இளையோர் என பரவலாக எடுத்துச் செல்ல வேண்டிய தன் அவசியம் இருக்கிறது என அணிந்துரையில் கூறும் எழுத்தாளர் ஆதி வள்ளியப்பன் அவர்கள் அதனை எழுத்தாளர் உதயசங்கர் அவர்கள் திறம்படச் செய்துள்ளார் எனவும் பாராட்டுகிறார் .

2600 வருடங்களுக்கு முன்னரே தமிழகத்தில் வைகை கரை

நாகரீகம் சிறந்து இருந்தமைக்கான அரிய சான்றுகள் கீழடி அகழாய்வில் கிடைத்துள்ளன. சிவகங்கை மாவட்டத்தில் கீழ டியில் நடத்தப்பட்ட அகழாய்வில் சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் தொல் எச்சங்கள் அதிகளவில் கிடைத்துள்ளன. சங்க கால இலக்கியங்களில் நாம் படித்தறிந்த கல்மணிகள், முத்து மணிகள், பெண்கள் பயன்படுத்திய கொண்டை ஊசி கள், சில்லு, தாயக்கட்டை, சதுரங்க காய்கள், சுடுமண் பொம் மைகள் என நூற்றுக்கணக்கான தொல் பொருட்கள் கிடைத்




துள்ளன. அவற்றை நுணுக்கமாக ஆராய்வதின் வாயிலாக சங்ககால மக்களின் வாழ்வியலை நாம் அறிந்து கொள்ள முடிகிறது என்பதை நூலாசிரியர் இந் நூலில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

சங்க கால மக்கள் எப்படியெல்லாம் நாகரீகமாக வாழ்ந்தார் கள், அவர்களின் பயன்பாட்டில் இருந்த பொருட்கள் எவை என்பதை சிறுவர்கள் சுலபமாக புரிந்து கொள்ளும் வகையில் நூலாசிரியர் உரையாடல் வாயிலாகவும் பல்வேறு சம்பவங் கள் மூலமாகவும் கூறி இருப்பது சிறப்பான வழி முறையாகும். கால ஊஞ்சலின் ஆட்டம் என்ற ஐந்தாவது தலைப்பில் நூலின் கதாநாயகனான கேப்டன் பாலுவும் அவர் நண்பர் ஆதனும் 2600 வருடங்கள் பின்னோக்கிச் சென்று கீழடியில் உரையாடுவதை கூறும் நூலாசிரியர், அன்றைய பண்பாட்டின் உயரிய பண்புகளை இன்றைய மனிதன் எப்படியெல்லாம் தொலைத்துவிட்டு வெறுப்பு பண்புகளை உள்வாங்கி கூனிக் குறுகிப் போய் நிற்பதை மிகவும் அருமையாக வெளிப்படுத்தி இருப்பது பாராட்டுதலுக்கு உரியதாகும். யாரும் யாரையும் பிரித்து பார்ப்பதில்லை. யாரும் எந்த தொழில் வேண்டுமானா லும் செய்யலாம். தொழிலில் எந்த பேதமும் இல்லை. வர்ண வேறு பாடு இல்லை. ஏற்றத் தாழ்வு இல்லை. பெண்கள் படிக்க எந்த தடையும் இல்லை. தாயம், சொக்கட்டான், சது ரங்கம், கிட்டிப்புள், மண்ணா மரமா, பல்லாங்குழி, காயாப ழமா என ஏராளமான விளையாட்டுக்களை விளையாடுவோம். ‘என கீழடி வாழ்க்கையின் உயர்ந்த பண்புகளை ஆதன் கூற வியப்புடன் கேட்கும் இன்றைய கேப்டன் பாலு இச்சிறப்புக் கள் எல்லாம் இன்று காணாமல் போனது எப்படி? இதனை எங்களிடம் இருந்து பறித்தது யார்? குலக் கல்வி என ஒன்றை புகுத்த முற்படுவது யார்? சாதிய எண்ணத்துடன் எங் களை பிரித்தாள்வது யார்? பாரம்பரிய விளையாட்டுக்களை ஒழித்துவிட்டு கிரிக்கெட்டை உள்ளே கொண்டு வந்தது யார்? என அடுக்கடுக்கான வினாக்களை எழுப்பி இன்றைய அவ லங்களை சுட்டிக் காட்டுவதன் மூலம் நூலாசிரியர் நம் சிந்த னையையும் தூண்டுகிறார் .

வெறுமனே பழங்கால மனித வாழ்வின் மாண்புகளை மட்டும் கூறி கடந்து விடாமல் நிகழ்கால அக்கிரமங்களையும் அவ லங்களையும் கண்டு சினங்கொள்ளும் இடம் கூர்ந்து கவனிக் கத் தக்கதாகும். அனைவரும் சமத்துவமாக வாழ்ந்தார்கள். மேலானவன் கீழானவன் என்ற பேதம் இருந்தது இல்லை என்று ஆதன் கூறுவதைக் கேட்டு கேப்டன் பாலுவாக தன்னை உருவகப்படுத்தும் நூலாசிரியர் இந்தியாவில் குறிப் பாக தமிழ் நாட்டில் இருந்து வரும் சாதிய வன்மத்தை கடுமை யாக விமர்சனத்துக்கு உள்ளாக்குவது நமது சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. குறிப்பாக இன்று தென் தமிழகத்தில் மாணவர்கள் சாதிக்கயிறுன்னு கட்டிக் கிட்டு அலையுறதை வன்மையாக கண்டிக்கிறார். தீண்டாமை ஒரு பாவம் என்று சொல்லிக் கொண்டே தீண்டாமையைப் பலரும் கடைப்பிடிக் கும் முரண்பாட்டை சுட்டிக் காட்டுகிறார். பொதுக்கிணறு, பொதுப்பள்ளிக் கூடம், பொதுச் சுடுகாடு, பொது இடம் என இவை அனைத்தும் இன்று பெரும் பிரச்சனையாகி இருப்ப தையும் கிராமத்தில் சாதி தலைவிரித்தாடுவதையும், ஆண வக் கொலைகள் நடப்பதையும் கவலையுடன் குறிப்பிடுகி றார். ஆதியில் இல்லாத இந்த அமைப்பு முறை, சாதியம் இடையில் சில சுயநல வாதிகளால் புகுத்தப்பட்டதாக கூறுகி றார். இவ்வாறு நம் சிந்தனையை தூண்டும் நூலாசிரியரின் எழுத்தின் வலிமை நூலெங்கும் பரவிக் காணப்படுகிறது .

சிந்து வெளி நாகரீகத்தின் தொடர்ச்சியே கீழடி என்பதை வர லாற்றுச் சம்பவங்கள் ஊடாக அடுத்து வரும் பகுதிகளில் நூலாசிரியர் விறுவிறுப்பு குறையாமல் கூறியிருப்பதைக் காணலாம். குறிப்பாக சிந்து சமவெளி நகரங்களில் சகல வச திகளுடன் நாகரிகமாக வாழ்ந்தவர்கள் பின்னர் அங்கிருந்து எவ்வாறு நகர்ந்து இடம் பெயர்ந்தார்கள். அதற்கான சூழ் நிலை, நிர்ப்பந்தம், பகைமை என பலவற்றையும் வரலாற்று துணை கொண்டு நூலாசிரியர் விளக்கும் போது அழிந்து போன மறந்து போன பல்வேறு சிறப்பு விடயங்களையும்

நினைவுபடுத்திக் காட்டுவதைக் காணலாம்.

‘டடி’, ‘மம்மி’யில் ஆரம்பித்து தமிழ் எழுத வராது என கூறுமள விற்கு அந்நிய மொழி மோகம் இன்று வேகமாக பரவி வரும் நிலையில் மூதாதையர்கள் சூட்டி மகிழ்ந்த தமிழ்ப் பெயர் களை நூலாசிரியர் நினைவூட்டுவதைக் காணலாம். இந்நூ லில் ஏராளமான தூய தமிழ்ப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. வெண்ணிலை, செம்மல்லி, குவிரன், கோதை நினைவில் நிற் கும் பெயர்களாகும். இதேபோன்று விவசாயி, வேளாண்கோ என்றும்; குயவர், கலம் செய்கோ என்றும்; தலைமைப் பூசாரி, கோதெய் என்றும் அழைக்கப்பட்டதாக இந்நூல் குறிப்பிடுகி றது.

சங்ககால அறுவடைத் திருவிழாவின் மகோன்னத நிகழ்ச்சிக ளையும் ஆடல் பாடல்களையும் நூலாசிரியர் அருகில் இருந்து இரசித்தமை போன்ற உணர்வுடன் நூலாசிரியர் நூலில் பதிவிட்டுள்ளார். மக்கள் எந்தளவு மகிழ்ச்சியாக வாழ்ந்தனர் என்பதை அறுவடைத் திருவிழா பறைசாற்றுவ தைப் பார்க்கலாம். இயற்கை சூழலில் பறவைகளின் ஓசை யும் பறையும் யாழும் முழங்க முரசுகளின் முழக்கமும் ஓங்கி ஒலிக்க வண்ண புத்தாடைகளுடன் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், ஊன் சோறும் அப்பமும் அதிரசமும் இனிப்பும் தேனும் தினை மாவும் புட்டும் பழமும் சாப்பிட்ட வண்ணம் ஆடிப் பாடுவதை நினைவூட்டுகிறார். மேல் தட்டு வகுப்பின ரின் சமய ஆதிக்கம் நிறைந்த இன்றைய நாளில் சிறுதெய்வ வழிபாடு, குல தெய்வ வழிபாடு போன்றவை கொஞ்சம் கொஞ்சமாக ஓரங்கட்டப்பட்டுவரும் நிலையில் நூலாசிரியர் சிந்துவெளி தெய்வ சிற்பங்களை குறிப்பாக பெண் தெய்வ சிற்பங்களை இந்நூலில் பதிவிட்டிருப்பதை பார்க்க முடிகி றது. சிந்து, சூலியம்மன், நெல்லம்மன், முளைப்பாரி அம்மன், தாயம்மன், இயக்கியம்மன் என பட்டியல் நீண்டு கொண்டே போவதையும் காணலாம். இன்றைய ஜல்லிக்கட்டு விளை யாட்டின் முன்னோடியாக அன்றைய அறுவடை திருவிழாவின் போது மதிரய்யின் மாடுபிடி விளையாட்டு நடந்ததாக நூலின் வாயிலாக அறிய முடிகிறது.

ஆதிக்குடிகளின் வாழ்க்கை முறைகளை கூறும் நூலாசிரியர் அவர்கள் பயன்படுத்திய செப்பு வெள்ளி நாணயங்கள் அமர்க்களமாக நடக்கும் சேவல் சண்டைகள் காளை பிடி விளையாட்டு என பலவற்றையும் கதை வழியே கூறுகிறார். தொன்மை வரலாற்றை கூற முற்படும் போது அதன் உண் மைத் தன்மை பாதிக்காத வகையிலும் ஆர்வத்துடன் இளை யோரை வாசிக்கத் தூண்டும் வகையிலும் ஆங்காங்கே கதை களையும் இணைத்து இளையோர் நாவலை நகர்த்திச் செல் லும் பாங்கு வரவேற்கத்தக்கது. சிந்து நதியில் நடக்கும் இளைஞர்களிடையேயான நீச்சல் போட்டியை கூறுகிறார். போட்டி முடிவில் எப்போதும் முதல் ஆளாக வரும் ஆதன் நீரில் காணாமல் போய் விட நண்பர்கள் தேடியலைந்து இறுதி யில் புரூஸ் என்ற கதாபாத்திரத்தால் காப்பாற்றப்படுவதாக குறிப்பிட்டு வரலாற்று நாவலை நயம்பட நூலாசிரியர் நகர்த் திச் செல்கிறார்.

சிந்துவெளியில் வாழ்ந்த மக்கள் மத்தியில் பகை, குரோதம், வன்மம் வளர அம்மக்கள் படிப்படியாக குழுக்களாக தெற்கு நோக்கி நகர்ந்து ஆங்காங்கே தங்கி ஊர்களை உருவாக்கி னர் எனவும் அதன் தொடர்ச்சியாக வைகை நதிக்கரையில் குடியேறி அங்கு சிந்துவின் மதிரய்யை உருவாக்கினர் என வும் நூலாசிரியர் கூறுகிறார். இவ்வாறு நூலாசிரியர் வைகை நதிக்கரையில் 2600 வருடங்களுக்கு முன் வாழ்ந்த வர லாற்றை கதை வடிவில் இளையோரிடம் எடுத்துச் செல்லும் பாங்கு மிக அருமையாக இருப்பதை நூலைப் படிப்போர் அறிவர். இவ்வாறு நூலாசிரியர் 96 பக்கங்கள் கொண்ட இச் சிறு நூலில் ஏராளமான பெரிய பெரிய வரலாற்று உண்மைக ளையும் தொல்லியல் தகவல்களையும் நிறையவே தந்துள் ளார்.

இன்றைய எழுத்தாளர்கள் மத்தியில் சிறார் இலக்கியத்துக் கென தனி முத்திரையை ஆழமாக பதித்துவரும் எழுத்தாளர் தோழர் உதயசங்கர் நாம் அறிந்தவற்றை நம் குழந்தைகளும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற சமூக பொறுப்புடன் இத்த கைய நூலொன்றை எழுத முற்பட்டமை மிகவும் பாராட்டுத லுக்கு உரியதாகும். கெப்டன் பாலு என்ற இளைஞனின் கதா பாத்திரம் வாயிலாக வாசிப்போரை 3000 வருடங்களுக்கு பின்னோக்கி அழைத்துச் செல்வது மட்டுமல்லாமல் வரலாற் றின் மீது ஒரு ஈர்ப்பையும் ஏற்படுத்தி உள்ளார். கடந்த கால வரலாற்றின் உண்மை நிகழ்வுகளை நம் குழந்தைகளுக்கு ஆதாரங்களின் அடிப்படையில் மிகச் சிறப்பாக கற்றுத் தரும் நாவலாக மிக எளிமையான தமிழ் நடையில் இந்நூல் அமைந் துள்ளது. தோழர் உதயசங்கர் வரலாற்றையும் தொல்லியல் துறையையும் இணைக்கும் பாலமாக செயல்பட்டிருக்கிறார்.

2023-ம் ஆண்டுக்கான அரசின் பால புரஸ்கர் விருதைப் பெற்ற தோழர் உதயசங்கர் இதனை தனது எழுத்துத் துறைக்கு கிடைத்த அங்கீகாரமாக ஏற்றதோடு நின்று விட வில்லை. தமிழ் இலக்கிய உணர்வோடு தமிழகத்தில் ஏராள மான பாடசாலைகளுக்கு பயணம் மேற்கொண்டு கீழடி தொல் லியல் ஆய்வின் மகத்துவத்தை மாணவர்கள் இடையே எடுத் துரைத்து வருவதையும், வாசிப்பின் அவசியத்தை உணர்த்தி வருவதையும், கருத்தரங்குகளில் பங்குபற்றி வருவதையும் காணலாம். தொல்லியல் வரலாற்றில் என்றென்றும் பேசப்ப டும் தோழர் உதயசங்கர் எழிதியுள்ள ‘ஆதனின் பொம்மை’ இளையோர் நாவலை ஆர்வம் உள்ள அனைவரும் படித்த றிய வேண்டியது அவசியமாகும்.

‘ஆதனின் பொம்மை’ நூலை வாசிக்கும் போது ஒரு முறையா வது கீழடி சென்று பார்க்க வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி வருகிறது. கீழடியில் அகழ்வாராய்ச்சி மூலம் கண்டெடுக்கப் பட்ட நம் முன்னோர் பயன்படுத்தி வந்த நூற்றுக்கணக்கான பொருட்களை நாமும் பார்க்க வேண்டும். அனுமதி கிடைத் தால் ஆதன் அந்த பொம்மையை தொட்டுப் பார்த்து பரவசம் அடைந்தது போல நாமும் அவற்றை கைகளால் வருடி சில நொடிகளாவது பரவச நிலை அடைய வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி நிற்கிறது.



jeyasingh@thaiveedu.com

# எம்.ஏ. நுஃமானின் கவிதையும் அரசியலும் : ஈழத்து அனுபவம்

– அருண்மொழிவர்மன்

கவிதையும் அரசியலும் என்கிற இந்த நூலின் தலைப்பே முக்கியமான ஒன்றாகப்படுகின்றது. ஈழத்தில் தேசிய இனப்பிரச்சினை பற்றிய எனது வாசிப்புகளின்போது முஸ்லிம்களின் அடையாள உருவாக்கம் பற்றிய வாசிப்புகளில் நுஃமான் எழுதிய Sri Lankan Muslims - Ethnic Identity within Cultural Diversity, என்ற நூல் முக்கியமான ஒன்றாக அமைந்திருந்தது. முஸ்லிம்கள் தேசிய இனமாக உருப்பெற்ற வரலாற்றினையும், இனமுரண்பாட்டின் வரலாற்றையும் அந்த நூலில் அவர் ஆய்வுபூர்வமாக முன்வைத்திருப்பார். ஒரு கவிஞராகவும், மொழியியலாளராகவும் அதுவரை நான் அறிந்திருந்த நுஃமானின் அரசியல் பிரக்ஞையை அந்த நூலின் மூலமாக அறிந்துகொண்டேன். தற்போது கவிதையும் அரசியலும் என்கிற இந்தத் தொகுப்பினை வாசிக்கின்றபோது அவரது நோக்கும் நிலைப்பாடும் அவரது எழுத்துகளிலும் மதிப்பீடுகளிலும் எவ்விதமான தாக்கத்தை உருவாக்கின என்பதை நன்குணர முடிகின்றது. அழகியல், அகவுணர்வு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதான போர்வையில் இலக்கியத்தில் அரசியல் நீக்கம் செய்யும் போக்கு வலிதடைந்தும் வெற்றியடைந்தும் வருகின்ற சூழலில் இந்த நூலின் வருகை முக்கியத்துவமானது என்றே கருதுகின்றேன்.

கவிதைக்கும் அரசியலுக்குமுள்ள தொடர்பு பற்றி நுஃமான் நூலின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

*‘கவிதையும் அரசியலும் பற்றிப் பேசுவது முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப்போடுவது போன்றது என்று கருதும் இலக்கிய விற்பன்னர்கள் சிலர் இன்றும் இருக்கின்றார்கள். அவர்களைத் தவிர்த்துப் பார்த்தால் கவிதை எப்பொழுதும் அரசியலுடன் ஏதோ ஒருவகையில் தொடர்பு கொண்டே வந்திருப்பதை நாம் மறுக்கமுடியாது. அரசியல் என்பதை நாம் எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பது இங்கு முக்கியமானது. அதன் குறுகிய அர்த்தத்தில் அரசியல் என்பது ஆட்சி அதிகாரம் தொடர்பான விவகாரங்களைக் குறிக்கின்றது. ஆனால் அதன் பரந்த அர்த்தத்தில் அரசியல் என்பது மனிதர்களின் அனைத்துச் சமூக நடத்தைகளையும் செயற்பாடுகளையும் சமூகப் பிரச்சினைகளையும் உள்ளடக்கும். அவ்வகையில் பார்த்தால் அரசியலுக்குப் புறம்பான மனித விவகாரங்கள் எவையும் இல்லை எனலாம். மத அரசியல், மொழி அரசியல், பண்பாட்டு அரசியல் என்றெல்லாம் நாம் இன்று பேசுகிறோம். இலக்கிய அரசியல், வாசிப்பின் அரசியல் என்பவற்றையும் நாம் இவற்றோடு சேர்த்துக்கொள்ளலாம்.’* (முன்னுரை, பக்கம் 9)

இந்நூலிலுள்ள 45 கட்டுரைகளில் 37 கட்டுரைகள் வெவ்வேறு கவிதைத் தொகுப்புகளுக்கு நுஃமான் எழுதிய முன்னுரைகளாக அமைகின்றன. மீதமுள்ள கட்டுரைகளில் முதல் மூன்று கட்டுரைகளான,

- இனத்துவ முரண்பாடும் இலக்கியவெளிப்பாடும்
- ஆசிய நாடுகளில் விடுதலைப் போராட்டமும் கவிதையும்
- கவிதையும் அரசியலும்: ஒரே புள்ளியில் தொடங்கிய நான்கு கவிஞர்கள்

ஆகியன மிகவும் முக்கியமானவை.

இந்தக் கட்டுரைகளை இலக்கியப் பிரதிகளூடாக எப்படியாக ஒரு வரலாற்று எழுதுகையைச் செய்யமுடியும் என்பதற்கான ஆதாரமாக எடுத்துச் சொல்லமுடியும். இன்றைய எனது அறிமுக உரையிலும் இந்த மூன்று கட்டுரைகளைப் பின்னணியாக வைத்தே எனது கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள இருக்கின்றேன்.

இனத்துவ முரண்பாடும் இலக்கிய வெளிப்பாடும் என்கிற முதலாவது அத்தியாயம்,

- இலங்கைத் தமிழர்கள்: மொழித் தேசியமும், ஈழ விடுதலைப் போராட்டமும் கவிதையும்
- இன முரண்பாடும் முஸ்லிம் அடையாளமும் கவிதையும்
- வர்க்கமும் இனத்துவ முரண்பாடும்: இலங்கைத் தமிழ்க் கவிதையில் மலையகத் தமிழரின் குரல்
- மதமும் இனத்துவமும் வாசிப்பின் அரசியலும்
- இனத்துவம் வன்முறை பால்நிலை: இரு பெண் கவிஞர்களின் இரண்டு கவிதைகள்
- இனத்துவத்துக்கும் தேசியவாதத்துக்கும் அப்பால்: இன வன்முறைக்கும் யுத்தத்துக்கும் எதிரான கவிதைக் குரல்கள்

என்கிற ஆறு அத்தியாயங்களைக் கொண்டது. உண்மையில் இந்தக் கட்டுரை ஒரு தனிப் பிரசுரமாகக் கொள்ளத்தக்கது; ஈழத்தின் இனமுரண்களை இலக்கியச் சாட்சியங்களூடான அணுகுகின்ற தன்மையை இந்தக் கட்டுரையில் அவதானிக்க முடியும். தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய தேசிய இனங்கள் தமக்கெதிரான ஒடுக்குமுறைகளை எப்படி எதிர்கொண்டார்கள், அவற்றின் பொதுத்தன்மைகள் என்ன என்பதை முதலிரு கட்டுரைகளில் எடுத்துரைக்கும் நுஃமான், மூன்றாவது கட்டுரையில் மலையகத் தமிழர்களின் வரலாற்றையும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட துரோகத்தையும் எடுத்துக் கூறி, இவை எவ்வாறு சி.வி. வேலுப்பிள்ளை, வண்ணச்சிறகு ஆகியோரின் கவிதைகளில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதையும் கூறுகின்றார். யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டபோது நுஃமான் எழுதிய ‘புத்தரின் படுகொலை’ என்கிற கவிதை எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதைக் கூறுகின்றார். இதில்

நுஃமானின் ஒரு விடயம் சுவாரசியமானது. சிங்களவர் மத்தியில் இந்தக் குற்றம் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தக் கவிதையைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துப் பயன்படுத்திய பேராசிரியர் கார்லோஸ் பொன்சேகா 1990-களில் நடந்த பொதுத் தேர்தல்களிலும் ஜனாதிபதித் தேர்தல்களிலும் இந்தக் கவிதையைப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியையும் காமினி திஸநாயக்கவையும் குற்றஞ்சாற்றுகின்றார். ஆயினும் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் புலிகளே யாழ்ப்பாண நூலகத்தை எரித்தார்கள் என்கிற பொய்யைத் தனது சுயசரிதையில் எழுதியதைக் கார்லோஸ் பொன்சேகா நம்பிக் கொண்டு, காமினி திஸநாயக்கவின் குடும்பத்தினரிடமும் மன்னிப்பைக் கேட்டுக்கொண்டதாயும், தனது முன்னைய நிலைபாட்டிலிருந்து விலகிவிட்டதாக அறிவித்ததாயும் நுஃமான் குறிப்பிடுகின்றார். இன்றைய Post-truth காலகட்டத்தில் அரசியல் தலைவர்கள் சுயசரிதை என்ற பெயரிலும், மோசடியான தரவுகளை 'ஆய்வுகள்' என்ற பெயரிலும் புத்தகங்களாக வெளியிடுவதற்குப் பின்னாலுள்ள அரசியலை இங்கே சுட்டிக் காட்ட வேண்டியிருக்கின்றது. அதுமட்டுமல்ல; யாழ்ப்பாண நூலகத்தை எரித்த குற்றவுணர்விலிருந்து பௌத்த-சிங்களப் பேரினவாதத்தை விடுதலை செய்யவேண்டும் என்ற மனநிலைக்கு வந்துசேர்ந்திருந்த கார்லோஸ் பொன்சேகாவுக்கு இன்ஸ்பெக்டர் எழுதிய சுயசரிதை கொழுகொம்பாகப் பயன்பட்டிருக்கின்றது.

1956 தேர்தலில் ஆட்சிக்கு வந்த 24 மணிநேரத்தில் சிங்களம் மட்டும் ஆட்சிமொழியாக்கப்படும் என்கிற வாக்குறுதியுடன் தேர்தலில் நின்ற பண்டாரநாயக்கவின் தலைமையிலான ஐக்கிய முன்னணி பெரும் வெற்றிபெற்று ஆட்சியமைத்தபோதும் அதற்கு எதிர்வினையாகத் தமிழ் உணர்வை முன்னெடுத்த தமிழரசுக் கட்சியே வடக்கு, கிழக்கில் வெற்றி பெறுகின்றது. இந்தச் சூழலில் வந்த தமிழ்க் கவிதைகளில் தமிழர்களின் இனத்துவ உணர்வு வெளிப்படுத்தப்பட்டது. 1950 முதல் 60 வரையான காலப்பகுதிகளில் மொழித் தேசியவாதக் கருத்து நிலையையும் உணர்ச்சியூட்டும் - இதற்கு நுஃமான சொற்தீவிரவாதம் (Verbal Militancy) என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார் - கவிதைகள் எழுதப்பட்டதையும் இந்தக் கவிதைகளின் பிரதான போக்குகள் தமிழ்ப் பற்று, சிங்கள மேலாதிக்கத்துக்கு எதிர்ப்பு, தமிழ் மொழியினதும் தமிழர்களதும் வெற்றியும் விடுதலையும் என்று அமைந்ததையும், மஹாகவி, நீலாவணன், முருகையன், இராஜபாரதி, காசியானந்தன் போன்றோர் இத்தகைய கவிதைகளை எழுதியோரில் முதன்மையானோர் என்பதையும் நுஃமான் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆயினும் 1958-ற்குப் பின்னர் ஈழத்து இலக்கிய வெளிப்பாடுகளில் தேசியவாதக் கருத்தியலைவிட மார்க்சியச் சோசலிசக் கருத்தியல்கள் ஆதிக்கம் செலுத்தியதும், முன்னர் தேசியவாதக் கவிதைகளை எழுதிய மஹாகவி, நீலாவணன், முருகையன் போன்றோரின் நிலைப்பாடும் தேசியவாத உணர்வுநிலையிலிருந்து மார்க்சிய நிலைப்பட்ட முற்போக்கு நிலைக்கு மாறியதாகவும் நுஃமான் குறிப்பிடுகின்றார்:

இந்த அரசியல் பின்னணியில் பெரும்பாலான எழுத்தாளர்களும் கவிஞர்களும் பல்வேறு அளவில் சோசலிச இலட்சியங்களின் செல்வாக்குக்கு ஆட்பட்டனர். இவர்களுட் பலர் இடதுசாரி இயக்கங்களுடன் இணைந்தனர் அல்லது அவற்றின் அனுதாபிகளாயினர். அவர்கள் தம்மை முற்போக்கு இலக்கியவாதிகள் என அடையாளப்படுத்தினர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தமிழ் இலக்கியத்தில் சோசலிச இலட்சியங்களைப் பிரச்சாரப்படுத்துவதில் முன்னணிப் பங்கு வகித்தது. சமூக சமத்துவம், இன ஒருமைப்பாடு, தேசிய ஒற்றுமை என்பவற்றை அவர்கள் நம்பினர். சோசலிசம் தான் இனத்துவ முரண்பாட்டுக்கான ஒரே தீர்வு என்பதை அவர்கள் உறுதியாக நம்பினர். சாதி ஒடுக்குமுறை, வர்க்க முரண்பாடு, பொருளாதாரச் சுரண்டல் போன்ற சமூகப் பிரச்சினைகள் இக்காலகட்டத்தில் தோன்றிய தமிழ்ப் புனைக்கதை, கவிதைகளின் பிரதான தொனிப்பொருட்கள் சிலவாகும்' (பக்கம் 21).




ஆயினும் பாராளுமன்றப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட இடதுசாரிகளின் சந்தர்ப்பவாதத்தாலும் 1972-ல் வெளிப்படையாகவே சிங்கள மொழியையும் பௌத்த மதத்தினையும் முதல்நிலைப்படுத்திய யாப்பு இடதுசாரி அமைச்சராலே வரையப்பட்டதாலும் ஏற்பட்ட ஏமாற்றம் தமிழர்களின் உணர்வுநிலையைத் தேசியவாதத்தினை நோக்கியும் தீவிரவாதத்தினை நோக்கியும் கொண்டுசென்றதையும் இந்தப் போக்கு ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் வெளிப்பட்டதையும் குறிப்பிடும் நுஃமான், அதற்கான இலக்கியச் சாட்சியங்களையும் குறிப்பிடுகின்றார்.

இந்த நூலிலுள்ள, 'கவிதையும் அரசியலும்: ஒரே புள்ளியில் தொடங்கிய நான்கு கவிஞர்கள்' என்கிற கட்டுரையில், சுபத்திரனையும் புதுவை இரத்தினதுரையையும் குறித்து நுஃமான் செய்கின்ற ஒப்பீடு முக்கியமானதும் நாம் கருத்திற்கொள்ள வேண்டியதுமாகும். சோசலிசப் புரட்சியிலும் ஆயுதப் போராட்டத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தவர்களும் மாவோவியக் கருத்துநிலையைச் சார்ந்திருந்தவர்களும் சமகாலத்தவர்களுமான சாருமதி, சுபத்திரன், புதுவரை இரத்தினதுரை, சண்முகம் சிவலிங்கம் ஆகிய நால்வரது கவிதைகளதும் உள்ளடக்கம் குறித்து இந்தக் கட்டுரை ஆய்கின்றது.

ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சித் தொடர்புகளுடன் இருந்த சுபத்திரன் பின்னர் மார்க்சியக் கருத்தியலை உள்வாங்கிச் சீனச் சார்புக் கம்யூனிஸ்ட் அங்கத்தவராகித் தீவிரமாகச்

செயற்படுகின்றார். 1970-ல் அவர் கட்சியிலிருந்து விலகினாலும், வர்க்கப் போராட்டமே சமத்துவத்துக்கான தீர்வென்பதில் அவர் உறுதியாகவே இருந்திருக்கின்றார். ஆதிக்க சாதியைச் சார்ந்த அவர் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்து உழைக்கின்றார். இடதுசாரிக் கோட்பாட்டில் தீவிர நம்பிக்கையுடன் செயற்பட்டுவந்த சுபத்திரன் போன்றோருக்கு 70-களின் பின்னர் இலங்கையில் இடதுசாரிக் கட்சிகளின் வீழ்ச்சி பலத்த ஏமாற்றத்தைத் தருகின்றது. இதனை நுஃமான் பின்வருமாறு சொல்கின்றார்:

*'1971-ன் பின்னர் இலங்கையில் இடதுசாரி இயக்கம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து தோல்வியுற்ற பின், உண்மையான இடதுசாரிகள் பலர் பற்றுக்கோடற்று விரக்தியுற்று வீழ்ச்சியடைந்தமை நமது சமகால வரலாறு. சுபத்திரனின் தற்கொலையை இந்தப் பின்னணியிலும் விளங்கிக்கொள்ள முடியும் என்று தோன்றுகின்றது.'*

இதனை ஒரு புரட்சியாளரின் அவலச்சாவு என்று குறிப்பிடுகின்றார் நுஃமான். அதேநேரம் புதுவை இரத்தினதுரையைப் பொறுத்தவரை அறுபதுகளிலும் எழுபதுகளிலும் சுபத்திரனை ஒத்த அதே அரசியல் நிலைப்பாட்டிலிருந்த புதுவை, எண்பதுகளில் தமிழ்ச் தேசிய விடுதலை இயக்கத்தை நோக்கி நகர்கின்றார். சுபத்திரனின் 'அடக்கப்பட்ட இனத்தின் கவிதை'-ஐயும் புதுவையின் 'தென்னிலங்கைத் தோழனுக்கு' என்ற கவிதையையும் ஒப்புநோக்குகின்றார் நுஃமான். சுபத்திரனின் கவிதையில் தொனிக்கின்ற அசைக்கமுடியாத நம்பிக்கையும், புதுவையின் கவிதையில் தொனிக்கின்ற ஏமாற்றம் நிறைந்த, ஆனால் நம்பிக்கை இன்னும் முற்றாக சிதைந்துவிடாத தொனியும் கவனிக்கத்தக்கது.

சமூக விடுதலைக்கான போராட்டத்தில், கோட்பாடொன்றின் மீதோ அல்லது அமைப்பொன்றின் மீதோ நம்பிக்கை வைத்துச் செயற்படத் தொடங்குகின்ற அர்ப்பணிப்புமிக்க ஒருவருக்கு அந்தக் கோட்பாட்டின் மீதான நம்பிக்கை பொய்த்துப் போகும்போதோ அல்லது அமைப்பு சிதைந்துபோகும் போதோ ஏற்படுகின்ற கையறுநிலை, உளவியல் ரீதியில் அவர்களைச் சிதைத்தழிக்கக் கூடியது. செழியனின் மரணத்திற்குப் பின்னர் நடந்த நினைவுகூர்தலிலும் இதனைக் குறிப்பிட்டிருந்தேன். அதுவரை வர்க்க விடுதலைக்காகக் குரலெழுப்பிய புதுவை, பின்னர் இன விடுதலைக்காகக் குரலெழுப்புபவராகவே மாறியது அவரது தேர்வு; ஆனால், அந்தத் தேர்வை இந்தப் பின்னணியுடனும் சேர்த்துப் பார்க்கலாம்.

எண்பதுகளின் பின்னர் ஈழத்துக் கவிதைகளில் தேசியவாத அரசியலும் இன உணர்வும் வெளிப்பட்டமையைச் சுட்டிக்காட்டி அவற்றின் வெளிப்பாடுகளில் ஒன்றாக 'மரணத்துள் வாழ்வோம்' என்கிற தொகுப்பு வெளிவந்ததைக் குறிப்பிடும் நுஃமான், அதன் பின்னர் முஸ்லிம்கள் தம்மை ஒரு தனித் தேசியமாக உணரத் தோன்றிய வரலாற்றையும், 'மீஸான் கட்டைகளில் மீள எழும் பாடல்கள்' என்ற தொகுப்பு அதன் வெளிப்பாடாக வெளிவந்தமையையும் குறிப்பிடுகின்றார். மீஸான் கட்டைகளில் மீள எழும் பாடல்கள் தொகுப்பில் எழுதியுள்ள 50 கவிஞர்களில் 5 பேர் மாத்திரம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர்களாக இருக்கின்ற அதேவேளை, கிழக்கைச் சேர்ந்த எந்தத் தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளும் தொகுப்பில் சேர்க்கப்படவில்லை என்பதையும் சண்முகம் சிவலிங்கம், சிவசேகரம் ஆகிய இருவரும் முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட வன்முறைகளுக்கு எதிரான தமது உணர்வுகளையும் எதிர்ப்புகளையும் வெளிப்படுத்தியபோதும் கூட அவர்கள் கவிதைகள் இந்தத் தொகுப்பில் இடம்பெறவில்லை என்பதையும் குறிப்பிடுகின்றார். ஒரு விதத்தில் கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஆழமான பிளவினையும் முரணையும் காட்டுவதாக இதைக் கொள்ளமுடியும்.

இந்நூலில் ஓரிடத்தில் ஈழத்தில் தமிழ்க் கவிதைகளில் தமிழ்த் தேசியவாதமும் மொழி, இன உணர்வும் வெளிப்பட்டமையை இந்தியச் சூழலுடன் ஒப்பிட்டுப் பின்வருமாறு கூறுகின்றார்:

*'தமிழ்நாட்டின் இந்தி எதிர்ப்பு, சமஸ்கிருத எதிர்ப்புக் காலகட்டத்தில் திராவிட இயக்கத்தால் ஊட்டி வளர்க்கப்பட்ட மொழி உணர்வு, மொழித் தேசியவாதக் கருத்துநிலையாலும் அவர்கள் (ஈழத்தில் மொழிப்பற்று, மொழித்தேசியவாதக் கருத்துநிலையுடன் கவிதை எழுதினோர் - கட்டுரையாளர்) ஊக்கப்படுத்தப்பட்டனர். இக்கவிஞர்கள் தாங்கள் உருவாக்கிய கற்பனைப் போரில் மக்களையும் பங்குகொள்ளத் தூண்டும் வகையில் மிகையுணர்ச்சிப் பாங்கான மொழியையும் தாளக்கட்டு மிகுந்த யாப்பையும் பயன்படுத்தினர்.'* (பக்கம் 19).

இந்த இடத்தில் ஈழத்தவர்கள் ஒரு விடயத்தை சுயவிமர்சன நோக்கில் அவதானிக்கவேண்டும், ஈழத்தில் இன்று தமிழ்த் தேசியம் மதவாதிகளின் கைகளைச் சென்றடைந்திருப்பதை நாம் அறிவோம். இதனைச் சிங்களப் பௌத்த தேசியத்துக்கான எதிர்வினையாகச் சைவத் தமிழ் என்று நியாயப்படுத்தி விடுதல் கூடாது. திராவிடக் கட்சியினர் முன்னெடுத்த மொழியுணர்வு, மொழிப்பற்று என்பவற்றில் மிகையுணர்ச்சிப் பாங்கு இருந்தபோதும், அதற்கும் அப்பால் அவர்களுக்காக வலுவான கோட்பாட்டுப் பின்புலமாக சுயமரியாதை, சமத்துவம் என்கிற சமூகநீதிக் கோட்பாடு இருந்தது. தந்தை பெரியாரால் முன்வைக்கப்பட்ட சுயமரியாதைக் கோட்பாடும், திராவிட இயக்கங்களும், இடதுசாரி இயக்கங்களும் முன்னெடுத்த பண்பாட்டுச் செயற்பாடுகளும் அவை மீளவும் மீளவும் சமத்துவம் என்பதையே தம் நோக்கமாகச் செய்த பிரச்சாரங்களும் முக்கியமானவை. எனவே அங்கே மொழியுணர்வு என்பது மக்களைத் தாழ்மையிலிருந்து விடுதலை பெறுவதற்கு உற்சாகமூட்டும் பிரச்சாரமாகவே பயன்பட்டது. ஆனால், ஈழத்தைப் பொருத்தவரை இனவுணர்வு என்பதும் மொழியுணர்வென்பதும் பெருமிதமாகவே முன்னெடுக்கப்பட்டன. இன்றுவரை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஈழத்தில் சமத்துவம், சமூக நீதி என்பவற்றைத் தமிழ் அடிப்படைக் கொள்கைகளாகப் பேசாமையையும் இவற்றைப் பேசுகின்றவர்களையும் இவற்றைப் பேசிய தலைவர்களையும் ஒவ்வாமையுடனேயே பார்ப்பதையும் நாம் கவனத்திற்கொள்ளமுடியும்.

உண்மையில் இந்தத் தொகுப்பு கவிதையும் அரசியலும் என்கிற தலைப்பிற்கேற்ப கனதியாக அரசியலைப் பேசுவதாகவே அமைகின்றது. கலை இலக்கியப் பிரதிகளையும் அரசியல் பிரக்ஞையுடன் பார்க்கவேண்டும் என்பதை நான் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றேன். வாசகர்களை அதற்காகப் பண்படுத்தக் கூடியதாக இந்தத் தொகுதி அமைந்திருக்கின்றது. இதனை மிகச் சிறந்த முறையில் தொகுத்து அழகாக வடிவமைத்து வெளியிட்டிருக்கும் சமூகம் இயல் பதிப்பகத்திற்கும் பௌசரிற்கும் மிக்க நன்றி.



arunmozhivarman@thaiveedu.com

# எல்லையை விரிக்கும் தமிழ்

**- கருணாகரன் -**

***‘சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்’***

- க. சச்சிதானந்தன்

***‘தமிழுக்கும் அமுதென்றுபேர்! - அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’***

- பாரதிதாசன்

இந்த வரிகளை அறியாத தமிழர்கள் குறைவு. அந்தளவுக்கு இவற்றைத் தமிழ்ச் சமூகம் கொண்டாடி வருகிறது. தம் முயிரையும் விடத் தமிழ் மொழியை நேசிப்பதால், அதனையும் அதன் வழியான பண்பாட்டையும் பெரும்பாலானோர் மேலும் உச்சமாக வளர்த்தெடுக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அவர்கள் அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள். திட்டமிட்டுக் கடுமையாக உழைக்கிறார்கள். ஒரு சாரார், இதற்கான முயற்சிகளை எடுக்காமல் அப்படி உணர்வது போலக் காட்டிக் கொள்கிறார்கள். இவர்கள் ‘நடிப்புச் சுதேசிகள்’. இப்படியே இந்த வரிகள் இரு தரப்பினாலும் தொடர்ந்து பாடப்படுகின்றன - கொண்டாடப்படுகின்றன.

ஈழத்தில் 75 ஆண்டுக்கும் மேலாகத் தமிழுரிமைக்காகவும் தமிழ் அடையாளத்துக்காகவும் (மொழி மற்றும் அந்த மொழியைப் பேசும் மக்கள் வாழும் நிலப்பகுதிக்காக) பெரும் போராட்டமே நடந்து கொண்டிருக்கிறது. இதில் பல லட்சம் உயிர்கள் பலியிடப்பட்டுள்ளன. தமிழ் அடையாளத்தைக் கொண்ட நிலப்பகுதி பேரழிவையும் பெருமிழப்பையும் சந்தித் திருக்கிறது. ஆனாலும் தமிழ் உணர்வும் தமிழ் அடையாளத் துக்கான போராட்டமும் தணிந்து விடவில்லை. அதனுடைய கொதிப்பு மேலும் மேலும் உயர்ந்து கொண்டே செல்கிறது.

பல்லாயிரமாண்டுகளாகத் தன்னுடைய மொழியையும் பண்பாட்டையும் பேணி வாழ்ந்து வரும் இனமொன்றுக்கு, அவற்றைத் தொடர்ந்து வாழ்வதற்கு இடைஞ்சலும் நெருக்கடிகளும் ஏற்படுமானால் அதற்கு எதிராகப் போராடுவதன்றி வேறு வழியென்ன ?

தமிழ்நாட்டிலும் தமிழ் அடையாளத்துக்காகவும் தமிழ் உரிமைக்காகவும் பெரும் போராட்டமே நடந்திருக்கிறது. இந்தி திணிப்புக்கு எதிரான போராட்டம் என்பது கூடத் தமிழைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையிலானதே. இதுபோலப் பல வகையில் அது வெவ்வேறு விதங்களில் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

மட்டுமல்ல, தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டும். அதை வளர்க்க வேண்டும். அதன் பெருமிதங்களைப் போற்ற வேண்டும் எனத் தங்கள் சொந்த இடங்களை விட்டு வேறு நிலத்தில் வாழும் தமிழர்கள், தாம் வாழுமிடங்களிலெல்லாம் தமிழ்ச் சங்கங்களையும் பிற அமைப்புகளையும் உருவாக்கி விடுகிறார்கள்.

புலம்பெயர்ந்து சென்ற தமிழ் மக்கள் தாம் வாழும் நாடுகளிலெல்லாம் தமிழ் மொழிச் செயற்பாட்டு மையங்களில் இலக்கியச் செயற்பாடுகள், நூற்காட்சிகள், வெளியீடுகள், கல்விச் செயற்பாடுகள், தமிழ்ப் பண்பாட்டு நிகழ்வுகள் மற்றும் தமிழ் ஊடகங்கள், இதழ்கள், நாடகம், சினிமா, பரிசு மற்றும் விருதளிப்பு நிகழ்ச்சிகள் எனப் பலவற்றைச் செய்து வருகின்றனர். லண்டனில், கனடாவில், அவுஸ்திரேலியாவில், சுவிற்சர்லாந்தில், பிரான்ஸில், ஜேர்மனியில், நோர்வேயில், மலேசியாவில், மொறிஸிசியஸில், தென்னாபிரிக்காவில் என உலகத் திசையெங்கும் தமிழ் மொழிச் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். பல இடங்களிலும் தமிழ்ச்சங்கங்கள் உண்டு.

கடந்த நூற்றாண்டுக்கு முன்பு இப்படியொரு நிலை உலகெங்குமாக இருந்ததில்லை. ‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்’ என்ற பாரதியின் கனவு நனவாகியதைப் போலவே உலகெங்கும் தமிழ் மக்கள் சமூகமாக வாழும் நிலையும் தமிழைப் பரப்பும் நிலையும் தோன்றியுள்ளது. அரசியல், பொருளியல் சார்ந்த விளைவுகளிது என்றாலும் இதனால் தமிழும் தமிழ்ப் பண்பாடும் தம்முடைய எல்லைகளை விரித்துள்ளன.

இந்த எல்லை விரிப்பு நில ரீதியாக (புதிய திணையில்) பரந்துள்ளதே தவிர, தமிழ்ச் சமூகத்தைக் கடந்து, பிற சமூகத்தினரிடம் இன்னும் விரியவில்லை. அதாவது, ஆங்கிலம், பிரெஞ் போன்றவை தம்முடைய பூர்வ பரப்பைக் கடந்து, ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்கக் கண்டங்களிலுள்ள பிற மொழி, பிற இனச் சமூகத்தினரிடத்திலும் பரவியுள்ளது. இதற்குக் காரணம், அந்த மொழிகள் ஆட்சிக்குரிய அரசியல் அதிகாரத்தையும் அறிவுத் திறனையும் கொண்டிருப்பதாகும். இன்று

# தமிழ் இருக்கைகள்




ஆங்கிலம் உலக அளவில் தொடர்பாடல் மொழியாகவும் துறைசார் கற்கைக்கான மொழியாகவும் இருக்கிறது. காரணம், நவீன வாழ்வுக்குரிய அடிப்படைகளுக்குரியதாக அது மாறியிருப்பதாகும். குறிப்பாக ஐரோப்பிய மறுமலர்ச்சியோடும் அறிவியல் வளர்ச்சியோடும் இணைந்திருக்கிறது. அமெரிக்கவின் அரசியல், ஜனநாயக அடிப்படைகளின் செழுமை, பொருளாதார, அறிவியல் வளர்ச்சி போன்றன அமெரிக்க ஆங்கிலத்தை நோக்கிய ஈர்ப்பு விசையை அதிகரித்துள்ளது.

இவற்றைப்போலத் தமிழ் இன்னும் பரவவில்லைத்தான். ஆனாலும், தமிழர்களின் புலப்பெயர்வினால் தேச எல்லைகளை விரித்துப் பரந்திருக்கக் கூடியதாக உள்ளது. இதனால் அங்கெல்லாம் வாழும் தமிழர்கள் தமிழை உலகெங்கும் பரவும் வகை செய்து வருகின்றனர். பிற சமூகத்தினரிடத்திலே தமிழைப் பரப்ப வேண்டுமானால், தமிழ் மொழியைப் பேசும் சமூகம் அறிவியல், பொருளாதாரம், அரசியல், கலை வெளிப்பாடு போன்றவற்றில் உச்சமடைய வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் தமிழை அறிய வேண்டும் என்ற அவசிய நிலை உருவாகும். அதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டும். அப்படியொரு நிலை ஏற்படுமானால் மேற்படி கவிஞர்களின் கனவுக்கு நிஜமான மதிப்பும் நிறைபொருளும் உண்டாகும்.

இப்பொழுது தமிழ் நிலத்திற்கு வெளியே வாழ்கின்ற தமிழர்கள், தங்களுடைய மொழியும் பண்பாடும் அழிந்துவிடக் கூடாது, அது தொடர வேண்டும் என்பதற்காக அங்கெல்லாம் தமிழ்ச் செயற்பாட்டு மையங்களை உருவாக்கி வருகிறார்கள் எனில், அங்கே அவர்கள் தமிழ்ச் சமூகமாகத் திரட்சியடைந்திருக்கின்றனர். சமூகத் திரட்சியொன்று ஏற்படுமிடத்திற்தான் இவ்வாறான மையங்களை உருவாக்க முடியும். செயற்பாட்டு விசையை முடுக்க இயலும். பிரான்ஸில் பாரிஸ் நகர், கனடாவில் ரொறன்ரோ, மொன்றியால், அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ண் மற்றும் சிட்னி, பிரித்தானியாவில் லண்டன், அமெரிக்காவில் கலிஃபோர்ணியா, நியூஜெர்ஸி என பெரு நகரங்களில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கேனும் தமிழ்த்திரட்சி உண்டு. இது இப்பொழுது ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, நியூசிலாந்து மட்டுமன்றி மத்தியகிழக்கு வரையிலும் நீட்சியடைந்திருக்கிறது. மேலும் அது விரியும்.

இந்தச் சமூகத் திரட்சியின் அடையாள விளைவுகள் அடுத்த கட்டமாக அறிவியலிலும் பொருளாதாரத்திலும் அரசியலிலும் மேலுயர்ந்து தாக்கத்தை உண்டாக்கும்போது தமிழ் அடையாளம் மேலும் சிறப்புற வாய்ப்புண்டு. கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளில் தமிழ் அடையாளத்தைக் குறித்த மெல்லியதொரு அவதானிப்பு அல்லது கரிசனை அந்த நாடுகளின் அரசியல் தலைமைத்துவத்தில் ஏற்பட்டுள்ளது. கனடியப் பிரதமர் ஜஸ்டின் ரூடோ (Justin Trudeau) தமிழ் மக்களின் பண்டிகைகள் உட்படப் பண்பாட்டு நிகழ்வுகளில் தொடர்ச்சியாகப் பங்கேற்பதென்பது இதற்கான ஒரு குறியீடாகும். இவ்வாறே பிரித்தானியாவிலும் அவுஸ்திரேலியாவிலும் உள்ள அரசியல் தலைவர்களும் பிரதிநிதிகளிற் சிலரும் தமிழ்ச் சமூகத்தோடும் தமிழ்ப் பண்பாட்டோடும் உறவைப் பேண விளைகின்றனர்.

எப்போதும் செயற்பாட்டு வினைக்கு அல்லது செயற்பாட்டு மையங்களுக்குப் பெறுமானமுண்டு. அவையே நல்விளைவுகளை அதிகமாக உருவாக்குவன. ஆக, தமிழே எங்கள் மூச்சு என்று கருதி தமிழ்ச் சமூகம் பல விதமாகவும் செயற்படுகிறது. இந்தச் செயற்பாட்டு விரிவில் குறித்துச் சொல்ல வேண்டிய இன்னோரம்சம் வெளிநாட்டுப் பல்லைக்கழகங்களில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் இருக்கைகள் ஆகும். இவையும் ஒரு புதிய எல்லை விரிப்பே. இதற்காக ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையை அமைப்பதற்காக நிதி முழுவதுமாக திரட்டப்பட்டு அதற்கான விழாவும் வட அமெரிக்க தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவில் கொண்டாடப்பட்டது. இதையடுத்து லண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையை தொடங்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டது.

‘கடந்த சில வருடங்களாகவே உலகம் முழுவதுமுள்ள தமிழர்




களிடையே தமிழ் மொழி சார்ந்த எழுச்சி அதிகரித்துள்ளதாக பரவலாக பேசப்படுகிறது. அதிலும், குறிப்பாக ஜல்லிக்கட்டுக்கான போராட்டத்தை அடுத்து, உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் ஒன்றிணைந்த ஒரு விடயம் என்றால் அது அமெரிக்காவிலுள்ள ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையை அமைக்கும் முயற்சியே என்று கருதப்படுகிறது.

‘லண்டன் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் எஸ்ஓஏஎஸ் (SOAS - School of Oriental and African Studies) கல்வி நிறுவனத்தில் 1931 முதல் இயங்கிவந்த தமிழ் படிப்புகள், 1995-களுக்குப் பிறகு மாணவர் சேர்க்கை குறைந்ததாலும், கல்லூரியின் பொருளாதார முதலீடுகள் குறைந்ததாலும் நிறுத்தப்பட்டது. உலகளாவிய தமிழர்களின் எழுச்சியாலும், புலம்பெயர் தமிழ் மக்களின் தமிழ் ஆர்வத்தாலும், ஐக்கிய இராச்சியத்தில் தமிழ் படிப்புக்கான தேவைகள் அதிகரித்துள்ளதாலும், தமிழ் படிப்புகளை மீண்டும் கொண்டுவருவது என்று பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளதாக கூறுகிறார் லண்டன் பல்கலைக்கழக தமிழ் இருக்கையின் தலைவரான செலின் சார்ச்.

‘முன்னெப்போதும் இல்லாத வகையில் வெளிநாடுவாழ் தமிழர்கள் ஹார்வர்ட் போன்ற உலகமெங்கும் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை, இலக்கிய, தொழில்நுட்ப கருத்தரங்குகள் போன்ற பல்வேறு மொழி சார்ந்த நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றனர். பிரிட்டனில் கிட்டத்தட்ட மூன்று இலட்சம் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இரண்டாம் தலைமுறையாக வாழும் அவர்களில் பெரும்பான்மையானோர் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து பிரிட்டனில் குடியேறியவர்களாவர். இரண்டாம், மூன்றாம் தலைமுறையை சேர்ந்தவர்களிடையே ‘எனக்கு தமிழ் தெரியாது. ஆனால், தெரிந்துகொள்ள விரும்புகிறேன்’ என்று கூறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று கூறுகிறார் செலின்’ என BBC தமிழ் குறிப்பிடுவதை நாம் நோக்கலாம்.

பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகளின் வழியே நடக்கின்ற கற்கைகள் தனியே மொழிக் கற்கைகள் என்றில்லாமல் எதிர்காலத்தில் பிற துறைகளிலும் நிகழக் கூடிய சாத்தியங்கள் ஏற்படலாம். குறிப்பாகத் தமிழ் மொழியிலான கற்கைகளாகவும்.

இவற்றுக்கு நிகராக இன்னொரு தளத்தில் தமிழை, தமிழ் வாழ்வை, தமிழ்ப் பண்பாட்டை எல்லை விரிக்கும் முயற்சிகள் கலை, இலக்கியத்தின் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. தமிழிற் சிறந்த எழுத்துகளை(இலக்கியத்தை)ப் பிற மொழியில் கொண்டு செல்வது இதில் முதற்பணியாகும். கவிஞர் சேரனின் கவிதைகள் ஏறக்குறைய ஐந்து மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பெருமாள் முருகனின் கதைகள் எட்டு மொழிகளில் பயணித்துக் கொண்டிருக்கிறது. சுந்தர ராமசாமியின் எழுத்துகள் நான்கு மொழிகளைக் கடந்து விட்டன. இவ்வாறு தமிழ் இலக்கியமும் அதன் வழியே தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கையும் பண்பாடும் பிற எல்லைகளில் அறிமுகமாக விரிவாக்கம் கொள்கின்றன. பாரதியின் கவிதைகள், திருக்குறள், சிலப்பதிகாரம், திருவாசகம் போன்றவை ஆங்கிலத்தில் வெளியாகிவிட்டன. இப்பொழுது ஜேர்மன், பிரெஞ் மற்றும் மலையாளம் உள்ளிட்ட இந்திய மொழிகளில் என எடுத்துச் செல்லப்படுகின்றன. ரஷ்ய இலக்கியத்தின் வழியே ஸ்தெப்பி வெளிகளையும் பனித்திணையையும் அவர்களுடைய போராட்டங்களையும் வாழ்க்கையையும் அந்தப் பண்பாட்டையும் அறிந்துகொள்ள நமக்கு வாய்த்தது. அப்படித்தான் தென்னமெரிக்க இலக்கியப் படைப்புகளின் வழியாகவும் தென்னமெரிக்கச் சினிமாவின் மூலமாகவும் அந்த மனிதர்களையும் அவர்களுடைய நிலத்தையும் பிரச்சினைகளையும் பண்பாட்டையும் அறிந்தோம். அரபுலக எழுத்துகளின் வழியாக அந்த மக்களுடைய பிரச்சினைகளையும் வாழ்க்கையையும் நெருங்கினோம். இதைப்போல, நம்முடைய தமிழ் இலக்கியத்தின் வழியே இவற்றைப் பிறர் அறிய வாய்க்கிறது.

இவற்றை மேலும் வளர்த்துச் செல்ல வேண்டும். அதற்குத் தனியே பொருளுதவி மட்டும் போதாது. அதனோடிணைந்த ஆக்கத்திறன்களும் அவசியம். தமிழ்ச் சமூகம் இன்று அந்த ஆக்கத்திறனில் தன்னை வளர்த்துக் கொள்வதும் அதன் வழியே முன் செல்வதுமே அவசியமாகும். அதற்கான திட்டமிடலும், செயற்பாட்டுழைப்பும் தேவை. அதுவே புதிய எல்லைகளை விரிக்கும். அதற்கான தூண்டல்களை வேண்டி நிற்கிறது தமிழ்ப் பரப்பு.



karunagaran@thaiveedu.com

# ஈழத்தவரின் சமகால நூல் வெளியீடுகள்:
# ஒரு நூலியல் சார்ந்த பார்வை - 06

- என். செல்வராஜா -

ஒரு நூலில் இடம்பெறும் நூலியல் தரவுகளில் 'பதிப்பாசிரியர்' பற்றிய எமது புரிதலை கடந்த இதழில் ஆராய்ந்திருந்தோம். இந்த இதழிலும் மேலும் சில அம்சங்களை விரிவாக நோக்கி அதற்கான மாற்றீடுகள் பற்றிய கருத்துக்களைப் பதிவு செய்ய முனைகின்றேன்.

'பதிப்பாசிரியர்' என்ற பொதுவான பதம் ஈழத்துப் பதிப்புலகச் சூழலில் பல்வேறு பரந்துபட்ட நிலைகளில் நூலின் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றியவருக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. பதிப்பாசிரியர் என்பதற்கு ஆங்கிலத்தில் எடிட்டர் என்ற ஒரு பதத்தையே பயன்படுத்தி வருகின்றோம். இருப்பினும் அறிவுசார் பதிப்பாசிரியர் சக துறைசார் அறிஞர்களின் படைப்புக்களைப் பரிசோதித்து கூட்டுப் படைப்பாக்கி வெளியிடும் சந்தர்ப்பத்திலும், ஒரு படைப்பாளியின் ஆக்கங்களை அவருக்கு அணுக்கமான மற்றொருவர் தேடித் தொகுத்துப் பதிப்பிக்கும் வேளையிலும், ஒரு வெளியீட்டின் இணைப்பாளராகச் செயற்படுபவர் பதிப்பாசிரியராகக் குறிப்பிடப்படும் வேளையிலும் 'பதிப்பாசிரியர்' என்ற பதப் பிரயோகம் நிகழ்வதை கடந்த இதழில் கண்டோம். இன்னும் சில சந்தர்ப்பங்களை இன்று காண்போம்.

ஈழத்துப் பதிப்புலகச் சூழலில் பாரம்பரியத்தை மீறி, பதிப்பாசிரியர் என்ற பதத்தை எதிர்காலத்தில் தாம் விரும்பிய வகையில் பிரயோகிப்பது ஏற்புடையதா என்பது பற்றிய வாதப் பிரதிவாதங்களை உங்களிடமே விட்டு விடுகின்றேன்.

- நூலுருவில் இதுவரை இல்லாத ஏட்டுச் சுவடிகளை பரிசோதித்து கையெழுத்துப் பிரதிகளாக்கி, அதனை நவீன அச்சு வாகனமேற்றியவர்கள் பதிப்பாளராக / வெளியீட்டாளராக வன்றி (Publishers) பதிப்பாசிரியர்களானமை (Editors).

'அலங்கார ரூபன் நாடகம்: தென்மோடிக் கூத்து' என்ற நூல் சு. வித்தியானந்தன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் குறிப்பிட்டு வெளிவந்த நூலாகும். பேராதனை, இலங்கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழு வெளியீடாக 1962-ல் இந்நூல் வெளிவந்திருந்தது. இந்தத் தென்மோடிக் கூத்து, வரகவி கணபதி ஐயரின் (1709-1784) மட்டக்களப்புக் கூத்துப் பிரதியொன்றின் நூலாக்கமாகும். மிகச் சுவை செறிந்த பாட்டுக்கள் நிறைந்த இந்நாடகம் மட்டக்களப்பிற் பெரிதும் கொண்டாடப்படும் தென்மோடிக் கூத்துகளில் சிறந்ததொன்றாகும். இந்நாடகத்துக்குரிய முக்கிய ஏட்டைத் தந்துதவியவர் காரைதீவைச் சேர்ந்த திரு. வைரமுத்து கைலாயபிள்ளை கப்புகனார். கிடைத்துள்ள ஏட்டுப் பிரதிகளில் மூல ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை. அவர் உதவிய பிரதியுடன் வேறு வகையில் கிடைத்த மற்றும் சில பிரதிகளையும் ஒப்பிட்டே உ.வே. சாமிநாதையர், சி.வை. தாமோதரம்பிள்ளை ஆகியோர் வழியில், சு. வித்தியானந்தன் இந்நூலை அச்சுருவில் கொண்டுவந்துள்ளார்.

இதுபோன்றதே 'மார்க்கண்டன் நாடகம்: வாளபிமன் நாடகம்' இதனை கா. சிவத்தம்பி அவர்கள் பதிப்பாசிரியராகவிருந்து வெளியிட முன்வந்துள்ளார். கொழும்பு, இலங்கைப் பல்கலைக்கழக வைத்தியப் பகுதி, இந்து மாணவர் சங்கம், 1963-இல் இதனை நூலுருவில் வெளியிட்டது. இப்பதிப்பில் இடம்பெற்ற வடமொழி மரபில் வரும் தமிழ்க் கூத்துக்களான இரு நாடகங்களும், விதானையாரும், சிறந்த அண்ணாவியாருமாகிய மருதங்குளம் இ.சே. தினகரம்பிள்ளை அவர்கள் வழங்கிய ஏட்டுப் பிரதிகளிலிருந்து நூலாக்கம் பெற்றவை. வாளபிமன் நாடகம் கணபதி ஐயரின் சுற்றத்தாரில் ஒருவராகிய சண்முக ஐயர் என்பவரால் சுந்தரி நாடகம் என்னும் பெயரால் பாடத் தொடங்கப்பட்டதெனவும், பாடி முடிக்கும் ஆற்றல் இல்லாது இடையில் அவர் நிறுத்திவிட வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணபதி ஐயரால் (1709-1784) வாளபிமன் நாடகம் என மாற்றி அமைக்கப்பட்டதெனவும் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வுதாரணங்கள் இரண்டிலும் கவனிக்கத்தக்கது, இரு பேராசிரியர்களாலும் அச்சுவாகனம் ஏற்றப்பெற்ற நூல்கள் நேரடியாக ஏட்டுருவிலிருந்து நூலுருவில் பதிப்பிக்கப்பட்டமையாகும். வழமையாக ஏடுகள் தனித்தனிப் பிரதிகளாக ஏடெழுதுவோரால் எழுத்தாணிகொண்டு எழுதிக் கட்டப்பெறுவதாகும். ஓர் ஏட்டினைப் பிரதியெடுப்போர் அத்துறை சார்ந்த வல்லுநராக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. பிரதியெடுப்போர் அதனை தொழிலாகவே செய்துவந்ததாகவும் மாவிட்டபுரம் பகுதியில் அவர்கள் இத்தொழிலில் ஈடுபட்டுவந்

ததாகவும் வரலாற்றுத் தகவல்கள் உள்ளன. இத்தகைய சூழலில் ஒரே விடயத்தைப் பதிவுசெய்யும் ஏடுகளுக்கிடையேயும் எழுத்துப்பிழைகள் ஏற்படுவதுண்டு. மூல ஏடுகளை வாசித்து அவற்றை பிற ஏட்டுப் பிரதிகளுடன் ஒப்பிட்டு சரியானதென உறுதிப்படுத்திக்கொண்டே எமது அறிஞர்கள் ஏடுகளை அச்சுவாகனமேற்றினர். இதற்கான கடின உழைப்பே அவர்களுக்கு பதிப்பாசிரியர்கள் என்ற மகுடத்தைச் சூட்டியது.

- முன்னர் நூலுருவில் வெளிவந்து அரிய நூல்களாகி மறைந்துவிட்ட பிரதிகளைத் தேடியெடுத்து மீள்பதிப்புச் செய்பவர்களையும் பதிப்பாசிரியர்களாகக் குறிப்பிடுதல் இலங்கையின் தமிழ் எழுத்துச் சூழலில் வழமையாகிவிட்டது. அவர்கள் அவற்றைப் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் தேடியெடுத்து, போதிய நிதி தேடி, அந்நூலைப் பதிப்பித்தவரேயன்றி (பதிப்பாளர்), அப்பதிப்பின் ஆசிரியர்கள் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது. எத்தனை பதிப்புகள் வந்தாலும், அவை அனைத்தினதும் மூல நூலாசிரியர்களே ஆசிரியராகக் குறிப்பிடப்படுவர்.

வல்வை ச. வயித்தியலிங்கம் இயற்றிய 'சிந்தாமணி நிகண்டு: மூலமும் உரையும்' என்ற நூலில் பா. மீனாட்சிசுந்தரம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் குறிப்பிட்டுள்ளனர். இந்நூலின் மூலப்பதிப்பு, சென்னை தண்டையார்பேட்டை G.R. கிருஷ்ண-சாமிப்பிள்ளையவர்களால், இலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில் தாது வருடம் (1876) சித்திரை மாதம் பதிப்பிக்கப்பட்டது. 1876-ல் அச்சுவாகனமேறிய இந்நூல் மீண்டும் கொழும்பு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முயற்சியினால் 2013-ல் மீள்பதிப்பினைக் கண்டுள்ளது. ஆறுமுக நாவலரின் சமகாலத்தவரும், அவரையொத்த தமிழ்ப் பணிகளில் ஆளுமையோடு ஈடுபட்டு உழைத்தவருமான வல்வெட்டித்துறை ச. வைத்தியலிங்கம் அவர்களால் இந்நிகண்டு ஆக்கப்பெற்றது. உலகளாவியரீதியில் தமிழ் மொழியில் இதுவரை 35 நிகண்டுகள் வரை கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றாக சிந்தாமணி நிகண்டும் அமைந்துள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர் பா. மீனாட்சிசுந்தரம், வல்வெட்டித்துறை அரும்பொருள் காப்பகத்தின் காப்பாளராகப் பணியாற்றியவர். இங்கு ஒரு நூலினை மீள்பதிப்புச் செய்பவர் பதிப்பாளரா பதிப்பாசிரியரா என்பது கேள்விக்குரியதல்லவா ?

இவ்வாறே இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1998-ல் வெளியிட்டுள்ள 'வரதபண்டிதம்' என்ற நூலிற்கும் ஒரு பதிப்பாசிரியர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. வட இலங்கையிலுள்ள சுன்னாகத்தில் 300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த அறிஞர் வரகவிப் புலவர் வரதபண்டிதர் (1656-1716) அவர்களால் இயற்றப்பட்ட ஆறு நூல்களின் மீள்பதிப்பே இத்தொகுப்பாகும். இதில் பிள்ளையார் கதை, பிள்ளையார் புராணம், சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், குருநாதசு-வாமி கிள்ளை விடுதூது, அமுதாகரம் ஆகிய நூல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த ஆறு நூல்களையும் தேடித் தொகுத்து வழங்கிய ஒரு தமிழறிஞர் தொகுப்பாளராகக் குறிப்பிடப்பட வேண்டியவரேயன்றி, அப்பதிப்பிற்கு ஆசிரியராக்கப்பட்டுள்ளமை தமிழ் நூலியற் சூழலிலேயே இடம்பெறுகின்றது.

- சமய, சமூக நிறுவனங்களின் வேண்டுகோளின் போரில் படைப்புக்களைப் பெற்றுத் தொகுத்துப் பதிப்பித்தல்:









இதற்கு உதாரணமாக ஏராளமான கும்பாபிஷேக மலர்களைக் குறிப்பிடலாம். உதாரணமாக, 'ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திர (வயல்) விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேக மலர்' என்ற நூலின் பதிப்பாசிரியராக பா. சிவராமகிருஷ்ண சர்மா அவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளார். மேற்படி ஆலயத்தின் கும்பாபிஷேகம் 05.02.2007 அன்று இடம்பெற்றபோது வெளியிடப்பட்ட சிறப்புமலர் இதுவாகும். கும்பாபிஷேக மகிமை பற்றியும், விநாயகர் பெருமை பற்றியும், இலங்கையின் விநாயகர் ஆலயங்கள் பற்றியும் அரிய பல தகவல்களைத் தாங்கி இம்மலர் வெளிவந்துள்ளது. 35 தமிழ்க் கட்டுரைகளும், 3 சிங்கள கட்டுரைகளும் 3 ஆங்கிலக் கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவர் சிலாபம், முன்னேஸ்வர ஷேத்திர விநாயகர் கோவிலுடன் தொடர்புள்ளவராக இருப்பின், அவர் நூலைப் பதிப்பித்தவர் என்ற உரிமையை முன்னிறுத்தி பதிப்பாளராகக் குறிப்பிடப்படலாம். அவர் முன்னின்று கட்டுரைகளைத் தேடித் தொகுத்து இந்நூலை ஆக்கியிருப்பின் அவரை மலராசிரியர் என்றோ, தொகுப்பாசிரியர் என்றோ குறிப்பிடலாம்.

மேற்கூறிய ஆறு உதாரணங்களின் மூலமும் நூலியல்துறையில் 'பதிப்பாசிரியர்' என்ற பதத்தினைப் பயன்படுத்தும் வேறுபட்ட சூழ்நிலைகளைக் காட்டியிருந்தேன். இவற்றில் முதலாவதாகக் குறிப்பிட்ட 'பதிப்பாசிரியர்' என்ற பதப்பிரயோகமே Editor என்ற ஆங்கிலப் பதத்திற்கு நெருக்கமாகத் தோன்றுகின்றது. ஒரு பதிப்பாசிரியர் தான் உருவாக்கிய ஒரு நூலில் உள்ள கட்டுரைகளின் தேர்வுக்கும், அக்கட்டுரைகளின் மெருகேற்றலுக்கும், தார்மீகப் பங்காற்றுவோனாக இருத்தல் வேண்டும். அக்கட்டுரைகளைப் பரிசோதித்து அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் துறைசார் ஞானமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

வாழ்ந்து மறைந்த, அல்லது வாழும் ஒரு படைப்பாளியின் படைப்புக்களைத் தேடித் தொகுக்கும் ஒருவர் மூல நூலாசிரியருடைய அல்லது கட்டுரையாளரருடைய கட்டுரையை பரிசோதிக்கவோ, மாற்றி எழுதத் தூண்டவோ இயலாத சூழலில் (மறைந்தவர்களின் படைப்புக்களை தனி மனிதர்களாக நின்று மீள்பதிப்பு என்ற போர்வையில் திருத்தம் செய்வதோ, மெருகூட்டிப் பதிப்பிப்பதோ, மாற்றம் செய்வதோ தார்மீகப் பணியாகாது) பின்னையவர் ஒரு 'தொகுப்பாளர்' என்ற உரிமையையே பெறுகின்றார்.

இதனை முன்னர் ஆறுமுகநாவலர் போன்றோர் வெளியிட்ட நூல்களின் தலைப்புப் பக்கத்திலேயே தெளிவாகப் பதிவு செய்வதைக் காணமுடியும். இங்கு உதாரணமாகக் குறிப்பிடும் 'பிரயோக விவேகம்' என்ற நூலின் (1957-ல் வெளிவந்த) நான்காவது பதிப்புப் பற்றிய தகவலே தற்போது என்னிடமுள்ளது. இதன் முதற்பதிப்பு விபரம் நூலில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

பிரயோக விவேகத்தின் காரக படலத்தில் 17 செய்யுள்களையும், சமாச படலத்தில் 10 செய்யுள்களையும், தத்தித படலத்தில் 6 செய்யுள்களையும், திங்ஙப் படலத்தில் 16 செய்யுள்களையும், உள்ளடக்கியுள்ள 'பிரயோக விவேகம்' என்ற நூலின் மூல ஆசிரியர் (ஆக்கியோன்) குருகூர்ச் சுப்பிரமணிய தீக்ஷிதர். ஏட்டுருவில் கிடந்த பல்வேறு மூலப் பிரதிகளையும் கொண்டு நல்லூர் ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் பரிசோதிக்கப்பெற்று இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதனை வெளியிட்டவர் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை தரும பரிபாலகர் வி. கந்தசுவாமி அவர்கள். இத்தகவல் அனைத்தும் முதற் பக்கத்திலேயே காணப்படுகின்றன. இங்கு ஆறுமுகநாவலர் தம்மை இணை-ஆசிரியராகவோ, பதிப்பாசிரியராகவோ இனம்காட்டிக்கொள்ளவில்லை. அவர் குருகூர்ச் சுப்பிரமணிய தீக்ஷிதர் ஏட்டுருவில் விட்டுச்சென்ற ஒரு படைப்பினை பரிசோதித்து, அச்சுவாகனமேற்றத் துணைநின்றிருக்கிறார். அவ்வளவுதான். ஆயினும் அக்காலகட்டத்தில் 'பதிப்பாசிரியர்' என்ற பதம் வழக்கில் இல்லாதிருந்ததால், இன்றைய சூழலில் அவர் பதிப்பாசிரியராகவே கருதப்படுவார்.

பதிப்பாசிரியர்- பதிப்பாளர்- வெளியீட்டாளர் போன்ற சொற்பதங்களில் எமக்குள்ள மயக்கநிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இதன் மூல காரணம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பகட்டத்திலேயே உருவாகிவிட்டது என்று கருதுகின்றேன்.

ஆறுமுகநாவலர் (1822-1879), பதிப்புச் செம்மல் உ.வே. சாமிநாதையர் (1855-1942) போன்றோரின் காலகட்டத்தில் நூலொன்று உருவான வரலாற்றை நாம் சற்று மீட்டுப் பார்த்தால், 'பதிப்பாசிரியர்' என்ற பதம் அக்காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது புலனாகும். அக்காலத்தில் 'பரிசோதித்தவர்' என்ற சொற்பதத்தையே அதிகமாகப் பயன்படுத்தியிருப்பதை அவதானிக்கலாம். பதிப்பாளர் / பதிப்பித்தவர்/பதிப்பிக்கப்பட்டது போன்ற பதங்கள் 'அச்சிட்டது' என்ற தற்காலச் சொற்பதத்தையே குறித்து நின்றிருக்கின்றது. இக்காலகட்டத்திலேயே ஏட்டுப் பிரதிகளாக இருந்த பல தமிழ் நூல்கள் அச்சுருவில் கொண்டுவரப்பட்டன. அச்சகங்கள் அக்காலகட்டத்தில் 'யந்திரசாலை'களாகவும், 'பிரசுராலயங்கள்' ஆகவும் அழைக்கப்பட்டு வந்துள்ளன. பின்னாளில் 'அச்சு யந்திரசாலைகள், அச்சுப் பதிப்பகங்கள்' என்பன பல்கிப் பெருக, 'அச்சகங்கள்' என்ற சொல்லும் 'பதிப்பகம்' என்ற சொல்லும் எமக்கு அறிமுகமாகின.

இன்று காகித நூலுருவில் உள்ள நூல்களை மின்நூல்களாக மாற்றும் மற்றுமொரு வரலாற்றுக் காலகட்டத்தில் வாழும் எமக்கு உள்ள ஆர்வமும், ஈடுபாடும், கவர்ச்சியும், அன்று செல்லரித்துப் போய்க்கொண்டிருந்த ஏடுகளை நூலுருவில் கொண்டுவரும்போதும் இருந்திருக்கிறது. அச்சு இயந்திரங்களை வாங்கி யந்திரசாலைகளை உருவாக்குவதில் பல தொழில் அதிபர்கள் ஈடுபாடு காட்டத் தொடங்கினர். அதற்கான நிதி வளத்தை வழங்குவதற்கு சில சமஸ்தான ஜமீந்தார்களும், மடாலயங்களும் தமிழகத்தில் துணைநின்றுள்ளன என்பதை நாம் அறிவோம்.

(தொடரும்...)



selvarajah.n@thaiveedu.com

# சாக்லெட் பெண்ணும் பண்ணை வீடும்

**- மைதிலி தயாநிதி**

அண்மையில் குரு அரவிந்தனின் யாதுமாகி நின்றவள், சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும் எனும் இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் பற்றி, இணையவெளி இலக்கியக் கருத்தரங்கொன்றில் கருத்துரை வழங்குமாறு கேட்டிருந்தனர். இரு தொகுப்புகளையும் வாசித்து முடித்த பின்னர் இரண்டைப் பற்றியும் எழுதுவது சாத்தியமற்றதாக எனக்குத் தோன்றியது. இரு தொகுதிகளிலும் மொத்தம் 40 சிறுகதைகள் இருக்கின்றன. அத்துடன், பேசுபொருள், கதை கூறும் முறை, கையாளப்பட்ட மொழி முதலானவற்றின் அடிப்படையில் இரண்டு தொகுதிகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. யாதுமாகி நின்றவள் என்ற தொகுதியில் சங்க இலக்கியப் பாடல்களில் மலர்ந்த நவீன கதைகள் பதினொன்றும், கொரோனா கதைகள் ஐந்தும் உள்ளன. இக்கதைகளை வாசித்தபோது, அவை குரு அரவிந்தனால் எழுதப்பட்டவையா என்ற ஐயம் உண்டாயிற்று. ஏனெனில் அவர் எனக்குச் சில காலத்திற்கு முன்புதான் சதிவிரதன் எனும் தனது சிறுகதைத் தொகுதியை அனுப்பியிருந்தார். சதிவிரதனுக்கும், யாதுமாகி நின்றவளுக்கும் இடையில் பொருளிலும், வடிவத்திலும், முக்கியமாகக் கதை சொல்லும் பாணியிலும் பெரும் வேறுபாட்டை உணர்ந்தேன்.

யாதுமாகி நின்றவள் எனும் கதைத்தொகுதி வேறு வகையான வாசகர்களுக்காக எழுதப்பட்டது என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. பெரும்பாலும் அதில் எல்லாக் கதைகளுமே நேரடியான கதை சொல்லும் முறைமையைக் கொண்டனவாயும், மிகையுணர்ச்சியினை வெளிப்படுத்துவனவாயும் இருந்தன. அதன் பின்னர் சாக்லட் பெண்ணும், பண்ணை வீடும் எனும் தொகுப்பினை வாசித்தேன். அதை வாசிக்கத் தொடங்கியவுடன் எழுத்தாளர் அ. முத்துலிங்கம் நினைவுக்கு வந்தார். கருத்தளவில் ஆழமான சில கதைகளை இத்தொகுதி கொண்டுள்ளது. வெவ்வேறு வகைமைகளில் பாகுபடுத்தக் கூடிய சிறுகதைகள் இங்கு காணப்படுகின்றமை இதன் சிறப்பம்சமாகும். மேலும், இதன் மொழிநடையிலும் மென்மையும், இனிமையும் உள.

யாதுமாகி நின்றாள், சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும் எனும் இரு கதைத் தொகுதிகளும் வெவ்வேறு எதிர்பார்ப்புகள் கொண்ட வாசகருக்காக எழுதப்பட்டிருக்கலாம். எனினும், குரு அரவிந்தனின் இந்த இலக்கிய உருமாற்றம் (Literary metamorphosis) எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. வாசகர்களின் விருப்பங்கட்கேற்பப் பொருளிலும், வடிவத்திலும் முழுமையான மாற்றங்களை கொணரவல்ல திறன் அவருக்குண்டு எனினும், அது அவர் கதைகள் குறித்த ஒருங்கிணைந்த விமர்சனம் வழங்குவதைக் கடினமாக்குகிறது.




எனவே, இங்கு அவருடைய சாக்லெட் பெண்ணும் பண்ணை வீடும் எனும் 24 சிறுகதைகள் கொண்ட தொகுதியை மட்டுமே எடுத்துக் கொள்கிறேன்.

வெளிநாட்டுச் சிறுகதைகள் என்பது இத்தொகுதியின் உபதலைப்பாகும். அதாவது, இலங்கை, தமிழகம் முதலான தமிழ்

வழங்கும் நாடுகள் அல்லாத இடங்களைக் கதைக்களங்களாகக் கொண்டு எழுதப்பட்ட கதைகளை இது உள்ளடக்கியுள்ளது. (இதுவே எழுத்தாளர் முத்துலிங்கம் என் நினைவுக்கு வந்ததற்குக் காரணமாகலாம்.) எனவே, முன்னர் கேள்விப்பட்டிராத பௌதிக இடங்களையும், பண்பாட்டுக் கோலங்களையும் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதே இக்கதைத் தொகுப்பின் நோக்கம் என்பது புலனாகிறது. கனடா, போர்த்துக்கலிலுள்ள லிஸ்பன், நியூஜேர்சி, அரூபா, கென்யா, அலாஸ்கா, சோமாலியா, ரோம், புளோரிடா, சவுதி அரேபியாவின் தலைநகர் றியாட் எனப் பல இடங்கள் கதைக்களங்களாக அமைந்துள்ளன.

வாசகருக்கு அறிமுகமில்லாத இடங்களைக் களங்களாகக் கொண்டு சிறுகதைகள் எழுதும் போது, அவற்றை அறிமுகப்படுத்துவதும், அவை தொடர்பான தகவல்களை விரிவாக வழங்குவதும் அவசியம். இந்த அணுகுமுறை வாசகர் நம்பக் கூடிய உலகத்தை உருவாக்க உதவுகிறது; கதை நிகழும் புவியியல், பண்பாட்டு, சமூக சூழல்களையும், கதாபாத்திரங்களையும், கதை நிகழ்வுகளையும் வாசகர் புரிந்துகொள்வதை எளிதாக்குகிறது. என்றாலும், வாசகரின் ஆர்வத்தைத் தக்கவைப்பதற்காக விரிவான விவரணங்களை அல்லது செய்திகளைக் கதை ஓட்டத்துடன் சமநிலைப்படுத்துவது முக்கியம். இதில் குரு அரவிந்தன் ஓரளவுக்கு வெற்றி பெற்றுள்ளார் என்றே நினைக்கிறேன். இத்தகைய கதைகள் தகவல் புனைகதை (informtional fiction) வகைமையின்பாற்படும்.

தகவற் புனைகதைகளில் கதைகூறல் அம்சமானது உண்மையான தகவல்களுடன் பின்னிப்பிணைந்திருக்கும். சுருக்கமாகச் சொல்வதாயின், கதை புனையப்படுவதன் நோக்கமே இத்தகைய உண்மைத் தகவல்களை வாசகர்கட்குத் தெரிவிப்பதற்கும், அதன் மூலமாகச் சமூக பண்பாட்டுப் புரிதல்களை ஏற்படுத்துவதற்கும், சில சமயங்களில் விழிப்புணர்வினை உண்டாக்குவதற்காகவும் ஆகும். எடுத்துக்காட்டாக, இத் தொகுதியில் உள்ள 'சௌப்படி' எனும் கதையைக் குறிப்பிடலாம். நேபாளத்திலுள்ள கிராமப்பகுதியில் மாதவிடாய்க் காலத்தில் வீட்டுக்கு ஒதுக்குப்புறமாக உள்ள ஓரிடத்தில் அந்த நாட்களைக் கழிக்கும் நிர்ப்பந்தம் பெண்களுக்கு உண்டு. இக்கதையில் கதை சொல்லியான இளம்பெண்ணின் தமக்கை மாதவிடாய்க் காலத்தில் மாட்டுக் கொட்டிலில் படுக்க வேண்டி நேரிட்டபோது அங்கு பாம்பு தீண்டி இறந்து விடுகின்றாள். மாதவிடாயுடன் தொடர்புடைய சம்பிரதாயங்கள் பெண்களுக்கு உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், அவர்களின் உயிருக்கே ஆபத்தையும் விளைவிக்கின்றன என்பதைக் கதை நேரடியாகச் சொல்கிறது. 'மூட நம்பிக்கைகள் மனிதனின் சிந்தனை விருத்தியைத் தடைபண்ணிக்கொண்டே இருக்கும். படிப்பறிவுள்ளவர்கள் உடனடியாக விழிப்புணர்வை ஏற்படுத்தாவிட்டால் இளம் பெண்களின் நிரந்தர சிறைசாலைகளாக மட்டுமல்ல, கல்லறைகளாகவும் சௌப்படிகள் மாறிவிடலாம்' என்ற பத்திரிகைச் செய்தியுடன் ஆரம்பிக்கும் இக்கதை, இந்த வழக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கமுடையது.

தகவற்புனைவு என்று வகைப்படுத்தக் கூடிய இவரது கதைகள் சிலவற்றில் வரலாற்றுச் செய்திகள் செறிந்துள்ளமையை அவதானிக்கலாம். இத்தகைய கதைகளின் பின்னணியில் கதாசிரியரின் வரலாற்றுத் தேடலுண்டு. எடுத்துக்காட்டாக, 'வெற்றிலைத் தட்டில் ஒரு பாக்கு வெட்டி' என்ற சிறுகதை 14-




ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசிற்கும், சோமாலிய அரசிற்குமிடையில் இருந்து வந்த, பெரிதும் அறியப்படாத வாணிபத் தொடர்பு பற்றியது.

அவ்வாறே 'சாவோ பிசாசுகள்' எனும் கதையில், கிழக்காபிரிக்கா என அழைக்கப்பட்ட உகண்டா, கென்யா பகுதிகளில் இந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டு, ரயில் பாதை அமைப்பதற்காகத் தங்க வைக்கப்படுகின்றனர். ஆனால் அவர்களிடையே மர்மமான முறையில் தொடர்ச்சியாக மரணங்கள் நிகழ்கின்றன. நவீனத்துவத்தின் ஊடுருவலை விரும்பாத அங்கு வாழும் பூர்வீக குடியினர் இந்த இறப்புகளுக்குப் பிசாசுகளே காரணம் என்று கூறுகின்றனர். ஆனால், மனித மாமிச ருசிகண்ட இரண்டு சிங்கங்களே காரணம் என்று பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு அவை சுட்டுக் கொல்லப்படுகின்றன. சுவாரஸ்யமாகச் சொல்லப்பட்ட இக் கதை வரலாற்றுச் செய்தியை அடிப்படையாகக் கொண்டது.

அதே போன்று, 'நீந்தத் தெரியாதவன் பார்த்த நாட்டிய நாடகம்' எனும் சிறுகதை, அமெரிக்க சிவில் உரிமைகள் இயக்கம் (1945-1964) மேற்கொண்ட 'புளோரிடா வேட்-இன்ஸ்' (Florida wade-ins) எனப்பட்ட போராட்டமானது கடற்கரை மற்றும் குளங்களில் கடைப்பிடிக்கப்பட்ட நிற அடிப்படையிலான இனப் பிரிவினையை (segregation) முடிவுக்குக் கொண்டு வந்தது எனும் செய்தியை அடிப்படையாகக் கொண்டது. புளோறிடாவில் கறுப்பினத்தவர் கடலுள் சென்று குளிப்பதற்கு இருந்த தடைகள் பற்றியும், அந்தத் தடையை மீறி இளைஞர் சிலர் நீந்தச் சென்று பொலிசாரால் சிறைபிடிக்கப்பட்டமை பற்றியும், 1962-ல் நடைபெற்ற வழக்கில் 'கறுப்பினத்தவர் கடலிற் குளிப்பது குற்றமாகாது; இந்த மண்ணில் அவர்களுக்கான சுதந்திரமிருக்கிறது' என்று தீர்ப்பு வழங்கப்பட்டமை பற்றியும் கதை பேசுகிறது. இது யாழ்ப்பாணத்தில் 1968-ல் நடைபெற்ற மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசம் உட்படத் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களை நினைவுபடுத்துகிறது.




இத்தகைய கதைகளில் இவர் பயன்படுத்தும் இலக்கிய உத்தி பற்றியும் குறிப்பிடல் வேண்டும். இக்கதைகளில் இரண்டாம் வகை விவரிப்பினைக் (second-hand narration /secondary narration) காணலாம். இவ் உத்தி பிரதான கதாபாத்திரத்திற்கு இன்னொரு பாத்திரம் தன் கதை கூறும் பாங்கில் அமையும். இத்தகைய கதைகளைச் சட்டகக்கதை (framed narrative) என்றும் அழைக்கலாம். அதாவது, ஒரு முக்கிய கதையை உள்ளடக்கிய சட்டகம் ஒன்றினுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இரண்டாம் நிலைக் கதைகள் காணப்படும். இதற்கு உதாரணமாக, முதலாவது கதையான 'சாக்லட் பெண்ணும் பண்ணைவீடும்' என்பதையே எடுத்துக் கொள்ளலாம். மருத்துவர் அலுவலகத்தில் கதைசொல்லி, நிக்கலஸ் என்பவரைச் சந்திக்கிறார். இவர்களிருவருக்கும் இடையில் உள்ள தொடர்பாடலை மையப்படுத்தி அமைவதே முதன்மைக் கதை. இதுவே நிக்கலஸ் தனது சொந்தக் காதற் கதையைக் கூறுவதற்கான சூழலை அல்லது இரண்டாம் நிலைச் சட்டகத்தை உருவாக்குகிறது.

ஒரு சில கதைகள் போதனைக் கதைகள் (didactic fiction) எனும் வகைமையின் பாற்படும். எடுத்துக்காட்டாக, 'வணிகவகுப்பும் ரெட் வைனும்' என்ற கதையைக் குறிப்பிடலாம். போதனைக்கதையின் நோக்கம் வாசகர்க்குச் சமய, பண்பாட்டு விழுமியங்களை உணர்த்துவதாகும். இக்கதையில் கணக்காளனும் எழுத்தாளனுமான இளைஞன் லிஸ்பனிலுள்ள விமான நிலையத்தில் ஒரு வைன் வணிகனோடு உரையாடி அவ்வியாபாரம் பற்றிய பல தகவல்களை அறிந்து கொள்கிறான். அதே சமயம், விவேகானந்தரின் போதனையை மனம் கொண்டு ரெட் வைன் பருகுவதில்லை எனும் கொள்கையினனாகவும் விளங்குகிறான். வைன் பற்றிய தகவல்களைத் துருவித் துருவிச் சேகரித்த அவன், விமானத்தில் ரெட் வைன் பரிமாறப்பட்ட சமயம், விவேகானந்தரை நினைத்து அதைத் தவிர்த்து விடுகிறான். இக்கதை சொந்த மத, பண்பாட்டு விழுமியங்களுக்கு மாறான விடயங்களை ஒருவர் அறிவுபூர்வமாகக் கற்றுக்கொள்வதில் தவறில்லை; ஆனால் அவற்றிலிருந்து வழுவுதல் ஆகாது எனும் போதனையை அடிப்படையாகக் கொண்டது எனலாம்.

அறிவியல் புனைகதை வகைமையின் வலுவான அடித்தளத்தைக் கொண்டது : சதிவிரதன் எனும் கதை. சில விலங்குகள் உறங்கும் (hibernate) குளிர்காலத்தில், நாட்டின் பிரச்சினைகளைக் குறைக்க, மனிதர்களையும், ஏனைய விலங்குகளையும் நீண்ட காலம் தூங்க வைக்கும் நிருபிக்கப்பட்ட முறை ஒன்றைக் கண்டுபிடித்த பேராசிரியர் ஒருவர், ஒரு இரவில் தனது இயற்கையான ஆசையை (காமத்தை) சமாளிக்க முடியாமல், குளிர்காலத்தில் கட்டுப்பாட்டு நிலையத்தில் தனது உதவியாளருடன் உறவு கொள்கிறார். இயற்கையின் விதிகளை மீற வழி சமைத்தவர் தன் இயற்கையை மீற இயலாது அவதிப்படுகிறார். புறத்தில் - பொது வெளியில் - வெற்றியையும், அகவுலகில் தோல்வியையும் தழுவுகிறார். சதிவிரதன் என்பது குரு அரவிந்தன் கையாண்ட புதியசொல். பேராசிரியர் திருமண விதிகளுக்கு முரணான வகையில் நடக்கிறார் என்பதைத் தலைப்பு எள்ளலுடன் சுட்டுகிறது.

இந்த அறிவுப் புனைவிற்றான், நான் வாசித்த குரு அரவிந்தனின் ஏனைய கதைகளிடத்துக் காணக்கிடைக்காத உளப் போராட்டம் குறியீட்டு வடிவத்தில் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கதையின் இறுதி மூன்று பந்திகள் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக எழுதப்பட்டுள்ளன. விஞ்ஞான, தொழிநுட்பவியலின் அறம் சார்ந்த பரிமாணங்களைக் கேள்விக்குட்படுத்தும் இக்கதை இலக்கியரீதியாக வெற்றிபெற்ற கதை என்றும் சொல்லலாம். கதையின் இறுதிப் பந்திகளைக் கீழே தருகிறேன்.

நிசப்தமான அந்த இரவில் அதையும் தாண்டி, மங்கிய வெளிச்சத்தில் எப்படியோ உள்ளே நுழைந்துவிட்ட விட்டில் பூச்சி ஒன்று உள்ளக நடைபாதை ஒளிக்கீற்றில் முட்டி மோதிக்கொண்டிருப்பது அவரது கண்ணில் பட்டது.

என்னதான் மனதைக் கட்டுப்படுத்தினாலும், மீண்டும் அவரது பார்வை முட்டி மோதும் அந்த விட்டில் பூச்சியில் தான் பதிந்தது. வேண்டாத சிந்தனைகளைத் திசைதிருப்ப அவர் முனைந்தாலும், அவருக்குள் ஏற்பட்ட அந்த உணர்வுகளை அவரால் தவிர்க்க முடியாமல் போனது. மதில் மேல் பூனை போலத் தாவித் தவித்த பொல்லாத மனசோ, விட்டில் பூச்சியை ஓரங்கட்டிவிட்டுத் தன்னிச்சையாக எதிர்ப்பக்க வாசற்கதவில் ஆக்ரோஷமாய் மோதியது.

இப்போ எதிர்ப்பக்கக் கதவு முற்றாகச் சாத்தப்பட்டதில் உள்ளக நடைபாதையில் நீண்டு கிடந்த ஒளிக்கீற்றுத் தேய்ந்து மறைந்து போயிருந்தது. பின்னிரவின் நிசப்தத்தின் பாதிப்பு அவரையும் அணைத்துக் கொண்டதில் உடம்பு சோர்ந்து போய்க்கிடந்தது. அணைத்திருந்த யூலியின் கையை விலத்திவிட்டு, அதிகாலைத் தூக்கக் கலக்கத்தோடு எழுந்து நடைபாதையைக் கடந்து திரும்பித் தனது அறைக்கு வந்தபோது, இரவு முழுதும் ஆக்ரோஷமாய் முட்டி மோதிக் கொண்டிருந்த அந்த விட்டில் பூச்சி சிறகொடிந்த நிலையில் தரையில் வீழ்ந்து கிடப்பது அவர் கண்ணில் பட்டது.'

இவ்வாறாக 'சதிவிரதன் கதை நிறைவுறுகிறது. மேலே தரப்பட்ட பந்தியில் விட்டில்பூச்சி எனும் குறியீடு மிகச் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். விட்டில் பூச்சி ஆபத்து இருப்பினும், சுடரை நோக்கியே ஈர்க்கப்படுகிறது. இறுதியில் அதுவே அதன் அழிவிற்கும் வழிவகுக்கிறது கதை

யில் விட்டில் பூச்சியானது காமத்திற்கு எதிரான மனித போராட்டத்தையும், இறுதியில் மனிதத் தோல்வியையும் குறிக்கிறது. இச்சிறுகதையின் கருப்பொருளை விட்டிற்பூச்சிக் குறியீடு மேம்படுத்துவதாகவும், கதைக்கு ஆழமான அர்த்தத்தை வழங்குவதாகவும் அமைகிறது. விஞ்ஞான, தொழில் நுட்பங்களால் இயற்கையை வெல்லுதல் என்பது அசாத்தியம். அத்தகைய முயற்சி மனித அழிவிற்கே இட்டுச் செல்லும் என்ற குறிப்பும் இக்கதையில் பொதிந்துள்ளது.

அடுத்து, மாயா யதார்த்தவாதம் (magical realism) எனும் பாணியில் எழுதப்பட்ட கதையும் இத் தொகுதியில் உண்டு. இவ்வகைப் புனைவில் யதார்த்தத்துடன், யதார்த்த உலகிற்குப் புறம்பான செய்திகளும் கலந்து வரும். பொதுவாக சமூக யதார்த்த விமர்சனங்களாக இப்பாணியில் எழுதப்படும் புனைவுகள் அமையும். யதார்த்த உலக அநீதிகள், ஏற்றத் தாழ்வுகள் முதலானவற்றை முன்னிலைப்படுத்தவும், விமர்சிக்கவும் இவ்வகைக் கதைகளில் இடம்பெறும் அமானுஷ்ய கற்பனைக் கூறுகள் (magical elements) பயன்படும்.

'அட மானிடா நலமா ?' என்ற கதையில் விமானமொன்றில் பயணிக்கும் பெண் பயணிக்கு ஆண் பயணியிடம் ஈர்ப்பு ஏற்படுகிறது. ஆனால் எதிர்பாராத விதமாக விமானம் விபத்துக்குள்ளாகிக் காட்டில் விழுந்து விடுகிறது. விமான விபத்தில் இருந்து தப்பிய அவ்விரு பயணிகளையும் காட்டில் வாழும் கொரில்லா சமூகம் தமது செல்லப்பிராணிகள் போல், அதாவது மனிதர்கள் நாய்களை எவ்வாறு செல்லப்பிராணிகளாக நடத்துவார்களோ, அவ்வாறே அவர்களையும், நடத்துகிறது. புத்திசாலித்தனமான கொரில்லாக்கள், பெண் பயணியைக் காணும் நேரத்தில் ஆண் பயணியின் அமைதியற்ற நடத்தையைக் கவனிக்கின்றன. மனிதர் தம் செல்லப்பிராணிகளான நாய்களுக்கு நலங்கடிப்பது போன்று, கொரில்லாக்கள் அவனை ஆண்மைக் குறைபாடுள்ளவனாக்குகின்றன. தன்னிடம் இதுகாறும் ஆர்வமாக இருந்தவன் ஏன் இப்பொழுது பாராமுகமாகச் செல்கின்றான் எனப் பெண் பயணி திகைத்து நிற்கிறாள். இது செல்லப்பிராணிகளுக்குக் கருத்தடை செய்யும் நடைமுறையை விமர்சிக்கும் புனைவாகும்.

அடுத்து, பொருத்தமான சூழற்பின்னணிகளை உருவாக்கிக் கதை கூறுவதை அவரின் சில கதைகளில் அவதானிக்கலாம். 'சிவப்புப் பாவாடை' எனும் கதை பெற்றோரின் பார்வையிலிருந்து, pride parade பின்னணியில் புனையப்பட்டது. இங்கு சிவப்புப் பாவாடை பெண் தோழியின் குறியீடாகப் பயன்படுத்தப்படுகிறது.

'இரவில் தெரியும் சூரியன்' எனும் அசாதாரண தலைப்புக் கொண்ட சிறுகதை சொந்தத் தாயை ஊரில் விட்டுவிட்டு தகப்பன், சிற்றன்னை குடும்பத்துடன் அலாஸ்காவில் விடுமுறையைக் கழிக்கும் பதின்ம வயதுச்சிறுமியின் சவால்கள் பற்றியது. பயணிக்கும் குடும்பத்தின் தேவைகளை, வளர்ந்த பெண் போன்று கவனிக்கும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறாள் அச்சிறுமி. அவளின் சவால்களுக்கும், மென்உணர்ச்சிகளுக்கும் பரந்த கடினமான அதேசமயம் அழகான அலாஸ்கா எனும் பனிப்பிரதேசம் பொருத்தமான இயற்கைப் பின்னணியாகச் செயற்படுவதை அவதானிக்கலாம்.

'சோமாலியப் பூனைகள்' எனும் புனைவில் அன்புக்கு ஏங்கும் அண்டை வீட்டு சோமாலியப் பூனையின் வர்ணனை பற்றிய பின்னணியிலே சோமாலியப் பெண்ணின் கதை கூறப்படும் பாங்கு நயக்கத்தக்கது. அரசியல், சமூகப் பிரச்சினைகள் என சோமாலிய வாழ்க்கை முறைமைகளுடன் பின்னிப்பிணைந்து இங்கு கதை கூறப்படுகின்றது.

நூற் தலைப்புக் கதையான, 'சாக்லட் பெண்ணும், பண்ணை வீடும்' என்பதும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய கதை. இக்கதை மேற்கத்தேய திருமணங்கள் நீடித்த வாழ்வுடையன அல்ல என்ற கருத்தினை (stereotype) சவால் செய்யும் வகையில் எழுதப்பட்டுள்ளது. கீழைத்தேயக் கலாசார எல்லைகளுக்கு அப்பாலும் உறுதியான அன்பு இணையருக்கிடையே நிலவ முடியும் என்பதை இக்கதை காட்டுகிறது. 'அன்பானது அந்தஸ்து போன்ற சமூகப் பிளவுகளை வெல்லும் ஆற்றல் வாய்ந்தது' என்ற கருப்பொருளுடைய கதை. இது தமிழில் திரும்பத் திரும்பச் சொல்லப்படுகின்ற விடயம் எனினும், பன்முக கலாசார நாட்டுப் பின்னணியில் வைத்து இக்கருத்து கூறப்பட்டுள்ளமையால் வெறுமனே காதல் மட்டுமன்று, வேறு வேறு புலம்பெயர்ந்த சமூகத்தைச் சார்ந்தவர்களிடத்து உண்டாகும் நட்பு, பரஸ்பர நம்பிக்கை என்பவற்றையும் இக்கதை வெளிப்படுத்துகிறது.

இந்நூலில் உள்ள எல்லாக் கதைகள் பற்றியும் இங்கு குறிப்பிடல் சாத்தியமில்லை. நான் பார்த்த அளவில் பலவீனமான கதைகளும் இருக்கின்றன: 'குட்டையில் விழுந்த நாணயம்', 'காதல் ஒரு விபத்து' போன்ற கதைகள் எனக்குப் பொழுதுபோக்குக் கதைகளாகவே தெரிந்தன. 'யார்குழந்தை?', 'சிலந்தி', 'என் செல்லக்குட்டிக் கண்ணனுக்கு' என்ற கதைகளில் திரைப்படக் கதைகளின் சாயல் தூக்கலாக இருந்தது. அவை மிகையுணர்ச்சியின் பாற்பட்டதாயும், அழகியல் அம்சங்கள் குறைந்தனவாயும் எனக்குப் பட்டன. இத்தகைய கதைகளில் 'அரைத்த மாவை அரைத்தல்' என்பது கதை கூறும் விடயத்திலும், கதை கூறும் முறையிலும் இருப்பது போல் நான் உணர்ந்தேன். இந்தியப் பேச்சுமொழிப் பிரயோகமும் இவரது கதைகளில் இருப்பதைக் கவனித்தேன். தமிழக வாசகர்களை ஈர்க்குமுகமாக இவ்வழக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று எண்ணிக் கொண்டேன்.

குரு அரவிந்தனின் இக்கதைத்தொகுப்பினை முழுமையாக நோக்கும்பொழுது, வெவ்வேறு புனைவு வகைமைகளையும், இலக்கிய உத்திகளையும் பின்பற்ற முயன்றுள்ளார் என்பது தெரிகிறது. தகவல் புனைவு, போதனைப்புனைவு, அறிவுப் புனைவு, மாயாயதார்த்தவாதம் என்பன இவர் கையாண்ட புனைவு வகைமைகளுட் சில. அதேசமயம் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட, நேரடியான விவரிப்பு முறை உடைய சிறுகதைகளையும் இவர் புனைந்துள்ளார். பல் திறப்பட்ட வாசகர்களைத் திருப்திப்படுத்துவதில் அவர் முனைப்பாக இருக்கிறார் என்பதை இதன் மூலம் உணரக்கூடியதாக உள்ளது. அதே வேளை 'சதிவிரதன்' போன்ற விதந்து பேசத்தக்க இலக்கியதரமிக்க புனைவுகளையும் படைக்க வல்லவர் என்பதை இத்தொகுதி ஐயத்திற்கிடமின்றிக் காட்டுகிறது.



maithilithayanithy@thaiveedu.com



# தமிழ் அகராதியும் கதிரவேற் பிள்ளைகளும்

-மாலா. சிவகடாட்சம்

'தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைக்குரியது' என்று கூறினாராம் தமிழில் நவீன நாடகக் கலையின் முன்னோடி என்று அறியப்படும் பம்மல் சம்பந்த முதலியார். இவரது கூற்று எவ்வளவு காத்திரமானது என்பதை, அக்காலப் பகுதியில் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்றிய இலங்கைத் தமிழறிஞர்களின் பட்டியலைப் பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

முதன்முதலில் தமிழ்ப் புலவர்கள் பற்றிய ஒரு வரலாற்று நூலைத் தந்த சைமன் காசிச் செட்டி பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்தவர். அகநானூறு, புறநானூறு உட்படச் சங்ககாலத்து இலக்கியங்கள் எவருக்கும் அகப்படாது ஏட்டுச் சுவடிகளில் பல நூற்றாண்டுகால உறங்குநிலையில் இருந்த காலம் அது.

தமிழில் வசனநடையை வளர்த்தெடுத்த முதல்வர் என்று கமில் ஸ்வெலபில் அவர்களால் போற்றப்பட்ட யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் சைமன் காசிச் செட்டிக்கு 20 வயது இளையவர். சைவத்துக்கும் தமிழுக்கும் பணி செய்வதே தன் கடன் என்று கருதி வாழ்ந்த நல்லூர் ஆறுமுகம்பிள்ளை அதுகால வரை ஏட்டுச் சுவடிகளிலிருந்த பழந்தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களை அச்சுப் பதிப்புகளாகக் கொண்டுவரும் முயற்சிகளுக்கு அத்திவாரமிட்டவர். சங்க இலக்கியமான திருமுருகாற்றுப் படையைத் தாம் எழுதிய உரையோடு 1853-ம் ஆண்டிலேயே பதிப்பித்தவர். உ.வே. சாமிநாதையர் சங்க இலக்கியங்கள் பற்றி அறிந்து கொண்டது 1883-ம் ஆண்டிலேயே என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். சுவாமிநாத தேசிகரின் இலக்கணக் கொத்து, மண்டலபுருடரின் உரையுடன் கூடிய சூடாமணி நிகண்டு என்பவை நாவலரால் பதிப்பிக்கப்பெற்ற நூல்களுள் அடங்குவன.

நாவலரை அடுத்து பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை ஓலைச் சுவடிகளிலிருந்து தேடியெடுத்து அச்சில் கொண்டுவந்த சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களை அறியாத தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் இருக்கமுடியாது. தொல்காப்பியம் பொருளதிகாரத்தை 1881-ம் ஆண்டில் பதிப்பித்தவர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள். மூன்று தமிழ்ச் சங்கங்கள் பற்றியும் தமிழுக்கும் அகத்தியருக்குமுள்ள தொடர்பு பற்றியும் முதன் முதலாகக் குறிப்பிடும் இறையனார் அகப்பொருள் உரையை 1883-ல் அச்சில் கொண்டுவந்தவரும் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. புத்தமித்தரின் வீரசோழியத்தை 1881-ம் ஆண்டிலும் சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகையை நச்சி



னார்க்கினியாரின் உரையுடன் 1887-ம் ஆண்டிலும் பதிப்பித்து வெளியிட்டவர் இந்தச் சி.வை. தாமோதரம்பிள்ளை.

பழந் தமிழகத்தின் வரலாற்றைப் பதிவு செய்ய முதல் முயற்சி எடுத்தவரான விஸ்வநாதக் கனகசபைப் பிள்ளை (1855-1906) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. The Tamils Eighteen Hundred Years Ago என்னும் தனது நூலின் வாயிலாகத் தமிழர் வரலாற்றை முறையாகக் காலவரிசைப்படுத்த முயன்ற முதல் வரலாற்றாசிரியர் கனக-சபை ஆவார். சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் கூறப்படும் கடல்கொண்ட குமரிக்கண்டம் பற்றிய குறிப்புகளை முதன்மு




தலில் வெளிப்படுத்தியவர்களில் இவரும் ஒருவர். சேஷகிரி சாத்திரியார் முன்வைத்த கஜபாகு சமச்சீர்க் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு சங்ககாலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுவரை நீடித்திருந்ததாக முதன் முதலில் கூறியவரும் இவரேயாவார். கனகசபைப் பிள்ளை அவர்களின் முடிபுகள் ஓரளவு வலுவற்றதாகக் காணப்படினும் தமிழ் இலக்கிய வரலாற்றின் நகர்வில் அவற்றைப் 'பாதுகாப்பு நங்கூரம்' எனக் கருதமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார் கமில் சுவெலபில் அவர்கள்.

கனகசபைப் பிள்ளை அவர்களின் தந்தையான விஸ்வநாதப் பிள்ளை என்பவர்தான் மல்லாகத்திலிருந்து முதலாவது ஆங்கில-தமிழ் அகராதியைத் தொகுத்தவராக அறியப்படுகின்றார்.

தரங்கம்பாடி கிறித்தவ மிஷனரியைச் சேர்ந்தவரும் தாவரவியல் நிபுணருமான ஜே.பி. றொட்லெர் (J.P. Rottler) என்பவர் தொகுத்த நான்கு பாகங்கள் கொண்ட தமிழ்-ஆங்கில அகராதியின் முதல் பகுதி 1834-ல் சென்னை-வேப்பேரியில் அச்சிடப்பட்டது.

ஆங்கில அகராதிகளைப் போல் அகரவரிசையில் ஆரம்பித்த முதலாவது தமிழ் மொழி அகராதி 1841 ஏப்ரலில் மாதத்தில் மானிப்பாயிலிருந்த அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் அச்சிடப்பெற்றது (Martyns Notes on Jaffna 1923). இதன் காரணமாகவே இது மானிப்பாய் அகராதி என்றும் யாழ்ப்பாண அகராதி என்றும் அக்காலப் பகுதியில் அறியப்பட்டது. யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட அம்பலவாணர் சந்திரசேகர பண்டிதர் (1878) என்பவரே இந்த அகராதியைத் தொகுத்ததாக அறியப்படுகின்றது.

1872 மே 21 அன்று ஊர்காவற்துறை நீதிபதியாக நியமனம் பெற்ற குமாரசாமி வைமன் கதிரைவேற்பிள்ளை அவர்கள் அப்பதவியிலிருந்த காலத்தில் தமிழ் மொழியில் பேரகராதி ஒன்றினைத் தொகுக்கவேண்டும் என்னும் பேராவல் கொண்டிருந்தார். அக்காலத்தில் அவருக்குக் கிடைத்த வீரமாமுனிவரின் சதுரகராதி, மானிப்பாய் அகராதி, வின்ஸ்லோ அகராதி, வைத்திய அகராதி என்பவற்றை ஆராய்ந்து குறிப்புகள் எடுத்து வைத்திருந்தார். எனினும் தமது நீதிபதித் தொழிலிலிருந்த காலத்தில் அகராதிப் பணியில் ஈடுபடப் போதிய நேரம் கிடைக்கவில்லை. கதிரவேற்பிள்ளை 1898 நவம்பரில் தனது அரசபணியிலிருந்து ஓய்வு பெற்றதும் தமிழ்ப் பேரகராதி தயாரிக்கும் தமது பணியில் தீவிரமாக உழைத்து வந்தார். சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் இவருக்குச் சொற் குறிப்புகளை உதவியுள்ளார். உடுப்பிட்டி ஆறுமுகம் பிள்ளை, ஊரெழு சு. சரவணமுத்துப் பிள்ளை ஆகியோரும் அகராதி ஆக்கத்திற்கு உதவியுள்ளனர்.

1904-ம் ஆண்டு ஜனவரியில் வண்ணார்ப் பண்ணை வி. சபாபதி ஐயரின் அச்சியந்திரசாலையில் 328 பக்கங்களில் அச்சிட்டு வெளியிடப்பட்ட கதிரைவேற்பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதி அகர வரிசை வரையுமே கொண்டிருந்தது. இதில் 'அ' தொடக்கம் 'அனோர்' வரையிலான 7967 சொற்களுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. இது வைமன் கதிரவேற்பிள்ளை அவர்கள் உயிருடன் இருக்கும் காலத்தில் வெளியானதாகும். இந்த அகராதிக்கு வைமன் கதிரவேற்பிள்ளை எழுதியுள்ள முன்னுரையின்படி அவர் தமது அகராதியை 6 தொகுதிகளாக வெளியிடத் திட்டமிட்டிருந்தார் என்பதை அறியமுடிகின்றது. எனினும் 1904 ஏப்ரல் 14-ம் திகதி தமது எண்பதாவது வயதில் வைமன் கதிரவேற்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார்.

தமிழ்ப் சொல்லகராதியைத் தொகுத்து முடிப்பதற்கிடையில் வைமன் கதிரவேற்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டபடியால்

அவரது மகனும் சட்டநிரூபணசபைப் பிரதிநிதியுமான க. பால சிங்கம் (கதிரவேற்பிள்ளை பாலசிங்கம்) அவர்கள் தனது தந் தையின் உழைப்பில் உருவான அகராதியை அச்சில் கொண் டுவர முயற்சியெடுத்தார். இதுபற்றி அறிந்துகொண்ட மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் அமைப்பாளர்களில் ஒருவரும் தமிழறிஞருமான திரு. பாண்டித்துரைத் தேவர் அவர்கள் கதிர வேற்பிள்ளை தொகுத்த 'தமிழ்ச் சொல் அகராதி'யின் கையெ ழுத்துப் பிரதிகளைத் தன்னிடம் ஒப்படைத்தால் அவற்றைத்



தமிழ்ச் சங்கத்தில் பரிசோதித்து அச்சிட்டு வெளிப்படுத்த லாம் என்று பாலசிங்கம் அவர்களுக்கு அறிவித்தார். அவர் கேட்டுக்கொண்டபடியே பாலசிங்கத்தால் பாண்டித்துரைத் தேவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்களால் பரிசீலிக்கப்பட்டு 1910 ஜூலை மாதத்தில் 'தமிழ்ச் சொல் அகராதி'யின் முதல் தொகுதி வெளியிடப்பட்டது. நூலாசிரியரின் புதல்வரான வழக் கறிஞர் பாலசிங்கம் 28-2-1910 திகதியிட்டு அந்நூலுக்கு வழங்கியிருந்த அணிந்துரையில் தமது தந்தையாரால் தமிழ் அகராதி தொகுக்கப்பட்ட வரலாற்றையும், எந்தச் சூழ்நிலை யில் பாலவநத்தம் பாண்டித்துரைத் தேவரிடம் கையெழுத்துப் பிரதிகள் ஒப்படைக்கப்பட்டன என்பதையும் குறிப்பிட்டிருந் தார்.

'தமிழ்ச் சொல் அகராதி'-யின் இரண்டாம் பாகம் 1912-லும், மூன்றாம் பாகம் 1923-லும் மதுரைத் தமிழ் சங்கத்தாரால் அச் சிடப்பட்டன.

சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே. சாமிநாதையர் முதலா னோரின் கடின உழைப்பின் மூலம் எட்டுத்தொகை நூல்க ளும் பத்துப்பாட்டும் ஐம்பெரும் காப்பியங்களும் தொல்காப் பியம், நன்னூல், வீரசோழியம் போன்ற இலக்கண நூல்களும் சித்தர் நூல்களும் மெல்ல மெல்ல வெளிப்பட்டுவரும் காலத் தில் மேலும் மேலும் தமிழ்ச் சொற்களை அகராதியில் அவ் வப்போது சேர்த்துக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இறையனார் அகப்பொருள் வெளிவந்தபின், தமிழ்ச் சங்கம் பற்றியும் பண்டையகாலத்துப் புலவர்களால் இயற்றப்பட்ட ஏராளமான தமிழ் நூல்கள் உள்ளனவென்பதைப் பற்றியும் பலரும் அறிந்துகொண்டனர். மேலும் அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியார் போன்ற உரையாசிரியர்களால் மேற் கோள் காட்டப்பெற்ற நூல்கள் பற்றியும் ஒரு தேடுதல் உண் டானது. பழந்தமிழ் நூல்களைப் படித்தறிந்து கொள்வதற்குப் பண்டைய நூல்களில் இடம்பெற்றுப் பின்னர் வழக்கொழிந்து விட்ட ஏராளமான தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் காண்ப தற்கு உதவும் பொருட்டு, தமிழ்மொழி அகராதி காலந்தோ றும் புதிய புதிய சொற்களை உள்ளடக்கிப் பேரகராதியாக உருவெடுத்தது.

தமிழ்ப் பேரகராதியை விரிவுபடுத்தும் முயற்சிகளில் பலரும் ஈடுபட்டிருந்தாலும் மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவான்களுள் ஒருவரான மேலைப் புலோலியூர் நா. கதிரவேற்பிள்ளையின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. 1899-ல் நா. கதிரவேற்பிள் ளையின் 'தமிழ் பேரகராதி எனும் தமிழ் மொழி அகராதி' வெளியிடப்பட்டது. தமது 36 வருட வாழ்நாளின் பெரும்பகுதி யைத் தமிழ்நாட்டிலேயே கழித்தவரும் வித்துவான்கள் பலரா லும் போற்றப்பட்டு சதாவதானி என்று அறியப்பட்டவருமான நா. கதிரவேற்பிள்ளை (1871-1907) அவர்களின் பெயரே தமிழ் மொழி அகராதி தொடர்பாகத் தமிழ் நாட்டில் பெரிதும் அறியப்பட்ட பெயராக இருந்து வந்துள்ளது.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட வைமன் கதிரவேற் பிள்ளை அவர்கள் தமிழ்ச்சொல் அகராதியையும், மேலைப் புலோலியூர் நா. கதிரவேற்பிள்ளை அவர்கள் தமிழ்ப் பேரகரா தியையும் தந்துள்ளனர். கதிரவேற்பிள்ளை என்னும் பெயர் பொதுவாக இருந்ததால் தமிழ் அகராதியின் உருவாக்கத்தில் வைமன் கதிரவேற்பிள்ளையின் பங்களிப்பு மறக்கப்பட்டு மேலைப் புலோலியூர் கதிரவேற்பிள்ளையின் பெயரே பரவ லாக அறியப்பட்டு இருப்பதை அவதானிக்க முடிகிறது. மது ரைத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்ட காரணத்தால் வைமன் கதிரவேற்பிள்ளை தொகுத்த அகராதி 'தமிழ்ச்சங்க அகராதி' என்று பொதுவாக அறியப்பட்டதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். சென்னையிலுள்ள தமிழாராய்ச்சி நிறுவனம் வைமன் கதிரவேற்பிள்ளை அவர்களின் தமிழ்ச் சொல் அகராதி முதலாம் பாகத்தை மீள்பதிப்பாக 1998-ம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.

**உசாத்துணை:**

- Martyns Notes on Jaffna. By Martyn, John H. 1923
- தென் புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை, ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்ம ணிகள் 1967
- நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ் மொழி அகராதி, சாரதா பதிப் பகம் 8-ஆம் பதிப்பு 2014
- Kathiravelpillai's Tamil Dictionary thamizch chollakaraathi mutha-laam paakam, ulakath thamizaaraaychchi ni Ruvanam 1998



Sivakadadcham@thaiveedu.com

# நேர்காணல்



## வாசிப்பதைத் தவிர மகிழ்வூட்டக் கூடிய காரியம் வேறொன்று இருப்பதாகத் தெரியவில்லை...

**- சா. திருவேணிசங்கமம்**

**நேர்காணல் - பிரசாத் சொக்கலிங்கம்**

**▸ மட்டக்களப்பில் உங்களை சந்திக்கும் போதேல்லாம் ‘என்ன இஞ்சாலப் பக்கம்’? என்று வினாவினால் ‘நாம எங்க, லைபிறறிக்குத்தான்’ என்பதே உங்கள் பதிலாக இருக்கும். பின்னரான உரையாடலின்போதும், வாசிப்பு, எழுத்து, தேடல்களிலுடான உங்களின் இலக்கியத் தாகத்தை நான் உணர்ந்து கொள்வேன். இந்த தாகத்திற்கான பிண்ணணி பற்றி கூறுங்களன் ?**

எனது தகப்பன் ஓர் ஆசிரியர். அவர் சிறிய சம்பளத்தை கொண்டு தனது பெரிய குடும்பத்தை தாபரிக்க முடியாமல் துயருருவதை முருகனிடம் முறையிட்டு பாடல்கள் பாடுவார். அவர் கண்ணீர் பெருக முறையிட்ட போதும் அந்த முருகன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை, பாவம். எனது தகப்பனாரிடம் நிறைய வாசிப்புப் பழக்கம் இருந்தது. பண்டைய தமிழ் இலக்கியங்கள் மற்றும் சித்தர் பாடல்கள் தொடங்கி சமகால வள்ளலார், சுத்தானந்த பாரதியார், திரு. வி.க போன்றோரின் நூல்கள் வரை வாங்கிவைத்து வாசித்திருந்தார். திரு. வி.க.-வின் முருகன் அல்லது அழகு என்ற நூலை அப்போது வாசித்தது இப்போதும் நினைவில் உள்ளது. மேலும் அவர் பதுளையில் ஆசிரியராக கடமையாற்றி தவணை விடுமுறையில் ஊருக்கு வரும் போது எனக்கென்று ஓரிரு புத்தகங்களையும் வாங்கி வருவார். ஒரு தடவை அவர் அப்போது புதிதாக வெளிவந்த தீபம் இதழை வாங்கி வந்தார். அதில் தி. ஜானகிராமனின் பேட்டியை வாசித்ததும், அதன் அட்டை மஞ்சள் நிறத்தில் இருந்ததும் இப்போதும் கண்ணில் தெரிகிறது. அதில் ஜானகிராமன் சட்டை போடாமல் சால்வையால் போர்த்திக் கொண்டிருந்தார். அவரின் புத்தகங்கள் என் வாசிப்பு பசிக்குத் தீனியாக அமைந்தன. இதிலிருந்துதான் எனது இலக்கிய ஆர்வம் துளிர்விட்டது எனலாம். அது 1967-ம் ஆண்டாக இருக்கலாம்.

தீவிரமாக வாசித்ததன் அருட்டுணர்வால் உந்தப்பட்டு சிறுகதைகள் எழுதத் தொடங்கினேன். ஒரிரு கதைகள் 1970 வாக்கில் வீரகேசரி வாரவெளியீட்டிலும் வெளிவந்தன. அநேகமாக அவைகளின் கருப்பொருள்கள் பாலுணர்ச்சி, முறைதவறிய உறவுகள் சார்ந்ததாக இருந்தன. கூச்ச சுபாவமும் ஒழுக்கமான நடத்தையும் கொண்ட இந்தப் பொடியன் இப்படி எழுதுகிறானே என்று ஊரவர்கள் என்னை உற்றுப் பார்ப்பது வெட்கமாக இருந்தது. அதனால் அந்த முயற்சியில் ஊக்கம் இழக்கத் தொடங்கினேன்.

இந்த ஊக்கம் குறைந்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. அது அக்காலத்தில் பிரபலமாகப் பேசப்படும் இலக்கியவாதியான ஆனந்தன் எனக்கு அறிமுகமானான். அவன் எனது எழுத்தை தாக்குதாக்கென்று தாக்கினான். அவ்வாறான எழுத்துக்களால் வெகுசனத்துக் என்ன லாபம் என்று கேட்டான். அவர்களுக்கு கிழுகிழுப்பூட்டி, அவர்களின் புரட்சி உணர்வை மழுங்கச் செய்கிறீர்கள் என்றான். சும்மா ஜானகிராமன், அசோகமித்திரன் என்று படித்துக் கொண்டிராமல் தாமரையில் வருகின்ற கதை கட்டுரைகளை படியுங்கள், எல்லாம் புரியும் என்றான். அப்போது அக்கருத்தில் உண்மை இருப்பது போல எனக்குப்பட்டதால் எனது இலக்கியப் போக்கை படிப்படியாக மாற்றிக் கொள்ளத் தொடங்கினேன்.

**▸ ஒரு மொழிபெயர்ப்பாளராகவே நீங்கள் பெரும்பாலும் அறியப்படுகிறீர்கள். இத்துறையில் தாங்கள் ஈடுபடக் காரணம் என்ன? எப்படி இத்துறைக்குள் நுழைந்தீர்கள்?**

**மட்டக்களப்பு, துறைநீலாவணைக் கிராமத்தில் 1949–இல் பிறந்த திரு. சா. திருவேணிசங்கமம் அவர்களின் தற்போதைய வசிப்பிடம் காரைதீவு. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்து, கொழும்பு பல்கலைக்கழகத்தில் இதழியலில் பட்டயச் (Dipoma) சான்றிதழ் பெற்றவர். வட–கிழக்கு மாகாண சபையில் தகவல் அலுவலகராகவும் வடக்கு மாகாண சபைக் குறிப்புகள் (Hansard) பதிப்பாசிரியராகவும் கடமையாற்றி ஒய்வு பெற்றவர்.**

ஆனந்தன் கருத்துப்படி ‘படுபிற்போக்கு’ எழுத்துகளை படைப்பதை விடுத்து வெகுசனங்களை புரட்சிக்கு உந்தும் படைப்புகளைப் படைப்பது உன்னதமானது என்ற கருத்தால் கவரப்பட்டிருந்த நான், ‘ஊர் அசிங்கங்களை’ எழுதுவதை விடுத்து ‘நல்ல’ விடயங்களை எழுத முயன்றேன். அக்காலத்தில் முன்-பின்னாக வெளிவந்த முனைப்பு, கீற்று, களம், மூன்றாவது மனிதன், சுட்டும் விழி போன்ற சஞ்சிகைகளில் தமிழ் நாவல்கள், கவிதைகள் பற்றியும் பல்வேறு பொருள்கள் பற்றிய மொழிபெயர்ப்புக் கட்டுரைகளையும் எழுதி வந்தேன். இவைகளைப் படித்த என் நண்பர்கள் எனது மொழிபெயர்ப்புகள் குறித்து சிறப்பாகப் பாராட்டினார்கள். இதனால் மொழிபெயர்ப்பு வேலைகளில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினேன். மேலும் இதில் கொஞ்சம் பணம் கிட்டியது கூடுதல் உற்சாகத்தை தந்தது.

**▸ இது வரை நீங்கள் மொழிபெயர்த்த நூல்கள், கட்டுரைகளைப் பட்டியலிட முடியுமா?**

- இலங்கைத்தீவுடன் ஒரு வரலாற்று தொடர்பு - றொபர்ட் நொக்ஸ்
- தமிழ் புளூராக் - சைமன் காசிச் செட்டி
- அடையாள முரண்பாடும் சிவில் சமூக எதிர்வினைகளும்: இலங்கை நிலமை - சுனில் பஸ்தியான் மற்றும்
- இலங்கையில் இனத்துவ முரண்பாட்டின் பின்புலத்தில்...
- ரோஸ் மாலிக், செரனா தென்னக்கோன்
- மட்டக்களப்பு கைநூல் - எஸ். ஓ. கனகரத்தினம்
- மன்னார் கைநூல் - போக்
- வவுனியா, முல்லைத்தீவு ஆகிய வன்னி மாவட்டங்களின் கைநூல் - ஜோன் பென்ரி லூயிஸ்
- சிலோன் கெசற்றியர் - சைமன் காசிச் செட்டி
- இலங்கையில் நடந்த ஆயுத வர்த்தகம் - ஜொனாஸ் லிண்பெர்க் மற்றும்
- இலங்கையில் தமிழர் பண்பாடு - எம்.டி. இராகவன்
- காட்டில் ஒரு கிராமம் - லியனார்ட் வூல்ஃப்
- யாழ்ப்பாணம் - லியனார்ட் வூல்ஃப்

இவைகளை விட பல்வேறு சஞ்சிகைகளில் ரோமிலா தாப்பர், வந்தனா சிவா போன்றோரின் சிந்தனையை தூண்டும் கட்டுரைகளையும் ஜேம்ஸ் ஜெய்ஸ், நடின் கோடிமர் ஆகியவர்களின் சிறுகதைகளையும் மொழிபெயர்த்துள்ளேன்.

இவற்றைவிட வரலாறு, சமூகவியல் போன்ற பொருள்கள் பற்றி பல கட்டுரைகளை எழுதியுள்ளேன். மொழிபெயர்ப்பு நூலென்றால் எனக்கு காசு கிடைக்கும். சுயமாக எழுதிய நூலென்றால் நான் காசு கொடுக்க வேண்டி வரும். இதனால் சுயமாக எழுதியவை நூலுருவாக முடியாமலுள்ளது.

**▸ இவ்வளவு செய்திருந்தும் இலக்கிய உலகில் பெரிதும் அறியப்பட்டவராக நீங்கள் இல்லாததற்குக் காரணம் என்னவாக இருக்கும்?**

அதற்கு காரணம் எனது பெயராகும். அது சற்று விநோதமாக இருந்ததால், முதல் தரம் கேள்விப்படுபவர்கள் என்னை திகைப்புடன் நோக்குவார்கள். பின்னர் கிண்டலடிக்கத் துவங்குவார்கள். இதனால் நான் பெரிய அசௌகரியங்களுக்கு உள்ளானேன். இயல்பாக கூச்சசுபாவம் கொண்ட எனக்கு இது பெரிய சங்கடமாகப் போய்விட்டது. எனது பாடசாலை நண்பர்கள் எனக்கு சங்கடம் என்றே பெயர் சூட்டி அழைத்தனர். அது காரணமாக எழுதுவதைக்கூட சில காலம் தவிர்த்திருந்தேன். என்ன பெயரை போடுவது ? தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் துறை. சங்கமன், சங்கமம், தட்சணாமூர்த்தி, துறையூர் மூர்த்தி என்று புனைபெயர்களில் ஒளிந்து கொண்டு எழுதி வந்தேன். இந்தப் புனைபெயர்களை கொண்டு யாரும் இவையெல்லாம் ஒருவர் என்று அடையாளம் காணமாட்டார்கள். வேறு வழியில்லாததால் 2009-ல் இருந்து துணிந்து எனது சொந்தப் பெயரான திருவேணிசங்கமம் என்ற பெயரை

உபயோகிக்க வருகிறேன். இதனால் ஓரளவு அடையாளம் பெற்றுள்ளேன். இதனாலேயே, எனது முதல் சிறுகதை வீரகே சரி வாரவெளியீட்டில் 1970 ஏப்ரல் 21-ம் திகதி வெளிவந்தது முதல் 54 ஆண்டுகளாக எழுதி வந்தும் எனக்கு அறிமுகம் குறைவாக உள்ளது.

**▸ தாங்கள் பெற்ற விருதுகள் மற்றும் பாராட்டுகளைப் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

நான் சிறந்த மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்த மண்டல விருதை, றொபேர்ட் நொக்ஸின் நூலை மொழிபெயர்த்ததுக் காக 2003-ம் ஆண்டு பெற்றேன். அதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் முறையே தமிழ் புளூராக், மட்டக்களப்பு கையேடு ஆகிய நூல்களை மொழிபெயர்ப்புச் செய்ததற்கும் அவ்விருதுகளை பெற்றேன். மேலும் கிழக்கு மாகாண கலா சார திணைக்களம் தமிழ் புளூராக், மட்டக்களப்பு கையேடு ஆகிய நூல்களுக்கும் விருதுகள் அளித்தது. அத்திணைக்க ளம் எனக்கு வித்தகர் என்ற விருதையும் வழங்கியது. கிளி நொச்சியில் உள்ள நிறுவனம் ஒன்று என்னை அழைத்து 'தொல்லியலாளன்' என்ற பட்டத்தை அளித்தது. காரைதீவு பிரதேச செயலகம் என்னை அழைத்து 'சுவதம்' விருதை வழங்கி வாழ்த்தியது. 2022-ல் இலங்கை அரசு கலாபூஷணம் விருதளித்தது.

**▸ உங்களுடைய மொழிபெயர்ப்புகளில் காலனித்துவ கால ஆங்கில நூல்களும் கட்டுரைகளுமே பெரும்பா லும் காணப்படுகின்றன. அன்றைய ஆங்கில மொழி நடையை எவ்வாறு புரிந்து கொள்கி றீர்கள். அதைப் பற்றிய அனுபவத்தைப் பகிருங்கள்.**

வழக்கொழிந்த சொற்கள், வசன அமைப்புகள் பற்றி அகராதி கள் மூலமாக தெளிவுபடுத்திக் கொள்வேன். அதிகமான எழுத்தாளர்கள் ஒரு சீராகத்தான் விபரிப்பார்கள். அதை வைத்து சென்ற விடயத்தை விளங்கி வரும் விடய த்தை ஊகித்து கொள்வேன். அதற்கு வந்து எனது விரிந்த வாசிப்பு துணைசெய்கிறது. உதாரணமாக வியத்தகு இந்தியா என்ற புகழ்பெற்ற நூலை எழுதிய பசாம் இன்னொரு புகழ்பெற்ற நூலையும் (கிட்டதட்ட 125 பக்கம் கொண்ட சிறிய நூலையும்) எழுதியிருக் கிறார். அது The Origins And Development Of Classical Hinduism. அதை மொழிபெயர்ப் பதற்காக இந்து சமயம் பற்றி கிடைக்கக் கூடிய நூல்களையெல்லாம் கடந்த மூன்று மாதங்களாகப் படித்துக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் நான் மொழிபெயர்க்கப் போகும் விடயத்தை தெளிவுற அறிந்திருத்தல் அவசியம். அதனால் மொழிபெயர்ப்பு என்பது நேரத்தையும் உழைப்பையும் உறிஞ்சும் ஒரு கடினபணி.

**▸ மொழிபெயர்ப்பு நோக்கத்துக்காக வாசிப்பதை விடுத்து பொதுவாக எத்தகைய நூல்களை வாசிப்பீர்கள்? விரும்பி வாசிக்கும் நூலாசிரியர்கள் யாவர்?**

வரலாறு, தொல்லியல் சார்ந்த நூல்களை விரும்பிப் படிப் பேன். முக்கியமாக பக்தவத்சல பாரதி, ஆர். வெங்கடாசலபதி போன்றோரின் எழுத்துகளை ஈடுபாட்டுடன் வாசிப்பேன். நான் அண்மையில் வாசித்த சிறந்த நூல் பக்தவத்சல பாரதி எழுதிய திராவிட சிங்களவர் என்பதாகும். நூலின் முத்தாய்ப் பாக அவர் கூறுகிறார், 'சிங்கள ஆட்சியாளர்கள் இது வரை முன்னெடுத்து வந்துள்ள இனவாதம் தனியாகவும் மரபணுவி யல், சமூக அறிவியல்கள் ஆகிய துறைகள் ஊடாகக் கண்ட றியப்பட்டு வரும் உண்மைகள் இன்னொரு புறம் தனியாகவும் நிற்கின்றன. இவையிரண்டும் இனிவரும் காலங்களில் ஒரு





திசை நோக்கி நகர வேண்டியது அவசியமாகும். இதுதான் சமூக விஞ்ஞானங்கள் காட்டும் சரியான செல்நெறியாகும். இதைவிடுத்து நமது அரசியல் வாதிகள் காட்டுகிற உணர்ச்சி வயப்பட்ட, ஒரு நாளும் தீர்வை கொண்டு வராத அழிவையே ஏற்படுத்தும் பாதையில் மக்களை கொண்டு செல்வதால் நன்மை கிடைக்கப் போவதில்லை. இதற்கான பரிகாரம் நல்ல அறிவு நூல்களை மக்கள் தேடி வாசிக்கப் பயிற்றுதல். அதை முன்னெடுக்க வேண்டிய நூலகங்கள், பாடசாலைகள் ஏன் பல்கலைக்கழகங்கள் கூட அந்த நோக்கத்தை கொண்டு இயங்குவதாக இல்லை.

எனக்குப் படைப்பிலக்கியத் துறையில் சுந்தர ராமசாமி, தி. ஜானகிராமன், அசோகமித்திரன், நாஞ்சில் நாடன், கு. அழகிரிசாமி, கி. ராஜநாராயணன் ஆகியவர்களின் எழுத்துகளில் தீவிர ஈடுபாடு உண்டு. கி. ராஜநாராயணனுடன் கடிதத் தொடர்பு வைத்திருந்தேன். அது ஓர் அழகான அனுபவம். அழகான கையெழுத்துடன் எனக்கு கடிதம் எழுதுவார். ஒரு கடிதத்தில் அப்போது மட்டக்களப்பில் அடித்த சூறாவளி பற்றியும் நான் கலியாணம் முடிக்க உள்ளது பற்றியும் எழுதியிருந்தேன். அவர் பதிலுக்கு 'சூறாவளி பற்றியெல்லாம் எழுதியிருந்தாய், அதெல்லாம் ஆச்சரியமாக எனக்குப் படவில்லை. நீ கலியாணம் கட்டப் போவதுதான் ஆச்சரியமாக உள்ளது' என்று எழுதியிருந்தது, இன்றும் நினைவில் உள்ளது. அதற்கு முன்னர் என்னை நன்கு அறிந்த நண்பர்கள், உறவினர்கள் அதைச் சொன்னார்கள். அவர்களுக்கு என்னையும் என் இயல்புகளையும் நேரடியாகத் தெரியும். அதனால் அப்படி என் இயல்பறிந்து சொல்கிறார்கள். ஆனால், என்னை நேரடியாகத் தெரியாத இந்த மனிதர் இப்படி சொல்கிறாரே என்று ஆச்சரியப்பட்டேன். எனக்கு வாழ்க்கையில் வாசிப்பதை தவிர மகிழ்வூட்டக் கூடிய காரியம் வேறொன்று இருப்பதாகத் தெரியவில்லை.

▸ **நான் அறிந்த அளவில் நீங்கள் தீவிரமான வரலாறு, தொல்லியல் சார்ந்த தேடல் உள்ளவர். அது சம்பந்தமாக தங்களின் அனுபவங்களைச் சுருக்கமாக விபரிக்க முடியுமா?**

தமிழர்களின் இன்றைய நிலைமையை கருத்தில் கொண்டு சிந்திப்பவர் யாரும் வரலாறு, தொல்லியல் பற்றி அக்கறை கொள்ளாமல் இருக்க முடியாது. வரலாறு, தொல்லியல் திரிபுகளாலும் அவை பற்றிய அறியாமையாலும் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாவர்கள் தமிழர்கள். வரலாறு, தொல்லியல் அறிவில்லாதவர்கள் இனப்பிரச்சினையின் அடி ஆழங்களை உணரமாட்டார்கள். இதனாலேயே, இது சம்மந்தமான தேடலில் தீவிரமாக இறங்கினேன்.

ஒரு நாள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் புஷ்பராசா என்னிடம் சில போட்டோ பிரதிகளை காட்டி இதில் எழுதப்பட்டிருப்பவைகளை வாசித்து சொல்ல முடியுமா என்று கேட்டார். அவற்றில் பிராமி எழுத்தில் ஏதோ எழுதப்பட்டிருந்தன. அவற்றை வாசிக்க என்னால் முடியாது. தக்கார் யாரிடமாவது காட்டி அறிந்து சொல்கிறேன் என்று அவைகளை எடுத்து சென்று, அக்காலத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராக கடமையாற்றிய திரு. பத்மநாதன் அவர்களிடம் காட்டினேன். அவைகளைப் பார்த்ததும் அவர் ஆச்சரியப்பட்டுப் போனார். இப்படியான விடயங்களும் இங்கே இருக்கிறதா என்று கேட்டார். பல இடங்களில் உள்ளன என்று சொன்னேன். மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் மாடு மேய்ப்பவர்களோடு தொடர்பு கொண்டு கல்லில் எங்கேயெல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள் என்று கேட்டேன். அவர்களுக்குத்தான் காட்டின் மூலை முடுக்கெல்லாம் தெரியும். அவர்களும் பல இடங்களை சொன்னார்கள். அப்படிக் கேட்டு, ஓர் இருபது இடங்களை குறித்துக் கொண்டு அவரிடம் கொடுத்தேன். அவருக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம். 'நான் 45 வருடமாக

வரலாற்று துறையில் கடமையாற்றுகிறேன், மட்டக்களப்பில் இப்படி இருப்பது எனக்கு தெரியாது. நீங்கள் இந்த விடயத்தில் புது உலகத்தை திறந்து காட்டியுள்ளீர்கள்'. என்று ஆச்சரியம் மேலிடக் கூறினார்.

பேராசிரியர் திரு. புஷ்பராசா அக்கல்வெட்டுகளில் எழுதப்பட்டுள்ளவற்றை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டியமையால், பேராசிரியரை அழைத்துக் கொண்டு கல்வெட்டு இருக்கும் இடமான பழவெளிக்குச் சென்றோம். அங்கே கவனமாக ஆராய்ந்து அது பௌத்த மடத்துக்கு வழங்கப்பட்ட தானத்தை பற்றியதென்று கூறினார். ஆனால் அங்கிருந்த பௌத்த துறவி தமிழர் என்பது திட்டமாக தெரிகிறதென்றார். நான் கொடுத்த பட்டியலிலுள்ள ஒரு சில இடங்களைத்தான் அவரால் சென்று பார்க்க முடிந்தது. காரணம் வாகனம் மற்றும் பல்வேறு வசதிக் குறைவுகள். அம்முயற்சிகளை தொடரவிடாமல் தடுத்துவிட்டன.

அவ்வாறான தொல்லியல் தேடுகையில் நிகழ்ந்த முக்கிய கண்டுபிடிப்பு ஒன்றைப் பற்றி இங்கு குறிப்பிடுதல் வேண்டும். இந்து கலாசார அமைச்சில் ஏதோ அலுவலுக்காக வந்திருந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த முதன்மைத் தொல்லியலாளர்களை மட்டக்களப்பு கல்வெட்டுக்களைக் காட்ட பேராசிரியர் பத்மநாதன் அழைத்து வந்திருந்தார். அவர்களுக்கு, இலங்கையில் சமண சமயம் பரவி இருக்கவில்லை என்ற, ராஜ் சோமதேவா போன்ற பிரபல தொல்லியலாளர்களின் கூற்றை மறுதலிக்கும் வகையில், அமைந்த கல்வெட்டு ஒன்றை வாசித்துக் காட்டியது ஒரு முக்கிய அம்சமாகும். அக்கல்வெட்டு பொ.ஆ.பி. மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தது என்பது அவர்கள் கணிப்பு. அதன் வாசகம் 'சிப்பிக்கல் மீ குரத்தி வேமி குரத்தி பெருவணிகன' என்பதாகும். அக்கல்வெட்டு ஒரளவு தூய தமிழில் வெட்டப்பட்டுள்ளது. மீ, குரத்தி, பெருவணிகன் என்பன தூய தமிழ் வார்த்தைகளாகும். இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் புராதனமான தமிழ் கல்வெட்டாக அது கருதப்படுகிறது. அதை விளக்கி ஒரு கட்டுரையை நான் எழுதி வெளியிட்டுள்ளேன்.

▸ **வரலாறு, தொல்லியல் திரிபுகளாலும் அவை சார்ந்த அறியாமையாலும் தமிழர்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டவர்கள் என்று ஏன் சொல்கிறீர்கள். அதைப் பற்றி சற்று விபரிக்க முடியுமா?**

ஓர் ஆரிய இளவரசி சிங்கத்துடன் வாழ்ந்து பெற்ற குழந்தைகளின் சந்ததியாரே சிங்களவர் என்று வரலாற்று பாடங்களில் கற்பிக்கப்படுகிறது. சிங்கத்தின் விந்து மனிதக் கருப்பையில் குழந்தையை உருவாக்காது என்ற விஞ்ஞான உண்மையை புறம் தள்ளி, படித்தவர்கள் நம்புகிறார்கள் அல்லது நம்ப வைக்கப்படுகிறார்கள். இந்த பொய்யான தொன்மத்தின் வழியில், துட்டகைமுனுவை கட்டமைத்து செங்கோலனாக ஆண்ட எல்லாளனை 'அசுவிசுவாசி'யாக்கி அவன் கொலைக்கு நியாயம் கற்பிக்கப்படுகிறது. எதிரும் புதிருமான இரு தரப்பை வரலாறே உருவாக்கி கொடுக்கிறது. இந்த நிலமையை ஊடகங்கள் மேலேடுத்து செல்கிறது. மேலே சொன்ன சிங்கத்தின் கதை பொய் என்று ஊடகங்களில் விளக்கமோ, செய்தியோ வந்ததுண்டா? தமிழர்கள் அக்காலத்தில் 32 இராச்சியங்களை நிறுவி ஆட்சி செய்தனர் என்ற மகாவம்ச செய்தி அதிகம் கண்டுகொள்ளப்படுவதில்லை. மறுபுறத்தில் தமிழர்கள் 5-ம் 6-ம் நூற்றாண்டுகளுக்கு முன்னால் முன்னோர் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, மற்றும் சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களை கைக்கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் அக்காலத்தில் பிராமணியத்தோடு இணைந்து வந்த சைவம், வைணவ நெறிகளை கைக்கொண்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். இது கல்வி வட்டாரங்களில் மாணவர்களின் குறிப்புக் கொப்பிகளில் சொல்லப்படுகிறதே அல்லாமல், பொதுத்தளத்தில் சொல்லப்படுவதில்லை. இதனால் தமிழர்கள் தொல்லியல் தலங்களை இழந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணம் கந்தரோடை, வெல்கம் விகாரை போன்றன.

▸ **இப்படிப்பட்ட தேடல்களில் இப்போதும் ஈடுபடுகிறீர்களா?**

முன்னைய தீவிரம் இப்போதில்லை என்றுதான் குறிப்பிட வேண்டும். அதற்கு காரணம் அரசின் கெடுபிடிகள் இப்போது கடுமையாக உள்ளது. புதையல் தேட நோட்டம் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று, யாரும் வீம்புக்கு பொலிஸுக்கு அறிவித்துவிட்டால் அதோ கதிதான். மற்றது, துணைக்குக் கூடவர யாரையும் தேடிக்கொள்ள முடியவில்லை. எந்தவித வருமானம் தராததும் அபாயம் நிறைந்ததுமான இக்காரியத்துக்கு யார் ஒத்துழைப்பார்கள்?

பொதுவாக 5-ம் 6-ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழர் சார்ந்த கல்வெட்டுக்கள் பௌத்தம், சமணம் பற்றியதாகவே இருக்கும். அக்காலத்தில் தமிழர்கள் அதிகம் அச்சமயங்களை தழுவியே இருந்தனர். ஆயினும் தமிழர்கள் அவைகளை கண்டு பயங்கொள்கின்றனர். அழிக்க முயல்கிறார்கள். இது தமிழ் சமூகத்தின் சிந்தனை மீது சிங்கள பௌத்தம் பெற்ற வெற்றி என்று கூறலாம். ஆயினும், பெறுமதியான செல்வங்கள் யாருக்கும் தெரியாமல் சல்லிக் கற்களாக போய்க்கொண்டிருக்கின்றவே என்று சதா வருந்துவதை தவிர என்னால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. இந்த இடத்தில் ஒரு சுவாரஸ்யமான, சோகமான சம்பவம் ஒன்றை எடுத்துக் காட்டுவது பொருத்தமானது.

செங்கலடி, கரடிக்குளம் என்ற இடத்தில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன என்று கேள்விப்பட்டு நானும் வெல்லாவெளி திகநாதனும் அங்கு சென்றோம். அங்கே ஒரு கோயிலில் இருந்த கல்வெட்டைப் படம் பிடித்துக் கொண்டிருந்த போது அங்கே வந்த சிலர் சற்று தொலைவில் எழுத்துமலை என்று அழைக்கப்படும் ஒரு மலை இருப்பதாகவும் அதில் நிறைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன என்றும் சொன்னார்கள். ஆனால் மலையில் காடு மண்டி வளர்ந்துள்ளது; அதை வெளியாக்கித் தான் எழுத்துக்களைப் பார்க்க முடியும் என்றும் கூறினர். காட்டை வெளியாக்கத்தக்க ஆயத்தங்களுடன் நாங்கள் செல்லவில்லை என்பதால், பிறகு பார்க்கலாம் என்று வந்துவிட்டோம். இதைப் பற்றி பேராசிரியர் பத்மநாதனுக்கு தொலைபேசியில் அறிவித்தோம். கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு வந்த போது ஆர்வமேலிட்டால் தூண்டப்பட்ட அவர், ஒரு ஓட்டோவை பிடித்து எழுத்துமலையைத் தேடிப் போயிருக்கிறார். அவருக்கு எழுத்துமலை இருந்த தடத்தைத்தான் பார்க்க முடிந்தது. எழுத்துமலையை உடைத்து லொறிகளில் ஏற்றிக் கொண்டு போய்விட்டனர். ஒரு கிழமைக்குள் இந்த மாயம் நடந்துவிட்டது. நம்முன்னோர்கள் அரும்பாடுபட்டு கல்லில் என்ன பொறித்து வைத்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடியாத 'அறிவார்ந்த மக்களாக' நாம் இருக்கிறோம்.

**▸ தங்களால் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவர இருக்கும் நூல்கள் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்?**

காலனித்துவ காலத்தில் இங்கே நிர்வாக சேவையில் பணியாற்றிய லியனார்ட் வூல்ஃப், தலைசிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார். 'காட்டில் ஒரு கிராமம்' என்று சகலராலும் விதந்து பேசப்படும் நாவலை அவர் எழுதியுள்ளார். அது இப்போது தடயமில்லாது மறைந்து போன தென்னிலங்கை கிராமிய காட்டு வாழ்க்கையை யதார்த்தமாக சித்தரிக்கும் நாவல். 1913-ல் இந்நாவல் வெளிவந்த போதும் இது வரை தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. அதனை நான் தமிழ்ப்படுத்தி உள்ளேன். அது மிக விரைவில் வெளிவர இருக்கிறது.

லியனார்ட் வூல்ஃப் தனது வாழ்க்கை வரலாற்றை 1100 பக்கங்கள் கொண்ட பெரு நூலாக எழுதி வெளியிட்டுள்ளார். அதில் அவர் சிவில் சேவையாளராக யாழ்பாணத்தில் கடமையாற்றிய மூன்று வருடங்களின் நினைவுகளைப் பற்றி ஒரு நூறு பக்கங்களால் விபரிக்கிறார். அவற்றில் தான் எதிர் கொண்ட நிர்வாக நெருக்கடிகள், அக்கால யாழ்ப்பாண வாழ்க்கை நிலைமை மற்றும் மன்னாரின் புவியியல் தனித்துவங்கள், அரசுக்கு பெருமளவு வருமானத்தை ஈட்டித்தந்த முத்துக் குளிப்பு ஆகிய இன்னோரன்ன விடயங்களை பற்றி வூல்ஃப் சுவாரஸ்ய மாக விபரிக்கிறார்.

அத்தோடு, யாழ்ப்பாண வாழ்வை அழகிய புனைவாக வெளிப்படுத்தும் ஒரு சிறுகதை ஒன்றையும் வூல்ஃப் எழுதியுள்ளார். ஒரு சுவாரஸ்யமான வாசிப்பு அனுபவத்தை தரக்கூடிய கதை இது. தொன்மங்களாலும் மூடநம்பிக்கைகளாலும் இரு பிராமணக் குடுபங்கள் சந்திக்கும் அவலங்களை கதை சித்தரிக்கிறது. அக்கதையையும் மொழிபெயர்த்து இணைத்துள்ளேன். அதை யாழ்ப்பாணம் என்ற தலைப்பில் ஒரு சிறு நூலாக வெளியிட திட்டமிட்டுள்ளேன்.

சைமன் காசிச் செட்டி இலங்கையை பற்றிய விபரங்களை அகரவரிசையாக சொல்லும் நூலொன்றை வெளியிட்டார். அது வெளிவந்த ஆண்டு 1834. அந்நூலுக்கு ஆங்கில மரபுப் படி சிலோன் கெசற்றியர் என்று பெயரிட்டார். இந்நூலை வாசிக்கும் எவரையும் காசிச் செட்டியின் விபரஞானம் வியப்பில் ஆழ்த்தும். இந்நூலும் அண்மையில் வெளிவரும்.

தற்போது மொழிபெயர்ப்பில் இறங்கவுள்ள நூல் ஏ. எல். பஷ்மின் செம்மையுறு இந்து மதத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற சிறு நூலாகும். அது விஞ்ஞான ரீதியாக தொன்மங்களும் நம்பிக்கைகளும் பலிச்சடங்குகளும் எவ்வாறு புராதன இந்திய சமூகத்தை வழிநடத்தி தற்கால செம்மையுற்ற வடிவ இந்துமதத்தை கட்டமைத்தன என்பதை அழகாக எடுத்துரைக்கிறது. இந் நூலைப் பற்றி ஏற்கெனவே கூறியுள்ளேன்.

**▸ 'காலனித்துகால அறிஞர்களும், அதிகாரிகளும் தரும் குறிப்புகள் – மட்டக்களப்பு பிராந்தியம்' என்ற தலைப்பிட்டு தொடராக மொழிபெயர்த்த கட்டுரைகள்கூட நூலாக வெளிவருகிறது என்பதை அறிகிறோம். அதைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

திருப்தியும் அதிருப்தியும் அடைகிறேன். திருப்திக்கு காரணம் மட்டக்களப்பு காலனித்துவ கால வரலாற்றுக்கு மூல நூல் எனக் கருதக்கூடிய நம்பகமான ஆவணம் ஒன்று கிடைக்கிறது என்பதில் திருப்தியடைகிறேன். இங்குள்ள நூலகங்களிலும் இணையத்திலும் இல்லாத தகவல்கள் ஏராளம் உள்ளன. அவைகளைத் தேடிப் போக வேண்டும். தேசிய சுவடி திணைக்களம், தேசிய அருங்காட்சியகம், கொழும்பு தேசிய நூலகம் போன்றவற்றில் தேடினால் விடயங்கள் கிட்டும். அப்படி தேடிச்சேர்க்க வசதிகள் இல்லாமல் இருக்கிறது. அப்படி முயலாமல் நூலை வெளியிடுகிறேன் என்பதில் அதிருப்தி கொள்கிறேன்.





prasath.s@thaiveedu.com

# பொருள்கோடலியல் :
# நேர்க்காட்சிவாதத்துக்கு எதிரான சமூக விஞ்ஞான மெய்யியல்

ஆங்கில மூலம் : ஜயதேவ உயன்கொட
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்

சமூக ஆராய்ச்சியின் மெய்யியல் மற்றும் முறையியல் அடிப்படைகள் (Social Research: Philosophical and Methodological Foundations-2015) என்னும் நூலின் 9-வது அத்தியாயம் பொருள்கோடலியல் (Hermeneutics) என்னும் மெய்யியல் பற்றிய விளக்கத்தை எளிமையாக யாவருக்கும் புரிய வைக்கும் முறையில் எடுத்துக்கூறுவது. அவ்வத்தியாயத்தின் தலைப்பு ஆங்கிலத்தில் 'Counter - Positivist Philosophy of The Social Sciences - Hermeneutics' என அமைந்துள்ளது. அதன் தமிழாக்கத்தை இத்தமிழ் கட்டுரையின் தலைப்பாக மேலே தந்துள்ளோம். நூலின் 10-வது அத்தியாயம் பொருள்கோடலியலுடன் தொடர்புடையதான தோற்றப்பாட்டியல் (Phenomenology) என்னும் மெய்யியல் பற்றியது. அதுவும் பொருள்கோடலியல் போன்று நேர்க்காட்சிவாதத்திற்கு எதிரான மெய்யியல் (Counter - Positivist Philosophy) ஆகும். இக்கட்டுரை பொருள்கோடலியல் குறித்துத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் முறையில் எழுதப்பட்டுள்ளது. 20-ஆம் நூற்றாண்டில் சமூக விஞ்ஞான ஆராய்ச்சியில் மூன்று முக்கிய தத்துவ நோக்கு முறைகள் வளர்ச்சி பெற்றன.

## 20–ஆம் நூற்றாண்டின் சமூக விஞ்ஞானங்களின் மூன்று முக்கிய வளர்ச்சிப்போக்குகள்:

### ▸ நேர்க்காட்சிவாதத்தின் மேலாண்மை:

18-ம், 19-ம் நூற்றாண்டுகள் முதலாக இயற்கை விஞ்ஞானங்கள் ஊடாக வளர்ச்சி பெற்ற நேர்க்காட்சிவாதம், சமூக விஞ்ஞானங்களிலும் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் செல்வாக்கு மிக்க மெய்யியலாக வளர்ச்சி பெற்றது. 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் நேர்க்காட்சிவாதம் தனது மேலாண்மையை நிறுவியது. சமூகவியல், வரலாறு, பொருளியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் நேர்க்காட்சிவாத முறையியல் முதன்மை பெற்று விளங்கியது.

### ▸ நேர்க்காட்சிவாத எதிர்ப்பு மெய்யியல்:

நேர்க்காட்சிவாதத்தின் எதிர்ப்பாகவும், அதற்கான எதிர்வினையாகவும், பொருள்கோடலியல், தோற்றப்பாட்டியல் என்னும் இரு மெய்யியல் நோக்குமுறைகள் சமூக விஞ்ஞானங்களில் வளர்ச்சி பெற்றன.

### ▸ கிளர்ச்சிவாத சமூக விஞ்ஞான நோக்கு முறைகளின் தோற்றம்:

இருபதாம் நூற்றாண்டின் சமூக விஞ்ஞானங்களில் ஏற்பட்ட மூன்றாவது முக்கிய வளர்ச்சிப் போக்கு, கிளர்ச்சிவாத சமூக விஞ்ஞான நோக்குமுறைகளின் (Radical Social Science Perspectives) தோற்றமாகும். மார்க்சிசம், விமர்சனக் கோட்பாடு (Critical Theory), கிளர்ச்சிவாத மனிதாயம் (Radical Humanism), பெண்ணியவாதம் (Feminism), பின் அமைப்பியல் (Post – Structuralism), பின்னை நவீனத்துவம் (Post - Modernism) என்பன இக்கிளர்ச்சிவாத சமூக விஞ்ஞான நோக்கு முறைகளில் முக்கியமானவை.

இக்கட்டுரை பொருள்கோடலியல் பற்றியது. பொருள்கோடலியல் நேர்க்காட்சிவாதத்திற்கு எதிராகத் தோன்றிய மெய்யியல்களில் காலத்தால் முந்தியது. பொருள்கோடலியல், தோற்றப்பாட்டியலுடன் நெருங்கிய தொடர்புடையது. ஆயினும், தோற்றப்பாட்டியலை விட நீண்ட வரலாற்றை உடையது, ஆதலால் அதனைத் தனியாக நோக்குதல் அவசியம். நவீன பொருள்கோடலியலும் நவீன தோற்றப்பாட்டியலும் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றன. அவை 20-ம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் 21-ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை மிகுந்த செல்வாக்கு மிக்க மெய்யியல் பிரிவுகளாக வளர்ச்சி பெற்றன. இவையிரண்டும் அளவுமுறை ஆராய்ச்சிக்கு (Quantitative Research), மாறுபட்ட பண்பு முறை ஆராய்ச்சியை (Qualitative Research) சமூக விஞ்ஞானங்களில் அறிமுகம் செய்தன. அவ்வகையில் அனுபவவாத நேர்க்காட்சிவாத சமூக விஞ்ஞானங்களுக்கு (Empiricist – Positivist Social Sciences) மாற்றீடான முறையியலை சமூகம் பற்றிய ஆய்வில் அறிமுகம் செய்தன.

நேர்க்காட்சிவாதத்திற்கு எதிராகக் கிளம்பிய எதிர்வினைகளில் 'Verstehen' என்னும் யேர்மன் மொழிச் சொல்லால் அழைக்கப்படும் மரபில் இருந்து தோன்றிய கருத்துகள்

சமூக விஞ்ஞான ஆய்வில் புதிய நோக்கு முறையைத் தோற்றுவித்தன. இவ்வாறு தோன்றிய புதிய நோக்குமுறை 'விளக்கமுறைச் சமூக விஞ்ஞானம்' (Interpretivist Social Science) என அழைக்கப்படுகிறது. இது கட்டமைப்பு (Constructivist) சமூக விஞ்ஞானம் எனவும் அழைக்கப்படும். 'Verstehen' என்பதன் பொருள் ஆங்கிலத்தில் 'Empathetic Understanding' என்பதாகும். மனித நடத்தையை அறிந்து கொள்வதற்கு மனிதரின் செயற்பாடுகள்/செயல்களிற்குப் பின்னால் உள்ள நோக்கத்தை (Intention) அறிதல் வேண்டும்.

பொருள்கோடலியல் ஒருமுறையியல் மரபு ஆகும். இது தொடக்ககாலத்தில் மனிதப் பண்பியல் துறையில் (Humanities) ஒரு முறையியலாகப் பயன்படுத்தப்பட்டது. மனிதப் பண்பியலின் பிரிவுகளான இலக்கியம், பண்பாடு வரலாறு, சமயம் ஆகிய துறைகளில் பொருள்கோடலியல் முறையியல் பிரயோகிக்கப்பட்டது. பொருள்கோடலியல் குறிப்பாகச் சமயப் பனுவல்களைப் பொருள் விளக்கம் செய்வதற்காக உபயோகிக்கப்பட்டது. பின்னர் ஐரோப்பாவின் மனிதாயச் சிந்தனை மரபில் அமைந்த சமூகச் சிந்தனையில் பொருள்கோடலியலின் செல்வாக்கு இருந்துள்ளது. வரலாறு, மானிடவியல், சட்டம் ஆகிய துறைகளில் பொருள்கோடலியல் முறையியல் உபயோகிக்கப்பட்டது. சட்டத்துறையில் சட்டத்தை விளக்கியுரைத்தல் (Interpretation of Law) முக்கியம் பெற்றது. 20-ம் நூற்றாண்டில் அரசியல் விஞ்ஞானத்திலும், சமூகவியலிலும் நேர்க்காட்சிவாதம் தொடக்கத்தில் பெரும் செல்வாக்கைச் செலுத்தியதால், பொருள்கோடலியல் அத்துறைகளில் முக்கியத்துவம் பெறவில்லை. ஆனால், அண்மைக் காலத்தில் மனித அனுபவம் (Human Experience) முக்கியம் பெறும் பின்வரும் விடயங்களில் பொருள்கோடலியல் முக்கியம் பெற்றுவருகிறது.

- அகதிகள் பற்றிய ஆய்வு (Refugee Studies)
- நோயாளர் நலம் பேணல் (Nursing Studies)
- சமூக சேவைப்பணி (Social Work)
- பெண்ணிய ஆய்வு (Women Studies)
- மனித உரிமைகள் (Human Rights)
- மனநலம் (Mental Health)
- கல்வியியல் (Education)
- உளவியல் (Psychology)

மேற்குறித்த துறை ஆய்வாளர்கள் ஆய்வின் போது, ஆழ்ந்த மனித அனுபவங்களை (Deep Human Experiences) அறிவதற்கு பொருள்கோடலியல் முறைகளைக் (Hermeneutic Methods) கையாள்கின்றனர். ஐரோப்பாவின் நவீன சமூக விஞ்ஞானங்களின் வரலாற்றில் பொருள்கோடலியில் முக்கிய அங்கமாக இணைத்துள்ளதைக் காணலாம்.

பொருள்கோடலியலின் பண்பியல் மாதிரி (Qualitative Paradigm) நோயாளர் நலம்பேணல் (Nursing), பொதுச் சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் செல்வாக்கைப் பெற்று வருவதற்கும், ஆய்வாளர்கள் பொருள்கோடலியல் முறைகளை விரும்பித் தெரிவுசெய்து கொள்வதற்கும் உரிய காரணம் யாது என்பது சிந்தனைக்குரியது. நேர்க்காட்சிவாதம் ஆதிக்கம் செலுத்திய துறைகளில் மனித அனுபவம் கவனத்தில் கொள்ளப்படாது புறமொதுக்




கப்பட்டதன் காரணமாக மனிதரின் வாழ்வனுபவத்தைப் புரிந்து கொள்ளும் தேவை ஆய்வாளர்களால் உணரப்பட்டது. தோற்றப்பாட்டியலில் பிரபலம் பெற்ற தொடரான 'மனிதரின் உயிர்ப்புடைய வாழ்வுலகம்' (Lifeworld) மனித அனுபவத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் சொற்தொடராகும். நோயாளர் நலம் பேணல், அகதிகள் ஆய்வு, மனநலம், சமூக - அரசியல் வன்முறை என்பன மனிதர் அனுபவிக்கும் துயரம், இடர்ப்பாடுகள், நோய்நிலை, பசி, பட்டினி, மனித கௌரவத்தை இழந்து நிற்கும் அவலநிலை போன்ற தாங்க முடியாத வலிகளுடன் கூடிய மனித அனுபவங்களுடன் தொடர்புடையவை. இவ்விடயங்களை ஆராயும் ஆய்வாளர் ஒருவர் பரிவுடன் கூடிய ஆதரவு, புரிந்துணர்வு, இரக்கம், கருணை போன்ற உணர்வுடையவராகத் தமது ஆய்வை மேற்கொள்ள வேண்டும். உள்நோக்கிய ஆழ்ந்த விசாரணை (Introspection), உள்ளுணர்வு (Intution) என்பன அவசியமாகும்.

### ஆழ்ந்த விசாரணை (Introspection), உள்ளுணர்வு (Intution):

மனித உணர்வுகள், மனித உணர்ச்சிகள் என்பன பற்றிய ஆழமான அனுபவத்தைப் பெறுவதற்கு நேர்க்காட்சிவாத முறை ஆய்வுக்கருவிகள் உதவமாட்டா. நேர்க்காட்சிவாத விஞ்ஞானங்களாகக் கருதப்படும் தகவல் விஞ்ஞானம், முகாமைத்துவம் ஆகியதுறைகளிலும் பொருள்கோடலியல் அணுகுமுறை பயனுடையது என்பதை இப்போது அத்துறைகளின் ஆய்வாளர்கள் உணர்ந்துள்ளனர். நேர்க்காட்சிவாத முறை ஆய்வாளர்கள் தாம் ஆய்வுக்கு உட்படுத்தும் விடயப்பொருளை (Subject) தூரத்தே புறநிலையாக வைத்து ஆராயவேண்டும் என ஆய்வாளர்களுக்குப் போதனை செய்கின்றனர்.

சமூகக் குழுக்களையும், மனிதர்களையும் ஆராயும் சமூக விஞ்ஞானிகள் விடயப்பொருளான மனிதர்களை (Human Subjects) தூரத்தே நிறுத்தி ஆராய்வதாகவே இப்போதனையின் படியான ஆய்வு அமைந்துவிடும். தரவுகளிலும், தகவல்களிலும் அவற்றின் விளக்கம் கூறுதலிலும் புறவயத் தன்மை (Objectivity) வேண்டும் என்பதற்காக, ஆய்வுக்குரிய சமூகக் குழுக்களையும் மனிதர்களையும் தூரத்தே வைக்க வேண்டும். இவ்வாறு கூறுவது, ஆய்வாளர்களுக்கு விதிக்கும் தடையாகும் என பொருள்கோடலியல் சிந்தனையாளர்கள் கூறுகின்றனர். ஜோர்ஜ் ஹடமர் (George Gadamar) என்பவர் 20-ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற பொருள்கோடலியல் சிந்தனையாளர் ஆவர். சமூகம் பற்றிய ஆய்வில் ஈடுபடும் ஆய்வாளர் 'தூரத்தே உள்ளதைக் கிட்டிய இடத்துக்குக் கொண்டுவர வேண்டும் அந்நியத் தன்மையை நீக்கி அதனைத் தனக்கு நெருக்கமானதாக ஆக்க வேண்டும் தடைகளை நீக்கிப் பாலம் அமைக்க வேண்டும்' ('Something Distant has to be Brought close, A Certain Strangeness overcome, a Bridge Built', Gadamer 1977:22) என்று கூறியிருப்பதைக் காணலாம்.

### பொருள்கோடலியலின் ஐந்து மரபுகள்:

பொருள்கோடலியலை ஒருமைத் தன்மையுடைய ஒரு சிந்தனையாக (Unified Body of Thought) அல்லது நோக்கு முறையாகக் கொள்ள முடியாது. ஐரோப்பிய பொருள்கோடலியல் மரபில் ஐந்து வெவ்வேறு போக்குகள் உள்ளன. அவை பின்வருவன:

- இறையியல் பொருள்கோடலியல் (Theological Hermeneutics)
- வரலாற்று / உளவியல் பொருள்கோடலியல் (Historical / Pschological Hermeneutics)
- முறையியல் பொருள்கோடலியல் (Methodological Hermeneutics)
- மெய்யியல் / உள்ளதன் இயல் பொருள்கோடலியல் (Philosophical / Ontological Hermeneutics)
- புறநிலை பொருள்கோடலியல் (Objectivist Hermeneutics)

நாம் முன்னரே குறிப்பிட்டது போல், நேர்க்காட்சிவாதத்திற்கு மாறான எதிர்வினையை முதலில் வெளிப்படுத்திய சிந்தனை பொருள் கோடலியல் ஆகும். 'விளக்கமுறைப்புரிதல்' (Interpretative Understanding) அல்லது 'அர்த்தங்களை விளக்கியுரைத்தல்' (Interpretation of Meanings) என்பது பொருள் கோடலியலின் சாராம்சமான பொருளாகும். யேர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் நடைபெற்ற முறையியல் விவாதத்தில், மனிதாய வாதிகள் (Humanists), நேர்க்காட்சிவாதத்தின் விளக்கம் கூறுதல் (Intepretation) என்பதற்கு மாறாக புரிதல் (Understanding) என்பதை ஆய்வின் முதன்மையான நோக்கமாக வலியுறுத்தினர். பொருள்கோடலியல் முறையியல், புரிதல் என்பதோடு விளக்கம் கூறுதலும் சமூக விஞ்ஞானங்களின் இலக்காக அமைதல் வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியது. 19-ம் நூற்றாண்டில் 1880-ற்குப் பிற்பட்ட இரு பத்தாண்டுகளிலும், நேர்க்காட்சிவாதத்திற்கும் பொருள்கோடலியிலுக்கும் இடையே நடைபெற்ற விவாதங்களிலும் இக்கருத்து வலியுறுத்தப்பட்டது.

### பொருள்கோடலியல், கிரேக்க சிந்தனை, இடைக் கால இறையியல் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு:

இறையியலிலும், பனுவல்களின் ஆய்விலும் (Textual Studies) பண்டைக் காலம் முதலாகப் பொருள்கோடலியல் நடைமுறையில் இருந்து வந்தது. 'ஹெர்மனுக்டிக்ஸ்' என்ற சொல்லின் வேர்ச்சொல்லாக அமைந்துள்ள 'ஹெர்மஸ்' (Hermes) கிரேக்கத் தெய்வங்களில் ஒன்றைக் குறிப்பது. 'ஹெர்மஸ்' கிரேக்கக் கடவுளான 'சியஸ்' (Zeus) உடைய தூதர் ஆவர். இதனால் 'ஹெர்மஸ்' அறிவு, புரிதல் என்ற இரண்டையும் கடவுளிடம் இருந்து பெற்று மனிதர்களுக்குத் தருபவர் எனக் கருதப்பட்டார். 'ஹெர்மஸ்' என்னும் இறைதூதருக்குக் கொடுக்கப்பட்ட கடமை 'கடவுளின் முடிவுகளை' மனிதர்களிற்கு அறிவிப்பதாகும். ஆகையால் 'ஹெர்மினியா' (Hermenea) என்ற கிரேக்க சொல் புரிதல், விளக்கம் (Understanding and Interpretation) என்ற இரு அர்த்தங்களையும் உள்ளடக்கிய ஒரு சொல்லாகும். பனுவல்களை விளக்கியுரைத்தல் அறிஞர்களின் பணிகளில் ஒன்று என்ற நடைமுறை பண்டைக்காலம் முதல் இருந்து வந்துள்ளது. கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர்களான பிளேட்டோவும், அரிஸ்டோட்டிலும் 'பொருள்காணல்', 'அர்த்தம் கூறி விளக்குதல்' ஆகிய எண்ணக்கரு பற்றித் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். அரிஸ்டோட்டில் 'பெறிஹெர்மினியாஸ்' (Peri Hermeneias) என்னும் பெயரில் நூல் ஒன்றையே எழுதினார். இந்நூல் தருக்கவியலுக்கும் மொழிக்கும் (Logic and Language) இடையிலான தொடர்பை ஆராய்வதாக அமைந்தது, 'பெறிஹெர்மினியாஸ்' என்பதை 'விளக்கியுரைத்தல் பற்றி' (On Understanding) என மொழி பெயர்த்துக் கொள்ளலாம். பிற்காலத்தில் கிறிஸ்தவ, யூத சமயமரபில் 'ஹெர்மனுக்டிக்ஸ்' எனப்படும் பொருள்கோடலியல் முக்கியத்துவம் பெற்றது. பௌத்த, இஸ்லாமிய சமய மரபுகளிலும் பொருள்கோடலியல் நடைமுறைகள் இருந்து வந்ததைக் காணலாம். பௌத்த, இஸ்லாமிய மரபுகளில் சமயப் பனுவல்களில் கூறப்பட்ட உண்மைகளைச் சரியான முறையில் விளக்கிப் பொருள்கொள்ளுதல் பற்றிய சர்ச்சைகளும் விவாதங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்விவாதங்கள் பொருள்கோடலியல் விவாதங்களேயாகும்

(Hememeneutical Debates). புத்தரும், முகம்மது நபி அவர்களும் கூறிய உண்மைகளின் விளக்கம் பற்றியதாகவே இவ்விவாதங்கள் அமைந்தன.

ஹடமர் (Gadamer) கிறிஸ்தவ இறை நூல்களை பொருள் கோடல் செய்வதான அறிவு முறையியல் ‘நவீன மானுட விஞ்ஞானங்களின் பொருள்கோடலியலின் புராதன வரலாற்றை உள்ளடக்கியதாக இருப்பதைக் காணலாம் எனக் குறிப்பிட்டார் (Gadamer 2005. 176). கிறிஸ்தவ மரபில் இறை நூல்களைப் பொருள்கோடல் செய்தல் ஐரோப்பாவில் மதச்சீர்திருத்தம் (Reformation) இடம் பெற்ற காலத்திலும் அதற்குப் பின்னரும் பெருவழக்காக இருந்தது. கிறிஸ்தவம் ஊடாக ஏற்பட்ட இவ்வளர்ச்சி, பாடபேத ஆராய்ச்சியின் (Textual Interpretation) வளர்ச்சியில் மிக முக்கியமான ஒரு கட்டத்தைக் குறிப்பிடுகிறது. இறையியல் விவாதங்களின் போது பைபிளில் கூறப்பட்டவற்றின் உண்மைப் பொருள் பற்றிய விவாதங்கள் எழுந்தன. பழமையான கருத்துக்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டிருந்தவர்கள் (Dogmatists), சீர்திருத்தவாதிகள் (Reformists) ஆகிய இருசாரருக்கும் இடையே காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன. பைபிளை வாசிக்கும்போது, அதில் உள்ள சில வாக்கியங்களுக்கு நேர்ப்பொருளை (Literal meaning) கொள்ளமுடியாது. அவற்றை தனி வாக்கியங்களாக முழுமையான பிரதியுடன் இணைத்துப் பார்த்து விளங்க வேண்டும். அதாவது ‘Entirety of the Text’ கருத்தில் கொள்ளப்படவேண்டும். அப்பொழுதுதான், உண்மையை அறிய முடியும் என்று கூறப்பட்டது. மதச் சீர்திருத்தத்திற்குப் பிற்பட்ட காலத்திலும், புரட்டஸ்தாந்திய கிறிஸ்தவம் யேர்மனியிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் பரவியபோது, ‘பைபிள் பொருள்கோடலியல்’ (Bibilical Hermeneutics) வளர்ச்சி பெற்றது. பைபிளை விளக்கியுரைக்கும் இந்த முறையோடு, பைபிளுக்கு உரைகள் (Bibilical Exegesis) எழுதும் மரபும் சமாந்தரமாக வளர்ச்சி பெற்றது. புரட்டஸ்தாந்திய கிறிஸ்தவர்கள் புத்தகவாதிகளான கிறிஸ்தவர்களை (Dogmatic Christians) மறுத்துரைக்கும் முறையில் பைபிளிற்கும் பல புதிய விளக்கங்களைக் கொடுத்தனர். இதனால் பைபிளிற்குப் பல விளக்கங்கள் தோன்றின. புரட்டஸ்தாந்திய சமயப் பிரிவினர்களின் திருச்சபையினர், தமக்குக் கீழ் செயற்பட்ட தேவாலயங்களின் குருமுதல்வர்களுக்கு பைபிளை விளக்கிக் கூறுதல் பற்றிய பல வழிகாட்டி நூல்களை எழுதி விநியோகிக்கும் தேவையை உணர்ந்து செயற்பட்டனர். இதனால் பனுவல்களை விளக்கி உரைக்கும் கலை வளர்ச்சியுற்றது.

நவீன பொருள்கோடலியலின் தோற்றத்திற்கு ‘முந்திய வரலாறு’ (Pre-History) முக்கியமானது. இம்முந்திய வரலாற்றுக் காலத்தில் பைபிளின் விளக்கம் பற்றிய முறையியல் (Methodology) உருவானது. பைபிளில் வரும் குறித்த சில பகுதிகளை வரலாற்று நிகழ்வுகளின் பின்புலத்தில் (Historical Context) விளக்கும் முறையியல் வளர்ச்சி பெற்றது. ஒரு பிரதியின் பகுதிகளை அப்பிரதியின் முழுமையுடன் (Totality) இணைத்து பொருள் கொள்ளவேண்டும் என்ற கருத்து தோன்றியது. பொருள்கோடலியல் பற்றிய இத்தத்துவத்தை ஆங்கிலத்தில் ‘Part - and - Whole Principle of Interpretation’ எனக் குறிப்பிடுவர். இதனைப் ‘பகுதி - முழுமை - இணைந்த விளக்கியுரைத்தல் தத்துவம்’ என மொழி பெயர்த்துக் கொள்ளலாம். பைபிளின் மொழி, அம்மொழியின் இலக்கணம் என்பன பற்றிய ஆழ்ந்த அக்கறையும் விளக்கியுரைத்தலின் முக்கிய தத்துவமாக கிறிஸ்தவ மரபில் பின்பற்றப்பட்டது.



மொழி, இலக்கணம் பற்றிய அக்கறை காரணமாகப் புதிதாக வளர்ச்சியுற்ற மொழிநூல் (Philogy), மொழியியல் (Linguistics) ஆகிய விஞ்ஞானத் துறைகளின் செல்வாக்கில் பைபிள் பொருள்கோடலியல் (Bibilical Hermeneutics) தனித்துவமான பரிமாணத்தைப் பெற்றது. மொழிநூல் ஆய்வுகள் வரலாற்று மொழியியல் (Historical Linguistics), ஒப்பியல் மொழியியல் (Comparative Linguistics) ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவின. இவை பொருள்கோடலியலை வளர்ப்பதற்கு உதவிய ஆய்வுத் துறைகளாக அமைந்தன.

(தொடரும்...)



shanmugalingam@thaiveedu.com

# நினைவு மரணிக்கும் போது

## - அ. சிவானந்தன்



### தமிழில்: ஜிஃப்ரி ஹாசன்

ஈழத்து எழுத்தாளர் அ. சிவாநந்தன், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகளைத் தொடர்ந்து 1960–களில் பிரித்தானியாவுக்குப் புலம்பெயர்ந்தார். பிரித்தானியாவில் இனவாதத்துக்கு எதிராக செயற்பட்ட மிக முக்கிய அமைப்பான Institute of Race Relations (IRR) எனும் அமைப்பில் இணைந்து கொண்ட சிவாநந்தன், 1972–லிருந்து அந்த அமைப்பின் பணிப்பாளராக செயற்பட்டார். இனவாதத்திற்கெதிரான மிக முக்கியமானதும் புகழ்பெற்றதுமான Race & Class எனும் இதழின் பிரதம ஆசிரியராகவும் இயங்கினார்.

1997–ல் வெளிவந்த அவரது ‘When Memory Dies’ எனும் நாவல் ஆங்கில இலக்கியச் சூழலில் அதிக கவனிப்பைப் பெற்ற நாவல். சிறந்த நாவலுக்கான கொமன்வெல்த் எழுத்தாளர் விருதை அந்நாவல் பெற்றுக்கொண்டது. இந்நாவல் இலங்கையின் மூன்று தலைமுறையின் பார்வையினூடாக காலனித்துவம், சுதந்திரம், அடையாளம் போன்றவற்றை கதையாடுகிறது. அ. சிவாநந்தனின் புகழ்பெற்ற இந்நாவல், தாய்வீடு இதழ் வாசகர்களுக்காக தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு தொடராக வெளிவருகின்றது.

என் நினைவுகள் எப்போதும் போலவே, மழையுடன் தொடங்குகின்றது. ஒரு காலத்தில் தபால் அலுவலகம் இருந்த பழைய காலனித்துவ கட்டடத்தின் பெரிய சுவரின் எதிரே ஒரு சிறு குழந்தையாக சாய்ந்து நிற்கிறேன். பெருமழை என்னை அச்சத்திலும், சோகத்திலும் ஆழ்த்தியது. மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள முடியாமல் போன என் உள்ளுணர்வுக்குள்ளும், சிறுபராயத் தனிமைக்குள்ளும் அது என்னை மீண்டும் தூக்கி வீசியது.

சஞ்சியிடம் காலணிகள் இல்லை என்பதற்காக அவனை பள்ளிக்கு அனுப்பாமல் வைத்ததுதான் இந்த உலகில் நான் முதன் முதலில் சோகத்தை உணர்ந்த தருணமாக இருந்தது. நான் பயப்படாமல் மின்னலை வரவேற்றேன், அது என்னைக் கொன்றுவிடும். என் காலணிகள் சஞ்சிக்கு கிடைத்துவிடும். இனி நான் சோகமின்றி இருப்பேன்.

அல்லது நான் மரங்களுக்காகவும், பறவைகளுக்காகவும், மழையில் நனைந்து உருக்குலைந்த சிறிய ஆட்டுக்குட்டிக்காகவும் வருத்தமடைந்தேன். கனி நிறைந்த வாழை மரங்களின் நிலையை எண்ணி பயமாக இருந்தது. தங்கள் தண்டு நுனிகளில் அவை ஆபத்தாக சாய்ந்தன. சாணக் குவியலின் பெருமித மன்னர்களான காகங்கள் வீட்டின் கூரையின் கீழே சிறு சிட்டுக்குருவிகளுடன் சேர்ந்து இருக்க வேண்டும் என்று எனக்கு வருத்தமாக இருந்தது.

ஆனால் திடீரென மழை ஓய்ந்து, மரங்கள் மீண்டும் நேராக நின்றன. திடீரென தோன்றிய சூரியனிடம் தங்களைக் காண்பிக்க, காகங்கள் மீண்டும் காகாவென கத்த ஆரம்பித்தன. வெப்பம் மிக்க சாலைகளிலிருந்து அதிகாலையைப் போன்று ஒரு மேகப்படலம் எழுந்தது. அந்தக் கணம், போவதும் மீண்டும் வருவதுமான பருவநிலை மாற்றம் போன்று தோன்றியது. அச்சமும், துக்கமும், அதிசயமும் ஒரே நேரத்தில் பரவி இருந்தது. சஞ்சியின் காலணிகளுடன் எப்படியோ பிணைந்துவிட்ட இந்த வாழ்க்கையின் முதல் தன்னிச்சையான உறுதிமொழி, அதுதான் என்னுள் வளரும் அகவுலகின் முதல் நினைவாக இருந்தது.

வேறு பருவங்களையும் - வசந்த காலம், குளிர் காலம், இலையுதிர் காலம் - நான் அறிந்துகொண்டேன். காலணிகள் அதிகம் புழங்கும் பிறநாடுகளையும் அறிந்துகொண்டேன். ஆனால் அந்த மழை நாளிலும், பின் வந்த ஏனைய மழை நாட்களிலும் என்னில் திரண்ட சம்பவங்கள் எனது வாழ்வுக்காக என்னை இடம்பெயரச் செய்த சம்பவங்கள், என் நாட்டோடு என்னைப் பிணைத்த சம்பவங்கள் எல்லாம் என் கதையைக் கூறத் தூண்டின.

ஆனால் சொல்வதற்கு ஒரு கதை இல்லை. எந்தவொரு கதை

யும் இல்லை. 1505-ம் ஆண்டு தொன் லொரின்கோ டி அல்மெய்டா பொன்னிறக் கயிறும், படைச் சின்னமும் சூடிய சீருடையுடனும், இறகு சூடிய தொப்பியுடனும் சொர்க்கத்துப் பறவைகள் சூழ, எங்கள் கடற்கரையில் வந்திறங்கி, எங்கள் வரலாற்றிலிருந்து எங்களைப் பிரித்துப்போட்ட அந்த நாளிலிருந்து சொல்வதற்கு ஒரு கதை இல்லை. ஒரு தொடக்கமும் முடிவும் கொண்ட எந்தக் கதையுமில்லை. கடந்த காலம் முடிந்த இடத்தில் இருந்து எடுத்துக் கொண்டு ஒழுங்கில் சொல்லப்பட்ட எந்தவொரு கதையுமில்லை, கடந்த காலம் விட்டுச் சென்ற துண்டு துணிக்கைகளான கதைகள் மட்டுமே உண்டு. என் சொந்தப் பெற்றோர், என் மகன் போன்ற நான் அறிந்தவர்களின் கதைகள் மட்டுமே. அல்லது நான் கேட்டுக் கொண்டிருந்தவர்களின் கதைகள். ஏனெனில் ஒரு கதையை தங்கி இருந்து முழுமையாகத் தொகுத்துத் தர இடமோ, காலமோ இல்லை. ஒரு கற்பனையான நேரமும் இடமும்தான் இந்தக் கதைக்குள் இருப்பது. இது நாட்டைப் பற்றிய கதையும் இல்லை. அல்லது, நாட்டைப் பற்றியது என்றால், எங்கள் கதை அல்ல. அவர்களுடையது, பரங்கிகளுடையது. இந்த வரலாற்றின் தடத்தை நாங்கள் சகித்துக்கொண்டதுடன், அது உலகளாவியதாக இருந்தும்கூட, வெட்கக் கேடாக, அதனை எங்களுடைய விருப்பத்துக்கு மாறாக எங்களது சுயமாக அதனை ஆக்கிக்கொண்டோம்.

என் தந்தை அஞ்சல் அலுவலகத்தில் வேலை செய்தார். பெரிய தேயிலை தோட்டத்தின் புதிய அஞ்சல் அலுவலகம் அது. அன்று மழையில் இருந்து எனக்கு அடைக்கலம் கொடுத்த பயன்படுத்தப்படாத கட்டடத்திலிருந்து அழுவதைத் தவிர எனக்கு வேறு வழி இருக்கவில்லை. அவர், நூற்றாண்டின் தொடக்கத்தில், இலங்கையின் வடக்கே நலிந்து உலர்ந்த கிராமமான சண்டிலிப்பாய் என்ற இடத்தில் பிறந்தார். அவரது தந்தை ஒரு திறமையற்ற விவசாயி, அவருடைய லச்சம் நிலத்தில் எதுவும் வளரவில்லை. ஆனால் பதின்மூன்று குழந்தைகள் மட்டும் வளர்ந்தன. ஊரவர்கள் அவரை 'விளையும் ஆண்குறி கொண்ட மனிதன்' என்று பொறாமையுடன் அழைத்தனர். குழந்தைகளில் ஒன்பது பேர் மட்டுமே தப்பிப்பிழைத்தனர், அவர்களில் ஐந்து மகன்கள். அதில் என் தந்தை இளையவர்.

பிரிட்டிஷ் ஆட்சியில் பாதுகாப்பான தொழில் வாழ்க்கைக்கான சாத்தியக்கூறுகளை உணர்ந்த எனது தாத்தா, எனது தந்தை ஆர்வமற்றிருந்த காலத்தில் அவரது கல்வியில் கடும் கவனம் செலுத்தினார். சிறுவனான என் தந்தை பன்னிரெண்டு வயதாகும் போது, ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாக இருந்தார். கணிதத்தில் சிறந்து விளங்கினார். தன் சகோதரர்கள் ஆடு, மாடுகளில் பால் கறக்கும் போது, கூடடைவதற்காக கோழிகளை கூடேற்றும் போது இவர் புத்தகத்தில் மூழ்கி இருப்பார். அதற்காக அவரது சகோதரர்களால் தொடர்ந்து நச்சரிக்கப்பட்டார்.

ஒரு நாள் அப்பாவின் பள்ளிக்கூட தலைமை ஆசிரியர் தாத்தாவின் 'பண்ணைக்கு' வந்திருந்தார்.

'நீங்கள் சகாதேவனின் அப்பாவா?' கிணற்றின் மீது சைக்கிளை சாய்த்துக் கொண்டு முகமன் இல்லாமல் விசாரித்தார். என் தாத்தா அவர் பராமரித்து வந்த கத்தரிக்காய் செடிகளுக்குள் இருந்து நிமிர்ந்து பார்த்தார். தூய்மையான வெள்ளை வேட்டியும், சால்வையும், பனியனும் அணிந்திருந்த, உயரமான அந்த மனிதனை அழைத்துக் கொண்டு, தனது கத்தரிக்காய் தோட்டத்துக்கு திரும்பினார். தாத்தாவுக்கு வந்திருப்பது யார் என்ற குழப்பம் உருவானது. ஊரிலிருக்கும் ரவுடியை, வியாபாரியை, சிலவேளைகளில் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை அறவிட வரும் வணிகனை, ஒரு விதை வியாபாரியை, இரும்பு வியாபாரம், அடகு வியாபாரம் என ஊருக்குள்




வியாபாரம் செய்யும் அத்தனை பேரையும் அவருக்குத் தெரியும். ஆனால் இந்த மனிதன்? ஒருவேளை அவர் புதிய அடகு வியாபாரியாக இருக்கலாம் என தாத்தா நினைத்து பதட்டமானார். ஏற்கனவே வரட்சி அவரது பயிர்களை சேதப்படுத்தி இருந்தது. இப்போது நகரிலிருந்து இந்த நபரின் எதிர்பாராத வருகையும் நிகழ்ந்திருக்கிறது. ஒரு புறம், பருவ காலங்கள், இன்னொரு புறம் பேராசைக்கார நகரவாசிகள். தாத்தா உள்ளூர வெகுண்டார். அவருக்கு சிந்திக்கவும், தனது பாதுகாப்புக்கான திட்டங்களை வகுத்துக்கொள்ளவும், அந்த மனிதனை தன் பயிர் நிலத்துக்கு இழுத்துச் சென்று போராடவும் நேரம் தேவைப்பட்டது. அவர் மெதுவாக எழுந்து, தனது வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு கிணற்றை நோக்கி நடந்தார்.

'நீங்கள் சகாதேவனின் அப்பாவா?' அந்த மனிதர் பொறுமை

இழந்து கேட்டார். அவரது குரலில் இருந்த கடுமையால் சீண்டப்பட்ட என் தாத்தா கோபம் மேலிட வெடித்துச் சொன்னார். 'ஆமா..'

'அதனால உனக்கு என்ன? அதுக்கு மேல எனக்கும் ஒரு பேர் இருக்கு தெரியுமா?'

'ஓமோம், அது எனக்குத் தெரியும் மிஸ்டர் பாண்டியன்' அந்த அழையா விருந்தாளி சாதாரணமாகச் சொன்னார்.

'இங்க பாருங்க... நான் உங்க மகனின் தலைமை ஆசிரியர். என்னை வந்து பார்க்கச் சொல்லி உங்களுக்கு நிறையத் தடவ சொல்லி அனுப்புனனான். இப்ப நானே இவ்வளவு தூரம் உங்களத் தேடி வரவேண்டியாயிற்று'

'ஓ ஐயா, மன்னிக்கனும்' கிராமத்துக்குரிய அதே பணிவுடன் என் தாத்தா சொன்னார். அவர் தலைமை ஆசிரியரை நிழலுக்குள் அழைத்துச் சென்றார். அவருக்கு பயணம் களைப்பாக இருந்திருக்கும் என்றார். ஏன் அவர் வருவதாக முன்னரே சொல்லவில்லை? சொல்லி இருந்தால் அவர் வீட்டில் அவரைச் சந்தித்து இருப்பார். தாத்தா சங்கடத்தில் தடுமாறினார். அவருக்கு என்ன வேண்டும்? கொஞ்சம் கள்ளு விருப்பமா? தாத்தாவிடம் கொஞ்சம் புதுக்கள்ளு இருந்தது. அல்லது, முகத்தைக் குளிர்விக்க கொஞ்சம் தண்ணீர் வேண்டுமா? வேண்டாமா?

அவர் கிணற்றிலிருந்து நீர் அள்ளி, தன்னைச் சுத்தம் செய்து கொண்டே புதிய சூழலைப் புரிந்துகொண்டார். தலைமையாசிரியர், அவரைச் சந்திக்க இந்த தொலைவு வரை வந்திருந்தார். என் தாத்தாவோ ஒருபோதும் பள்ளிக்கூடம் போனதில்லை!

'சரி, ஐயா, நீங்கள் கொஞ்சம் நிழலுக்கயாவது வாங்க. அங்க உங்க சைக்கிள் சரியாக இருக்கிறதா?'

'மிஸ்டர் பாண்டியன், தயவு செய்து, நான் உங்க பையனப் பத்தி பேச விரும்புறன். வீணடிக்க எனக்கு நேரமில்ல. அதோட, உங்க வேலையும் உங்களுக்குண்டு'

சகாதேவன் சிக்கலில் மாட்டிக் கொண்டானா? ஒருவேளை பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டானா? என் தாத்தா மீண்டும் எச்சரிக்கையானார்.

'என்னப் பத்தி நீங்க கவலப்பட வேணாம் ஐயா. எனக்கு நேரம் தாராளமா இருக்கு. உண்மையில, அது மட்டும்தான் எனக் கிட்ட இருக்கு' அவர் தலைமையாசிரியரை நம்பிக்கையுடன் நோக்கினார்.

'நல்லது ஐயா, பையனப் பத்தி என்ன சொல்லப் போறிங்க? உங்களுக்குத் தெரியுந்தானே அவன் ஒரு நல்ல பையன். பிரச்சினை உண்டாக்குற ஆளில்ல. அவனக் கொஞ்சம் கடினமாப் படிக்க வெய்க்கலாம்'. மூன்று பையன்கள் இருந்தாலும் பண்ணையில் அனைத்து வேலைகளையும் தானே செய்து முடிப்பது மிகவும் கடினமாக இருந்தது என்று தாத்தா சொன்னார். மூத்தவன் திருமணமாகி தூரச் சென்று விட்டான். 'சகாதேவன் பசுக்களில் பால் கறக்க கொஞ்சம் உதவி செய்ய வேண்டியிருந்தது. ஆனால் அவன் கடினமாக உழைக்கிறான் என்பதை நான் பார்க்கிறேன், அவ்வளவுதான்.'

'பாண்டியன், ஒரு நிமிஷம் பொறு, நான் உன்னப் பார்க்க வந்த காரணத்தச் சொல்றன்'

'ஆமாம், இது ஒரு நல்ல யோசனை,' என்று தாத்தா சொன்னார். இப்போது அடக்கத்தோடு உண்மையை எதிர்பார்க்கும் ஒருவனைப் போல் தலைமை ஆசிரியருக்கு முன்னால் அமர்ந்து கொண்டார்.

சகாதேவன் ஒரு நல்ல பையன் தலைமை ஆசிரியர் அவரிடம் சொன்னார். ஒரு சிறந்த மாணவன், பள்ளியிலும் அவன்தான் சிறந்தவன். கிராமத்துப் பள்ளியை விட்டு இவ்வளவு சீக்கிரம் முன்னேறி வர முடிந்தது பெருமைக்குரியது. அவனுக்கு அப்போது ஒரு ஆங்கில வார்த்தையேனும் தெரியாது. சும்மா கற்பனை செய்து பாருங்கள்! மூன்று வருடங்களில் அவன் தனது வகுப்பில் மற்ற மாணவர்களை ஆங்கிலம், கணிதம் எல்லா வற்றிலும் தோற்கடித்துவிட்டான். உண்மையில், அவன் இரட்டை வகுப்பேற்றத்துக்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கிறான்.

'இரட்டை வகுப்பேற்றமா? அப்படியென்றா என்ன ஐயா?' பெருமிதத்துடன் ஒளிரும் தாத்தா அந்தக் கணத்தில் வறட்சியை மறந்துவிட்டிருந்தார். இன்னொரு விதை துளிர்க்க ஆரம்பித்திருந்தது.

'இதன்ர அர்த்தம் சகாதேவன், தரம் ரெண்டில் இருந்து தரம் மூன்றுக்கு செல்லாமல், நேராக தரம் நாலுக்கு செல்வான்'.

தலைமை ஆசிரியர் பதிலளித்தார். என் தாத்தா மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்து, தன்னுடைய கள்ளுப் பானையை தட்டிவிடப் பார்த்தார்.

'அப்ப, அவன் பள்ளியை முன்னரே விட்டுவிட்டு எனக்கு பண்ணையில் உதவுவான்?'

'இல்ல, இல்ல, மிஸ்டர் பாண்டியன், அவன் ஒரு விவசாயி ஆகக்கூடாது' என்று தலைமை ஆசிரியர் கவலையுடன் பதிலளித்தார். 'அவன் ஒரு அசாதாரணமான, கெட்டித்தனமான பையன். அவன் கொழும்பில் உள்ள ஒரு சரியான கல்லூரிக்கு செல்ல வேண்டும். அதுக்காகத்தான் உன்னைப் பார்க்க வந்தன்.'

'சகாதேவன், கல்லூரிப் படிப்பு படிக்க உகந்தவன்' அவர் சொன்னார். சென். பெனடிக்ட் அல்லது சென். ஜோசப் நல்ல கல்லூரிகள். அங்கே அவனுக்கு இடம் கிடைத்தால் மிச்சம் சிறப்பு. ஆனால் தாத்தா பணத்தைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று சொன்னார். சிலவேளை கல்லூரியால் அவனுக்கு ஸ்கொலர்ஷிப் அல்லது குறைந்தபட்சம் ஒரு உதவித் தொகையைப் பெற உதவி கிடைக்கலாம். 'எவ்வளவு சீக்கிரம் போறிங்களோ, அவ்வளவு நல்லம்' என்று கூறி தலைமை ஆசிரியர் முடித்தார்.

(தொடரும்...)



jiffry.hassan@thaiveedu.com



# மகாவம்சம் 6-ஆவது தொகுதி
## ‘சந்திரிகா காலப் பயங்கரவாதப் பிரிவினைவாதம்’

### தமிழில்: என். சரவணன்

**3**

மகாவம்சத்தின் 6-வது தொகுதியானது 1978 - 2010 வரையான காலத்தைப் பற்றி பேசும் தொகுதி. இறுதியாக வெளிவந்த 6-வது தொகுதி ‘மகாவம்சம்’ 1978 - 2010 காலத்தைப் பற்றியது. ஜே.ஆர். காலம் தொடக்கம் மகிந்த ராஜபக்ச காலம் வரையானது அது. அதாவது ஈழப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து முள்ளிவாய்க்கால் முடிவு வரையிலானது. இதில் தமிழ் மக்களுக்கு மிகவும் அவசியப்படும் பகுதி ‘பயங்கரவாதம்’ என்கிற தலைப்பில் எழுதப்பட்டுள்ள பகுதியாகும். இந்த காலப்பகுதியில் ஆட்சி செய்தவர்களின் ‘பாதுகாப்பு’ அத்தியாயங்கள் மட்டும் இங்கே தொடராக வெளிவருகின்றன. ஜே.ஆர். பிரேமதாச, டி.பி. விஜேதுங்க, ஆகியோர் காலத்தை பதிவு செய்கிற அத்தியாயங்கள் கடந்த இரு மாதங்களாக வெளியாகின. இவ்வத்தியாயம் சந்திரிகா பண்டாரநாயக்க காலத்தைப் பற்றிப் பேசுகிறது.

தமிழர்களின் அரசியல் அபிலாசை, அதற்கான போராட்டம் பற்றிய அரசின் கொள்கை என்ன? வியாக்கியானம் என்ன? இதற்கு அரசு வினையாற்றிய விதம்? என்பவற்றை அறிவதற்கு இந்த தொகுதியில் பயங்கரவாதம் என்கிற பகுதி தமிழில் வெளிவருவது முக்கியம்.

- சந்திரிகாவின் வெற்றியும் சமாதான முயற்சிகளும்
- வெண்தாமரை இயக்கம் - சமாதானத்துக்கான போர்
- மூன்றாம் ஈழப்போர்
- யாழ்ப்பாணம் கைப்பற்றல்
- தலதா மாளிகைத் தாக்குதல் - புலிகள் மீதான தடை
- ஓயாத அலைகள் 1,2,3, - ஆனையிறவு கைப்பற்றல்
- ஒஸ்லோ பேச்சுவார்த்தை - உடன்படிக்கை
- வீழ்த்தப்பட்ட ‘சுனாமி பொறிமுறை’
- கருணா பிளவு

---

51 எல்.ரி.ரி.ஈ ஒரு பயங்கரவாத பிரிவினைவாத இயக்கம் என்பதை ஏற்றுக்கொண்ட அப்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க, அந்த அமைப்புடன் பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவதில் நம்பிக்கை கொள்ளவில்லை, ஆனால் அவரின் கீழ், 1994 ஓகஸ்ட் 17 அன்று பிரதமரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தனது பதவிக்காலத்தின் மூன்று மாதங்களில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான தனது கொள்கையை செயற்படுத்தத் தொடங்கினார்.

53 மொழி, கல்வி, குடியேற்றங்களை ஏற்படுத்தல், சட்டம், ஒழுங்கு, நிர்வாகம், பிராந்திய சுயாட்சி போன்ற விடயங்களில் தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் மனக்குறைகள் இனப் பிரச்சினையே என்பதை பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஏற்றுக்கொண்டார். எனவே, பல வருடங்களாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழீழ எல்.ரி.ரி.ஈ இயக்கத்துடன் நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக அழைப்பு விடுத்து எல்.ரி.ரி.ஈ அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு கடிதம் அனுப்பினார். இதற்குப் பதிலளித்த பிரபாகரன் பல நிபந்தனைகளுடன் பதிலை அனுப்பியதுடன், பேச்சுவார்த்தைகளை எவ்வாறு ஆரம்பிக்க வேண்டும் என்பது குறித்து இரு தரப்பினருக்கும் இடை யில் பல கடிதங்கள் பரிமாறப்பட்டன. வடக்குப் பிராந்தியங்களுக்கான பொருட்களை கொண்டு செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கப்படும் என்றும் யுத்தத் தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் புனரமைப்பு திட்டங்களுக்கு எல்.ரி.ரி.ஈ.யின் ஆதரவு தேவை என்றும் தெரிவித்த பிரதமர், 1990-இலிருந்து அமுலில் இருந்த பொருளாதாரத் தடைகளை தளர்த்த நடவடிக்கை எடுத்தார். அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஒரு சிறந்த பிரதிபலிப்பாக, 1990 ஜூன் மாதத்தில் இருந்து பிடித்து வைக்கப்பட்டிருந்த 10 பொலிஸ் உத்தியோகத்தர்களை 1994 செப்ரெம்பர் 02-ஆம் திகதி எல்.ரீ.ரீ.ஈ யினரால் விடுவிக்கப்பட்டதுடன், அரசாங்கத்துடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக அறிவித்தனர். அதற்கமைய சமாதானப் பேச்சுவார்த்தைக்கான பிரதிநிதிகளை நியமிக்குமாறு எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் தலைவ

ரிடம் கேட்கப்பட்டது. பிரதமரின் செயலாளர் குசும்சிறி பால பட்ட பந்திகே தலைமையில், தகவல் அமைச்சின் செயலா ளர் லயனல் பெர்னாண்டோ, இலங்கை வங்கியின் தலைவர் ராஜன் ஆசீர்வாதன் மற்றும் கட்டடக் கலைஞர் நவீன் குணரத்ன ஆகியோர் அரசாங்க தரப்பு பிரதிநிதிகளாக பிர தமரால் நியமிக்கப்பட்டனர். எல்.ரி.ரி.ஈ தூதுக்குழுவில் மட் டக்களப்பு தலைவர் சிவஞானம், கரிகாலன், எஸ்.பி. தமிழ்ச் செல்வன், எஸ். டொமினிக்கன் மற்றும் ஏ. ரவி ஆகியோர் அடங்குவர்.

54 இதன் பிரகாரம் 1994 செப்ரெம்பர் 20, அன்று, இரு தரப் பினருக்கும் இடையே அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடங்கியபோதிலும், மன்னார் வளைகுடாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'சாகரவர்தனா' கடற்படைக் கப்பல் எல்.ரி.ரி.ஈ.யினரால் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது. இந்த சம்பவத்தில் 26 கடற்படை வீரர்களும் இரண்டு அதிகா ரிளும் கொல்லப்பட்டதுடன் கேப்டன் தரத்திலான கொம டோர் அஜித் போயகொட போர்க் கைதியாக பிடிக்கப் பட்டார். மேலும் கப்பலில் பொருத்தப்பட்டிருந்த மூன்று மைல் தொலைவுக்கு சுடக்கூடிய இரண்டு 50 மி.மீ. மற்றும் 20 மி.மீ. துப்பாக்கிகளையும் பயங்கரவாதிகள் பறிமுதல் செய்தனர்.

55 இதற்கு பதிலடியாக, பாதுகாப்புப் படையினரும் செப் ரெம்பர் 25 அன்று எல்.ரி.ரி.ஈ.க்கு எதிராக பதிலடி கொடுத்தன. யாழ்ப்பாண பாதுகாப்பு படைகளின் தளப தியாக இருந்த அசோக ஜயவர்தன தலைமையில் 'ஜய ஹன்ட' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன், பலாலி இராணுவ முகாமைச் சுற்றி எல்.ரி.ரி.ஈ இயக்கத்தால் கட் டப்பட்ட பாரிய முகாமை அழிப்பதே இந்த நடவடிக்கை யின் நோக்கமாக இருந்தது. 03 மற்றும் 04-வது இலங்கை கவசப் படைப்பிரிவுகளும், 03-வது கஜபா மற்றும் 05-வது கெமுனுஹேவா படைப்பிரிவுகளும் 'ஜய ஹன்ட' நட வடிக்கையில் தீவிரமாக பங்களித்தன, விமானப்படையும் இதில் வலுவான பங்களிப்பை வழங்கியது. பலாலியில் இருந்து சுமார் 4 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அச்சுவேலி மற்றும் இடைக்காடு பகுதிகளை படையினர் 5 மணித்தியால படை நடவடிக்கையின் மூலம் 45 பதுங்கு குழிகளை கொண்ட வலையமைப்பாக எல்.ரி.ரி.ஈ. இயக் கத்தால் அமைக்கப்பட்டிருந்த ஆயுதங்களுடன் நன்கு நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களையும், ஆயுதக் கிடங்கு, பயிற்சி முகாம், 2 பேருந்துகள் மற்றும் 2 சமர் வாகனங்கள் என்பனவற்றை இராணுவம் அழித்தது.

56 இவை எதையும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு தடையாகக் கருதாத ஜனாதிபதி தொடர்ந்தும் பேச்சுவார்த்தையைத் தொடர்வதற்கு தேவையான முயற்சிகளை மேற்கொண்டார். இரு தரப்பினருக்கும் இடையிலான முதலாவது பேச்சுவார்த் தை 1994 ஒக்ரோபர் 13,14-ஆம் திகதிகளில் யாழ்ப்பா ணத்தில் இடம்பெற்றது. யுத்தத்தால் நாசமாக்கப்பட்ட வடக்குப் பிராந்தியங்களில் இயல்பு வாழ்க் கையை மீட் டெடுப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்புகளை சரி செய்வதன் மூலம் இந்த பகுதிகளை மறு அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்தியது. எல்.ரி.ரி.ஈ. அமைப்பு போர் நிறுத்தத்தை கொண்டு வருவதில் கவனம் செலுத்தியதுடன் அதற்காக அரசு நிரப்ப வேண்டிய பல விடயங்களை முன்நிபந்தனைகளாக முன்வைத்தது. மக் களின் போக்குவரத்தை எளிதாக்குவதற்காக பூநகரி-சங் குபிட்டி வீதியைத் திறந்து வைத்தல், பூநகரியில் அமைக் கப்பட்டிருந்த அரச பாதுகாப்பு முகாமை அகற்றுதல், எல்.ரி.ரி.ஈ.யின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு பொருட் கள் கொண்டு செல்வதற்கான தடையை நீக்குதல், வீதித் தடைகளில் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களை சோதிக்காமை, வடக்கு கடற்கரைக்கு அருகிலுள்ள கடலில் மீன்பிடி நட வடிக்கைகளுக்கான கட்டுப்பாடுகளை நீக்கு தல், கடற் கரையைச் சுற்றியுள்ள எல்.ரி.ரி.ஈ தளங்களின் கடல் எல்லைகளை மேலும் விரிவுபடுத்த அனுமதிப்பது, கிழக்கு மாகாணத்தில் புலிகளின் உறுப்பினர்கள் ஆயுதங்க ளுடன் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனும திப்பது என்பன அவர்களால் முன்வைக்கப்பட்ட நிபந் தனைகளில் பிரதானமானவையாகும்.

எல்.ரி.ரி.ஈ.யினரால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றிய அரசாங்கம் 1994 ஒக்ரோபர் இறுதி யில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கு கொண்டு செல்ல தடை விதிக்கப்பட் டிருந்த பொருட்களின் எண்ணிக்கையை 78-இல் இருந்து 18-ஆக குறைத்தது. பூநகரியில் நிறுவப்பட்டிருந்த அர சாங்க இராணுவத் தளம் திரும்பப் பெறப்படாதபோதும் அதன் முன்னரன் வலயம் 600 மீற்றர்கள் பின்னோக்கி நகர்த்தப்பட்டதுடன் வடக்கு கடற்கரைக்கு அருகிலுள்ள கடலில் மீன்பிடிப்பதற்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, அதிவேக இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகள் பயன்ப டுத்த அனுமதிக்கப்பட்டன. எல்.ரி.ரி.ஈ.யின் கடலோர முகாம்களின் கடல் எல்லைகளை மேலும் விரிவுபடுத்த அனுமதித்த அரசாங்கம், அந்த அமைப்பின் கோரிக்கைக ளில் ஒன்றான கிழக்கு மாகாணத்தில் எல்.ரி.ரி.ஈ இயக்க உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் நடமாடும் கோரிக்கை அனுமதியை மாத்திரம் நிராகரித்தது.

57 இதற்கிடையில், 1994 நவம்பரில் நடைபெறவிருந்த ஜனா திபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. அதற்கான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்க உட்பட 50 பேர் கிராண்ட்பாஸ் தொட்டலங்க அருகில் நடந்த பேரணியில் பங்கேற்ற போது தற்கொலை குண்டுதாரியின் மூலம் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தால் கொல் லப்பட்டனர். சுமார் 100 பேர் காயமடைந்தனர். எல்.ரி.ரி.ஈ அமைப்புடனான இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக் காக அரசாங்கத் தூதுக் குழு யாழ்ப்பாணம் செல்வதற்கு ஒரு நாள் முன்னதாக இடம்பெற்ற இப்படுகொலைகளின் பின்னரும் பிரதமர் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் சென்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சி களும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் எல்.ரி.ரி.ஈ

இயக்கத்துடனான பேச்சுவார்த்தைகளின் ஊடாக சமாதானம் நிலைநாட்டப்படும் எனக்குறிப்பிட்டிருந்தன. 1994 நவம்பர் 09-இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்த லில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 62.28% வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். புதிய அரசாங்கத்துடனான தமது நல்லெண்ணத்தின் அடையாளமாக, எல்.ரி.ரி.ஈ இயக்கம் 1994 நவம்பரில் புதிய ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவிருந்த 12-ஆம் திகதியிலிருந்து ஒரு வாரகால ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக பிரச்சாரம் செய்த காமினி திஸாநாயக்க மற்றும் ஏனையோரின் படுகொலையைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து அரசாங்கத்திற்கும் எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் திட்டமிட்டபடி நடத்தமுடியாதிருந்த போதும் வடக்கில் புனர்வாழ்வு பணிகளுக்காக அரசாங்கம் 40 மில்லியன் ரூபா பெறுமதியான திட்டங்களை வழங்கியது. 1994-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08-ஆம் திகதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒருங்கிணைப்பில் ஜனாதிபதிக்கும் எல்.ரி.ரி.ஈ இயக்க தலைவருக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அரசியல் தீர்வை பேச்சுவார்த்தை மூலம் காண்பதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தபோதும் எல்.ரி.ரி.ஈ இயக்கம் அத்தகைய நீண்டகால தீர்வைப் பற்றி உரையாடுவதைவிட பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாக காட்டப்படும் கோரிக்கைகளை வென்றெடுப்பதில் கவனம் செலுத்தியது. இரு தரப்பினருக்கும் இடையில் முரண்பட்ட நோக்கங்கள் இருந்தநிலையில், இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை 1995 ஜனவரி 14 அன்று யாழ்ப்பாணத்தில் தொடங்கியது. மக்கள் நடமாட்டத்திற்கு வசதியாக பூநகரி சங்குபிட்டி வீதியைத் திறப்பது, மக்களின் பாதுகாப்புக்காக பூநகரியில் நிலைகொண்டுள்ள பாதுகாப்புப் படைகளை திரும்பப் பெறுவது, எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் ஆயுதம் ஏந்தி தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிப்பது போன்ற தங்களது முக்கிய கோரிக்கைகளை அவர்கள் மீண்டும் வலியுறுத்தினர். ஆனால், அக்கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு சம்மதிக்கவில்லை.

59 மீண்டும் மீண்டும் கோரிக்கைகளை முன்வைத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தாமதப்படுத்திய அதே வேளையில், எல்.ரி.ரி.ஈ இயக்கம் தங்கள் இராணுவ வலிமையை மேம்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டனர். கிளிநொச்சிக்கு தெற்கே இரணைமடுவில் விமான ஓடு பாதையை அமைத்துக்கொண்டு, பல கப்பல்களில் இருந்து கொண்டு வரப்பட்ட நவீன ஆயுதங்கள் தரையிறக்கப்பட்டு விமானம் மூலம் அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் அவற்றில் வானில் பறக்கும் விமானங்களை தரையில் இருந்து வீழ்த்தக்கூடிய ஏவுகணைகளும் அடங்கும். அப்போது அரசபாதுகாப்பு படையினரிடம் கூட இதுபோன்ற ஏவுகணைகள் இருந்ததில்லை.

இதேவேளை, மூன்றாவது கட்டப் பேச்சுவார்த்தைக்குத் தயாராகிய ஜனாதிபதி, கடற்றொழில் மீதான தடைகளை நீக்குவதற்கும் பெற்றோல் கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையையும் நீக்கினார். அடுத்த சுற்று பேச்சுவார்த்தையில் அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் செயற்பட்டால் மூன்று மாதங்களுக்குள் பூநகரி இராணுவ முகாம் விடயத்தை மீள் பரிசீலனை செய்யவும், எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களை ஆயுதம் வைத்திருப்பதற்கும் அனுமதிப்பது குறித்து பரிசீலிக்கவும் அவர் இணக்கம் தெரிவித்தார். ஆனால், தமது பயங்கரவாத தாக்குதல்களைப் பலப்படுத்துவற்கான நடவடிக்கைகளை மேற் கொண்ட எல்.ரி.ரி.ஈ அமைப்பு நான்கு புதிய படைகளை உருவாக்கியது. அவை 'அம்பராசி' (விமான தாக்குதல் குழு), 'மாலதி' (பெண்கள் படையணி), 'கிட்டு' (பீரங்கி படையணி) மற்றும் 'விக்டர்' (பீரங்கி எதிர்ப் புப்படை) என்று பெயரிடப்பட்டன. இக்காலப்பகுதியில், எல்.ரி.ரி.ஈ.யினர் கிழக்கு ஐரோப்பிய மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்து விமான மற்றும் பீரங்கித் தாக்குதல் உபகரணங்கள், வெடிமருந்துகள் போன்றவற்றை பெருமளவில் கொள்வனவு செய்தனர். ஒருபுறம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தபடி அவற்றை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை நீடித்துக் கொண்டே மறுபுறம் அரசாங்கப் படைகள் தயாராவதற்கு முன்னர் தமது இராணுவ வலிமையை பலப்படுத்திக் கொண்ட எல்.ரி.ரி.ஈ 1995 ஏப்ரல் அளவில் அரசாங்கப் படைகளைத் தாக்குவதற்கு போதுமான வலிமையைக் கட்டியெழுப்பியிருந்தது.

60 போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அவ்வொப்பந்தத்தில் இருந்து நீங்குவதாயின் 72 மணித்தியாலங்களுக்குள் ஒருதரப்பு மற்றதரப்புக்கு அறிவிக்க வேண்டும் என்ற உடன்பாட்டு விதிகளைக் கூட புறக்கணித்து, 1995 ஏப்ரல் 18 அன்று திருகோணமலை கடற் படை இறங்குதுறையில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு கடற்படை கவச படகுகளை எல்.ரி.ரி.ஈ.யினர் வெடிவைத்துத் தகர்த்ததில் பன்னிரண்டு படையினர் கொல்லப்பட்டனர். 21 பேர் காயமடைந்தனர். அப்படித்தான் எல்.ரி.ரி.ஈ அமைப்பு மூன்றாவது ஈழப் போர் சமர்களைத் தொடங்கியது.

இந்திய அமைதிப்படை வெளியேறிய பின்னர், எல்.ரி.ரி.ஈ.யினர் யாழ்ப்பாணப் பகுதியில் பெரும் பலத்தைக் கட்டியெழுப்பி இருந்தனர். இந்நிலையில், 1995 ஏப்ரலில் யுத்த நிறுத்தம் முறிந்தபோது, யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளாக காங்கேசன்துறை, தொண்டமானாறு, வசாவிளான் மற்றும் தெல்லிப்பளை ஆகிய பகுதிகளுக்கிடையில் நான்கு கிலோமீற்றர் தூரங்களைக் கொண்ட இடைவெளிகளும் ஆனையிறவு மற்றும் காரைநகர், ஊர்காவற்துறை, மண்டைதீவு ஆகிய மூன்று தீவுகளுக்கும் தீவுகளுக்குள்ளும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. பலாலியை மையமாகக் கொண்ட நிலப்பகுதியை இராணுவத்தின் நான்கு அல்லது ஐந்து பட்டாலி

யன்கள் பராமரித்து வந்ததுடன், மேஜர் தீபால் சுபசிங் கவின் கீழ் 9-வது கஜபா பட்டாலியன் தெல்லிப்ப ளையில் நிலைகொண்டிருந்தது. ஏ-9 பாதை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததால், அரசாங்கத்தின் கீழ் இருந்த பகுதிகளுக்குத் தேவையான அனைத்தும் விமானம் மற்றும் கடல் மார்க்கமாக கொண்டு செல்லப்பட்டன. அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்த படையினருக்கு முறையான உணவு கூட கிடைக்காத நிலையில் விடுப்பு பெற்று இரண்டு, மூன்று மாதங்களுக்கு மாத்திரமே குழந் தைகளையும் உறவினர்களையும் பார்க்கும் வாய்ப்பு கூட அவர்களுக்கு அரிதாகவே கிடைத்தது. ஏவுகணை அச்சுறுத்தல் உருவாகியிருந்த நிலையில், பலாலி விமான நிலையத்தில் விமானங்களை தரையிறக்குவது கடின மாக இருந்ததால், யாழ்ப்பாணத்தில் இருந்த படையினர் மேலும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

63 1995 ஏப்ரல் 22, அன்று, எல்.ரி.ரி.ஈ இயக்கத்தினர் கட்டமு றிச்சிக்குளத்தில் அரசாங்க பாதுகாப்புப் படைகளைத் தாக்கி கமாண்டோக்கள் உட்பட 25 இராணுவ வீரர்களைக் கொன்றனர். ஏப்ரல் 28 அன்று, ஊர்காவற்துறை பகுதி மீதான புலிகளின் தாக்குதலில் இருந்து 3-வது மற்றும் 6-வது கஜபா படைப்பிரிவுகளைக் கொண்டு ஊர்காவற்து றைத்தீவை கேர்னல் சரத்பொன்சேகாவால் பாதுகாக்க முடிந்த போதும் கஜபா படையணியைச் சேர்ந்த லெப்டி னன்ட் கேணல் ஜகத் டயஸ் தலைமையில் இருந்த பகுதியில் 70 ராணுவ வீரர்களும், 6 அதிகாரிகளும் கொல் லப்பட்டனர். அத்துடன் நிறுத்தாத புலிகள், மீண்டும் தயார் படுத்திக்கொண்டு ஏப்ரல் 28 அன்று அரசாங்கப் படை களின் பாதுகாப்பில் இருந்த மண்டைதீவு முகாமை தாக்கி யதோடு, 2-வது கெமுனுஹேவா படைப்பிரிவின் 92 இராணுவ வீரர்களையும் அப்படைப்பிரிவின் கட்டளை அதி காரியான மேஜர் கே.ஆர். தர்மவர்தனவையும் கொன்றனர்.

64 அரச படையிடம் கூட இருந்திராத மிசைலைப் பயன்ப டுத்தி போர் வரலாற்றிலேயே முதன் முறையாக, 1995 ஏப்ரல் 29 மற்றும் 30-ஆம் திகதிகளில் இலங்கை விமா னப்படைக்கு சொந்தமான இரண்டு அவ்ரோ விமானங் களை பலாலி பிரதேசத்தில் எல்.ரி.ரி.ஈ.யினர் சுட்டு வீழ்த் தினர். விடுமுறையை முடித்துக்கொண்டு மீண்டும் கட மைக்குத் திரும்பிக் கொண்டிருந்த சுமார் நூறு படையி னரையும் சில பொதுசனத்தையும் எல்.ரி.ரி.ஈ.யினர் கொன் றனர். விமான கொமடோர் சிரந்த குணதிலக்கவுடன் விமான கொமடோர் எஸ். விக்ரமசிங்க மற்றும் ரொஜர் வீரசிங்க ஆகியோரும் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர்.

1995 ஏப்பிரலில் எல்.ரி.ரி.ஈயினர் மூன்றாவது ஈழப்போரை முன்னெடுத்த போது, தாக்குதல்களை எதிர்கொள்ள அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளும் கட்டியெழுப் பப்பட்டிருந்தன. 1993-இல் அறிமுகப்படுத்தப்பட்ட நவீன எம்.ஐ 17-ரக ஹெலிகாப்டர்கள் ஒரு குறிப்பிடத்தக்க பலமாக இருந்தன. ஆயுதப் படைகளின் 50 பேர்களுடன் ஏராளமான பொருட்களை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட இந்த ஹெலிகொப்டர் சக்திவாய்ந்த இராணு வத்தின் தாக்குதல் திறனைப் போல இராணுவ தந்திரோ பாயத்தை வலுப்படுத்தவும் உதவியது.

65 பயங்கரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்கும் நோக்குடன், அரசாங்கம் ஏப்ரல் 1995-இல் கூட்டு நடவடிக்கைத் தளபதி பதவியை ஏற்படுத்தியதுடன் மேஜர் ஜெனரல் ஏ.எம்.யு சௌவிரத்னவை அதன் முதலாவது கட்டளை அதிகாரியாக நியமித்தது. அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவப் படைகளின் தளபதிகளுடனும் அவரது குழுவில் சேர்க்கப்பட்ட ஏனைய அதிகாரிகளுடனும் இணைந்து அவர் முன்வைத்த திட்டத்தின்படி, தெற்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்து அவற்றை யாழ்ப்பாணத்தில் முடிப் பதே பொருத்தமானது என்றார். ஏ-9 பாதை எல்.ரி.ரி.ஈ.யின் கட்டுப்பாட்டில் இருப்பதால் யாழ்ப்பாணத்தில் இருந்து நடவடிக்கைகளை ஆரம்பிப் பதாக இருந்தால் அதற்குத் தேவையான துருப்புக்கள், உணவு, இராணுவ உபகரணங்கள் மற்றும் ஏனைய அனைத்தும் விமானம் மூலம் கொண்டு செல்லப்பட வேண்டி ஏற்படும் என்றும் யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டாலும் அதைப் பாதுகாக்க படையினர் தேவைப் படுவார்கள் என்றும் அதற்கான படைப்பலம் இராணுவத் திடம் போதுமான அளவு இல்லை என்றும் இராணுவ அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டினர்.

69 எவ்வாறிருந்த போதும் யாழ்ப்பாணத்தில் இருந்து படை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்திருந்த பாது காப்பு இராஜாங்க அமைச்சர் கேர்ணல் அனிருத்த ரத்வத்த மேஜர் ஜெனரல் ஏ.எம்.யு. சௌவிரத்ன முன் வைத்த திட்டத்துடன் உடன்படாமல், அவருக்குப் பதிலாக கூட்டு நடவடிக்கை தளபதியாக மேஜர் ஜெனரல் ரொஹான் தலுவத்த நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் படை நடவ டிக்கையை ஆரம்பிப்பதற்கு போதுமான படையினரை கிழக்கில் நிலைகொண்டிருக்கும் படையினரைக் கொண்டு சரி செய்யுமாறு பாதுகாப்பு செயலாளரின் மூலம் அவருக்கு ஆணையிடப்பட்டதுடன் அதன்படி கிழக்கிலும் வெலி ஓயாவிலும் நிலைகொண்டிருந்த பெரும்பாலான படை யினர் யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்கப்பட்டனர். இவ்வாறு யாழ்ப்பாண படை நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு அனைத்தும் தயாராகிக் கொண்டிருக்கையில் கிழக்கு மாகா ணத்தில் உயர்மட்ட பாதுகாப்பை பேணி வந்த மேஜர் ஜெனரல் நளின் அங்கம்மன சென்றுகொண்டிருந்த வாகனம் மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில்கண்ணிவெ டியில் சிக்கி விபத்துக்குள்ளாகி இறந்தார். 1995 மே 25 அன்று, திம்புலாகல விகாராதிபதி மாத்தறை தித்த லகம, சீலாலங்கார நாயக்க தேரரும் கல் லறாவ சிங்கள மீனவ கிராமத்தைச் சேர்ந்த 45 பேரும் எல்.ரி.ரி.ஈ உறுப்பி னர்களால் படுகொலை செய்யப்பட்டனர். பின்னர், பாது காப்புப் படையினர் மேஜர் ஜெனரல் சதீஸ் ஜயசுந்தர தலைமையில் மே 29 அன்று கிழக்கு மாகாணத்தில் எல்.ரி.ரி.ஈ. யினருக்கு எதிராக 'ராம சக்தி' என்ற படை நட வடிக்கையை மேற்கொண்டனர். காட்டில் பதுங்கியிருந்த சுமார் 30,000 எல்.ரி.ரி.ஈ. யின ரைக் கொண்ட குழு எதிர்த் தாக்குதலை நடத்தியது. சுமார் 100 எல்.ரி.ரி.ஈ. உறுப்பி



னர்கள் கொல்லப்பட்டதுடன் இராணுவம் அச்சமரில் வெற்றி பெற்றது.

72 இதற்கிடையில், ஊர்காவற்துறை, மண்டைதீவு, கட்டமுறிச்சிக்குளம் ஆகிய இடங்களில் பெற்ற வெற்றிகளால் உற்சாகமடைந்த எல்.ரி.ரி.ஈ. இயக்கம் மேலும் அவ்வாறான தாக்குதல்களை விஸ்தரிக்க விரும்பியது. அதற்காக அவர்கள் முல்லைத்தீவுக்கு தெற்கே பாதுகாப்புப் படையினர் நிறுத்தப்பட்டிருந்த கொக்கு தொடுவாய் முகாமைத் தேர்ந்தெடுத்தனர். இந்தப் பகுதிக்குச் செல்ல தெளிவான பாதை இல்லாததால் படையினரை எதிர்கொள்ள கொக்கிளாய் களப்பின் ஊடாகப் படகு மூலம் செல்ல வேண்டியிருந்தது. அவ் இராணுவப் பிரிவின் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் கேர்ணல் ரோஹித விக்ரமதிலக, எல்.ரி.ரி.ஈ.யின் தாக்குதலை முறியடிக்க பொருத்தமான பாதுகாப்புத் திட்டம் ஒன்றை தயாரித்திருந்தார். அவர் விடுமுறையில் இருந்தபோது, இரண்டாம் நிலை கட்டளைத் தளபதியான மேஜர் சதீஸ் அபேசேகரவின் தலைமையுடன் எல்.ரி.ரி.ஈ. யினரின் தொடர் தாக்குதல்களை எதிர்கொள்ள முடிந்தது. வெலிஓயாவில் இருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் இருந்த கொக்கு தொடுவாய் முகாமுக்கு வெலிஓயாவிலிருந்து எந்த உதவியும் கிடைக்காத நிலையில் சுமார் ஆறு மணித்தியாலங்கள் கடும் சமரின் பின்னர் சுமார் 300 எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களைக் கொன்று பாதுகாப்புப் படைகள் வெற்றிபெற முடிந்தது. மோதலுக்கு முகம் கொடுப்பதற்கான தயாரிப்புகள் எதுவுமின்றி வெலி ஓயா தலைமையகத்தின் மீது தாக்குதல் நடத்திய எல்.ரி.ரி.ஈ குழு, அதன் பங்கர்களில் சிலவற்றை அழித்துவிட்டு காலையில் தப்பி ஓடிய போதிலும், முகாம் தலைமையகத்தில் இருந்து பதில் தாக் குதல் நடத்தப்படவில்லை. ஆனால் அங்கிருந்து 08 கி.மீ தொலைவில் இருந்த அதாவெட்டுனஏரி முகாமில் இருந்த 16-வது இலங்கை தேசிய பாதுகாப்பு படையினரால் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தினர் படுகொலை செய்யப்பட்டனர்.

73 இக்காலப்பகுதியில், ஜனாதிபதி எல்.ரி.ரி.ஈ தொடர்பாக இருமுனை கொள்கையை திட்டமிட்டிருந்தார். முதலாவதாக அதற்கு ‘சமாதானத்துக்கான போர்’ என அழைக்கப்பட்டதுடன் அதன்மூலம் புலிகளை இராணுவ ரீதியாக பலவீனப்படுத்தும் என்று அவர் நம்பினார். இரண்டாவதாக, அவ்வமைப் பின் ஈடுபாட்டுடனோ அல்லது இல்லாமலோ, தமிழ் மக்களின் குறைகளாக முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண எதிர்பார்க்கப்பட்டதுடன் இராணுவ வழிமுறையைப் போல அரசியல் தீர்வும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட்டது. அரசியல

மைப்பு சீர்திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியினால் முன் வைக்கப்படும் தீர்வுகள் குறித்து மேற்படி அரசியல் தரப்பில் கலந்துரையாடப் பட்டதுடன் எல்.ரி.ரி.ஈ அமைப்பை இராணுவ ரீதியாக தோற்கடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீது மட்டுமே இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

1995 ஜூலை 07, அன்று, காங்கேசன்துறை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த இலங்கை கடற்படைக்குச் சொந்தமான ‘எடிதரா படகு’ கடற்புலிகள் குழுவினரால் வெடிக்கப்பட்டதில் கப்பலின் கேப்டனும் சில கடற்படையினரும் கொல்லப்பட்டனர்.

75 ஓகஸ்ட் 07, 1995 அன்று, டொரிங்டன் சதுக்கத்தில் உள்ள மேல்மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகத்திற்கு முன்னால் இளநீர் வண்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 21 பேர் கொல்லப்பட்டதுடன் 50-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் கட்டட வளாகத்தின் எல்லையில் நடந்த இந்த குண்டுவெடிப்பில் அக் கட்டடங்கள் சேதமடையாத போதும் முதலமைச்சரின் அலுவலகம் மோசமாக சேதமடைந்தது. 1995 ஒக்ரோபர் 21 அன்று பொலன்னறுவை, அம்பாறை, பதவிய பிரதேசத்தில் மூன்று கிராமங்களுக்குள் புகுந்த எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகள் 72 பொதுமக்களை வெட்டிக் கொன்றனர்.

கொக்குத்தொடுவாயில் ஏற்பட்ட படுதோல்வியைத் தொடர்ந்து எல்.ரி.ரி.ஈயினர் சோர்வுற்றிருந்த நிலையில் 1995 ஒக்ரோபர் 1- ஆம் திகதி பாதுகாப்புப் படையினர் ‘மின்னல் தாக்குதல்’ இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். எல்.ரி.ரி.ஈ இயக்கத்தை முழுமையாக தோற்கடிப்பதற்கு சரியான அடிப்படை யை உருவாக்கிக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை பிரிகேடியர் ஜானக பெரேராவின் தலைமையில் 53-வது படையணி பலாலி வசாவிளான் பாது காப்பு வளையத்திலிருந்து கிழக்கு நோக்கி நகர்ந்து புத்தூர் பகுதியையும் யாழ்ப்பாண வீதியின் ஒரு பகுதியையும் கைப்பற்றியது. இதன்போது சுமார் 300 எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன் அவ்வமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்த நாவற்குழி, அச்சுவேலி மற்றும் தோப்பு பகுதிகளை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர்.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்திலிருந்து எல்.ரி.ரி.ஈ-யினரை விரட்டியடிக்கும் நோக்கில் 1995-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17-ஆம் திகதி 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை மூன்று கட்டங்களைக் கொண்டிருந்தது. பலாலி விமான தளத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட முதற்கட்டம் 50 நாட்கள் இடம்பெற்றன. நீல் டயஸ், பி.ஏ. கருணாதிலக மற்றும் ஜானக பெரேரா ஆகிய மூன்று பிரிகேடியர்களின் கீழ் முறையே 51, 52 மற்றும் 53-ஆவது படையணிகள் துருப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டதுடன் ஜெனரல் ரொஹான் தலுவத்த இந்த நடவடிக்கையை அருகிலிருந்து மேற்பார்வை செய்தார். ராணுவம் முன்னேறுவதைத் தடுக்க எல்.ரி.ரி.ஈயினர் பல முனைகளில் பதிலடி கொடுக்க வேண்டியிருந்ததுடன் அது அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கவில்லை.

76 அரசாங்க படையினர் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தபோது, மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருந்த எல்.ரீ.ரீ.ஈ இயக்கம் பாதுகாப்புப் படையினரின் கவனத்தை திசை திருப்பவும், அரசாங்கத்தின் பொருளாதார பலத்தை அழிப்பதற்காகவும் 1995 ஒக்ரோபர் 20 அன்று, தனது துப்பாக்கிதாரிகளைக் கொண்டு கொலன்னாவை எண்ணைத் தாங்கிகளையும் ஊறுகொடவத்தை எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தின் மீதும் தாக்குதல் நடத்தி பெரும் நாசத்தை ஏற்படுத்தினர். இதன் போது 21 படையினர் கொல்லப்பட்டதுடன் அயலில் வசித்தவர்கள் தற்காலிகமாக தமது இருப்பிடங்களை கைவிட நேர்ந் தது. மேலும் சுற்றுச்சூழல் மாசுபாடு போன்ற அழிவுகளுக்கு மேலதிகமாக, 40,000 டன் டீசல் மற்றும் 15,000 டன் கச்சா எண்ணெயை எரித்து நாசப்படுத்தியதுடன் கட்டடங்களை தரைமட்டமாக்கி பேரழிவு தரும் இழப்புகளை அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

77 இத்தனை தாக்குதல்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியில் ‘ரிவிரெச’ இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன் 1995 டிசம்பர் 02-ஆம் திகதி யாழ்ப்பாணம் நகரம் கைப்பற்றப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கையில் 390 பாதுகாப்புப் படையினரும் 1781 விடுதலைப் புலி உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர். இரு தரப்பிலும் ஏராளமானோர் காயமடைந்தனர். அந்த மாதத்தின் ஐந்தாம் திகதி பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனிருத்தரத்வத்தை அவர்களால் சகல இராணுவ அதிகாரிகளின் பங்குபற்றலுடன் பல ஆண்டுகளுக்குப் பிறகு யாழ்நகரில் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. இந்த வெற்றியின் உத்தியோகபூர்வ அறிவிப்பு 2019 டிசம்பர் 07-ஆம் திகதி பஹலு மஞ்சுசாவ சடங்கு முறைப்படி பிரதி அமைச்சரால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதுடன், வெற்றியைக் குறிக்கும் வகையில் பிரதி அமைச்சரை ஜெனரல் தரத்திற்கு பதவி உயர்வு செய்தார் ஜனாதிபதி.

இந்த வழியில் தனது பிடியில் இருந்து கைநழுவிய யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றுவதற்காக, எல்.ரி.ரி.ஈ அமைப்பு பல முறை முயற்சித்த போதும் கடுமையான தியாகங்களுக் கும் வலுவான முயற்சிகளுக்கும் மத்தியில், பயங்கரவாதம் இறுதியாக தோற்கடிக்கப்படும் வரை அரசாங்கத்தின் கீழ் அதைப் பாதுகாப்பாக வைத்திருக்க அரசாங்கப் படைகளால் முடிந்தது. இதே வேளை 1996 ஜனவரியில் மடு யாத்திரை பிரதேசத்திலிருந்து 3 கிலோமீற்றர் வடக்கில் இருந்த எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகளின் பண்டிவிரிச்சான் பாரிய புலி முகாமையும் மட்டக்களப்பு, வாகறை, கிளிநொச்சி மற்றும் இரணைமடு

ஆகிய பகுதிகளைச் சூழ இருந்த சுமார் 20 முகாம்களையும் இராணுவமும் விமானப்படையும் கூட்டாக மேற்கொண்ட தாக்குதல்களின் மூலம் அழித்தன.

1996 ஏப்பிரல் 19 அன்று, மேஜர் ஜெனரல் ரொஹான் தலுவத்தவின் கட்டளையின் கீழ், பாதுகாப்புப் படைகள் எல்.ரி.ரி.ஈ.யினரின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கின் எஞ்சிய பகுதிகளைக் கைப்பற்ற 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையின் இரண்டாவது கட்டத்தை ஆரம்பித்தன. எல்.ரி.ரி.ஈ.யினரின் பிடியில் இருந்து பொதுமக்களை மீட்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை 52 மற்றும் 53 ஆகிய படையணிக ளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதுடன் கிளாலி ஏரி, தென்மராட்சி மற்றும் சாவச்சேரி ஆகிய பகுதிகளைக் கைப்பற்ற முடிந்தது. ரிவிரெச இராணுவ நடவடிக்கையின் மூன்றாம் கட்டம் 1996 மே 16, அன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன்மூலம் பாதுகாப்புப் படையினரால் வடமராச்சி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளைக் கைப்பற்ற முடிந்தது. அதேவேளை, கடற்புலிகள் முகாம்களின் ஆயுதப் பொருட்களைக் கொண்டுவருவதற்கான கடல் வழி மற்றும் பயிற்சி வசதிகள் மற்றும் தொலைத்தொடர்பு நிலையங்கள் போன்றவற்றுக்கான வழிகள் அடைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தின் இழப்பு எல்.ரி.ரி.ஈ.யினருக்கும் ஈழக் கோட்பாட்டுக்கும் பலத்த அடியாக இருந்ததால், எல்.ரி.ரி.ஈ அங்கத்தவர்கள் தங்களால் இயன்ற அளவு இராணுவத் தளபாடங்களுடன் வன்னிக் காட்டுக்குள் தப்பிச் சென்று கிளிநொச்சியைத் தமது மையமாக்கிக் கொண்டனர். எல்.ரி.ரி.ஈ.யினர் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை இழந்ததோடு யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு முதல் மூன்று லட்சம் பொதுமக்களின் பிடியையும் இழந்தனர். 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையின் ஆரம்பத்தில், எல்.ரி.ரி.ஈ.யினரின் அறிவுறுத்தலின் பேரில் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மிகவும் பரிதாபகரமான வாழ்க்கையை வாழ்ந்த சுமார் 2 இலட்சம் மக்கள் புலிகளுக்கு எதிராக போராட்டம் நடத்தி, அப்போது அரசகட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் உள்ள தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிச் சென்றனர். பாதுகாப்புப் படையினர் விரைவாக அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் ஏற்பாடு செய்த னர். இதற்கிடையில், பல ஆண்டுகளாக எல்.ரி.ரி.ஈ.யினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த நிர்வாகம், நீதிமன்றங்களும், வரிவிதிப்பு நடவடிக்கைகளும் ஒழிக்கப்பட்டு, பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்ற பொது நிறுவனங்களின் பாழடைந்த கட்டடங்கள் சீரமைக்கப்பட்டு பொது நிர்வாகம் மீட்டெடுக்கப்பட்டது.

இதன்போது சுமார் 12 ஆண்டுகளாக புலி பயங்கரவாதிக ளின் முக்கிய மையமாக பராமரிக்கப்பட்டு வந்த யாழ்ப்பாண மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தையும், பிரதேசத்தையும் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்ற முடிந்தது. இந்தத் தோல்விக்குப் பிறகு, எல்.ரி.ரி.ஈ.யினர் வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளியே பொதுமக்களைக் கொல்லத் தொடங்கினர், பொருளாதார மையங்களைத் தாக்கத் தொடங்கினர். 1995 நவம்பர் மற்றும் 1996 ஜனவரியில், ஏவுகணைத் தாக்குதலின் மூலம் எம்.ஐ-17 பயணிகள் போக்குவரத்து ஹெலிகாப்டரைத் தாக்கி 102 பயணிகளைக் கொன்றனர். 1996 ஜனவரி 31 அன்று, எல்.ரி.ரி.ஈ.யினரால் 4,000 கிலோகிராம் வெடிபொருட்களைக் கொண்ட வாகனத்தில் இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகளின் மூலம் இலங்கை மத்திய வங்கியைத் தாக்கியதில் 86 பேர் கொல்லப்பட்டதோடு கிட்டத்தட்ட 1,500 பேர் காயங்களுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்டனர். மத்திய வங்கிக்கு அருகாமையில் அமைந்துள்ள செலிங்கோ, சிலோன் ஹோட்டல் நிறுவனம், எயார் லங்கா நிறுவனம் மற்றும் உலக வர்த்தக மையம் ஆகியவையும் கடுமையாக சேதமடைந்தன. அரசாங்கத்தின் முழுமையான பொருளாதார பலத்தையும் நிர்மூலமாக்குவதே இந்த தாக்குதலின் நோக்கமாக இருந்தது. அந் தளவு அழிவு எதுவும் ஏற்படாதபோதும் அரசாங்கம் ஈடு செய்ய முடியாத இழப்பைச் சந்தித்தது. இலங்கையின் வெளி யுறவு அமைச்சர் கதிர்காமர் நீண்டகாலமாக விடுத்த கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், இந்த சந்தர்ப்பத்தில் அமெரிக்கா எல்.ரி.ரி.ஈ அமைப்பை தடை செய்யப்பட்ட அமைப் பாக அறிவித்தது

80 1996 மே 01-ஆம் திகதி இராணுவத் தளபதி ஜெரி சில்வா ஓய்வு பெற்றதை அடுத்து, கூட்டு நடவடிக்கைத் தளபதி பதவியை வகித்த மேஜர் ஜெனரல் ரொஹான் தலுவத்த இராணுவத் தளபதியாகவும், மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய கூட்டு நடவடிக்கை தளபதியாகவும் நியமிக்கப்பட்டார்.

83 1996 ஜூன் 12, அன்று, வில்பத்து சரணாலயத்திற்கு அருகிலுள்ள ஒரு சிங்கள கிராமத்தை எல்.ரி.ரி.ஈ தாக்கியதில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட 14 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஜூன் 24 அன்று, கொழும்பில் இருந்து அளுத் கம செல்லும் ரயிலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு பார்சல் குண்டுகள் தெகிவளையில் வைத்து வெடித்ததில் 70 பயணிகள் கொல்லப்பட்டதோடு 500 பேர் காயமடைந்தனர்.

ஜூலை 05 அன்று, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா யாழ்ப்பாணத்தில் ஒரு தற்கொலை குண்டுதாரியின் தாக்குதலில் காயப்பட்டு தப் பித்த போதும் யாழ்ப்பாண பகுதிக்கு பொறுப்பாளராக இருந்த கேணல் ஆனந்த ஹமன்கொட உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர். 1996-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24-ஆம் திகதி மொனராகலை மாவட்டத்தில் எதிமலே என்ற சிங்களக் கிராமத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 19 பொதுமக்களும், அதே மாதம் 27-ஆம் திகதி வடமத்திய மாகாணத்தின் கெபித்திகொல்லாவ

கிராமத்திற்கு அருகிலுள்ள ஹேரத்ஹல்மில்லேவ கிரா மத்தின் மீதான தாக்குதலில் 23 சிங்களப் பொதுமக் களும் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தை இழந்த பின்னர் நிம்மதியிழந்திருந்த எல்.ரி. ரி.ஈ.யினர், பலவிதமான தாக்குதல்களை விரிவுப டுத்திக்கொண்டே தமது அமைப்பின் தலைமையகமாக தெரிவுசெய்திருந்த கிளிநொச்சியில் தமது பலத்தை நிலைநிறுத்த முயற்சித்தபோதும் முல்லைத்தீவில் உள்ள இராணுவமும் தளங்களும் கடற்படை தளங்களும் பெரும் இடையூறாக இருந்தன. அப்போது முல்லைத்தீவு முகா மானது. வவுனியாவில் 2-வது அதிரடிப்படைத் தலைமை யகத்தின் கட்டளை அதிகாரியின் கீழ் இருந்ததுடன் அதன் அமைப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் திரு கோணமலை 22-வது இராணு வக் குழுவிடம் இருந்தன. ஏனைய இராணுவத் தளங்களில் இருந்து தனிமைப்ப டுத்தப்பட்டுள்ள முல்லைத்தீவு முகாமில் ஏதேனும் அவ சர நிலைமை ஏற்பட்டால், திருகோணமலை அல்லது வவுனி யாவில் உள்ள முகாம்களில் இருந்து அங்கு உதவிக்கு செல்வது சாத்தியமில்லை. எனவே, கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான தாக்குதல் ஆரம்பிக்கப்படும் வரை முல்லைத்தீவு முகாமை தற்காலிகமாக விலக்கிக் கொள் வதே பொருத்தமாக இருக்கும் என்று புதிய தளபதி கருதி னார். ஆனால் முல்லைத்தீவு முகாமை கைவிட பாதுகாப்பு பிரதியமைச்சர் இணங்கவில்லை.

85 முல்லைத்தீவு முகாம் ஆபத்தில் இருந்தபோது, புதிய கூட்டு நடவடிக்கைத் தளபதி மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய கிளிநொச்சியைக் கைப்பற்ற ஆனையிறவிலி ருந்து தாக்குதல் நடவடிக்கைகளை தொடங்க முடிந்தது. மூன்று ஆயுதம் தாங்கிய படைப்பிரிவுகள் ஆனையிறவு படையணியுடன் இணைக்கப்பட்டதுடன், கேர்ணல் காமினி பாலசூரிய படைப்பிரிவின் தலைமைக்கட்டளை அதிகா ரியாகவும் லெப். கேணல் அருண பெரேரா மற்றும் லெப். கேணல் மனோ பெரேரா ஆகியோர் கட்டளை அதிகாரி களாகவும் நியமிக்கப்பட்டு சில பீரங்கிப் படையணிகளை ஆனையிறவில் நிறுவி இந்த நடவடிக்கைக்கு தேவை யான தளபாடங்கள் திரட்டப்பட்டன.

பாதுகாப்புப் படைகள் அத்தகைய நடவடிக்கைக்கு தயாரா கிக் கொண்டிருந்தபோது, முல்லைத்தீவு முகாம் மீது எதிர்பாராத பெரிய அளவிலான தாக்குதல் 1996 ஜூலை 16, அன்று எல்.ரி.ரி.ஈ.யினரால் மேற்கொள்ளப் பட்டது. இத்தகைய தாக்குதல் பற்றி புலனாய்வு அமைப் புகள் கூட அறிவிக்காததோடு முல்லைத்தீவு முகா முக்கு பொறுப்பான தளபதிகள் முகாமுக்கு அருகில் எல்.ரி.ரி.ஈ.யினரின் நடவடிக்கைகள் பற்றிய எந்த தடயத் தையும் அடையாளம் கண்டிருக்கவில்லை.

முல்லைத்தீவு படைப்பிரிவின் தளபதியாக கடமை யாற்றிய கேணல் லோரன்ஸ் பெர்னாண்டோ கடமை நிமித்தம் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன், அடுத்த சிரேஷ்ட அதிகாரி மேஜர் டபிள்யூ குணரத்ன விடுமுறையில் இருந்த நிலையில் 6-வது விஜயபா காலாட்படை படைப்பிரிவின் கட்டளை அதிகாரியான மேஜர் அலிபா அந்த முகாமுக்கு பொறுப்பாக இருந்தார். இவ்வாறானதொரு சூழ்நிலையில் பயன்படுத்தப்படவி ருந்த விசேட படைப் பிரிவை கடலில் இருந்து முல்லைத் தீவுக்கு அனுப்புவதற்கு பாதுகாப்புப் படையினர் செயற் பட்டதுடன், மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தலை மையில் மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக படைகள் வரும்வரை மேஜர் அலிபா துணிச்ச லுடன் போராடிக்கொண்டிருந்த போதும் மேலதிக படை களால் முல்லைத்தீவை அடைய முடியவில்லை. முல் லைத்தீவு படைப்பிரிவின் தளபதி கேணல் லோரன்ஸ் பெர்னாண்டோவுடன் படைகள் இணைந்த போதும் படைகள் முல்லைத்தீவு முகாமுக்கு தெற்கே 8 மைல் தொலைவில் உள்ள அலம்பிலேயே தரையிறங்கின. எல்.ரி.ரி.ஈ.யினரால் அப்படைகளை சுற்றிவளைக்க முடிந் தது. மேலும் அதிரடிப் படையின் தலைசிறந்த அதிகா ரியான லெப்டினென்ட் கேணல் ஃபஸ்லி லாஃபிர் இந்த மோதலின் போது கொல்லப்பட்டார். காயமடைந்தவர் களை ஏற்றிச்செல்ல வந்த உலங்குவானூர்தியில் கேர்னல் லோரன்ஸ் பெர்னாண்டோ திருகோணமலைக்குத் திரும்பிய நிலையில் முல்லைத்தீவை மீட்கும்முயற்சியை இராணுவம் கைவிடவேண்டியிருந்தது.

மீட்புப் பணிக்காக வந்த படையினர் கடல் மார்க்கமாக வெற்றிலைக்கேணி சென்று ஆனையிறவை அடைந்த அதே வேளை முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த 6-வது விஜயபா காலாட்படையணியைச் சேர்ந்த 600-க்கும் மேற்பட்ட படையினர். எல்.ரி.ரி.ஈ.யினரால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர்.முல்லைத்தீவில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் காட்டுப்பகுதி ஊடாக வெலி ஓயாவுக்கு சென்று தாக்குதலில் உயிர்தப்பினர். முல்லைத்தீவு தாக்குதலில் பீரங்கிகள் உட்பட 70 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உபகரணங்கள் எல்.ரி.ரி.ஈ.யினரால் கடத்தப்பட்டதுடன் இது இராணுவம் அடைந்த மாபெரும் தோல்வியாகும்.

எவ்வாறாயினும், கேணல் காமினி பாலசூரியவின் தலை மையின் கீழ், 2-வது அதிரடிப்படையானது, 1-வது விஜயபா காலாட் படை மற்றும் 7-வது இலங்கை சிங்கபடைப்பிரிவு மற்றும் மூன்று கவசப் படையணிகளுடன் இணைந்து பீரங்கித் தாக்குதலை அதிரடியாக மேற்கொண்டு ஆனையி றவுக்குத் தெற்கே 6 மைல் தொலைவில் பரந் தன் சந்தி கைப்பற்றப்பட்டது. பரந்தனின் பாதுகாப்பைப் பலப்ப டுத்தி அங்கிருந்து கிளிநொச்சியைக் கைப்பற்ற மேஜர் ஜெனரல் ஜானகபெரேரா தலைமையிலான விசேட படைப் பிரிவு அனுப்பப்பட்ட போதிலும், பரந்தனில் இருந்து கிளிநொச்சி வரை பாதுகாப்புப் படையினரால் திறந்த

வெளியைக் கடக்க முடியாதபடி எல்.ரி. ரி.ஈ.யினர் சிறிய குழுக்களைக் கொண்டு கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி கடுமையான தடைகளை ஏற்படுத்தினர்.

இரண்டு வார கடின முயற்சியின் பின்னரும் பரந்தனில் இருந்து முன்னேற முடியாத நிலையில், கிளிநொச்சியைக் கைப்பற்றும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மிகவும் பொருத்தமான தந்திரோபாயங்களைக் கையாள வேண்டியிருந்ததால் புதிய திட்டத்தின் படி நடவடிக்கையை மேற்கொள்வதற்காக 53-ஆவது படைப்பிரிவுக்கு பொறுப் பாக இருந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை அதிலிருந்து விடுவித்து அப்படையணிக்கு பொறுப்பாக மேஜர் ஜெனரல் நீல் டயஸ் நியமிக்கப்பட்டதுடன், ஆனையிறவின் 2-வது செயலணிக்கு பொறுப்பாக இருந்த பிரிகேடியர் வசந்த பெரேராவின் கீழ் 54-ஆவது படையணி உருவாக்கப்பட்டது. 53-ஆவது மற்றும் 54-ஆவது படைப் பிரிவுகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 'சத்ஜய' நடவடிக்கையானது, எதிரி பரந்தனில் இருந்து கிளிநொச்சிக்கு செல்லாத வகையில் எதிரியை தந்திரமாக திசைதிருப்பும் வகையில் பரந்தனில் இருந்து முல்லைத்தீவை நோக்கி ஒரு நடவடிக்கையை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இதற்காக கேணல் காமினி பாலசூரியவின் முப்படைகளுடன் காலாட்படை படையணி ஒன்று ஈடுபடுத்தப்பட்டு பரந்தனில் இருந்து கிழக்கு நோக்கி முன்னேறி முதற்கட்டமாக முரசுமோட்டையைக் கைப்பற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கடும் சமருக்குப் பின்னர் முரசுமோட்டையை இராணு வம் கைப்பற்றிய நிலையில் கிளிநொச்சியைப் பாதுகாத்து வந்த எல்.ரி.ரி.ஈ.யினர், முல்லைத்தீவை காப்பாற்ற போராடிக் கொண்டிருந்த போது, 53-ஆவது படையணியின் கொமாண்டோ படையணி பரந்தன் சந்தியின் மேற்கே ஒரு பாதுகாப்பு நிலையை அமைத்துக் கொண்டதுடன் பாதையையும் அமைத்துக் கொண்டனர். உக்கிரமான மோதல்களுக்கு மத்தியில், இப்பாதை வழியே எஞ்சிய படையினர் செப்டெம்பரில் கிளிநொச்சிக்கு நகர்ந்து மேற்குத் திசையில் இருந்து திட்டமிட்ட வகையில் தாக்குதலை விரிவுபடுத்தி 1996 செப்ரெம்பர் 30-ஆம் திகதி கிளிநொச்சியைக் கைப்பற்றுவதில் 54-ஆவது படையணி வெற்றிபெற்றது. எல்.ரி.ரி.ஈ.யினரின் தலைநகராகக் கருதப்பட்ட கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கு கட்டளையதிகாரிகளாக லெப்டினன்ட் கேர்ணல் வப்பிர விஜேவர்தன, உதேனி கெந்தராகம, ஜயம்பதி விஜேரத்ன, எச்.ஏ.என்.டி.பெரேரா, காமினி பாலசூரிய, பேர்சி பெர்னாண்டோ மற்றும் சீவலி வணிகசேகர ஆகியோர் செயற்பட்டதுடன், 54-வது படையணியின் பிரதம பதவிநிலை அதிகாரியாக கேணல் ஜயவி பெர்னாண்டோ பணியாற்றினார்.

கிளிநொச்சி வெற்றியின் பின்னர் பாதுகாப்புப் படையினருக்கு ஏற்பட்ட சாதகமான சூழ்நிலையின் காரணமாக எல்.ரி.ரி.ஈ.யினர் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தியிருந்த வன்னிப் பகுதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்த இராணுவத் தளபதி ஜெனரல் ரொஹான் தலுவத்த, 1997-ஆம் ஆண்டின் முற்பகுதியில் 53-ஆவது படைத் தளபதியாக பிரிகேடியர் வசந்த பெரேராவை நியமித்து வவுனியாவில் இருந்து மன்னாருக்கு மாற்று வழிபாதையை ஏற்படுத் தும் பணியை ஒப்படைத்தார். இதன்படி, கொமாண்டோக்கள் மற்றும் விசேட அதிரடிப் படையினருடன் முன்னெடுக்கப்பட்ட 'எடிபல' எனும் இராணுவ நடவடிக்கையில் வவுனியா-மன்னார் வீதியையும் மன்னார் - மதவாச்சி வீதியையும் திறக்க முடிந்தது.

ஏ-9 பாதை எல்.ரி.ரி.ஈ.யினரின் கட்டுப்பாட்டில் இருந்ததால், இராணுவத்தால் கைப்பற்றப்பட்டிருந்த யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற பகுதிகளுக்கும் மேலதிக துருப்புக்கள், ஆயுதங்கள், உணவு என்பவற்றை விநியோகிப்பது மட்டுமன்றி இலட்சக்கணக்கான பொதுமக்களின் தேவைகளையும் விமானம் அல்லது கடல் மார்க்கமாகவே பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. இது அரசாங்கத்தால் பொறுத்துக்கொள்ள முடியாத கடின மான சூழ்நிலையாக இருந்தது. எனவே, வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தரைவழிப் பாதையொன்றை திறக்கும் பொறுப்பு வன்னித் தளபதி மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்தனவிடம் ஒப்படைக்கப்பட்டது. 53-ஆவது படைப் பிரிவுக்குப் பொறுப்பான பிரிகேடியர் வசந்த பெரேராவையும் 55-ஆவது படைப் பிரிவுக்குப் பொறுப்பான பிரிகேடியர் சாந்த கோட்டேகொடவையும் ஈடுபடுத்தி 1997-ஆம் ஆண்டு மே மாதம் 'ஜய சிக்குராய்' இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டது. 53-ஆவது படையணி வெலிஓயாவிலிருந்தும், 55-ஆவது படையணி ஓமந்தையிலிருந்தும் முன்னேறின. அதன் போது 53-வது படையணி வேகமாக முன்னேறி ஐந்து மாதங்கள் செலவழித்து ஒக்ரோபர் மாதத்தில் நெடுங்கேணியை கைப்பற்றி, மாங்குளம் ஒட்டுசுடான் பாதையை நெருங்கியது. இந்த நடவடிக்கையில் 22 இராணுவ வீரர்களும் 25 விடுதலைப் புலி உறுப்பினர்களும் கொல்லப்பட்டதுடன் இராணுவத்தால் எல்.ரி.ரி.ஈ. யின் '19 பேஸ்' உட்பட 04 முகாம்களை அழிக்க முடிந்தது. 55-ஆவது படையணி இடைநடுவில் எதிர்கொண்ட தாக்குலின் காரணமாக மெதுவாகவே முன்னேறியிருந்தது. வன்னிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு கடற்படையும், விமானப்படையும் உதவியது. இந்த இராணுவ நடவடிக்கைகளில், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் கைப்பற்ற எல்.ரி.ரி.ஈ. யினர் தற்கொலை குண்டுதாரிகளைப் பயன்படுத்தி எதிர்த்தாக்குதல் நடத்தியபோதும் கடற்படையால் கடற்புலிகளை மூர்க்கமாக தோற்கடிக்க முடிந்தது.

வன்னிப் போர்த் தொடரின் அடுத்த கட்டமாக, பாதுகாப்புப் படையினர் கூட்டாக இணைந்து ஓலுமடு சந்

தியை கைப்பற்றியதுடன், விமானப்படை எம்.ஐ. தாக்குதல் உலங்குவானூர்தியைப் பயன்படுத்தி எல்.ரி.ரி.ஈ.க்கு சொந்தமான ஆயுதக் கிடங்கை அழித்தனர். 53-வது படையணி நெடுங்கேணியிலிருந்து இருந்து முன்னேறிக் கொண்டிருந்தபோது, ஒட்டுசுட்டான், தாண்டிக்குளம் பகுதிகளில் கடும் மோதல் வெடித் தது. தாண்டிக்குளத்தில் பாதுகாப்புப் படையினருக்குச் சொந்தமான பாதுகாப்பு கதவணை சுமார் ஆயிரம் எல்.ரீ.ரீ.ஈ உறுப்பினர்களால் தகர்க்கப்பட்டது. எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு சொந் தமான பல வாகனங்களும் ஆயுதக் களஞ்சியமும் விமானப்படையினரால் அழிக்கப்பட்டதுடன் இம்மோதலில் எல்.ரி.ரி.ஈ.யின் ஏராளமான உறுப்பினர்களும் அரசாங்க பாதுகாப்புப் படையினரும் கொல்லப்பட்டு பலர் காயமடைந்தனர். மோதல்கள் தீவிரமடைந்த நிலையில், பாதுகாப்புப் படையினர் தமது மூன்று ஆட்டிலறி பீரங்கிகளையும் போர் டாங்கியையும் எதிரிகளின் கைகளில் சிக்கவிடாமல் இருப்பதற்காக அழித்தனர். நிற்காமல் முன்னேறிய பாதுகாப்புப் படையினரின் நடமாட்டத்தை தடுக்கும் வகையில், புளியங்குளத்தை பாதுகாக்க பெரியமடுவில் எல்.ரி.ரி.ஈ.யினர் நடத்திய எதிர்த்தாக்குதலின் காரணமாக இருதரப்புகளுக்கிடையில் ஆறு மணி நேரம் நடந்த போரில் எல்.ரி.ரி.ஈ.யினர் தோற்கடிக்கப்பட்டனர்.

வன்னிப்போர் அவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே பயங்கரவாதத்தைப் பரப்பிய எல்.ரி.ரி.ஈ அரசாங்கத்தை பலவீனப்படுத்தவும், மக்களை ஒடுக்கவும் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்ததுடன் தங்களுக்கு விருப்பமற்ற அரசியல்வாதிகளை யும் கொன்றது. 1997 யூலை 13 அன்று, கொழும்பிலிருந்து வடக்கிற்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற 37 மாலுமிகளைக் கொண்ட வட கொரிய கப்பலை எல்.ரி.ரி.ஈ.யினர் கைப்பற்றியதுடன் 1997-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 09-ஆம் திகதி பொருட்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த சீனக் கப்பலை கைப்பற்றியதில் அதில் பயணம் செய்த ஏழு பேரைக் கொன்றனர். 1997-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14-ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலின் வாகனத்தரிப்பில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் பொருத்தப்பட்ட வெடிகுண்டை வெடிக்கச் செய்ததில் கொழும்பு கோட்டை சம்புத்தலோக விகாரையின் விதாரந்தெனிய சந்திரஜோதிதேரர் உட்பட 14 பேரைக் கொன்றதுடன் 35 சுற்றுலாப் பயணிகள் உட்பட 100-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அரச படையினரின் கவனத்தை வேறு பக்கம் திசைதிருப்புவதற்காக 400 கிலோகிராம் வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட ஒரு டிரக்கைப் பயன்படுத்தி உலக வர்த்தக மையம் என்றழைக்கப்படும் இலங்கை வங்கியின் 39 மாடி தலைமையகக் கட்டடத்தின் மீது 1997 ஒக்ரோபர் 15 அன்று, எல்.ரி.ரி.ஈ.யினர் தாக்குதல் நடத்தினர். இதில் 18 பேர் கொல்லப்பட்டதுடன் இலங்கையில் இராணுவப் பயிற்சியளிப்பதற்காக வந்திருந்த அமெரிக்க இராணுவத்தின் 'கிரீன் பெரெட்ஸ்' உறுப்பினர்கள் உட்பட குறைந்தது 96 பேர் காயமடைந்தனர். இதேவேளை, போர்க்கள தலைமைத்துவத்தில் மாற்றங்களை செய்த அரச பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியவை செயற்பாட்டுக் கட்டளைத் தளபதியாக நியமித்தது. மேஜர் ஜெனரல் பி.ஏ. கருணாதிலகவை அவருக்கு இரண்டாவதாக நியமிக்கப்பட்டார். 53 மற்றும் 55-வது படையணிகளுக்கும் புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டதுடன் 53-வது படையணியை வழிநடத்த பிரிகேடியர் நீல் டயஸ் மற்றும் 55-வது படையணியை வழிநடத்த பிரிகேடியர் அன்ரன் விஜேந் திர ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்த கிராமங்களைப் பாதுகாப்பதற்காக இரண்டாவது செயலணி ஈடுபடுத்தப்பட்டதுடன், அது மேஜர் ஜெனரல் பற்றிக் பெர்னாண்டோவின் கீழ் இயங்கியது.

90 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின் அடுத்த கட்டம் 1997 நவம்பர் 14, அன்று தொடங்கியது. பாதுகாப்புப் படையினர் மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் முன்னேறிச் சென்று எல்.ரி.ரி.ஈ.யினர் மீது தாக்குதல் நடத்தியதோடு மாங்குளத்தில் பல முகாம்களை அழித்தனர். எல்.ரி.ரி.ஈ.யினரின் எதிர்த்தாக்குதல்களையும் மீறி முன்னேறி வந்த இராணுவத்துக்கு ஒத்துழைக்க வந்த விமானப்படை மாங்குளம் காட்டில் அமைந்திருந்த எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் மிகப்பெரிய முகாமையும் அவர்களின் கட்டளைத் தலைமையகத்தையும் முழுமையாக அழித்தது. நவம்பர் 17 முதல் டிசம்பர் 9 வரை நடை பெற்ற இந்த இராணுவ முன்னேற்றத்தின் இறுதியில், இராணுவ நடவடிக்கைத் தலைவர்கள் மீண்டும் மாற்றப்பட்டு, 55-வது படையணியை வழிநடத்தும் பொறுப்பு பிரிகேடியர் அன்ரன் விஜேந்திரவுக்குப் பதிலாக பிரிகேடியர் சரத் பொன்சேகாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக 55-வது படைப்பிரிவு மேலதிகப் படைகளை வழங்கத் தயார்ப்படுத்தப்பட்டிருந்தது.

மாங்குளம் பாதையில் ஏற்பட்ட கடும் மோதல்களுக்குப் பின்னர் மாங்குளம் நகரின் அதிகாரத்தை அரசாங்க பாதுகாப்புப் படையினரால் கைப்பற்ற முடிந்தது. ஒக்ரோபர் 2 அன்று, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்த, மாங்குளம் நகரில் தேசியக் கொடியை ஏற்றினார். அப்போது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியின் தளபதி யாக இருந்த மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்தன இராணுவ சேவையில் இருந்து ஓய்வு பெற்றதுடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி தளபதியாக அப்போது இராணுவ புலனாய்வுக்குப் பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல நியமிக்கப்பட்டார்.

அரச பாதுகாப்புப் படையினருக்கு மிகவும் சாதகமாக நிலைமை தோன்றியிருந்த இந்த நேரத்தில், யாழ்ப்பாணம் முழுமையாக அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் பட்டிருந்தது. பாதுகாப்புப் படையினர் கிளிநொச்சி மற்றும் மாங்குளத்தை இறுக்கமான பாதுகாப்புடன் பேணிக் கொண்டு வன்னியின் பெரிய பகுதியைக் கைப்பற்றியிருந்ததோடு எல்.ரி.ரி.ஈயினரை முல்லைத்தீவு மற்றும்

வன்னியின் ஒரு சிறிய பகுதிக்குள் மட்டுப்படுத்தினர். எல்.ரி.ரி.ஈ.யினரின் அறிவிப்பின்படி, 1998-ஆம் ஆண்டளவில், அவ் அமைப்பைச் சேர்ந்த 17,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருந்ததுடன். 'ஜய சிக்குருய்' இராணுவ நடவடிக்கையின் ஆரம்ப கட்டங்களில் சுமார் 5,000 பேரை அவர்கள் இழந்தனர்.

'ஜய சிக்குருய்' இராணுவ நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தின் போது, எல்.ரி.ரி.ஈ வடக்கு மாகாணத்திலிருந்து இனி ஆட்சேர்ப்பை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியிருந்தது. எனவே, கிழக்கு மாகாணத்தின், எல்.ரி.ரி.ஈ அமைப்பின் தலைவராக இருந்த கருணாவின் ஏற்பாட் டில் அம்மாகாணத்திலிருந்தும் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டியிருந்தது. இந்த நேரத்தில், பிரபாகரனின் நெருங்கிய சகாவும் பயங்கரவாத தாக்குதல்களுக்கு தலைமை தாங்கியவருமான மாத்தையா எனப்படுகிற மகேந்திரராஜா பிரபாகரனால் படுகொலை செய்யப்பட்ட நிலையில் எல்.ரி.ரி.ஈ அமைப்பில் கருணா ஒரு வலுவான நிலையை அடைந்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்விகளை வெற்றியாக மாற்றுவதற்காக வடக்கின் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கிளிநொச்சி மற்றும் ஆனையிறவு நகரங்களைக் கைப்பற்றும் நோக்கில் பாதுகாப்பு படையினர் ஆக்கிரமித்துள்ள பிரதேசங்களை மீளக்கைப்பற்றி தமிழீழ அரசை நிறுவும் நோக்கத்தை அடைவதற்கான மூன்றாவது ஈழத்போராட்டத் தொடரின் அடுத்த கட்ட நடவடிக்கையாக 'ஓயாத அலை' நடவடிக்கையை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அப்போது மாங்குளத்தையும் கிளிநொச்சியையும் இணைக்கும் ஏ-9 வீதியை திறப்பதற்காக ஏற்கனவே வன்னியில் சண்டையிட்டு வந்த பாதுகாப்புப் படையினர் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை நிறைவு செய்துவிட்டு மீண்டும் புதிய இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்கத் தயாராக இருந்தனர்.

93 1998-ஆம் ஆண்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே பயங்கரவாதத்தை பரப்பி மக்கள் மீது நெருக்கடியை ஏற்படுத்தி அரசாங்கத்தையும் பாதுகாப்பு படையினரையும் இக்கட்டான சூழ்நிலைக் குத் தள்ளிய பல தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இலங்கையில் பௌத்தர்களின் புனித சிகரமான புத்தரின் புனிதத் தாதுப் பல்வைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீதலதா மாளிகையை 1998 ஜனவரி 25 அன்று பயங்கரவாதிகள் தாக்கினர். இதன்போது தலதா மாளிகை யின் கட்டடங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டதுடன் வழிபட வந்திருந்த 23 பேர் கொல்லப்பட்ட போதும் புனித தாதுப் பல் வைக்கப்பட்டிருந்த பகுதிக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, இலங்கை அரசு எல்.ரி.ரி.ஈ இயக்கத்தை தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவித்தது. அதற்கு இரண்டு நாட்களுக்குப் பின்னர், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட 13 இந்தியர்களும் 13 இலங்கைத் தமிழர்களும் குற்றவாளிகள் என்று இந்திய அரசால் தீர்ப்பளிக்கப்பட்டு எல்.ரி.ரி.ஈ தலைவர் பிரபாகரனை முதலாவது குற்றவாளியாக அறிவித்தது.

அதே ஆண்டு மார்ச் 15 அன்று, மருதானை புகையிரத நிலையத்திற்கு முன்னால் தனியார் பஸ் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் 31 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 235 பேர் காயமடைந்தனர். அருகிலிருந்த 61 கடைகளும், 26 வாகனங்களும் ஒரு மேம்பாலமும் சேதமடைந்தன. வெடிகுண்டு ஏற்றிய பேருந்தை போலீசாரிடம் கொண்டு செல்லும் பணி யில் ஈடுபட்டிருந்த இரண்டு போலீஸ் கான்ஸ்டபிள்களும் இதன்போது கொல்லப்பட்டனர். தமது அரசியல் எதிரிகளை தொடர்ந்தும் கொன்று குவித்து வந்த எல்.ரி.ரி.ஈ.யினரால் 1998 மே 17 அன்று, யாழ்ப்பாண மேயர் சரோஜினி யோகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டார். 1995 டிசம்பரில் பயங்கரவாதிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை விடுவித்த அரசாங்கம் படிப்படியாக அங்கு சிவில் ஆட்சியை கட்டியெழுப்பத் தொடங்கியது, 1998 மார்ச்சில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்று யாழ்ப்பாண மேயராக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட இரண்டு மாதங்களுக்குள், பயங்கரவாதிகளுக்குப் பலியானார். மேலும் அவர் 1989-இல் அதே பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் விதவை மனைவியாவார்.

1998-ஆம் ஆண்டின் இறுதியில், அரசாங்கத் தரப்பு வென்றிருந்த இந்த சாதகமான நிலை நீண்ட காலம் நீடிக்கவில்லை. கொழும்பின் அரசியல் சூழலானது பாதுகாப்புப் படையினர் தொடர்பாக ஜனாதிபதி கடைப்பிடித்து வந்த கொள்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியதன் காரணமாக இராணுவத் தலைமைத்துவத்தில் தொடர்ச்சியாக மாற்றங்கள் செய்யப்பட்டு வந்தன. மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைவராகவும், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பாதுகாப்புப் படைகளின் தளபதியாகவும் இருந்த இந்தக் காலப்பகுதியில் எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு இருந்த ஒரே சாதகமான நிலைமை 1996-இல் கைப்பற்றியிருந்த முல்லைத்தீவை அவர்கள் வசம் வைத்திருந்தது மட்டும்தான். அதே வேளை வன்னிக் காட்டில் அவ்வப்போது தம்மை ஒழுங்கமைத்துக்கொண்டிருந்த பிரபாகரன் 1998 செப்ரெம்பர் 26 அன்று 'ஓயாத அலைகள்' தொடங்கி கிளிநொச்சி இராணுவ முகாமைத் தாக்கினார்.

95 கருணா தலைமையிலான இந்த தாக்குதலில் சுமார் 1400 பயங்கரவாதிகள் பயன்படுத்தப்பட்டதுடன், 1998 செப்ரெம்பர் 28-ஆம் தேதியளவில், பாதுகாப்புப் படையினர் கிளிநொச் சியை கைவிட நேரிட்டது. எதிர்பாராத இந்த தாக்குதலில் 1000-க்கும் மேற்பட்ட அரசாங்க பாதுகாப்பு படையினரும் 420 எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களும் கொல்லப்பட்டதாக எல்.ரி.ரி.ஈ.யினரும் அறிவித்தனர். பாதுகாப்பு படையினரின் பல டாங்கிகளும், ஆர்டிலரிகளும் அழிக்கப்பட்டன. எல்.ரி.ரி.ஈ கிளிநொச்சியை இலகுவாக மீண்டும்

கைப்பற்றியதுடன், அப்பகுதிக்குப் பொறுப்பான 54-வது படைப்பிரிவில் எஞ்சியவர்கள் யாழ்ப்பாணத்திற்கு பின் வாங்கியதுடன் இந்தத் தோல்வியானது 1999 இறுதியில் அரசாங்கம் எதிர்கொண்ட வன்னிப் பின்வாங்கலின் ஆரம்பமாக இருந்தது. இந்த வெற்றியால் உற்சாகம டைந்த எல்.ரி.ரி.ஈ, ‘ஓயாதஅலை’ தாக்குதல்களை மேலும் முன்னெடுத்ததோடு மாங்குளம் பகுதியைத்தாக்கி பாது காப்புப் படையினருக்கு நெருக்கடிகளைக் கொடுத்தனர்.

கிளிநொச்சித் தாக்குதலின் பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல வன்னிய பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். மார்ச் 1999-இல், ஏ-9-க்கு மேற்கே நோக்கி வன்னிப் பகுதிகளைக் கைப்பற்று வதற்காக 'ரண கோசா' என்ற புதிய இராணுவ நடவ டிக்கையை அவர் தொடங்கினார். முல்லைத்தீவின் பாது காப்புக்காக 53 மற்றும் 55-ஆவது இராணுவப் பிரிவு களை ‘ரண கோசா’ நடவடிக்கைக்கு அழைக்க வேண்டியி ருந்தது. அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகள் பலவீன மடைந்து கொண்டிருந்த இந்த நேரத்தில், இராணுவ நட வடிக்கைகளுக்காக படைப்பிரிவுகளை அழைக்க நேரிட்ட நிலையில் எல்.ரி.ரி.ஈ அமைப்பு தமது அதிகாரத்தைப் பலப்படுத்தியிருந்த முல்லைத்தீவு பகுதியில் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப தாக்குதல்களை ஒழுங்கமைக்க அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது.

1995-1997 காலப்பகுதியில் ஜனாதிபதியுடன் இணைந்து தமிழ் மக்களுக்கு மிகவும் சாதகமாக அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை உருவாக்கியவர்களில் ஒரு வரான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் அரசி யல் தலைவர்களில் ஒருவரான நீலன் திருச்செல்வம் 1999 மே 22 அன்று எல்.ரி.ரி.ஈ. யினரால் படுகொலை செய்யப்பட்டார். மேஜர் ஜெனரல் லய னல் பலகல்லவின் கீழ் வன்னிப் பகுதியில் இராணுவத்தின் பலம் வீழ்ச்சிய டைந்த நிலையில், 1999 செப்டம்பரில் மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா வன்னியின் தளபதியாக நியமிக்கப் பட்டார். 1999-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10-ஆம் திகதி இலங்கை இராணுவம் தனது 50-ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிக் கொண்டிருந்த வேளையில், எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகள் சற்றும் எதிர்பார்த்திராத சந் தர்ப்பத்தில் கடும் மழைக்கு மத்தியில் 55 மற்றும் 56 படைப் பிரிவுகளை ஈடுபடுத்தி ‘வோட்டர் ஷெட்’ என்ற ழைக்கப்படும் புதிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டது. இதன் போது வன்னித் தளபதி மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவின் மேற்பார்வையில் 55-ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் டி.எம். பொஹரன் மற்றும் 56-ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் காமினி குணசேகர ஆகியோரின் தலைமையில் முல்லைத்தீவை நோக்கி இந்த இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. நிறுத்தாமல் முன்னேறிய இராணுவத்தை நோக்கி எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகள் 122 மி.மீ ஆர்டிலறிகள் மற்றும் 60, 81 மோட்டார்களையும் பயன்படுத்தி கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இந்நடவடிக்கைக்காக இலங்கைப் பீரங்கிப் படை மற்றும் எம்.ஐ.24 ஹெலிகாப் டர்களைப் பயன்படுத்திய விமானப்படையும் பயன்ப டுத்தி கணிசமான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. இந்த சமரில், 152-க்கும் மேற்பட்ட எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதுடன் அவர்களில் பெரும்பாலோர் பெண் களாவர். எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதல்களுக்கு மத்தியில், முன்னேறி வந்த படையினர் பயங்கரவாதிகளின் கட்டுப் பாட்டில் இருந்த 12 சதுர கிலோமீட்டர் பகுதியைக் கைப் பற்ற முடிந்தது.

அரச பாதுகாப்புப் படை தாக்குபிடிக்க முடியாமல் பரவலாக அதன் ஆட்பலம் விரவியிருந்த நிலையில் 1999 ஒக்ரோபரில், ஒரே நேரத்தில், ஒட்டுசுட்டான், கனகரா யன்குளம், நெடுங்கேணி ஆகிய இடங்களில் உள்ள இரா ணுவத்தின் பாதுகாப்பு முகாங்களை எல்.ரி.ரி.ஈ.யினர் தாக்கினர். இதன் விளைவாக, 1997 மார்ச்சிலிருந்து இரண்டரை வருடங்களுக்கும் மேலாக போராடி கைப்பற் றியிருந்த பிரதேசங்களில் இருந்து வெளி யேறி ‘ஜயசிக் குறுய்’ இராணுவ நடவடிக்கை தொடங்கிய பகுதிக்கே பாதுகாப்பு படைகள் பின்வாங்க நேரிட்டது. 'வன்னிப் பின்வாங்கல்' என்று அழைக்கப்படும் இந்தத் தோல்வி யானது, 1999 நவம்பர் 01-ஆம் திகதி இலங்கை கடற்ப டையினரின் பாதுகாப்பில் இருந்த ஒட்டுசுட்டான் பாதுகாப்பு வளையத்தின் மீது 'ஓயாத அலை 3-இன் தொடர்ச்சியான தாக்குதல்களுடன் ஆரம்பித்திருந்தது. இத்தொடர் தாக்குதல்கள் பிரபாகரனால் எல்.ரி.ரி.ஈ அமைப்பின் இராணுவப் பிரிவின் தளபதியான பால்ராஜ் ஜின் ஒத்துழைப்புடன் அவருக்கு உதவியாக மூத்த தலை வர்களான சுவர்ணம், ஜெகன், தீபன், கருணா, பானு ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர். எல்.ரி.ரி.ஈ இயக்கத் தின் சாள்ஸ் அன்ரனி படையணி, ஜெயந்தன் படை யணி, மகளிர் படையணி, கிட்டு பீரங்கிப் படையணி, விக்டர் கவசப்படைப்பிரிவு சிறுத்தை கொமோண்டோ பிரிவு என்பவற்றுடன் கரும்புலிகள் பிரிவும் இந்த நடவடிக் கையில் ஈடுபடுத்தப்பட்டன. இவ்வாறு இத்தாக்குத லை நடத்த பெரும் சக்தியைப் பயன்படுத்திய எல்.ரி.ரி.ஈ ஒட் டுசுட்டான் மட்டுமன்றி நவம்பர் 06-ஆம் திகதிக்குள் வன்னிப் பிரதேசத்தில் அமைந்துள்ள கனகராயன்குளம், நெடுங்கேணி, மாங்குளம், அம்பகாமம், ஒலுமடு, நைனா மடு, கஜபாபுர போன்ற இராணுவ தளங்களைக் கைப் பற்ற முடிந்தது. பாதுகாப்புப் படையினர் ஓமந்தை மற் றும் கஜபாபுராவுக்கு பின்வாங்க நேரிட்டது.

98 வன்னியில் பின்வாங்கிகொண்டிருந்த இராணுவத்தினரை உற்சாகமூட்டுவதற்காக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த, கூட்டுப்படைகளின் கட்டளை அதிகாரி ஜெனரல் ரொஹான் தலுவத்த, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஏ.சி.எச்.சி. திசேரா, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் வீரக்கொடி மற்றும் இராணுவத் தளபதி லெப் டினன் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய ஆகி யோர் யுத்தகளத் திற்கு விஜயம் செய்த போதிலும் பயனளிக்கவில்லை. இவ்வாறு போர்க்கள நிலை மைகள் மோசமடைந்து

வந்த நிலையில் இராணுவத்தின் உயர் பதவிகளில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி வன்னியின் தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவுக்குப் பதிலாக மேஜர் ஜெனரல் நீல் டயஸ் நிய மிக்கப்பட்டார். வன்னி பிரதேசத்தின் விசேட நடவ டிக்கை இணைப்பாளராக பிரிகேடியர் காமினி ஹெட்டி யாராச்சி நியமிக்கப்பட்டதுடன், யாழ்ப்பாண தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த மேஜர் ஜெனரல் லொகான் குண வர்தனவுக்கு பதிலாக மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க நியமிக்கப்பட்டார்.

101 1999 டிசம்பர் 18 அன்று, கொழும்பு மாநகர சபை மைதா னத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட் டத்தின் போது, எல்.ரி.ரி.ஈ இயக்கம் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க மீது தற்கொலை குண்டுதாரியைப் பயன்படுத்தி ஒரு கொடூரமான தாக்குதலை நடத்தியது. அவர் ஒரு கண்ணை இழந்த நிலையில் தனது உயிரைக் காப்பாற்றிக்கொண்ட போதும், குண்டுவெடிப்பில் 23 பேர் கொல்லப்பட்டதுடன் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் உட்பட 112 பேர் கொல்லப்பட்டு ஏராளமானோர் காயம டைந்தனர். அதே தினம், ஜாஎலவில் நடந்த ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரச் சாரக் கூட்டத்தில் எல்.ரி.ரி.ஈ இயக்கம் தற் கொலை குண் டுதாரியை ஈடுபடுத்தி மேஜர் ஜெனரல் லக்கி அல்காமா உட்பட 12 பேரைக் கொன்றதுடன் 50 பேர் காயமடைந்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த வேளையில் இடம்பெற்ற 'வன்னிப் பின்வாங்கல்' குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டதால், இதன் பின்னணியில் சதி ஏதே னும் இருக்க வாய்ப்புண்டா என்பதை ஆராய் வதற்காக ஜனா திபதி மூன்று தளபதிகளைக் கொண்ட ஒரு ஆணைக்குழுவை நியமித்தார். ஆனால் 'வன்னிப் பின்வாங்கல்' ஏதேனும் சதியின் விளைவே என்பதை நிரூபிக்க எந்த ஆதாரங்களும் கிடைக்கவில்லை.

2000-ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், 'ஓயாத அலைகள்' தொடர்தாக்குதலின் அடுத்த கட்டமாக எல்.ரி.ரி.ஈ ஆனை யிறவு முகாமையும் யாழ்ப்பாணம் செல்லும் பாதை யின் முக்கிய இடங்களையும் சூழ்ந்தனர். ஆனையிறவு முகாம் வளாகத்தில் சுமார் 5000 படையினர் நிலை நிறுத்தப்பட் டிருந்ததுடன் பரந்தன் முகாம் அதன் தெற்கு எல்லை யாக இருந்தது. அரச கட்டுப்பாட்டின் கீழ்இருந்த அடுத்த அண்மித்த முகாமாக ஓமந்தை முகாம் இருந்தது. அது பரந்தனிலிருந்து 65 கி.மீ. தெற்கே அமைந்திருந்தது. இந்த இரண்டுக்கும் இடையிலிருந்த பகுதிகளும் ஏ-9 பாதையும் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டில் சிக்கி யிருந்த நிலையில் பரந்தன், ஆனையிறவு, யாழ்ப்பா ணம் போன்ற அரசின் பிரதேசங்களைப் பாதுகாப்பதும் அவர்களுக்கு இராணுவத் தளபாடங்கள், உணவு போன் றவற்றை வழங்குவதும் மிகவும் சிரமமாக இருந்தது. பரந் தனுக்கு 10 கிலோமீற்றர் தெற்கில் அமைந்திருந்த கிளி நொச்சியும் 1998 செப்டம்பரில் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் பிடியில் இருந்த நிலையில் பாண்தான் கிழக்கு பகுதி யின் கரையோரமாக வெற்றிலைக்கேணி அரசகட்டுப் பாட்டில் இருந்த போதிலும், முல்லைத்தீவு பிரதேசம் எல்.ரி.ரி.ஈ.யின் தலைமையகமாக மாறியதால் அதைப் பாதுகாப்பது அரசாங்கத்திற்கு கடினமான பணியாக அமைந்தது.

ஆனையிறவுப் பாதையைக் கைப்பற்றத் திட்டமிட்டி ருந்த எல்.ரி.ரி.ஈயினர் ஆனையிறவுப் பாதையை மூன்று முனை களில் சுற்றிவளைத்து தாக்கினர். கிழக்கு கடல் வழியாக இராணுவத்தினரை தரையிறக்கி வெற்றிலைக் கேணியில் தாக்குதல்களை நடத்திக்கொண்டு சில நாட்கள் நீடித்த மோதலைத் தொடர்ந்து முகாமைப் பாதுகாக்க முடியாத பாதுகாப்பு படையினர் ஏ-9 வீதி யில் இயக்கச்சி சந்தி வரை எல்லையை நகர்த்திச் சென்று இயக்கச்சி முகாமை பலப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். இதற்கிடையில், தெற்கிலிருந்து ஒரு தாக் குலை முன்னெடுத்து 1999-இல் டிசம்பரில், பரந்தன் பாதுகாப்பு முனைகளின் மீது தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.மேஜர் ஏக்கநாயக்கவின் கீழ் பரந்தன் பாதுகாப்பு எல்லையைப் பாதுகாக்க மேலதிக பாதுகாப்புப் படை யினர் கோரப்பட்ட போதிலும், அந்த நேரத்தில் தமது உயிரைக் காப்பாற்றிகொள்ள படையினருக்கு உணவோ நீரோ கிடைக் காத சூழ்நிலையில் பாதுகாப்பு தளம் எல்.ரி.ரி.ஈ அமைப்பு கைப்பற்றுவதற்கு வழிவிட்டு அர சாங்கப் படைகள் பின்வாங்க வேண்டியிருந்தது.

103 யாழ்ப்பாணக் களப்பு ஊடாக பூநகரியிலிருந்து வந்த புலிப் பயங்கரவாதிகள் ஆனையிறவு முகாமின் மேற்குப் பகுதியில் தரையிறங்கி மூன்றாவது தாக்குதல் முனை யைத் தொடங்கினர். அதன்படி 2000-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ஆம் திகதி மேற்கு மற்றும் தெற்கு என முத்திசைகளில் ஆனையிறவு முகாமை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தியதுடன் வெற்றிலைக்கேணியிலிருந்து இயக்கச்சி வரையிலும், பரந்தனில் இருந்து ஆனையிறவு வரையிலும், ஆனையிறவு பாதுகாப்பு முகாம் வளாகத் திலும் கடும் சண்டை மூண்டது.

2000 ஏப்பிரல் அளவில், எல்.ரி.ரி.ஈ.யினர் ஆனையிறவு முகாமின் அனைத்து விநியோகப் பாதைகளையும் அடைத் தனர். குறிப்பாக, ஆனையிறவு முகாமின் பிரதான நீர் வழங் கல் பாதையாக இருந்த கிணறுகள் அமைந்துள்ள இயக் கச்சி பகுதி எல்.ரி.ரி.ஈ.யினரால் கைப்பற்றப் பட்டால் ஆனை யிறவு முகாமுக்கான நீர் விநியோகம் தடைபட்டது. ஆனை யிறவு தாக்குதல் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் யாழ்ப்பாணப் பாதுகாப்புக்கான படைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க ஆனையிறவு போரின் போது ஓய்வு பெற்றதுடன் மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். வடக்கில் பாது காப்பு படையினரின் நிலை மை குறித்து மேஜர் ஜெனரல் சீவலி வணிகசேகரவுக்கு ஊடாக லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால்வீரசூரியவுக்கு கிடைத்த தகவல்களின்படி, இராணுவ வீரர்களின் மன உறுதி முற்றாக சீர்குலைந்திருப்பதும், அதுபோல மனிதவளம் மற்றும் ஆயுதபலமும் மிகவும்

மோசமாக பலவீனப்பட்டிருப்பதும் உறுதிபடுத்தப்பட்டது.

அதன்படி இராணுவத்தின் மன உறுதியை பலப்படுத் தும் ஒரு நடவடிக்கையாக, யாழ்ப்பாணத்தின் பாது காப்பு நடவ டிக்கைகளை மேற்கொண்டுவந்த இராணுவ அதிகாரி களை இடமாற்றம் செய்த ஜனாதிபதி மேஜர் ஜெனரல் ஜானகபெரேராவை வடமாகாண கூட்டு இராணுவ நடவ டிக்கை தளபதியாகவும், மேஜர் ஜெனரல் சரத்பொன்சே காவை யாழ்ப்பாண பாதுகாப்பு படை களின் தளபதியா கவும் நியமித்தார். ஆனையிறவுப் போரின் போது தேவைப் பட்டால் பின்வாங்குவதற்கான முறையான திட்டம் எதுவும் இல்லாதிருந்ததுடன் கடைசி தருணத்தில் வந்த மேஜர் ஜெனரல்ஜானகபெரேரா, அம்முகாமுக்குப் பொறுப்பான படையணித் தளபதி மேஜர் ஜெனரல் எகொடவெலவுக்கு பின்வாங்குவதற்கான அறிவுறுத்தல்களை வழங்கிய போதும் அதனை நிறைவேற்றுமளவுக்கு இராணுவத்தின் மன உறுதி வீழ்ந்து முகாமும் குழப்பமான நிலையில் காணப்பட்டது. மேஜர்ஜெனரல் ஜானக பெரேரா முகாமில் இருந்த கனரக ஆயுதங்களையும் 120 மி.மீ. மோட்டார் ஆயுதங்கள் பதினொன்றை வெடிபொருட்களைக் கொண்டு அழிக்குமாறு மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா விசேட பணிப்புரைகளை வழங்கிய போதிலும், அவை ஏற்கனவே முகமாலைக்கு கொண்டுசெல்வது ஆரம்பிக்கப்பட்டி ருந்தது. இடைநடுவழியில் அவற்றின்மீது தாக்குதல் தொடுத்த எல்.ரி.ரி.ஈ.யினர் அவை அனைத்தையும் கைப் பற்றினர்.

பின்வாங்கல் ஆரம்பிக்கப்பட்ட 2000 ஏப்பிரல் 20 அன்று, படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் எகொடவெல ஒரு டாங் கியில் ஏறி முகமாலைக்கு செல்ல முடிந்தபோதும் அவருக்கு இரண்டாவது நிலையில் இறந்த கேர்னல் பேர்சி பெர்னான்டோ தனது துருப்புக்களுடன் அணிவ குத்துச் செல்ல முடிவு செய்ததோடு நடுவழியில் எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதலில் கொல்லப்பட்டார். 2000-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ஆம் திகதி எல்.ரி.ரி.ஈ.யினர் ஆனையிறவு முகாமைக் கைப்பற்றியதுடன் 23-ஆம் திகதி அவர்கள் அவ்வெற்றியைக் கொண்டாடினர்.

அரசாங்க பாதுகாப்புப் படைகள் ஆனையிறவு முகாம் கட்டடத் தொகுதியை கைவிட்டதையடுத்து, அதை கைப் பற்றியிருந்த எல்.ரி.ரி.ஈ.யினர் அதேவேளை யாழ்ப்பாணத் தைக் கைப்பற்றுவதற்காக துரிதகதியில் தாக்கத் தொடங் கினர். பூநகரியில் இருந்து யாழ்ப்பாணக் களப்பு ஊடாக பயணித்த எல்.ரி.ரி.ஈ குழு ஒன்று சாவகச்சேரியைத் தாக்கியது. மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவின் படை யணியின் கீழ் இருந்த அப்பகுதியின் பாதுகாப்புப் படை களை வீழ்த்தி முன்னேறிய அக்குழு சரசாலைக்கு அருகா மையை அடைய முடிந்தது. 2000 மே 5, அளவில், எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் தாக்குதல்கள் எந்தளவு கடுமையாக இருந்த போதும் இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு வெளியேற நேரிட்டால் அதை செயற்படுத்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவால் தயாரிக்கப்பட்டபின் வாங்கல் திட்டத்தை மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவால் அங்கீகரிக்கப்பட்டு இராணுவப் படையணியின் பொறுப் பதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனையிறவில் இருந்து பின்வாங்கிய பின்னர் சொரன் பத்துப்பளை முகாம் இராணுவப் பகுதியின் தெற்கு பாதுகாப்பு எல்லையாக மாறியது. எனினும், எல்.ரி.ரி.ஈ.யினர் தொடர்ந்து பீரங்கித் தாக்குதல்களை நடத்தி பாது காப்புப் படையினருக்கு கடுமையான சேதத்தை ஏற்ப டுத்தி இராணுவத்தினருக்கு கடுமையான சேதங்களை உருவாக்கினர். 2000 மே 5 அளவில், இந்த மோதல்க ளினால் பாதுகாப்புப் படையினரின் உயிரிழப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு அதிகமாக இருந்ததென்று கூறு வதாயின் படையணிகள் கலைக்கப்பட்டு, மீத முள்ள துருப்புக்கள் மற்ற படையணிகளுடன் சேர்க்கப்பட்டு படையணிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டி யிருந் தது. இந்நிலையில், பாதுகாப்பு தளங்கள் சற்று பின்னோக்கி நகர்த்தப்பட்டு முகமாலையில் நிலைநிறுத் தபட்டன.

105 எல்.ரி.ரி.ஈ வேகமாக முன்னேறிகொண்டிருந்தபோது, இலங் கை அரசாங்க பாதுகாப்புப் படைகள் வடக்கின் பிற பகு திகளில் இருந்து சுமார் 1,000 படையினரை யாழ்ப்பா ணத்திற்கு அழைத்ததுடன் யாழ் குடாநாட்டை அடைய எந்த தரை வழியும் இல்லாமல் சுமார் 30,000 துருப்புக் கள் அங்கு சிக்கினர். இந்த நிலைமையை எதிர்கொள்ள, அரசாங்கம் பிராந்திய மற்றும் பிற நாடுகளின் உதவி யை நாடியது. இதன்போது இந்திய அரசு நேரடியாக ராணுவ உதவி அளிக்க மறுத்து மனிதாபிமான உதவி களை மட்டுமே வழங்க ஒப்புக்கொண்டது. யாழ் குடா நாட்டில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டு மானால், இந்தியாக் கப்பல்களைப் பயன்படுத்தி இரா ணுவத்தை தெற்குக்கு கொண்டு செல்ல ஒப்புக்கொண் டதுடன் எல்.ரி.ரி.ஈ அமைப்புக்கு விதிக்கப்பட்ட தடையை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடித்தது.

இந்த நேரத்தில் இலங்கை அரசாங்கம் இஸ்ரேல் அர சாங்கத்துடன் உறவுகளை புதுப்பித்ததுடன், அதிநவீன இராணுவ உபகரணங்களையும் போர் விமானங்களையும் வழங்க அந்நாடு ஒப்புக்கொண்டது. ரஷ்யா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளும் ஆயுதங்களை வழங்க ஒப்புக் கொண்டன. இந்த மோசமான நிலைமையை எதிர்கொள் வதற்காக நாட்டை யுத்த நிலைக்குள் கொண்டு செல்வ தற்காக 2000 மே முற்பகுதியில், அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு ஊடாக ஜனாதிபதி பொதுப் பாது காப்புச் சட்டத்தை புதுப்பித்ததோடு பொலிசுக்கும் பாது காப்புப் படைகளுக்கும் பரந்த அதிகாரங்களை வழங் கினார். வேலை நிறுத்தங்கள் தடை செய்யப்பட்டு செய் தித் தணிக்கை விதிக்கப்பட்டது. இராணுவ நடவடிக்கை களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நிதி ஒதுக்கீ டுகளை பெற்றுக்கொள்வதற்காக, மூன்று மாதகாலத் திற்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை இடைநிறுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டது. இராணுவ வீரர்களின் மனவுறு தியை பலப்படுத்துவதற்காக அவர்களுக்கு நினைவு

செலுத்தும் ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டதுடன் போர் குறித்து பொதுமக்களின் கவனத்தை மேலும் ஈர்க்க அரசாங்கம் 2000 ஜூன் 7-ஆம் திகதியை தேசிய போர் வீரர்கள் தினமாக அறிவித்தது. இது தொடர்பான உத்தியோகபூர்வ நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தீவு முழுவதும் பிரதேச மட்டத்திலான பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அவ்வாறு இரத்மலானை பகுதியில் நடத்தப்பட்ட ஒரு பேரணியில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கிளமென்ட் வி. குணரத்னவும் அவரின் மனைவி உள்ளிட்ட பலர் எல்.ரி.ரி.ஈ குண்டுதாரியால் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில், எல்.ரி.ரி.ஈ.யுடன் சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக அனுசரணை செய்யக்கூடிய மூன்றாவது தரப்பினரை ஈடுபடுத்த இலங்கை அரசு பல நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தது. எல்.ரி.ரி.ஈ.யின் ஒப்புதலுடன் இப்பணியை நிறைவேற்ற முன்வந்த நோர்வே அரசு தனது வெளியுறவு அமைச்சர் குனுத் வொல்லேபேக் மூலம் 2000 பிப்ரவரியில் இலங்கை அரசுக்கு அம்முடிவை தெரிவித்தது. ஜனவரி 5, 2000 அன்று, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவை ஒரு தற்கொலை குண்டுதாரியைப் பயன்படுத்தி படுகொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது. ஆனால் குண்டுதாரியுடன் மேலும் 12 பேர் பிரதமர் அலுவலகத்திற்கு முன்னால் கொல்லப்பட்டனர். அதேநாள் மாலை, இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரியால் கொல்லப்பட்டார். அதேஆண்டு மார்ச் மாதம் கொழும்பு ராஜகிரியில் மூன்று துப்பாக்கிதாரிகளால் 20 பேரும் மே மாதம், மட்டக்களப்பு மங்களராம விகாரையின் வெசாக் தோரணை பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 16 பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

110 யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் முன்னேறிய எல்.ரி.ரி.ஈ.யினர் அரியாலை மற்றும் தச்சந்தோப்பு பகுதிகளுக்குள் நுழைந்து தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியதில் இராணுவத்தின் மன உறுதி மேலும் சீர்குலைந்திருந்த நிலையில் 52-வது படைப்பிரிவின் கட்டுப்பாட்டில் இருந்த சாவகச்சேரி பகுதியை எல்.ரி.ரி.ஈ.யினரால் அதிக சிரமமின்றி கைப்பற்ற முடிந்தது. அத்தோடு பின்னர் தென்மராட்சி பகுதியை மேற்கில் இருந்து தாக்கி அரியாலையில் இருந்து முன்னேறிய எல்.ரி.ரி.ஈ.யினர் யாழ்ப்பாண நகருக்கு மிக அருகில் இருந்த கொழும்புத்துறை வரை முன்னேறினர். கொழும்புத்துறை எதிரியிடம் வீழ்ந்தால் முகமாலை பகுதியில் உள்ள படையினர் சுற்றிவளைக்கப்படும் அபாயம் இருந்ததால் மேஜர் ஜெனரல் சீவலி வாணிகசேகரவால் கொலம்புத்துறையின் பாதுகாப்பை பலப்படுத்த கேணல் ஜகத் டயஸ்ஸை ஈடுபடுத்தினார். எல்.ரி.ரி.ஈ.யினரின் முன்னேற்றம் அவரால் தடுக்கப்பட்டது.

சரசாலையிலிருந்து யாழ் குடாநாட்டு உட்பகுதியை அடைவதற்கு பல வழிகள் இருந்ததால் இது மிக முக்கியமான மையமாக இருந்தது. சரசாலையை அண்மித்து முன்னேறிக்கொண்டிருந்த எல்.ரி.ரி.ஈ.யினரை தடுத்து சரசாலையை பாதுகாப்பதற்காக மேஜர் ஜெனரல் வணிகசேகரவால் கேர்னல் சுமேத பெரேரா அனுப்பப்பட்டதுடன் மேலதிகப் படையணியும் அனுப்பப்பட்டது. நிலைமை இவ்வாறு இருந்த போதிலும், யுத்த களத்திற்கு வந்த பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தை, நிலைமையை விளக்கி இலங்கை இராணுவத்தால் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒருபோதும் பின்வாங்க முடியாது என படையினருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் விளக்கினார். முப்படைகளின் தளபதிகளும், நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தளபதிகளும் போர்க்களத்திற்கு வந்து, இராணுவ வீரர்களுக்கு ஊக்கமளித்து பயங்கரவாதத்துக்கு எதிரான அரச நடவடிக்கைகளுக்கு புத்துயிர் கொடுத்தனர். இதேவேளை, இலங்கை அரசாங்கத்திற்கு வாக்குறுதியளித்தபடி பாகிஸ்தானில் இருந்து அனுப்பப்பட்ட பல்குழல் ஏவுகணை லாஞ்சர்கள் உட்பட இராணுவ தளபாட உதவிகளின் ஒரு தொகுதி 2001 மே 15 அன்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

அதே ஆயுதங்களைப் பயன்படுத்தி, அச்சமரில் பதிலடி கொடுத்து பாதுகாப்புப் படையினர் சரசாலையை வெற்றி கொண்டனர். தீர்க்கமான சரசாலை சமரில் வெற்றி கண்டு எல்.ரி.ரி.ஈயின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முடிந்ததுடன் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் எஞ்சிய பகுதிகள் படிப்படியாக அரச படைகளிடம் வீழ்ந்தன. 2000 செப்ரெம்பர் முதல் 2001 மார்ச் வரை, 'ரிவிகிரன' மற்றும் 'கினிஹிர' என்ற பெயரில் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளின் மூலம் பாதுகாப்புப் படைகள் இழந்திருந்த சாவகச்சேரி, தச்சன்தோப்பு மற்றும் அரியாலை ஆகியனவற்றை மீண்டும் கைப்பற்ற முடிந்தது. அரசாங்க பாதுகாப்புப் படைகள் முகமாலை மற்றும் ஆனையிறவு இடையேயான பிரதேசத்தை கைப்பற்றுவதற்கான 'அக்னிகீல' இராணுவ நடவடிக்கை 2001 ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது, ஆனால் அது தோல்வியில் முடிந்தது. அதன்படி, முகமாலை முதல் நாகர்கோவில் வரையான வரிசையான அரசாங்க பாதுகாப்பு முகாம்கள் எல்.ரி.ரி.ஈ மற்றும் அரசாங்கம் வசமுள்ள பகுதிகளின் எல்லையாக மாறியது. இந்தச் சூழ்நிலையில், பூநகரியிலிருந்து சாவகச்சேரிக்குள் நுழைந்து அங்கேயே நிலைகொண்டு அரசாங்கப் படைகளுடன் சமர் செய்துகொண்டிருந்த எல்.ரி.ரி.ஈ அணியினருக்கு தேவையான உணவு, நீர் மற்றும் பிற பொருட்களை விநியோகிப்பதில் எல்.ரி.ரி.ஈ அமைப்பு ஒரு கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டது.

இதுவரை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டின் தெற்கு எல்லையாக இருந்த முகமாலை-நாகர்கோவில் படைமுகாம் தொகுதிகளில் இருந்து தெற்கு வன்னிப் பிரதேசத்தில் உள்ள மாங்குளம் வரையான பிரதேசத்தை அரசாங்கப் படைகள் இழந்தபோது, எல்.ரி.ரி.ஈ அமைப்பு அந்த கடினமான சூழ்நிலையில் இருந்து மீள முடிந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்ந்த பொது

மக்களுக்கும் துருப்புக்களுக்கும் தேவையான அத்தியா வசியப் பொருட்களை விநியோகிப்பதற்கான தரைவழிப் பாதை இல்லாததோடு அவை அனைத்தையும் விமானம் மற்றும் கடல் மார்க்கமாகவே கொண்டு செல்ல வேண்டி யிருந்தது.

113 நிலைமை இவ்வாறிருந்த நிலையில், 2001 ஜுலை 21 இரவு, எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதிகள் கொழும்பில் உள்ள கட்டுநாயக்க விமானப்படை தளம் மற்றும் அருகிலுள்ள சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு வளையத் திற்குள் நுழைந்து அவற்றின் மீது தாக்குதல் நடத்தி, எட்டு விமானப்படை விமானங்களையும் ஸ்ரீலங்கன் ஏர் லைன்ஸுக்குச் சொந்தமான மூன்று பயணிகள் விமா னங்களையும் அழித்தனர். அங்கிருந்த கமாண்டோ படை யினர் அப் பயங்கரவாதிகளை கொன்று சர்வதேச விமானநி லையத்தினை மீண்டும் மீட்டனர். இந்த தாக்குதல் நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் சவாலாக அமைந்தது.

2001 செப்ரெம்பர் 11, அன்று அல்-கொய்தா பயங்கரவா திகள் அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள உலக வர்த்தக மையத்தின் மீது நடத்திய மோசமான தாக்கு தலின் காரண மாக முழு உலகமும் பயங்கரவாதத்தின் மீது கவனம் செலுத்திய நிலையில் உலகின் மிக சக்தி வாய்ந்த பயங்கரவாத சக்தியாக அறியப்பட்ட அதே நேரம் வடக்கில் அரசாங்க பாதுகாப்புப் படைகளின் பதி லடிகளால், குறிப்பாக ஆளணி பற்றாக்குறையால் பலவீ னப்பட்டிருந்த எல்.ரி.ரி.ஈயினர் அரசாங்கத்துடன் கட்டா யமாக சமாதானத்தை எட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவானது.

2001 டிசம்பர் 05-ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் எதிரெதிரான இரண்டு அரசியல் கட்சி களின் தலைவர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிக ளுக்கு நியமிக்கப்பட்ட போதிலும், பிரிவினைவாத பிரச் சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பது இரு கட்சிகளினதும் கொள்கையாகும் என்பது பிரகட னப்படுத்தப்பட்டிருந்தது. எனவே, எந்த சிக்கலுமின்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எல்.ரி.ரி.ஈயுடன் போர் நிறுத்த ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

116 எல்.ரி.ரி.ஈ இயக்கம் அரசுடனான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்காக 2001 டிசம்பர் 24, அன்று ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்தத்தை அறிவித்ததுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் போது வெளிநாட்டு மத்தியஸ் தத்தை பங்கேற்க வைக்க தமது சம்மதித்த அவ் அமைப்பு பேச்சுவார்த்தைகளின் ஆரம்பத்தில் நோர்வே பிரதிநிதிகளின் அனுசரணையை ஏற்றுக்கொள்வதற்கும் இணக்கம் தெரிவித்தது. இதன்போது இலங்கை அர சாங்கம் நோர்வே அரசாங்கத்தை இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் அனுசரணையாள ராக ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்ட போதும் நிபந் தனையின்றி, எல்.ரி.ரி.ஈ அமைப்புடன் பேச்சுவார்த்தை யைத் தொடங்க அரசாங்கம் ஒப்புக் கொள்ளவில்லை. எல்.ரி.ரி.ஈ அமைப்பு எதிர்பார்த்தபடி அவ் அமைப்பின் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க அரசு ஒப்புக் கொள் ளவில்லை. எல்.ரி.ரி.ஈ அமைப்பின் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னர் பல நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன. அந்த நிபந் தனைகளைப் பற்றி பொருட்படுத்தாத எல்.ரி.ரி.ஈ இயக்கம் போர் நிறுத்தத்தை தொடர்ந்தது. அவ் அமைப்பு மீண்டும் தனது இராணுவ பலத்தை அதிகரிக்க போர் நிறுத்தத்தை பயன்படுத்துகிறது என்று சந்தேகித்த அரசாங்கம் அது குறித்து கவனம் செலுத்தியது. இக்காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இரு தரப்பினருக்கும் இடை யில் ஒரு சில சிறிய மோதல்கள் மாத்திரமே இடம்பெற்றன.

அரசாங்கத்திற்கும் எல்.ரி.ரி.ஈ.யினருக்கும் இடையில் சமாதா னத்தைக் கொண்டுவருவதில் நோர்வே அரசாங்கத்தை அனுசரணையாளராக ஏற்றுக்கொள்ள இரு தரப்பினரும் விருப்பம் கொண்டிருந்த நிலையில், உத்தேச உடன்படிக் கையைத் தயாரிப்பதிலும் அது கைச்சாத்திடுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதிலும் கொழும்பில் உள்ள நோர்வே தூதுவர் ஜோன்வெபோக் பெரும் பங்காற் றினார். இப்பணிகளில் நோர்வே அரசாங்கத்தின் ஆலோ சகராக பாராளுமன்ற உறுப்பினர் எரிக்சுல்ஹெய்ம் நியமிக் கப்பட்டார். நோர்வே அரசாங்கதின் மத்தியத்துவத்துடன் 2020 பெப்ரவரி 2-ஆம் திகதி பிரதமர் ரணில் விக்ரம சிங்க மற்றும் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் ஆகியோருக்கிடையிலான புரிந்து ணர்வு ஒப்பந்தத்தில் (போர் நிறுத்த ஒப்பந்தம்) கையெ ழுத்திடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2002 ஏப்ரல் 10 அன்று கிளிநொச்சியில் பிரபாகரன் மற்றும் அன்டன் பாலசிங்கம் ஆகி யோரின் தலைமையில் ஒரு சர்வதேச பத் திரிகையாளர் மாநாடு நடத்தப்பட்டதுடன் இலங்கை அர சாங்கத்துடன் பேச்சுவார்த் தை நடத்துவதற்கான சட்ட ரீதியான வழிகளை அனுமதிக்கும் வகையில் எல்.ரி.ரி.ஈ மீதான தடை நீக்கப்பட்டது.

நான்கு விடயங்களை உள்ளடக்கிய இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கை அரசுக்கும் எல்.ரி.ரி.ஈ-க்கும் இடை யிலான மோதலை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டது. போர் நிறுத்தத்தின் முதல் பகுதியில், நாட்டின் பிரதேசங்கள் மற்றும் நாடு முழு வதும் உள்ள நாட்டின் கடலோரப் பகுதிகளைக் கட்டுப் படுத்துதல், இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ஆயுத ரீதியிலான தாக்குதல்கள் ஆகியவை அடங்கும். இரண் டாவதாக, நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக் கையாக, பொதுமக்கள் அச்சமின்றி வாழ வாய்ப்பை ஏற் படுத்துவதற்காக அவர்களின் வாழ்நிலையை மேம்ப டுத்த, அரசும், எல்.ரி.ரி.ஈ இயக்கமும் குறுகிய காலத்தில் செயற்படவேண்டியவற்றையும், மூன்றாவதாக யுத்த நிறுத்த உடன்படிக்கை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்

பதை கண்காணிக்க சர்வதேச கண்காணிப்புக் குழு வொன்றை நியமிப்பது தொடர்பாகவும் கையெழுத்திட்ட இரு தரப்பினரின் ஒப்பந்தமும் ஆவணப்படுத்தப்பட்டது. இந்த கண்காணிப்புக் குழுவில் நோர்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய நோர்டிக் நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழுவுக்கு நோர்வே தலைமை வகித்தது. ஒப்பந்தத்தைத் திருத்துவதற்கு அல்லது திரும்பப் பெறுவதற்கு கட்சிகள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஒப்பந்தத்தின் கடைசிப் பகுதியில் குறிப்பிடப்பட்டிருந்தன.

117 போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி நிரந்தர அமைதியை ஏற்படுத்த 2002 செப்ரெம்பர் முதல் 2003 மார்ச் வரை ஆறு சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. 2002 செப்ரெம்பர் 16 முதல் 18 வரை தாய்லாந்தின் பாங்கொக்கில் உள்ள ரோஸ் கார்டன் ஹோட்டலில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது, யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், உயர் பாது காப்பு வலயங்கள் மற்றும் மனிதாபிமான பிரச்சினைகள், வடகிழக்கில் வாழும் மக்களின் மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக பணியாற்றுவதற் காக இரு தரப்பினரின் பிரதிநிதிகளைக் கொண்ட இரண்டு செயலணிகள் அமைக்கப்பட்டன.

பேச்சுவார்த்தைகளின் போது தீர்க்கப்படவேண்டிய விடயங்களை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக 2002 ஒக்ரோபர் 31 முதல் 2002 நவம்பர் 3 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது மூன்று உப குழுக்கள் நியமிக்கப்பட்டன. இந்த குழுக்களில், எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் யாழ் குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது தொடர்பிலான அறிக்கையை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு மீது எல்.ரி.ரி.ஈ அமைப்பு அதிக கவனம் செலுத்தியது. இந்த விவகாரம் சர்ச்சைக் குரியதானதை அடுத்து, அப்போதைய வடக்கு தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் இந்த விடயம் தொடர்பான சிறப்பு அறிக்கையைத் தயாரிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. ஆனால் எல்.ரி.ரி.ஈ இயக்கம் அவரது அறிக்கையை நிராகரித்த நிலையில் சுயாதீன நிபுணர் அறிக்கையை வழங்குமாறு இந்தியாவின் மேஜர் ஜெனரல் சதீஷ்காம்பியாரிடம் அப்பணி ஒப்படைக்கப் பட்டது. அவரது அறிக்கை மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் அறிக்கையை பெரிதும் ஒத்திருந்ததால், அதையும் நிராகரித்த எல்.ரி.ரி.ஈ அமைப்பு அது சம்பந்தப்பட்ட உப குழுவிலிருந்து விலகியது.

இதற்கிடையில், 2002 நவம்பர் 25, அன்று, இலங்கை அரசாங்கம், எல்.ரி.ரி.ஈ உட்பட சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நோர்வேயின் ஒஸ்லோவில் தொடங்கியது. 37 நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு 70 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க இணக்கம் தெரிவித்தனர். 2002 டிசம்பர் 2 முதல் 5 வரை நோர்வேயின் ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது, எல்.ரி.ரி.ஈ.யினர் பிரிவினைவாத நிலைப்பாட்டிலிருந்து விலகி உள்ளக சுயாட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு தீர்வை நோக்கி நகர உறுதியளித்ததாக அறிவிக்கப்பட்டது. இது ‘ஒஸ்லோ உடன்படிக்கை’ என்று அறியப்பட்ட இந்த மாநாட்டு அறிக்கை பெரும் பிரபல்யத்தைப் பெற்றதுடன் அது பரவலான உரையாடலுக்கும் சர்வதேச பாராட்டையும் பெற்றது. ஆனால் இந்த பேச்சுவார்த்தை சுற்றுகளின் இறுதி வரை, ஒஸ்லோ பிரகடனத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தபடி ஒரு அரசியலமைப்பு முறையை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.

நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2003 ஜனவரி 06 முதல் 09 வரை தாய்லாந்து, பாங்கொக்கில் உள்ள ரோஸ் கார்டன் ஹோட்டலில் நடைபெற்றதுடன் கடந்த நவம்பரில் இலங்கையின் மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்காக வாக்குறுதியளிக்கப்பட்ட 70 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்துவதற்கான முகாமைத்துவ கட்டமைப்பை உருவாக்குவது மீது விசேட கவனம் செலுத்தப்பட்டது. அது குறித்த நீண்ட விவாதத்தின் பின்னர் உலக வங்கியினால் நிர்வகிக்கப்படும் 'வடக்கு கிழக்கு புனரமைப்பு நிதிய’த்திடம் அந்த நிதி வழங்கப்பட்டு போரினால் சேதமடைந்த உள்கட்டமைப்புகளை விரைவில் சீரமைக்க முடிவு செய்யப்பட்டது.

ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2003 பெப்ரவரி 07 மற்றும் 08-ஆம் திகதிகளில் ஜேர்மனியின் பேர்லின் நகரத்தில் நடைபெற்றதுடன், ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அவ்வாண்டு மார்ச் 18 முதல் 21 வரை ஜப்பானின் ஹர்கோன் நகரத்தில் நடைபெற்றன. ஆனால் அதற்குள் இலங்கை அரசுக்கும் எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கும் இடையே மீண்டும் சில கருத்து வேறுபாடுகள் தோன்றின. குறிப்பாக எல்.ரி.ரி.ஈ இயக்கம் வழக்கம் போல், போர் நிறுத்தத்தை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு அவ்வமைப்பின் ஆயுத பலத்தையும் ஆள் பலத்தையும் அதிகரித்துக் கொள்வதற்கான பணிகளில் ஈடுபட்டதனால் இச்சர்ச்சைகளுக்கு வழிவகுத்தன. 2003 பெப்ரவரியில், கடத்தல் பொருட்களை ஏற்றிச் சென்ற எல்.ரி.ரி.ஈ-க்கு சொந்தமான சில சிறிய படகுகளை இலங்கை கடற்படை மூழ்கடித்ததுடன் அதே ஆண்டு மார்ச் 10 அன்று, இலங்கையின் வடகிழக்கு கடற்பரப்பில் பாதுகாப்பு சேவை யில் இருந்த அரசாங்க கடற்படை, அங்கு பயணித்த ஒரு சந்தேகத்திற்கிடமான படகை பின்தொடர்ந்து சென்று அழித்தது. 'கொய்மார்' என்கிற பெயர் கொண்ட அக் கப்பலின் மூலம் வடக்கில் உள்ள எல்.ரி.ரி.ஈ இயக்கத் தளங்களுக்கு ஆயுதங்களைக் கொண்டு வந்திருப்பது உறுதிப் படுத்தப்பட்டது.

118 இதற்கிடையில், எல்.ரி.ரி.ஈ சிறுவர் போராளிகளை ஆட் சேர்ப்பு செய்வதாகவும் கடுமையாக குற்றம் சாட்டப் பட்டது. 2002 பெப்ரவரியில் யுத்த நிறுத்த உடன்படிக்கை

கைச்சாத்திடப்பட்டதிலிருந்து 3516 சிறுவர் போராளிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவனத் திடம் தரவுகள் இருந்தன. எல்.ரீ.ரீ.ஈ இயக்கம் தொடர்ச் சியாக யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறி வந்துள்ள தாக இலங்கை கண்காணிப்புப் குழு சாட்சியமளித்த துடன் எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்துக்கு எதிரான ஏனைய தமிழ் அமைப்புக்களின் உறுப்பினர்கள் கொல்லப்படுவதும் தொடர்ச்சியாக நிகழ்ந்தது. இந்த நிலையில், பெர்லின், ஜெர்மனி மற்றும் ஜப்பானில் இடம்பெற்ற பேச்சுவார்த் தைகள் இறுதித் தீர்வுகளின்றி நிறைவடைந்ததுடன் 2003 ஏப்ரல் 21, அன்று, எல்.ரி.ரி.ஈ இயக்கத்தினர் ஒருதலைப் பட்சமாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகினர், ஆனால் போர் நிறுத்தத்திலிருந்து விலக வில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதே சங்களை எல்.ரி.ரி.ஈ இயக்கத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் எதிர்பார்ப்பில், அவ்வமைப்பு வடக்கு மற்றும் கிழக்கு ஒன்றிணைக்கப்பட்ட அதிகார அலகுக் கான ஒரு இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்திக் கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்துடன் கடிதப்பரி மாற்றங்களை செய்துகொண்டிருந்தது. அதற்கமைய 2003 ஜூன் 17-ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரச தலைவர்களால் தயாரிக்கப்பட்ட யோசனை நோர்வே தூதரகத்துக்கு ஊடாக வன்னியிலி ருந்த எல்.ரி.ரி.ஈ இயக்கத் தலைமையகத்திற்கு அனுப் பப்பட்டது. குறிப்பிட்ட இடைக்காலத்தினுள் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கையின் வடகிழக்கு மாகாணத் திற்கு முழுமையான அரச அதிகாரங்களுடன் கூடிய ஓர் அதிகார சபையை ஸ்தாபிப்பதே இந்த பரிந்துரையின் நோக்கமாகும். ஏறத்தாழ முழு 'வடகிழக்கு அரச அதிகா ரமும் எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு மாற்றப்படும் அளவிற்கு பரந்த அதிகாரப் பகிர்வை உள்ளடக்கிய இந்த முன் மொழிவு அவ்வமைப்பினால் நிராகரிக்கப்பட்டது.

119 பெயரளவில் மாத்திரம் யுத்த நிறுத்தத்தைப் பேணிக் கொண்டே சமாதான முயற்சிகள் தொடர்பில் மிகவும் இறுக்கமான கொள்கையைப் பின்பற்றி வந்த எல்.ரி.ரி.ஈ இயக்கத்தை விமர்சித்த இலங்கையின் சமாதான முயற் சியில் ஈடுபட்டிருந்த கிட்டத்தட்ட அனைத்து வெளிநாட்டு அரசுகளும் ஏதோ ஒரு முடிவுக்கு வர வேண்டிய அவசி யத்தைப் பற்றி எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு அழுத்தம் கொடுக் கப்பட்டது. அதற்கான எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் எதிர்வி னையின் பிரகாரம் 2003 ஓகஸ்ட் 21 இலிருந்து ஒரு வார கால விசேட மாநாடொன்று பாரிசில் நடத்தப்பட்டது. எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒரு வரான தமிழ்ச்செல்வனின் தலைமையிலான அம்மாட் டின் பிரதிநிதிகளில் ஒருவராக கருணாவும் (விநாயக மூர்த்தி முரளிதரன்) கனடா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு நெருக்கமான பிரதிநிதிகள் குழுவும் கலந்துகொண்டதுடன் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் தேவைக்கேற்ப ஒரு திட்டம் வகுக்கப்பட்டது.

120 வடகிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை' என அழைக்கப்படும் இத்திட்டம், 2003 நவம்பர் 01-ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள எல்.ரி.ரி.ஈ தலைமைய கத்தில் நடைபெற்ற ஊடக அறிக்கையின் மூலம் வெளி யிடப்பட்டது. ஊடகங்களில் 'இஸ்கா' (ISGA) என அழைக் கப்பட்ட இத்திட்டத்தின் நோக்கமானது, குறிப்பிட்ட இடைக் காலத்தில் இயங்குவதற்கு முழு அரச அதிகாரங்களைக் கொண்ட அதிகார சபையை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய நிர்வாக மாவட்டங்கள் அந்த அதி கார சபையின் அதிகார வரம்பின் கீழ்வர வேண்டும் என்றும் அத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

'இஸ்கா' அறிக்கையின் முக்கிய முன்மொழிவுகளின்படி நிறுவப்படுகின்ற அதிகாரசபையில் பெரும்பான்மையா னவர்கள் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்றும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சகல பணிகளுக்குமான அனைத்து அதிகாரங்களும் 'இஸ்கா' அதிகார சபைக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப் பிடப்பட்டிருந்தது. 'இஸ்கா' அறிக்கையை நாட்டின் முன் னணி அரசியல் கட்சிகள், தேசிய அமைப்புகள், பௌத்த அமைப்புகள் மட்டுமன்றி ஜனாதிபதியின் தலைமையி லான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கடுமையாக எதிர்த்த துடன் நாடளாவிய ரீதியில் பாத யாத்திரை, சத்தியாக்கி ரகங்கள் மற்றும் உண்ணாவிரதம் ஆகியவற்றின் மூலம் பொதுமக்கள் வெளிப்படுத்திய போது எதிர்வினையா னது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு எதிரான வலுவான மக்கள் போராட்ட வடிவமாக அமைந்தது.

இக்காலப்பகுதியில் நாட்டின் உள்ளக அரசியல் வட்டா ரத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பா டுகள் எழுந்திருந்தன. அதற்கமைய அரசியலமைப்பின் பிரகாரம் பிரதமரின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவ ருவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்ததை அடுத்து, ஆட்சி கலைக்கப்பட்டதால் 2004 ஏப்ரலில் இடம்பெற்ற பாராளுமன்றத்தேர்தலில் ஜனாதிபதியின் தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மீண்டும் ஆட் சிக்கு வந்தது. அவ்வரசாங்கக் கூட்டணியில் அங்கம் வகித்த அரசியல் கட்சிகளின் எதிர்ப்பின் காரணமாக அரசாங்கத்தின் ஆதரவைப் பெறாத இஸ்கா பரிந்துரை கள் வீழ்த்தப்பட்டன.

122 வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையின் கீழ், மட்டக் களப்பின் அப்போதைய எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் தளபதி யாகவும் முக்கிய உறுப்பினராகவும் இருந்த கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், 2004 மார்ச் 03-ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பிரபா கரன் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். கிழக்கு மாகாண எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களுக்கு பிரபாக ரனால் அநீதிகள் இழைக்கப்பட்டதாக கூறி எல்.ரி.ரி.ஈ இயக்கத்தில் இருந்து பிரிந்தார்.

123 2004 டிசம்பர் 26, சுனாமி அனர்த்த விளைவுகளை நிர்வ கிக்கும் அரசாங்கத்தின் பணியில் எல்.ரி.ரி.ஈயை ஈடுப டுத்த வெளிநாட்டு இடைத்தரகர்கள் மேற்கொண்ட முயற்சி

கள், எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் பிரிவினைவாதத்தை அமைதியான முறையில் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட கடைசி முயற்சியாகும். சுனாமி பேரிடர் புனரமைப்புப் பணிகளை முறையான நிலைக்கு கொண்டுவரும் கோரிக்கைளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அரசையும் எல்.ரி.ரி.ஈ தலைமைத்துவத்தையும் சமாதான அதிகாரிகளின் அந்தஸ்தில் இருந்து இயங்குவதற்கு வழிசமைத்த 'ஒருங்கிணைந்த பொறிமுறையை' ஸ்தாபிப்பதற்கான ஒரு திட்ட வரைவை நோர்வே அரசாங்கம் முன்வைத்தது.

இந்த வரைவின் பிரகாரம், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உச்சி மாநாட்டின் இணைத் தலைமை நாடுகளான நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், உலக வங்கி மற்றும் ஜனாதிபதி தலைமையிலான இலங்கை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவ முறைமை எனப்படும் 'பி டொம்ஸ்' என்ற பெயரில் ஒரு நிறுவனத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அதன்படி 2003 நவம்பரில் முன்வைக்கப்பட்ட இன்கா திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டபடியே அதிகாரப் பகிர்வு யோசனையை முன்மொழிந்தது. ஆனால் இன்கா அதிகாரத்தை எதிர்த்திருந்த ஜனாதிபதி, இந்த 'பிடொம்ஸ்' நிர்வாக கட்டமைப்புக்கு ஒப்புக்கொண்டார். இருப்பினும் இன்கா அதிகார சபைக்கு எதிர்த்த ஏனைய சகல சக்திகளும் 'பிடொம்ஸ்' திட்டத்திற்கு எதிராக கிளர்ந்து நின்றன.

அரசாங்கத்தாலும் எல்.ரி.ரி.ஈ இயக்கப் பிரதிநிதிகளாலும் பொதுக் கட்டமைப்பு திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட 'புரிந்துணர்வு ஒப்பந்தம்' கைச்சாத்திடப்பட்ட பின்னர், மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்றக் குழு இந்த உடன்படிக்கையின் அரசியலமைப்பு செல்லுபடித் தன்மையை கேள்விக்குள்ளாகி உயர் நீதிமன்றத்தில் ஒரு பொதுநல மனுவைத் தாக்கல் செய்தது. 2005 ஜூலை 5, அன்று, தலைமை நீதிபதி உட்பட மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, 'பி. டொம்ஸ்' புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிகள் அரசியலமைப்புக்கு உட்பட் டவை அல்ல என்று தீர்ப்பளித்ததன் விளைவாக அந்த நிர்வாக கட்டமைப்பின் அடிப்படையில் அதிகாரத்தை பகிரும் முயற்சிகள் கைவிட நேரிட்டது.

2002-ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், மூன்று வருடங்களாக போர் நிறுத்தம் நிலவியிருந்தது. மேலும் பாரதூரமான தாக்குதல்கள் எதுவும் இடம்பெறாதபோதும், எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் பலத்தை அதிகரிக்க ஆயுத இறக்குமதி, அவற்றைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளின் போது அரசாங்கப் படைகளுடனான மோதல், பாதுகாப்புப் படையினரை இலக்கு வைத்து தாக்குதல்கள், கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள், பிஸ்டல் கும்பல்களால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள், சிறுவர்களை படைக்கு சேர்த்தல், கப்பம் பெறுதல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் எல்.ரி.ரி.ஈ இயக்கம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீண்டும் மீண்டும் மீறியுள்ளதாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவும் தெரிவித்தது. அரசாங்கத்தின் சார்பிலும் இவ்வாறான மீறல்கள் இடம்பெற்றபோதும் எல்.ரி.ரி.ஈ இயக்கம் செய்த அவ்வாறான மீறல்களின் எண்ணிக்கை மிக அதிகம் என்பதை அக்குழுவின் அறிக்கைகள் வெளிப்படுத்தின. இதேவேளை, சமாதான முயற்சியை வெற்றி பெறச் செய்வதற்கு கடுமையாக உழைத்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் 2005-ஆம் ஆண்டு



ஒகஸ்ட் மாதம் 5-ஆம் திகதி எல்.ரி.ரி.ஈ இயக்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

127 ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பதவிக்காலம் சட்டரீதியாக முடிவடைந்ததன் காரணமாக 2005 நவம்பர் 17-இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மகிந்த ராஜபக்சவின் வெற்றியுடன் புதிய ஆட்சி ஆரம்பமானது.



sarawanan.n@thaiveedu.com



# வவுனியா மாவட்டத்து பிராமிக் கல்வெட்டுகள்

- நெடுங்கேணி சானுஜன்

பொதுவாக இலங்கையின் பிராமிச் சாசனத்தின் காலம் பொ.ஆ.மு. 03-ம் நூற்றாண்டு தொடக்கம் பொ.ஆ.பி. 04-ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியாகும். இக்காலப்ப குதியில் பிராமி வரிவடிவத்தினைப் பயன்படுத்தி பிராகிருத மொழியில் கல், மட்பாண்டங்கள், குகைகள், நாணயங்கள், முத்திரைகள் போன்றவற்றில் எழுதப்பட்டன. அவ்வாறான சாசனங்களில் தமிழ் மொழிக்குரிய சிறப்பெழுத்துக்களான ற, ன, ழ, ள என்பவற்றின் பயன்பாடும், தமிழக பிராமியின் சிறப் பெழுத்துக்களான ஈ, ம போன்ற எழுத்துகளும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் வவுனியா மாவட் டத்தில் காணப்படும் பிராமி கல்வெட்டுக்கள் தொடர்பாக பார்க்கும்போது வடக்குமாகாணத்தில் தற்போது உள்ள ஐந்து மாவட்டங்களில் வவுனியா மாவட்டத்தில் மட்டுமே பிரா மிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை மகாகச்சக் கொடி(04), எருப்பொத்தான(12), பெரியபுளியங்குளம்(35), நீராவிய(01), வெடுக்குநாறிமலை(02) ஆகிய இடங்களில் மொத்தமாக 54 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல் வெட்டுகள் அனைத்தும் இங்குள்ள மலைப் பகுதியில் இயற் கையாக அமைந்துள்ள கற்குகைகளில் பொறிக்கப்பட்டுள் ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களில் பிராமிக் கல்வெட்டுகள் எது வும் கிடைக்கப்பெறவில்லை. வவுனியா மாவட்டத்தில் உள்ள 54 பிராமிக் கல்வெட்டுகளில் 07 கல்வெட்டுகளில் மட்டுமே நாகர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பெரிய புளியங்குளத்தில் உள்ள 06 கல்வெட்டுக்களிலும் எருப்பொத்தானயில் உள்ள 01 கல்வெட்டிலும் நாகர்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. இதில் எருப்பொத்தான கல்வெட்டு நாக இன பெண் பக்தை பற்றிக் கூறுகின்றது.

இலங்கையில் கிடைக்கப் பெற்ற பிராமிக் கல்வெட்டுக்களில் 05 கல்வெட்டுக்களில் 'தமெத/ தமெட' எனும் சொல் பொறிக் கப்பட்டுள்ளது. இது தமிழ் என்பதன் பிராகிருத வடிவமாகும். இவற்றில் வடமாகாணத்தில் உள்ள வவுனியா மாவட்டத்தில் பெரிய புளியங்குளம் என்னும் இடத்தில் கிடைக்கப்பெற்ற 02 கல்வெட்டுக்களும், கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோண மலை மாவட்டத்தில் சேருவில என்னும் இடத்தில் கிடைக்கப் பெற்ற 01 கல்வெட்டும், கிழக்கு மாகாணத்தில் உள்ள அம் பாறை மாவட்டத்தில் குடுவில் என்னும் இடத்தில் கிடைக்கப் பெற்ற 01 கல்வெட்டும், வடமத்திய மாகாணத்தில் உள்ள அனுராதபுரத்தில் 01 கல்வெட்டும் காணப்படுகின்றன. இக் கல்வெட்டு சான்றுகள் மூலம் 2000 வருடங்களுக்கு முன்னரே இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பது உறுதியாகி றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் தமிழர் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கும், தமிழ் மொழி பேசப் பட்டுள்ளது என்பதற்கும், தமிழ் மொழியில் பரீட்சயம் பெற்ற வர்களாகவும் விளங்கினார்கள் என்பதற்கும் இக்கல்வெட்டு கள் முக்கிய சான்றுகளாக விளங்குகின்றன. இது பற்றி இலங் கையின் மூத்த வரலாற்று பேராசிரியர் சி. பத்மநாதன் அவர் கள் சில முக்கியமான குறிப்புக்களை தனது நூலில் குறிப்பிட் டுள்ளார்.

இலங்கையில் தமிழர் பற்றி கூறும் 05 பிராமிக் கல்வெட்டுக்க ளில் வவுனியா பெரிய புளியங்குளத்தில் உள்ள தமிழர் தொடர்பாகக் கூறுகின்ற 02 கல்வெட்டுக்கள் பற்றி ஆராயும் போது:

### வவுனியா பெரிய புளியங்குளம் பிராமிக் கல்வெட்டு–01

வவுனியா நகரின் வடகிழக்கில் 13 கி.மீ தொலைவில் உள்ள பெரிய புளியங்குளம் எனும் இடத்தில் உள்ள குளத்தின் அரு கில் உள்ள மலைக் குகைகளில் மொத்தமாக 35 பிராமிக்




கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் 02 கல்வெட் டுக்களில் தமிழ் எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் 'தமெதவணிஜ கபதிவிசகஹ லேன' என பொறிக் கப்பட்டுள்ளது. இதைப் பேராசிரியர் பரணவிதான 'The cave

of the householder Visakha, the Tamil Merchant' என மொழி பெயர்த்துள்ளார். இது (தமிழக) தமிழ் வணிகனான குடும்பத் தலைவன் விசாகனின் குகை எனப் பொருள்படும். இக்கல் வெட்டு Inscriptions of Ceylon-Volum 01 எனும் நூலில் 356-வது கல்வெட்டாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## வவுனியா பெரிய புளியங்குளம் பிராமி கல்வெட்டு–02

பெரிய புளியங்குளத்தில் காணப்படும் இரண்டாவது கல்வெட் டில் 'தமெதவனிஜ கபதிவிசகஹ செனிகெமே' எனப் பொறிக் கப்பட்டுள்ளது. இதை 'The work of the flight of steps is of


வெடுக்குநாறி மலை பிராமிச் சாசனம்- 01

the householder Visakha, the Tamil Merchant' என பேராசிரி யர் பரணவிதான மொழி பெயர்த்துள்ளார். இது 'தமிழ் வணிக னான குடும்பத் தலைவன் விசாகனால் படிகளில் செய்யப் பட்ட வேலை' எனப் பொருள்படுகிறது. இக் கல்வெட்டு Inscriptions of Ceylon-Volum 01 எனும் நூலில் 357-வது கல் வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஒலுமடு கிராம சேவகர் பிரிவில் உள்ள வெடுக்குநாறி மலையில் இருக்கும் பிராமிக் கல்வெட்டு தொடர்பாக நோக்கும்போது வெடுக்குநா றிமலையில் நீர் வடிவிளிம்புகள் உள்ள இரண்டு குகைகளும், நீர்வடிவிளிம்புகள் உள்ள இரண்டு சாய்வான மலைக் குன்று களும் காணப்படுகின்றன. இவற்றில் இரண்டு குகைப் பகுதி யில் நீர் வடிவிளிம்பிற்கு சற்று கீழ் பகுதியில் பிராமி எழுத்


நொச்சியடி ஐயனார் கல்வெட்டு
(நெடுங்கேணி)

துக்கள் காணப்படுகின்றன. அவை தற்போது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. அவ்வெழுத்துக்கள் பொ.ஆ.பி. 02-ம் நூற்றாண்டிற்கும் பொ.ஆ.மு. 01-ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட பிராமி எழுத்துக்களாகும். இதில் தமிழகப் பிரா மிக்குரிய சிறப்பெழுத்துக்களின் பயன்பாடுகள் காணப்படு கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வெடுக்குநாறிமலையில் இரண்டு சாசனங்கள் காணப்படுகின் றன. அதில் ஒரு சாசனத்தின் பெரும்பாலான பகுதிகள் சிதை வடைந்துள்ளன. மற்றைய சாசனம் நல்ல நிலையில் உள் ளது. இதில் ஒரு சாசனத்தில் 'மகாசமுதஹ' என்ற வசனம் தெளிவாக உள்ளது. இப்பெயரானது தென்னிந்திய வணிகக் குழு ஒன்றின் பெயராகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அழகன்குளம் என்னுமிடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் பானை ஓடுகளில் 'சமுத', 'சமுதஹ' என்ற இரண்டு பெயர்கள் காணப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Inscriptions of Ceylon-Volum 01 என்னும் நூலில் குறிப்பிடப் படாத அண்மைக்காலத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, வாசிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டு ஒன்று வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நெடுங்கேணி பிரதேசத் தில் நொச்சியடி ஐயனார் கோயில் வளாகத்தில் உள்ளது. 2014-ம் ஆண்டு நேரடியாக இந்த இடத்திற்கு வந்து ஆய்வுக ளைச் செய்திருந்த பேராசிரியர் சி. பத்மநாதன் அங்கிருக்கும் மலைக் குன்றில் இருப்பது தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் என வும் அது பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முந்தையது எனவும் தெரிவித்தார். அம்மலைக்குன்றில் சிதைந்த எழுத் துக்கள் கொண்ட கல்வெட்டு எழுதப்பட்டுள்ள இடத்தின் ஓரத் தில் புராதன தமிழ்ப் பிராமி எழுத்துகள் இருப்பதை பேராசிரி யர் சி. பத்மநாதன் சுட்டிக் காட்டினார். எழுத்துகள் இருந்த மலைக் குன்றின் ஓரத்தில் 'வேள் நாகன் மகன் வேள் கண் ணன்' என்று தமிழ்ப் பிராமி எழுத்துகள் பொளியப்பட்டிருப் பதை அவர் சுட்டிக் காட்டினார். நாகர் காலத்திலேயே தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட ஆரம்பித்திருந்த


சமுதஹ
அழகன்குளம் (தமிழ் நாடு)

தாகத் தொல்லியல் ஆய்வாளர்களும் குறித்துள்ளனர். நாகர் குலத்தைச் சேர்ந்த வர்கள் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என இக்கல்வெட்டு ஆதா ரத்தினை அடிப்படை யாகக் கொண்டு ஊகிக்க முடியும் (ஆய்வுக்குரியது).

இதன் மூலம் வவுனியா மாவட்டத்தில் ஏறத்தாள இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் ஓர் இனக் குழுவாக வும், தமிழ் மொழியினை பேசவும், எழுதவும் பரீட்சயமடைந்த ஓர் நாகரிகம் அடைந்த மக்களாகவும் இருந்துள்ளதுடன், இவர்கள் தென்னிந்தியாவுடனான வணிக நடவடிக்கைகளி லும் ஈடுபட்டு வந்துள்ளமையை இங்கு கிடைக்கப்பெற்ற பிரா மிக் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. அத்தோடு வட மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் மட்டுமே 54-ற்கும் மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் கிடைக்கப்பெற்றமை சிறப்புக்குரியதாகும்.

shanujan@thaiveedu.com



# நாதனார் கோயில் சந்தி

## த. ஜீவராஜ்

22

ஏன்? என்ற கேள்விக்குப் பதிலளிக்காமல்... 'மாதவா நாதனார் கோயில் சந்தி வந்துவிட்டது. கொஞ்சம் வண்டியை நிறுத்து' என்று கூறினாள் அறிவாட்டி. வண்டியை நிறுத்தியதும் அறிவாட்டி அவசர அவசரமாக இறங்கி வீதி ஓரத்தில் இருந்த தண்ணீர்ப் பந்தலை நோக்கி விரைந்தாள். தண்ணீர்ப் பந்தலில் பணியாற்றிக் கொண்டிருந்த பிக்குணிகளில் ஒருவர் ஆச்சரியத்தோடு அறிவாட்டியை வந்து ஆரத் தழுவிக் கொண்டார். கந்தளாயிலிருந்து ஆதினி மற்றும் கோதையுடனான தனது பயணத்தின் சுருக்கமான கதையினை அந்தப் பிக்குணியிடம் கூறிய அறிவாட்டி பின்னர் குழம்பியபடி தன்னருகில் நின்று கொண்டிருக்கும் மூவரையும் அந்தப் பிக்குணிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

மாதவர் தன்னுடைய வண்டில் மாடுகளுக்கு வைக்கோலும், தண்ணீரும் வைத்துக் கொண்டிருந்தார். அறிவாட்டிப் பாட்டியிடம் உரையாடிய பிக்குணி அவர்களுக்கு மோர் வழங்குவதற்காகப் பந்தலுக்குள் சென்றார்.

இவர் யார்? எப்படி உங்களுக்குப் பழக்கம்? என்று மெதுவாக அறிவாட்டியின் காதருகில் சென்று கேட்டாள் கோதையின் தாய்.

அவருடைய பெயர் சுந்தரி. நான் திருக்கோணேச்சரத்தில இருந்த சமயத்தில சுந்தரி கோயிலுக்கு அடிக்கடி வருவார். பூவாயிறது, பூமாலை கட்டிறது, கோயிலைச் சுத்தம் செய்கிறதில உதவிகள் செய்வார். அதுலதான் பழக்கம் என்றார் அறிவாட்டி.

அவர் பௌத்த சமயத்தவர் அல்லவா எப்படி திருக்கோணேச்சரத்திற்குத் தொண்டு செய்தார் என்று கேட்டாள் கோதை.

அப்ப சுந்தரி சைவ சமயத்தவராகத்தான் இருந்தார். அவர் காதலித்துக் கரம் பிடித்தது ஒரு பௌத்த சமயத்தவர என்றாள் சிரித்தபடி அறிவாட்டி. அவருடைய பெயர் மிந்தன் கொற்றன். வடக்குப் பக்கமாக இருக்கிற மாங்கனாய் என்ற இடத்தைச் சேர்ந்தவர். அவருடைய கணவர் விபத்தில்... என்று அறிவாட்டி சொல்லத் தொடங்கும் போதே மோரோடு வந்து சேர்ந்தார் சுந்தரி அம்மையார். மோர் அருந்தி முடிந்ததும் தண்ணீர்ப் பந்தலுக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வணக்கத்தலத்துள் அனைவரையும் சுந்தரி அம்மையார் அழைத்துச் சென்றார்.

வெள்ளைத்துணி விரிக்கப்பட்ட மேடை ஒன்றின் மீது தியான நிலையில் சிறிய புத்தர் சிலை ஒன்று இருந்தது. காலை மடித்து சம்மண நிலையில் உள்ளங்கைகள் மேல் நோக்கியபடி ஒன்றன் மீது ஒன்றாக மடி மீது இருக்க அமைதியாக அமர்ந்திருந்தார் புத்த பெருமான். அருகில் ஆள் உயர வெண்கல விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. இது யார் கொடுத்த தானம் தெரியுமா? என்று அறிவாட்டியைப் பார்த்து சுந்தரி அம்மையார் கேட்டார்.

சோழப் பிரதானிகள் போல் தெரிகிறது என்றாள் அறிவாட்டி.

ஆமா, சோழப் பிரதானி ஆதித்தப்பேரரையன் கொடுத்த தானங்களில் ஒன்று. அதோட நிறையப் பசுக்களும், எருமைகளும், காசுகளும் கொடுத்திருக்கிறார். அவர் பொறித்த கல்வெட்டும் எங்கள் ஆலய வளாகத்தில் இருக்கிறது என்றார் சுந்தரி அம்மையார்.

சோழர்கள் பௌத்த பள்ளிக்கு தானம் கொடுத்தார்களா? என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் கோதையின் தாய்.

சண்டை அரசர்களுக்கிடையிலதானே? என்று சிரித்தார் சுந்தரி அம்மையார். அந்த நேரம் எங்கள் ஆலயத்தின் பெயர் இராஜராஜ பெரும்பள்ளி என்று பெருமையோடு சொன்னார்.

சரி நான் தியானம் செய்யப் போகிறேன். உங்களிடம் இவர்கள் ஏதோ ஒன்று கேட்க வேண்டுமாம். சொல்லிக் கொண்டிருங்கள். மாதவரும், வண்டில் மாடுகளும் கொஞ்சம் ஓய்வெடுக்கட்டும் என்றபடி புத்த பகவான் முன்னால் கண் மூடி தியானத்தில் அமர்ந்தாள் அறிவாட்டி.




என்னிடமா? என்ன கேள்வி கேட்கப் போகிறீர்கள்? என்று ஆச்சரியத்தோடு குரல் தாழ்த்திக் கேட்ட சுந்தரி அம்மையார், அறிவாட்டியின் தியான நிலையை பார்த்தபடி அவர்கள் அனைவரையும் வெளியே மர நிழலுக்கு வரும்படி சைகை யால் அழைத்தார்.

அறிவாட்டிப் பாட்டி தான் சொல்ல விரும்பாத ஏதோ ஒன்றை சுந்தரி அம்மையார் வாய்மொழி மூலம் அறிந்து கொள்ளும் படி தங்களைத் தூண்டுகிறார் என்பதை ஆதினி புரிந்து கொண்டாள். ஆளப்பிறந்தாளுடன் அறிவாட்டிப் பாட்டி நட னப் போட்டியில் கலந்து கொண்டது பற்றி தாங்கள் கேள்வி

கேட்டதையும், அது தொடர்பான உரையாடல்களையும் சுந்தரி அம்மையாரிடம் ஆதினி விளக்கமாகச் சொல்லிக் கொண்டு வந்தாள். இறுதியாக கந்தளாயிலிருந்து தெரிவாகாத அறிவாட்டிப் பாட்டி எப்படி போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றினார் என்பதை சுந்தரி அம்மையாரிடம் வினாவினாள்.

ஆளப்பிறந்தாள் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டது சுந்தரி அம்மையாருக்கு மிகுந்த மன வருத்தத்தை உருவாக்கி இருக்க வேண்டும் சிறிது நேரம் கண்களை மூடி அவர் அமைதியாக இருந்தார்.

உண்மையில் கோயில் நடைமுறைகள் எனக்கு முழுமையாகத் தெரியாது. அப்போது நான் தன்னார்வமாக திருக்கோணேச்சரத்தில் சில ஆலயத் தொண்டுகளுக்கு உதவிக் கொண்டிருந்தேன். அங்கிருந்த தேவரடியார்கள் பேசிக் கொண்டதில் இருந்து அங்கு போட்டிக்காக வந்திருப்பவர்களில் ஆளப்பிறந்தாள்தான் தலைக்கோலி விருதிற்குத் தெரிவு செய்யப்படுவாள் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அது ஆளப்பிறந்தாளுக்கும் தெரியும் என்பதால், தன் திறமை மீது அதிக கர்வம் கொண்டிருந்தாள். நானும், அறிவாட்டியும் இன்னும் சிலரும் எங்களது ஓய்வு நேரங்களில் காலையிலும், மாலையிலும் திருக்கோணேச்சர யாத்திரிகர் தங்குமிட மண்டபங்களில் இடம்பெறும் நடன ஒத்திகைகளை பார்ப்பது வழக்கம்.

ஒரு நாள் மாலை வழமை போல நாங்கள் இருவரும் ஒத்திகையைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அன்று ஆளப்பிறந்தாளுக்கு விஷ்ணு சன்னதியில் நடனம் ஆட வேண்டி இருந்ததால் அவள் அந்த ஒத்திகையில் கலந்து கொள்ளவில்லை. நடனத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த அறிவாட்டி ஆடிக்கொண்டிருந்த தேவரடியார்கள் பிழை விடும்போது தானாக முன்வந்து அவற்றின் சரியான வடிவங்களை அவர்களுக்கு ஆடிக்காட்டினாள். அதிர்ஷ்டவசமாக அடுத்த இரு நாட்களும் ஏதோ காரணத்தால் ஆளப்பிறந்தாள் அந்த இடத்திற்கு வரவில்லை. அங்கிருந்த நடன ஆசிரியர்களுக்கும் அறிவாட்டியை நன்கு பிடித்து போய்விட்டது. பிறகு என்ன தேவரடியார்களுக்கு நடனத்தின் நுட்பங்களையெல்லாம் தன்னால் முடிந்த அளவு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள் அறிவாட்டி. தங்களுக்கிடையே இருக்கும் போட்டியை மறந்து சந்தோசமாக தேவரடியார்கள் பயிற்சி நிகழ்ச்சியில் பங்குபெற்றினார்கள்.

பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தேவரடியார்கள் அறிவாட்டியும் அந்தப் போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார்கள். உண்மையில் தலைக்கோலி விருது அவளுக்குரியதுதான் என்று அபிப்பிராயப்பட்டார்கள். செய்தி ஆளப்பிறந்தாள் காதுகளை எட்டியிருக்க வேண்டும். அடுத்த நாளே அவள் பயிற்சிகளில் கலந்து கொண்டாள். உண்மையில் ஒன்றைச் சொல்ல வேண்டும். ஆளப்பிறந்தாளும், அறிவாட்டியும் நடனத்தில் சரிசமமான திறமை உடையவர்கள். அவர்களுக்கிடையே நடனத்தில் கந்தளாய்ச் சதுர்வேதி மங்களத்தில் நீண்ட காலமாகப் போட்டி நிலவி இருக்கிறது. ஆனால் நேரடியாக இருவரும் மோதிக் கொள்ளாதபடியால் யார் சிறந்தவர் என்று அதுவரை தீர்மானிக்கப்படாமல் இருந்தது.

மூன்று நாட்களில் பெருவாரியான தேவரடியார்களின் மனங்களை அறிவாட்டி ஈர்த்துவிட்டது ஆளப்பிறந்தாளுக்கு அதிக கோபத்தை உருவாக்கி இருக்க வேண்டும். ஆளப்பிறந்தாளுக்குச் சார்பாகவும் ஒரு சிறிய கூட்டம் இருந்தது. அவர்களை வைத்துக் கொண்டு அறிவாட்டியை கிடைக்கிற சந்தர்ப்பங்களில் எல்லாம் அவமானப்படுத்தும் முயற்சியில் ஆளப்பிறந்தாள் ஈடுபட்டு வந்தாள். ஆலய நிர்வாக மேலிடங்களில் அவளுக்கு இருந்த ஆதரவினால் நடன ஆசிரியர்களால் வாய்மொழியாக கண்டிப்பதைத் தவிர்த்து வேறு எதுவும் செய்ய முடியாது இருந்தது.

அங்கு நடந்த விடயங்கள் தம்பிரான் மாணிக்கத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் அவர் தீவிரமாக அறிவாட்டி அந்தப் போட்டி நிகழ்ச்சியில் பங்கு கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினார். ஆனால் அறிவாட்டியின் பிடிவாதத்தால் அதனை அவர் கைவிட வேண்டி ஏற்பட்டது. சுந்தரி அம்மையார் சொல்லி வந்தவற்றை கேட்டுக் கொண்டிருந்த மூவரின் தொண்டைக் குள்ளும் ஒரு கேள்வி பொறுத்துக் கொண்டிருந்தது. அவர்களைக் கேள்வி கேட்க வைக்காமல் தொடர்ந்து சுந்தரி அம்மையாரே நடந்தவற்றை விரிவாக சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒருமுறை பயிற்சி மண்டபத்தில் எல்லோரும் கூடியிருந்த சமயத்தில் ஆளப்பிறந்தாள் மிகக் கடுமையாக அறிவாட்டியை கேலி செய்து அவமானப்படுத்தினாள். அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்துதான் தன் முடிவை மாற்றிய அறிவாட்டி, தம்பிரான் மாணிக்கத்தின் துணையோடு போட்டிகளில் பங்குபற்றி, இறுதியில் தலைக்கோலி விருதைப் பெற்றாள். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் பெரியோர்கள் கூடியிருந்த மேடையில் வேளைக்காரத் தளபதி சேதராயன் கைகளால் அறிவாட்டிக்கு தலைக்கோலி விருது வழங்கப்பட்டதை என் இரண்டு கண்களாலும் பார்க்கும் பாக்கியம் பெற்றேன் என்று சுந்தரி அம்மையார் ஒருவித பரவசத்தோடு சொல்லி முடித்தார்.

இந்தக் கறுப்பிக்கு தலைக்கோலி விருதெல்லாம் ஒரு கேடா என்று ஆளப்பிறந்தாள் அகந்தையோடு கேட்ட வார்த்தைதான் அறிவாடிக்கு தலைக்கோலி விருதை வாங்கித் தந்தது. சுந்தரி அம்மையார் சொல்லிக்கொண்டிருந்த வார்த்தைகள் அதனைக் கேட்டுக் கொண்டிருந்த மூவரின் மனங்களையும் கூர்வாளாகக் கீறிச் சென்றது.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com



# இரண்டாம் இராசேந்திர சோழன் காலத்தில் மும்முடிச் சோழமண்டலம்

## ஈழமும் சோழமும்

வி. துலாஞ்சனன்

12

சோழநாட்டின் வடமேற்கு எல்லையில் அமைந்திருந்த ‘கொப்பம்’ எனும் இடத்தில் பொ.ஆ.பி 1052-ற்கும் 1054-ற்கும் இடையே சோழப் படைகளுக்கும் சாளுக்கியப் படைகளுக் கும் இடையே பெரும் போர் மூண்டது. இதில் சோழப் படைக ளைத் தலைமை தாங்கிச் சென்ற இராசாதி இராச சோழன், அப்போது வளர்ந்து வந்த அரசான மேலைச்சாளுக்கியத்தின் அரசன் சோமேசுவரனுடன் மோதினான்.

எதிர்பாராத விதமாக யானை மீது அமர்ந்து போரிட்ட இராசா திராச சோழன், சாளுக்கியப் படையில் இருந்த வில் வீரர்க ளுக்கு எளிய இலக்காக வேண்டி நேரிட்டது. இராசாதிராசன் தன் ஐம்பத்தெட்டாம் வயதில் அந்த யானை மீதிருந்தே உயி ரிழந்து வீழ்ந்தான். ‘யானை மேல் துஞ்சின தேவர்’ எனும் பெய ரும் பெற்றான். பெருவீரனான தங்கள் சக்கரவர்த்தி வீழ்ந்த தும் சோழப் படைகள் நிலைகுலைந்து போயின. போர்க்களத் திலிருந்து புறமுதுகிட்டு ஓட ஆரம்பித்தன.

அப்போது சோழப் படைகளின் பின் வரிசையின் தளபதியாக நின்றிருந்தவனும் இராசாதிராசனுடன் இளவரசனாக சோழ நாட்டை ஆண்டு வந்தவனுமான இராசாதிராசனின் தம்பி விக் கிரமன், நிலைமையின் தீவிரத்தை உணர்ந்துகொண்டான். சட்டென போர்க்களத்தில் தோன்றி தன்னை சோழநாட்டின் அரசனாக அறிவித்துக்கொண்டான். சோழ மண்ணின் பெருமை காக்க போர் புரிய வருமாறு அறைகூவல் விடுத் தான்.

கலைந்து ஓடிய சோழப் படைகள் இராசாதிராசன் மறைந்த சோகத்தையும் போர்க்களத்தில் தோற்ற நாணத்தையும் மறந்து குதூகலம் கொண்டன. வெற்றிக்கோசம் எழுப்பியபடி தங்கள் புதிய அரசனைச் சூழ்ந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய் தன. அவன் தலைமையில் சோழப்படை சாளுக்கியப்படை மீது மீண்டும் பாய்ந்தது.

சோழ அரசன் வீழ்ந்ததையும் அவன் படையினர் பின்வாங்கு வதையும் கண்டு எக்காளமிட்டுக் கொண்டாடிக்கொண்டிருந்த சாளுக்கியப் படையினர் இந்தத் திடீர் தாக்குதலை எதிர் பார்க்கவில்லை. சோழப்படை புதிய அரசன் வகுத்த வியூகத் தில் மிக மூர்க்கத்துடன் போராடியது. சாளுக்கியர் பக்கமி ருந்த வெற்றித்திருமகள் சட்டென சுதாகரித்துக்கொண்டு சோழர் பக்கம் மாறிவிட்டிருந்தாள். இப்போது சாளுக்கியப் படைகளுக்கு பின்வாங்குவதைத் தவிர வேறு வழி இருக்க வில்லை. திடுதிப்பென சோழப்படை வெற்றிவாகை சூடியது.

கொப்பத்துப் போரில் மாபெரும் வெற்றி கொண்ட விக்கிரமன் ‘இராசேந்திர தேவ சோழன்’ என்ற பெயரில் சோழ அரியணை யில் அமர்ந்தான். அவனை இரண்டாம் இராசேந்திர சோழன் (1052 - 1064) என்று அழைக்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள். அவன் காலத்தில் இலங்கை, சாளுக்கிய எல்லைப் பகுதிகள் உட்பட சோழநாட்டின் எல்லைகள் பெருமளவு மாறவில்லை. இராசேந்திரதேவன் ஆட்சிக்காலத்தில் சோழர் கை ஈழத்தி லும் ஓங்கியிருந்தது என்பதற்கான சான்றுகள் மூன்று இலங் கையில் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று இன்று கொழும்பு அருங்காட்சியகத்தில் நிற்கின்றது.

‘கொப்பத்து வென்ற சோழன்’ என்ற பட்டம் கொண்ட இராசேந் திர தேவனின் இரண்டாம் ஆட்சியாண்டில் மூவேந்தவேளான் பல்லவராயன் என்பவன் தென் அனுராபுரியில் ‘மும்முடிச் சோழ விண்ணகரம்’ எனும் கோவிலை அமைத்தான் என்று குறிப்பிடும் கல்வெட்டு அது. விண்ணகரம் என்றால் திருமால் கோவில். அக் கல்வெட்டு எவ்வாறு கொழும்பு அருங்காட்சிய கத்தை வந்தடைந்தது என்பது தெரியவில்லை. பெரும்பாலும் அனுராதபுரத்தின் தென்பகுதியில் எங்கோ அமைந்திருந்த விண்ணகரத்தின் இடிபாடுகளிடையே இக்கல்வெட்டு மீட்டெ டுக்கப்பட்டு கொழும்பு வந்தடைந்திருக்கக்கூடும்.

கிட்டத்தட்ட இதே காலகட்டத்தைச் சேர்ந்த இன்னொரு கல் வெட்டு மதவாச்சிக்குத் தெற்கே ஆறு கி.மீ தொலைவில் உள்ள ‘சங்கிலி கனதராவை’ என்ற இடத்தில் கிடைத்தது. அக்கல்வெட்டு ‘சிறீ இராசேந்திர தேவற்கு ஆண்டு முதலா வது சேனாபதிகள் சயமுறி நாடாழ்வார்’ என்று ஆரம்பமாகின் றது. இந்த இரு கல்வெட்டுகளும் இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் அனுராதபுரப் பகுதி சோழரின் நேரடிக் கட்டுப்பாட் டின் கீழ் இருந்தது என்பதற்கான தீர்க்கமான சான்றுகளாகும். இதற்கு முன்போ பின்போ அனுராதபுரம் சோழராட்சியின் கீழ் இருந்தமைக்கான கல்வெட்டுச் சான்றுகள் அத்தனை தெளி வாகக் கிடைக்கவில்லை.

அனுராதபுரத்தில் மாத்திரமன்றி, இராசேந்திரதேவன் காலத் தில் பொலனறுவைக்கு அருகே உள்ள மெதிரிகிரியில் சிவால



யம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. 'பண்டிதசோழ ஈச்சரம்' என்று அழைக்கப்பட்ட அக்கோவிலுக்கு இராசேந்திர தேவ னின் இரண்டாம் ஆட்சியாண்டில் அவனது 'இளைய மும்மு டிச்சோழ அணுக்கர்' படையில் இருந்த 'வளவன் பி[டாரன்] என்பவன் இருபத்தாறு பசுக்களை தானம் அளித்ததை அங்கு கிடைத்த கல்வெட்டொன்று சொல்லும். மெதிரிகிரி 'மண்டலகிரி' என்றும் 'நித்தவினோதபுரம்' என்றும் வேறு பெயர்களைச் சூடியிருந்ததை அதே கல்வெட்டு குறிப்பிடு கின்றது. மெதிரிகிரியில் இன்று புத்தருக்கான வட்டதாகைக் கோவில் ஒன்று அமைந்துள்ளதே தவிர, சிவாலய இடிபாடு கள் எதுவும் காணக்கூடவில்லை. அது பின்னாளில் முற்றாக மறைந்திருக்கக்கூடும்.

தன் அண்ணன் இராசாதிராசன் போலவே இராசேந்திர தேவ னும் தனது காலத்தில் தன் குடும்ப உறுப்பினர்களை வெவ் வேறு நாடுகளில் அரசாள அனுப்பியிருந்தான். அவர்களில் பதின்மூவரின் பெயர்கள் அந்த சோழனின் மெய்க்கீர்த்தியில் கிடைத்துள்ளது. அந்தப் பதின்மூவரில் ஒருவனும் அவன் மைந்தர்களில் ஒருவனுமான இராசேந்திர சோழன் என்பவன், 'உத்தமசோழன்' என்ற பட்டத்தைக் கொண்டிருந்தான். பேரா.சி. பத்மநாதன், இவனே இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் இலங்கையில் சோழ இலங்கேசுவரனாக முடிசூடப்பட்டிருந் தான் என்றும் சங்கிலி கனதராவைக் கல்வெட்டும் கொழும்பு அருங்காட்சியக் கல்வெட்டும் தந்தை இரண்டாம் இராசேந்தி ரனை அன்றி, மைந்தன் இளைய இராசேந்திரனையே குறிக் கின்றன என்றும் ஊகிப்பார்.

அக்கல்வெட்டுகள் 'இராசேந்திரன்' என்ற பெயர் கொண்ட அர சகுமாரனின் முதலாம் மற்றும் இரண்டாம் ஆட்சியாண்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன. தன் முதல் இரு ஆட்சியாண்டு காலத் தில் இரண்டாம் இராசேந்திரன் தன் தமையனுடன் இணைந்து சோழநாட்டில் ஆண்டு வந்ததால், தன் பெயரில் கல்வெட்டுப் பொறிக்க வாய்ப்பில்லை என்பது அவர் வாதம். எனினும் இதே காலத்தைச் சேர்ந்த மெதிரிகிரிக் கல்வெட்டில், சோழ அரசருக்குரிய 'பரகேசரி வர்மன்' என்ற பட்டத்துடன் தன் இரண்டாம் ஆட்சியாண்டில் அவனது கல்வெட்டொன்று கிடைப்பதால், இது இரண்டாம் இராசேந்திரனுடையது என்றே கொள்ளமுடிகின்றது.

கடந்த அத்தியாயமொன்றில் நாம் பார்த்த 'சங்கவர்மன் உடையார்' எனும் இரண்டாவது சோழ இலங்கேசுவரன் இரா சாதிராசனின் சகோதரனான வீர ராசேந்திரன் என்பதை முன்பு கண்டோம். அவனுக்குப் பின்னர் இலங்கையில் மூன்றாவதும் இறுதியுமாக பதவி வகித்த சோழ இலங்கேசுவரனின் பெயர் 'விக்கிரம சலாமேகன்' என்று கூறியுள்ளார் பேரா.கா. இந்திர-பாலா.

விக்கிரம சலாமேகன் என்ற பெயரில் வணிக அமைப்புகளும், சைவ - புத்த சமயக் கோவில்களும் ஏராளமாக அமைந்திருந் தன. இரண்டாம் இராசேந்திர சோழனின் மைந்தன் இளைய இராசேந்திரனும், விக்கிரமசலாமேகன் என்ற பெயர் சூடியி ருந்ததாக இந்திரபாலா ஊகிக்கும் மூன்றாவது சோழ இலங் கேசுவரனும் ஒருவரே என்ற பத்மநாதனின் ஊகத்தை உறு திப்படுத்த இன்னும் அறுதியான சான்றுகள் நமக்குத் தேவைப்படுகின்றன. எனவே இப்போதைக்கு அதற்குள் நுழையாமல், இரண்டாம் இராசேந்திரனது நேரடி அரச பணி

யாளர்களின் கல்வெட்டுகளாகவே மேற்படி மூன்று கல்வெட்டு களை நாம் வாசித்து வைப்போம்.

இப்படி அனுராதபுரம் மற்றும் பொலனறுவையின் சூழலில் பதினோராம் நூற்றாண்டின் நடுப்பாகத்தில் மிக வலுவாக சோழர் நிலைத்திருந்தனர் என்பது இந்த மூன்று தொல்பொ ருட் சான்றுகளாலும் உறுதியாகின்றது. மறுபுறம் சிங்களவர்க ளின் நிலைப்பாடு என்ன?

இராசாதிராச சோழனால் வீழ்த்தப்பட்ட பராக்கிரம பாண்டிய னுக்குப் பின்னர் லோகேசுவரன் என்பவன் கதிர்காமத்தை தலைமையகமாகக் கொண்டு ஆட்சிக்கு வந்ததாக மகாவம் சம் விபரிக்கிறது. இவன் பெரும்பாலும் இரண்டாம் இராசேந் திர சோழன் காலத்திலேயே அங்கு அரசாண்டிருக்கலாம். இவன் காலத்தில் இன்னொரு அரசகுமாரனான கீர்த்தி என்ப வன் பெரும் எண்ணிக்கையான சிங்களரின் ஆதரவுடன் சோழ ரிடமிருந்து மலையதேசத்தைக் கைப்பற்றினான். மலையதே சம் என்பது இன்றைய மலையகத்தின் பெருமளவு பகுதியை உள்ளடக்கியிருந்தது.

லோகேசுவரனுக்கும் கீர்த்திக்குமிடையே ஏற்பட்ட ஆட்சிப் பிணக்கில் கீர்த்தியின் பக்கமே சிங்கள ஆதரவு அதிகமாக இருந்தது. லோகேசுவரன் அந்த ஆட்சி மோதலில் தோற்று இறந்தான். கீர்த்தி கொழும்புக்கு தெற்கிலுள்ள கல்லுத்து றைக்கருகே பஞ்சயோசனை (இன்றைய பசுதுன் கோரளை) பகுதியில் வலுமிக்க ஆட்சியாளனாக விளங்கி வந்தான். கீர்த்தி மேற்குக்கரைப் பக்கம் நகர்ந்ததால் லோகேசுவரனுக் குப் பின்னர் தென் உரோகணப்பக்கம் மீளவும் சோழர் ஆதிக் கத்தின் கீழ் வந்திருக்கலாம் என்றே ஊகிக்கமுடிகின்றது.

இந்நிலையில் 'கேசதாதுநாயக்கன் காசியப்பன்' என்பவன் மூன்றாவது சக்தியாக உரோகணத்தில் வளர்ச்சி கண்டான். அவன் சோழப் படைகளை முறியடித்து கதிர்காமத்தையும் கைப்பற்றினான். சோழரை விட வலுவான சக்தியாக அவன் எழுவதைப் பொறுக்காத கீர்த்தி அவன் மீது போர்தொடுத் தான். அந்த மோதலில் இறுதியில் கீர்த்தியே வென்று கதிர் காமத்தில் முடிசூடும்படி ஆனது. அந்தக்கணம் தெற்கு உரோகணத்தின் பெரும்பகுதி கீர்த்தியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. சோழர் ஆதிக்கம் அப்பகுதியிலிருந்து முற்றாக நீங்கியது.

அது அண்ணளவாக பொ.ஆ.பி 1055-ம் ஆண்டு. இலங்கை வரலாற்றில் கீர்த்தி நிறைந்த மன்னனாக பின்னாளில் நிலை பெறப்போகும் உரோகணத்து இளவரசன் கீர்த்தி, தன் கதிர் காம இராசதானியில் அமர்ந்து சிங்களப் பிரதானிகளுடன் இணைந்து சோழரை முற்றாக இலங்கைத் தீவிலிருந்து வெளியேற்றும் வியூகங்களை தீவிரமாக வகுக்கலானான். யார் இந்த கீர்த்தி?



thulanchanan.v@thaiveedu.com



# இனப்படுகொலையின் அரசியல்–5

## இனப்படுகொலை : தத்துவார்த்தக் கேள்விகள்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### அறிமுகக் குறிப்புகள்:

இனப்படுகொலை என்ற சொல்லாடல் மிகுந்த சிக்கலானது. கூட்டுக்கொலையை 'இனப்படுகொலை' என்று சொல்லலாமா இல்லையா என்ற வினா எப்போதும் எழுவது. அதே வேளை ஒரு நிகழ்வை இனப்படுகொலை என்றும் இன்னொன்றை இனப்படுகொலை என அழைக்காமல் இருப்பதன் பின்னணியில் சர்வதேச அரசியல் முக்கிய பங்கு வகிக்கிறது. இனப்படுகொலைகள் வெறுமனே உள்நாட்டு நிகழ்வுகள் தானா, அவற்றிற்கு சர்வதேசப் பரிமாணம் இல்லையா என்ற கேள்வி முக்கியமானது. அது சிக்கலானது, ஏனெனில் ஒரு இனப்படுகொலையில் ஈடுபட்ட உள்நாட்டு அரங்காடிகளை இனங்காண்பது இலகுவானது, ஆனால் அதன் சர்வதேசப் பாத்திரத்தை அடையாளங் காண்பதும் சாட்சிகளுடன் நிறுவுவதும் கிட்டத்தட்ட சாத்தியமற்றது. இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை எனக் கொண்டால் அதில் குற்றவாளிகள் உள்நாட்டு அரங்காடிகள் மட்டும்தானா? இதற்கு உதவிய சர்வதேச சக்திகள் பொறுப்புக்கூற வேண்டுமா இல்லையா? பொறுப்புக்கூற வேண்டுமாயின் அதை நோக்கி எவ்வாறு நகர்வது? இனப்படுகொலையின் பங்காளிகளிடமே 'சர்வதேச சமூகம்' என்பதன் அடிப்படையில் நியாயம் கோருவது எவ்வளவு சரியானது? அவ்வாறு கோரப்படும் நியாயமும் உள்நாட்டு அரங்காடிகளைத் தண்டித்து சர்வதேச அரங்காடிகளைக் காப்பாற்றி விலக்களிக்கும் நிகழ்ச்சிநிரலின் பகுதி இல்லையா? இவை ஆழமான தத்துவார்த்த விவாதத்தை வேண்டி நிற்பன.

ஏப்ரல் 2022-ன் தொடக்கத்தில், ரஷ்ய துருப்புகள் வடக்கு உக்ரைனில் இருந்து வெளியேறிய பிறகு, புச்சா மற்றும் பிற நகரங்களில் ரஷ்யர்களால் கொல்லப்பட்ட டஜன் கணக்கான பொதுமக்களைக் கொண்ட வெகுஜன புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக ஒரு செய்தி வெளியானது. உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி இந்தக் கண்டுபிடிப்பை 'ஓர் இனப்படுகொலைக்கான சான்று' என்று அழைத்தார். போலந்து மற்றும் ஸ்பெயின் பிரதமர்களும் இக்கருத்தை எதிரொலித்தனர். உக்ரைனில் நடந்தது ஓர் 'இனப்படுகொலை' என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடென் குறிப்பிட்டார். அப்போதிருந்து, வேறு சில ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் உள்ள பாராளுமன்றங்கள் மற்றும் அமைச்சர்கள் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றம், உக்ரைனில் இனப்படுகொலை பற்றி குறிப்பிட்டுள்ளனர். ரஷ்ய துருப்புக்களின் படுகொலைகளை விவரிக்க இனப்படுகொலை என்ற சொல்லைப் பயன்படுத்த உக்ரேனிய அரசாங்க அதிகாரிகள் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்தனர். ஆனால் பிரெஞ்சு ஜனாதிபதி மக்ரோன் இந்த வார்த்தையைப் பயன்படுத்த மறுத்துவிட்டார். 'சில விதிமுறைகளில் நான் மிகவும் கவனமாக இருக்கிறேன். எனது சொல்லாடல் சரியானதாகவும் சான்றின் பாற்பட்டதாகவும் இருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார், இது உக்ரைன் வெளியுறவு அமைச்சகத்தின் கண்டனத்தைப் பெற்றது.

ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் மற்றும் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான உயர் பிரதிநிதி ஜோசப் பொரெல் போன்ற உயர்தர ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளும் இந்த வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. புச்சா கொலைகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொரெலின் அறிக்கை 'படுகொலைகள்', 'அட்டூழியங்கள்' மற்றும் 'போர்க்குற்றங்கள்' ஆகியவற்றைக் கடுமையாகக் கண்டிக்கிறது, ஆனால் இனப்படுகொலை என்ற வார்த்தையை சேர்க்கவில்லை. ஐரோப்பிய ஒன்றியம் உக்ரைனில் ரஷ்யாவால் நடத்தப்படும் 'போர்க்குற்றங்கள்' பற்றி பலமுறை குறிப்பிட்டுள்ளன, ஆனால் இனப்படுகொலை என்ற சொல்லை ஒருமுறை கூடப் பயன்படுத்தவில்லை. பாரிய அட்டூழியங்கள் நிகழும் பிற சூழ்நிலைகள் குறித்த ஐரோப்பிய ஒன்றிய அறிவிப்புகளும் இனப்படுகொலை என்ற வார்த்தையை அரிதாகவே பயன்படுத்தியுள்ளன. ஆனால் அமெரிக்கா இலகுவில் அனைத்தையும் இனப்படுகொலை என வகைப்படுத்துகிறது. 'போர்க்குற்றங்கள்' என்ற சொல்லாடல் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை இலக்கு வைத்துப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாடலாகும். ரஷ்யா போர்க்குற்றங்களை இழைத்தது என்று சொல்லும் யோக்கிதை நேட்டோவில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் எதற்கும் இல்லை. யுகோஸ்லாவியாவில், ஆப்கானிஸ்தானில், ஈராக்கில், லிபியாவில் என அவர்களின் கொலைக் கரங்கள் கடந்த மூன்று தசாப்தகால வரலாறெங்கும் பரவிக் கிடக்கின்றன. அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் மேற்கொள்ளும் கூட்டுக்கொலைகள், அட்டூழியங்களாகவோ, போர்க்குற்றங்களாகவோ, இனப்படுகொலைகளாகவோ ஏன் வகைப்படுத்தப்படுவதில்லை?



சர்வதேச உறவுகளில் இனப்படுகொலை பற்றி நாம் எவ்வாறு சிந்திக்கிறோம், கருத்துருவாக்குகிறோம், புரிந்துகொள்கிறோம்? குறிவைக்கப்படும் மக்கள் மீதான இனப்படுகொலையின் தாக்கம் வழக்கமாக ஆய்வு செய்யப்பட்டாலும், சர்வதேச உறவுகளில் இனப்படுகொலையின் தாக்கம் வழக்கமாக புறக்கணிக்கப்படுவது தெளிவாகத் தெரிகிறது. அப்படியிருந்தும் நமது புரிதல் தவறாக இருந்தால், நமது செயல்கள் சரியாக இருக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? இனப்படுகொலையை நாம் புரிந்து கொள்ளும் விதம் இயற்கையாகவே அதை நோக்கிய நமது நடத்தையை வடிவமைக்கும். எனவே, இனப்படுகொலை மற்றும் சர்வதேச உறவுகளுக்கு இனப்படுகொலையின் தாக்கங்கள் பற்றி நாம் எவ்வாறு சிந்திக்கிறோம் என்பது மிகவும் முக்கியமானது. இதை அளவிடுவதற்கு பின்வரும் கேள்வியோடு தொடங்கலாம். இனப்படுகொலையை சர்வதேச சூழலில் புரிந்துகொள்வது ஏன் மிகவும் முக்கியமானது?

## இனப்படுகொலையின் சர்வதேசத் தன்மை:

1948-ல் ஐக்கிய நாடுகள் சபை இனப்படுகொலை குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டிப்பது தொடர்பான சமவாயத்தை ஏற்றுக்கொண்டபோது இனப்படுகொலை சர்வதேச அளவில் சட்ட மற்றும் அரசியல் அடிப்படையிலானதாக மாறியது. இது இனப்படுகொலை என்ற கருத்தாக்கத்திற்கான சர்வதேசத் தன்மையை வழங்கியது. 1915-ம் ஆண்டில் ஒட்டோமான் ஆர்மேனியர்களின் அழிவு குறித்த அக்கறைகளின் பின்புலத்தில், குறிப்பிட்ட சமூகங்களை அழிப்பதற்காக, பொது மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறை சர்வதேச விதிமுறைகளை மீறுவதாகக் கருதப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் பின்னர், இனப்படுகொலையை குற்றமாக்குவது, நேச நாட்டு சக்திகளிடையே போருக்குப் பிந்தைய ஒருமித்த கருத்தை பிரதிபலித்தது. அவர்களின் முன்னாள் எதிரிகள் செய்த குற்றத்தின் வகை எப்போதும் சட்டவிரோதமானது. ஆனால் இதைக் கோட்பாட்டுத் தளத்தில் வளர்த்தெடுத்துச் செல்வதற்கு இரண்டாம் உலகப் போரின் பின்னரான கெடுபிடிப்போர் தடையானது. இதனால் இனப்படுகொலை தொடர்பான புதிய சட்டக் கட்டமைப்பு பெரும்பாலும் கைவிடப்பட்டது, ஆனால் இனப்படுகொலை பற்றிய சிந்தனைகள் பரந்த அதிர்வுகளை உருவாக்கின. இந்தப் பின்புலத்தில் இனப்படுகொலையின் 'சர்வதேசத் தன்மை' முக்கியமான தத்துவார்த்தப் பேசுபொருளாகும்.

இனப்படுகொலை என்பது மிகவும் சிக்கலான சர்வதேச போக்குகள், இராணுவம், அரசியல் மற்றும் கலாசாரம் மற்றும் சட்டத்தின் ஒரு பகுதியாகும். முன்னாள் யூகோஸ்லாவியா, ருவாண்டா, டார்ஃபர் மற்றும் பிற சமீபத்திய நிகழ்வுகளின் அரசியல் பொதுவாக இனப்படுகொலை பற்றிய சர்வதேச பார்வையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இனப்படுகொலைக்கான புலமைத்துவம் என்பது அதிக அரசியல் மற்றும் பண்பாட்டுச் சூழல்களில் உருவாகியுள்ளது. ஒருபுறம், இது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ வெளிப்படையாக அரசியல் மயமாக்கப்பட்ட ஆராய்ச்சியின் பரவலான நிகழ்வதற்கு வழிவகுத்தது. இது இனப்படுகொலை என்ற கருத்தாக்கத்தை அரசியற்சாய்வுகளின் வழி நோக்கியது. இது ஒரு சிலவற்றை இனப்படு கொலைகளாகவும் வேறு சிலதை இனப்படுகொலை அல்ல என்றும் விளக்க உதவியது. பெரும்பாலான இனப்படுகொலை ஆராய்ச்சிகள், ஆட்சியில் இருக்கும் வரலாற்றுக் குற்றவாளிகளினதும் இனப்படுகொலையின் சமகால அரசியலினதும் உணர்வுகளால் தாக்கப்பட்டு - ஆராய்ச்சியின் கட்டமைப்பை சுருக்கி, சரியான பரந்த சர்வதேச புரிதலுக்கு எதிரான அனுமானங்களை முன்னிறுத்துவதாக உள்ளன.

இனப்படுகொலையானது நாசிசத்துடனும், சர்வாதிகாரத்துடனும் நமது வரலாற்றுக் கற்பனைகளில் ஆழமாகத் தொடர்புடையது என்பதால், இது 'தீய' தலைவர்களின் மற்றும் 'மோசமான' ஆட்சிகளின் பிரச்சனையாக பரவலாகக் கருதப்படுகிறது. இது உள்நாட்டு அரசியல் மற்றும் சமூகத்தில் உருவாக்கப்பட்ட ஒரு நிகழ்வாகக் கருதப்படுகிறது, ஆனால் இது சர்வதேச முக்கியத்துவம் பெறுகிறது. பெரிய இனப்படுகொலைக

ளின் உள்நாட்டுத் தன்மைக்கான செல்வாக்குமிக்க வெளிப்ப டையான கூற்றுக்களில் இந்த அனுமானம் மிகத் தெளிவாக பிரதிபலிக்கிறது.

இனப்படுகொலைகளின் வரலாற்றின் எளிமையான பிரதிப லிப்பானது 'உள்நாட்டு' குணாதிசயங்களை மட்டும் கொண்டு ஒன்றை நிலைநிறுத்த முடியாது என்பதை தெளிவுபடுத்துகி றது. ஆர்மேனியர்கள் ஒட்டோமான் மற்றும் ரஷ்ய பேரரசுக ளின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் வசித்து வந் தனர், மேலும் முதலாம் உலகப் போரில் இரு நாடுகளுக்கு இடையிலான சர்வதேச மோதலில் அவர்கள் மாட்டிக்கொண் டமையானது ஒட்டோமான்களால் அவர்கள் அழிக்கப்படுவ



தற்கு ஊக்கியாக இருந்தது. இந்த இனப்படுகொலையானது ஒட்டோமான்கள் மற்றும் தென்கிழக்கு ஐரோப்பாவின் எழுச்சி பெறும் தேசிய அரசுகளுக்கு இடையேயான சிக்கலான சர்வ தேச, இடைவிடாத இனப்படுகொலை மோதல்களின் முடிவா கும்.

இனப்படுகொலையின் சர்வதேசச் தன்மையை சிலர் 'இனப்ப டுகொலை விளையாட்டு' என்று அழைக்கிறார்கள். நாஜிக் கள், முக்கியமாக ஜேர்மன் யூதர்களைக் குறிவைக்காமல் (பாதிக்கப்பட்ட ஜேர்மன் யூதர்கள் மொத்தமாகப் பாதிக்கப் பட்ட யூதர்களின் 5%-க்கும் குறைவானோரே) ஆக்கிரமிப்பு போரின் மூலம் கைப்பற்றப்பட்ட ஒரு முழுக் கண்டத்தின் யூதர்களைத் தாக்கினர். கம்போடிய இனப்படுகொலை என் பது அமெரிக்கா மற்றும் வியட்நாம் கம்யூனிஸ்டுகளுடன் கெமர் ரூஜ் நடத்திய போர்களின் விளைவாகும். ருவாண்டா இனப்படுகொலையானது, ருவாண்டா தேசபக்தி முன்னணி யின் உகாண்டாவில் இருந்து படையெடுப்பதற்கு, ருவாண்டா அரசுக்கு இது ஏற்படுத்திய அச்சுறுத்தலுக்கும், அது எழுப் பிய அச்சங்களுக்கும் விடையிறுப்பாக இருந்தது.

'உள்நாட்டு' வகைப்படுத்தல்கள், இனப்படுகொலை என் பதை ஒரு ஒற்றை 'பாதிக்கப்பட்ட' மக்கள்தொகைக் குழு விற்கு எதிரான ஒரு 'குற்றவாளி' - அரசு அல்லது ஆட்சியால் -வன்முறையின் எளிய வடிவமாகக் கருதப்படும் மனநி லையை வெளிப்படுத்துகிறது. அத்தகைய கண்ணோட்டத் தில், சர்வதேச அரங்காடிகள் அடிப்படையில் உள்நாட்டு உறவுகளில் 'பார்வையாளர்கள்' (பார்வையாளர்கள் அல்லது பெரும்பாலான இரண்டாம் நிலை தலையீட்டாளர்கள்) என்ற அந்தஸ்தைக் கொடுக்கிறது. இனப்படுகொலைகள் கட்ட மைப்புச் சூழல்களைச் சேர்ந்தவையாக இருந்தாலும், அவை குறிப்பிட்ட அரசுகளுக்குரியவை. நிச்சயமாக இத்தகைய 'உள்நாட்டு' கூற்றுகள் இருந்தபோதிலும், பல அறிஞர்கள் உண்மையில் இனப்படுகொலையின் உற்பத்தியின் சர்வதேச சூழல்களின் வகிபாகத்தை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று கோருகிறார்கள்.

## இனப்படுகொலை ஆய்வின் அணுகுமுறைச் சிக்கல்கள்:

நவீன இனப்படுகொலை ஆராய்ச்சியானது, ஒப்பீட்டு அரசி யல் மற்றும் சமூகவியலின் ஒரு மாறுபாடு ஆகும், அதன் முறையானது ஒவ்வொரு குறிப்பிட்ட இனப்படுகொலைக்கான காரணங்களையும் அதன் குறிப்பிட்ட (முதன்மையாக உள் நாட்டு) சூழலில் தேட வேண்டும் என்று கருதுகிறது. மேலும் அதன் இனப்படுகொலை பண்புகள் நிறுவப்பட்ட நிகழ்வுகளு டன் ஒப்பிடுவதன் மூலம் நிறுவப்பட வேண்டும். இவ்வாறு கிட் டத்தட்ட அனைத்து முக்கிய ஆய்வுகளும் சிறிய எண்ணிக் கையிலான பெரிய இனப்படுகொலைகளை தனித்தன்மை வாய்ந்த நிகழ்வுகளாகக் கையாளுகின்றன. ஆனால் அவற் றுக்கிடையே முறையாக இணைப்புகளை உருவாக்காமல் அவை அவற்றின் தனித்துவமான சூழ்நிலைகளில் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன. இவ்வாறாக, வரலாற்றுத் தொடர்புக ளைக் காட்டிலும், சர்வதேசச் சூழல்களுக்குப் பதிலாக உள் நாட்டு மற்றும் உள்ளூர் சூழல்களுக்கு முன்னுரிமை அளித்து, இந்த நிகழ்வுகளுக்கு இடையேயான வரலாற்றுத் தொடர்பற்ற ஒப்பீடுகளில் அதிக அக்கறை காணப்படுகிறது. உதாரண மாக, ஹோலோகாஸ்ட் மற்றும் ருவாண்டா ஆகியவற்றுக்கு இடையேயான பல ஒப்பீடுகளை ஒருவர் காணலாம், ஆனால் நாஜிக் கொள்கைகளுக்கும் சோவியத் யூனியன், மேற்கத்திய நாடுகள் உட்பட பிற அரசுகளுக்கும் இடையே உள்ள தொடர்புகள் பற்றிய முறையான விவாதங்கள் குறைவு. நேச நாடுகளும் பல்வேறு கிழக்கு ஐரோப்பிய அரசுகளும் இரண் டாம் உலகப் போரின் குறிப்பிட்ட சூழலில் ஒன்று சேர்ந்த பின் னணி, 1994-ல் ருவாண்டாவில் என்ன நடந்தது, புருண்டியிலும் உகாண்டாவிலும் நடந்த இனப்படுகொலை வன்முறை அல் லது காங்கோவில் நடந்த வன்முறை ஆகியவற்றுக்கு இடை யேயான தொடர்புகள் ஆராயப்படவில்லை.

இந்த அணுகுமுறையின் விளைவு என்னவென்றால், ஜேர்மனி யின் போர்க்கால கூட்டாளிகளால் நிகழ்த்தப்பட்ட சில அல் லது புருண்டி மற்றும் காங்கோ நிகழ்வுகள் போன்ற சிறிய அளவிலான அல்லது குறைவான கொலைவெறி கொண்ட குழுவினரின் இனப்படுகொலை அத்தியாயங்கள் ஓரங்கட்டப் படுகின்றன. மேலும், இனப்படுகொலைகள் பொதுவாக ஒரு குற்றவாளி மையத்திற்கும் ஒரு பாதிக்கப்பட்ட குழுவிற்கும் இடையிலான உறவுகள் என வரையறுக்கப்படுவதால், அரசுக் கும் அரசு அல்லாத குற்றவாளிகளுக்கும் இடையிலான சிக்க லான கூட்டணிகள் பலவிதமான பாதிக்கப்பட்டவர்களை இலக்கு வைப்பதானது குறைவான கவனத்தைப் பெறுகிறது.

இத்தோடு தொடர்புடைய இன்னொரு பிரச்சனை என்னவென் றால், இனப்படுகொலைகள் குறித்த தத்துவார்த்த ஆய்வுகள் குற்றவாளிகளின் அகநிலைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இனப்படுகொலை வெளிப்படையாக செயலை உள்ளடக்கியது, எனவே அதைச் செயல்படுத்தும் கூட்டு மற் றும் தனிப்பட்ட அரங்காடிகளின் கருத்துக்கள் மற்றும் நோக் கங்கள் புரிந்துகொள்வதற்கு அவசியமான தொடக்க புள்ளி

யாகும். இருப்பினும், குற்றவாளிகளின் 'நோக்கத்தை' மைய மாகக் கொண்ட ஓர் அரங்காடி அடிப்படையிலான வரை யறை, சர்வதேச குற்றவியல் சட்டத்தில் தவிர்க்க முடியாதது. அது சமூக அறிவியலின் விளக்க நோக்கங்களுக்காக போது மானதாக இல்லை, சமூக உறவுகள் மற்றும் சூழல் மிகவும் முக்கியமானது.

இனப்படுகொலை ஆய்வுகளில் உள்ள பிரச்சனை, அதன் சர் வதேச பரிமாணங்களை புறக்கணிப்பதும் குறைத்து மதிப்பி டுவதும் மட்டுமல்ல. இது இனப்படுகொலை சமவாயத்தை அதன் வழிமுறைகளில் மிகவும் பரந்ததாக மாற்றாமல், மிக வும் குறுகியதாகக் கருதும் வேலையைச் செய்கிறது.

இனப்படுகொலையின் கட்டமைப்புகளுக்கும் பிற சமூகக் கட் டமைப்பு சூழல்களுக்கும் இடையிலான தொடர்பை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இனப்படுகொலை, அரிதாக இல் லாவிட்டாலும் கூட, சமூகங்களில் பரந்தளவில் இல்லை என்ப தால், இனப்படுகொலையின் உறவுகளை இன்னும் அடிப்ப டையான, நிரந்தரமான கட்டமைப்புகளுடன் நாம் புரிந்து கொள்ள வேண்டும், எடுத்துக்காட்டாக, சமூக-பொருளாதார, கலாசார - சித்தாந்த, அரசியல் மற்றும் இராணுவ சக்திகளின் பங்களிப்பு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். போர் என் பது வடிவத்திலோ அல்லது தோற்றத்திலோ சர்வதேசமாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றாலும், மிகப் பெரிய போர்களில் பெரும்பாலானவை அரசுகளுக்கு இடையேயா னவை. பல இனப்படுகொலைகள் இவற்றிலும் பிற சர்வதேச அல்லது பகுதி - சர்வதேசப் போர்களிலும் நிகழ்கின்றன. மேலும் பல அல்லது பெரும்பாலான உள்நாட்டுப் போர்கள் சர்வதேச பரிமாணங்களையும் காரணங்களையும் கொண்டி ருக்கின்றன.

'மனிதாபிமானத் தலையீடு' என்ற கருத்தாக்கம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட உடனடி அல்லது தலையீட்டிற்கான அவசியமான நிபந்தனையாக கூட இனப்படுகொலையை அடையாளம் காணவில்லை. உண்மையில், ருவாண்டா கூட இனப்படு கொலை அடிப்படையில் உடனடியாக பகுப்பாய்வு செய்யப்ப டவில்லை. ருவாண்டாவில் நிகழ்ந்த இனப்படுகொலை குறிப் பாகப் பாதுகாப்பதற்கான பொறுப்பைச் சுற்றி, இனப்படுகொ லையின் சிக்கல்களைக் கவனத்திற்குக் கொண்டு வந்தது. இதைத் தொடர்ந்தே இனப்படுகொலையை ஊக்குவிப்பதில் அல்லது அதை முற்றிலுமாகத் தடுப்பதில் 'சர்வதேச சூழல்' முக்கியமானதாக இருக்க முடியும் என்ற கருத்து முன்னி லைக்கு வந்தது. இனப்படுகொலை நிகழ்வதற்கு ஒரு நாட்டிற் குள் நிகழும் நிகழ்வுகள் மட்டுமன்றி பிராந்திய அல்லது சர்வ தேச சூழலும் முக்கியமானது என்ற வாதம் முன்வைக்கப்பட் டது.

இனப்படுகொலை பற்றிய சில வரலாற்றுப் ஆய்வுகள் இனப்ப டுகொலையை மிகவும் முறையான முறையில் தயாரிப்பதில் சர்வதேச சூழலின் பங்கை விரிவாக முன்வைத்துள்ளன. இந் தப் போக்குகளின் மையத்தில் காலனித்துவ இனப்படு கொலை பற்றிய வரலாற்றுப் பணி முக்கியமானது. ஐரோப் பிய குடியேற்ற காலனித்துவத்தின் ஒரு கட்டமைப்பு ரீதியான உடன்பாடுதான் இனப்படுகொலை என்ற வாதம் சரியானது. இந்த அணுகுமுறையை பரந்த அளவில் பயன்படுத்துவதன் மூலம் அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்காவில் ஐரோப்பிய காலனித்துவ வரலாறு முழுவதும் நிகழ்ந்த பரவலான இனப்ப டுகொலை வன்முறையை தொடர்ச்சியான ஆய்வுகள் ஆவ ணப்படுத்தியுள்ளன.

இவ்வாறாக, வெவ்வேறு காலனித்துவ அத்தியாயங்களுக்கி டையில் மட்டுமல்ல, காலனித்துவ மற்றும் ஐரோப்பிய இனப் படுகொலைகளுக்கு இடையில் காலத்திலும் இடத்திலும் வர லாற்று உறவுகள் இருந்தன என்ற கருத்தை இந்த ஆய்வுகள் அறிமுகப்படுத்தியுள்ளன. 1905-ல் ஜேர்மன் தென்மேற்கு ஆபிரிக்காவில் ஹெரேரோ மற்றும் நாமா இனப்படுகொலை யில் இருந்து ஹோலோகாஸ்ட் வரை ஜேர்மன் இராணுவ வாதம் மற்றும் தேசியவாதத்தின் பரம்பரையில் கவனம் செலுத்தப்பட்டாலும், இது ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் சர் வதேச சூழலிலும் நோக்கப்பட வேண்டும். இனப்படுகொலை களுக்கு இடையேயான குறிப்பிட்ட உறவுகளை மட்டும் பார்க் காமல், இந்த குறிப்பிட்ட தொடர்புகள் பொதிந்துள்ள சமூக மற்றும் சர்வதேச உறவுகளின் பரந்த பண்புகளை நாம் பார்க் கலாமா என்ற கேள்வியை எழுப்புகிறது.

## தொடரும் குறிப்புகள்:

இனப்படுகொலையின் உருவாக்கத்தில் 'சர்வதேசம்' என்ப தன் அர்த்தத்தை விசாரிக்க வேண்டியது அவசியம். இனப்படு கொலை என்பது 'ஆயுத அதிகார அமைப்புகள்' (பெரும்பா லும், ஆனால் எப்போதும் இல்லை, அரசுகள் அல்லது அரசு நிறுவனங்கள்) மற்றும் 'பொது சமூகக் குழுக்கள்' அல்லது மக்கள்தொகை ஆகியவற்றுக்கு இடையேயான வன்முறை உறவுகளின் தொகுப்பாக இருந்தால், அது 'உள்நாட்டு' (எ.கா: மூன்றாம் ரீச்-ஜேர்மன் யூதர்கள்) உறவுகளிடையே ஆனதாகவோ அல்லது 'சர்வதேச' உறவுகளிடையே ஆனதா கவே (மூன்றாம் ரீச்-ஐரோப்பிய யூதர்கள்) அல்லது இரண்டை யும் உள்ளடக்கியதாகவோ இருக்கக்கூடும். மேலும், இந்த சூழ்நிலைகளில் 'உள்நாட்டு' மற்றும் 'சர்வதேசம்' என்பதன் அர்த்தங்கள் வேகமாக மாறக்கூடும்.

ஹோலோகாஸ்ட்டை உள்நாட்டு என வகைப்படுத்தியபோது, அது ஜேர்மன் சாம்ராஜ்யத்திற்குள் நிகழ்ந்தது என்று அர்த் தப்படுத்த இயலும். ஆனால் ஹோலோகாஸ்ட் அவ்வாறானது மட்டுமல்ல. அது விரிவாக்கப்பட்ட ஜேர்மன் சாம்ராஜ்யம் எனக் கருதப்பட்ட, இரண்டாம் உலகப் போரில் அது கைப்பற் றிய தேசங்களிலும் அரங்கேறியது. ஜேர்மனிய உதாரணம் வெளிப்படையாக, இனப்படுகொலையானது உள்நாட்டு - சர் வதேச ஆகிய இரண்டையும் சிக்கலாக்குகிறது. இனப்படு கொலை என்ற பிரச்சனையை முற்றிலும் 'உள்நாட்டு' வரைய றைக்குள் நோக்குவதோ அல்லது எளிமையாக 'சர்வதேச' வரையறைக்குள் அடக்குவதோ பொருத்தமாக இராது. இது குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இனப்படுகொலை உறவுகளை உருவாக்கும் கட்டமைப்பு சூழல்களைப் புரிந்து கொள்வதற்கு சர்வதேச உறவுகள் மையமாக உள்ளன. இந்தச் சூழல்கள், இனப்படுகொலை யைத் தவிர மற்ற அச்சுகளில் கட்டமைக்கப்பட்ட பெரிய அள விலான உறவுகளைப் பற்றியது, இதில் பல சர்வதேச அரங் காடிகள் - 'குற்றவாளிகள்' மற்றும் 'பாதிக்கப்பட்டவர்கள்' மட் டுமல்ல, 'பார்வையாளர்களும்' - செயல்படுபவர்களாகவோ அல்லது தொடர்பு கொள்பவர்களாகவோ இருக்கின்றார்கள். இனப்படுகொலை மோதல்களில் அரங்காடிகள் அரசுக ளுக்கு இடையேயான அரச, சமூக உறவுகள் ஒரே நேரத்தில்

செயல்படுவதை அவதானிக்கவியலும்.

இனப்படுகொலை நீண்ட காலமாக ஐரோப்பிய வரலாற்றின் ஓர் அம்சமாக இருந்தது. மத வழிப்பட்ட வன்முறையாக, அரசியல் ஒடுக்குமுறையாக, காலனித்துவ சூழல்களிலும் எனப் பல்வேறு வகைகளில் அது வெளிப்பட்டது. 1860-ல் இருந்து மக்கள்சார் அரசியலில் முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்தன. இது முதலில் தென்கிழக்கு ஐரோப்பாவிலும் பின்னர் கிழக்கு ஐரோப்பாவிலும் பரந்த ஐரோப்பிய ஒழுங்கிற்கு பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியது. ஒட்டோமான், ரோமானோவ் மற்றும் ஹாப்ஸ்பர்க் பேரரசுகளின் சிதைவில், தேசியவாதம் பெருகிய முறையில் பரவலாக மாறியது. பால்கன் தேசியவாதம் முதலாம் உலகப் போரைத் தூண்டுவதற்கு உதவியது, ஆனால் இது நடந்து கொண்டிருந்தவுடன், ஏகாதிபத்தியங்க




ளுக்கு இடையிலான மோதலின் இயக்கவியலும் அதன் வடிவங்களும் இனப்படுகொலையின் வளர்ச்சியை மேலும் மேலும் நிபந்தனையாக்கியது. ஓட்டோமான் பேரரசின் மையப் பகுதியான அனடோலியாவில் ஆர்மேனியர்கள் மற்றும் பிற கிறிஸ்தவர்களின் படுகொலைகள் இதற்கு முன்னர் நடந்திருந்தாலும், 1915 இனப்படுகொலைக்கான ஊக்கியாக ரஷ்யாவுடனான போர் இருந்தது. அத்துடன், போரின் மீதான கண்டனம் மேலும் பெரிய அளவிலான இனப்படுகொலை வன்முறையைக் கொண்டுவந்தது, இது முன்னாள் ஒட்டோமான் நாடுகளில் மட்டும் நடந்தது அல்ல. கிரேக்க மற்றும் துருக்கியப் படைகள் 1918 - 21-ல் கொள்ளையடித்து, ‘மற்ற’ மக்களை வெளியேற்றியது, இது பெரும்பாலும் கொலைகாரத்தனமானதாக இருந்தது. பல்வேறு இனப்படுகொலைக் கொள்கைகளும் செயல்களும் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புடையவை, அவை எவ்வாறு விளக்கப்பட வேண்டும் என்பது பற்றிய அடிப்படைக் கேள்விகளை இந்தப் புதிய வரலாற்றுக் கேள்விகள் எழுப்புகின்றன.

சர்வதேச உறவுகளை மாற்றுவது பெருகிய முறையில் தேசியவாத அரசியலைத் தூண்டியது, இது 19-ம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து சர்வதேச உறவுகளில் பெருகிய முறையில் உட்பொதிக்கப்பட்டது. கிழக்கு - மத்திய ஐரோப்பாவில் பழைய பேரரசுகளின் பலவீனம் தேசியவாதங்களைத் தூண்டியது. இது புதிய தேசிய அரசுகளுக்கும் பேரரசுகளுக்கும் இடையே மோதல்களை உருவாக்கியது. இதில் ‘பிற’ தேசிய மக்கள் எதிரிகளாகி, வெளியேற்றப்பட்டார்கள். அவர்களே இந்த மோதலின் இலக்காகி மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் அவை இன்றுவரை இனப்படுகொலை என்ற வரையறைக்குள் உட்படவில்லை.

சர்வதேச ஆயுத மோதல்கள் தீவிர தேசியவாதிகள் அதிகாரத்திற்கு வருவதில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தது. அவர்களுக்காக வன்முறை வெளியேற்றம் மக்கள் ‘பிரச்சினைகளை’ தீர்ப்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறையாக இருந்தது. சர்வதேச போர் மற்றும் மோதல்கள் பெரும்பாலும் உள்நாட்டு அரசியலை தீவிரமயமாக்க உதவின. அத்துடன் தீவிர தேசியவாதிகளை அதிகாரத்திற்கு கொண்டு வந்தது. குறிப்பாக இளம் துருக்கியர்களின் எழுச்சியும் (முதல் உலகப் போருக்கு முந்தைய போர்களில் ஒட்டோமான் இழப்புகளுக்கு பதில்) ஜேர்மனியில் நாஜிகளின் எழுச்சியும் குறிப்பிடத்தக்கது. பிந்தையதை ‘உள்நாட்டு’ நிகழ்வாகக் கருதப்படக்கூடாது என்பது முக்கியமானது. இது முதலாம் உலகப் போரின் சர்வதேச முடிவுகளாலும் (இராணுவவாதம், ஜேர்மனி நடத்தப்பட்ட விதம் மீதான வெறுப்பு) மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்வதேச பொருளாதார நெருக்கடியாலும் ஏற்பட்ட விளைவுகளால் உருவானது. ஜேர்மன் நேச நாடுகளான ஐரோப்பாவில், தீவிர தேசியவாதிகள் அதிகாரத்திற்கு வருவது, ஜேர்மனி கட்டவிழ்த்துவிட்ட சர்வதேசப் போரின் நேரடி விளைவாகும்.

சர்வதேசப் போர் தேசியவாதக் கொள்கைகளை தீவிரப்படுத்தியது. இது நாடு கடத்தப்படுதல், வெகுஜன கொலைகள் போன்றவற்றுக்கான வாய்ப்புகளை வழங்குகிறது. காலம் முழுவதும், எல்லாவற்றுக்கும் மேலாக சர்வதேசப் போர்தான் அரசியல் ரீதியாக முன்னர் சாத்தியமில்லாத ‘தீர்வுகளை’ செயல்படுத்தியது. பல தேசியவாதிகளுக்கு, கிழக்கு ஐரோப்பாவில் 1939-45 போரின் பெரும்பகுதி இனப்படுகொலைக் கொள்கையின் விளைவாகும். சர்வதேசப் போர் பிராந்திய விரிவாக்கத்திற்கான வாய்ப்பை வழங்குவதுடன் மக்கள் தொகை வெளியேற்றம் கொலைகாரக் கொள்கைகள் அதிகரிக்கவும் தூண்டியது.

நீண்ட வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இனப்படுகொலைக்கும் சர்வதேச உறவுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பற்றி நாம் என்ன புரிந்து கொள்ளவியலும் என்ற வினாவை ஆழமாகச் சிந்திக்கவேண்டியுள்ளது. குறிப்பாக சமகால உலக அரசியலில் இனப்படுகொலை உற்பத்தியின் கட்டமைப்பை அது எவ்வாறு பாதித்துள்ளது? முதலாவதாக, இனப்படுகொலை மற்றும் சர்வதேச ‘அமைப்புகள்’ ஆகியவற்றுக்கு இடையேயான உறவுகளை சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசியல் மோதல்களின் கூட்டு விளைவாக நோக்க வேண்டும். இரண்டாவதாக, சர்வதேச நிறுவனங்களும் சட்டங்களும் வல்லரசு நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகளுக்கும் வல்லரசுகளின் இனப்படுகொலைளுக்கு இவையாற்றும் எதிர்வினைக்கும் உள்ள தொடர்பையும், அவை இனப்படுகொலை உற்பத்தியில் எப்படி தாக்கம் செலுத்துகின்றன என்பதையும் அவதானிக்கவேண்டும்.



meenilankco@thaiveedu.com

# சுந்தர ராமசாமியின் திறனாய்வு அணுகுமுறை - பொருண்மைக்களம்

–சு. வேணுகோபால்

2

### கற்பனையும் யதார்த்தமும்:

மென்மையான குரல் தன்மையுடைய தி.ஜா., கி.ரா., வண்ணதாசன் முதலியோர்கள் வாசகனை வாழ்வின் மீது 'சுவராஸ்யம்' கொள்ளச் செய்யும் பொருண்மைக்களப் பின்னணியில் தங்கள் பார்வைக் கோணங்களைப் படைப்பில் பொதித்து சிருஷ்டித்திருப்பதாக சு.ரா. கருதுகிறார். இந்தக் கற்பனை மனோபாவத்தை நம்பகத்தன்மையோடு படைத்திருப்பதாக சுட்டுகிறார்.

இதுபற்றி 'யதார்த்த தளத்துக்குரிய விசாரணைகள் சூட்சுமமாகவும், அப்பட்டமாகவும் பயன்படுத்தப்படும் நிலையில் கனவுகளின் கலப்பு செல்லுபடியாகிறது. யதார்த்தத்தின் மேல் கனவின் பனிப்படலத்தை விரித்த வெற்றிகரமான கலைஞன் என ஜானகிராமனைச் சொல்லலாம்....'[13] என்கிறார். இவரைத் தொடர்ந்து வண்ணதாசன், கி.ரா. முதலியவர்களையும் குறிப்பிடுகிறார்.

இந்தப் படைப்புலகப் பின்னணியின் அடிப்படையிலேயே அவர்களின் பொருண்மைக்களத்தில் அமைந்திருக்கும் பார்வைக் கோணங்களைக் காண்கிறார்.

தி. ஜானகிராமன் தன் படைப்புலகப் பொருண்மைக் களத்திற்கு, மனித உணர்ச்சிகளை மையமாகக் கொண்டிருப்பதாகவும், இவ்வுணர்ச்சிகளே வாழ்வின் நெருக்கடிகளைத் தீர்மானிப்பதாகவும் அவரது பார்வைக் கோணம் அமைந்திருப்பதை கணிக்கிறார்.

இந்தப் பார்வைக் கோணத்தை 'மனிதனின் வீழ்ச்சியையும், பிறழ்வையும், தத்தளிப்பையும் அனுதாபத்துடன் பார்த்தவர். ஒழுக்கம், தர்மத்தின் விதிகள் இவற்றைத் தாண்டி உணர்வு நிலைகளே மனித வாழ்வைத் தீர்மானிக்கின்றன என்பதில் நம்பிக்கைக் கொண்டிருந்தவர்'[14] என்று சு.ரா. கணக்கிடுகிறார்.

மேலும் தி. ஜானகிராமனின் படைப்புலப் பொருண்மைக் களம் இரண்டு அடுக்குகளால் பிணைந்து காணப்படுவதாக இங்கு விளங்கிக்கொள்ளலாம்.

- புற உலகிலிருந்து பெற்ற அனுபவங்களில் மேன்மையான கூறுகளை மட்டுமே பிரித்தெடுத்து கலையாகப் படைத்தளித்தல்.
- அவை எப்போதும் கடினத்திற்கு ஒத்துவராத வாழ்வின் மென்மையான உணர்ச்சிகளை வழவழப்பான முறையில் செய்நேர்த்தி ஆக்கி இருத்தல்.

தி. ஜானகிராமன் தன் அனுபவங்களின் தொகுப்பில் மென்மையான விசயங்களை மட்டுமே படைப்புத் தேவைக்குப் பயன்படுத்திக்கொண்டவர் அதனை உணர்வு நிலையில் நிகழ்வுக் களமாக்கி விடுவதால் வாசகனை நம்பகத்தன்மை கொண்டுவிடச் செய்கின்றன.

'வாழ்வின் சாரத்தை நேர்முகமாகப் பெறும்போது நாடக நடிகர்களை நாடகத்திற்கு மறுநாள் காலையில் பார்ப்பது போல் மங்கிப் போய்விடும் வசிகரமாய் விடுகிறது' என்று சு.ரா. அவர் பொருண்மைக் களத்திற்கு ஏற்றுக்கொண்ட பகுதியைக் குறிப்பிடுகிறார்.

தி. ஜானகிராமனின் பாத்திரங்களின் குண இயல்புகள் - பேச்சுகள் - பாவனைகள் - மென்மையான உணர்ச்சிகள், ஆகியவற்றை மையமிட்டே சுழல்பவை. இவரின் பாத்திர வார்ப்புகளில் அழகற்றவர்களைக் காண முடியாது; இது ஒருமுகப் பார்வையாகும். ஆனால் மனித வாழ்க்கையில் ஏழ்மையும், குரோதங்களும், சூழ்ச்சிகளும், பேதங்களும் சர்வ சாதாரணமாகக் கலந்தே இருக்கின்றன. இவற்றையும் தன் கலைச் செழுமைக்கு உள்ளீடாக ஏற்றுக்கொண்டு இருந்திருப்பாரேயானால் மனித வாழ்வின் முழுப்பரப்பையும் இவரின் படைப்புகள் பெற்றிருக்கும். அதனைப் படைப்புலகிற்கு ஏற்றுக்கொள்ளாததின் தயக்கம் பெரும் குறையாகி நிற்பதாக மிகத் துல்லியமாகவே ஆராய்ந்துள்ளார்.

'கி. ராஜநாராயணன், ஜானகிராமனின் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஜானகிராமனைப் போலவே அபூர்வமான அழகுணர்ச்சியும், இரசனையில் திளைக்கும் மனோபாவமும் கொண்டவர். இவரது கதை உலகத்தைத் தமிழ் மண்ணுக்கே உரித்தான ஒரு பழத்தோட்டம் என்று சொல்லலாம். வித்தியாசமான மனிதர்களைக் கதாபாத்திரங்களாக மாற்றும் ஆற்றல் இவர் கலை வண்ணம்'[15] என்கிறார்.

இங்கு, கி. ராஜநாராயணனின் படைப்புலகப் பொருண்மைக் களம் என்ன என்பதைத் தெளிவாக வரையறுத்துக் கூறவில்லை. படைப்புலகிற்கு அவர் எடுத்துக்கொண்டிருக்கும் பின்னணி பற்றியே பேசியுள்ளார். தன் படைப்புலகிற்கு அனுபவச் செழுமையிலிருந்து வாழ்வின் தெளிவிற்காக எப்பகுதி

யைத் தன்னுடைய பார்வைக் கோணமாக அவர் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்று ஆராயவில்லை.

'கதவு' தாமரையில் வந்தபோது கி.ரா.விற்கு '.... கதை (Chekovian) பாணியில் இருப்பதாக'[16] சு.ரா. கடிதம் எழுதியுள்ளார். இங்கு கூட, அவர் எடுத்துக்கொண்ட பொருண்மைக்கள முறையைப் பற்றிப் பேசவில்லை. இரண்டு குண இயல்புகளை எதிரும் புதிருமாக வைத்து வளர்த்துப்போகும் பாத்திர வார்ப்பு முறையினையே பேசியுள்ளார் எனலாம்.

பொருண்மைக் களத்தைப் படைப்புலகிற்குத் தேர்ந்தெடுக்கும் போது வண்ணதாசன் இரண்டு சிக்கல்களில் மாட்டிக் கொண்டு விடுவதாகக் கூறுகிறார்.

ஒன்று, குறிக்கோளைச் சென்றடைவதில் கதையை மெதுவாக நகர்த்திச் செல்வதால் பொருண்மைக்களம் வலுவற்று நின்று விடுதல்; இரண்டாவது இவரின் கற்பனைக் கோலங்கள் யதார்த்தம் கொள்வதில் உள்ள மேலோட்டமான நிலை என்பதாக அவர் சுட்டிக்காட்டுகிறார்.

சு.ரா. சொல்லுவார். '(வண்ணதாசன்), அசோகமித்திரனின் குடும்பத்தைச் சேர்ந்தவர் எனக் கருதத்தக்கவர் என்றாலும் குறிக்கோளைச் சென்றடைய அசோகமித்திரன் தன் சிறகுகளை வெகு கணக்காகப் பயன்படுத்தும் போது சிறகுகளைக் கோதிக் கொண்டிருப்பதிலேயே வண்ணதாசனின் சிறுகதைப் பொழுது முடிந்துவிடுகிறது. நுட்பங்களில் வண்ணநிலவனுக்கு நிகரானவர். ஆனால் வண்ணநிலவன் போல் யதார்த்தம் கொள்ளாமல் கற்பனையின் சபலங்களையும் ஆகர்ஷணங்களையும் இவர் கொண்டு விடுகிறார்'.[17]

அதேபோல் வண்ணதாசனை வேறோர் இடத்தில் 'வாழ்வு பற்றிய ஒரு மயக்க நிலை ஊடாடி நிற்கிறது. விழிப்புடன் வாழ்வைக் கவனித்து, அதன் முழு வீச்சைக் கிரகித்துக்கொள்ளும் உன்னிப்பைத் தாண்டுவதற்குப் பதிலாக மயக்கத்தின் சுவ ராஸ்யத்தை ஏற்படுத்துகின்றன'[18] என்கிறார் சு.ரா.

தி.ஜா., கி.ரா., படைப்புகளில் சுவராஸ்யத்தோடு யதார்த்தமும் நிலைபெறும் போது வண்ணதாசன் படைப்புகள் கற்பனையில் கூறுகளைப் பெற்றுக்கொண்ட அளவு யதார்த்தம் கொள்ளவில்லை. மேலும் வாழ்வு பற்றிய மயக்கநிலை இவரின் படைப்புக்களில் அதிகம் இடம் பிடித்துக் கொள்வதாக வேறுபடுத்திக் காட்டுகிறார்.

அதாவது வாழ்வின் முழுப்பரப்பை எடுத்துக்கொண்டு படைப்பின் பொருண்மைக் களத்தைத் தீர்மானிக்காமல் வாழ்வின் 'நளினமான' பகுதிகளை மட்டும் படைப்பாக்கத்திற்கு ஏற்றுக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். யதார்த்தத் தன்மையின் மேல் வலுவான பார்வையைச் செலுத்தி வாழ்வினை பரிசீலனை செய்யாமல், வாழ்க்கையில் ஏற்படும் புல்லரிக்கும் சில நிகழ்வுகளைத் தன் படைப்பின் பொருண்மைக்களத்திற்குத் தேர்ந்தெடுத்திருப்பதாக சு.ரா. கூறுவதிலிருந்து அறியலாம்.

## காலப்பிரக்ஞை அற்றவர்கள்:

நிகழ்கால வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு எதிர்கால வாழ்விற்குத் தடம் பதிக்கும் பணியை மேற்கொள்ளாமல், கடந்த கால வாழ்க்கை மீது ஏக்கம் கொண்டு இயங்கியவர்களின் பொருண்மைக் களத்தை சு.ரா. கவனப்படுத்தி யிருக்கிறார்.

க.நா.சு.வின் சிறுகதைகளுக்கும் அவை வெளிவந்த காலத்திற்குமான பிணைப்பு மிகவும் பலவீனமானது என்று மதிப்பிடுகிறார் இது பற்றிக் கூறுகிறபோது 'மறைந்து போய்விட்ட காலத்தின் மதிப்பீடுகளை இவை ஏக்கத்துடன் திரும்பிப் பார்க்கின்றன'[19] என்கிறார்.

க.நா.சு.வின் பொருண்மைக்களம் காலப்பிரக்ஞையைத் தவற விட்டு விட்டு இறந்தகால மதிப்பீடுகளில் அக்கறை கொள்கிறது. இவ்வாறு காலப்பிரக்ஞை நிராகரிக்கிறபோது கதையின் உயிரோட்டம் தடைபட்டுப்போய் விடுகிறது. இது போலவே, சி.சு. செல்லப்பா, ந. சிதம்பரசுப்பிரமணியன், ந. முத்துச்சாமி, நாஞ்சில் நாடன் முதலியோருடைய படைப்புக்களின் பொருண்மைக் களமும் நிகழ்கால வாழ்க்கையை மறந்து கடந்தகால வாழ்க்கை பற்றிப் பேசும்விதமாக அமைந்திருப்பதாக சு.ரா.தெளிவு படுத்துகிறார்.

இவர்களைப் பற்றி சு.ரா.வின் மொழியில் 'நழுவிச் செல்லும் காலத்தின் முகச் சாயல்களை மீண்டும் வரைந்து கலையில் பிணைத்துப் போட்டு வைக்கும் காரியம்'[20] இவர்களுடையது.

## அன்பிற்கு முக்கியத்துவம் அளித்தவர்கள்:

ந. பிச்சமூர்த்தி பற்றிக் கூறுகிறபோது, 'ஜீவராசிகள் தம் அடிப்படை ஒற்றுமைகள் பற்றிய சுயபோதம் பெற்று, அன்பில் கரைந்து கூடி வாழும் வாழ்வை கனவு காண்கிறார். இந்தக் கனவு அவர் கதைகளில் இறங்கும் போது மனித மனத்தின் மேல்நிலைப் பதிவாகின்றன. அறிவுகள், வசதிகள், எந்திரங்கள், செல்வங்கள் ஆகியவற்றின் பெருக்கம் வாழ்வின் எளிமையைக் குலைத்துப் பின்னப்படுத்தும் என்றும், மனித நேயமற்ற விஞ்ஞானம் வாழ்வை நிர்மூலப்படுத்திவிடும் என்றும் பதைத்தவர்'[21] என்று இவர் தன் படைப்புலகப் பொருண்மைக் களத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்ட விதத்தினை மையப்படுத்துகிறார்.

காலமாற்றத்தின் விளைவால் புதிய வாழ்க்கைக்கான தெளிவு தேவைப்படுகிறது. அந்தத் தெளிவு 'இயற்கை' என்ற நம் மரபு வழியான தளத்திலிருந்து காலமாற்றத்திற்கு ஏற்ப, மரபுவழிப்பட்ட இயற்கைச் சித்தாந்தங்களையும், நவீன உலகில் அறிவு வளர்ச்சியையும் பக்கத்தில் பக்கத்தில் நிறுத்தி அதனை மனித வாழ்க்கைக்கான புரிதலுக்கு இட்டுச்செல்கிறது. இத்தகைய படைப்புலகம் ந.பி.யினுடையது என்று சு.ரா. கருதுவதாகக் குறிப்பிடலாம்.

கிருஷ்ணன் நம்பியை எக்குடும்பத்தவர் என சு.ரா. குறிப்பிடவில்லை. ஆனால் அவர் பற்றிக் கூறவந்த சு.ரா. 'தான் மீண்டும் குழந்தையாகிவிட வேண்டும் என்ற கனவு கிருஷ்ணன் நம்பியின் சிறுகதையில் அடிநாதமாக ஒலிக்கிறது. அன்பின் நெகிழ்ச்சியில் உருகும் உலகம் இவருடையது. அழகுகளின் பரவம் கொண்டு குழந்தைகளின் இருப்பில் குதூகலம் கொள்ளும் உலகம். அன்பின் நெகிழ்ச்சியையும் குதூகலமும், அழகுகளும் வாழ்வின் தளத்தில் கேவலப்பட்டுக் கிடக்கும் பரிதாபத்தையும் கிருஷ்ணன் நம்பியால் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை'[22] என்கிறார்.

இவ்வாறு மனித இனத்தை ஈர்ப்புக்கொள்ளும் அன்பின் அடிப்படையிலான உறவுநிலைகளில் அவருடைய படைப்புக்




கள் இயங்குவதாக மதிப்பிடுகிறார்.

பாரதி தன் இலட்சியக் கனவிற்குக் கலாசார ஏக்கம் கொண்டு இயங்கியதும், கிருஷ்ணன் நம்பி, மனித துக்கங்கள் அன்பின் நெகிழ்ச்சியால் தத்தளிப்பதாகக் காட்டுவதும் ஒன்றுக் கொன்று தொடர்புடையதாகும்.

வண்ணநிலவனின் பொருண்மைக்களத்தை 'வண்ணநிலவ னின் கதாபாத்திரங்கள் வாழ்க்கைச் சோதனையில் அனைத் தையும் பறிகொடுத்த பின்னரும் அன்பின் நெகிழ்ச்சியைத் தக்கவைத்துக் கொண்டிருப்பவர்கள். மனிதனை மனிதனாகக் காண்பதற்கு இவருக்குக் கடைசியாக மிஞ்சியிருக்கும் அடை யாளம் இதுதான்'[23] என்கிறார் சு.ரா.

## யதார்த்தவாதிகள்:

ஜெயகாந்தன் தன் படைப்புலகிற்கு எடுத்துக்கொண்ட பொருண்மைக்களம் நம் மரபின் உறவுச் சிக்கல்களைக் காலத்தின் முன் நிறுத்தி உடைத்தெறிவதாகும். நினைத்ததை எல்லாம் சொல்லிவிட வேண்டும் என்ற வேகம், கலையாக மாற்ற வகை செய்யாமல் ஆக்கிவிட்டது.

இவரைப் பற்றி '.... ஊஞ்சலில் அமர்ந்து வாசனைப் பாக்குத் தூள் போட்டுக் கொண்டிருந்த சிறுகதையைத் தெருவில் இறக்கினார் புதுமைப்பித்தன். ஜெயகாந்தன் அதை வாழ் வின் கடைசி மட்டம் வரையிலும் ஓட ஓட விரட்டினார். ஜெய காந்தனின் கதைகள் முன் முடிவு கொண்டவை. எனினும் அனுபவச் செழுமையும் வர்ணங்களும், கற்பனை ஆற்றலும், மனித இயல்புகளை ஒரு எல்லை வரையிலும் அனுசரித்துச் செல்லும் கதைகளாக இவரது எழுத்துக்கள் வெற்றி பெறக் காரணங்களாக அமைகின்றன'[24] என்கிறார்.

சு.ரா.வின் கண்ணோட்டத்திலிருந்து காணுகிறபோது, ஜெய காந்தன், படைப்பாக்கத்தில் ஈடுபடும்போது மூன்று நிலைப் பாடுகளை மனதில் வைத்து இயங்குகிறார் எனலாம். வாச னையைத் தன் கருத்தோடு உடன்பட வைப்பதற்கான கவ னம்; இரண்டாவது கதையினைத் தான் எண்ணிய நோக்கத் தில் கொண்டு சென்று முடிக்கவேண்டும் என்ற முன் திட்டம்; இந்த இரண்டினை மனதில் இருத்திக்கொண்டே மூன்றாவ தாக வாழ்வின் அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளைப் பொருண்மைக்களமாக வைத்துப் படைப்பை உருவாக்கும் பார்வைக் கோணம் ஜெயகாந்தனிடம் காணப்படுவதாக திற னாய்கிறார்.

வாசகனை மனதில் வைத்துப் படைக்க எண்ணும்போது பொருண்மைக் களம் சிறுகதைக்காக அமையாமல் செய்தி யைச் சொல்வதற்காக அமைந்து விடுகிறது. இதனை சு.ரா. 'மேடையில் குரல் எடுத்துப்பேசுவதற்காகப் பிறந்தவை' என்பார்.

ஜெயகாந்தன் முற்காலச் சிறுகதைகளுக்கு எடுத்துக் கொண்ட களம் அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளைப் பார்

வைக்கு உட்படுத்தியதாகும்.

ஆனால் ஜெயகாந்தனின் பிற்காலச் சிறுகதைகள், கீழ் மத்தி யதர குடும்பத்தவர்களின் வாழ்க்கை மேன்மைக்காகச் சமூக உறவுச் சிக்கல்களை உடைப்பதில் ஆர்வங்காட்டியுள்ளார் என்பதும், இதனை அவர் தனது பொருண்மைக் களமாக ஏற் றிருந்தார் என்பதும் பற்றி சு.ரா. ஒன்றும் கூறவில்லை.

ஜி. நாகராஜனின் படைப்புலகம் புகைப்படக்கலைஞன் காட் சிப்படுத்தல் போல் அமைந்திருப்பதாகச் சுட்டுகிறார். மேலும் ஆசிரியர் குறுக்கீடற்ற முறையில், இவர் படைத்தளித்த படைப்புகளை சு.ரா. விமர்சிக்கையில் 'ஜி. நாகராஜனை புது மைப்பித்தன் வழியில் வந்த மூர்க்கமான யதார்த்தவாதி என்று சொல்லலாம். அவருடைய உலகம் வெளி உலகத்தின் இருள் உலகம். மதிப்பீடுகளுக்கும் ஒழுக்கங்களுக்கும் அப் பால் தள்ளப்பட்டுவிட்ட ஜீவன்களோடு தன்னை இணைத்துக் கொண்டவர் இவர். இயற்கையின் அகலமான வீச்சை விட்டு விட்டு, பிறழ்வுகளையும் விதி விலக்குகளையும் சரிவுகளை யும் கண்டு சொன்னவர். இதே உலகத்தைச் சேர்ந்தவர்கள், ஜெயகாந்தன் கதைகளில் தங்கள் தாழ்வுகளுக்குச் சமூக நிலைகளைக் குறைகளாகக் காண்கிறார்கள். நாகராஜன் கதாபாத்திரங்களுக்கு விமர்சனம் இல்லை; சீரழிவும் தத்த ளிப்புமே உள்ளன. அதற்கான காரணங்களும் அவர்களுக் குத் தெரிவதில்லை. விமோச்சனங்களும் தெரிவதில்லை'[25] என்கிறார்.

ஆக, ஜி. நாகராஜன் படைப்புலகம் புற உலகின் சீரழிவுகளை நேர்மையான முறையில் பதிவு செய்து, அச்சீரழிவிற்கான கார ணங்களை வாசக உலகிற்கு விட்டுவிடுவதாக அமைந்துள் ளது எனலாம்.

## கணிப்புகளுக்கு அப்பால் நகர்த்துதல்:

சு.ரா.வின் சிறுகதைகளை நாம் கவனிக்க முற்படும்போது, வாசகனின் கணிப்புகளை உடைத்து வேறொரு எல்லையில் அவை நின்று தளமாற்றத்தை நிகழ்த்துவதாகக் காணலாம்.

மேலும், இவரின் படைப்புக் களத்தை மூன்று கட்டங்களாகப் பிரிக்கின்றனர் விமர்சகர்கள். ஆரம்பகாலக் கதைகள் சமூக தளத்திலும், இடைப்பட்ட காலங்களில் வாழ்வின் பிரச்சினை களை உணர்வின் தளத்திலும், பிற்காலக் கதைகள் தனிமனி தனுக்கான விடுதலைக்கும் எனச் சிறுகதைப் படைப்புல கத்தை அமைத்துக் கொண்டவர் சு.ரா.

இம் மூன்று காலகட்டத்துக் கதைகளுக்கும் பொதுவாக ஓடும் அடிச்சரடு ஒன்று உண்டு. அது அவரின் பார்வைக் கோணமா கும். யதார்த்த தளத்தில் கதையை நிகழ்த்திக்கொண்டு, மனி தனின் பிறழ்வுகளை அனுபவ பாதிப்பிலிருந்து பதிவு செய்து மேன்மையான வாழ்க்கையைத் தேட முற்படுவதாகும்.

இதனை ஒட்டி சு.ரா., '... வாழ்வின் ஸ்தியும், ஸ்திதியின் போதாமையும்தான் என்னை அலட்டும் பிரச்சினைகள். இப் போது இருப்பதை விடவும் செம்மையாக வாழ நமக்குச் சாத் தியக்கூறுகள் அனைத்தும் இருந்தும் அவ்வாறான வாழ்க்கை நம்மை ஏன் வந்தடையவில்லை என்ற சங்கடம் எனக்கு இருக் கிறது. இவ்வளவு விவேகங்கள் கூடிய பின்பும் கீழ்மையி லேயே சிக்குண்டு கிடக்கிறோம். இந்தப் போதாமைக்கு எதி ரான போராட்டத்தைத் தான் பரிபூரணத்தை நோக்கிய யாத்தி ரையாக நான் கூறுகிறேன். எனது அனுபவ உண்மைகளை இந்தச் சமூகத்தின் முன் வைக்க வேண்டிய பொறுப்பில் நான் இருக்கிறேன். அப்பொழுதுதான் நான் ஒரு எழுத்தாளன்'[26] என் கிறார்.

எனவே, சு.ரா. தன் படைப்புத் தொழிலின் நோக்கமாக, வாழ் வின் பூரணத்துவத்தைக் கலையாக்கும்போது கலையும் முழு மையடைந்து பிறக்கவேண்டும் என்று கருதுகிறார் எனலாம்.

ஆ. மாதவன், புற உலகின் பிறழ்வுகளைப் படைப்பிற்குரிய களமாகத் தேர்ந்தெடுத்தாலும் அதனோடு உணர்வின் தள மும் கூடி வாசக உலகில் நம்பகத் தன்மையை அவருடைய படைப்பு ஏற்படுத்தி விடுகிறது என்கிறார். இவரின் படைப்பு கள் மனிதனின் உள் உலகங்களை எழுப்பிக் காட்டுபவை என்று சு.ரா. நம்புகிறார்.

மேலும், இவரின் படைப்பு அடிப்படையைப் பற்றி 'புதுமைப் பித்தனுக்கும் ஜி. நாகராஜனுக்கும் இடைப்பட்ட ஒரு யதார்த் தவாதியாக ஆ. மாதவனைச் சொல்லலாம். மனிதனின் அந்த ரங்களைக் கண்டு சொல்வதில் மிகுந்த ஆசை கொண்டவர் இவர். சுய அனுபவங்கள் சார்ந்து நிற்பதாலும் எப்போதும் நம்பகத்தன்மைமைக்கொண்டு விடுகின்றன இவரது கதை கள். பொருளாதார ஏற்றத்தாழ்வுபோல் ஒருக்கால் அதற்கும் மேலாக பாலுணர்ச்சி உந்தல்கள் மனிதனை ஆட்டிக் குலைக்கும் உண்மைக்கு அழுத்தம் தந்தவர். எவ்வாறு மனி தன் இருக்க வேண்டும் என்பது அல்ல அவ்வாறு இல்லாமல் போனதற்கான விமர்சனமும் அல்ல - நமது சுலபக் கணிப்புக ளுக்கு அப்பால் மனிதன் எவ்வாறு இருந்து கொண்டிருக்கி றான் என்பதைப் புரிந்து கொள்வதே இவர் அடிப்படை'[27] என் கிறார்.

மாதவன் தன் சிறுகதைகளுக்கு அமைத்துக்கொண்ட பொருண்மைக்களம் 'மனிதனின் அந்தரங்கங்களை கண்டு சொல்வதை' மையமாகக்கொண்டு அமைந்திருப்பதாக குறிப் பிடுகிறார். இந்தப் பொருண்மையின் அடிப்படைக் கட்டுப்பா டுகளுக்கு உடன்படாத மனித மனத்தைப் பார்வைக்கு முன் கொண்டு வருவதாகும்.

அதாவது ஜி. நாகராஜன் கையாளும் விமர்சனமற்ற முறை யில் அனுபவங்களை மட்டும் பதிவு செய்யாமல் புதுமைப்பித் தன் போல், முழுக்க முழுக்க வாழ்வை விமர்சித்தலையே ஏற் றுக் கொள்ளாமல் இடைப்பட்ட நிலையில் நம் கணிப்புக ளுக்கு அப்பாலும் செல்லும் மனித மனங்களின் உள் பிறழ்வு களை தொட்டுக்காட்டுவது மாதவனின் படைப்புலக பொருண்மைக் களமாக சு.ரா. நினைத்துப் பார்த்திருக்கிறார் எனலாம்.

## புதுமைப்பித்தனின் படைப்புலகம்:

மேலை நாட்டுச் சிந்தனைகளைப் படிப்பறிவின் மூலம் பெற்றி ருந்தாலும் அச் சிந்தனைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் நம் கலாசார வாழ்வைச் செப்பனிட்டுக் கொள்ள முயன்றவர் கள் பாரதி வழியிலான இலக்கியவாதிகள்.

யதார்த்தவாத குடும்பத்தவர்கள், சமரசத்திற்கு இடமளிக்கா மல், வாழ்வின் சிக்கல்களைக் காலத்தின் முன் நிறுத்தி விமர் சித்தவர்கள். இந்த விமர்சனங்களைச் செய்தியாக கொடுக் காமல் கலையாக்கித் தந்தவர்களில் முதன்மையானவர் புது

மைப்பித்தன் என்று சு.ரா. நம்புகிறார்.

பாரதியின் இலட்சியக் கனவுகள் இன்றுவரை நிறைவேறாத தற்குக் காரணம் புதுமைப்பித்தன் கண்டு சொன்ன நம் 'மனித னின் பலவீனங்கள்' தாம் என்கிறார். இந்த பலவீனங்களையே புதுமைப்பித்தனும், அவரைத் தொடர்ந்தவர்களும் படைப் பின் பொருண்மைக்களமாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு சம ரசத்திற்கு இடமளிக்காமல் உண்மைகளைப் பதிவு செய்ததி னால் இவர்கள் யதார்த்தவாதிகளாக மலர்ந்தனர் என்று நம்பு கிறார்.

எந்தத் தத்துவக் கோட்பாடுகளின் சிடுக்குகளிலும் சிக்கிக் கொள்ளாமல் தன் அனுபவங்களின் சத்தான பகுதியில் நின்று தொழிற்பட்டவர் புதுமைப்பித்தன். படைப்பிற்கும் வாழ் விற்குமான உறவை மிக நுட்பமாகக் கவனித்துக் கலை நேர்த் தியோடு தன் படைப்பைப் புதிய உலகிற்கு உலவவிட்ட வெற் றிகரமான கலைஞர். ஆனாலும் இவரின் காலத்தின் சிறுகதை இலக்கியம் தமிழில் வளம் மண்டிக்கிடக்கவில்லை. எப்ப டியோ கலைப் பெறுமானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அரசியல், சாதி, மதம் போன்ற கொள்கைகளுக்கு உடன்படா மல் 'உன்னதக் கலைஞன் நான்' என்ற மேதாவிலாசத்தோடு நின்றவராகப் புதுமைப்பித்தனைக் காண்கிறார் சு.ரா.

பாரதியின் குடும்பத்தவர்கள் மரபின் சரிவுகளுக்குத் துக்கப் பட்டபோது புதுமைப்பித்தன், நவீனகாலச் சிந்தனைப் போக் கில் விளைந்த வளர்ச்சியைக் கண்டவர். இதனால் அவரின் படைப்பில், மறைந்த காலத்தின் 'களிம்பு' சிறிதும் இல்லை.

புதுமைப்பித்தனின் கலை மனம், 'மரபின் வாரிசாகச் சிபாரிசு செய்ய அவருக்கு எதுவும் இல்லாமல் ஆக்கிவிட்டது. எதை யும் காப்பாற்றும் பொறுப்பும் அவருக்கு இருக்கவில்லை. சுற் றிவரக் காணக்கிடைத்த சகல கோலங்களிலும் ஒழிந்து கொண்டிருக்கும் ஊனங்களை அவர் அம்பலப்படுத்திக் கொண்டே வந்திருக்கிறார். லௌகீக தளத்தில் இதுதான் கடைந்தெடுத்த தறுதலைப்புத்தி. இலக்கியத்தளத்தில் இது தான் ஆகப் பெரிய பண்பாடு. உண்மையை அறிந்த நிமிடத் தில் போட்டு உடைப்பது...'[28]

ஆக, புதுமைப்பித்தன் படைப்பிற்குத் தேர்ந்தெடுத்துக் கொண்ட பொருண்மைக்களத்தைச் சுருக்கமாகக் கூற வேண் டுமானால் நிகழ்கால வாழ்க்கையின் போலிப் பெருமைகளை விமர்சனத்திற்கு உள்ளாக்கிக் கீழ்மைகளை ஒளித்துவைத் துக் கொள்ளாமல், கூச்சமின்றி அதனை போட்டுடைக்கும் மனோபாவத்தை ஏற்றுக் கொண்டார் எனலாம். இதன் மூலம் மேன்மையான வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்க முயற்சி செய் யும் தன்மையை அடிநாதமாகக் கொண்டு இவரின் பொருண் மைக்களம் விளங்குவதாக விளங்கிக் கொள்ளலாம்.

கு. அழகிரிசாமியைக் கு.ப.ராவின் குடும்பத்தைச் சேர்ந்தவ ராக சு.ரா. காண்கிறார். 'அழகிரிசாமி புதுமைப்பித்தனின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கருத ஏதுக்கள் இருப்பினும், உண்மையில் அவர் கு.ப.ராவின் குடும்பத்தைச் சேர்ந்தவர். கு.ப.ரா.வின் வலிமையான வாரிசு. மனித இயல்பைப் புது மைப்பித்தனைப் போல் ஒரு சிடுக்காகக் காணாமல் அமைப் பின் மீது அதிக குறைகளைக் கண்டவர். ஆட்டிக்குலைக்கும் வாழ்விலும் மேன்மைகள் இவரைப் புல்லரிக்கச் செல்கின்றன. கு.ப.ரா.வைப் போல் எளிமையான சாயல்களும், மென்மை யான குரலும், மிகுந்த சிறுகதைப் பிரக்ஞையும் கொண்டவர்'[29] என்பதாகக் காண்கிறார்.

அழகியல் கூறுகள், கதை நகர்வு, குரல் தன்மை, மொழிநடை என்று எடுத்துக்கொண்டு, கலைஞர்கள் தொழில்பட்ட களம் எது என்று பார்த்தால் பாரதிக் குடும்பத்தில் உள்ளவர்களும் புதுமைப்பித்தன் குடும்பத்தில் உள்ளவர்களும் ஒன்றுபடும் இடம் நிறையவே உண்டு. கு. அழகிரிசாமியின் பொருண் மைக்களத்தை இப்படித்தான் மதிப்பிட முடிகிறது.

சிறுகதையின் கலைப்பெறுமான சாயல் மட்டும் கொண்டு பார்த்தால் கு.ப.ரா.வின் குடும்பத்தில் இவரை அடக்கலாம் என்பது உண்மையே. ஆனால் சுய சிந்தனையை முன் நிறுத்தி நிதர்சனவாதியாக இயங்குகின்ற போக்கும் இவரிடம் காணப்படுகிறது. 'திரிபுரம்', 'சிரிக்கவில்லை' போன்ற கதை கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

சு.ரா.வே ஓரிடத்தில்; 'மனித இயல்புகளை புதுமைப்பித்தன் ஒரு சிடுக்காக பார்க்கும்போது கு.ப.ரா. சமூக அமைப்பின் மீது குறைகளைக் கண்டவராக காண்கிறார்.' அப்படியானால், புதுமைப்பித்தன் குடும்பத்திலும் கு. அழகிரிசாமி அடங்கு வார் என்று ஆகிறது. உண்மையில், இலக்கியக் குடும்பங் களை இறுக்கமாக இனம் பிரிக்க முடியாது.

## வர்க்கச்சூழல்:

அசோகமித்திரன், திலிப்குமார் இருவரும் தாங்கள் வாழும் மத்தியதர வர்க்கப் பின்னணியில் சிறுகதைக்கான களத்தை அமைத்துக்கொண்டு செயற்படுகிறார்கள். இந்தப் பொருண் மைக் களம் அவர்களுக்கே உரித்தான பார்வைக் கோணங்க ளோடு அமைந்திருக்கின்றன.

அசோகமித்திரன் 'மத்திய தர வர்க்கத்தின் குரலெடுத்து அழ முடியாத இக்கட்டுகளை மிகுந்த கலை வெற்றியுடன் அவர் உருவாக்கி இருக்கிறார். வாழ்வின் பொறியில் மாட்டிக் கொண்ட விதம் பற்றியோ விடுதலை பற்றியோ ஏதும் யோச னைகள் அற்றவர்கள் இவர்கள். இக்கட்டுகள் அரிக்கும் போது வாழ்க்கையைச் சமத்காரம் குறையாமல் சுமக்கவேண் டிய நிர்ப்பந்தம் கொண்ட இவர்களின் அவஸ்தைகளைக் கலை உருவங்களாக மாற்றியிருக்கிறார்'[30] என்று மதிப்பிடுகி றார்.

ஆனால், அசோகமித்திரன் பற்றிய சு.ரா.வின் இந்த மதிப்பீடு அவருடைய ஒரு பகுதியைக் காட்டுவதாகவே உள்ளது: பல கதைகளுக்கு இது பொருந்துவதாக இல்லை. காட்டாகத் 'தந் தைக்காக' தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் கதைகளில் இக் கட்டான சூழ்நிலையில் தளைகளை அறுத்துக்கொண்டு புதிய வாழ்க்கையைத் தேடிக்கொண்டவர்களையே காட்டி யுள்ளார். இக் கதைகளில் இவர் போராட்டம் முடிந்தபின் நிற் கும் அமைதியைப் பொருண்மைக் களமாகத் தேர்ந்தெடுத்தி ருப்பதை மிகக் கவனமாகப் பார்த்தால் தெரியும்.

திலிப்குமாரின் பார்வைக் கோணத்தைச் சு.ரா. துல்லியமாகக் கணக்கிட்டுள்ளார். அவர், 'மத்திய தர வாழ்க்கையின் தத்த ளிப்பை அனுபவசாரத்தில் நின்று, முன் முடிவுகளின்றிச் சொல்கிறார். தங்களுடைய துன்பங்களைத் தாங்களே விலகி நின்று கிண்டலும் கேலியுமாகப் பார்த்துக் கொள்கிறார்கள்'[31] என்று சு.ரா. ஆராய்ந்துள்ளார்.

அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளைப் பாடுபொருளின் மையமிட்டுப் படைப்பவர்களாகப் பூமணியையும், சுரேஷ்குமார் இந்திரஜித்தையும் கவனப்படுத்துகிறார்.

பூமணி யதார்த்த தளத்தில் நின்று கதைகள் படைப்பவர். 'வாழ்வின் கொடுமையில் யந்திர நிலைக்குத் தாழ்ந்துவிட்ட இவரது கதாபாத்திரங்கள் வறண்ட பூமியில் கொடுமையான வெயிலுக்கு ஈடு கொடுப்பதில் மங்கிப்போன புதர்களையே நமக்கு நினைவுபடுத்துகிறார். சமூக நிலை பற்றியக் கோபமும், மனித நேயமும், கலை வெற்றி கூட்டுவதில் சிரத்தையும் கொண்டவர்.'[32]

பூமணி, சிறுகதைகளுக்கு அமைத்துக்கொண்ட பொருண்மைக் களத்தில் பிரச்சினைகள், வலுவான முறையில் அமைந்து பளிச்சென்று தெளிவுகளை ஏற்படுத்தாமல், மேலோட்டமான முறையில் அமைந்திருப்பதாக விமர்சிக்கிறார்.

இதற்கு சுய அனுபவங்களிலிருந்து வாழ்விற்கான மேன்மையான பகுதிகளைப் பதிவு செய்யாமல் செய்திவசமாகக் கேட்டவற்றைப் பதிவு செய்வதால் பொருண்மைக்களம் மங்கிப் போய்ப் பிறந்துள்ளது எனலாம்.

ஆக, அனுபவங்களைத் தொகுப்பதில் வித்தியாசங்கள் உண்டு. தேடி அலைந்து பெறும் அனுபவங்கள்; தன் வாழ்க்கைச் சூழலிலிருந்து தானாக வந்தடைந்த அனுபவங்கள்.

பூமணியின் கதைகள் முதல் வகையிலான அனுபவப் பாதிப்புகளை நினைவூட்டுபவை. இதனால் ஒரே அனுபவத்திற்குள் இருக்கும் பற்பல நெருக்கங்கள் இவருக்குத் தெரியாமல் போய்விடுவதால் பாத்திரங்களின் உயிர்த்துடிப்பு பாதிக்கின்றது.

சுரேஷ்குமார் இந்திரஜித் 'ஒதுக்கப்பட்ட மனிதன், சூழலும் வாழ்க்கை எந்திரத்தின் சக்கரங்களில் தொற்றி ஏற வழிவகை தெரியாமல் வியாகூலம் கொள்கிறான்'[23] என்று சு.ரா.வெளிக் காட்டுகிறார்.

### பார்வைக் கோணங்கள்:

பற்பல சிந்தனைப் போக்குகளின் விளைவால் - பின்னணியால் - சிறுகதைக்கான பொருண்மைகளிலும் வேறு வேறு அலைவரிசையில் பரிணமிக்கின்றன. அம்பை, சா. கந்தசாமி போன்றோர் தங்களுக்கான தனித்த பார்வைக் கோணங்களை ஒருமுகப்படுத்தி வெளியிட்டுள்ளனர்.

விந்தனுடைய எழுத்துக்கள் 'தன்னிறைவு கூடாத மக்களின் துன்பங்களை மனித நேயத்துடன் வெளிப்படுத்தியவர்... பொருளாதார நிலையையே மனிதனின் துன்பங்களுக்கு முதலும் முடிவுமாக காரணமாகக் காண்கிறார்'[34] என்று முகப்படுத்தி காட்டியுள்ளார். சு.ரா.

'தமிழ்ச்செல்வன்.... மனித மனங்களைத் தொட்டு, வாழ்க்கையின் போதாமை பற்றி ஆழ்ந்த சங்கடத்தை உருவாக்கும் விதத்தில் இக்கதைகளில் சித்திரம் கொண்டிருக்கிறது. ... ... திறந்த மனத்துடன் இவர் அனுபவங்களை எதிர் கொள்வதும், ஜீவன்களின் பரிதவிப்பில் இவர் கொள்ளும் நெகிழ்வும் ஒவ்வொரு கதையிலும் கலைப்பூர்வமாகப் பதிவாகியிருக்கின்றன'[35] என்கிறார்.

'சா. கந்தசாமி, கிராமம், குழந்தைகள், மனிதனுக்கும் இயற்கைக்குமான தொடர்பு இவற்றைச் சார்ந்த சித்திரங்கள் இவை. கடந்த கால வாழ்க்கையை ஏக்கமின்றி, மீண்டும் அவை உருப்பெற வேண்டுமென்ற விவேகமற்ற பிடிவாதமின்றி, மறுபரிசீலனை செய்து பார்க்கிறார் இவர்'[36] என்று கூறுகிறார்.

நிகழ்கால மனிதனின் மனங்களை இவர் கணக்கில் எடுத்துக் கொள்கிறபோது படைப்பும் கலைப்பிரக்ஞையோடு பிறந்து விடுகிறது.

அம்பையின் படைப்புலகம் 'பெண் கோபத்தின் முதல் வெளிப்பாடு' என்று கருதுகிறார். தொடர்ந்து அம்பை பற்றிக் கூறுகிற அவர், 'வாழ்வின் மீது கவியும் துன்பங்களையும் தன் மீது கவியக்கூடியவையாகக் கண்டு வருத்தம் கொள்ளும் பெண்மையின் உலகம். நுட்பமும் கலை அழகும் கொண்டவர் என்றாலும் வாழ்வு பற்றிய அறிவுபூர்வமான புரிதல்கள் அனுபவங்களை வழி நடத்துவதில் கதைகளில் உணர்வு நிலைகள் பாதிக்கப்படுகின்றன'[37] என்கிறார்.

கதை சொல்லும் பாத்திரம், கதைகூறும் முறையில் மையப் பாத்திரத்துடன் இணக்கமான பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு விடுவதால் பெண்மையின் பிரச்சினை சரியான இலக்கை அடைகின்றன. அம்பையிடம் அறிவின் பாதிப்பு இருப்பதால் பாத்திரங்களின் உணர்வு நிலைகள் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டுகிறார். துல்லியமான விமர்சனம் இது.

பிரபஞ்சனின் படைப்புலகம், வாழ்வதற்காக ஆசைப்படுகிற நம்பிக்கை கொண்ட மக்களைக் கொண்டது என்பது சு.ரா.வின் மதிப்பீடு. 'மன ஆரோக்கியம் கொண்ட இவரது கதாபாத்திரங்கள் புஷ்டியான வாழ்க்கை வாழ ஆசைப்படுகிறார்கள். இந்த ஆசைக்கும் வாழ்வின் ஸ்திதிக்குமான முரண்பாடுகளில் தங்கள் நம்பிக்கைகளை இழக்க மறுக்கிறார்கள் அவர்கள்'[38] என்று சு.ரா. வெளிப்படுத்துகிறார்.

பி.எஸ். ராமையா, தன் அனுபவ பாதிப்புகளிலிருந்து திடமான பொருண்மைக் களத்தை அமைத்துக் கொள்ளவில்லை என்கிறார். அதாவது வாழ்க்கை பற்றிய பார்வையில் தெளிவு இல்லை என்று கூறும் சு.ரா., விமலாதித்த மாமல்லனையும் இராஜேந்திர சோழனையும் பெரிதுபடுத்திப் பேசியுள்ளது நெருடலைத் தருகிறது. புதியவர்களை அறிமுகம் செய்து வைக்கலாம். ஆயின், விமர்சனம் என்று ஏற்றுக்கொண்டபின் விந்தன், பி.எஸ். ராமையா, அம்பை, தி. ஜானகிராமன், புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், ந. சிதம்பரசுப்பிரமணியன் போன்றோர்களின் படைப்புகளை ஆராய்ந்திருக்கும் கூர்மையோடு இவர்களையும் அணுகி இருக்க வேண்டும். இவ்விருவரும், வாழ்வை நுட்பமாகக் கவனிக்கத் தமது பொருண்மைக் களத்தை அமைத்துக் கொண்டவர்கள் என்று கூறுவதற்கு இடமில்லை.



venugopal@thaiveedu.com



# ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் - 2

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**சென்ற இதழில்...**

- உலக வரலாற்றில், பொ.ஆ.முன் 6-ம் நூற்றாண்டு தத்துவ எழுச்சிக் காலமாக விளங்கியது. அக்காலத்தில் வட இந்தியாவில், வேதங்களை மறுத்தும், வேள்விகளை எதிர்த்தும், வைதீகக் கொள்கைகளுக்கு மாறாகவும் சைனம், ஆசீவகம், பௌத்தம் முதலிய பிரிவுகள் தத்துவப் போராட்டம் செய்தன. தொடக்க காலத்தில் தத்துவப் போராட்டமாகத் தொடங்கிய இந்த இயக்கங்கள் நாளாவட்டத்தில் மதங்களாக மாற்றம் பெற்றன.
- கௌதம புத்தரது போதனைகளின் அடிப்படையில் ஏறக்குறைய பொ.ஆ.முன் 6-ம் நூற்றாண்டளவில், பௌத்தம், ஒரு தத்துவ இயக்கமாக முன்னெடுக்கப்பட்டு பின்னர், பௌத்த மதமாகியது.
- அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் (பொ.ஆ.மு. 268 - 232), பொ.ஆ.முன் 3-ம் நூற்றாண்டளவில், பௌத்தம், வடக்கே இமயத்துக்கு அப்பாலும் தெற்கே தமிழகத்தைக் கடந்து ஈழத்திலும் இன்னும் பல தெற்காசிய நாடுகளிலும் பரப்பப்பட்டது.
- அசோகனது அதிகாரம், இந்தியத் துணைக்கண்டத்தின், மேற்கே தற்போதய ஆப்கானிஸ்தான் முதல் கிழக்கே தற்போதைய வங்காளதேசம் வரையிலும் தெற்கே கலிங்கம் வரையிலும் பரந்திருந்தது.
- அசோகன் பற்றிய தகவல்கள், அவனது ஆணைகளாக நாடெங்கிலும் நிறுவப்பட்டிருந்த தூண் கல்வெட்டுக்கள், குகைக் கல்வெட்டுக்கள், பாறைக் கல்வெட்டுக்கள் மூலமாகவும் பிற்காலப் புராணக் கதைகள் வாயிலாகவும் அறியப்படுகின்றன. அசோகனது கல்வெட்டுக்கள், இந்தியாவில், தமிழ் நாடு நீங்கலாக அனைத்துப் பகுதிகளிலும் கிடைக்கின்றன.
- அசோகனது கிர்னார் (Girnar) இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு, அசோகர் காலத்தில் (பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டில்) தமிழ் நாட்டை ஆண்ட சேர, சோழ, பாண்டிய, சத்தியபுத்திர (வேளிர் குல மன்னன், அதியமான்) ஆகியோருடன் தம்பபர்ணி (ஈழம்) பற்றிய செய்தியையும் கூறுகிறது. இக் கல்வெட்டு, தமிழ் நாட்டுடன் ஈழத்துக் காலக் கணிப்பிற்கும் இன்றியமையாத ஆவணமாக அமைகிறது.
- அசோகன் காலத்தில் தம்பபர்ணி (தாமரபரணி) என்று அழைக்கப்பட்ட ஈழத்திற்கும் பௌத்தம் பரப்பும் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனையே வரலாறு, மகிந்தனும் சங்கமித்தையும் வெள்ளரசுக் கிளையுடன் இலங்கை வந்து பௌத்த மத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறுகிறது.
- எனவே, பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டளவில் பௌத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

**தொடர்கிறது...**

இந்த இடத்தில், நான் சொல்லப்போகும் தகவல்களுக்குச் சான்றாக எனது வாழ்க்கையின் ஒரு பகுதி பற்றிக் கூறியே ஆகவேண்டும். ஏனென்றால், இது என் கதை மட்டுமல்ல, அனுராதபுரியில் வாழ்ந்து, புலம் பெயர்க்கப்பட்ட, என் போன்ற பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் கதை.

நான் பிறந்து வளர்ந்தது, என் இளமையின் பெரும் பகுதியை வாழ்ந்து அனுபவித்தது, இலங்கையில் (ஈழம்) அனுராதபுரி என்னும் பண்டைய இராசதானிகளில் ஒன்றின் தலைநகரில். பண்டைய தலைநகரம் என்ற முறையில் அங்கு, பழமையான இடிபாடுகளுக்கும் டகோபாக்களுக்கும் குறைவே இல்லை. சிறுவயதிலிருந்தே தினமும் பாடசாலைக்குச் செல்லும் போதும் பாடசாலையிலிருந்து வரும் போதும் பார்த்துப் பார்த்து அலுக்காத அந்தக் கோவில்கள் இன்று நினைத்தாலும் சுகமான அனுபவம்.

புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரசு மரத்தின் கிளை ஒன்று, அசோகச் சக்கரவர்த்தியின் மக்களான மகிந்தனாலும் சங்கமித்தையாலும் கொண்டுவரப்பட்டு நடப்பட்டதாக, அறியப்படுகிறது. இந்த வெள்ளரசு மரம், 2300 ஆண்டுப் பழமை வாய்ந்ததாக இன்றும் நின்று நிழல் தருகிறது. இந்த வெள்ளரசு மரக்கிளை பொ.ஆ.மு. 288-ம் ஆண்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதாக அறியப்படுகிறது. இம் மரம், புத்தரின் புனித நினைவுக்கும் அமைதிக்கும் சான்றாக விளங்குகிறது. வெள்ளரசு மரம், வயது காரணமாக விழுந்து விடாமல் இருப்பதற்காக நாலா பக்கங்களிலும் பெருந்தூண்கள் முண்டு கொடுக்கப்பட்டு நிலைத்து நிற்கின்றது. அது தவிரவும் பண்டைக் காலத்தில் காட்டு விலங்குகளிலிருந்து பாதுகாப்பதற்காகச் சுற்றிலும் பாதுகாப்புச் சுவரும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இனப்பகை அறியப்படாத அந்தக் காலத்தில் நாம் அடிக்கடி, குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வரும் உறவினருக்குக் காண்பிப்பதற்காக இங்கு செல்வது வழக்கம்.

எங்கள் வீட்டிற்குப் பெயர் 'மங்களபதி'. உண்மையிலேயே மங்களமான வீடு தான். பல திருமணங்களைக் கண்ட அழ கான மாஞ்சோலையால் சூழப்பட்ட வீடு. எங்கள் வீடு, அனுரா தபுரத்தின், 'புனித நகரம்' என்று பெயரிடப்பட்ட பகுதியில் நடு நாயகமாக இருந்தது. பெரும்பாலான பௌத்த விகாரைகள் எங்கள் வீட்டிலிருந்து ஒரு மைல் சுற்றுவட்டாரத்திலேயே இருந்தன. இசுருமுனிய, ருவன்வலிசாய, எலாளசேன, ஸ்ரீமகா போதி (வெள்ளரசுக் கிளையுள்ள தலம்) மிரிசுவெட்டிய, திஸ்-ஸவேவா (குளம்), வசபா குளம், இப்படி அனைத்து வழிபாட் டுத் தலங்களும், மன்னர்களால் கட்டப்பட்ட குளங்களும் எங் கள் வீட்டின் சுற்றுவட்டாரத்தில் காணப்பட்டமை ஒரு பெரிய கொடையாகும். பிற்காலத்தில், யாழ்ப்பாணப் பகுதிகளை அனுராதபுரத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து எமது பகுதியில் அமைந்திருந்த (?) இராசதானிகளுக்கு என்னாச்சு என்று விச னப்படுவேன்.

திஸ்ஸவேவாவிலிருந்து உற்பத்தியாகி வெளியேறும் வாய்க் கால் எங்கள் வீட்டின் பின்புறத்தில் ஓடிக் கொண்டிருந்தது. ஒரு புறம் எங்கள் வீடு, மறுபுறம் நீண்ட வயல்வெளி. வயல்வெ ளியின் முடிவில் இசுருமுனிய விகாரை. எங்கள் வீடு, மேட்டு நிலத்தில் அமைந்திருப்பதாலும், இடையே கட்டிடங்கள் எது வும் இல்லாததாலும் பகல் பொழுதில் கூட இசுருமுனிய விகாரை நன்றாகத் தெரியும். மாலையில் விளக்கேற்றிய பின் மிகத் தெளிவாகத் தெரியும். மணி அடிக்கும் ஓசை தெளிவா கக் கேட்கும். இசுருமுனிய ஒரு குடைவரை கோவிலாகும். கௌதம புத்தரின் கிடந்த நிலைச் சிற்பம் மிகப் பெரிதாகவும் நாங்கள் கிட்ட நின்று பார்க்கக் கூடிய முறையிலும் அமைக்


இசுருமுனிய

கப்பட்டிருந்தது. கூரையின் மேல் பக்கம் புத்தரின் ஜாதகக் கதைகள் வரையப்பட்டிருந்தன. விகாரையின் உள்ளும் புற மும் காவி உடை அணிந்த பௌத்த பிக்குகள் காணப்படு வார்கள். அன்பாகப் பார்த்துப் பேசுவார்கள்.

### எல்லாளன் சமாதி:

எங்கள் வீட்டு வளவின் பின் வாயில் வழியாக வெளியேறி, வாய்க்கால் ஓரமாக 5 நிமிடம் நடந்தால் எல்லாளசேன தொல் பொருள் ஆய்வு மையம். 'எலாளசேன' என்பது ஒரு இடிபாடுக ளுடன் கூடிய மணல் திடல். நான் அறிந்த வயதிலிருந்தே இந்த இடத்தில் காலை முதல் மாலை வரை பெண்கள் மண் அள்ளித் தலையில் சுமந்த வண்ணம் இருப்பார்கள். எங்கள் குடும்ப வைத்தியரது மருத்துவநிலையம் எல்லாளசே னையைப் பார்த்தாற் போல அமைந்திருந்தது. அடிக்கடி இந்த மருத் துவ நிலையம் செல்லும் போதும் காத்து நிற்கும் போதும் எல்லாளசேனையை நின்று அவதானிப்பது எனக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு.

'எல்லாளசேனை' என்ற இந்த இடிபாடு, எல்லாளன் என்னும் தமிழ் மன்னன் ஒருவன் பெயரால் கட்டப்பட்டது என்பதும், எல் லாளன் துட்டகைமுனுவுடன் போரிட்டு மடிந்த இடம் இது என் பதும், எல்லாளனின் வீரத்தை மதித்து இந்தத் தூபி கட்டப்பட் டது என்பதும், அவ் வழியால் போவோர் வருவோர் அனைவ ரும் நின்று வணங்கிச் செல்ல வேண்டும் என்பது அரச ஆணை என்பதும் மட்டுமே எனக்கு அக் காலத்தில் தெரிந்தி ருந்தது. இதுவும் எங்கள் பாட நூல் வழியாக. ஆனால், இன்று எல்லாளன் பற்றிப் பலவிதமான தகவல்களும் இணையத்தில் காணப்படுகின்றன. எது எப்படியாக இருந்தாலும் 'எல்லாளன் ஒரு மாவீரன்' என்பது யாராலும் மறுக்கப்படமுடியாதது.
இன்று இணயத்தளத்தில் 'எல்லாளனது ஞாபக சின்னம்'

'எலாளசேன' என்னும் எல்லாளனது ஞாபக சின் னம்.


என்று காட்டப்படுவது நிச்சயமாக இடிபாடுகளிலிருந்து அண் மைக் காலத்தில் புதிதாகக் கட்டப்பட்ட சின்னம் என்பதற்கு நானே சாட்சி. நான் கண்ட எல்லாளசேன என்பது ஒரு மணல் திட்டு. பல ஆண்டுகளாக ஆய்வுக் களமாக இருந்து வந்தி ருக்கிறது. இன்று, பார்வைக்கு பழைய டகோபா (நினைவால யம்) போலக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.இலங்கையில், தமிழ் இன அழிப்பின் ஒருபகுதியாக, தமிழ் இனம் சார்ந்த வர லாற்றுச் சின்னங்கள் மறைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும், மாற் றப்பட்டும் வருகின்றன. இத்தகைய நடவடிக்கையின் ஒரு பகு தியாக எல்லாளன் சமாதியும் பெயர்மாற்றம் செய்யப்பட்டிருக் கிறது.

'கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே எல்லாளன் சமாதி யென மரபு வழியாகவும், வரலாற்றுச் சான்று வழியாகவும் ஏற் றுக் கொள்ளப்பட்டு வந்த உண்மையைத் திரித்து துட்டகைமு னுவின் சமாதியெனச் சிங்கள பௌத்தப் பெருந்தேசியவாதத் தின் ஆராய்ச்சியாளர்கள் கூறினர். அவ்வாறே எல்லாளன் சமாதி துட்டகைமுனுவின் சமாதியெனப் பெயர் மாற்றிப் பெரு விழாவும் எடுக்கப்பட்டது.' - James T. Rutnams, The Tomb of Elara at Anuradhapura (Jaffna 1981), Translated by A.

J. Kanakaratna, Marumalarchi Kazhagam.

இந்த அநியாயத்தை எதிர்த்து, கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் அவர்கள் 'எல்லாளன் சமாதியும் வரலாற்று மோசடியும்' என்னும் ஆய்வு நூலை வெளியிட்டார். பொ.ஆ.மு. 2-ம் நூற்றாண்டிலிருந்து (எல்லாளனது ஆட்சிக் காலம் பொ.ஆ.-மு. 205 முதல் பொ.ஆ.மு. 161 வரை) 1900-ம் ஆண்டுக் காலப் பகுதிவரை எல்லாள மன்னனுடைய நினைவுத் தூபியானது மக்களால் மரியாதை செய்யப்பட்டு வந்தது எனப் பல வரலாற்றுச் சான்றுகள் பதிவு செய்கின்றன. அவற்றுள் ஒன்று வருமாறு,

1818-ம் ஆண்டு நடந்த கண்டிக் கலகத்தின் போது, கண்டி இராச்சியத்தின் பிரதானி பிலிமத்தலாவ தப்பித்து ஓடிக் கொண்டிருக்கையில் எல்லாளன் நினைவுத் தூபியை கடக்கும் போது, தனது சிவிகையில் இருந்து கீழ் இறங்கி மரியாதை செலுத்தினான் என வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இது நான் சிறுமியாக எனது 12 வயது வரை தினமும் கண்டு அனுபவித்த எல்லாளனின் சமாதி பற்றிய குறிப்பு. இதை எல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், அனுராதபுரம் ஒரு காலத்தில் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்ந்த இடம். அனுராதபுரத்தில், கதிரேசன் கோவில், வசபாக்குளம் பிள்ளையார் கோவில், நுவரக்குளம் பிள்ளையார் கோவில் என்று தமிழர் வழிபாட்டுத் தலங்கள் மூன்று இருந்தன. வழிபடுவதற்கு மக்கள் இல்லாமலா இத்தனை கோவில்களும் இருந்திருக்கும்? கதிரேசன் கோவிலை அடுத்து கதிரேசன் சைவப் பாடசாலை என்னும் தமிழர் தனியார் பாடசாலை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பாடசாலையில் தமிழும் இசை, நடனம் முதலிய தமிழர் பண்பாட்டுக் கலைகளும் கற்பிக்கப்பட்டன.

அனுராதபுரம், பௌத்த விகாரைகள் கொண்ட மிக அழகான நகரம். நான் சிறுமியாக இருந்த காலத்தில் பாடசாலைக்குப் போகும் போது அனைத்து பௌத்த விகாரைகளையும் கடந்து செல்வது வழக்கம். அவற்றைப் பார்க்கும் பொழுது தினமும் புதுப்புது அனுபவமாகவே இருக்கும். மிகவும் அமைதியான பௌத்த கோவில்கள், நாம் பிற்காலத்தில் அனுபவித்த கொடுமைகளை எல்லாம் இந்த அழகான அமைதியான மதத்தின் பெயரால் அரசியல்வாதிகள் செய்தார்கள் என்று நினைக்கும் போது கவலையாக இருக்கிறது. மனிதன் செய்யும் தவறுகளுக்கு மதம் என்ன செய்யும்? அரசியல் நோக்கத்திற்காக நஞ்சூட்டப்பட்ட பொதுமக்கள் அப்பாவிகள்.

அனுராதபுரத்தின் மத்திய பகுதியில் 6 மைல் சுற்றளவு நிலம் பௌத்த மதத்திற்கான 'புனித பூமியாக' அறிவிக்கப்பட்டது. அந்தப் 'புனித பூமி'க்குள் இருந்த ஏனைய தேவாலயங்கள், பாடசாலைகள், தனியார் நிலையங்கள், கடைகள் அனைத்தும் இடமாற்றம் செய்யப்பட்டன. ஊருக்குப் புறத்தே, 'புதிய நகரம்' என்ற பெயரால் உருவாக்கப்பட்ட பகுதி அனுராதபுரத்தின் வர்த்தக நகரமாகியது. இம் மாற்றம், தொடக்க காலத்தில் பொது மக்கள், வர்த்தகர்கள், மாணவர்கள் அனைவருக்கும் மிகவும் சிரமமாக இருந்தது. காலப்போக்கில் எல்லாம் பழகிவிட்டது.

'புனித நகர்' பகுதியில் இருந்த தனியார் வீடுகளை அரசாங்கம் பணம் கொடுத்துக் கொள்வனவு செய்வதாக முடிவு செய்யப்பட்டது. பணப் பிரச்சனை காரணமாக தனியார் வீடுகள் கொள்வனவு செய்வது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது. இவ்வாறு தற்காலிகமாகப் 'புனித நகரில்' இருப்பதற்கு அனுமதிக்கப்பட்ட வீடுகளுள் எங்கள் வீடும் ஒன்று.

இடமாற்றம் பெற்ற தேவாலயங்களுள் 'கதிரேசன் கோவில்' என்று அழைக்கப்பட்ட இந்து வழிபாட்டுத் தலமும் அதற்கு அருகாமையில் அமைந்திருந்த கதிரேசன் சைவப் பாடசாலையும் அடங்கும். அனுராதபுரத்தில் கத்தோலிக்கப் பாடசாலைகள் மட்டும் இருந்த காலத்தில், அனுராதபுரியில் வாழ்ந்த சைவப் பெரியார் சிலர் கூடித் தம் சொந்தப் பணத்தில் சைவத் தமிழ் மாணாக்கர்களுக்காக இப் பாடசாலையை நிறுவினார்கள். இப் பாடசாலையை நிறுவிய பெரியார்களுள் எனது தந்தையாரும் ஒருவர். இந்தப் பாடசாலையில் சைவத் தமிழ் மாணவர்களுக்கு, பண்பாட்டைப் பேணி வளர்க்கும் சைவமும் தமிழும் தமிழர் பண்பாடும் கற்பிக்கப்பட்டன. அனுராதபுரம் சுற்றுவட்டாரத்தில் வாழ்ந்த நடுத்தர வகுப்புத் தமிழருக்கு இப் பாடசாலை சிறந்த சேவை செய்தது.

கதிரேசன் கோவிலுக்கு அண்மையில் 'மாவடி' என்னும் ஒரு தமிழர் குடியிருப்புப் பகுதியும் இருந்தது. ஏராளமான தமிழ் மக்கள் இக் குடியிருப்பில் வாழ்ந்தார்கள். இது ஒரு குட்டி யாழ்ப்பாணம் என்று அழைக்கப்பட்டது. மாவடியில் வாழ்ந்த அனைவரும் 1958-ம் ஆண்டுக் 'கலவரத்தில்' தத்தம் சொந்த வீடுகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். அப்படி விரட்டி அடிக்கப்பட்ட தமிழர், அனுராதபுரிக்குத் திரும்பி வரவேயில்லை. தம் வீடு வாசல்களை வந்த விலைக்கு விற்றுவிட்டு ஊரோடு போய்ச் சேர்ந்தார்கள்.

இது தவிர, எங்கள் வீட்டிற்கு மிக அண்மையில் 'எருக்கலம்பிட்டி' என்னும் இன்னுமொரு தமிழர் குடியிருப்பு இருந்தது. இங்கு வாழ்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியத் தமிழர். கலவரத்தின் பின், இவர்கள் சிறிது சிறிதாகச் சிங்களவர்களாக ஆக்கப்பட்டார்கள். எருக்கலம்பிட்டியில் யாழ்ப்பாணத்தவரான புறொக்டர் சிவக்கொழுந்து (எனது தந்தையின் நண்பர்) என்னும் ஒரு வழக்கறிஞர் வீடும் இருந்தது. ஐயாவின் மரணத்தின் பின், ஐயாவின் சொத்து தொடர்பான வழக்கு விடயங்களைப் பார்த்துக் கொண்டவர் என்ற முறையில் நான், எனது தாயாருடன் இவர் வீட்டிற்கு பல தடவை போயிருக்கிறேன். இவர், எருக்கலம்பிட்டியில் வாழ்ந்த தமிழருக்குப் பெரும் ஆதரவாக இருந்தார்.

நீர்கொழும்பு, சிலாபம், புத்தளத்தில் வாழ்ந்த தமிழருக்கு நேர்ந்த கதியே எருக்கலம்பிட்டித் தமிழருக்கும் நேர்ந்தது. கதிரேசன் சைவப் பாடசாலை உள்ளிட்ட தமிழ் பாடசாலைகள் புது டவுனுக்கு (New Town) இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் அவர்கள் வாழ்விடங்களுக்கு அண்மையில் தமிழ் பாடசாலைகள் அற்ற நிலை உருவாகியது. எருக்கலம்பிட்டித் தமிழ் மாணவர்கள் சிங்களப் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வேறு வழியற்ற நடுத்தர வகுப்பு மக்கள் சிங்களப் பாடசாலைகளுக்குச் செல்லத் தொடங்கினார்கள்.

இனப் படுகொலையின் ஒரு முக்கிய அம்சம், இனமாற்றம் செய்வது. ஈழத் தமிழரைப் பொறுத்த மட்டில், ஈழத் திருநாட்டில் இவ்வாறுதான் 'இனமாற்றம்' அரங்கேற்றப்பட்டது. இலங்கையில் 20-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் புத்தளம், சிலா-

பம் முதலிய தென் மேற்குப் பகுதி நகரங்கள் சிங்கள நகரங்க
ளாக மாற்றப்பட்டன. தமிழர் சிங்களவராக ஆக்கப்பட்டார்
கள். இந்தப் பகுதியில் தான் முன்னீஸ்வரம் என்னும் வர
லாற்று முக்கியத்துவம் பெற்ற இந்து ஆலயம் இன்னும் இருக்
கிறது. கதிர்காமம் சிங்கள மயமாக்கப்பட்டது போல இக்
கோவிலும் சிறுகச் சிறுக மாற்றம் பெறுகிறது.

## சிற்றம்பலம் வீதி:

சிற்றம்பலம் வீதி எங்கள் வீட்டிற்கு அண்மையில் இருந்த
நீண்ட பெருந்தெரு. திரு. சிற்றம்பலம் அவர்கள் என் ஐயா
வின் காலத்தில் வாழ்ந்தவராகப் பேசப்படும் ஒரு பிரமுகர்.
அவர் மனைவியை நான் சிறு பிள்ளையாக இருந்த போது
அடிக்கடி பார்த்திருக்கிறேன். தினமும் நான் பாடசாலைக்கு
மாட்டு வண்டியில் அவர்கள் வீட்டு வழியாகத்தான் செல்வது
வழக்கம். மாட்டு வண்டி ஆடி அசைந்து மெதுவாகவே
போகும் போது அந்த அழகான அம்மையார் அவர் வீட்டு
வாசலில் வெள்ளைச் சேலையுடன் காட்சி தருவார். பல தட
வைகளில் என்னிடம் பேச்சுக் கொடுத்திருக்கிறார்.

அவர்கள் வீட்டு வாசலில் அடிக்கடி இந்தியாவிலிருந்து வந்த
சினிமா நட்சத்திரங்கள் காணப்படுவார்கள். ஒரு தடவை என்.
எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் அவர்கள் குழுவுடன் வந்த
தாக எங்கள் வீட்டில் பேசிக் கொண்டார்கள். அம்மையார் அர
சியல் செல்வாக்கு மிக்கவர். இந்த வீதி பிற்காலத்திலும் இதே
பெயரால் தான் அழைக்கப்பட்டது. அந்த வீதி நீளத்திற்குத்
தமிழரே வாழ்ந்திருந்தார்கள். சிற்றம்பலம் அம்மாவின் வீட்
டின் ஒரு பக்கத்தில் பத்தர் நடராஜா கடை என்னும் நகைக் க
டையும் மறுபக்கத்தில் புறொக்டர் மயில்வாகனம் என்னும்
வக்கீல் வீடும் இருந்தது எனக்கு ஞாபகம். சிறிது தள்ளிச்
சென்றால் மிகவும் பிரபல்யமான ஆனந்த பவன் என்னும்
சைவ உணவகம் இருந்தது. நான் சிறுவயதில் அம்மாவுடன்
அடிக்கடி அங்கு பலகாரம் வாங்கிச் செல்வது ஞாபகம்.

சிற்றம்பலம் அம்மாவிற்குச் சொந்தமான சிற்றம்பலம் தியேட்
டர் என்னும் படமாளிகை, அனுராதபுரத்தில் குருனாகல் வீதி
யில் எலாளசேனைக்கு அடுத்தாற் போல பெரிய கட்டடமாக,
தமிழில் பெயர் பதிக்கப்பட்டுக் காட்சி அளித்தது. தமிழ்
பெயர் பதிவு என்பது அக் காலத்தில் ஒரு வெறுக்கத்தக்க
விடயமாகக் கருதப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால்
1950-களில் அனுராதபுரத்தில் சிற்றம்பலம் தியேட்டர் என்னும்
உயர்ந்த கட்டிடத்தில் அமைந்த படமாளிகையும் விஜயேந்
திரா கொட்டகை என்னும் சினிமா கொட்டகையும் மட்டும்
தான் மக்களின் பொழுது போக்கு நிலையங்களாக இருந்தன.
இவற்றில் மிக நீண்ட காலமாகத் தமிழ்ப் படங்கள் மட்டுமே
காட்டப்பட்டன. சிங்கள மக்களும் தமிழ்ப் படங்களை விரும்
பிப் பார்த்தார்கள், ஏனென்றால் அப்போது சிங்களப் படம்
வரத் தொடங்கவில்லை.

இந்தப் படமாளிகையும் புதிய டவுனுக்கு மாற்றப்பட்டதுடன்
அதன் பெயரும் சிங்களத்தில் பதிக்கப்பட்டது. அனுராதபுரத்
தில் தமிழ் மக்கள் வாழ்ந்த அடையாளமே இருக்கக் கூடாது
என்பதே பெரும்பான்மை இனத்தவரின் கருத்தாகும்.

## அனுராதபுரியில் யாழ்ப்பாணச் சந்தி:

அனுராதபுரியில் தமிழ் மக்கள் அறியவேண்டிய இன்னுமொரு
இடம் 'யாழ்ப்பாணச் சந்தி' என்னும் தமிழ் நிலச் சுவாந்தார்க
ளின் வயல், தோட்டங்கள் இருந்த இடம். எனது தந்தையா
ருக்கு நூறுக்கு மேற்பட்ட ஏக்கர் வயல் காணி அங்கு தான்
இருந்தது. ஐயாவின் சொத்துக்கள் அனைத்தும் நான் மைன
ராக இருந்த காரணத்தால் எனது திருமணத்தின் போது தான்
பிள்ளைகள் அனைவருக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது.
பெண் பிள்ளைகளுக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்ட காணி
களை அவர்கள் கணவன்மார் நிலைமை மோசமாவதற்கு
முன்னரே விற்றுக் காசாக்கிக் கொண்டார்கள். எனது தாயா
ரின் பங்கும் அண்ணன்மார் இருவரின் பங்கும் 'மங்களபதியும்'
விற்கப்படாமலே செய்கைக்காரர் வசம் போய்விட்டது. எம்
மைப் போல ஏமாந்த தமிழர் ஏராளம். இரயிலில் போகும்
போது 'யாழ்ப்பாணச் சந்தியைக்' கடந்து தான் செல்லவேண்
டும்.

யாழ்ப்பாணச்சந்தியில் இருந்த புறொக்டர் நடராஜா என்னும்
பிரமுகரின் வீடு எனது ஞாபகத்தில் நிற்கிறது. அவருடைய
பெண் பிள்ளைகளும் கத்தோலிக்கப் பாடசாலையில் தான்
படித்தார்கள். யாழ்ப்பாணச் சந்தியைக் கடந்து, மிகுந்தலை
வீதியில் சென்றால் நுவரக்குளப் பிள்ளையார் கோயில் ஒன்று
இங்கு தமிழர் வாழ்ந்ததற்கு அறிகுறியாக இருக்கிறது. நான்
அனுராதபுரி, கன்னிமார் பாடசாலையில் படித்த காலத்தில்
இந்தக் கோயில் ஐயரின் மகள், உமாதேவி, என்னுடன் படித்
தார். இந்தக் கோயில் நுவரக்குளம் என்னும் மிகப் பெரிய
நீர்ப்பாசனக் குளத்திற்கு மிக அண்மையில் கட்டப்பட்டிருக்கி
றது. இக் குளத்தைக் கட்டிய மன்னனுக்கும் இக் கோயிலுக்
கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கவேண்டும்.

## வசபாக் குளம் பிள்ளையார் கோயில்:

மீண்டும் அனுராதபுரம் பழைய டவுனுக்குச் செல்வோம். எங்
கள் வீட்டிலிருந்து நடந்து போகக் கூடிய தூரத்தில் வசபன்
என்னும் சிங்கள மன்னனால் கட்டப்பட்ட, வரலாற்று முக்கியத்
துவம் பெற்ற வசபாக் குளம் இருக்கிறது. வசபாக் குளத்தின்
உயர்ந்த அணைக்கட்டுகளின் அந்தப் பக்கம் தமிழர் குடியி
ருப்பு ஒன்று இருந்தது. அங்கு, வசபாக் குளம் பிள்ளையார்
கோயில் என்னும் கோயில் ஒன்று நெடுங்காலமாக இருந்து
வந்தது. இக் கோயில் பூசாரி ஒரு வேடுவர். என் காலத்தில்
அது ஒரு காட்டுக் கோயில் போலவே இருந்தது. பூசையும்
வித்தியாசமாகவே இருக்கும். ஊர்ப் பிரமுகர்கள் சேர்ந்து
அக் கோயிலுக்கு ஒரு பெரிய மண்டபம் கட்டுவித்தார்கள்.
இக் கோயிலுக்கு தமிழரும் சிங்களவரும் பெரும் எண்ணிக்
கையில் வருவார்கள். அடிக்கடி அன்னதானம் நடைபெறும்.

அனுராதபுரியில் தமிழ் மக்கள் வாழ்ந்திருந்த வாழ்க்கை பற்
றிய இச் சிறு குறிப்பு பின்னால் வரும் வரலாற்றுக்கு மிகவும்
தேவையான ஒன்றாகும். அடுத்து, பௌத்த மதம் இலங்கைக்
குக் கொண்டு வரப்பட்ட வரலாறு, அதாவது, பௌத்த மதம்
யாரால், எப்போது, எந்த மன்னன் காலத்தில் கொண்டு வரப்
பட்டது போன்ற தகவல்கள் சான்றுகளுடன் ஆராயப்படும்.

தொடரும்...



selvanayaki.s@thaiveedu.com



# சித்தரின் போக்கும் சீடரின் மாற்றமும்

– கிருங்கை சேதுபதி

ஆடுகளையும் மாடுகளையும் கால்நடைகள் என்கிறோம். காரணம் அவை கால்களால் நடக்கின்றன. எனில், மனிதர்கள்?

நாமும் கால்களால் தான் நடக்கிறோம். ஆனால், நடையின் திசையையும், பயண நோக்கத்தையும் தீர்மானிப்பவை கால்கள் அல்ல.

கண் போன போக்கிலே கால் போவதும், கால் போன போக்கிலே மனம் போவதும், மனம் போன போக்கிலே மனிதன் போவதும் மனிதப் பயணம் ஆகாது. மனத்தால் சிந்தித்து, இலக்கை நிர்ணயித்து எங்கே போகிறோம்? என்ற தெளிவுடன் மனம் தீர்மானித்த திசையில் போவது மனிதம். சித்தர்கள் இதற்கும் மேலானவர்கள். அவர்கள் சித்தத்தைச் சிவன்பால் நிறுத்திச் செயற்படுகிறவர்கள். காட்சிக்குப் பித்தர்களைப் போல் தோற்றம் தருகிற அவர்களின் மாட்சி எளிதில் விளங்கிக் கொள்ள முடியாது. அதனால்தான், 'சித்தன் போக்கு சிவன் போக்கு' என்கிறார்கள்.

'அவனருளாலே அவன் தாள் வணங்கல் போல்', அவர்களை அவர்கள் நிலையில் இருந்து புரிந்துகொள்வதற்குக் கொடுப்பினை வேண்டும். அதுகூட, அவர்களால்தான் நடக்கும் போலும். அந்தப் பேறு பாரதிக்குக் கிட்டியிருக்கிறது. அந்தப் பேற்றினைப் பாரதிக்கு அளித்த சித்தர்களுள் முதன்மையானவர் குள்ளச்சாமி. இதனைப் பலரது பதிவுகளில் இருந்தும் பார்த்து வருகிற வரிசையில் இப்போது வருகிறவர் நாகசாமி. யார் இந்த நாகசாமி?

## நம்பிக்கைக்கு உரிய நாகசாமி:

'பாரதியார் புதுவைக்கு வந்தது முதல், அவர் புதுவையை விட்டு வெளியே சென்ற வரையில் அவர் கூடவே நெருங்கி எப்பொழுதும் இருந்தவர்களில் நானும் ஒருவன்... இதுவுமல்லாமல் அவரும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள்' என்று சொல்லிக் கொள்ளும் என் நாகசாமி எட்டயபுரத்துக்காரர். ஒரு கட்டத்தில் இவருக்கே தன் மூத்த புதல்வி தங்கம்மா-வைத் திருமணம் செய்து கொடுக்க விரும்பும் அளவிற்குப் பாரதியின் அன்புக்குப் பாத்திரமானவர்.

இந்திய விடுதலைப் போராட்டத்திற்காகப் புலம்பெயர்ந்து புதுவையில் குடியேறிய காலத்தில், தன்னோடு ஓர் இளைஞர் பட்டாளத்தை, எட்டயபுரத்திலிருந்து தருவித்துப் புதுவையில் இறக்கியவர் பாரதி. 'இந்தியா' இதழில் பணிபுரிய நாட்டுப் பற்றும் தியாக உணர்வும் கொண்ட சில வாலிபர்களை அனுப்பும்படி, எட்டயபுர நண்பர் ஒருவருக்கு, பாரதி எழுதிய மடலுக்குப் பதிலாகப் புதுவைக்கு வந்தவர்களுள் ஒருவர்தான் இந்த நாகசாமி.

அவ்வாறு வந்தவர், இறுதிவரை, புதுவையிலேயே வாழ்ந்து, 'தன் 82-வது வயதில், 18.05.1971-இல் சொல்லொணா வறுமையிலும், குடும்பத் துயர்களிலும் பாதிக்கப்பட்டு, புதுவை நெல்லித்தோப்பில், ஒரு குடிசையில் காலமானார்' என்று குறிப்பிடுகிறார், ரா.அ. பத்மநாபன், 1960-ல் கால் எலும்பு முறிந்து அவதிப்பட்ட காலத்தில், அவர் பாரதி பற்றி எழுதிய நினைவுக் குறிப்புகள், 'புதுவையில் தேசபக்தர்கள்' (1966) என்கிற நூலில் பதிவாகி இருக்கின்றன. அதில்தான் பாரதி- குள்ளச்சாமி தொடர்பான தகவல் நாம் அறியக் கிட்டுகிறது.

## புதுவையில் பாரதி:

பாரதியினால் புதுவைக்கு வரவழைக்கப்பட்ட எட்டயபுர அன்பர்கள், அதிதீவிரமாக 'இந்தியா' இதழ்ப் பணிகளில் ஈடுபட்டு, இதழ்கள் வெளிவரவும் அதிக சந்தாதாரர்களைப் பெறவும் அரும்பாடுபட்டனர். ஆயினும், ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஒடுக்குமுறை, சில உள் சிக்கல்கள் காரணமாக, வேறு சில பத்திரிகை முயற்சிகளையும் பாரதி மேற்கொள்ள வேண்டி இருந்தது. அதற்குத் தூண்டுகோலாகித் துணை நின்றவர் நாகசாமி. 'சூரியோதயம்' வெளிவந்தது. பாரதி அதன் ஆசிரியரானார். தொடர்ந்து ஸ்ரீநிவாசாச்சாரியாரால், பாரதிக்காக 'விஜயா' நாளிதழும் தொடங்கப்பட்டது. ஆங்கிலேயர்களின் தொல்லைகளால் அவற்றுக்கும் ஆபத்து வந்தது. பின்னர், 'தருமம்' என்ற தேசிய மாதம் இருமுறை இதழினை நாகசாமி தொடங்கினார். அது நடந்த இடத்திற்குப் பெயர் 'தர்மாலயம்'. பாரதி, வ.வே.சு. ஐயர் உள்ளிட்டோர் பங்களிப்பில் இதழ்ப் பணி மும்முரமாக நடந்தேறியது. விடுமா, ஆங்கிலேய அரசு?

'இனி, சுதேசிகள் புதுவையில் பத்திரிகை நடத்த முடியாது

என்கிற நிலை ஏற்பட்டுவிட்டது. இதன் பிறகு, பாரதியார் பத்திரிகை முயற்சிகளைக் கைவிட்டுவிட்டார். கவிதை புனைவதி



நாகசாமியும் மனைவி கமலாபாயும்: இவர்களது கலப்புத் திருமணத்தை அரவிந்தர் பிரம்ம சமாஜ முறையில் நடத்திவைத்தார்.

லேயே காலங்கழித்து வந்தார். புதுவை அபிமானிகள் கொடுத்ததைப் பெற்று ஒருவாறு திருப்தியுடன் பாரதியார் இல்வாழ்க்கை நடத்தி வந்தார். ஆயினும், அவருக்கு மிகுந்த சிரமம்தான் இருந்தது' என்று அப்போதைய நிலைமையை நினைந்து எழுதுகிற நாகசாமி, அதில் இருந்து தப்பிக்கப் போதையை நாடிய பாரதியின் நிலைமையையும் பின்வருமாறு பதிவிடுகிறார்.

'பாரதியாருக்குச் சிரமம் ஏற்பட்டபொழுது அந்தக் கவலையை எவ்வாறு நிவர்த்தி செய்யலாமென யோசிக்கலானார். இரண்டொரு சிநேகிதர்கள் கூறியதன்மேல் அபின் கஞ்சா கலந்த லேகியம் போன்ற லாகிரி வஸ்துக்களை உபயோகிக்க ஆரம்பித்தார். போதையுள்ளபொழுதுதான் கவலையற்று இருக்க முடிந்தது. போதை நீங்கிவிட்டால், 'பழைய குருடி, கதவைத் திறடி' என்பதுபோல் கவலை வந்துவிட்டது என்று அவர் வருந்தலானார். லாகிரி வஸ்துக்களால் எவ்வித பிரயோஜனமும் இல்லையென்று அவர் உணர்ந்தார். மேலும், எப்பொழுதும் போதையிலேயே இருக்க முடியாது என்றும் அவர் அறிந்தார். ஆயினும் இந்தத் தீய வழக்கம் அவரைப் பேய் போல் பிடித்துக் கொண்டுவிட்டது.'

அந்த இரண்டொரு சிநேகிதர்கள் யார் என்று நாகசாமி சொல்லவில்லை. ஆனால், இவருடன் வந்து இதழியல் பணி செய்த பரலி சு. நெல்லையப்பர், பாரதியின் அன்புக்குப் பெரிதும் பாத்திரமான வ.உ.சி. போன்றவர்கள் பின்னர் 'இப்பழக்கத்திற்குப் பாரதியை ஆளாக்கியவர்' என்று குள்ளச்சாமியின் மீது பழி போடுவதையும் பார்த்திருக்கிறோம். அதற்கு, குள்ளச்சாமியுடன் பாரதி உட்கொண்ட லாகிரிப் பொருளை அவர்கள் சென்னையில் கண்டது சாட்சியாகி இருக்கிறது. ஆனாலும், முழுப்பழியை, குள்ளச்சாமியின்மீது போட்டுவிடுவது பொருத்தமானதாக இல்லை என்பதை நாகசாமியின் எழுத்து, ஓரளவிற்குத் துணை செய்கிறது.

காரணம், இவர் புதுவையில் பாரதியுடன் குள்ளச்சாமியையும் பார்த்திருக்கிறார். ஒரு சந்தர்ப்பத்தில் இருவரையும் ஒருசேர உபசரித்தும் இருக்கிறார். அப்போது, அவர்தம் பார்வையில் குள்ளச்சாமி ஒரு சாமியார். சராசரி மனிதர். அபூர்வச் சித்தாடல்களோ, சங்கேத பாஷைகளோ, அவரிடம் இருந்து வெளிப்பட்டதாக அவர் காணவில்லை. ஆனால், வெகு சாதாரணமான பதிவாக அமையும் அந்த அத்தியாயத்தில் இருந்து ஒரு நுட்பமான செய்தியை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. அதுவே இக்கட்டுரையை எழுதவும் தூண்டியிருக்கிறது.

### தர்மாலயத்தில் பிக்ஷை:

என். நாகசாமி எழுதிய 'புதுவையில் தேசபக்தர்கள்' நூலில் ஒரு அத்தியாயம், 'தர்மாலயத்தில் பிக்ஷை.' தர்மாலயம் என்பது நாகசாமியின் வசித்து வந்த இல்லத்தின் பெயர். 'பிக்ஷை' என்பது, 'உணவு' என்பதாகப் பொருள்படுகிறது.

ஒரு நாள் காலை, எட்டு மணியளவில், இந்தத் தர்மாலயத்திற்கு வருகை தந்த பாரதி, நாகசாமியைப் பார்த்து, 'இன்று எனது பிக்ஷை இங்கே தாண்டா' என்று சொல்ல, அதற்கு நாகசாமி, 'மிகவும் சந்தோஷம். அப்படியே செய்யுங்கள்' என்று சொல்லிக் கொண்டே அவரை அழைத்துக் கொண்டு கூடத்திற்கு வந்து ஒரு பாயை விரித்து தலையணை எடுத்துப் போட்டு உட்காரச் சொல்லியிருக்கிறார். அப்போது, 'அவர் மிகுந்த கவலையோடிருந்தாரென்பது அவர் முகத்தில் தெற்றென விளங்கியது. அவர் கையில் திருக்குறளும், நாலாயிரப் பிரபந்தமும் கொண்டு வந்திருந்தார்' என்று தான் கண்டதை அவ்வாறே எழுதவும் செய்கிறார் நாகசாமி.

வந்த பாரதி, நாகசாமி விரித்த பாயில் அமர்ந்தபடி, தான் கொண்டுவந்த நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் ஆண்டாள் பாசுரத்தைப் படிக்கத் தொடங்கிவிடுகிறார்.

'நான் ஓட்டலுக்குப் போகிறேன். உங்களுக்கு என்ன வாங்கி

வரட்டும்?' என்று நாகசாமி கேட்க, 'எனக்கு காபி மட்டும் போதும். வேறு எதுவும் தேவையில்லை' என்று பாரதி பதில் அளிக்கிறார்.

ஆனால், நாகசாமி காபியுடன் ஒரு நெய்த் தோசையையும் வாங்கி வந்து கொடுக்கிறார். பாரதி மகிழ்ச்சியோடு, தோசையைச் சாப்பிட்டுவிட்டு, காபியை அருந்துகிறார். பின்னர் அன்றைய செய்தித் தாள்களைப் புரட்டிவிட்டு, சமையல் செய்யப் புகுகிறார் நாகசாமி.

அப்போது, பாரதியார் என்னைப் பார்த்து, 'இன்று என்ன சமையல் செய்யப் போகிறாய்?' என்று கேட்டார்.

'எலுமிச்சம்பழம் பிழிந்து பாசிப்பருப்பு சாம்பார், உருளைக் கிழங்கு புட்டு, அப்பளம் இத்தனையும் செய்யப்போகிறேன். நெய்யும் தயிரும் வழக்கம்போல் உண்டு' என்றும் நான் சொன்னேன்.

'பல. பேஷ் ரொம்பவும் பொருத்தம். எனக்கும் அவை பிடித்தமானவையே' என்று ஆமோதித்தார்.

நான் போய் சமையல் செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது, 'தர்மாலயம்' வந்த இளைஞர்களிடம் ஆண்டாள் பாசுரத்திலிருந்து பாக்களைப் பாடி, வியாக்யானம் செய்து கொண்டிருந்தார் பாரதியார். சிலவற்றிற்கு அவர் அபிநயமும் செய்து காட்டினார். கடிகாரத்தில், மணி பன்னிரெண்டு அடித்தது.

நான் சாப்பாட்டுக்கு எல்லாம் தயார் செய்தேன். அந்த சமயம் குள்ளசாமியார் தெருவில் மிகுந்த கோபாவேசத்துடன் வாய்க்கு வந்தபடி கத்திக் கொண்டு வந்தார். பாரதியார் என்னை அவசரமாகக் கூப்பிட்டு, அந்தச் சாமியாரை அழைத்துவரச் சொன்னார். நான் உடனே ஓடிப்போய் அவர் கையைப் பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டு வந்தேன். அவரைக் கோபமூட்டின சிறுவர்களும் ஓடோடி வந்து, 'தர்மாலயம்' கதவண்டை நின்றுகொண்டு உள்ளே சாமியார் என்ன செய்கிறாரென்று பார்த்தார்கள். பாரதியார் சிறுவர்கள் அருகில் சென்று முதுகில் தட்டிக்கொடுத்து, பெரியோர்களை இவ்வாறெல்லாம் கோபமூட்டக் கூடாதென்று அன்புடன் புத்தி சொன்னார். சிறுவர்கள் எல்லாம் கேட்டுக் கொண்டு கலைந்துவிட்டார்கள். குள்ளச்சாமியாருக்கும் கோபம் தணிந்தது. வியர்வை அடங்கிற்று.

'சாமி காசு இருக்கா?' என்று அவர் நினைவை மாற்ற பாரதியார் கேட்டார். சாமியார் தம் வேஷ்டியின் முனையில் முடிச்சுப்போட்டு இடுப்பில் செருகி வைத்திருந்ததை எடுத்து என் கையில் கொடுத்தார். நான் உடனே அவர் கொடுத்ததற்காக அதை அவிழ்த்து அதிலிருந்து ஒரு அணா மட்டும் எடுத்துக் கொண்டு மிச்சத்தை முடிந்து அவர் இடுப்பிலேயே திரும்பவும் செருகிவிட்டேன். அவர் அந்த முடிச்சை வெளியே இழுத்து அவிழ்த்து காசு முழுவதையும் பாரதியார் கையில் கொட்டிவிட்டார். நான் மூன்று இலைகள் போட்டு, அவற்றில் சமையல் செய்திருந்தவற்றை வைத்து சாமியையும் சாப்பிடச் சொன்னேன். மூவரும் சாப்பிடத் தொடங்கினோம். சாமியோ ஒன்றும் பேசவில்லை. எதுவும் கேட்கவில்லை. மௌனமாய் இலையில் வைத்ததையெல்லாம் சாப்பிட்டு, தண்ணீர் குடித்துவிட்டு, கை அலம்ப எழுந்தார் சாமியார். 'இன்னும் கொஞ்சம் சாதம் வேணுமா?' என்று பாரதியார் கேட்டார். சாமியார் பதிலே சொல்லாமல் வெளியே கிளம்பிவிட்டார். பிறகு பாரதியாரும் நானும் தேவையானதை சாப்பிட்டுவிட்டு கைகளைக் கழுவிக் கொண்டோம்.

நான் கடைக்குப் போய் வெற்றிலை, பாக்கு, புகையிலை வாங்கி வந்து பாரதியாரிடம் கொடுத்தேன். அவர் அவற்றை தம் வழக்கம்போல் போட்டுக்கொண்டு, சிறிது நேரம் தூங்கினார். நானும் பத்திரிகைகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

திடீரென்று பாரதியார் கண்விழித்துக் கொண்டார். 'நான் இன்று வழக்கத்துக்குமேல் அரை பங்கு கூடவே சாப்பிட்டேண்டா. அப்பாடா வீட்டில் இன்று காலையில் ஏற்பட்ட கவலையும் ஒருவாறு நீங்கிற்று. சிறிது நிம்மதியாகவும் இருந்தேண்டா. ஆனால், செல்லம்மாள் என்ன செய்தாளோ? அதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது' என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்கு விரைந்தார் பாரதியார்' என்பதோடு இந்த அத்தியாயம் நிறைவுறுகிறது. ஆனால், பாரதியின் வாழ்வில் ஒரு புது அத்தியாயம் தொடங்குகிறது.

## குள்ளச்சாமி செய்த வைத்தியம்:

'ஒரு நாள் கழிந்தது' என்ற புதுமைப்பித்தன் சிறுகதைபோல், பாரதி, நாகசாமியின் 'தர்மாலயத்தில் வந்து தங்கி இருந்து விருந்து உண்டு வீடு திரும்பிய இந்நிகழ்வு - பாரதி குள்ளச்சாமி குறித்த சில நுண் பதிவுகளைத் தாங்கி நிற்கிறது.

பாரதியாருக்கும் அவர் மனைவி செல்லம்மாவுக்கும் ஏதோ மனத்தாங்கல். சண்டையாகவும் கூட இருக்கலாம். சண்டைக்குக் காரணம் இல்லாமல் இருக்குமா? இல்லாமையே காரணமாகவும் இருக்கலாம்.

மனம் வெறுத்துக் கோபமாக, வீட்டை விட்டு வெளிக் கிளம்புகிறார் பாரதி.

'வீட்டில் கோபித்துக் கொண்டு வெளியில் போனால் சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவீர்கள்?'

'எனக்கென்ன ஆளா இல்லை?'

நம்பிக்கைக்கு உரிய நாகசாமியின் இல்லக் கதவு திறந்தே இருக்கிறது.

விரைந்த பாரதியின் பாதங்கள் நாகசாமியின் தர்மாலயத்தை வந்தடைந்திருக்கின்றன. அன்றைய உணவு அங்கேதான் என்று முடிவெடுத்திருப்பதை, 'இன்று எனது பிக்ஷை (உணவு) இங்கே தாண்டா' என்ற தொடர் காட்டிவிடுகிறது. ஓட்டலுக்குப் போகுமுன், 'என்ன வேண்டும்?' என்ற நாகசாமியின் கேள்விக்கு, பாரதி நாகரிகமாகத் தந்த பதில், 'எனக்கு காபி மட்டும் போதும். வேறு எதுவும் தேவையில்லை.'

காபியுடன் வந்த நெய்த் தோசையை மகிழ்ச்சியாகச் சாப்பிட்

டிருக்கிறார், பாரதி. அவ்வளவு பசி. கூடவே, நாகசாமியின் அன்பு ருசி. கோபத்தோடு வீட்டை விட்டு வெளிக்கிளம்பி வந்த பாரதி, கையோடு கொண்டுவந்தவை இரு நூல்கள். ஒன்று திருக்குறள், மற்றொன்று திவ்ய பிரபந்தம்.

முன்னது வாழ்க்கைச் சிக்கலுக்கு வழிகாட்டுவது, மற்றொன்று பக்திவழி நின்று பரவசமூட்டுவது. 'பசிக்கு உணவு, பாடல்கள்' என்பது வெறும் வார்த்தையல்ல, எனது அனுபவமும் கூட. எடுத்து விரித்த பிரபந்த நூலில் கிடைத்த பகுதி, ஆண்டாள் பாசுரம். அது பக்திச்சுவையோடு காதல் இன்பத்தைச் சித்திரப்படுத்தும் அற்புதம் அல்லவா? தான் கண்ணனாக, செல்லம்மாள் ஆண்டாளாக - இருந்திருக்கக் கூடும். இல்லையில்லை. பாரதி ஆண்டாளாக, செல்லம்மாள் செல்லக் கிருஷ்ணனாகப் பரிணாமம் எடுக்கிற வேளையில், மணக்க மணக்க நடேசய்யர் ஓட்டலின் நெய்த் தோசையும் காபியும் வருகின்றன. பசியாறிய பின்னர், பாடலின் ருசி மேலும் ஈர்க்கிறது. 'அப்பொழுது, 'தர்மாலயம்' வந்த இளைஞர்களிடம் ஆண்டாள் பாசுரத்திலிருந்து பாக்களைப் பாடி, வியாக்யானம் செய்த பாரதி, அப்பாசுரங்கள் சிலவற்றிற்கு அபிநயமும் செய்து காட்டினார்' என்கிற நாகசாமியின் குறிப்பிலிருந்து அதனை உணர்ந்துகொள்ள முடிகிறது. கோபத்தை அடக்கிக் குணப்படுத்தும் வைத்தியத்தை, ஆண்டாள் பாசுரம் பாரதிக்குள் நிகழ்த்திக் கொண்டிருக்க, குள்ளச்சாமி வருகிறார்.

நண்பகல் உணவு நாகசாமியின் கைப்பக்குவத்தில் சிறப்பாகத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

'அந்த சமயம் குள்ளச்சாமியார் தெருவில் மிகுந்த கோபாவேசத்துடன் வாய்க்கு வந்தபடி கத்திக் கொண்டு வந்தார். பாரதியார் என்னை அவசரமாகக் கூப்பிட்டு, அந்தச் சாமியாரை அழைத்துவரச் சொன்னார். நான் உடனே ஓடிப்போய் அவர் கையைப் பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டு வந்தேன். 'தர்மாலயம்' கதவண்டை நின்றுகொண்டு உள்ளே சாமியார் என்ன செய்கிறாரென்று பார்த்தார்கள். பாரதியார் சிறுவர்கள் அருகில் சென்று முதுகில் தட்டிக்கொடுத்து, பெரியோர்களை இவ்வாறெல்லாம் கோபமூட்டக் கூடாதென்று அன்புடன் புத்தி சொன்னார். சிறுவர்கள் எல்லாம் கேட்டுக் கொண்டு கலைந்து விட்டார்கள். குள்ளச்சாமியாருக்கும் கோபம் தணிந்தது. வியர்வை அடங்கிற்று.'

கோபம் தணிந்தது குள்ளச்சாமிக்கு மட்டுமா? பாரதிக்கும் தான். 'பெரியோர்களை இப்படியெல்லாம் கோபமூட்டக்கூடாதென்று சிறுவர்களுக்கு அன்புடன் புத்தி சொன்ன பாரதிக்குள் மின்னல் பாய்ச்சிய நிகழ்வு இது. சிறுவர்களுக்குச் சொன்னதைச் செல்லம்மாளுக்குச் சொல்லியிருந்தால்? பணம் என்கிற பரிகாரப் பொருள் இல்லாமல் வெற்று வார்த்தைகளால் என்ன பயன்?

'சாமி காசு இருக்கா?' - 'குள்ளச்சாமியின் நினைவை மாற்ற பாரதியார் கேட்டார்' என நாகசாமி எழுதுகிறார். அவருக்குத் தெரிந்தது அது. ஆனால், அந்த வறுமையின் கொடுமை, குருவுக்கும் சீடருக்கும் தானே தெரியும். 'பேருக்கு ஒரு அணா' நாகசாமிக்குப் போதும். பாரதிக்கு. அதனால்தான், பாரதியின் கைகளில் முடிச்சவிழ்த்துக் கொட்டினார், குள்ளச்சாமி. பசியாறினார்கள் மூவரும்.

'சாமியோ ஒன்றும் பேசவில்லை. எதுவும் கேட்கவில்லை. மௌனமாய் இலையில் வைத்ததையெல்லாம் சாப்பிட்டு, தண்ணீர் குடித்துவிட்டு, கை அலம்ப எழுந்தார் சாமியார். 'இன்னும் கொஞ்சம் சாதம் வேணுமா?' என்று பாரதியார் கேட்டார். சாமியார் பதிலே சொல்லாமல் வெளியே கிளம்பிவிட்டார்.'

அவர் வந்த வேலை முடிந்துவிட்டது. தன் சீடர் பாரதிக்குத் தர வேண்டிய பணத்தையும், செய்ய வேண்டிய உபதேசத்தையும் உரியவண்ணம் நிறைவேற்றிய குள்ளச்சாமியின் வைத்தியம், கூட இருந்து உணவு உண்டதோடு பூரணமாகிவிட்டது. உண்ட மயக்கத்தில் உறங்கிய பாரதி திடுக்கிட்டு விழிக்கிற போது, எல்லாம் கனவுபோல் ஆகிவிட்டது. கவலையும் தீர்ந்துவிட்டது.

'நான் இன்று வழக்கத்துக்குமேல் அரை பங்கு கூடவே சாப்பிட்டேண்டா. அப்பாடா வீட்டில் இன்று காலையில் ஏற்பட்ட கவலையும் ஒருவாறு நீங்கிற்று. சிறிது நிம்மதியாகவும் இருந்தேண்டா. ஆனால், செல்லம்மாள் என்ன செய்தாளோ? அதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது' என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்கு விரைந்தார் பாரதியார்' என்று எழுதி முடிக்கிறார் நாகசாமி.

சித்தன் போக்கு சிவன் போக்கு என்று குள்ளச்சாமி போய் விடலாம், குடும்பஸ்தரான பாரதி போகலாமா? குருவான குள்ளச்சாமி அவரை விட்டுவிடலாமா? குறிப்பறிந்து வந்து பாரதியின் கோப நோய் போக்கி, அன்றைய வறுமைக்கு மருந்தாகக் காசுகளையும் கொண்டுவந்து கொடுத்த குள்ளச்சாமி கூடவே, சிறுவர்களைக் கொண்டு நடத்திய நாடகம் பாரதிக்கு மீளவும் ஓர் உபதேசத்தைத் தந்திருக்கிறது.

ஆம். துறவிகளான சித்தர்களின் நிலைப்பாடு இதுதான். பாரதியின் கவலைக்கு மருந்தாக, கஞ்சாவையோ, அபினையோ குள்ளச்சாமி கொண்டுவந்து கொடுத்தார் அல்லர். மாறாக, குடும்பத்தை நேசிக்க வைத்தார். ஊருக்கு உபதேசம் செய்த பாரதியின் உள்ளத்திற்கான உபதேசத்தைச் செயலில் குறிப்பாகக் காட்டினார்.

***'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்***
***சொல்லிய வண்ணம் செயல்'***

என்று அவர் கைவசம் கொண்டிருந்த திருக்குறள் நூல் சொல்லாமல் சொல்லியிருக்கிறது. கூடவே, ஆண்டாள் பாசுரமும் அவர் மனமாற்றத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறது.

***'காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர்,***
***கடவுள் நிலை அவளாலே எய்த வேண்டும்'***

என்று சும்மாவா பாடினார் பாரதியார்?



sethupathi@thaiveedu.com




சென்ற இதழில் கம்பராமாயணம், அயோத்தியா காண்டத்தின் ஆறாவது படலமாகிய கங்கைப் படலத்தில் கம்பனின் கவி வண்ணத்தைச் சுவைத்து மகிழ்ந்தோம். இந்த இதழில் இராமன், சீதை, இலக்குமணன் மூவரும் காட்டு வழியே கங்கையைக் கடந்து சித்திர கூட மலையை அடையும் வனம்புகு படலத்தில் வரும் சில செய்யுள்களிலே கம்பனின் கவிநயத்தைப் படித்துச் சுவைப்போம்.

இராமன், சீதை, இலக்குமணன் மூவரும் குகனின் துணையுடன் கங்கையைக் கடந்து அதன் தென்கரையை அடைகிறார்கள். அங்கிருந்து இனிய காட்டு வழியே மூவரும் செல்வதைக் கம்பர் இவ்வாறு வருணிக்கிறார்.

***வெயிலிள நிலவேபோல் விரிகதிர் இடைவீசப்***
***பயின்மரம் நிழல்ஈனப் பனிபுரை துளிவானப்***
***புயல்தர, இளமென்கால் பூவள வியதெய்த***
***மயிலினம் நடமாடும் வழியினில் அவர்போனார்.***

கம்ப அயோத்தி. 703

கதிரவனது ஒளிக்கதிர்கள் இளநிலவைப்போல இடையிடையே வீசிக்கொண்டிருக்கவும், நெருக்கமாக வளர்ந்திருந்த மரங்கள் நிழலைப் பிறப்பித்துக் கொண்டிருக்கவும், வானத்திலே சூழ்ந்த கார்மேகங்கள் பனித்துளியைப் போன்ற சிறு நீர்த்திவலைகளைத் தெளிக்கவும், மென்மையாக வீசுகின்ற இளந்தென்றல் காற்று வளமான பூவின் மணத்தையும் சேர்த்தெடுத்து வந்து வீசவும், மயிற்கூட்டங்கள் கூத்தாடுகின்ற இனிய காட்டு வழியிலே அவர்கள் சென்றார்கள் என்பது இச்செய்யுளின் பொருள்.

வானத்தில் கார்மேகத்திலிருந்து சிறுநீர்த் திவலைகள் துளித்துக் கொண்டிருந்ததாலும், செறிவாக வளர்ந்திருந்த மரங்கள் நிழலைத் தந்துகொண்டிருந்ததாலும், இளந்தென்றல் நறுமலர்களின் மணங்களைச் சுமந்து வந்து வீசிக்கொண்டிருந்ததாலும், கதிரவனது ஒளிக்கதிர்கள் வெம்மை நீங்கி இளநிலவின் குளிர்ச்சியுடன் அந்தக் காட்டு வழி இனியதாக அமைந்திருந்ததாக அழகிய சொல்லாட்சியுடன் கம்பர் வருணிப்பது சிறப்பாக உள்ளது.

அவ்வாறான இனிய வழியிலே அவர்கள் நடந்து செல்லும் போது காணும் பல வகையான இனிய காட்சிகளை இராமன் சீதைக்குக் காட்டிய வண்ணம் செல்வதை 17 செய்யுள்களில் கம்பர் வருணனை செய்வது நயம்மிக்கதாக இருக்கிறது.

***மன்றலின் மலிகோதாய் மயிலியல் மடமானே***
***இன்துயில் வதிகோபத் தினம்விரி வனமெங்கும்***
***கொன்றைகள் சொரிபோதின் குப்பைகள் குலமாலை***
***பொன்திணி மணிமானப் பொலிவன பலகாணாய்.***

கம்ப அயோத்தி. 704

'நறுமணம் மிகுந்துள்ள மலர்மாலையை அணிந்தவளே! மயில் போன்ற சாயலையும், மடப்பமுள்ள மான்போன்ற பார்வையையும் கொண்டவளே! இனிது துயில்கின்ற செந்நிறமான இந்திர கோபப் பூச்சிகளின் கூட்டம் காடு முழுவதும் பரவிக்கிடக்க, கொன்றை மரங்கள் சொரிந்த பூக்கள் எங்கும் குவிந்து கிடக்க, இக்காட்சி மணிகள் பதிக்கப் பெற்ற பொன்னாலான பல ஆரங்கள் பொலிந்து விளங்குவன போல இருக்கின்றன. அந்த அழகுக் காட்சியைக் காண்க! எனச் சீதைக்குக் காட்டுகிறான் இராமன்.

கொன்றை மரங்கள் பொன்னிறமான மாலைகளைப் போன்ற மலர்களைச் சொரிந்து நிற்க, அவற்றின் மீது செம்மை நிறமான இந்திர கோபப் பூச்சிகள் நிறைந்து துயில்வனவாய்ப் பரந்து காணப்பட, அந்த இயற்கைக் காட்சி பொன்னாலான மணிகள் வைத்து இழைத்த ஆரங்கள் அங்கே குவிந்து கிடப்பதை ஒத்ததாக இருப்பதாக, இயற்கை எழிலைச் சீதைக்கு இராமன் காட்டுவதாகக் கம்பர் வருணிக்கின்றார். இந்தச் செய்யுளிலே சீதையை வருணிக்கவும், இயற்கையை வருணிக்கவும் கம்பர் பல உவமைகளை வைத்து இச்செய்யுளில் உவமையணி நிறைத்து எழுதியிருப்பதைக் காணலாம்.

***ஏந்திள முலையாளே எழுதரும் எழிலாளே***
***காந்தளின் முகைகண்ணிற் கண்டொரு களிமஞ்ஞை***
***பாந்தள் இதெனவுன்னிக் கவ்விய படிபாராத்***
***தேந்தள வுகள்செய்யும் சிறுகுறு நகைகாணாய்.***

கம்ப அயோத்தி. 710

'நிமிர்ந்த இளமுலையை உடையவளே! எழுதுவதற்கு அரி

தான அழகுடையவளே! காந்தளின் மொட்டு ஒன்றைக் கண்ணால் கண்ட களிப்பு மிகுந்த ஒரு மயிலானது அதனைப் பாம்பு என நினைத்துத் தன் வாயாற் கவ்வியதைப் பார்த்துத் தேனையுடைய முல்லை மலர்கள் செய்கின்ற மெல்லிய புன்னகையைக் காண்பாயாக! என இராமன் சீதையிடம் காட்டுகின்றான் என்பது இச்செய்யுளின் பொருள்.

காந்தள் மொட்டைப் பாம்பெனக் கருதி மயில் அதனைக் கவ்வி எடுப்பதாக ஒரு காட்சியை வருணிக்கும் மயக்கவணி கொண்ட கம்பரின் கற்பனைத் திறன் வியக்க வைக்கிறது. இயல்பாக மலர்கின்ற முல்லைக்கொடி அந்தக் காட்சியைக் கண்டு குறு நகை புரிவதாகக் கற்பனை செய்வது தற்குறிப்பேற்ற அணிநயமாகும். முல்லைக் கொடியைப் பெண்ணாக உருவகித்து அது மலர்வதைப் பெண்ணின் குறுநகையாகக் கற்பனை செய்திருப்பது கம்பரின் கவித்துவத்தின் சிறப்பாகும். கம்பரின் சிறந்த கற்பனையைக் காட்டும் மேலுமொரு செய்யுள்.

***அடியிணை உறைகல்லா வென்றுகொல் அதரெங்கும்***
***இடையிடை மலர்சிந்தும் இனமரம் இவைகாணாய்***
***கொடியினொ டிளவாசக் கொம்பர்கள் குயிலேயுன்***
***துடிபுரை யிடைநாணித் துவள்வன விவைகாணாய்.***

கம்ப அயோத்தி.717

'குயிலைப்போலும் இனிய குரலை உடையவளே! உன்னுடைய அடிகள் கற்களின் உறுத்துதலுக்குப் பழக்கப்பட்டன வல்ல எனக் கருதித் தானோ நீ நடந்து செல்லுகின்ற வழியெங்கும் மரங்கள் பூக்களைச் சிந்தியுள்ளன. இம்மரங்களைக் காண்பாய். கொடிகளுடனே நறுமணம் கொண்ட மலர்களைக் கொண்டிருக்கின்ற இந்த இளங்கொம்புகள் உன்னுடைய உடுக்கையை ஒத்த இடைக்கு ஒப்பாக மாட்டா என நினைத்து வெட்கத்தில் துவள்வதையும் காண்!' என்று இராமன் சீதைக்கு அந்த இயற்கைக் காட்சியைக் காட்டுகிறான்.

சீதை செல்லும் வழி முழுவதும் அவளுடைய காலடிகளைக் கற்கள் உறுத்தாதிருக்க வேண்டுமென்று மரங்கள் மலர்களைப் பரப்பி வைத்துள்ளன போலும் என முதலிரண்டு அடிகளிலும் தன் குறிப்பை ஏற்றிய கம்பர், மலர்கள் மிகுதியாகப் பூத்திருப்பதால் அப்பாரத்தைத் தாங்கமாட்டாது துவள்கின்ற கொடிகளையும் பூங்கொம்பர்களையும் சீதையின் இடைக்கு ஒப்பாக மாட்டாமல் துவள்கின்றன போலும் என பின்னிரண்டு அடிகளிலும் மீண்டும் தன்குறிப்பை ஏற்றி இரண்டு இடங்களிலும் தற்குறிப்பேற்ற அணிநயம் கூட்டியிருப்பது அவரின் கற்பனை வளத்தைக் காட்டுகிறது.

மூவரும் நடந்து செல்லும் வழியில் அந்தக் காட்டின் பல்வகை வளங்களையும் சீதைக்குக் காட்டிக் கொண்டு வருகின்ற இராமன் சீதையை விளித்துக் கூறுவதாக 17 செய்யுள்களில் மன்றலின் மலிகோதாய், மயிலியல் மடமானே, அருந்ததி அனையாளே, அமுதினும் இனியாளே, ஏந்திள முலையாளே, எழுதரும் எழிலாளே, அகில் புனை குழல் மாதே, வில்திரு நுதல் மாதே, அன்னமென் நடையாளே, அணங்கினும் இனியாளே, வாள்புரை விழியாளே என இனிமையான அடைமொழிகளைச் சீதைக்குக் கம்பர் வழங்கியுள்ளதைக் காண்கின்றோம்.
காட்டிலுள்ள இயற்கைக் காட்சிகளை இராமன் சீதைக்குக் காட்டிக்கொண்டு செல்கையில் கதிரவன் மறைந்து மாலைக் காலம் தொடங்குகிறது. சித்திர கூடமலை தூரத்தில் அவர்களது கண்களுக்குத் தெரிகிறது. அப்போது பெருந்தவசி பரத்துவாசன் என்னும் முனிவன் அவர்களை எதிர்கொண்டு வரவேற்கிறான். முனிவன் இராமனது தவக்கோலத்தைக் கண்டு வருந்துகிறான். பின்னர் யாவும் விதியின் செயல். வருந்துவதிற் பயனில்லை என்று தேறித் தானிருக்குமிடத்துக்கு அவர்களை அழைத்துச் சென்று காய்கனி தந்து உபசரிக்கிறான். இரவு முழுவதும் அவர்கள் அங்கு தங்கி மறுநாள் பொழுது புலர்ந்தபின் புறப்படத் தயாராகின்றார்கள்.

***கங்கை யாளொடு கரியவள் நாமகள் கலந்த***
***சங்க மாதலிற் பிரியலன் தாமரை வடித்த***
***அங்கண் நாயகன் அயனுக்கும் அரும்பெறல் தீர்த்தம்***
***எங்கள் போலியர் தரத்ததன்று இருத்தி ஈரென்றான்.***

கம்ப. அயோத்தி. 732

'செந்தாமரை மலரைப் போன்ற கண்களையுடைய தலைவனே! இவ்விடம், கங்கை நதியுடனே யமுனா நதியும், சரசுவதி நதியும் ஒன்று கூடுகின்ற துறை ஆதலின் நான் இவ்விடத்தை விட்டுப் பிரியாதிருக்கிறேன். இந்தத் துறை உலகைப் படைத்த பிரமனுக்கும் பெறுதற்கு அரிய தீர்த்தமாகும். எம்மைப் போன்றவர்களுக்கு எளிதில் கிடைத்தற்கு உரியது அன்று. இப்படிப்பட்ட சிறப்பையுடைய இவ்விடத்தில் தங்கியிருப்பீராக!' என்று பரத்துவாச முனிவன் அவர்களை வேண்டுகிறான்.

திரிவேணி சங்கமம் என அழைக்கப்படுவதான இந்த இடம் கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய மூன்று நதிகளும் சங்கமிக்கின்ற சிறந்த இடமாதலால் இங்கேயே தங்கி அவர்கள் கழிக்க வேண்டிய காலத்தைக் கழிக்கலாம் என முனிவன் வேண்டுகிறான்.

'இந்த இடம் கோசல நாட்டிற்கு அண்மையில் இருப்பதால் நாட்டு மக்கள் இங்கு வரக் கூடும். எனவே இங்கே இருக்க விரும்பவில்லை. சித்திர கூடம் என்னும் மலை, நாம் வசிப்பதற்கு இனிய இடமாக இருக்கும்'. என இராமன் கூறி முனிவனை வணங்கி விடைபெறுகிறான். பின்னர் அவர்கள் யமுனை நதிக் கரையை அடைகிறார்கள். அங்கே இலக்குமணன் மூங்கிற் கழிகளைக் கொண்டு தெப்பம் அமைத்து அந்த ஆற்றைக் கடந்து செல்ல உதவுகிறான்.

***ஆலை பாய்வயல் அயோத்தியர் ஆண்தகைக்கு இளையான்***
***மாலை மால்வரைத் தோளெனும் மந்தரந் திரியக்***
***காலை வேலையைக் கடந்தது கழிந்தநீர் கடிதின்***
***மேலை வேலையிற் பாய்ந்தது மீண்டநீர் வெள்ளம்.***

கம்ப அயோத்தி. 738

கரும்பாலையிலிருந்து பாயப் பெற்ற வயலைக் கொண்ட அயோத்தி நகரத்துக்குத் தலைவனான இராமனின் தம்பியாகிய இலக்குமணன், வெற்றி மாலையை அணிந்த பெரிய மந்தர மலை போன்ற தோள்களைக் கொண்ட கைகளால் மாறி மாறி யமுனை நதியின் நீரினைத் தள்ளத் தெப்பத்திலிருந்து மீண்டு சென்ற நீர் வெள்ளம் மேற்குச் சமுத்திரத்திற் பாய்ந்து

சேர்ந்தது என்பது செய்யுளின் பொருள்.

இலக்குவன் தன் கைகளால் நீரைத் தள்ளித் தெப்பத்தை மேலே செலுத்தும்போது தள்ளப்பட்ட நீர், தள்ளிய வேகத் தால் கீழ்க்கடலிற் போய்ச்சேர, அவன் செலுத்திய தெப்பத் தால் மீண்ட நீர் வெள்ளம் மேல் சமுத்திரத்திற் பாய்ந்து சென் றது. துடுப்புக் கொண்டு தெப்பத்தைச் செலுத்துவது போலத் தன்கைகளால் மிகுந்த விசையுடன் அத்தெப்பத்தை ஓட்டிச் சென்றான் எனக் கம்பர் கூறுகிறார்.

அந்த நதியைக் கடந்தபின் அவர்கள் பாலைவனம் போன்ற இடமொன்றைச் சென்று சேர்கிறார்கள்.அக்கடுஞ்சுரத்தின் வெம்மையைச் சீதை தாங்க மாட்டாளே என்று இராமன் கருத அந்த வனம் வெம்மை நீங்கி இனியதாக மாறுகிறது.

***குழுமி மேகங்கள் குமுறின குளிர்துளி கொணர்ந்த***
***முழவில் வேடரும் முனிவரின் முனிகிலர் உயிரைத்***
***தழுவி நின்றன பசியில பகையில தணிந்த***
***உழுவை யின்முலை மானிளங் கன்றுக ளுண்ட.***

கம்ப அயோத்தி. 742

வெண்மேகங்கள் தம்நிலைமாறிக் கார்மேகங்களாக ஒன்று கூடி முழங்கினவாகிக் குளிர்ந்த நீர்த்துளிகளைப் பொழிந் தன. விலங்குகளை வேட்டையாடுவதற்கான வில்லைக் கொண்டுள்ள வேடரும் விலங்குகளைச் சினங்கொண்டு கொல்லாமல் சாந்த நிலையை அடைந்தனர். விலங்குகளும் தமக்கு எதிர்ப்பட்ட விலங்குகளைக் கொல்லாமல் தழுவுந் தன்மை வாய்ந்தனவாகவும், பசியற்றனவாகவும், பகைமைக் குணம் தணிந்தனவாகவும் ஆகின, பெண்புலிகளின் முலை யிலே இளமான் கன்றுகள் பாலூட்டின. வெம்மை தணிந்த அக்கானகத்தை இவ்வாறு கம்பர் வருணனை செய்கிறார். கானகம் திடீரென வெம்மை நீங்கித் தணிந்தபோது அக்கான கத்தின் இயல்பான நிலைகள் கூட எதிர்மாறாக மாற்றமடைந் ததாகக் கம்பர் கூறுவது சிறப்பு. அக்கானகம் வெம்மை தணிந்ததற்கான காரணத்தைக் கம்பர் இவ்வாறு கூறுவார்.

***கால மின்றியும் கனிந்தன கனிநெடுங் கந்தம்***
***மூல மின்றியும் முகிழ்த்தன நிலனுற முழுதும்***
***கோல மங்கைய ரொத்தன கொம்பர்கள் இன்பச்***
***சீல மன்றியும் செய்தவம் வேறுமொன்று உளதோ***

கம்ப அயோத்தி. 742

கனிகள் தமக்குரிய பருவ காலம் வராதிருக்கவும் கனிந்து கிடந்தன. பெரிய கிழங்கு வகைகளும் தாம் தோன்றுதற்குரிய வேரில்லாமல் இருக்கும்போதும் அங்கே விளைந்திருந்தன. அந்த நிலம் முழுவதும் உள்ள பூச்செடிகள் பூத்துக் குலுங்கி, ஒப்பனை செய்துள்ள மங்கையர்களை ஒத்திருந்தன. இதற் குக் காரணமாக, யாவர்க்கும் இன்பத்தை விளைவிக்கக் கூடிய நற்பண்புகளை விட செய்வதற்குரிய தவம் வேறும் ஒன்று இருக்கிறதா ? இல்லை என்பது பொருள்.

தவம் செய்வோரின் மகிமையால் பருவ காலம் இல்லாத வேளையிலும் இவ்வாறாக மாற்றங்கள் நிகழ்வதுண்டு. இராம இலக்குமணர்கள் அவ்வாறு தவமியற்றுபவர்களாக இல்லா மல் இருக்கையிலும் பாலைவனம் போல வெம்மையாக விளங்கிய இக்காடு அதன் தன்மை மாறி இன்பம் பயக்கும் குளிர் வனமாக மாறியது எப்படி? ஒருவர் செய்கின்ற தவத்தை விட அவர்தம் நற்பண்புகளாலும் இவை நிகழலாம் என்பதை வலியுறுத்துவதாக, சீலமன்றியும் செய்தவம் வேறு மொன்றுளதோ எனக் கம்பர் கூறியிருப்பது சிறப்பு வாய்ந்தது. வெம்மை மிகுந்து கடுஞ்சுரமாக இருந்த அக்காடு அந்த வெம்மை அகன்று குளிர்ந்த வனமாக மாறியதைக் கம்பர் இன்னொரு செய்யுளில் சிறந்த உவமை நயத்துடன் அழகாக வெளிப்படுத்துவார்.

***பந்த ஞாட்புறு பாசறைப் பொருள்வயிற் பருவம்***
***தந்த கேள்வரை உயிருறத் தழுவினர் பிரிந்த***
***கந்த வோதியர் சிந்தையிற் கொதிப்பதக் கழலோர்***
***வந்த போதவர் மனமெனக் குளிர்ந்ததவ் வனமே.***

கம்ப அயோத்தி. 747

படை வீடு அமைத்துப் போரின் பொருட்டேனும், பொருள் தேடும் பொருட்டேனும் பிரிந்து இன்ன பருவத்தில் திரும்பி வருவேன் என்று கூறிச்சென்ற தன் தலைவனை உயிரோடு பொருந்துமாறு இறுகத் தழுவிப் பின்னர் அப்பிரிவுத் துயரால் கொதித்துப் போயிருக்கும், நறுமணம் வீசும் கூந்தலையு டைய தலைவியின் மனம், வீரக் கழலை அணிந்த அவளது தலைவன் மீண்டு வந்தபோது எவ்வாறு குளிர்ச்சியடையுமோ அதைப் போல இராம இலக்குமணர் ஆகியோரின் வருகை யால் அக்காடு குளிர்ச்சியடைந்தது என்பது செய்யுளின் பொருள்.

தலைவன் தலைவியைப் பிரிதல் ஓதல், பகை, தூது, பொருள், காவல், பரத்தைமை என்பவற்றால் நிகழும் என்னும் தொல்காப்பியத்தின் கூற்றை அடியொற்றிப் பகைமேற் செல வும், பொருள் வயிற் செலவும் ஆகிய இரண்டு பிரிவுகளைக் கம்பர் இங்கே எடுத்துக் கூறியுள்ளார். பிரிந்து செல்லும் தலைவன் இன்ன பருவகாலத்தில் திரும்பி வருவேன் எனக் கூறிப் பிரிந்து செல்வான். தன்தலைவனைப் பிரிந்து அந்தப் பிரிவுத் துயரால் வெம்மையுற்றுக் கொதிக்கும் தலைவியின் மனத்தை அப்பாலைவனத்தின் வெம்மைக்கு உவமையாக் கிப் பின் இராம இலக்குமணர்களது வருகையால் அக்காடு குளிர்ச்சி அடைந்ததைத் தலைவன் மீண்டு வந்தபோது அவ னைக் கூடப்பெற்றதால் குளிர்ச்சியடைந்த தலைவியின் மனத் துக்கு உவமையாக்கியுள்ள கம்பரின் உவமைச் சிறப்பு மிக்க கவிநயம் வியக்க வைக்கிறது. இவ்வாறான புதிய உவமை உத்திகள் கம்பராமாயணம் முழுவதும் பரவிக் காணப்படுவது கம்பரின் கவிதைப் புலமையின் தனித்துவத்தைக் காட்டுவன வாக உள்ளன. இத்துடன் வனம் புகு படலம் முற்றுப் பெறுகி றது. இராமன், சீதை, இலக்குமணன் மூவரும் அந்தக் காட்டு வழியைக் கடந்து செல்கையில் சித்திர கூடத்தைக் காண்கி றார்கள். அவர்கள் அங்கு சென்று வசிப்பதைத் தெரிவிக்கும் சித்திர கூடப் படலத்தை அடுத்த இதழில் எடுத்து வருகிறேன்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com


கனடா, தொல்காப்பிய மன்றமும்
தமிழ்நாடு, இலக்குவனார் இலக்கிய மன்றமும்
இணைந்து நடத்தும்
முதலாம் உலகத் தொல்காப்பிய
ஆராய்ச்சி மாநாடு
திருவள்ளுவர் ஆண்டு 2055, புரட்டாசித் திங்கள் 04, 05, 06 ஆம் நாள்களில்
(2024-09-20, 2024-09-21, 2024-09-22)
கனடா
தொன்மைத் தமிழர் வரலாறும்
தொல்காப்பிய மன்றம்
கனடா
குறிக்கோள் : தொல்காப்பியத்தில் உயர் ஆய்வுகள்
மேற்கொள்ளுவதற்கான களமாக இம்மாநாடு
அமையவேண்டும்.
இணையத்தளம் : www.tolkappiyam.ca
தொடர்புகளுக்கு : 647-881-3613 / 416-939-9171 / 647-850-0152

# தமிழ்வலை - 106

‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-106 வினா

### இடமிருந்து வலம்

3 நரம்பு

4 அமெரிக்க துணை அதிபர் (3-3)

5 ஏதிலி

7 காளிதாசரின் ஒரு காவியம்

8 பதில்

9 வடமொழி இலக்கண மூலகர்த்தா

10 பல்வண்ண வாண வேடிக்கை

12 அழிவு

14 குற்றமற்றவர்

16 உணவு

### மேலிருந்து கீழ்

1 பிரசவம்

2 வாவி

5 ஓர் இந்திய கோடீசுவரர்

6 உருட்டுப்புரட்டு

7 கலப்பை

9 காந்தி அடிகளின் செல்லப் பெயர்

11 மருந்துச்செடி

13 ஒருவகை அரிசி

14 ஆணோ பெண்ணோ அற்ற பிறவி

15 ஒரு பழம்பெரும் இந்திய மொழி

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 105-க்கான விடைகள்



## தமிழ்வலை-105 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

பாண்டியன் வீராசாமி - திருச்சி,
உமா கதிர், ஏஜக்ஸ், கனடா.
த.செ. நடராசா, ரொறன்ரோ.
விநோதா வசீகரன், மார்க்கம்.
சுதர்சன் ஜெயலட்சுமி, யாழ்ப்பாணம்.
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்
தேவாம்பிகை அரவிந்தன், இங்கிலாந்து
நேசன் சபாராணி, பிரான்ஸ்
கிருபா சண். ரொறன்ரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

**புஷ்பம் நாகராஜா,**
**திருச்சி.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.






நான் தனியாய்க் கிடந்துதான் இறந்தேன். வீட்டுக் கதவை உடைத்துத்தான் என்னை எடுத்தார்கள். அப்படித்தான் நடக்கும் என்று முன்பே நான் கணித்திருந்தேன். அது இத்தனை சீக்கிரம் நிகழுமென்றுதான் நினைக்கவில்லை. அந்த சிரமத்தை எதிர் வீட்டு நண்பரான நாதனுக்குக் கொடுக்கக் கூடாது என்பதுதான் என் விருப்பமாக இருந்தது. ஆனால் அதுதான் நடந்தது.

அதனாலேயே நான் ஊரிலிருந்து வந்தால் எப்பக் கிளம்பப் போறீங்க? என்று அவர் கேட்டுக்கொண்டேயிருப்பார். எத்தனை நாள் ஸ்டே? என்று முதலிலேயே கேட்டு விடுவார். வந்தமா சட்டுச் சட்டுன்னு லோகல் வேலைகளை முடிச்சமா கிளம்பினமான்னு இருக்கணும் அங்க போய் பேரனோடு கொஞ்சிக்கிட்டு இருப்பீங்களா இங்க வந்து ஒத்தையாக் கிடக்கிறதா அழகு? என்று என்றோ சொல்லிவிட்டார். டிக்கெட் போட்டுட்டீங்களா? என்று அனத்தி எடுத்து விடுவார்.

அவருக்கு எந்தவித சிரமமும் கொடுத்து விடக்கூடாது என்பதே என் எண்ணமாக இருந்தது. அதற்காகவே அவரும் பயந்து கொண்டுதான். இருந்தார் என்றும் எனக்குத் தோன்றியது. இல்லையென்றால் நான் வரும்போதெல்லாம் அப்படிக் கேட்பானேன்? எனக்கும் அவருக்கும் ஒரே வயசு. ஆனால் என்னைவிடச் சுறுசுறுப்பாளி. ஏதாவது வேலை செய்து கொண்டேதான் இருப்பார். அவர் சும்மா இருந்து பார்த்ததேயில்லை. வீடு பெருக்க, மெழுக, சுற்றுப்புறங்களைக் கூட்டிக் குப்பை அள்ள, பின்னால் இருக்கும் செடிகளுக்கு மண் அணைத்துக் கொடுத்து தண்ணீர் இறைக்க என்று எங்கிருந்துதான் அவருக்கு வேலைகள் முளைக்குமோ! எல்லாம் முடிந்ததென்றே கிடையாது அவருக்கு. வீட்டு வேலை முடிந்தால் சைக்கிளில் குடத்தைக் கட்டிக் கொண்டு நல்ல தண்ணீர் எடுக்கக் கிளம்பி விடுவார். அங்கு போய் அந்தக் காலனி மக்களோடு நின்று நாலு கதை பேசி, ஊர் நிலவரம் பகிர்ந்து அந்தத் தண்ணீரைச் சுமந்து வருவதில் ஒரு அலாதி திருப்தி அவருக்கு. சுறுசுறுப்பாய் இருப்பவர்கள் என்றுமே ஆரோக்யமாய் இருக்கிறார்கள். மன ஆரோக்கியம் உடல் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கிறது என்பது நிச்சயம்.

எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறார் நாதன். வரும் தபால்களையெல்லாம் எடுத்து பத்திரமாகத் தபால் பெட்டியில் போட்டு வைக்கிறார். பெட்டியில் போட வேண்டும் என்று தான் போஸ்ட்மேனுக்கும், கூரியர்காரனுக்கும் போய்ப் போய்ச் சொல்லி, எழுதிக் கொடுத்துக் கேட்டுக் கொண்டு ஊர் வந்து சேர்ந்தேன். ஆனால் அவர்கள் அதைப் பின்பற்றவில்லை. எங்க சார், எல்லாம் வராண்டாவுலயே வீசிட்டுப் போயிடுறாங்க என்று சொல்லி விட்டு நான் இருக்கிறவரைக்கும் எடுத்து பாக்சுக்குள்ள போட்டுடறேன். கவலைப்படாதீங்க என்று கூறி, தவறாமல் அதைச் செய்து கொண்டிருக்கிறார் நாதன். இல்லையென்றால் என்னுடைய மியூச்சுவல் ஃபன்ட் காசோலைகள் எத்தனையோ வீதிக்குள் பறந்து கண்காணாமல் போயிருக்கும். மூன்று மாதத்திற்குள் அதைக் காசாக்க வேண்டும், கணக்கில் சேர்க்க வேண்டும் என்று ஊருக்கு வருவதே என் வாடிக்கையாய் இருந்தது.

அவரது சேவை அளவிடற்கரியது. மாலை ஆறு மணியானால் வாசல் லைட்டைப் போட்டு எரிய விட்டு, பத்து மணியானால் மறக்காமல் வந்து அணைத்துவிட்டு, மாடிக்கு ஏறி ஒரு சுற்று சுற்றி, கொல்லைப் புறமெல்லாம் ஒரு நோட்டம் விட்டு விட்டு வந்து படுத்துக் கொள்வார். ஆளில்லாத வீடுகளில் பின்புறம் கூட்டாக வந்து அமர்ந்து குடித்து விட்டு, காலி பாட்டில்களை, கஞ்சா காகிதப் பேப்பர்களைக் கசக்கி வீசி விட்டுப் போவது எங்கள் ஏரியாவில் வழக்கமாய் இருந்தது. கொஞ்சம் கவனிக்காமல் போனால் பின்புறமாய் ரகசியமாய்க் கதவைத் திறந்து வர போக என்று ஆரம்பித்து விடுவார்கள் போன்றதான நிலைமை ஓடிக் கொண்டிருந்தது.

பள்ளி வாசல்களில் காஞ்சா போதைப் பொருட்கள் விற்கப்படுகின்றன. எல்லாப் பெட்டிக் கடைகளிலும் சர்வ சாதாரணமாய்க் கிடைக்கிறது. தியேட்டர்களில் ரகசியமாய்க் கிடைக்கின்றன. ஓட்டல் வாசல்களில் ஓரமாய் நின்று விற்கப்படுகின்றன. சிறார் உலகமும், இளைஞர் உலகமும் நாளுக்கு நாள் கெட்டுச் சீரழிந்து வருகின்றன. எதிர்காலத் தலைமுறை என்னவாகுமோ என்று பெற்றோர்கள் கதி கலங்கிக் கிடக்கிறார்கள்.

அவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்தாக வேண்டும். பள்ளி விட்டு வந்ததும் தங்களிடம் சகஜமாய்ப் பேசுகிறானா, அறையில் போய்த் தனிமையில் ஒண்டுகிறானா, ரகசியமாய் ஏதேனும் செய்கிறானா, யாருடன் பழகுகிறான், அவர்களெல்லாம் ஒழுக்கமான பிள்ளைகளா, எங்கெங்கு போகிறான், வருகிறான் என்று கட்டாயம் கண்கா

ணித்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். உலகம் கைக்கு அடங்காது போய்க் கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் தீமைகள் நம்மைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. எந்நேரம் எது நடக்குமோ என்று பயந்து கிடக்கிறது உலகம். எதைநினைத்து வருந்துவது. தனிமையில் இந்த வீட்டில் இருக்கவே நானே பயந்து கொண்டுதானே கிடக்கிறேன். என் வீட்டில் எனக்கே எப்படி இந்தப் பயம் வந்தது. குடியிருக்கும் தெருவில் அமைதியில்லையே? என்னென்னவோ வேண்டாத சத்தங்கள் கேட்கிறதே? கெட்ட வார்த்தைகள் காதில் விழுகின்றனவே? குடித்து விட்டு ஆட்கள் தள்ளாடிப் போகும் சத்தம் இரவு இரண்டு மணி வரை கேட்ட வண்ணமே இருக்கிறது. பிறகு நாலு மணி வரைதான் ஓய்வு. அமைதி. மறுபடியும் அந்நாளைய தவறுகள் ஆரம்பித்து விடுகின்றன. தனியாய் இருக்கும் எனக்கே இரவு எவனாவது வீட்டுக்கு வந்து கதவைத் தட்டுவானோ என்ற பயம் இருந்து கொண்டேயிருக்கிறது. வீட்டைப் பூட்டிப் போட பயமாய்த்தான் இருக்கிறது. ரகசியமாய், சத்தமின்றிக் கதவைத் திறந்து உள்ளே புகுந்து கொண்டு எவனும் இது என் வீடு என்று சொந்தம் கொண்டாடி விடுவானோ என்கிற அளவுக்கு பயப்பட வேண்டியிருக்கிறது. காலி இடம் பிடிப்பதைப் போல் கட்டிய வீட்டினைப் பிடிக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? அந்த அளவுக்குத் தீமைகளும் ஒழுக்கக் கேடுகளும் நடக்கின்றனவே?

பக்கத்தில் ஒரு மயானம் உண்டு. அன்றாடம் அங்கே சடலங்கள் வந்து கொண்டேயிருந்தன. எந்நேரமும் நெருப்பு பக பக வென எரிந்து கொண்டேயிருந்தது. அதற்கு முப்புறமும் இடம் வாங்கி வீடு கட்டியவர்கள் மயானப் பகுதி ஜன்னல்களைத் திறப்பதேயில்லை. அது அல்லாமலே அவர்கள் வீட்டுக்குள் எந்நேரமும் பிணப் புகை போய்க் கொண்டேதான் இருந்தது. அது உடம்புக்கு நல்லது என்று வேறு சிலர் சொல்லி வைக்க அருகிலுள்ள சிறிய பேருந்து நிறுத்தத்தில் எந்நேரமும் அந்தப் புகையை மூக்கிற்குள் வாங்கும் சனம் நின்று கொண்டேயிருந்தது. ஏரியாவில் வீடுகள் வரவர, அந்த நகர்ப்பகுதி பிரபலமாக ஆக நாளாவட்டத்தில் மயானம் எடுக்கப்பட்டு விடும் என்று சொல்லித்தான் ப்ளாட்டுகள் விற்றுத் தள்ளப்பட்டிருந்தன. இப்போது வீடுகள் நிரம்பி வழிகின்றன.

எங்க சாதி சனத்து ஆட்களை இங்க கொண்டாந்துதான் எரிப்போம். இந்தச் சுடுகாட்ட எடுக்க விடமாட்டோம் என்று போராட்டத்திற்கு நின்றார்கள் அப்பகுதிப் பழங்குடிகள். மாவட்ட ஆட்சியர், வேண்டாமே! என்று ஒரே வார்த்தையில் முடித்துக் கொண்டார்.

எங்கள் நலச் சங்கத்தின் ஆட்களால் செய்ய முடியாமல் போன ஒரே காரியம் அது ஒன்றுதான். எத்தனை பஸ் போனாலும் வந்தாலும் அத்தனையும் நிரம்பி வழியும். வசூல் மிக அதிகமென்றுணர்ந்து, போக்குவரத்துக் கழகத்தின் வந்து போகும் பஸ்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருந்தன. எந்தெந்த இடத்திலிருந்தோவெல்லாம் இணைப்புக் கொடுத்து வண்டிகளை இங்கே அனுப்பிக் கொண்டிருந்தார்கள். வாரணாசி போல் விடாமல் பிணம் எரிந்து கொண்டிருப்பதைப் பார்க்க வருகிறார்களோ என்று தோன்றும். இரவு நேரத்தில் பெண்கள் அந்தப் பகுதியைக் கடந்து போகப் பயம் கொள்ளுவார்கள். தனித்துக் கடப்பது வேண்டாம் என்று தவிர்க்க நினைப்பார்கள்.

இன்று அறுநூறு அடிக்குக் கீழே தண்ணீர் போய்விட்டது எங்கள் பகுதியில். அதனால் பலரும் படிப்படியாக வீடுகளை விற்றுவிட்டு நகர ஆரம்பித்திருந்தார்கள். வாடகைக்கு வீடு கிடைக்காமல் இருந்த எங்கள் ஏரியாவில் பல வீடுகள் சும்மாவே பூட்டிக் கிடந்தன. கேட்டால் அதை வித்தாச்சு ஓனர் பம்பாயிலயோ, பெங்களூரிலயோ இருக்காரு சரியாத் தெரியாது என்று சொல்ல ஆரம்பித்திருந்தார்கள்.

அடுத்தடுத்து சடலங்கள் வந்து இறங்க அங்கு நடக்கும் ஆர்ப்பாட்டத்தில் அப்பகுதிக் கடைகள் சட்டுச் சட்டென்று அடைக்கப்பட்டன. தேவையில்லாமல் கல்லெறிவதும், கண்ணாடிகள் உடைவதும் வழக்கமாய்ப் போக முதல்ல எடத்தை மாத்தியாகணும் என்று பலரும் புறப்பட்டிருந்தார்கள். டூ வீலரைப் போட்டுக் கொண்டு மூன்று பேர் நான்கு பேர் ஒரே வண்டியில் தொற்றிக் கொண்டு சர்ர்ர்ர்... புர்ர்ர்ர்... என்று இங்கும் அங்கும் பறந்து அளப்பரை பண்ணுவதும் அன்ட்ராயர் தெரியக் கைலியை உயர்த்திக் கொண்டு, நாக்கை மடித்துக் கொண்டு உனக்கு வேற தனியாச் சொல்லணுமா கடையை அடைக்கப் போறியா இல்லையா, ங்கோத்தா? என்று ஆர்ப்பாட்டம் செய்வதைப் பார்த்தால் அரசாங்கம், போலீஸ் என்று ஒன்று இருக்கத்தான் செய்கிறதா? என்ற கேள்வி எல்லார் மனதிலும் தவறாமல் எழும். எந்த டெட்பாடி வந்தாலும் வாகனத்தில் செல்பவர்கள் மரியாதையாய் இறங்கி நிற்க வேண்டும். அல்லது ரூட்டை மாற்றிக் கொண்டு பறக்க வேண்டும்.

என் வீடு அந்த மயானம், பஸ்-ஸ்டான்டிலிருந்து உள்புறமாய் கடைசியாய் இருந்த வீதியிலிருந்தது. மற்ற எல்லாத் தெருக்களுக்கும் போகும் லிங்க் ரோடு எங்கள் தெருதான். ஆகையினால் போக்குவரத்து சதா சர்வகாலமும் இருந்து கொண்டேயிருக்கும். இரவு ரெண்டு மணிவரை கூட வண்டிகள் போகும் வரும். பிறகு நாலு மணிக்குத் திரும்ப ஆரம்பித்து விடும்.

எங்கள் தெருவின் பிரதிநிதியாக நான் அப்போது இருந்தேன். எனக்கே தெரியாமல் அங்கு நடக்கும் ஒரு அக்கிரமம், என்ன சார் நடவடிக்கை எடுத்திருக்கீங்க என்று ஒருவர் சத்தமாய்க் கேட்டுக் கொண்டு வந்து நின்ற போதுதான் தெரிய வந்தது.

நீங்க நலச் சங்கத்துல மெம்பரா? என்று முதல் கேள்வியைப் போட்டேன். இதை அவர் எதிர்பார்க்கவில்லை. பதில் சொல்லத் தயங்கின அந்தக் கணம், பரவால்ல வர்ற மீட்டிங்க்ல மெம்பர் ஆயிடுங்க என்று சொல்லி ஒரு பேப்பரில் அவர் கோரிக்கையை எழுதி வாங்கிக் கொண்டு அனுப்பினேன். ஆனால் அது படு சீரியசான விஷயம். வந்த வேகத்திற்கு அவர் அதைச் சொல்லாமல் போயிருக்கக் கூடாது. மெம்பர் இல்லாட்டி என்ன சார் கேட்கக் கூடாதா? என்று கேட்டிருக்க வேண்டும். கோபம் மனதிற்குள் புழுங்க அவர் திரும்பிப் போனதுதான் ஆச்சர்யம். என் தோரணையைப் பார்த்து பயந்துட்டாரோ? அப்படியும் ஒரு திருப்தி உண்டு எனக்கு.

நானும்தான் சார் கவனிச்சிட்டிருக்கேன் ஒரு வாரமா அங்க மாடி பால்கனில சிவப்பு லைட் எரியுது பார்த்தீங்களா? என்று கையைக் காண்பித்தார் பக்கத்து வீடு மாசிலாமணி. தெருக் கடைசியில் கண்மாய்ப் பக்கம் குடியிருக்கும் ஒரு போலீசின் ஆதரவோடு அந்த வீட்டில் பிராத்தல் நடந்து கொண்டிருந்தது. ஆட்கள் வருவதும் போவதுமாய் என்னடா இது ராத்திரி அடிக்கடி ஆட்டோ சத்தம் கேட்குதே, என்று என் மனதில்



ஓடிக் கொண்டுதான் இருந்தது. ஆனால் அதைத் தீவிரமாய் உணரும் தீட்சண்யம் என்னிடமில்லை. எவன் வந்தா என்ன, போனா நமக்கென்ன? என்கிற மனப்பான்மை. நாமுண்டு நம்ம வேலையுண்டு என்கிற வளர்ப்பு.

நல்லவேளை! அங்கேயும் நாதன்தான் உதவினார். அதனால் தான் சொன்னேன் அவரது உதவி அளப்பரியது என்று. அவரது சித்தப்பா பையன் ஒருவன் ஒருவனல்ல ஒருவர் சென்னையில் டி.எஸ்.பி.யாக இருந்தார். ராவோடு ராவாக அவருக்கு ரகசியமாய் ஃ.போன் போட்டுச் சொல்ல எங்கள் பகுதியின் இன்சார்ஜ் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து ஒரு படை வந்து அந்த வீட்டின் மொத்தக் கூட்டத்தையும் அள்ளிப் போட்டுக் கொண்டு போய்விட்டது. இந்த ஊர்லயே உங்கள நான் இனி பார்க்கக் கூடாது. என்று சொல்லி ஸ்டேஷனில் வைத்து நன்றாக மொத்தி, தப்பிச்சோம் பிழைச்சோம் என்று ஓட ஓட விரட்டியடித்தார்கள். அந்த விஷயத்திலான நாதனின் பேருதவி சாகும்வரை மறக்கக் கூடாதது.

இதனாலேயே தெருக்கோடியில் குடியிருந்த அந்தப் போலீஸ் காரருக்கு என் மீது தீராத கோபம். பயங்கரக் கடுப்பு. எதிலடா

என்னை மாட்டுவோம் என்று அவன் காத்துக் கொண்டிருந் தான் என்பதுதான் உண்மை. ராத்திரி ஊர் உறங்கும் நேரம் என் அறையில் லைட்டைப் போட்டுக் கொண்டு கொட்டக் கொட்ட புத்தகம் படித்துக் கொண்டிருப்பேன் நான். தேவை யில்லாமல் வந்து கதவைத் தட்டுவான். ஏன் லைட் எரியு துன்னு கேட்பான். கதவைத் திறந்தால் சட்டென்று எதிர்பாராத தருணத்தில் உள் நுழைந்து எல்லோரும் தூங்குகிறார்களா என்ன செய்கிறார்கள் என்று நோட்டம் பார்ப்பான். எனக்கு அதற்கு அதிகாரமுண்டு என்பது போல் இருக்கும் அவன் நட வடிக்கைகள்.

அதெப்படி சார் உள்ளே விட்டீங்க? அப்டியெல்லாம் போலீ சானாலும் வரக் கூடாது சார் ஒரு கௌரவம், மரியாதைன்னு நமக்கும் இருக்குல்ல யாரன்னு காண்பிங்க பார்ப்போம் என் றார் நாதன். என் கூடப் பிறக்காத சகோதரன் அவர். எதற்காக பிரயோஜனமில்லாத என் மீது இத்தனை அன்பைப் பொழிகி றார் என்று நினைத்து உருகுவேன். நான் அதற்குத் தகுதியா னவன்தானா என்று கூசுவேன்.

அதையும்தான் அந்த சென்னைப் போலீசிடம் சொல்லச் செய் தேன். எல்லாம் நாதனின் அசாத்தியக் கருணை. அந்தப் போலீஸ்காரரை ஊரை விட்டே மாற்றி விட்டார்கள். எங்கள் வேலைதான் அது என்று அவர் அறிய மாட்டார்.

எங்கள் வள்ளுவர் நகருக்கு தார்ச் சாலைகள் போட்டது, கம் பங்கள் நட்டு தெரு விளக்குகள் எரிய விட்டது, சங்கம் அமைத்து வசூலித்து, குப்பை வண்டிகளுக்கு ஏற்பாடு செய் தது. அதை இயக்கும் ஆளுக்கு சம்பளம் நிர்ணயித்தது, போக்குவரத்துக்கு பேருந்துகள் ஏற்பாடு செய்தது, பேருந்து நிலையத்துக்கு கலெக்டரிடம் மனுக் கொடுத்து இடம் ஒதுக் கச் செய்தது என்று நிறையக் காரியங்கள் செய்தோம் நாங் கள். சொல்லப் போனால் திருட்டு அதிகமாய் இருந்த பகுதி அது என்று சொல்லலாம். திடீரென்று சின்னச் சின்னக் கற்க ளாய் வந்து வீட்டின் மேல் தடதடவென்று விழும். எங்கிருந்து எறிகிறார்கள் என்றே தெரியாது. சனமெல்லாம் ஒன்று கூடி வாசலில் நின்று பேசிக் கொண்டிருக்கும்போது வீட்டுக்குள் எப்படியோ திருடு போயிருக்கும். யாராலும் கண்டு பிடிக்க முடியாது. அதக் காணல இதக் காணல என்று கத்தும்போது தான் தெரிய வரும். சத்தம் கேட்டு ஓடி வந்தவர்களில் கூட யாரேனும் கூட்டு இருப்பார்களோ என்று சந்தேகிக்கத் தோன் றும். தெரு விளக்குகளை எங்கள் பகுதி போல் கல்லெறிந்து உடைத்தவர்கள் வேறு எங்கும் காண முடியாது. மாற்றி மாற்றி எத்தனை பல்புகள் மாட்டினாலும் உடைத்து விடுவார்கள். எப்போது வருகிறார்கள் போகிறார்கள் என்று எவர் கண்ணி லும் படாது. அத்தனை கம்பங்களும் லைட் எரிந்து நாங்கள் என்றுமே பார்த்ததில்லை. எத்தனை தடவைகள்தான் பல்பு மாற்றுவது. மாளவில்லை. ஒரு கட்டத்தில் இந்தக் கடைசிக்கு ஒண்ணு, அந்தக் கடைசிக்கு ஒண்ணு என்று மட்டுமே எரியும் நிலை வந்தது. அவரவர் வீட்டு வாசல் லைட்டுகள்தான் எரி யும். அதுவே போதும் என்று விட்டுவிட்டோம்.

மும்மூன்று சென்டுகளாக நெருக்க நெருக்கமாய் வீடுகள் கட் டப்பட்ட பகுதி அது. அதனால் சின்னச் சின்னச் சந்துகளாய்த் திரும்பித் திரும்பி நீண்ட தெருக்களை அடைய வேண்டியி ருக்கும். குறுக்குத் தெருக்கள் அதிகம் எங்கள் பகுதியில். ஆட்டோக்காரர்கள் வந்தால் கூட இன்னும் எத்தனை சந்து சார் திரும்பணும் என்று அலுத்துக் கொள்வார்கள். திரும்பி எப்படி மெயின் ரோடை அடைவது என்று முழித்து நிற்பார் கள். பஸ்-ஸ்டான்டுக்குப் பின்னாடின்னு சொல்லி எங்கியோ கூட்டிட்டு வந்திட்டீங்களே சார் என்று அதிக வாடகைக்கு அடி போடுவார்கள்.

உங்க ஏரியாவுல நாய்கள் ஜாஸ்தி சார் சவாரி வராது சார் என்று ஆட்டோவுக்குள் உட்கார்ந்து ஓட்டும் டிரைவர்களே பயந்து சாவார்கள். நாங்களும் மாநகராட்சியில் எவ்வளவோ சொல்லி நாய்களைக் குறைக்கப் பார்த்தோம். அவற்றை ஊசி எறிந்து கொல்ல முடியாது. பிடித்துக் கொண்டு போவோம் பிறகு ஊருக்கு வெளியில் விட்டு விடுவோம் என் றார்கள். அது எப்படி பழகிய பகுதி தெரியுமோ ஆச்சர்யம் தான். நமக்கே நகரின் பல பகுதிகள் தெரியாதுதான். ஆனால் நாய்கள் எப்படித் தங்கள் இடங்களைக் குறி வைத்து வந்து நிற்குமோ! நாய்களுக்குப் பயந்து இந்தத் தெரு வேணாம் அப்படிப் போவோம் என்று மாற்றி மாற்றிப் போய்க் கொண்டி ருந்தார்கள்.

சின்னச் சின்ன குறுக்குச் சந்துகள் அதிகம் என்பதால் அப்ப குதிக்குள் தன்னந்தனியே நடந்து வரும் பெண்களிடம் சங்கி லிப் பறிப்புகள் நிகழும்.காரணம் தெரு ஆரம்பத்திலிருந்து தான் லைட் கம்பங்கள் இருக்கும் என்பதால் மங்கிய சந்து வெளிச்சங்கள் போதிய பாதுகாப்பின்மையை உணர்த்திக் கொண்டேயிருந்தன. போதாக் குறைக்கு நாய்ப் பயம் வேறு. எல்லாம் படிப்படியாய்க் குறைந்த காலங்களும் உண்டு. ஆனால் நாய்கள் மட்டும் அப்படியே கூட்டம் கூட்டமாகத் தான் இருக்கின்றன.

இப்போதுதான் பல வீடுகள் பூட்டிக் கிடக்கும் நிலைக்கு வந்து விட்டனவே? அந்த வீடுகளுக்கு இந்தத் தெரு நாய்கள் தான் காவல். அவற்றிற்கு சரியான புகலிடம். சொல்லப் போனால் பையன்களுக்குக் கல்யாணம் பண்ணி, சென் னைக்கோ, பெங்களூருக்கோ, பம்பாய்க்கோ, குடி பெயர்ந்து அவர்களோடு போய் இருப்பவர்களில் பத்துக்கு ஒன்பது பேர் வீடுகளை விற்று விட்டுத்தான் ஒரேயடியாய்ப் போய் விட்டார் கள் என்று சொல்ல வேண்டும். நான் ஒருவன்தான் இன்னும் சொந்த வீடை விற்பதாஎன்றாவது மீண்டும் இங்கே வந்து இருக்க வேண்டிய நிலை வந்தால்? என்று வந்து போய்க் கொண்டிருந்தேன். என் சாவு இங்கேதான் நிகழ வேண்டும் என்று என் மனதில் தீர்க்கமாய் ஒரு தீர்மானம் ஓடிக் கொண் டேயிருந்தது.

நான் பார்த்துப் பார்த்துக் கட்டிய வீடு அது. கல்லு மாதிரி வீடு. வெறும் ஒன்றரை லட்சத்தில் அரசு லோன் போட்டுக் கட் டினேன். சைடு பகுதியை வாடகைக்கு விட்டு அந்தக் காசை யும் எடுத்து விட்டேன். எப்டிக் கட்டினாக இந்த ஏரியாவுல எந்த வீடும் உங்க வீடு மாதிரி கல்லுக்குண்டாக் கட்டுன துல்ல அன்னன்னிக்கு நானும் பார்த்திருக்கனே எங்க தாத்தா தான இதுக்கு வாட்ச்மேனா இருந்தாரு? சாகுற வரைக்கும் தீபாவளி பொங்கல்னா அம்மா கூப்பிட்டு துணிமணியும், பண மும் கொடுப்பாகளே எம்புட்டுப் பெரிய மனசு அவுகளுக்குத் தான்? இந்தக் கொய்யாவும், கருவேப்பிலையும், மல்லிப் பூவும் அவுக வச்ச செடிதான? எத்தனவாட்டி நா வந்து பறிச்சி ருக்கேன். எடுத்துக்கோ எடுத்துக்கோன்னுதான் அம்மா சொல்வாகளே தவிர ஒரு நா கூட என்னத் திட்டுனதில்லீங்

கய்யா அம்மா மனசு அப்டியாக்கும் தெனமும் அவுகளுக்குத் தான மொதப் பூவக் கட்டிக் கொண்டாந்து கொடுப்பேன் அவுக வெளியூர் போனது எங்களுக்கெல்லாம் எம்பூட்டு வருத்தம்? இந்தா வச்சிக்கோன்னு ஐயாயிரம் பணம் கொடுத் தாகளே அந்த மனசு யாருக்கு வரும்?

கிரகப்பிரவேசத்துக்கு நாந்தான பால் கொண்டாந்து கொடுத் தேன் மறந்திட்டீகளா? என்று சம்பங்கி சொன்னது இன்னமும் என் காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. இந்த வீட்டை அத்தனை நம்பிக்கையாய்க் கட்டிக் கொடுத்த அந்த இன்ஜி னியர் ராகவேந்திரனுக்கு ஒரு டிரஸ்கூட நான் வைத்துக் கொடுக்கவில்லை. அந்த முறைமை கூடத் தெரியாத மடைய னாய் நான் இருந்ததும், அதை என் மனைவி கூடநினைவு படுத்தாததும், இருந்த பெரியவர்கள் யாரும் சொல்லித் தராத தும் கடைசிவரை என் மனதை வாட்டிக் கொண்டுதான் இருந் தன.

இந்த வீடு என் அப்பா அம்மாவின் காலடிகள் பட்ட வீடு. கை வீசிக் கால் வீசி இடைஞ்சலில்லாமல் அவர்கள் நடந்து பழ கிப் புழங்கிய வீடு. தண்ணிக் கஷ்டமில்லாமல் தாராளமாகத் துணி துவைத்து, குளித்து, நீள நீளமாகக் கொடிகளில் உலர்த்திக் காய வைத்து எடுத்து, திருப்தியாய் மடித்து எடுத்து வச்சு, இங்க இல்லாட்ட அங்க அங்க இல்லாட்டா இங்க என்று வெவ்வேறு அறைகளில் சுதந்திரமாய்ப் படுத்து உருண்டு கண்ணயர்ந்து நிம்மதியாய் உறங்கி எழுந்து கழித்த வீடு. ரமணா கொஞ்சம் அந்த ஏ.சி.யைப் போடுற யாப்பா என்று அப்பா வாய் விட்டுக் கேட்டுப் போடச் செய்து யப்பாடி யப்பாடி என்ன சொகம் என்ன சொகம்.என்று ஆசுவா சப்பட்டு ஆசீர்வதித்த வீடு. கைக்கும், வாய்க்கும் தாராளமாய் அவர்களை இருக்கச் செய்து மனதார வாழ்ந்து கழித்த சொர்க்கம் இந்த மண்.

அந்த வீட்டில்தான் நான் தனியாய் இறந்து கிடந்தேன். எது நடக்கக் கூடாது என்று நினைத்தேனோ அது நடந்தே விட்டது. எதற்காக நான் வரும்போதெல்லாம் நாதன் பயந்தாரோ, எதற் காக சீக்கிரம் கிளம்புங்க என்று என்னை விரட்டினாரோ அது நடந்தே விட்டது. போன ஜென்மத்தில் அவருக்கும் எனக்கும் ஏதோ தொடர்பு இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இப்படி நடக்காது. என் சாவு இங்கேதான் நிகழ வேண்டும் என் கிற என் வேட்கையை, கடைசி ஆசையை நான் அவரிடம் முன்பே தெரிவித்திருந்தால் அதற்கேற்றாற்போல் தன்னைத் தயார் பண்ணிக் கொண்டிருந்திருப்பாரோ என்னவோ? உடன் பிறவாச் சகோதரன் என்றால் அவர்தான்.

காலையில் மணி பத்துக்கு மேலாகியும் நான் வெளியே வரா தது கண்டு அதிர்ந்து போய் வாசலுக்கு வந்து சார் சார் என்று கத்தியும் பதிலில்லாமல் உள்புறமாய்க் கொக்கி போட்டி ருந்த ஒரு ஜன்னலை மட்டும் எப்படியோ தட்டித் திறந்து பார்த்தவருக்கு இந்த அதிர்ச்சி.

அதுதான் வாயும், முகமும் காட்டிக் கொடுத்து விடுமே இறந்து சில மணி நேரங்கள் ஆகி விட்டன என்பதற்கடையாள மாய் ஈக்கள் மொய்ப்பதைக் கண்டே அவர் பதறிப் போயிருக் கிறார் பாவம். நேர் எதிர்வீட்டுக்காரரின் உதவியோடு இன்னும் ஓரிருவரோடு வந்து பார்க்கச் செய்து உறுதி செய்து கொண்டு, திண்ணைக் கதவின் பேட்லாக்கை உடைத்து உள்ளே நுழைந்து, இதோ குளிர் கண்ணாடிப் பெட்டியில் நிச் சலனமாய் நான் உறங்கிக் கொண்டிருக்கிறேன். உள்ளூரில் உள்ள சிலர் என் தூரத்து உறவினர்கள், என்னோடு பணியாற் றியவர்கள் என்று வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

நல்ல ஆள்தான் எனக்கு வேணாம்ங்கிறதோட நின்னிருக்க லாம். வாங்கி ஆபீஸ் வாசல் கோயில் உண்டியல்ல போட் டாரு. நமக்காவது பிரிச்சிக்குங்கன்னு கொடுத்திருக்கலாம் சரிவீசில் இருக்கும்போது நான் செய்த தவறு அங்கே அரங் கேறிக் கொண்டிருந்தது.

இனி பென்ஷன் குறைந்து போகும். மனைவிக்கு என்று 30% கிடைக்கும். அதை வைத்துக் கொண்டு எப்படிச் சமாளிக்கப் போகிறாளோ? நிறைய மருந்து மாத்திரைகள் வாங்கு வாளே? இனி அது பயன்படாது என்று படுக்கையில் விழா மல் இருக்கணும்.

ஐயையோ எலெக்ட்ரிக் பில் இன்னும் கட்டலையே நேத்துத் தானே அட்டைல எழுதிட்டுப் போனான் கவனிச்சுக் கட்டிடு வாங்களா?

அடடா காஸ் தீர்ந்து போச்சேன்னு புக் பண்ணியிருக்கேனே அவன் வந்து நிற்பானோ?

சில புக்ஸ் ஆர்டர் பண்ணியிருக்கேனே அதுக்கு வேறே கூரி யர் வரும். வாங்குவாங்களா?

எல்லாத்துக்கும் மேலே அடுத்த மாசம் முதல் வாரம் வார ணாசி டூர் போக டிராவல்ஸ் புக் பண்ணியிருக்கேனே? அந்த அட்வான்ச அவன் திருப்பித் தருவானா?

எதுக்காக இந்த வாட்டி ஊருக்கு வந்தேனோ அந்த வேலை யெல்லாம் இன்னும் முடியலையே!

நிறைய ஃபிக்சட் டெபாசிட் இந்த மாசம் மெச்சூர்டு ஆகியி ருக்கே ரின்யூவல் பண்ணனுமே செய்துப்பானா?

இந்த வீட்டை பையன் பேருக்கு எழுதாமலே செத்துப் போய்ட் டனே ஒரு உயில் கூட எழுதலியே? லீகல் உறவு பையன் தான்ங்கிறதால பிரச்னை இருக்காதுதானே? ஸாரி ஒய்ஃப் இருக்காளே... அவதானே நெக்ஸ்ட் லீகல் உறவு. அப்புறம் தானே பையனுக்கு வரும்!

எதைக் கொண்டு வந்தோம் கொண்டு செல்ல...

என் மனைவியின் வருகைக்காக, என் பையனின் கடமைக்கா கப் பிணமாய்க் காத்திருக்கிறேன்.

அன்புள்ள நாதன் என்னை மன்னித்து விடுங்கள். உங்களை நான் மிகவும் கஷ்டப்படுத்தி விட்டேன். இன்னொரு ஜென்மம் என்று ஒன்று இருந்தால் உங்களுக்குப் பிள்ளையாய்ப் பிறந்து வந்து நான் உங்களுக்குக் கண்டிப்பாய்ச் சேவை செய்வேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி!



ushadeepan@thaiveedu.com

# வாழ்வுரிமை!

## மா. சித்திவினாயகம்



12

'திவ்விய இயேசுவே! உத்தரிக்கும் தலமான இந்த விலங்குப் பண்ணையின் ஆன்மாக்கள் பேரில் இரக்கமாயிரும். தாவீது அரசரின் புத்திரனாகிய இயேசுவே! சிலுவைப் பாரத்தினாலே வருத்துகின்ற உமது திருக்காயங்களின் கொடிய வேதனைகளைப் பார்த்தும், இன்னும் அச்சிலுவையிலிருந்து உத்தரிக்கும் உம்மை இறக்குவதற்கு உதவாமல் தங்களை மட்டுமே காப்பாற்ற வேண்டுமென்கிற இந்தச் சுயநல ஆன்மாக்கள் பேரில் இரக்கமாயிரும். சுவாமி, தேவரீர் அன்று சிலுவையில் பலியாக இருந்த போது உமக்காக வருந்திய கள்வனுக்குக் கிருபை புரிந்தது போல இங்குள்ள அனைத்துக் கள்வர்கள் பேரிலும் இரக்கமாயிருந்து, அவர்களைக் காப்பதால் உம்மை அவர்கள் சிலுவையிலிருந்து இன்னமும் இறக்காதிருக்கிறார்களோ சுவாமி!
ஆமென்.'

ஆடு சொல்லி முடிப்பதற்குள்... பளாரென்று ஓர் அறை விழுந்தது. எங்கிருந்து இந்த தேவையற்றதெல்லாம் கற்றுக்கொண்டு வந்திருக்கின்றாய் என்றது பன்றி...

'கரடிப்போக்கு சந்திக்கப்பால்... இப்படித் தான் தினமும் மண்டியிட்டுச் சொல்லிக் கொண்டிருப்பார் ஒருவர். நான் பாடமாக்கிப் போட்டன்' என்றது ஆடு பெருமையாக...

'மதம், சாதி, இனம், பிரித்து அலைகிறவர்கள் மனிதர்கள் மட்டுமே அதற்குள் நீங்கள் போய்ச் சிக்கிவிடாதீர்கள்... உன்னை யார் இவங்களின்ரை எல்லாத்தையும் பாடமாக்கச் சொன்னது' என்றது பன்றி...

'நீ தானே சொன்னனி கண்டதையும் கற்கப் பண்டிதராவார் என்று... காணும் எல்லாவற்றையும் படிக்கச்சொல்லிச் சொன்ன நீயே இப்ப அடிக்கிறாய்...

படித்தலொன்றே தான் எங்கட புரட்சிக்கு வழியெண்டு கண்ட கண்ட புத்தகங்களையெல்லாம் கொண்டுவந்து எங்களைப் படிக்கச் சொல்லி வற்புறுத்திப் போட்டு இப்ப என்ன கதைக்கின்றாய்...' என்றது கோபத்தோடு கொம்பன் ஆடு...

'டேய் கண்டதையும் கற்கப் பண்டிதராவார் என்றால் என்ன அர்த்தமடா...?'

'வரம்பில்லாமல் முடிந்த அனைத்தையும் கற்றுத் தேர்பவர் பண்டிதர் என்ற பெயரைப் பெறுவார். அதற்கு எல்லையற்று எல்லாவற்றையும் கற்றலென்று பொருள்... கலை, கணக்கு, ஆங்கிலம், விஞ்ஞானம் என்றெல்லாம் தனித் தனியாக ஒரு துறையை மட்டும் கற்காமல் எல்லாவற்றையும் கற்பதைக் குறிப்பது அது' என்றது ஞானமறிந்த பன்றி..

'அதாலதான் நான் தெருவில கேட்டதையும் கற்றேன்' என்றது திரும்பவும் விளங்காமல் ஆடு...

'தெளிவாகவும், வெளிப்படையாகவும் பொருள் புரிகிற ஒரு பழமொழியை, சொற்களைச் சிதைத்தும் மாற்றியும் வேறு பொருள் காண்பது அறிவு வளர்ச்சி ஆகாது' என்றது கோபத்தோடு பன்றி...

ஆட்டிற்கு அது விளங்குவது போலவும் இருந்தது, விளங்காதது போலவும் இருந்தது.

'இன்றைக்கு அனைத்தையும் கேள்வியாக்கிக் கேவலமாகச் சிரித்துவிட்டுப் போவதே முற்போக்கு என்கிற படு பிற்போக்கான உலகில் வாழ்கின்றோம், உன்னைச் சொல்லிக் குற்றமில்லை... சிந்தனையில் வக்கிரப் போக்குடையோராய் இந்த மனிதர்கள் தம்மையும் ஏமாற்றி, எம்மையும் ஏமாற்றிச் சீரழிக்கின்றார்கள்...' என்றது பன்றி.

'ஆமைக்கு மயிரில்லை... முதலைக்கு நாக்கில்லை... நண்டுக்குத் தலையில்லை... பாம்புக்குக் காதில்லை... இந்த மனிதர்களுக்கு அவை எல்லாம் இருந்தும் நல்ல மனம் சுத்தத்திற்கு இல்லை' என்றது மூலையில் படுத்திருந்த முயல்.

'இவர்கள் மகா கொடுமையானவர்கள்... தங்கள் சுய இலாபத்திற்காக எந்த எல்லைக்கும் போவார்கள், எதையும் கொல்லவும் துணிவார்கள். அவர்கள் தங்கள் கடவுள்களையும் காட்டிக் கொடுப்பார்கள்... என் இனத்தையே தம் இறைச்சிக்கான



வர்களென முத்திரை குத்தி வைத்திருக்கிற மகா கேவலமான வர்கள் அவர்கள்.' கோபத்தில் முயல் ஆத்திரப்பட்டுக் கத்தியது.

விலங்குகள்; பாலியல் வன்முறை, மதத் தீவிரவாதம், சாதி வெறி, இன வெறுப்பு, மொழி வெறி இவற்றை மனிதரைப் போன்று சிந்திப்பவையல்ல! அவை சிந்திப்பதெல்லாம் அன்றாட இனிய வாழ்வை மட்டுமே. உணவு, உடலுறவு, அதற்கான தேடல், அவ்வளவுதான்! விலங்குகள் தன் இரைக்காக மட்டுமே வேட்டையாடும். மனிதரோ விளையாட்டுக்காகவும், வீரத்திற்காகவும், உணவிற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் விலங்கை வேட்டையாடுகிற கொடூரர். விலங்குகள் மனிதரைப் போலத் தன்னிலை பிறழ்வதில்லை.
மூலையில் கிடந்த விலங்குப் பண்ணைக் காவலாளியின் மேசையில் காசும், அவன் ரெலிபோனும், வாழைப்பழமும் இருந்தது. விட்டத்திலிருந்து பாய்ந்து வந்த குரங்கு வாழைப்பழத்தைக் கம்பியால் கைவிட்டு எடுத்து உண்டது. அதைப் பார்த்த பன்றி... 'தோழர்களே! நீங்களும் குரங்கு நண்பரைப் போல இந்த மேசையில் காசிருந்தால் காசை எடுப்பீர்களா ?, பழத்தை எடுப்பீர்களா ?' என்றது பன்றி.

'பழத்தைத் தான் எடுப்போம்' என்றன விலங்குகள்.

'ஆனால் மனிரோ காசைத்தான் எடுப்பர். காசினால் எல்லாவற்றையும் வாங்கிவிடலாம் என்கிற மனநோயாளிகள் அவர்.

விலங்குகளுக்குப் பணத்தின் மதிப்புத் தெரியாது. விலங்குக

ளுக்குப் பகிடி வெற்றி தெரியாது. நகைச்சுவை என்று எதுவுமே தெரியாது என்று எம்மை நையாண்டி பண்ணுகிற நாதாரிகள் இந்த மனிதர்கள். எமக்கு உண்மையில் அவர்களைப் போல திருட்டு, கபடம், பொறாமை, சூதாட்டம், பொய், புறம் பேசுதல், வன்புணர்வு என்று எதுவும் தெரியாது.

விலங்குகள் நாம் பல வருடங்களுக்கு உணவு சேமித்து வைப்பவர்களல்ல... பல தலைமுறைகளுக்குச் சொத்துச் சேர்ப்பவர்களல்ல... கடைசிவரை பிள்ளைகளோடு தான் சேர்ந்து வாழுவேன் என்று அடம்பிடித்துச் சண்டை பிடிப்பவர்களல்ல... எம்மிடமிருந்து தான் அவர்கள் அதிகம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது' என்றது பன்றி.

விலங்குப் பண்ணைக் காவலாளி கோவிந்தன் குடித்துவிட்டு வந்து மேசையின் முன் உட்கார முயன்றான்... அவனது வாழைப்பழத்தைக் குரங்கு எடுத்துவிட்டதை அவன் அவதானிக்கவில்லை. நிதானமாக அவனால் எழுந்து நிற்கக்கூட முடியவில்லை. 'குடிச்சிற்று வாகனமோட்டக் கூடாதென்று சட்டம் போடுகிற அரசாங்கம், குடிக்கிறவர் குடும்பம் நடத்த முடியாது என்று ஏன் சட்டம் போடுவதில்லை? குடும்பமென்பது நான்கு சில்லு வாகனத்தை விடவும் கேவலமா? குடும்பத்தை ஓட்டுகின்ற சாரதியல்லவா அவர். பாழும் சாராயத்தால் எத்தனை குடும்பங்கள் சீரழிந்து நடுத்தெருவில் நிற்கின்றன... குடியினை எதற்காக விற்கிறது. அவர்களது சந்தர்ப்பவாத அரசாங்கம்...' பன்றி மிருகங்களுக்குச் சொல்லிப் பெருமூச் செறிந்தது.

காவலாளி கோவிந்தன் நன்றாகக் குறட்டை விட்டான்.

விலங்குப் பண்ணை விலங்குகள் ஒவ்வொன்றும் தம்மை நாளும் பொழுதும் புரட்சிக்குத் தயார்ப்படுத்தின. அதற்கான தயாரிப்பு வேலைகளைச் செய்யவல்ல நல்ல சேவை மனப்பாங்குள்ள மேலும் விலங்குகளைத் தெரிவுசெய்ய வேண்டிய தேவையிலும், இக்கட்டிலும் அங்குள்ள மிருகங்கள் தள்ளப்பட்டிருந்தன. மிருகங்களை ஒன்றிணைத்துச் சேர்க்கிறவர்கள் வகை தொகையாகப் பல மிருகங்களைப் பண்ணையின் உள்ளேயும், வெளியேயுமாக ஏற்கனவே சேர்த்திருந்தன. இது தான் தருணமெனக் கிளிநொச்சி மரநாய்களும், நரிகளும், ஓநாய்களும் விலங்கோடு விலங்காக நாயென்னும் பெயரில் உட்கார்ந்திருந்தன.

நல்ல விலங்கெது, கெட்ட விலங்கெது என்றறியாத வில்லங்கமான ஓர் சூழல் விலங்குப் பண்ணையில் உருவாகியிருந்தது.

சிறு தீக்குச்சியால் தான் பெருங்காடெரிகிறதென்று ஒற்றுமையோடு சேர்ந்த விலங்குகள் 'தீவு விலங்குகள்', 'வன்னி விலங்குகள்', 'முஸ்லிம் விலங்குகள்', 'மலையக விலங்குகள்', 'கிழக்கு விலங்குகள்' எனப் பிரியுண்டு பசுத்தோல் போர்த்திய மரநாய்களைத் தம் மீட்பர்களென விலங்குகள் நம்பிச் சீரழிகிற தறுவாயில் பண்ணை விலங்குகள் தம்மைத் தொலைத்தன.

மரநாய்கள், நரிகள் எல்லாம் உருவ அமைப்பில் நாய் போல இருந்தன. எங்களை ஆதரியுங்கள் என்றும் கிளைத் தலைவராக்குங்களென்றும் அவைகள் பிரச்சாரம் செய்யத் தொடங்கியிருந்தன. 'என்னைத் தலைவராக்கினால் நான் தூய மரக்கறி உண்பவராக மாறி, தாவரப் பட்சணியாக ஆகி விடுகின்றேன்' என்று உறுதியாகச் சொன்னது கோழி பிடிக்கிற மரநாய்.

'வாழ்க்கையில் மிருகங்களைக் காப்பதே எம் தலையாய கடமையும், எம் பிறப்பின் பெரும் பயனுமென்று' ஓநாய்கள் உரத்துச் சொல்லின.

'அனைத்துச் செம்மறி ஆடுகளும், அவற்றின் குட்டிகளும் பனிக்காலத்திலும், அடைமழையிலும் குளிரில் தவிக்காமல் போர்த்திக்கொள்ள நான் கம்பளி உடைகள் தருவேன் என்னைத் தெரிவு செய்யுங்கள்' என்றது நரி. செம்மறிகள் அதன் அன்பான பேச்சில் மகிழ்ந்து கை தட்டின.

பண்ணையினுள் வெளியே தெரியாப் பல நிகழ்வுகள் நடந்த வண்ணமேயுள்ளது.

சுடலையாகிய அண்டங்காகம், புல்லுருவிகள் எம்முள் கலந்துள்ளார்கள். புரட்சியை நாசம் பண்ணப் போகின்றார்கள் என்று எச்சரித்தவண்ணமே இருந்தது.

யாரும் அதன் பேச்சைக் கேட்பாரில்லை. எல்லோரும் மௌனமாயிருந்தார்கள். இவர்களின் நிராகரிப்பும், அதனால் நேர்கிற அவமானமும் காகத்திற்குப் பெருங் கொடுமையாக இருந்தது.

காகம் பண்ணைக்கு வரப்போகிற ஆபத்தை உணர்ந்துரைக்கிற தீர்க்கதரிசி என்பதை நரிகள் நன்றாகவே உணர்ந்தவை. எப்படியாவது காகத்தை வெளியே அகற்ற வேண்டுமெனும் வன்மம் கொண்டிருந்தன நரிகள்.

மனிதர்களில் சிங்கம், புலி, கழுதை, எருமை, குரங்கு என்று வெளித் தோற்றங்களில் தெரியாவிட்டாலும் உள்ளுக்குள் ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு கொடூரராகவே இருக்கின்றார். பூமியைத் தினமும் அழித்தவண்ணம் அவர் வெளித் தோற்றத்தில் மனிதராக நடித்துக்கொண்டே உள்ளே கொடூர காரியம் பார்ப்பவர். விலங்குகள் அப்படிப் பட்டவையல்ல.

விலங்குப் பண்ணையின் விலங்குகளோ, வெளித்தோற்றத்தில் இருப்பதைப் போலவே உள்மனத் தோற்றத்திலும் ஒன்றாகவே இருந்தன. குரங்கு குரங்காகவும், சிங்கம் சிங்கமாகவும், புலி புலியாயும் இருந்தன.

ஆபிரிக்காவிலிருந்து எம் போன்ற நான்கு கால் விலங்கான குரங்கின் மூதாதையொன்று முன்னங்கால்களை உயர்த்திக் கொண்டு பின்னங்கால் இரண்டாலும் நடந்தபோதே அது மனிதர் எனப்பட்டார் என்றும், அங்கிருந்தே இந்த மனித மிருகம் உலகப் பரப்பெங்கும் பரவியதாகவும் பன்றியான தேவன் எமக்கு ஏற்கனவே கற்பித்திருந்தார்.

விலங்காக இருந்த அவர்கள் மொழியறிந்த நாளிலிருந்து தான் முழு உலகும் தனக்கென்னும் எண்ணங்கொண்டனர் என்றும், நாமும் மொழியறிந்து அவர்களைப் போலாக வேண்டுமென்பதற்காக, அவர் அறிந்த அத்தனை புத்தகங்களையும், அதன் நெளிவு சுழிவுகளையும் நாம் வாசிக்க வேண்டுமெனவும் எம்மை வாசிக்கப் பழக்கியிருந்தார் பன்றித் தேவன்.

ஆனாலும், என்று எமக்கு இந்த வாசிப்புப் பழக்கம் தொற்றிக் கொண்டதோ அன்றிலிருந்து எம்முள் நான் பெரிது, நீ பெரிது என்கின்ற வஞ்சனையும், சூதும் வந்து மெல்ல மெல்ல ஒட்டிக் கொண்டது.

நாய் வேடமிட்ட நரிகள் நாய்களைப் புணரத் துடித்தன. தனித்துப் பெண் நாய்கள் மட்டுமல்ல ஆண் நாய்களும் பாதுகாப்பின்றி உலவ முடியாதிருந்தது. நாய்களுக்கே பாதுகாப்பில்லையெனில் கோழி, முயல், ஆடு போன்ற அப்பாவிகளுக்கு...

ஆளுக்காள் பகைமூட்டிச் சண்டை போட்டு, ஆளுக்கொரு அரசியற் கட்சியாக மனிதர் இருந்ததைப் போலவே விலங்குகளும் சிந்திக்கத் தொடங்கியிருந்தன.

அனைத்து விலங்குகளும், ஒன்றாகச் சேர்ந்து தம் சமூக அநீதிக்கெதிராகக் குரல் கொடுக்கும் என்று நம்பிய பன்றித்தேவன், தம்முள் தோன்றியுள்ள பெரும் பிணக்கால் இப்போது இடிந்து போய் உட்கார்ந்திருந்தான்.

வாக்குக் கேட்டு மக்களை ஏமாற்றி அரசியல் செய்கிற, அவர்களுக்குத் தலைமை தாங்கி அதிகாரம் செய்கிற வித்தைதான் இங்கு ஆட்சி அரசியல். அனைவரையும் ஏமாற்றுகிற இந்த உத்தியில்தான் இங்கு அனைத்து ஆட்சிகளும் தம்மைத் தக்க வைக்க முயல்கின்றன.

குறிப்பாக மனிதர்கள், யாருக்காவது தம் வாக்கைப் போடுவது மட்டுமே அவர்களது வாழ்நாள் குறிக்கோள், சுதந்திரம் என்று நம்பச் செய்து அதைப் பயன்படுத்தி, அவர்களின் வாக்கால் ஓர் அராஜகத் தலைவர் உருவாகி, தம் அரசியற் கட்சிகளையும் தம் பிள்ளை, பெண்சாதி எனத் தம் ஆதரவாளர்களையுமே பெரிதென்று முதன்மையாக்கி வாழ்கின்றார்கள்.

தலைவர் வெற்றிக்காகத் தங்கள் இன்னுயிரையும் கொடுப்பவரே நல்ல மனிதரென்ற கதைவேறு எழுதி வைத்திருந்தார்கள். தலைமையின் வெற்றிக்காகத் தொண்டரைக் கொழுத்திப் பழியை எதிர்க்கட்சியில் போடுகிற தொண்டரடிப் பொடியாழ்வார்களே இங்கு ஆளுமை மானிடர், வீரர்கள் எனப் படுகின்றார்கள்.

இந்த அநீதிக்கு ஜனநாயகம் என்று வேறு பெயர் கொடுத்து திரை மறைவில் பெரும் அநியாயங்களைச் செய்து வருகின்றார்கள் இவர்கள்.

இவ்வளவு இன்னல்களுக்கு மத்தியிலும்..., வாசிப்பு எம்மைச் சிந்திக்க வைக்கின்றது. நல்லதெது கெட்டதெது என அறிய வைக்கிறது. வாருங்கள் வாசிப்போம் என்று பன்றி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புத்தகத்தையெடுத்து வாசித்துக் காட்டி மிருகங்களுக்கு அறிவூட்டும் பணி நித்தமும் நடந்தவண்ணமேயுள்ளது.

இன்று அது கனடாவிலிருந்து விலங்குப் பண்ணை முதலாளியான ஸ்ரெவ்வனி கொண்டு வந்திருந்த அழகான புத்தகத்தைக் கையில் வைத்திருந்தது. வெள்ளைக்காரியின் நாயான அமாயாதான் அவளின் அந்தப் புத்தகத்தை வாயிற் கௌவி எடுத்து வந்திருந்தது. அது அழகான சித்திரக் கதையாகப் பரிணமித்த சித்திரங்களாலான காவியம்.

அது சமூக மானுடவியல் அறிஞரும், ரொறன்ரோப் பல்கலைக்கழகப் பேராசிரியரும், கொங்குநாட்டுப் பகுதி நாட்டுப்புறக் கலைகளைத் தம் வாழ்நாள் பூராகவும் ஆய்வு செய்கிற ஆய்வாளருமான முனைவர் பிரண்டா பெக் அவர்களுடைய தொகுப்பான 'சங்கர் பொன்னர்' கதையென்கிற, தமிழின் வாய்மொழி வரலாறான 'அண்ணன்மார் கதை'.

அது தமிழ்நாட்டின் மிக முக்கிய புராணக் கதை. ஒரு குடும்பத்தின் மூன்று தலைமுறை வரலாற்றை உருவகமாக வைத்து 500 ஆண்டுகாலத் தமிழ் நாட்டின் வட்டார வரலாற்றினை மீட்டுருவாக்கம் செய்கிற கதை என்று நீண்ட பீடிகை போட்டது வாசிக்கத் தெரிந்த 'குரு' பன்றி.

'இது காவியப் பாட்டாக, கவிதையாக, நாடகமாக, நாட்டுக் கூத்தாக, ஏழை மக்களின் குலதெய்வப் புராணமாக வணங்கப் படுகிற நூல். வரலாற்று ஆய்வாளர்கள் பாபிலோனிய மற்றும் அதன் வழியே சிந்துசமவெளி நாகரிகத்தோடு கொங்கு நாட்டுத் தொடர்புகளை இந்தக் கதை சுட்டி நிற்கிறதென்கின்றார்கள்.

பொன்னிவள நாடு குறித்த நெடுங்காலப் பாடல்களைச் சித்திரக்கதையாக மாற்றிச் சிறப்புச் செய்திருக்கின்றார் பிரெண்டா பெக். 50 ஆண்டுகளுக்கும் மேலாகக் கொங்குப் பகுதியை ஆய்வு மையமாகச் சுற்றிப் பயணிக்கின்ற அம்மையார் பிரெண்டா பெக், 'பிருந்தா' என்று தன்னை அழைப்பதையே பெரிதும் விரும்பும் இந்தியராகத் காட்டிக்கொள்கிற பெருமாட்டி' என்றது பன்றித் தேவன்.

விலங்குகள் கதை கேட்க விருப்பத்தோடு சூழ்ந்து கொண்டன.

பெண் தெய்வங்களை முக்கியமாக எம்போன்ற காட்டுப்பன்றித் தலையுடன் கூடிய பழைய தெய்வ வடிவங்களை ஆய்வு செய்திருக்கிற அரிய புத்தகம். இதன் முக்கிய தெய்வாம்சமாகக் காட்டுப் பன்றிகளான நாமும் தெய்வமாக்கப்பட்டிருக்கின்றோமென அந்தப் புத்தகத்திலிருந்த அழகிய பன்றிப் படத்தை எல்லோருக்கும் தூக்கிக் காட்டியது பன்றி. மிருகங்கள் யாவும் மகிழ்ந்து கைதட்டின. அதுமட்டுமல்ல, இந்தப் புத்தகத்தைத் தொகுத்த அம்மையார் பிரெண்டா 1974-ல் உலகத் தமிழாராட்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தவேளை இங்கு வந்து கலந்து சிறப்பித்த கனடாவின் பெருமாட்டி என்றவுடன்... உற்சாகத்தோடு எல்லோரும் கதை கேட்கத் தொடங்கினர்.

'இந்தக் கதையைப் பலரும் பல்வேறு விதங்களில் எழுதியுள்ளார்கள். அம்மையார் பிரெண்டா, சகதிக் கனல், பரணன், கலைஞர் கருணாநிதி என்று பலரையும் குறிப்பிடலாம். இவர்களில் பலரும் மூலக்கதையைச் சிதைக்கச் செய்து விட்டார்கள் என்கிற குற்றச்சாட்டும் உண்டு.

பொன்னர் சங்கர் கதை, அக்காலப் பெரும் மன்னர்களின் பாரம்பரிய வரலாற்றுக் காவியமல்ல. இது ஒரு நாடோடி இலக்கியம்.

குன்றுடையான் கதையென்றும், அண்ணன்மார் சுவாமி கதையென்றும், சின்னண்ணன், பெரியண்ணன் கதையென்றெல்லாம் அழைக்கப்படும் இக் கர்ண பரம்பரைக் கதை, கொங்கு வேளாளர் குடும்பத்துக்குள் நடந்த பங்காளிச் சண்டையாகும்.

இது காலப்போக்கில் பெரும் பகையாக முற்றி, வேளாளக் கவுண்டர்களுக்கும் வேட்டுவக் கவுண்டர்களுக்கும் இடையில் பெரும் இனக் கலவரமாக மாறியது. அவர்களுக்குள் நடந்த போரில், பொன்னர் - சங்கர் போராடி உயிர் துறந்தனர். இது தான் மூலக்கதை...

பொன்னர் சங்கர் கதை தமிழகத்தின் மேற்குப் பகுதிகளான கோவை, ஈரோடு, நாமக்கல், கரூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் ஆகிய பகுதிகளில் குறிப்பாக வெள்ளாளக் கவுண்டர்கள் பெரும்பான்மையாக வாழும் இப்பகுதிகளில் நாட்டார் கதையாகவும், திருவிழாக் காலங்களில் கிராமங்களில் போடும் தெருக் கூத்துகளாகவும், நாடகங்களாகவும் மக்களோடு ஒன்றித்து இருக்கிறது. தமிழகத்தில் மட்டுமல்ல, இலங்கை மலையகத்தின் பதுளை போன்ற இடமெல்லாம் இக் குன்றுடையான் கதை வீரத்தின் அடையாளமாய்க் குல தெய்வக் கோட்பாடாய் போற்றப்படுகின்றது.

அண்ணன்மார் சாமிக் கதையைச், சென்னைப் பல்கலைக்கழகம் ஆய்வு மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் சேர்த்துள்ளது என்கிற செய்தி சிறப்பென்றது பன்றி!

கற்பனையும், மூடநம்பிக்கையும், ஜாதி வேறுபாடும் நிறைந்த ஒரு நூலை எப்படி அவர்கள் பாடத் திட்டத்தில் சேர்க்கலாம் என்றது, கேட்டுக் கொண்டிருந்த சிந்திக்கவல்ல எருது.

உண்மையில் இந்த அண்ணன்மார் கதைப் பாடல்கள் 1948-க்கு முன்னதாக வெள்ளையர் ஆட்சியில் சேலம் மாவட்ட ஆட்சியரால் தடை செய்யப்பட்ட ஒன்று. ஏனெனில் இந்தக் கதையை ஒட்டியும், நாட்டார்க் கலைகளையொட்டியும் இரு சமூகங்களுக்குள் இடையே நடந்த பெரும் மோதலில் 40-ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும், நூற்றுக்கணக்கானோர் காயமுற்றும் வீழ்ந்தார்கள். அதனால், வெள்ளையர்கள் இந்த நூலை முற்றாகத் தடை செய்தனர்.

ஆனால் இன்று நம்மவர்கள் வாக்கு வங்கி அரசியலுக்காக இதைப் பல்கலைக்கழகத்தில் பாடமாகவே வைத்துவிட்டதாக இந்த எருதைப் போல குறைபட்டோர் மனிதருள்ளும் உண்டு.

தீண்டாமை, வன்கொடுமைச் சட்டங்களால் கட்டுப்படுத்தப்பட வேண்டிய இத்தகு காவியங்கள் இன்றளவும் அரசியலாளர்கள் தம் நலனிற்காகக் காப்பாற்றி வைத்துள்ளனர்.

வேட்டுவர்களின் ஆண் குழந்தைகளையெல்லாம் வீரப் பொன்னர் தலையை வெட்டிக் கொன்றதாகக் கூறுகிற வீரப் பாடல் இது.

***‘கிழக்கு வளநாடு கீர்த்தி உள்ள மேனாடு***
***பெரிய மலையாளம் பெய்ந்துறையும் நன்னாடு***
***வேடுதளம் உள்ளதெல்லாம் - பொன்னர்***
***வெட்டிக் கருவறுத்து***
***ஆணென்று பிறந்ததெல்லாம் - பொன்னர்***
***அறுத்துச் சிரம் கொய்தார்’***

இப்படி வெள்ளாளப் பொன்னர் வேடுவர் சிரத்தையறுத்த கதையைப் பெருமையாய்ப் பேசுவது அக்கதை!

‘மானிடக் கீர்த்தியைக் கொல்கிற போர்களை, அன்பை, அறத்தை, நேசத்தைக் குழிதோண்டிப் புதைக்கின்ற போர்களைப் போற்றலாமோ’ என்றது சமதர்ம ஆடு.

‘இந்தப் புவியில் ஆட்களைச் சேர்க்கின்றோமென இப்படித் தான் அனைவரையும் சேர்த்துப் போரில் அழியக்கொடுத்த இரத்தங் குழைந்த மண்ணாகப் போயிற்று இந்த உலகின் மண்’ என ஆதங்கப்பட்டது அந்த ஆடு.

‘அடைக்கலம் தருகின்றோமெனப் பட்டியிலடைத்து, எம் பாலைத் திருடி, எம் பிள்ளைகளைக் கொன்று தின்று, அணுவணுவாக எம்மை வதைத்தெடுத்து, கபாலம் உடைத்து, கழுத்தைத் திருகி, அங்கமங்கமாய் வெட்டி, எலும்பை நொருக்கி, இரத்தத்தை வறுத்து, இறைச்சியைப் பொரித்துத் தின்று மகிழ்கின்ற கொடூரத்தின் பூமியில் குன்றுடையான் கதை போற்றப்படுவதில் என்ன வியப்பு’ என்று குமுறியது அக்கொம்பன் ஆடு.

‘வீரச் சிங்கங்களை உருவாக்கிப் பெயர் பொறிக்க எந்த எல்லைக்கும் போவார்கள் இந்த மனிதர்கள். ஹீரோக்களை உருவாக்கி வழிபடுபவர்கள் அவர்கள். பின் அந்தக் ஹீரோக்களைத் தம் சுயநலத்திற்காக அழிக்கவும் தயங்கமாட்டார்கள்.

அப்படித்தான் இந்த அண்ணன்மார்களையும் பலியாக்கி வீர சிங்கங்களாக்கினார்களோ ?

இந்தக் கதையை மீள எழுதி மிகச் சர்ச்சைக்குள்ளான திரைப்படமாக இதை வெளிக்கொணரும் சூத்திரதாரியாக இருந்தவர் கலைஞர் கருணாநிதி.

மனிதர் வாக்குகளைப் பொறுக்குவதற்காக வேட்டுவர்களைத் தாழ்த்தியும், பெரும்பான்மை வெள்ளாளர்களை உயர்த்தியும் இக்கதையை மெருகேற்றிவிட்டார் கலைஞர் என்கின்றார்கள் பலரும். உண்மையில்... அப்பகுதியில் வேட்டுவக் கவுண்டர்கள் கூடுதலாக இருந்திருந்தால்... அவர்களின் வாக்கிற்காகக் கதையை மாற்றி, வேட்டுவ மாவீரன் தலையூர்க் காளியென மாற்றி எழுதியிருப்பார். வாக்குத்தான் வாழ்க்கையை, வரலாற்றை, இலக்கியத்தை, அரசியலை, உறவை இன்றைக்குத் தீர்மானிக்கிறது’ என்றது கதைசொல்லியான பன்றித் தேவன்.

‘பிழை பிடிப்பதும், ஒருவரை ஒருவர் இழுத்து வீழ்த்துவதும் தானே தமிழர் இயல்பு. பிரெண்டாவின் மொழிபெயர்ப்பிலும் ஏதும் பிழை சொல்லியிருப்பார்களே இந்த அறிவாளிகள்’ என்றது கேட்டுகொண்டிருந்த எருது எரிச்சலோடு...

‘உண்மைதான். அவரிலும் விமர்சனம் வைத்தார்கள். ‘கனத்த முடிக்காராளன்’ என்பதைத் தலைமயிர் மிகவும் கனமாக உடையவன் என்று மொழிபெயர்த்து விட்டதாகச் சொன்னார்கள்’ என்றது தேவன்.

எருது விழுந்து கிடந்து சிரித்தது.

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com

# வசந்தவல்லி

- அ. கந்தசாமி



ஒருவரை அறிமுகப்படுத்தும்போது அவர் பெயரை முழுமையாகச் சொல்வதுதான் முறை.

இங்கு ஒரு சின்ன விளக்கம்.

முதற் பெயர், கடைப் பெயர், இடைப் பெயர் என்ற பல்வகைப் பெயர்களையும் பிறந்த இடம், வாழ்ந்த இடம், வாழப் போகுமிடம் எனக் கால்பதித்து, வந்த இடங்களையும் குந்தும் இடத்திலெல்லாம் பதிய வேண்டிய பாத்தியத்தைப் பெற்ற ஆதியும் அந்தமும் அறியா அநாதிகள் அல்லவா நாம்.

ஏதிலிகளைப் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

தன்னை அறிமுகப் படுத்தவென்று வெள்ளையும் சுள்ளையுமா வெளிக்கிட்டவன் வேலியைத் தாண்டாமல் முத்தத்திலேயே நிண்டு மிலாந்திக் கொண்டிருக்கிறன்.

அவன் முதற்பெயர் நம்பியாரூரன்.

அப்பா பெயர் என்பது அவன் அம்மா சொல்லிக் கேட்டதுதான். அதை எந்தக் கல்லுச்சல்லி அகப்பட்டாலும் கிடைத்ததைக் 'காபன் டேட்டிங்' செய்து உறுதிப்படுத்த வேணும். அதன் பெறுபேறுகள் உங்களுக்கு உறுத்துவதாக உணரும்போது தவிர்த்துவிடும் எழுத்திலில்லாச் சுத்துமாத்துச் சுதந்திரமும் எல்லாருக்கும் இருக்கு.

நாக்கிற்கு நரம்பில்லை என்பர். மருத்துவ ஆய்வில் சிக்காத முத்திப்போன எலும்பும் அதற்குள் உண்டு. இது பரம்பரைகளின் தொடர்ச்சியில் நெடுத்து நீண்டதாயும் இருக்கும். இந்த நாக்கின் சொல்வழி வந்த சேதிகளைத் தேவைப்படாதபோது துடைத்தெறியிறதும் ஈசியாய் இருக்கும்.

இப்ப எங்களுக்கு முன்னால இரத்தமும் எலும்பும் அதிலை ஒட்டிய மாமிசமுமாய் நிக்கிற நம்பியாரூரனை, அவன் கடந்து வந்த தடங்களின்ர விலாசங்களை விசாரிச்சுப் பார்ப்பம்.

அவன் சாமுத்திரிகா லெட்சணங்கள் கொண்ட இளைஞன். அதாவது ஆணாகப் பிறந்தவனுக்கு எங்கெங்கு மச்சங்கள் மறைந்திருக்கும் எண்ட விவரங்களைக் காமசூத்திரம் எழுதேக்கையே வாஸ்த்ஸாயனர் மறைக்காமல் சொல்லிப்போட்டார்.

எந்தெந்த இடங்கள் எப்பிடி இருக்கோணுமோ, அந்தந்த இடங்கள் அப்பிடி அமைஞ்சு அழகாய் சமைஞ்சவன் எங்கட நம்பி.

எங்கடை தோம்பிலை ஒரு மாறாத வழக்கமிருக்கு. ஆற்ர முழுப்பேர் எண்டாலும் அதை முழுசாய் சொல்லிக் கூப்பிட எங்கடை நாக்கு வளையாது. வசதியான பகுதிகளிலை கவ்வாத்துப் பண்ணிப் பிடித்த துண்டைக் கொத்திக்குதறிச் சப்பிக் கொறிக்கலாம்.

நம்ம நாயகனை 'நம்பி' என்பாருமுண்டு. 'ஆரூரன்' என்றழைப்பாரும் உண்டு. 'ந' நாக்கில வராதவை 'அம்பி' எண்டு கூப்பிடுறதும் உண்டு.

யாரையும் 'உம்மடை வயசு என்ன தம்பி?' எண்டு நெத்திப் பொட்டிலை அடிச்சமாதிரி கேக்கிறது நாகரிகமில்லை. அதாலை நாங்களும் அதை விட்டிட்டு துள்ளித் துடிக்கிற வயசு எண்டு வச்சுக்கொள்ளுவம்.

இவன்ரை அழகிலை பொறாமைப்பட்ட சில இளவட்டங்களைத் தவிர, எல்லாருக்கும் இவனைப் பிடிக்கும். வீட்டிலை கடைசிப் பிள்ளை. தாய்க்கு இப்பகூட இவனை மடியிலை இருத்திச் சோறு தீத்த ஆசை.

இவனுக்குப் பத்து வருடங்கள் முந்திப் பிறந்தவள் நேசமலர். அவளைப் படிப்பித்துச் சொந்தக் காலிலை நிக்கவைக்க எடுக்காத முயற்சிகள் இல்ல. எண்டாலும் கடலுக்குள்ள பாச்சின நல்ல தண்ணி மாதிரி பயன் ஒண்டும் இல்லை. இப்ப குசினிக்குள்ள குட்டி இராஜாங்கம் நடத்திக்கொண்டிருக்கிறாள்.

அவளும் நல்ல ருசியாய் சமைப்பாள். கூட்டிவைத்த குழம்பின் வாசனையை வைத்தே உப்புப் புளியின் சமநிலைகளைச் சொல்லுற அளவுக்குச் சமையல் கலையைக் கற்றுவைச்சிருக்கிறாள்.

நம்பியை விட நிறம் கொஞ்சம் தூக்கல். அவளைக் கடந்து போறவை பக்கப் பார்வை பாக்கிற அளவுக்கு வடிவும் இருக்கு.

சம்பந்தம் பேசின இடங்களிலை கனபேருக்கு அவளைப் பிடிச்சிருந்தது. ஆனால் சம்பந்த வீட்டார் கேட்ட சீதனத்தை இவையால எட்ட முடியேல்ல. 'நிறத்தை வைச்சு என்ன கழுவிக் குடிக்கிறதே' எண்டு சம்பந்தம் பேசிப்போன இடங்களிலை குசுகுசுத்ததுதான் மிச்சம்.

தகப்பனால என்னதான் செய்யேலும்? புகையிலையை நம்பின பிழைப்பு. சுருட்டுச் சுத்திற பணி.

வேலையிடத்துக்குள்ள போய், விரிச்ச பாயிலை பந்திச் சாப்பாட்டுக்குக் காத்திருக்கிறமாதிரி சப்பாணிகொட்டிக் குந்தியிருந்து எழும்புறதுதான் அவற்றை தொழில். அது கடந்த வேறை உலகத்தை அறிமுகப்படுத்திக்கொள்ள அவர் விரும்பேல்ல எண்டுதான் சொல்லவேணும்.

அவருடைய நடையுடை பாவனையையே இயந்திர இயக்கமாய்த்தான் தெரியும்.

வெய்யில் வற்றிய மப்புப் பொழுது. தாயும் மகனுமாய் முற்றத்தில் தனியாக இருந்தார்கள். தாயை நோண்ட நினைத்த நம்பி, 'அம்மா! அப்பரை நீ காதலிச்சுக் கட்டினனியோ, இல்லை பேசிச் செய்தவையோ?' என்று கேட்க, துண்டிலை கவ்வின மீன் போல தாய் தலையை விசித்திரமாச் சுழற்றி நம்பியைப் பார்த்தாள்.

'ஏன்ரா அதையெல்லாம் கேக்கிறாய்? எங்கடை காலத்திலை எல்லாமே பேசிச் செய்யிறதுதான். அருப்புத் துருப்பா ஆயிரத்திலை ஒண்டு காதலிச்சிடும். வீட்டிலை தெரிஞ்சா உரிச்செடுத்துப் போடுங்கள். எனக்குத் தெரிஞ்ச ஒண்டு ரெண்டு பெட்டையள் ஓடிப்போய் கட்டினதும் உண்டு. தாய் தகப்பன் அதுகளை விலத்தி வச்சிட்டுதுகள். நல்லது கெட்டதுக்கும் எடுக்கிறதில்லை' என்றாள்.

'அம்மா நீ நல்ல அம்சமாத்தானே இப்பவும் இருக்கிறாய். நல்ல உத்தியோகத்தனாப் பேசிச் செய்திருக்கலாம் எல்லோ.'

தாய் ஏதோ புதுப் பகிடி விட்டதைப்போல கடகடத்துச் சிரித்தாள்.

'தம்பி எங்கடை சனங்களை நடுக்கடலிலை விட்டாலும் அதுகளுக்கு நக்குத் தண்ணிதான். உதுகளின்ரை ஆணிவேரையே கறையான் திண்டிட்டுது. கோமணத்துக்குத் துணியில்லாமல் திரியுங்கள். ஆனா தலையிலை பட்டுக் குஞ்சம் கட்டியிருக்கிற நினைப்பு. பரதேசியள்... சம்பந்தம் பேசி வரேக்கை சாதி பாப்பினம். சீதனத்திலை எப்பன் கூட்டிக் குடுத்துட்டா... தாலி அறுத்த சாதி காணாமப் போயிரும்'.

தாய் தொடர்ந்து முச்சுவிட மறந்தவளா பேசிக்கொண்டிருந்தாள். அம்மா இப்படிப் பேசி நம்பி கேட்டதில்லை. தொடக்கூடாப் புள்ளியை உரசிவிட்டு விட்டானோ? என்று நினைத்த நம்பி... சட்டென உள்ளே சென்று, மூக்குப்பேணி நிரம்ப குளிர் நீரை எடுத்துவந்து குடுத்து, 'களைச்சுப் போனாய்... முதல்லை இதைக் குடிச்சிட்டு, கொஞ்சம் மூச்சை வாங்கு' என்றான்.

உண்மையிலேயே அவள் நிரம்பக் களைத்துத்தான் போயிருந்தாள். தொடர்ந்து கதைத்ததால் வந்ததல்ல இந்தக் களைப்பு. காலாகாலமா மனக்குகையில் மண்டிக்கிடந்த, மறைக்கப்பட்ட சங்கதிகளை அவள் கிள்ளி எடுத்ததால் வந்த களைப்பு, ஆயாசம்.

நம்பி பேசவந்த வார்த்தைகளுக்கு விலங்கிட்டுக் கொண்டான்.

களைப்பு சற்றுத் தணிந்திருக்கவேண்டும். தாய் தொடர்ந்தாள்.

'என்ன கேட்டனி தம்பி? ஆரும் உத்தியோகம் பாக்கிறவையாப் பாத்துக் கட்டியிருக்கலாம் எண்டுதானே'

துடிப்புகளை அடக்கிக்கொண்டு கைகளைக் கட்டியவாறு தலையை ஒருச்சரித்துத் தாய் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

'பொம்பிளை பாக்க வந்தவனெல்லாம் நாங்கள் குடுக்கிற சீதனத்தை வச்சுக் கலியாணத்துக்குப் பிறகு குடும்பம் நடத்த முதலீடு கேட்டான்'

அம்மாவின் கண்கள் அகல விரிந்தன. பற்களை நெருமினாள். கைகளை அகல விரித்து,

'உந்த நாயளிட்டை வேறை என்ன இருக்கு... கவட்டுக்கை கிடக்கிற அந்த ஒண்டை தவிர'.

தாயின் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. முன்னால் நிற்பவன் பெற்ற மகன் என்பது நினைவில் சுணைத்தபோது அதிர்ந்து நிலைத்தாள். நம்பி நிலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

நம்பி நிமிர்ந்தபோது அம்மா அங்கில்லை. ஆனால் குசினிக்குள்ளிருந்து குரல் வந்தது.

'உன்ரை அப்பர் ஒராள்தான் என்னை ஒரு பொம்பிளையாப் பாத்தவர். ஒரு செப்புக்காசும் கேக்காமல் தாலி கட்டினவர்'

கலங்கித் தளுதளுத்த குரல்தான்... நம்பிக்குக் கேட்கவேணும் எண்டுறத்துக்காக உரத்தும் அழுத்தமாயும் ஒலித்தது.

தாய் தைரியசாலி. அப்பாவின் கைமடங்கிய உழைப்பிற்குள் எங்கள் குடும்பத்தை ஏரோட்டுவது மந்திரக்கோல் மகிமை.

கிணற்றடிப் பாத்தியைச் சுற்றிப் புத்திசாலித்தனமா அம்மா நட்டு வைத்த வாழைகள் வெய்யில் நிலத்தைத் தொடவிடாமல் பச்சையிலைகளால் தாங்கிப்பிடிக்கும். கத்தரியும் முளைக் கீரையும் வெண்டியும் மிளகாய்ச் செடிகளும் இந்த அன்றாடங் காச்சிகளின் வயிறுகளை ஈரலிப்பாகப் பராமரிக்கின்றன. நாலு சீவன்களின் பசிக்கு இந்தச் சோளப் பொரிகள் போதாதுதான்.



முற்றத்தில் நின்று, முகில் பார்க்க இருந்து, நிலாச்சோறு தின்னக் கொஞ்சம் வெளி இருந்தது. வீட்டுக்குள் புழுங்கினால் காற்றாட முற்றத்தில்த்தான் ஒதுங்குவோம். அம்மா அதற்கும் வெடி வைத்தாள். அங்கு பாவலுக்கு ஒரு பந்தலும் புடோலுக்கு அடக்கமான அடைப்புமாக முற்றத்தின் முக்கால் பங்கு பறிபோனது.

இதோடு முடிஞ்சுதா எண்டால் அதுதான் இல்லை. கோழி வளர்ப்புப் பற்றி அம்மா பக்கத்து அன்ரிமாரோடு கிசுகிசுத் ததை ஒட்டுக்கேட்ட நம்பி,

'அம்மா இந்தக் கத்தரி, கீரை, வெண்டியளைப் புடுங்கி எறி யப்போறியளோ?' எண்டு வெள்ளேந்தியாகக் கேட்க, தலையை ஒருச்சரித்துச் சில கணநேரச் சிந்தனையின் பின் அரைச் சிரிப்போடு வீட்டினுள் சென்றாள்.

தாய்க்கு மூக்குமின்னி வெகு எடுப்பு.

அது ஒன்றுதான் நகை என்ற பெயரில் அவவிடம் மிஞ்சியிருப் பது. பெண்களுக்கு விதவிதமான உடைகளிலும் அலங்கார நகைகளிலும் ஆசைகள் அதிகம். அம்மாவின் ஆசைகள் அவிந்து போனவைகளா? இருக்காது. ஆயிரம் ஆசைகள் அவள் ஆழ்மனத்திலும் அத்திவாரம் போட்டிருக்கும்.

அம்மா ஓர் அழகிய ராட்சஸி. எதையும் வெளிக்காட்டமாட் டாள்.

எங்கள் குடும்பத்தின் வருமான மீட்சியில் விரல் நுனி நீட்சியா வது ஏற்பட ஈவுசோய்வு உண்டா என்ற வினாவிற்குப் பதில் ஆயிரம் 'இல்லை'கள்தான்.

அடிக்கடி தாய் கலைந்து அலையும் நம்பியின் சுருட்டைத் தலைமயிரைத் தன் வலக்கையால் அளைந்தபடி நெடியமூச் சோடு முணுமுணுப்பாள்.

'உன்னை நம்பித்தான் தம்பி, எங்கடை குடும்பமே இருக்கு.'

அம்மாவைப் பொறுத்தவரை... கடல் எல்லையும் அடிவான விளிம்பும் கைகுலுக்கும் தூரத்தில் கண்சிமிட்டும் துருவ நட் சத்திரம் நம்பிதான். நம்பி ஒருவனேதான்.

நம்பி தப்பி ஓடமுடியாது. கண்ணுக்கு மைமல் புகார் போல் தெரியும் ஒரே வழி படித்து ஒரு பட்டத்தைப் பறிப்பதுதான். உண்மையில் இவன் விடாக்கண்டனாக விட்டுக் கொடுப்புக ளின்றி விழுந்து நிமிர்ந்து படிக்கத்தான் செய்கிறான்.

வகுப்பில் வசந்தி என்ற அல்லிக்கொடி படிப்பில் கடும் போட்டி கொடுப்பாள். முதல் இரண்டுக்குள் இருவர் பெயரும் தள்ளாடிக் கொண்டிருக்கும்.

வசந்தியை முந்தவிடாமல் இரவு பத்துமணிக்குக் கண்ண யர்ந்து அலாரம் வைத்து விடியப்புறம் நாலுமணிக்கு எழும்பு வதை வாலாயப்படுத்திக்கொண்டு மண்ணெண்ணெய் விளக் கோடு மல்லாடுவது இவனுக்கு வழக்கமாயிற்று.

வசந்தியை முந்துவதொன்றும் பெரிய கம்ப சூத்திரமில்லை. அவளது சராசரிப் புள்ளிகள் எப்போதுமே தொண்ணூறுக்கு மேல். நம்பியின் புள்ளிகள் எண்பத்தைந்திற்கும் தொண்ணூ றுக்கும் இடையே ஊசல் ஆடிக்கொண்டிருக்கும். அவள் பாடப் புள்ளிகள் எல்லாம் சமச்சீராக இருக்கும். நம்பிக்கோ புவியியலும் வரலாறும் சத்திராதிகள்.

எங்காவது போய் ரியூசன் எடுக்கலாமென்றால் இந்தப் பாடங் களைக் கற்பிப்போரைக் காண்பதும் காண்டாமிருகக் கொம்பு களைத் தேடுவதும் ஒன்றுதான். வகுப்புத் தேர்வுகளுக்குக் குதிரை கூட ஓடமுடியாது.

நம்பிக்கு வசந்தியை முந்தவேணும் எண்ட வெறித்தனமெல் லாம் கிடையாது. இந்த முசுட்டுத்தனத்துக்குக் காரணம் சிநே கக் குரங்குகள் செய்யிற உசுப்பேத்தல்கள்தான்.

'எடேய்... அவளை முந்த விட்டிடாதேடா... வெக்கம்.'

மச்சான் ஆண்குலத்துக்கே அவமானமடா... எங்கட எல் லாற்ரை மானமும் உன்ர கையிலதான்ரா இருக்கு.'

வெக்கத்தை வேட்டிக்குள்ள சுத்திக்கொண்டு திரியுற நட்புக ளுக்கு, நம்பியை உசுப்பிவிட்டு வேடிக்கை பாக்கிறது ஒரு பொழுதுபோக்கு. அவங்கட சொல் வலையிக்கை அகப்பட்டு அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டிருந்தான் நம்பி.

'அடேய் நானென்ன உங்கடை வேள்விக்கு நேந்துவிட்ட கிடா யாடா...? நீங்களும் படிச்சு அவளை முந்தப் பாருங்கோவன்.' எண்டு நம்பி சொல்ல யோசிப்பான். ஆனால்... அது விழலி டைப் பாய்ந்த நீர் என்டுறது அவனுக்குத் தெரியும்.

இவங்களின்ரை ஆக்கினையல... ஒரு சோலி சுரட்டில்லாமல் திரிஞ்ச நம்பியை வசந்தியின் பக்கம் சரிய வைச்சது எண்டு சொன்னா அது தப்பில்லை.

கலவன் கல்லூரிக்குள்ள நம்பி காலடி வைச்ச களிப்பான கணத்தில... 'தம்பி பெட்டையளோடை தேவையில்லாமல் கதைகாரியங்கள் வச்சுக்கொள்ளாதை, கவனம்.' என்று எச்ச ரித்தாள் தாய்.

இது அம்மா நம்பிக்குப் போட்டுவிட்ட வேலி. எல்லாருக்கும் விளங்கிற மாதிரிச் சொன்னா தாய் மகனுக்குக் கட்டிவிட்ட தாலி.

நம்பி கொடுப்புக்குள் குமைந்த சிரிப்போடு, 'அம்மா எங் கடை அக்கா நீங்கள் சொல்லிற பெட்டயளுக்குள்ளை வர மாட்டாதானே...' என்றான்.

தாய் ஏதும் பறையாமல் குசினிக்குள் போய்விட்டாள். அடுக் களை அவளுக்கு அபயம் தாற நத்தைக்கூடு.

நம்பியின்ர நக்கல், நளினங்கள் அவவுக்கு விளங்காததொன் றில்லை. நல்லாவே விளங்கும். விளங்காத மாதிரி விலகிப் போறது அவவின்ர ஒரு தந்திரம்.

இதுவரை காலமும் தாய் போடுற கோலங்களுக்குள்ளதான் சிக்குண்டு நிக்கிறான் நம்பி. ஒருவேளை நம்பி ஆரையும் விரும்பினாலும் அம்மாவின்ரை அனுமதிப் பத்திரத்தை வாங் கிப் பொக்கட்ரிலை வைச்சுக்கொண்டுதான் விண்ணப்பிக்க வேணுமென்ற நிலை.

இந்தக்காலப் பெட்டையள் எல்லாம் நம்பியின்ர அக்கா மாதி ரித்தான் எண்டுறது தாயின்ர நினைப்பு. பெரிசா வாசிப்பும் இல்லாத மனிசி.

எப்படியாவது தங்கட குடும்பப் பொருளாதாரத்தை வண்

ணாங் குளத்துக்குள்ளால தூக்கி முத்தவெளி புல்லுக் குளத்துக்குள்ள போட்டிட்டா தப்பிருவம் எண்ட நம்பிக்கைதான் அவவுக்கு.

நம்பி படிக்கவெனப் பாடப் புத்தகங்களைத் திறந்தா கொஞ்ச நாளா தாயின்ர அச்சுறுத்தல்கள் மிரட்டிப் பயமுறுத்தத் தொடங்கியிருந்தன. காரணமேயில்லாமல் வசந்தி அடிக்கடி எட்டிப்பார்க்கத் தொடங்கியிருந்தாள். வசந்தியின் மெலிந்த தோற்றம் முதற்பார்வையில் எடுபடாது. பார்க்கப் பார்க்க அதற்குள் ஏதோ இருப்பது புலப்படும் ரகுமானின் மெல்லிசை போல.

இதுவரை வசந்தியோடு அவன் கதைத்ததில்லை. அதற்கான வாய்ப்பும் கிடைத்ததில்லை. வாய்ப்புகளை ஏற்படுத்திறது ஒண்டும் சிரமமில்லை. ஆனால், அம்மா குத்துக்கல்லாய் குறுக்க நிக்கிறாவே.

அன்று நம்பி வகுப்புக்குள் நுழைந்தபோது நட்பொன்று விழுந்தோடி வந்து கைகுலுக்கிற்று.

'எடேய்... உன்ரை போட்டிக்காரி வசந்தி இனி ஸ்கூலுக்கு வர மாட்டாளாம். தகப்பன்காரனுக்கு ஏதோ கடுமையான சுகயீன மாம். இவள்தான் வச்சுப் பாக்கவேணுமாம். வேற சகோதரங்க ளும் இல்லையாம். தாய்க்காரியும் ஏற்கனவே வருத்தக்காரி யாம். அவவின்ர நிலைமையும் அப்பிடி இப்பாடி எண்டு கேள்வி. நீதான் இனி வகுப்பிலை நம்பர் ஒன். கங்கிராட்ஸ்...'

குலுக்கிறத்துக்கு நீண்ட கையைத் தட்டிவிட்டான் நம்பி. குலுக்க வந்தவனின்ர மூஞ்சைப் பிடிச்சு சுவரோடு தேச்சு விட வேணும் போல் இருந்தது நம்பிக்கு.

யாராக இருந்தாலும், ஜன்ம விரோதியாகவே இருக்கட்டுமே... அவையளின்ர துன்பத்தில சொறிந்து சுகம் காண்பவரை எந்த ஜந்துவோடு சேர்ப்பது?

நம்பி யோசித்தான்... ஒரு முடிவுக்கு வந்தான். இப்ப வசந்தியின் வீட்டு விலாசம் வேணும்.

கல்லூரி லிகிதரைப் பார்த்த இடங்களிலெல்லாம் தேவைப்படும் என்று இளித்து வைத்தது இப்போ பயன்படும். பயன்பட்டது.

வசந்தியின் வீடு, தேடியலையவேண்டிய தொலைவில் இல்லை. கல்லூரியிலிருந்து கால்நடை தூரம்தான்.

'போ... போய் அவளைப் பார். முன்னை பின்னை நீ அவளோடை கதைச்சதில்லைதான். அதாலை என்ன? போ. துயரம்பகிர்' மனம் உந்தித் தள்ளியது.

மனிதர்களைக் கண்டு கதைத்துப் பேசும்போது மனத்துயரின் வீரியம் படிப்படியாகக் குறைந்து போகும்.

அவள் வீட்டை அண்மிக்கும்வரை தலைகாட்டாத் தயக்கம், இப்போது கறையான் போல் அவன் உடம்பெல்லாம் ஊரத் தொடங்கியது.

வசந்தியோடு முன் பின் பேசியதில்லை. முதல் தடவையாக, அதுவும் அவள் துயருற்றிருக்கும் ஒருபொழுதில் பேசப் போகின்றான். மனம் அல்லாடத் தொடங்கியது. எவ்வித முன் தயாரிப்புகளுமின்றி போய்க் கொண்டு இருக்கிறோமே..? அவளைப் பார்த்ததும் என்ன சொல்வது?

மனக்குரல் கத்தியது...

'மூதேவி... சொந்தமா ஒண்டையும் யோசிக்க மாட்டியா? எல்லாத்தையும் என்னட்டையே கேள். எடேய்... முகத்தைச் சோகமாக வச்சுக்கொள். அப்பா அம்மாட உடல் நலங்களை விசாரி... ஆழ்ந்த அனுதாபங்கள், என்ர ஆறுதல்கள் எண்டு நீ சொல்லக்கூடியவன். உதவாக்கரை... அது செத்த வீட்டிலை சொல்லுறது'.

வேண்டாம், சொதப்பிப் போடுவன். திரும்பிப் போவதே சிறப்பு எண்டு நினைச்ச நம்பி, நூற்றியெண்பது பாகையால் சுற்றித் திரும்ப, முன்னால இரண்டு வகுப்புப் பெட்டையள். ஓடியொளிஞ்ச தைரியம் கொஞ்சம் தலைநீட்டியது.

'வசந்தி வீட்டைதான் போறியளோ' என்று கேட்டபடி அந்தக் கும்பலோடு கோவிந்தாவானான் நம்பி.

கையடக்கமான சிறியவீடு.

வீட்டில் வசந்தியின் தாய் மட்டும்தான் இருந்திருக்கவேணும். அவள் சாய்மனைக் கதிரையில் ஒருச்சரிந்தவாறு படுத்திருந்தாள்.

வந்த பெட்டையள் வீட்டிற்குப் புதிசில்லை போலை. வசந்தியின் தாயோடு ஒன்றிக்கொண்டு தாங்கள் கதைப்பது தங்களுக்கே கேட்காத குரலில் கதைக்கத் தொடங்கினார்கள்.

அந்தச் சிறிய சபையில் இவன் மட்டுமே ஆண்பால். சுற்றும் முற்றும் பார்த்தான். வீட்டில் வேறுயாரும் இருப்பதைப் போல் தெரியவில்லை. வேறுவழியில்லை. தாயை அணுகினான்.

செருமிக் குரலைச் சீர்செய்து, 'அம்மா நானும் வசந்தியோடைதான் படிக்கிறன். அவ வீட்டிலை இருக்கிறாவோ? உங்கட உடல்நிலை எப்படி இருக்கு?' என்றான்.

அந்த மனிசி ஏதோ சொல்ல வெளிக்கிட, வந்திருந்த அவசரக் குடுக்கையொண்டு, 'வசந்தி ஆஸ்பத்திரியிலை தகப்பனோடை நிக்கிறாவாம், வந்து சாப்பிட்டிட்டுப் போற நேரம்தான் வந்திடுவா' என்றது.

'அவசரமில்லை... நாங்கள் இருந்து பாத்திட்டுப் போகலாம்' எண்டு நம்பி பொதுவில் சொன்னான்.

மர நிழல்களையே காந்தும் வெப்பத்தில் காய்ந்து வியர்வையில் தோய்ந்தபடி வசந்தி வாசலைக் கடந்து வீட்டினுள்ளே நுழைந்தாள். கண்களின் கூச்சத்தில் வீடு இருட்டாய்த் தெரிந்தது.

'குடையைக் கொண்டு போயிருக்கலாம்தானே மனே..' தாய் மாருக்கு எப்பவும் தன் குஞ்சு பொன்குஞ்சாக இருக்க ஆசை.

வசந்தியின் பூஞ்சைப் பார்வையில் ஆபிரிக்கவாசிகளாகத் தோன்றிய பெட்டையள் கூர்ந்த நோக்கில் வகுப்புத் தோழியராயினர். இடையே பொலிஸ் குறோப்பில் ஒரு தலை தட்டுப்ப

டவே சிறிது தடுமாறினாள்.

‘ஓ... இவர் நம்பிராரூரன். என்னை கிளாஸ் ரேங்க்கிலை அப்பப்ப என்னை முந்தி வாறவர். இவரை முந்தவிடாமல் கட்டை போடத்தானே நான் இரவெல்லாம் லாம்பெண்ணை எரிக்கிறனான். சும்மா சொல்லக்கூடாது.. நல்ல கெட்டிக்காரன்’

மனசுக்குள் மானசீகமாக நம்பிக்குப் பொன்னாடை போர்த்தினாள். அவள் அவனைப் பார்த்த பார்வையில் பன்னிற நுணுக்குக்காட்டியின் வண்ணப் பின்னல்கள்.

‘நீங்கள் இங்க வந்திருக்கிறியள்... தாங்ஸ், நான் இனி கொலிஜ்சுக்கு வரமாட்டன். ஏதாவது வேலை தேடவேணும், பாப்பம். நாங்கள் ஒண்டு நினைக்க காலம் வேறெதையோ நடத்துது.’

நம்பி குறுக்கிட்டான்.

‘வசந்தி... நீங்களே இப்பிடிக் கதைக்கிறது? விதி என்றது வீணர்கள் விடுற வீநீர். நீங்கள் அடையவேண்டிய உயரங்கள் எங்கையோ இருக்கு. அது கண்ணுக்குத் தெரியாத மலை முகடுகளிலை ஒழிஞ்சிருக்கலாம். உங்களை மாதிரி ஒரு கெட்டிக்காரி ஒதுங்கி ஒய்ஞ்சுபோக ஏலாது. பொறுப்புகளும் துயரங்களும் ஒரு பக்கத்திலை இருக்கட்டும். படிப்பை விட்டுடாதையுங்கோ. நான் உங்களோட முன்ன பின்ன கதைச்சதில்லை. இப்ப இப்பிடிக் கதைக்கிறன் எண்டு பிழையா நினையாதையுங்கோ... நீங்க படிக்கோனும் எண்டுறதுதான் உங்கட அப்பா, அம்மாவின்ர விருப்பமாகக்கூட இருக்கும். நான் சொல்லுறது சரியோ தெரியேல்லை... நீங்க படிக்க, குடும்பத்தைப் பாக்க, நான் என்னால முடிஞ்ச எல்லாத்தையும் செய்வன்’.

நம்பி, காற்றை உள்ளிழுத்து மூச்சுப்பை ஒக்சிசனை உறுஞ்சத் தேவைக்குமதிகமாக நேரமொதுக்கினான்.

‘வசந்தி... நான் வெளிக்கிடுறன்... என்னென்டாலும் நான் இருக்கிறன்... மறந்திடாதையுங்கோ.’ நம்பி வாசலை நோக்கி நடந்தான். அவ்விடத்தில் இருந்த பலசோடிக் கண்களும் இமைக்க மறந்து இவனையே மொய்த்தன.

வசந்தியின் விழிமடல்கள் இதுவரை காலமும் இல்லாத புதியதோர் உணர்வின் உந்துதலால் கரை உடைத்தன.

காலம் புன்னகைத்தது.

காற்றுக்கு நல்ல செவிப்புலன் உண்டு. வலக் காதால் உள்வாங்கி இடக் காதால் வெளியேவிடும் நிகழ்தகவு ஐம்பதுக்கு ஐம்பது. ஆனால் காற்றின் ஒலம் பலகாத தூரம் அர்ச்சுனன் அம்பாகி ஊடுருவும்.

அன்றும் ஊடுருவியது.

நம்பி அவன் வீட்டு வாசலைத் தாண்டியதும் அம்மாதான் முன்னால் வந்தாள். வீட்டுக்குள் வேதனை செங்கம்பளம் விரிச்சிருப்பது விளங்கியது. ஆனால் அதன் விபரங்கள் தெளிவில்லை.

‘என்ன தம்பி உன்னோடை படிக்கிற பெட்டையைச் சிலவழிச்சு நீயே படிப்பிப்பன் எண்டு சொல்லிப்போட்டு வாறியாம்’ இதென்னடா இது... ஈரம் காய முதல்ல... காற்றைக் காரணியாக்கக் கூடாது. கிள்ளிப் போடுற புண்ணியவான்கள் அருகிலைதான் அருபமா இருப்பாங்கள்.

‘ஓமம்மா எங்களுக்காவது அப்பாவின்ரை சம்பளம் வருகுது. அந்தப் பெட்டை நல்லாப் படிக்கக் கூடிய பெட்டை. என்னை விடக் கெட்டிக்காரி. தகப்பன் ஆஸ்பத்திரியிலை இப்ப அப்ப எண்டு இழுத்துக் கொண்டு இருக்கிறாராம். தாய்க்காரி சவண்டுபோய்க் கிடக்கிது. பாவப்பட்ட சனங்கள். அதுகளுக்கு ஏதாவது உதவினா, என்னம்மா பிழை.’

‘ஓ... உந்தமாதிரி ஊரிப்பட்ட சனங்கள் இந்த ஊரிலை சீவிக்குதுகள். முதலிலை நீ படிச்சு ஒரு வேலையைத் தேடு. பெருமாளே பிச்சை எடுக்கேக்கை அனுமாருக்கு அபிசேகம் கேக்குதாம்.’

‘அம்மா... அவசரப்படாதேங்கோ, எனக்குப் படிப்புத்தானம்மா மூலதனம். அதை விடமாட்டன். முதலிலை அப்பாவை வேலைக்குப் போகாம நிப்பாட்டி வீட்டிலை ஒய்வாய் இருக்க விடவேணும். நீயும் எங்களுக்காக உழைச்சு உருக்குலைஞ்சு கொண்டு போறாய். எனக்குக் கணக்கும் பிசிக்ஸ்சும் நல்லாய் வரும்... ரியூசன் வகுப்புகள் துவங்கப்போறன். நாலைஞ்சு கடையளிலை கடைக் கணக்குகள் எழுதித்தரக் கேக்கினம். எல்லாம் வெல்லலாம் பயப்பிடாதை.’

‘நம்பி... உன்னை நம்பித்தான் இந்த வீடு இருக்கு... உதுக்கெல்லாம் நேரத்துக்கு எங்கை போவாய்? உன்னை என்ன இரும்பிலையா செய்து பெத்தனான். ஒரு மண்ணாங்கட்டியும் வேணாம். எனக்குப் பிள்ளையா இரு. ஒழுங்காப் படி’

தெய்வங்கள் சிலைகளாகவே இருக்கச் சபிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆயிரம் அமரர்களை ஈடுசெய்ய ஓர் அன்னையைப் படைகிறார்கள்.

கலங்கிய கண்களோடு தாயை இழுத்து அணைத்துக் கொண்டான்.

மடையுடைத்த கண்ணீர் அவளின் வலத்தோள் சேலையைத் துளைத்தது.

தளதளத்து உடைந்த குரலைச் செருமிச் சீர்செய்து,

‘அம்மா... விடிய விடிய தூங்கிறான் எண்டு குறைபடுவாய் எல்லோ... அந்த நித்திரை நேரத்திலை கொஞ்சத்தைக் கடனெடுத்துக் காசாக்கப் போறேன். நீ வளத்த பொடியன் எல்லோ. துரும்பையும் தூணாக்கிற வித்தையை நான் உன்னட்ட படிச்சனான்.

தாயின் ஈரக் குலைகளில் எழுந்த கனல் மூச்சை எழுத்தில் இனம்பிரிக்க நம்பியிடம் சொற்களில்லை.



kandasamy.a@thaiveedu.com

# வெட்டுக்கிளியும் சில்வண்டும்

– யசுநாரி கவபட்டா
தமிழில் : என்.கே. மகாலிங்கம்

பல்கலைக்கழகத்தின் ஓடு போட்ட சுவரோரமாக நடந்து போகும்போது, ஒரு பக்கம் திரும்பி மேல்பள்ளியை அணுகினேன். பள்ளிக்கூட விளையாட்டுத் திடலின் வெள்ளை நிறப் பலகை வேலிக்குப் பின்னால் கறுப்புச் செர்ரி மரங்களுக்குக் கீழே மங்கலான புதர்களிலிருந்து ஒரு பூச்சியின் குரலை அப்போது கேட்க முடிந்தது. இன்னும் மெது மெதுவாக நடந்து போய் அதன் குரலைக் கேட்டபோது, அதை விட்டுப் பிரிய மனமில்லாமல் விளையாட்டு மைதானத்தினையும் விட்டுப் போக மனமில்லாமல் வலது பக்கமாகத் திரும்பினேன். நான் இடது பக்கம் திரும்பியபோது தோடம்பழ மரங்கள் நடப்பட்ட ஓர் அணைக்கட்டு இருந்தது. மூலையில், ஆச்சரியத்தினால் கத்திவிட்டேன். என் முன் கண்டதைக் கண்டு என் கண்கள் பளபளத்தன. சிறு சிறு காலடிகள் வைத்து வேகமாகச் சென்றேன்.

அணைக்கட்டின் அடிப்பகுதியில் பல்வேறு அழகழகான வண்ண விளக்குக் கொத்துகள் மிதந்து கொண்டிருந்தன. தூரவுள்ள நாட்டுப்புறக் கிராமங்களில் நடைபெறும் விழாக்களில் காண்பது போல. நான் இன்னும் மேலே போகாமல், குழந்தைகள் குழுவொன்று அணைக்கட்டுச் செடிகளில் பூச்சிகளைக் கலைத்துக் கொண்டிருந்தது எனக்குத் தெரிந்தது. அங்கே ஒரு இருபது விளக்குகள்வரை இருந்திருக்கும். செந்நிறம், இளஞ்சிவப்பு, கருநீலம், பச்சை, ஊதா, மஞ்சள் நிறங்களில் மட்டுமல்லாமல் ஒரு விளக்கு ஐந்து நிறங்களில் ஒரே நேரத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அதேவேளை கடையிலிருந்து வாங்கி வந்த சிவப்பு நிற சிறிய விளக்குகளும் சில இருந்தன. அதிகமான விளக்குகள் அழகான சதுரமான வடிவில் இருந்தன. அவற்றைக் குழந்தைகள் நேசத்துடனும் கவனத்துடனும் அவர்களே செய்திருந்தார்கள். குதித்தாடும் விளக்குகளும், அந்தத் தனிமையான சரிவான இடத்தில் கூடிய குழந்தைகளும் நிச்சயமாக மாயமந்திரக் கதைகளில் வரும் ஒரு காட்சிதான்!

ஒருநாள் இரவு அக்கம் பக்கத்துக் குழந்தையொன்று இந்தச் சரிவில் ஒரு பூச்சி பாடுகின்றது என்று கேள்விப்பட்டது. சிவப்பு விளக்கொன்றை வாங்கிக் கொண்டு அடுத்த நாள் இரவு அந்தப் பூச்சியைப் பார்க்க அது வந்தது. அடுத்த நாள் இரவு இன்னொரு குழந்தை வந்தது. அந்தக் குழந்தையிடம் ஒரு விளக்கை வாங்கப் பணமிருக்கவில்லை. அதனால், ஒரு சிறிய அட்டைப் பெட்டியொன்றை முன்னுக்கும் பின்னுக்கும் வெட்டியெடுத்து விட்டு அதை ஒரு தாளால் மூடி பெட்டியின் அடியில் ஒரு மெழுகுதிரியை வைத்தது. பின் பெட்டியின் மேல்புறத்தில் ஒரு கயிற்றைக் கட்டியது. முதலில் எல்லாமாக ஐந்து குழந்தைகள் சேர்ந்தார்கள். அதன் பின் ஏழாகியது. அட்டைப்பெட்டியில் வெட்டிய யன்னலின் இழுத்த தாளில் எப்படி வண்ணம் தீட்டுவது என்பதையும் அதன் மேல் படங்கள் கீறுவதையும் பயின்றார்கள். பிறகு இந்தப் புத்திசாலிக் குழந்தைகள் ஓவியர்கள், பெட்டிகளை வட்டமாகவும், மூன்று மூலைகள் கொண்டதாகவும், சாய்சதுர இலை உருவங்களாகவும் வெட்டினார்கள். ஒவ்வொன்றிலும் வண்ணந் தீட்டவும் பயின்றார்கள். ஒவ்வொரு சிறிய யன்னலுக்கும் வித்தியாசமாக வண்ணம் தீட்டினார்கள். வட்டமாகவும் வைர வடிவத்திலும் சிவப்பிலும் பச்சையிலும் தனித்த முழுமையான அலங்கார வடிவத்தையும் தீட்டினார்கள். சிவத்த விளக்கை வைத்திருந்த குழந்தை அது கலைச் சுவையற்ற விளக்கு என்றும் அது கடையில் வாங்கக் கூடியது என்றும் அதை ஒதுக்கி விட்டது. விளக்கொன்றைச் சொந்தமாகச் செய்த குழந்தையொன்று அது சாதாரண உருவரைவு என்று அதை வீசி விட்டது. ஒரு குழந்தை முதல் நாளிரவு தன் கையில் வைத்திருந்த ஒளியின் வடிவம் திருப்தியற்றதென்று அடுத்த நாள் காலை நினைத்தது. ஒவ்வொரு நாளும் அட்டைத்தாள், தாள், தூரிகை, கத்திரிக்கோல், பேனாக்கத்தி, பசை ஆகியவற்றுடன் குழந்தைகள் தங்கள் இதயத்துக்கும் மனத்துக்கும் பிடித்த விளக்குகளைச் செய்தன. என்னுடைய விளக்கைப் பார்! இது வழக்கத்திற்கு மாறானது. மிகவும் அழகானது! என்றார்கள். ஒவ்வொரு இரவும் அவர்கள் பூச்சி வேட்டைக்குச் சென்றார்கள். அந்த இருபது குழந்தைகளையும் அழகான விளக்குகளையுமே நான் இப்பொழுது என் கண் முன்னே காண்கிறேன்.

ஆச்சரியத்துடன் கண்களை அகலத் திறந்து விரிய அவர்களின் அருகில் நான் அலைந்து திரிந்தேன். சதுரமான விளக்குகளில் பழைய பாணி வடிவங்களும் மலர் உருவங்களும் இருந்தது மட்டுமல்லாமல், அவற்றைச் செய்த குழந்தைகளின் பெயர்களும் சதுரமான அசையெழுத்துகளும் அவற்றில் வெட்டப்பட்டிருந்தன. சிவப்பு நிற விளக்கின் மேல் வண்ணம் பூசப்பட்ட விளக்குகளிலிருந்து வித்தியாசமானவையாக இருந்தன. அவற்றை விட மற்றவற்றில் (தடித்த வெட்டப்பட்ட மட்டைகளில் செய்யப்பட்டவை) வடிவமைப்புகள் தாளால் செய்யப்பட்ட யன்னல்களின் மேல் வரையப்பட்டிருந்தன. மெழுகுவர்த்தி வெளிச்சமும், உருவத்தின் வடிவமும் மற்றும் நிறத்திலிருந்து வெளிப்படுபவை போல இருந்தன. விளக்குகள் புதர்களின் நிழல்களை இருண்ட வெளிச்சம் போல



வெளிக்காட்டின. குழந்தைகள் பூச்சிகளின் குரலைக் கேட்ட போதெல்லாம் அணைக்கட்டுச் சரிவில் ஆவலுடன் குனிந்து கொண்டனர்.

'எவருக்காவது வெட்டுக்கிளி வேணுமா?' என்று ஒரு சிறுவன் கேட்டான். மற்றச் சிறுவர்களிடமிருந்து முப்பது அடிக்கப்பால் ஒரு புதருக்குள் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த அந்தச் சிறுவன் சடுதியாக எழுந்து நின்று சத்தம் போட்டு அதைக் கேட்டான்.

'ஓம்! எனக்கு அதைத் தா!' என்று சொல்லிக்கொண்டு ஆறோ ஏழு குழந்தைகள் ஓடி வந்தார்கள். வெட்டுக்கிளியைக் கண்ட அந்தச் சிறுவனைச் சுற்றிக்கொண்டு புதருக்குள் எட்டிப் பார்த்தார்கள். அவர்களின் நீட்டிய கைகளைத் தட்டிவிட்டுத் தன் கைகளை விரித்துக் கொண்டு அந்தப் பூச்சியிருந்த புதரைக் காவல்காப்பது போல அந்தச் சிறுவன் நின்றான். விளக்கைத் தன் வலக்கையால் ஆட்டிக் கொண்டு மற்றச் சிறுவர்களைத் திரும்பவும் அழைத்தான்.

'எவருக்காவது வெட்டுக்கிளி வேணுமா? வெட்டுக்கிளி!'

'எனக்கு வேணும், எனக்கு வேணும்!' என்று சொல்லிக் கொண்டு இன்னும் நாலோ ஐந்தோ குழந்தைகள் ஓடி வந்தன. ஒரு வெட்டுக்கிளியைத் தவிர அதிக மதிப்புமிக்க வேறொரு பூச்சியைப் பிடிக்கவில்லை போலத் தோன்றியது. அந்தச் சிறுவன் மூன்றாம் முறை அழைத்தான்.

'எவருக்காவது வெட்டுக்கிளி வேணுமா?'

மேலும் இரண்டோ மூன்றோ குழந்தைகள் வந்தார்கள்.

'ஓம், எனக்கு வேணும்.'

அதுவொரு சிறுமி. அவள் பூச்சியைக் கண்டுபிடித்த அந்தச் சிறுவன் பின்னால் வந்து நின்றாள். தன் உடலைச் சாடையாகத் திருப்பி, அந்தச் சிறுவன் நளினமாக முன்னால் வளைந்து நின்றான். தன் இடது கைக்கு விளக்கை மாற்றிக் கொண்டு வலது கையைப் புதருக்குள் விட்டான்.

'இதுவொரு வெட்டுக்கிளி.'

'ஓம், இது எனக்கு வேணும்.'

அந்தச் சிறுவன் வேகமாக எழுந்து நின்றான். 'இங்கே,' என்பது போல பூச்சியை வைத்திருந்த சிறுமியின் பக்கம் தன் கைமுட்டியை நீட்டினான். விளக்கின் கயிற்றை நழுவ விட்டு சிறுவனின் கைமுட்டியை இரண்டு கைகளாலும் அவள் பொத்திப் பிடித்தாள். அந்தச் சிறுவன் சத்தமில்லாமல் தன் கைமுட்டியைத் திறந்தான். அந்தப் பூச்சி சிறுமியின் பெருவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையில் கைமாற்றிக் கொள்ளப்பட்டது.

'ஓ! இது வெட்டுக்கிளியல்ல. இதுவொரு சில்வண்டு,' என்றாள். அந்தச் சிறிய பழுப்பு நிறப் பூச்சியைப் பார்த்தபோது

அவளின் கண்கள் பிரகாசித்தன.

‘இதுவொரு சில்வண்டு! இதுவொரு சில்வண்டு!’ குழந்தைகள் பொறாமை கலந்த குரலில் அதை எதிரொலித்தன.

‘இதுவொரு சில்வண்டு, இதுவொரு சில்வண்டு.’

சில்வண்டைக் கொடுத்த அந்தச் சிறுவனைத் தன் பிரகாசமான அறிவார்ந்த கண்களால் மேலோட்டமாகப் பார்த்த அவள் தன் பக்கத்தில் தொங்கிக் கொண்டிருந்த சிறிய பூச்சியின் கூட்டைத் திறந்து அதற்குள்ளிருந்த சில்வண்டைத் திறந்து விட்டாள்.

‘இதுவொரு சில்வண்டு.’

‘ஓ, இதுவொரு சில்வண்டு,’ அதைப்பிடித்த சிறுவன் முணுமுணுத்தான். பூச்சியின் கூண்டைத் தன் கண்களுக்கு அருகில் தூக்கி வைத்துக்கொண்டு அதற்குள்ளே பார்த்தான். அழகான பல வண்ண விளக்கின் வெளிச்சத்தில், கண் மட்டத்தில் அதைத் தூக்கி வைத்துக்கொண்டு, சிறுமியின் முகத்தை மேலோட்டமாகப் பார்த்தான்.

அந்தச் சிறுவன் மேல் எனக்குச் சற்றுப் பொறாமை ஏற்பட நான் சங்கடமாக உணர்ந்தேன். இதுவரை அவனுடைய செயல்களை நான் புரிந்து கொள்ளாமல் இருந்து விட்டடேனே. எவ்வளவு முட்டாள்தனம் என்று எண்ணி, ஆச்சரியத்துடன் ஒரு கணம் நின்று விட்டேன். இங்கே பார்! அந்தச் சிறுமியின் நெஞ்சில் ஏதோ தெரிந்தது. சில்வண்டை அவளுக்குக் கொடுத்த அந்தச் சிறுவனோ அதைப் பெற்றுக்கொண்ட அவளோ, அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த குழந்தைகளோ அதைக் கவனிக்கவில்லை.

சிறுமியின் நெஞ்சின்மீது விழுந்த மங்கலான பச்சை வண்ண விளக்கொளியில் ‘ஃபுஜியோ’ என்ற பெயர் தெளிவாகத் தெரியவில்லையா ? சிறுமியின் பூச்சிக் கூண்டுக்கு நேராகப் பிடித்திருந்த சிறுவனின் விளக்கில் அவனுடைய பெயர் பச்சை வண்ணத் தாளில் போட்டிருந்த துளையில் அவள் அணிந்திருந்த வெண்ணிறப் பருத்திக் கிமினோவின் மீது வெட்டப்பட்டிருந்தது. சிறுமியின் மணிக்கட்டில் தளர்வாகத் தொங்கிய விளக்கு அந்த வடிவத்தைத் தெளிவாக வெளிக்காட்டவில்லை. ஆனால் எவராலும் அதைக் கண்டுபிடிக்க முடியும். நடுங்கும் செந்நிறத்தில், சிறுவனின் இடுப்பில் ‘கியோகோ’ என்று வெட்டப்பட்டிருந்ததையும் கண்டுபிடிக்க முடியும். இந்தத் தற்செயலான சிவப்பும் பச்சையும் சேர்ந்த கலப்புப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. அதுவொரு தற்செயலா, விளையாட்டா என்பதுபற்றி ஃபுஜிமோவுக்கோ கியோகோவுக்கோ தெரியாது.

ஃபுஜியோ அந்தச் சில்வண்டை அவளுக்குக் கொடுத்தான் என்பதும் அதை அவள் ஏற்றுக்கொண்டாள் என்பதும் கனவில் கூட ஃபுஜியோவுக்குத் தெரியாது. அவனுடைய பெயர் அவள் நெஞ்சில் பச்சை நிறத்தில் எழுதப்பட்டிருந்ததையும் கியோக்கோவின் பெயர் அவனுடைய இடுப்பில் சிவப்பு நிறத்தில் பொறிக்கப்பட்டிருந்ததையும் அவர்களுக்கு நினைவில் வந்தாலும் அதுவும் தெரியாது. அல்லது ஃபுஜியோவின் பெயர் பச்சை நிறத்தில் அவளுடைய நெஞ்சில் பொறிக்கப்பட்டிருந்தாலும், அல்லது அவளுடைய பெயர் ஃபுஜியோவின் இடுப்பில் சிவப்பு நிறத்தில் எழுதப்பட்டிருந்தாலும் அதுவும் அவனுக்குத் தெரியாது.

ஃபுஜியோ! நீ ஒரு இளைஞனாகி ஒரு பெண்ணின் மகிழ்ச்சியில் மகிழ்ந்து திளைத்திருக்கும்போது அதுவொரு வெட்டுக்கிளி என்று சொன்னால், அல்லது அவளுக்குக் கொடுத்தது ஒரு சில்வண்டு என்று சொன்னால் நீ மகிழ்ச்சியடைவாய். பெண்ணின் ஏமாற்றத்தைக் கண்டு நீ அன்புடன் சிரிப்பாய். அதுவொரு சில்வண்டு அல்ல வெட்டுக்கிளி என்று சொன்னால் அதற்கும் சிரிப்பாய்.

உனக்குக் கூரறிவு இருந்து மற்றக் குழந்தைகளிலிருந்து புதரை நீயே பார்த்தால் உலகத்தில் அதிக சில்வண்டுகள் இல்லை என்பது உனக்குத் தெரிய வரும். வெட்டுக்கிளி போல ஒரு பெண்ணைப் பார்ப்பாய். ஆனால் அவளை நீ சில்வண்டு என்று எண்ணுவாய்.

இறுதியில் உன்னுடைய மட்டமான காயப்பட்ட இதயத்திற்கு உண்மையான சில்வண்டு கூட வெட்டுக்கிளி போலதான் தோன்றும். அந்த நாள் வந்தால் உலகம் முழுவதும் வெட்டுக்கிளி உள்ளது போன்று உனக்குத் தோன்றினால், இன்றைய இரவின் வெளிச்சத்தின் விளையாட்டை உன்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லையே என்றும், உன்னுடைய பெயர் ஒரு பெண்ணின் மார்பில் பச்சை நிறத்தில் உன்னுடைய அழகான விளக்கால் எழுதப்பட்டிருந்ததையும் நீ மறந்து விட்டிருந்தால் நான் உன்னில் இரக்கப்படுவேன்.



mahalingam.k@thaiveedu.com



யசுநாரி கவபட்டா (1899-1972) ஓசாகா, யப்பானில் பிறந்தார். பெற்றோர் அவரின் இளம் வயதிலே இறந்துபோக, தாய் வழிப் பாட்டன் அவரை வளர்த்தார். ரோக்யோ இம்பீரியல் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று, 1924-இல் பட்டம் பெற்றார். நாவல்கள், சிறுகதைகள் எழுதினார். அவர், பழைய யப்பானிய மரபு இலக்கியத்திற்கும் தொழிலாளர் இலக்கியத்திற்கும் எதிராக இயங்கினார். ஐரோப்பிய இலக்கிய வகைமைகளில் நாட்டம் கொண்டார். கலை கலைக்காக என்ற இயக்கம் இவருடையது. 1927-இல் தன் முதல் சிறுகதையான இசு நடனக்காரியை வெளியிட்டார். கட்சியோ இட்டோ என்ற பெண்ணைத் திருமணம் முடிக்க நிச்சயம் செய்யப்பட்டிருந்த வேளையில் புரிந்துகொள்ள முடியாத ஏதோ ஒரு காரணத்தால் அவள் அதிலிருந்து விலகி விட்டாள். அதன் தாக்கம் அவரின் பல படைப்புகளில் கவித்துமாக வெளிப்பட்டுள்ளன. The Dancing Girl of Izu, Palm-of-the-Hand Stories போன்றவை சில. கவித்துவ நுட்பமான அவரின் எழுத்துகள் சர்வதேச அளவில் பலரைக் கவர்ந்தன. பல படைப்புகளை வெளியிட்டபின் 1937-இல் உறைபனி நாடு என்ற படைப்புடன் யப்பானின் முதல்தரமான படைப்பாளி என்ற தனக்குரிய இடத்தைப் பெற்றுக்கொண்டார். 1968-இல் அவருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு கிடைத்தது. அது யப்பானியருக்கான முதல் நோபல் பரிசு. அதன் பின் பலருக்கு அது கிடைத்தது. யப்பானிய இலக்கியத்தை ஆங்கிலத்திற்கும் ஏனைய மொழிகளிலும் மொழியாக்கம் செய்ய ஊக்கம் கொடுத்தவர்களில் முதன்மையானவர் இவர். Snow Country, The Master of Go, The Dancing Girl of Izu, The Old Capital, Thousand Cranes போன்றவை முக்கிய படைப்புகள்.




# கனடாவில் 'இலக்கிய உறவுகள்' நூல் வெளியீடு

கடந்த ஜூன் மாதம் இரண்டாம் நாள், ஞாயிற்றுக்கிழமை அன்று ‘கனடா குரும்பசிட்டி நலன்புரி சபை’யினரால் அமரர் கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வும் ‘இலக்கிய உறவுகள்’ நூல் வெளியீடும் நடைபெற்றது.

முதலில், கனடா குரும்பசிட்டி நலன்புரி சபையின் தலைவர் ஐயாத்துரை ஜெகதீஸ்வரனின் தலைமையுரையும், அமைப்பின் செயலாளர் கணேஸ்வரி குகனேசன் அவர்களின் வரவேற்புரையும் இடம்பெற்றது. தொடர்ந்து திரு.வி.எஸ். துரைராஜா, திரு.க. சிவதாசன், எழுத்தாளர் திரு. இரா. சம்பந்தன், உதயன் ஆசிரியர் திரு.ஆர்.என். லோகேந்திரலிங்கம், ‘வீணைமைந்தன்’ திரு. சண்முகராஜா, எழுத்தாளர் திரு. பொன்னையா விவேகானந்தன், தமிழக தமிழ்ப்பணி இதழ் ஆசிரியர் வா.மு.சே. திருவள்ளுவர் ஆகியோரது அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

நினைவேந்தல் நிகழ்ச்சியைத் தொடர்ந்து, அடுத்த நிகழ்வாக, கனடா குரும்பசிட்டி நலன்புரி சபையின் அனுசரணையில் வெளிவந்த கவிஞர் கந்தவனம் அவர்களின் ‘இலக்கிய உறவுகள்’ நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் எழுத்தாளர் குரு அரவிந்தன், வாணி சிவராஜன், பேராசிரியர் அ. சந்திரகாந்தன் உரையைத் தொடர்ந்து தாய்வீடு ஆசிரியர் பி.ஜெ. டிலிப்குமார் வெளியீட்டுரை நிகழ்த்தினார். சிறப்புப் பிரதிகளை எழுத்தாளர் எஸ். ஜெகதீசன், சி. இராஜதுரை, கௌரி கருணாரத்ன, யசோதா அரவிந்தன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். மறைந்த கவிஞர் கந்தவனத்தின் மகள் வாணி கந்தவனம் நன்றியுரை வழங்கினார்.








UMBASIDDY




UMBASIDDY NALANPURI


























உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


33 Years Canadian Experience
AUGUSTINE & ASSOCIATES
INCOME TAX
OUR SERVICES
Personal, Business and Corporate Tax Services
GST, HST & QST
Accounting & Bookkeeping
Payroll
T4, T4A, T5, Rental Releve 31 (QC)
Business Registration
E-filing
Ontario, Quebec & Other Provinces
EFILE
Canada
CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com
Helping you find your dream home, one key at a time.
JW PROPERTY REALTORS
REAL ESTATE
Residential, Commercial, Investment, and New Development Properties.
Jesmine Wimal
647-871-1921
Wimal Augustine
416-617-6735
www.propertyrealtors.ca
HOMELIFE / FUTURE
REALTY INC., BROKERAGE
Independantly Owned And Operated
Office: 905-201-9977


HOMELIFE
HIGHER STANDARDS
Buy or Sell
Your Home
call me 24-7
Cell: 416 856 6900
Kathir
Subramaniam
Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090
kathirhomes@gmail.com


With best compliments from
ஞானம்ஸ் ஸ்ரூடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
Family Portraits
Children Portraits
Business Portraits
Passport & Citizenship Photos
Classic Weddings
Arangetram
Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON
ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
cpa CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER
604 398 7272
TORONTO
647 219 3110
CALGARY
403 879 7272


- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாலத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin
Hair Lotion
200ml
HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
Providing Peaceful Final Arrangements
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS
REAL ESTATE
UTHAYAN SIVARAJAH
BROKER
416.301.5555
RAJ SIVARAJAH
BROKER
416.843.3333
KUMAR SIVARAJAH
SALES REPRESENTATIVE
416.453.7777
@uthayansivarajah
@uthayansivarajah
ROYAL LEPAGE ignite
Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK



MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
TD Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721 | F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



# வீடு வாங்க விற்க...

**18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்**

## ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

| வாங்கப் போகிறீர்களா? | விற்கப் போகிறீர்களா? |
|---|---|
| ☒ தரமான வீடு தவறிப்போகாது | ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும் |
| ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும் | ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு |
| ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை | ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி |
| ☒ பெருவருவாய் தரும் முதலீடு | ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள் |
















HOMELIFE
GRAND MASTER CLUB

Chairman's Club Award Winner 2015

Chairman's Club Award Winner 2017

Platinum Club Winner 2022

Chairman's Club Award Winner 2016


# Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8






முற்றிலும் இலவசமான சேவை!
Gas Furnace
AATEK
HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician | ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
416.414.2280




Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani • Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090




SABONA




Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673.9865
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com




Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141




Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE




LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough




Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC., Brokerage


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
Home Evaluation
Home Staging
Professional Photography
Social Media Marketing
Just Listed & Feature Sheet


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Ravi Kana


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law
RAMAN HOME COMFORT INC
HEATING
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
416.261.1544
AEREN Thiyagarajah
DILEEP Thangavel
647-888 3500
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
$8475.00
416-888-9492
ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
www.thanahomes.com
HomeLife Today Realty Ltd.
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545
RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225
Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMID GROUP
Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE
Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120
Sri Vallipuranathar
Credit Solution Centre
416.439.0224
416.450.5011
Suba Aynkharan
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC.
Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER
Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc.
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
HomeLife Today Realty Ltd.
NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM
President & CEO
INFORCE LIFE Financial Services Inc.
QUALITY ADVICE YOU CAN TRUST
Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
416 505 8532
DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
RE/MAX